Agatha Christie

# அகதா கிறிஸ்டி

PERIL AT END HOUSE

# கடைசி வீடு

கண்ணதாசன் பதிப்பகம்

# கடைசி வீடு

## Peril At End House

### அகதா கிறிஸ்டி

தமிழில் :

### கொரட்டூர் ஸ்ரீனிவாஸ்

கண்ணதாசன் பதிப்பகம்

23, கண்ணதாசன் சாலை,

தியாகராய நகர்

சென்னை - 600 017.

தொலைபேசி : 044 - 2433 2682

கிளைகள் : மதுரை ★ கோவை ★ பாண்டி ★ வேலூர்

Copyright © 2008 Agatha Christie Limited. a Chorion Company.
All Rights Reserved.

E-mail: sales@kannadasan.co.in
Our Web Site: www.kannadasan.co.in

பதிப்பாசிரியர்: காந்தி கண்ணதாசன்

எச்சரிக்கை

காப்பிரைட் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றி பிரசுரிக்கக்கூடாது. தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

-காந்தி கண்ணதாசன் பி.ஏ., பி.எல்.,

No Part of this book may be reproduced or transmitted in any form or by any means electronic or mechanical including photocopying or recording or by any information storage and retrieveal system without permission in writting from Gandhi Kannadhasan, B.A., B.L., Chennai.

Published in arrangement with **Agatha Christie Ltd, a Chorion Company, United Kingdom**

**Price Rs:140/-**

**"KADAISI VEEDU"** - Tamil

Translated form the English *Original* ***"Peril at End House"***

- Written By : **AGATHA CHRISTIE**
- Translated By : **Dr. Korattur K.N.Srinivas**
- Second Edition : March, 2016
- Publishing Editor : **Gandhi Kannadhasan**
- Published By : **Kannadhasan Pathippagam**
  23, Kannadhasan Salai,
  Thiyagaraya Nagar, Chennai - 600 017.
  Ph: 044-24332682 / 24338712

**ISBN: 978-81-8402-528-6**

- Our Branches :
  - No: 1212, Range Gowder Street, **Coimbatore** - 641001 ☎: 0422 - 2479774
  - No.1, Annai Complex, III Street, Vasantha Nagar, **Madurai**-625 003. ☎: 0452 - 2373793, 2373180.
  - No. 37, Bharathy Street, **Puducherry** - 605 001. ☎: 0413 - 2221241
  - No: 26, Old Bus Stand, Municipal New Shopping Complex, Ist Floor, **Vellore** - 632004. ☎: 0416 - 2223312
- Our Bankers : State Bank of India, T.Nagar, Chennai-17.

*Printed at* : **NOVENA OFFSET PRINTING CO.**, Chennai - 5 ✆ 28446166, 28446891

# மொழிபெயர்ப்பாசிரியரின் உரை

ஒவ்வொரு த்ரில்லர் கதையின் ப்ளாட்டும் (கதைக் களம்) படு வித்தியாசமாய் அமைந்தாக வேண்டும் என்பது த்ரில்லர் கதைகளின் அடிப்படை தேவை. அப்போதுதான், அந்த வித்தியாசமே, 'மேற்கொண்டு என்னதான் நடக்குமோ...' என்ற தேடுதலோடு வாசகனைக் கதையைப் படிக்க வைக்கும். அப்படிப் படிக்கத் துவங்குபவனைப் பிறகு எழுத்தாளனின் ஆளுமை மிகும் மொழித் தேர்ச்சியும் சஸ்பென்ஸ் திட்டமிடலும் கடைசிவரை கட்டி வைக்க வேண்டும். இதனால் அத்துப்பறியும் கதை வெற்றி பெற்றதாய் ஆகும்.

இந்த இலக்கணம் துளியும் பிறழாத ஓர் எடுத்துக்காட்டு தான், நேயர்களின் கைகளில் அமர்ந்திருக்கும் கடைசி வீடு.

வரிசையாக நாலு விதமான விபத்துகள் இடம்பெறுகின்றன - கடைசி வீட்டில் வாழும் இளம் நங்கையின் உயிரைப் பிடுங்க. அவள் அவற்றை ஏதோ தினசரி நிகழும் வாடிக்கையான நடவடிக்கைகளாகவே கருதுகிறாள்; ஆனால் துப்பறியும் நிபுணர் ஹெர்குல் பொய்ரெட்டின் குற்றம் தேடும் கண்களுக்கு, அவ்விபத்துகளில் உள்ள வில்லங்கம் புலப்பட்டு விடுகின்றது. யெஸ்... அவை தினசரி நடவடிக்கைகள் கிடையாது; இளையவளைக் கொன்று போட நினுசு நினுசாய் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்.

ஆஹ்... வித்தியாசமான களனாய் இது அமைந்து விடவில்லை...!

இந்தக் கொலை, கொள்ளை இத்யாதி, இத்யாதிகளைத் துப்பறிவதிலிருந்து கொஞ்ச நாட்களாக விடுதலை பெற்று ஓய்வெடுக்கலாம் என்று கடற்கரை சார்ந்த உல்லாசப் பகுதிக்குப் போன ஹெர்குல் பொய்ரெட்டின் தலையில் வந்து விடிகின்றது இவ்வழக்கு!

பிறகெங்கே ஓய்வு?!

இளைய கன்னியின் உயிர் மீது விளையாடுவது யார் யார் என்ற தேடுதலின் சூடு பறக்கும் பிரயாணமும்... அதனைக் கண்டு பிடிக்க துப்பறியும் நிபுணர் கையாளும் விநோதமான அணுகுமுறைகளும்... கடைசியில் கொலையாளியின் முகத்திரை கிழியும் உச்சகட்டமும்... நாவல் தாள்களையே வெள்ளித்திரை போல ஆக்கி காட்சிகளைத் தத்ரூபமாய் கண்களுக்கு முன் விரித்து சிலிர்ப்பேற்றி விடும்.

நான் எனது ஏனைய அகதா கிறிஸ்டி மொழிபெயர்ப்புகளில் சொல்வதையே இங்கும் சொல்கிறேன்-கொலையாளி பற்றிய க்ளூ, முதல் பக்கம் முதலே வாசகனின் கண் முன் விரிந்து கிடக்கும். ஆனால், அதை அவன் காரணங்களோடு கண்டுபிடிக்க முடியாமல் தோற்பதுதான் மிஞ்சுகின்றது!

கடைசி வீட்டுக்குள் நுழைவோமா...?!

என் பெற்றோருக்கு இதனைக் காணிக்கையாக்கி, பதிப்பகத்தாருக்கு நன்றி தெரிவித்தபடி, வாசகர்களுக்கு எனது இம்மொழிபெயர்ப்பை சமர்ப்பிக்கிறேன்.

அன்பன்,
முனைவர் கொரட்டூர் **கே. என். ஸ்ரீனிவாஸ்,**
மனை எண் 252, இரண்டாவது தெரு,
டி. என். ஹெச். பி. காலனி,
கொரட்டூர், சென்னை - 600 080.

தொலைபேசி : 044 - 2635 8948
மின்னஞ்சல்: srinivaskns@yahoo.co.in

# முக்கிய கதாபாத்திரங்கள்

நிக் பக்லே : கடைசி வீட்டில் குடியிருக்கும் பெண்

மேக்கி பக்லே : நிக்கின் சகோதரி முறை

மைக்கேல் ஸெட்டான் : நிக்கின் காதலன்

திரு மற்றும் திருமதி. க்ராப்ட்,
அவர்கள் மகன் : நிக் வீட்டில் குடியிருப்போர்

கமாண்டர் சாலஞ்சர்,
மிஸஸ் கிப்ரெட்டரி ரைஸ்,
ஜிம் லாஸரஸ், சார்ல்ஸ் வைஸ் : நிக்குக்கு வேண்டப்பட்டவர்கள்

எலென் : வீட்டு வேலைக்காரி

இவர்களுடன் துப்பறியும் நிபுணர் ஹெர்குல் பொய்ரெட் மற்றும் அவரது நண்பர் கேப்டன் ஹேஸ்டிங்ஸ்.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| அத்தியாயம் | 1. | மெஜஸ்டிக் ஓட்டல் | 7 |
| அத்தியாயம் | 2. | கடைசி வீடு | 24 |
| அத்தியாயம் | 3. | விபத்துகள்? | 41 |
| அத்தியாயம் | 4. | அதுல என்னவோ இருக்கணும்! | 55 |
| அத்தியாயம் | 5. | மிஸ்டர் அண்ட் மிஸஸ் க்ராஃப்ட் | 65 |
| அத்தியாயம் | 6. | மிஸ்டர் வைஸுடன் ஒரு சந்திப்பு | 80 |
| அத்தியாயம் | 7. | துயரம் | 91 |
| அத்தியாயம் | 8. | கொலைகார மேலங்கி | 100 |
| அத்தியாயம் | 9. | ஒன்று முதல் பத்து வரை | 112 |
| அத்தியாயம் | 10. | நிக்கின் ரகசியம் | 129 |
| அத்தியாயம் | 11. | இலக்கு | 142 |
| அத்தியாயம் | 12. | எலென் | 150 |
| அத்தியாயம் | 13. | கடிதங்கள் | 162 |
| அத்தியாயம் | 14. | காணாமல் போன உயிலின் மர்மம் | 173 |
| அத்தியாயம் | 15. | ஃப்ரெட்டரிக்காவின் புரிந்துக் கொள்ளவியலாத நடவடிக்கை | 187 |
| அத்தியாயம் | 16. | மிஸ்டர் விட்ஃபீல்டுடன் ஒரு சந்திப்பு | 198 |
| அத்தியாயம் | 17. | பெட்டி நிறைய சாக்லெட்டுகள் | 213 |
| அத்தியாயம் | 18. | ஜன்னலில் ஒரு முகம் | 229 |
| அத்தியாயம் | 19. | பொய்ரெட் தயாரித்தளித்த ஒரு நாடகம் | 249 |
| அத்தியாயம் | 20. | "பந்து" | 260 |
| அத்தியாயம் | 21. | பதினொன்றாவதாய் ஒருத்தன் | 264 |
| அத்தியாயம் | 22. | கதையின் முடிவு | 270 |

*அத்தியாயம் 1*

# மெஜஸ்டிக் ஓட்டல்

தென் இங்கிலாந்தின் வேறெந்த கடற்கரையோர நகரமும் செயின்ட் லூ போல ஈர்ப்பதில்லை என நான் நினைக்கிறேன். நீர்நிலைகளின் ராணி என இதற்கு அத்தனை பொருத்தமாக பெயர் அமைந்துள்ளது. இங்கு வந்ததுமே நதியோர அனுபவங்கள் மனதில் தானாய் சூழ்ண்டு நிழலாடுவதைத் தவிர்க்க முடியாது. தென் பிரான்ஸைப் போலவே ஆனந்த மயக்கத்தின் ஒவ்வொரு துளியையும் மனதுள் தூவி, மகிழ்ச்சிக் கிறக்கத்தை ஏற்படுத்தும் உன்னதப் பிரதேசமிது.

இத்தனையும் நான் என் நண்பன் ஹெர்குல் பொய்ரெட்டிடம் சொன்னேன்.

''நீ சொன்ன இத்தனையும் இந்த ஓட்டல்ல நாம நேத்து வந்ததும் தந்தாங்களே, டூரிஸ்ட் கார்ட் - அதுலேயே இருக்கு, நண்பா. அதை பார்த்து சொல்றே, ஆங்! ஆக, நீ சொன்னது எதுவும் உன் அனுபவம் கிடையாது.''

''இருக்கலாம்... ஆனா நான் குறிப்பிட்டதை நீ ஒத்துக்க மாட்டே?''

தனக்குள்ளேயே சிரித்துக் கொண்ட அவன் என் கேள்விக்கு உடனடியாய் பதில் தந்துவிடவில்லை. எனவே மீண்டும் கேட்டேன்.

''ஆயிரம் மன்னிப்புகள், ஹேஸ்டிங்ஸ்'' என்றான் நினைவுக்குள் நுழைந்தவனாய். ''என் நினைவுகள், நீ ஒப்பிட்ட அதே பிரதேசத்தில் அலைஞ்சுக்கிட்டிருக்கு.''

''தென் பிரான்ஸ்?''

''ஆமாம். கடந்த குளிர்காலத்தின்போது நான் அங்கு கழித்த நாட்களிலும் அப்போ அங்கே நடந்த சம்பவங்களிலும் அலைஞ்சுக் கிட்டிருக்கு.''

எனக்கு ஞாபகம் வந்தது. ப்ளூ ட்ரெயினில் ஒரு கொலை நடந்தது. ஓட ஓடத் துரத்தி மூச்சு முட்ட வைத்த மர்மம் அது. அதனை, பொய்ரெட், அவனுக்கே உரிய கண் துஞ்சா சாதுர்ய உழைப்பினால் முடித்துக் கொடுத்தான்.

''நான் அப்போ உன் கூட இல்லாமப் போயிட்டேனேனு எப்படி துடிக்கிறேன் தெரியுமா...'' என வருந்தி சொன்னேன்.

''எனக்கும் அதே வருத்தம்தான்'' என்றான் அவன். ''உன் அனுபவமும் எனக்கு விலைமதிப்பற்ற உதவியாய் இருந்திருக்கும்.''

அவனைப் பக்கவாட்டில் கவனித்தேன். அவனுடன் நீண்ட நெடுநாட்களாய் இருந்து வரும் நட்பின் அனுபவத்தால், கிண்டலாய் தானிருக்க வேண்டும் எனக் கருதி, அவன் சொன்ன பாராட்டினை நான் சந்தேகித்தேன்; ஆனால் அவன் முக்கியப்படுத்தி சொன்னதுபோல தான் தோன்றியது. ஏன், பாராட்டாய் இருக்கக் கூடாதா என்ன? அவனுடைய துப்பறியும் முறைகளில் எனக்கும் பல வருட அனுபவம் இருக்கிறதே!

''குறிப்பிட்டு சொல்லும்படியாய் நான் இழந்தது என்ன தெரியுமா - உன்னோட கூர்மையான கற்பனைகளை'' என்றான் அவன், கனவாய். ''இறுக்கமான பணிப்பளு குறைய ஒருத்தனுக்கு இளைப்பாறல்களும் தேவைப்படுது'' என்றான் கிண்டலான புன்சிரிப்பூடே! ''என்னோட வேலைக்காரன் இருக்கானே, ஜார்ஜஸ், அவனோடு கூட, அது எத்தனை தான் மட்டமான கற்பனையாயிருந்தாலும் பரவாயில்லேனு, வழக்கின் சில பகுதிகளை நான் வாதித்துப் பார்ப்பதுண்டு.''

இந்தக் குறிப்பு கொஞ்சமும் தேவையற்ற ஒன்றாய் பட்டது எனக்கு.

''சொல்லு பொய்ரெட்...'' என்றேன் நான். ''ரிடையர்ட் ஆயிட்டதா சொல்றியே? உன் தினசரி பணிகளைப் புதுப்பித்துக்கொள்ள உனக்குள்ளே ஓர் உந்துதல் வந்ததே கிடையாதா? ஓடாம உழைக்காம பிடிச்சு வெச்ச களிமண் போல இனிமே இருக்கப் போறியா...?''

''ஆனா, இது, எனக்கு ரொம்பப் பொருந்துது, ஹேஸ்டிங்ஸ். சூரியனுக்கு அடியில ஜம்முனு உட்கார்ந்துக்கிட்டிருப்பதைப் போல வேற எது மனோஹரமா இருந்துட முடியும்? நீ புகழின் உச்சத்துல இருக்கும்போதே மரியாதையா விலகிக் கொள்வதைப் போன்ற பெருந்தன்மை வேற எது, ம்? என்னைப் பற்றி பேசிக்கிறாங்க : 'அது

தான் ஹெர்குல் பொய்ரெட் - மாபெரும் திறமை - தனித்தன்மை வாய்ந்த புத்திகூர்மை - அவரைப் போல ஒருத்தர் இருந்தது கிடையாது, இருக்கப் போறதும் கிடையாது.' நான் திருப்தியாயிட்டேன். இதுக்கு மேல நான் கேட்கப் போவதில்லே. நான் பெருந்தன்மையானவன், ஆங்!''

என்னை நானே பெருந்தன்மையானவன் என்று எப்போதும் சொல்லிக்கொள்ளத் துணிய மாட்டேன். ஆனால் என் நண்பன் செய்தான். இத்தனை வருடங்கள் கடந்திருந்தாலும் என் குள்ள நண்பனின் தான் எனும் பெருமை இன்னும் தணியவில்லை. அவனது நாற்காலியில் சாய்ந்து அகலமாய் அமர்ந்துக் கொண்டான், மீசையை ஆசையாய் வருடி விட்டுக் கொண்டான். சுய திருப்தியில் பொங்கி வழிந்தான்.

மெஜஸ்டிக் ஓட்டலின் மேற்தளங்களில் ஒன்றில் நாங்களிருவரும் உட்கார்ந்து கொண்டிருந்தோம். செயின்ட் லூவின் மாபெரும் ஓட்டலிது. சொந்தமான பரந்த நிலத்தில், கடல் பார்த்து நிமிர்ந் திருந்தது ஓட்டல். பல பாம் மரங்கள் தாராளமாய் இடையிடையே வளர்ந்துக் கொழித்திருந்த ஒரு பெரிய தோட்டம் எங்களுக்குக் கீழே இருந்தது. கடல் அருமையான ஆழ்ந்த நீலநிறத்தில் மடிந்து எழுந்த வண்ணமிருக்க... வானம் மூட்டமில்லாமல், ஆகஸ்ட் மாதத்து சூரியனின் முழு சாரத்தையும் அள்ளித் தந்துக் கொண்டிருந்தது (ஆனால் இப்படியொரு வசதியான சீதோஷ்ணம் இங்கிலாந்தில் அமைவது அரிதுதான்). முழு மூச்சோடு இயங்கும் தேனீக்களின் ஹம்மிங், இனிய நாதமென பின்னணியில் இருந்தது. ஆஹா... இவையத்தனையும் போல வேறெதுவும் மனதுக்கு முழு இதமாய் அமைய முடியாது.

நேற்றிரவு தான் நாங்களிருவரும் வந்திறங்கியிருந்தோம். ஒரு வாரம் நீடிக்கலாம் என நாங்கள் திட்டமிட்டு வந்திருந்த பயணத்தின் முதல் காலைப்பொழுது இது. இதே தட்பவெப்பம் மட்டும் நீடித்து விட்டால், மறக்க முடியாத விடுமுறையாய் இது எங்களுக்கு அமைந்து போகும்.

என் கையிலிருந்து நழுவி கீழே விழுந்திருந்த காலை செய்தித் தாளைக் கையிலெடுத்துக் கொண்ட நான், முக்கிய செய்திகளில்

சூழ்கும் என் பணியைத் துவங்கினேன். அரசியல் சூழ்நிலை சாதக மாகத் தோன்றவில்லை. திருப்பதியாகவும் இல்லை. சைனாவில் சண்டையாம். பேப்பரில் எதுவுமே த்ரில்லிங்காய் படவில்லை.

''விசித்திரமான நோயா இருக்கு, இந்தப் பறவைக் காய்ச்சல்'' - பக்கங்களைத் திருப்பிக் கொண்டே குறிப்பு தந்தேன் நான்.

''ரொம்ப விசித்திரம்.''

''வீட்ஸ் பகுதியில மேலும் ரெண்டு மரணங்கள்னு போட்டிருக் கான்.''

''ரொம்ப வருத்தத்துக்குரியது.''

ஒரு தாளைத் திருப்பினேன்.

''உலகைச் சுற்றி விமானப் பயணம் செய்யும் அந்த ஷெட்டான் பயலைப் பற்றி சேதியே காணும். நீர் நிலம் ரெண்டிலும் இயங்கவல்ல அவனுடைய இயந்திரம் - அல்பெட்ராஸ் - நிச்சயமா ஒரு புதுமையான கண்டுபிடிப்புதான். உலகின் மேற்கு பக்கமா போயிருந்தான்னா கொஞ்சம் ஆபத்து - ஆனா, இன்னும் யாரும் நம்பிக்கையை விட்டு டலே. பசிபிக் பக்கமா போயிருக்கணும்.''

''இந்த சாலமன் தீவுக்காரனுங்க கிட்டே இப்பவும் நரமாமிசம் சாப்பிடும் வழக்கமிருக்கு போல...'' - இனிமையான குரலில் இப்படி விசாரித்தான் பொய்ரெட்.

தற்சமயம் நான் அரசியல் பக்கமாய் பார்வையை செலுத்தினேன்.

''உள்துறை அமைச்சருக்கு வேண்டிய மட்டும் தலைவலி தருவதுனு முடிவு கட்டிட்டானுங்க'' என்று குறிப்பு தந்தேன் நான், கிண்டலாய் நாக்கைச் சொடுக்கி.

''பாவப்பட்ட மனுஷன். ஆஹ்! இதுக்குப் போய் ஒத்துவராத இடத்துல அவர் உதவி தேடிக்கிட்டிருக்கார். ம், விதி, தலைவலி, திருகுவலியா வளரப்போகுது, பார்.''

நான் அவனைப் பார்த்து விழித்தேன்.

சின்னதாய் புன்னகைத்தான். காலைத் தபாலில் வந்திருந்த கடிதங் களைத் தனது பாக்கெட்டில் அழகாய் ரப்பர் பேண்ட் போட்டு கட்டி வைத்திருந்தான். அதிலிருந்து ஒரு கடுதாசியினைத் தேர்ந்தெடுத்து, அதை, மேஜைக்குக் குறுக்காக என்னை நோக்கிச் சுண்டியெறிந்தான். ''நேற்றே வந்திருக்கணும் இது'' என்றான்.

கடிதத்தை ஆனந்தக் கிளர்ச்சி பொங்கப் படித்தேன்.

''ஆனா பொய்ரெட்'' என்ற நான், ''இது உன்னை ரொம்ப ஓவரா முகஸ்துதி பண்ணியிருக்கு!'' என்றேன்.

''அப்படியா நீ நினைக்கிறே?''

''ரொம்பக் கதகதப்பான வார்த்தைகளைப் போட்டுல்லே உன்னோட கீர்த்திகளைக் குறிப்பிட்டிருக்கார்.''

''அவர் சொல்லியிருப்பதெல்லாம் சரிதானே'' என்றான் பெருந் தன்மை கலந்து, கண்களை என்னிடமிருந்து தவிர்த்து.

''அவருக்கு நீ பண்ணும் பிரத்யேக உதவியா கருதி, அவரோட குழப்பங்களை உன்னைத் துப்பறிய சொல்லியிருக்கார்.''

''அப்படித்தான் கேட்டிருக்கார். அதிலிருப்பதெல்லாம் மறுபடியும் என்னிடம் சொல்ல வேண்டியது தேவையற்றது, ஹேஸ்டிங்ஸ். நான் ஏற்கெனவே அதைப் படிச்சிட்டேன்.''

''அய்யா சாமி, இதெல்லாம் ஏத்துக்காதே. நாம ப்ளான் பண்ணி வந்திருக்கிற விடுமுறை கொண்டாட்டங்களுக்கு இது இப்பவே முற்றுப்புள்ளி வெச்சுடும்.''

''நோ, நோ. இதைக் கழுத்துல கட்டிக்கிட்டு அலையறதுக்கு சான்ஸே கிடையாது.''

''ஆனா விஷயம் ரொம்பவும் அவசரமானதுனு சொல்றாரே, உள்துறை அமைச்சர்?''

''அவர் சரியா இருக்கலாம் - இல்லே, தப்பாவும் இருக்கலாம். இந்த அரசியல்வாதிங்க ரொம்ப சுலபமா உணர்ச்சிவசப்பட்டு எழுந்துடு வாங்க. பாரீஸ்ல எனக்கு இந்த அனுபவம் ஏற்பட்டிருக்கு ...''

''சரி சரி பொய்ரெட். இது சம்பந்தமா அடுத்து நாம செய்ய வேண்டி யதைத் துரிதமாக்கணும். லண்டனுக்கான எக்ஸ்பிரஸ் போயிடுச்சு - பனிரெண்டு மணிக்குக் கிளம்பிடும் அது. அடுத்த ட்ரெயின் ...''

''அமைதியாகு, ஹேஸ்டிங்ஸ், அமைதியாகு. கெஞ்சிக் கேட்டுக் கறேன். எப்பவுமே உனக்கு அவசரம்தான், கலவரம்தான். நாம் லண்ட னுக்கு இன்னிக்குப் போகப் போவது கிடையாது - ஏன், நாளைக்குக்கூட போகப் போவதில்லே.''

''ஆனா இந்தக் கட்டளை ...''

''என்னை அது கட்டுப்படுத்தாது. நான் உங்க லண்டன் போலீஸ்

துறை சார்ந்தவன் கிடையாது, ஹேஸ்டிங்ஸ். ஒரு தனியார் துப்பறியும் அதிகாரி எனும் ஸ்தானத்துல தான் இந்த வழக்கைக் கையாளும்படி அவர் கேட்டிருக்கார். அதை நான் ஒதுக்கறேன்.''

''நீ ஒதுக்கிறியா?''

''நிச்சயமா. தேவையான அனைத்து அமரிக்கையான வார்த்தைளையும் போட்டு, என்னுடைய இயலாமையை, என் மன்னிப்புகளை, முழுக்கவும் வேறொரு பிரதேசத்தில் நானிருப்பதைக் குறிப்பிட்டு எழுதிடறேன். உனக்கென்ன? விடு. நான் ஓய்வு பெற்றாச்சு, ஹேஸ்டிங்ஸ். துப்பறியும் வேலையை - மூடியாச்சு.''

''நீ இன்னும் ஓய்வு பெறலே'' என்றேன் நான் மனப்பூர்வமாய்.

பொய்ரெட் என் கால் முட்டியைத் தட்டிக் கொடுத்தான். ''ஒரு உண்மை நண்பனின் விசுவாசம் - நன்றியுள்ள நாய் போன்ற பாசம். நீ இப்படி நம்புவதற்கும் காரணமிருக்கு. மூளையின் சாம்பல் நிற செல்களுக்கு - சாதுர்யம் மிகுந்த துப்பறிதல் போன்ற தொழில்களுக்கு மிகத் தேவையான என்னுடைய அந்த செல்களுக்கு - இன்னும் வயசாகலே. அவை இன்னும்கூட வீரியமா இயங்கிக்கிட்டு தானிருக்கு. முறையா வரிசைப்படுத்துதல், அதன்படி வழக்கை சரியா அணுகுதல் - இவையெல்லாமும் இன்னும் என்னுள் கொழுந்து விட்டுக்கிட்டுத் தானிருக்கு. ஆனா நான் என் ஓய்வை அறிவிச்சாச்சு ஃபிரண்ட், அறிவிச்சாச்சு! எனது துப்பறியும் தொழில் - இட்ஸ் ஓவர்! உலகத்துக்கு ஒரு டஸன் பிரியாவிடை தரும் சினிமா நடிகை கிடையாது நான். மனமொப்பி தாராளமா சொல்றேன்! இளையவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கட்டும்; ஸோ, நான் ஒதுங்கிக்கிறேன். அவங்க ஏதாவது கவுரவமாய் மதிக்கத்தக்க சாதனை செய்யலாம். இது எனக்கு சந்தேகம் தான் - இருந்தாலும் சொல்றேன். உயிரெடுக்கப் போகிற உள்துறை அமைச்சரின் விஷயத்துல அவர் திருப்திப்படற அளவுக்கு உழைச்சுத் தருவாங்க.''

''ஆனா, பொய்ரெட், அவர் தந்திருக்கும் புகழுரைகள்!''

''நான், அப்படிப்பட்ட பாராட்டுரைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவன். நண்பா... அவர் ஓர் உணர்வுபூர்வ ஆசாமி. நான் போய் அவருடைய சங்கதியைக் கையாண்டால் தான் அனைத்தும் சுபமாய் முடியும்னு நினைச்சுக்கிட்டிருக்கார். ஆனா ஒண்ணும் செய்யறதுக்

இல்லே. அவர் ஒரு துரதிர்ஷ்டசாலி. ஹெர்குல் பொய்ரெட், அவருடைய கடைசி வழக்கை முடிச்சு கொஞ்சநாளாச்சு.''

நான் அவனைப் பார்த்தேன். முரண்டு பிடிக்கும் அவனது பிடிவாதத்தைக் கண்டு என் நெஞ்சார நான் துக்கப்பட்டேன். 'மிகவும் ஆபத்தான' என உள்துறை அமைச்சரே உணர்ந்துள்ளது போன்ற இதுபோன்ற வழக்குகளைத் தீர்த்துக் கொடுப்பதன் மூலம் ஏற்கெனவே உலகளாவிய அளவில் பரவிக் கிடக்கும் அவனுடைய புகழுக்கும் பெருமைக்கும் இன்னும் மதிப்பு கூடும் - அவனது புகழ் தொப்பியில், வெற்றி இறகுகள் அதிகமாகிப் பிரகாசிக்கும்.

அப்போது திடுமென ஓர் எண்ணம் என்னுள் முட்ட, நான் புன்னகைத்தேன். ''இப்படியொரு கட்டளை வந்தும் நீ பயப்படாதது எனக்கு ஆச்சரியமாய் உள்ளது'' என்றேன். ''நீ மறுப்பது அவங்களுடைய பகைமையை உண்டுபண்ணிடக் கூடாது.''

''ஹெர்குல் பொய்ரெட் எடுத்த முடிவினை அசைப்பது என்பது...'' என மறுபதில் தந்த அவன் ''சாத்தியமேயில்லை'' என முடித்தான்.

''சாத்தியமேயில்லை. அப்படித்தானே, பொய்ரெட்?''

''புரியுது நண்பா... வெட்டிப் போட்டாப்பல இப்படி ஒரு வார்த்தையை உபயோகிக்கக்கூடாது தான். என் கண்ணுக்கு முன்னாடி ஒரு துப்பாக்கி குண்டு பறந்து போய் அருகிலிருக்கும் சுவத்துல குறி தவறி குத்தினா... அதைப் பாத்துக்கிட்டே, என் துப்பறிதலை ஓரமா தூக்கி வெச்சுட்டு நான் பேசாம உட்கார்ந்துக் கிட்டிருப்பேன்னு சொல்ல வரலே! தொழில்லேயே இத்தனை நாளா ஊறிக்கிடந்த நானும், அதை அவ்ளோ சுலபத்துல பிரிஞ்சுட முடியாத சராசரி மனுஷன் தானே!''

நான் புன்னகைத்தேன். அப்போது, நாங்கள் உட்கார்ந்திருந்த பால்கனியின் பின்பகுதியில் ஒரு கூழாங்கல் பறந்து போய் விழுந்தது. இதைப் பார்த்ததும், தற்போது கோமாளித்தனமாய் பொய்ரெட் சொன்ன ஒப்பீடு என்னைப் புன்னகைக்க வைத்தது. இப்போது எழுந்து போய் குனிந்த அவன், அக்கூழாங்கல்லைக் கையிலெடுத்துக் கொண்டே பேசலானான்:

''ஆமாம். நானும் மனுஷன்தான். ஒவ்வொருவனும் தூங்கும் காவல் நாய் தான், ஓ கே. குட். ஆனா, தூங்கும் அந்தக் காவல் நாய்

கிண்டப்பட்டால்...?! ஆஹ், சாது மிரண்டால் காடு கொள்ளாது - அது தானே பழமொழி, ஹேஸ்டிங்ஸ்...?!''

''அப்படினா'' என்ற நான், ''நாளை காலைல உன் படுக்கையில யாராவது குண்டு ஒண்ணை வெச்சான்னா... அவன் அவ்ளோதான்னு சொல்லலாமா?''

ஒப்புதலாய் தலையசைத்தான் - ஆனால் அப்படி செய்வதை கூட அறியாதவனாய்.

திடுமென, என்னை ஆச்சரியப்படுத்தும் வகையில், அவன் எழுந்து, பால்கனியிலிருந்து தோட்டம் நோக்கிக் கொண்டு போன சில படிகளில் இறங்கி நடக்கலானான். அப்படி அவன் செய்யும்போதே, எங்களை நோக்கி வேகவேகமாக வந்து கொண்டிருந்த ஒரு பெண் என் பார்வைக்குத் தென்பட்டாள்.

அவள் சர்வநிச்சயமாய் அதிரூப சுந்தரி என்று நான் எனக்குள் கணக்கு பண்ணிக் கொண்டிருக்கும்போதே ... தான் போகும் வழியை சரியாய் கவனிக்காமல் விரைந்துக் கொண்டிருந்த பொய்ரெட், ஒரு மரத்தின் கனமான வேர் இடறி, தொபீரென்று சரிந்த காட்சி, அப்பெண் மீதான என் கவனத்தை திசை திருப்பியது. அக்கணத்தில் சரியாக அந்தப் பெண்ணின் முன்னால் சரிந்தான் அவன்; நானும் அவளுமாய் அவன் நடக்க உதவினோம். அத்தருணத்தில் எனது கவனம் முழுதும் என் ஆருயிர் நண்பனின் மீதே குவிந்த போதிலும், அவளுடைய கருநிற கூந்தல் கருநீல நிற விழிகள் மற்றும் வெற்றிடமான முகம் ஆகியவற்றின் ஒரு பதிவு என்னுள் புகுந்தது.

''மன்னிப்புக் கேட்டுக்கறேன், மன்னிப்புக் கேட்டுக்கிறேன். ப்ளீஸ், எக்ஸ்க்யூஸ்'' என தடுமாறினான் பொய்ரெட். ''மிஸ், மிஸ். நீங்க ரொம்ப கனிவானவங்க. நடந்த தொந்தரவுக்கு நான் ரொம்ப வருந்தறேன் - ஓவச்! - என் கால்... அது வலி கொல்லுதே! இருக்கட்டும் இருக்கட்டும், விடுங்க. ஆபத்தா ஒண்ணுமில்லே. கணுக்கால் திரும்பிடுச்சு. அவ்ளோதான். சில நிமிஷங்கள்ல எல்லாம் சரியாயிடும். ஆனா நீங்க உதவினீங்களா சகாயமா இருக்கும். ஹேஸ்டிங்ஸ்... உனக்கும் மிஸ்ஸுக்கும் இடையில... என்னைப் பிடிச்சுக்கிட்டு...! ஓஹ்... இப்படி ஓர் உதவியை மிஸ் கிட்டே கேட்கவே எனக்கு லஜ்ஜையா இருக்கு.''

நான் ஒரு பக்கத்திலும் அப்பெண் மறுபக்கத்திலுமாய் சீக்கிரத்திலேயே பொய்ரெட்டைக் கொண்டு வந்து பால்கனியின் ஒரு நாற்காலியில் கிடத்தினோம். ஒரு டாக்டரை உடனடியாய் போய் அழைத்து வருவதாய் நான் சொன்னாலும் இந்த ஆலோசனையாய் கறாராய் ஒதுக்கினான் என் நண்பன்.

''நான் சொல்றேனில்லே - இது ஒண்ணுமில்லே. கணுக்கால் திரும்பிடுச்சு. அவ்ளோதான். அந்தக் கணத்துல வலியாயிருக்கும். ஆனா சீக்கிரத்துல சரியாயிடும்.'' இப்படி சொல்லி விட்டு முகத்தை சற்று சுளித்தவன், ''பாருங்க... இன்னும் சற்று நேரத்துல எல்லாம் சரியாயிடும்; இந்த சின்ன விபத்தையே நான் மறந்துடப் போறேன். ஆங்... மிஸ்... உங்களுக்கு என் ஆயிரம் கோடி நன்றிகள். நீங்க ரொம்ப அன்பா நடந்துக்கிறீங்க. உட்காருங்க, மறுக்காதீங்க ப்ளீஸ், நான் கேட்டுக்கறேன்'' என்றான்.

அப்பெண் ஒரு நாற்காலியை இழுத்துக் கொண்டாள்.

''இது ஒண்ணுமில்லாததா இருக்கலாம்'' என்ற அவள், ''ஆனாலும் ஒண்ணும் ஆயிடலையேனு பார்க்க நீங்க என்னை அனுமதிக்கணும்'' என்றபடி அவன் கால் பக்கமாய் குனிந்தாள்.

''மிஸ், மிஸ். நான் சத்தியம் பண்றேன் - சீரியஸா ஒண்ணுமே கிடையாது. உங்க நட்பு கிடைச்ச கிளுகிளுப்புல ஏற்கெனவே வலி பறந்தாச்சு தெரியுமா!''

அவள் சிரித்து விட்டாள்.

''இது அழகு'' என்றான் என் நண்பன்.

''சிற்றுண்டி - ஒயினுடன்?'' - கேட்டேன் நான். ''அதற்கான நேரம் தானிது.''

''அதாவது ...'' என்று அவள் தயங்கினாலும், ''நன்றி'' என ஆமோதித்தாள்.

நான் எழுந்துப் போனேன். திரும்பும்போது பொய்ரெட்டும் அந்தப் பெண்ணும் நாடகப்பாணியில் அங்க அசைவுகளோடு உரையாடிக் கொண்டிருப்பது தெரிந்தது.

''விஷயம் தெரியுமா, ஹேஸ்டிங்ஸ்'' என்ற பொய்ரெட், ''அங்கேயிருக்கிற அந்த வீடு - அதோ அந்தப் புள்ளியில தெரியுதே - நாம ரொம்ப பிரமிச்சுப் பேசினோமேப்பா - அந்த வீடு, மிஸ்ஸோட வீடாம்''

என்றான்.

''அப்படியா?'' என்றேன் நான், அந்த வீட்டை நாங்கள் பிரமித்துப் போய் போற்றினோமா என்ற சிந்தனையுடன். நாங்கள் சேர்ந்து அப்படியொரு வீட்டைப் பார்த்ததாய் எனக்கு நினைவேயில்லை. ''பயம் கவ்வியது போல, அமானுஷ்யமா, இப்பகுதியிலிருந்து ரொம்ப தனியா பிரிஞ்சு தெரியுது, அந்த வீடு.''

''அதுக்குப் பெயர், கடைசி வீடு'' என்றாள் அந்தப் பெண். ''எனக்கு அது உயிர் - ஆனா உலுத்துப் போன பழைய வீடு. உதிர்ந்து இடிஞ்சுப் போகப் போகுது.''

''ஒரு பாரம்பரிய பழைய பரம்பரையின் கடைசி வாரிசா நீங்க, மிஸ்?''

''ஓ! அப்படியெல்லாம் எந்த முக்கியத்துவமும் எங்களுக்குக் கிடையாது. ஆனா, இங்கே, பக்லே பரம்பரை இருநூறு முந்நூறு வருடங்களா இருந்திருக்கு. என் சகோதரன் மூன்று வருடங்களுக்கு முன்னால தவறிட்டான். ஆக, அப்பரம்பரையில், விட்டு வைக்கப் பட்டிருப்பது, நான் மட்டுமே.''

''சோகமான சேதி. ஆங், அங்கே நீங்க தனியாவா வசிக்கிறீங்க, மிஸ்?''

''ஓ! பல நாட்கள் நான் வெளியில தானிருப்பேன். இங்கே வீட்டுல வந்திருக்கும்போது, நிறைய பேர் கூட்டமா வந்து போவாங்க.''

''இது நாகரீகமா ஆயிடுச்சு. ஆனா, அந்த வீட்டைப் பற்றி நினைக்கும் போது, இருளடைந்த மர்ம வீட்டில் குடும்ப சச்சரவுகளின் தாக்கத்தில் நீங்க அமானுஷ்யமா வாழ்ந்து வருவதா நான் கற்பனை பண்ணி யிருந்தேன்.''

''எத்தனை வியப்பான கற்பனை! ஓரிடத்தைப் பார்த்ததும் அதன் அமைப்பை வெச்சு நீங்க ஒரு திரைக்கதையே அமைச்சுடுவீங்க போலிருக்கு. நீங்க நினைக்கிற மாதிரி எந்த அமானுஷ்யமும் அங்கே கிடையாது. அப்படியேதாவது பேய் பிசாசு அங்கேயிருந்தாலும், அது செழுத்தியான அதிர்ஷ்ட பேயாத் தானிருக்கணும் - நான் இன்னும் சாகாம அதுக்குத்துணையா இருந்துக்கிட்டிருக்கேனில்லே...! இத்தனை நாட்கள்ல, நான், மூன்று முறை, திடீர் மரணத்திலிருந்து தப்பிச்சுருக்கேன் - அதனால சொல்றேன். இனிமேலாவது நான் நல்ல

வாழ்க்கையை வாழணும்.''

பொய்ரெட் நிமிர்ந்து உட்கார்ந்தான். ''மரணங்களிலிருந்து தப்பிப்பு? ரொம்ப இண்ட்ரஸ்டிங்கா இருக்கு, மிஸ்.''

''அப்படியொண்ணும் த்ரில்லிங்கெல்லாம் கிடையாது. எதிர்பாரா விபத்துகள், ஆங்.'' இப்படிச் சொன்னவள், ஒரு குளவி வெகு வேகமாய் முகத்தருகே போனதற்காக விரட்டும் பாணியில் கையசைத்துக் கொண்டாள். ''பக்கத்துல தேன் கூடு இருக்கும் போல.''

''தேனீக்கள், குளவிகள் - உங்களுக்குப் பிடிக்காதா, மிஸ்? உங்களை அவை கொட்டியிருக்கா, என்ன?''

''ம்ம். ஆனா, சரியா நம்ம முகத்துக்கு நேரா கிட்டத்துல அவை வருவது எனக்குப் பிடிப்பதில்லை.''

இந்த சமயத்தில் நான் சொல்லியிருந்த சிற்றுண்டி வந்தது. ''சொல்லப்போனா, நானும் இந்த ஓட்டலுக்கு மதுபான விருந்துக்குத் தான் வந்திருக்கேன்'' என்றாள் மிஸ் பக்லே. ''அவங்க அத்தனை பேரும் எனக்கென்ன ஆகியிருக்குமோனு கவலைப்பட்டுக்கிட்டிருப் பாங்க.''

தொண்டையைச் செருமிக் கொண்ட பொய்ரெட், கையிலிருந்த கோப்பையை ஒரு பக்கமாய் வைத்தான். ''இங்கிலாந்துல இன்னும் சில இனிமையான கலாசாரங்கள் கடைபிடிக்கப்படுது. இளைய பெண்கள் அணியும் தொப்பி ஓர் உதாரணம். அதை அடிக்கடி அவங்க நளினமா எடுத்து .... சுலபமா மறுபடியும் போட்டுக்கிட்டு ...''

''என்ன சொல்ல வரீங்க? அவங்க ஏன் அப்படி பண்ணக்கூடாது?''

''இப்படி நீங்க கேட்கக் காரணம் - நீங்க இளையவள் மிஸ், மிகவும் இளையவள். ஆனா எனக்கென்னவோ கனமா தலை முழுக்க இறுக்கிப் பிடிக்கும் உசரமான குல்லாக்கள் தான் பிடித்தம். சல்லிசான உங்க தொப்பி... அதை தலையில் நிறுத்த கம்பி கம்பியா ஹேர்-பின்... ம்ம்...!''

சொல்லி விட்டு காற்றில் நாலைந்து கோபமான குத்துக்களை விட்டுக் காட்டினான்.

''உசரமான குல்லாய்...?! ஓ, ஆனா அது, எத்தனை அசௌகரியமா இருக்கும்!''

''ஆஹ்... இருக்கலாம்'' என்றான் பொய்ரெட்.

மிஸ் பக்லே, அவள் அணிந்துக் கொண்டிருந்த முன்பக்கம் வளைந்த தொப்பியைக் கழற்றி அவனுக்கருகில் கவிழ்த்து விட்டு, ''ம், போதுமா?'' என்றாள், கலகலவென சிரித்தபடி.

''ஆங், அது! இப்ப எவ்ளோ அழகாயிருக்கு'' என்றான் பொய்ரெட், மரியாதையாய் தலை குனிந்து வணங்கி!

அவளைத் தனி ஈடுபாடு கொடுத்து கவனித்தேன். அவளுடையக் கருங்கூந்தல் கலைந்துக் கொந்தளித்து அவளுக்கு ஒரு பிசாசுத் தன்மையை அளித்தது. மொத்தத்தில் அவளுடைய தோற்றத்திலேயே ஒருவித தலைவிரித்தனம் இருந்தது. சின்ன, கூரிய, உயிர்ப்புள்ள முகம், அபரிமிதமான ஆழ்நீலநிறக் கண்கள், கூடவே இன்னும் வேறு எதுவோ... பார்ப்போரை அறைந்து கைது பண்ணும் வேறெதுவோ. கவலையற்ற துணிகரத் தன்மைக்கான குறிப்பா, இது? அவளுடைய கண்களுக்குக் கீழே கருவளையங்கள் இருந்தன.

நாங்கள் உட்கார்ந்திருந்த பால்கனி பகுதியில் அப்போது அதிகப் புழக்கமில்லை. வாடிக்கையாளர்கள் அதிகம் பயன்படுத்திய பிரதான பால்கனி, அருகிலேயே, முதல்தள மாடிப்பகுதியின், அதோ... அந்த வளைவில் இருந்தது. அங்கிருந்துதான், மலையுச்சி சரேலென கீழிறங்கி கடலுக்குள் மூழ்கியது.

அவ்வளைவிலிருந்து தற்சமயம் ஒரு மனிதன் தோன்றினான். சிவந்த முகம் கொண்டிருந்த அவன், சக்கரம் வைத்த பெட்டியை கூடவே உருட்டி இழுத்துக் கொண்டு வந்தான். அவன் முகத்தில் கவலையற்ற குஷியான தன்மையிருந்தது - வழக்கமாய் கப்பல் பிரயாணம் செய்பவன் போலும்!

''அந்தப் பொண்ணு எங்கே போய் தொலைஞ்சாளோ...'' - நாங்கள் உட்கார்ந்திருந்த பகுதி வரை வந்து சேரும்படியான குரலில் அவன் சொல்லிக் கொண்டிருந்தான்? ''நிக் - நிக்.''

மிஸ் பக்லே எழுந்துக் கொண்டாள். ''இப்படி அதிர்ந்துப் போயிருப் பாங்கனுதான் நினைச்சேன். ஜார்ஜ் - ஜார்ஜ்... இங்கேயிருக்கேன் நான்.''

''ஃப்ரெட்டி குடிக்கணும்னு பேயா துடிச்சுக்கிட்டிருக்கான். வாங்கறேன்.''

அப்பட்டமாய் ஆச்சரியம் தெளிக்கும் பார்வையை அவன்

பொய்ரெட் நோக்கி வீசினான். நிக்'கின் பெரும்பாலான நண்பர்களுக்குள் சற்றும் பொருந்தாத ஒருவனாய் இவன் அவனுக்குப் பட்டிருக்க வேண்டும்.

அந்தப் பெண் அறிமுகம் செய்து வைப்பதில் இறங்கினாள். ''இவர் - கமாண்டர் சாலஞ்சர். ஆங், நீங்க... நீங்க...?'' - இவனுடைய பெயர் என்ன என வேண்டி திரும்பிப் பார்த்தாள் அவள்.

ஆனால், என்னை ஆச்சரியத்தில் மூழ்கடிக்கும் விதமாய், பொய்ரெட், அவனுடைய பெயரை வழங்கி விடவில்லை. மாறாக எழுந்து கொண்ட அவன், மிகவும் பவ்யமாக முதுகு வளைத்து மரியாதை செலுத்தி முணுமுணுத்தான்: ''ஆங்கிலேய கடற்படையைச் சேர்ந்தவரோ! ஆங்கிலக் கப்பற்படையின் மீது எனக்கு அளவு கடந்த மதிப்பு உண்டு.''

இப்படிப்பட்ட குறிப்புகளையெல்லாம் எந்த ஆங்கிலேயனும் உடனடியாக அகமகிழ்ந்து ஏற்றுக் கொண்டுவிடுவதில்லை. கமாண்டர் சாலஞ்சர் இப்பாராட்டினை ஒதுக்கித் தள்ளிவிட, மிஸ் நிக் பக்லே சூழ்நிலையைத் தன்னகப்படுத்திக் கொண்டாள்.

''இப்ப என்ன ஆயிடுச்சு, ஜார்ஜ்? தொறந்த வாயை மூடு மொதல்ல. ஃப்ரெட்டியும் ஜிம்'மும் எங்கேயிருக்கானுங்கனு பார்ப்பம்...''

அவள் பொய்ரெட்டைப் பார்த்து புன்னகைத்தாள். ''நீங்க தந்த சின்ன விருந்துக்கு, தேங்க்ஸ். உங்க கணுக்கால் கூடிய சீக்கிரம் குணமாயிடும்னு எதிர்பார்க்கிறேன்.''

என்னை நோக்கி ஆமோதிப்பாய் ஒரு தலையசைப்பினைத் தந்து விட்டு, தனது கையினைக் கடற்படை அதிகாரியின் கைகளுக்குள் நழுவ விட்டபடி, அதே மூலையில், அவ்விருவரும் திரும்பி மறைந்துப் போயினர்.

''ஆக, அது, மேடமுடைய ஒரு நண்பன்'' என சிந்தனையாய் குறிப்பிட்டான் பொய்ரெட். ''அவன் எப்படிப்பட்டவனா இருப்பான்? உன்னுடைய மேலான தீர்ப்பினை சொல்லு, ஹேஸ்டிங்ஸ். உன் அகராதியில் இருக்கும் நல்ல பையன் எனும் வகையா அவன், ஆங்?''

நல்ல பையன் என்றதில் அவன் எதை உணர்த்துகிறான் என்பதை பிரித்தறிய சில நொடிகளை ஒதுக்கி முயற்சித்து விட்டு சற்று ஐயமாகவே ''அவனைப் பார்த்தா நல்லவனாதான் படுது - பொஸ்'' என்றேன்.

''அவளை நுனிப்புல் பார்வை பார்த்த ஒருவன், இப்படித்தான் முடிவெடுக்க முடியும்.''

இதற்கு, ''எனக்கு ஆச்சரியமாயிருக்கு'' என்றான் பொய்ரெட்.

போன பெண், அவளுடைய தொப்பியை இங்கேயே விட்டுவிட்டுப் போயிருந்தாள். அதனை எடுக்க குனிந்த பொய்ரெட், பின் அதனை விரல் நுனியில் செருகி சுழல விட்டுக் கொண்டிருந்தான். அவன் நினைவெல்லாம் எங்கேயோ இருந்தன.

''அவன் அவளுக்கு ரொம்ப வேண்டியவனா இருப்பானோ? நீ என்ன நினைக்கிறே ஹேஸ்டிங்ஸ்?''

''டியர் பொய்ரெட்... அதைப்பற்றி நான் எப்படி சொல்ல முடியும்? த பாரு... தொப்பியை என்கிட்டே குடு. அந்தப் பொண்ணுக்கு இது தேவைப்படலாம். நான் கொண்டு போய் தந்துட்டு வந்துடறேன்.''

என் வேண்டுகோளுக்கு அவன் செவி சாய்க்கவே இல்லை. தொப்பியை விரல் நுனியில் குத்தி வைத்து சுழற்றுவதிலேயே இருந்தான் அவன். பிறகு நாக்கினால் கிண்டல் ஒலியெழுப்பியவன், நாற்காலியினின்றும் முன் வளைந்து வந்து, ''இந்தத் தொப்பியை நாம திருப்பித் தந்துடலாம் - நிச்சயமா - ஆனா கொஞ்ச நேரங்கழிச்சு. கடைசி வீட்டுல வெச்சு குடுப்போம். மிஸ் நிக் பக்லே எனும் அழகியை மறுபடியும் ஒருமுறை பார்க்கும் சந்தர்ப்பம் உருவாகலாமில்லையா...?''

''ஹேய் பொய்ரெட்...'' என்று கண்கலங்கச் சொன்ன நான், ''அந்தப் பொண்ணு மேல பித்தாயிட்டியோனு தோணுது. கண்டதும் காதல்?'' என்றேன்.

''அவ - சுந்தரமான பொண்ணு - இல்லே?''

''கண் கொட்டாம கிட்டத்துல வெச்சு பார்த்தவன் நீ. அப்புறம் என்னை எதுக்குக் கேட்கறே?''

''ஏன்னா, நண்பா, என்னால தீர்மானிக்க முடியலே! வயசாயிடுச்சு. இப்பல்லாம், எதெல்லாம் இளமையாயிருக்கோ, அதெல்லாமும் எனக்கு அழகழகா தெரியுது. வயசாகி விட்டதன் பரிதாபம்! ஆனால் நீயோ என்னை விடவும் நவீனமானவன். மாடர்ன்! அவ அழகி தான் - ஓ கே? எதிர்பாலுக்கு அவள் ஈர்ப்பினை உண்டாக்குபவள், ஆங்?''

''ஏய், ஏய் நிறுத்து. எதுக்காக அந்தப் பொண்ணு மேலே இத்தனை

சடுபாடா இருக்கே?''

''அப்படியா? நானா சடுபாடா தெரியறேன்?''

''பின்னே நானா? இவ்ளோ நேரம் நீ என்ன பேசினேனு கொஞ்சம் புரட்டிப் பாரு, தெரியும்.''

''நீ தப்பா அர்த்தப்படுத்திக்கிட்டிருக்கே, நண்பா. நானா அந்தப் பொண்ணு மேல ஓர் சடுபாட்டை உண்டாக்கிட்டிருக்கலாம் - யெஸ். ஆனா அவளை விடவும் நான் அதிக சடுபாட்டைப் பொருத்தியிருப்பது - அவளோட தொப்பியின் மீது!''

நான் அவனைப் பார்த்து முறைத்தேன்... ஆனால் அவனோ அவன் சொல்லியதில் துல்லியமாய் தெரிந்தான்.

என்னைப் பார்த்து ஒப்புதலாய் தலையசைத்துக் காட்டினான் அவன். ''ஆமாம், இதே... இதே தொப்பியைத் தான் சொல்றேன்.'' தற்சமயம் தொப்பியை என்னை நோக்கித் தூக்கிப் பிடித்தான். ''எனக்கு ஏன் இதன் மேலே இவ்ளோ சடுபாடு உண்டாகியிருக்குனு உனக்குக் காரணம் தெரியுதா?''

கேள்வி துளியும் விளங்காமல், ''இது ஒரு அழகான தொப்பி'' என்றேன் நான். ''ஆனா ரொம்ப சாதாரணமானதுப்பா இது. பல பெண்கள் கிட்டே இந்த மாடலைப் பார்க்க முடியும்.''

''ஆனா இந்த மாதிரி நிலையிலே அவை இருக்காது.''

இப்போது அதை மிக நெருக்கமாய் பார்த்தேன்.

''தெரியுதா, ஹேஸ்டிங்ஸ்?''

''எவ்வித டிஸைனும் இல்லாத... அலங்காரங்களுமில்லாத... ஒரு ப்ளெயின் தொப்பி. ஆனாலும் அழகா இருக்கு ...''

''இந்த தொப்பியை வர்ணிக்கும்படி நான் உன்னைக் கேக்கலே. வெளிப்படையா தெரியுது அது. ஆனாலும் நீ இன்னும் கவனிக்கலே. கண்ணுக்கு முன்னாடி ஒரு சாட்சியா அது இருக்கும் போது கூட நீ பார்க்காதது, ஹேஸ்டிங்ஸ், எப்படிடா? இந்த மாதிரி நீ கண்மூடித் தனமா இருக்கும் ஒவ்வொரு முறையும் எனக்கு அது ஓர் புது ஆச்சரியமாத்தான் அமையுது. இப்பவும்! கவனம் பதிச்சுப் பாரு, என் கிழ தோழா! மூளையின் சாதுர்யமான சாம்பல் செல்கள் வேண்டாம் இதுக்கு... விரிச்சு வெச்சு கவனிக்கும் ரெண்டு கண்கள் போதுமடா! கவனம் பதிச்சுப் பாரு ... கவனம், கவனம் ...''

பிறகு, கடைசியாய், என கவனத்தை எதன் பால் திருப்ப அவன் அத்தனை முயற்சிகள் செய்துக் கொண்டிருந்தானோ அதை நான் கவனித்து விட்டேன். அவனது கை விரல் நுனியில் சிக்கி மெதுவாய் தொப்பி சுழன்றுக் கொண்டிருக்க, அப்படி அதனை சுற்றிக் கொண்டிருந்த அவனுடைய கைவிரலோ, தொப்பியின் கூம்பு போன்ற நடு மையத்தில் விழுந்திருந்த ஒரு துளையில் வெகு சுலபமாக செருகப் பட்டு தொப்பியைச் சுற்றிக் கொண்டிருப்பதைக் கவனித்தேன். அவன் எதை காட்டிக் காட்டினானோ அதை நான் கவனித்து அறிந்து விட்டது புரிந்ததும், கை விரலை விலக்கி, தொப்பியை என்னிடம் தந்தான். அது ஒரு சின்ன, துல்லிய வட்டமான ஒரு துளை. அங்கு அப்படி ஒரு துளை எதற்கு என்ற காரணம் எனக்கு விளங்கவில்லை.

''ஒரு தேனீ அவங்க முகத்தருகே பறந்து போனபோது மேடம் நிக் அதை எப்படி விரட்டினாங்கனு நீ கவனிச்சியா? தேனீ தொப்பிக்குள்... துளையும் தொப்பிக்குள்.''

''ஹே, ஒரு தேனீ, இப்படி படுசுத்தமான வட்டமா ஒரு துளை போடாதுப்பா.''

''அட்லீஸ்ட், இதையாவது ரொம்ப சரியா சொன்னே, ஹேஸ்டிங்ஸ்! அதால முடியாது. ஆனா ஒரு துப்பாக்கிக் குண்டால முடியும்!''

''ஒரு குண்டு?''

''நண்பா! இதோ, இது போன்ற ஒரு துப்பாக்கிக் குண்டால!''

அவன் உள்ளங்கையை விரிக்க... அதிலொரு சிறு பொருளிருந்தது.

''என்னடா சொல்ல வர்றே ... ?''

''ஒரேயோர் அங்குல வித்தியாசம் மட்டும் இல்லாம போயிருந்தா, அந்தக் குண்டு தொப்பியில பாய்வதற்கு பதிலா தலையில பாஞ்சிருக்கும்னு சொல்ல வரேன். இப்ப புரியுதா ஹேஸ்டிங்ஸ், நான் எதுக்காக அத்தனை ஈடுபாடா இருந்தேன்னு? நான் எடுத்த என் சம்பந்தப்பட்ட முடிவை அசைப்பது சாத்தியமேயில்லைனு நான் சொன்னதை நீ கேலியாய் கேட்டதுல தப்பே கிடையாது ஹேஸ்டிங்ஸ்... அது ரொம்ப ரொம்ப சரி. ஆமாம் - நானும் மனுஷன் தானே. ஆனா அந்த மறைந்திருக்கும் கொலைகாரன் ஒரேயொரு தப்பைப் பண்ணிட்டான் - ஹெர்குல் பொய்ரெட் உட்கார்ந்திருக்கும் இடத்துக்கு சில அடிகளுக்குள்ளேயேவா அவன் முயற்சிக்கணும் -

இதை சொல்றேன்! அவனைப் பொறுத்த வரைக்கும், இது ஒரு முயற்சி - சோதனை! ஆனா, எதுக்காக நாம கடைசி வீட்டுக்குள் நுழைஞ்சு மேடம் நிக்'குடன் நட்பை வலுப்படுத்திக்கணும்னு இப்ப உனக்கு விளங்கணுமே, ஹேஸ்டிங்ஸ்? மூன்று நாட்களுக்குள் மரணத்தின் விளிம்பு வரை கொண்டு போன மூன்று விபத்துகள். இப்படித்தானே அவன் சொன்னது? நாம துரிதமா இயங்கணும் ஹேஸ்டிங்ஸ். பயங்கரம் வெகு அருகிலிருக்குடா.''

அத்தியாயம் 2

# கடைசி வீடு

"பொய்ரெட்" என அழைத்தேன் நான். "நான் சிந்தனையிலிருந்தேன்."

"பாராட்ட வேண்டிய வழக்கம். தொடர்."

ஜன்னலருகேயிருந்த சிறு மேஜையில் எதிரெதிராய் லஞ்சுக்காக நாங்களிருவரும் உட்கார்ந்திருந்தோம். "அந்தக் குண்டு நமக்கு அருகிலிருந்து தான் சுடப்பட்டிருக்கணும். இருந்தாலும் நாம அந்த ஓசையைக் கேட்கலே" என்று, நானிருந்த சிந்தனையை முன் வைத்தேன்.

"அலையின் சலசலப்பு பேரோசையாய் கேட்டுக் கொண்டிருக்கும் இந்த இடத்துல அந்த ஓசையை நம்மால கேட்டிருக்க முடியும்னா நீ நினைக்கிறே?"

"சொல்லத் தெரியலே."

"கிடையாது - சொல்லத் தெரியாத விஷயம் கிடையாது. சில ஓசைகளுக்கு நாம ரொம்ப பழகிப் போயிடறதாலே, அது இருந்தாலும் கூட நாம அதுக்கு காது கொடுப்பது கிடையாது. உதாரணத்துக்கு... இன்னிக்குக் காலைப்பொழுது முழுக்க வளைகுடா நெடுகிலும் சவாரி ஏத்திக்கிட்டு மின்சாரப் படகுகள் வேகவேகமா போய் வந்துக்கிட்டே தானிருக்கு. ஆரம்பத்துல அந்த ஓசையை நீ குத்தம் சொன்னே - ஆனா போகப்போக நீயே அதை மறந்துட்டே. யெஸ்! அங்கே ஒரு படகு கடல்ல சீறிப் பாஞ்சு ஓசையெழுப்பும்போது இங்கே மெஷின் கன் ஒண்ணு வெடிச்சா - அதை நீ பிரிச்சறிய மாட்டேடா. அதுக்குள்ளே இது அமுங்கிடும்."

"ஆமாம், உண்மை தான்."

"ஆஹ்... அங்கே..." என முணுமுணுத்தான் பொய்ரெட். "மேடம் நிக் மற்றும் அவங்களுடைய நண்பர்கள். அவங்க எல்லாரும் லஞ்சுக்கு

வந்திருப்பது போல தெரியுது. நான் அந்தத் தொப்பியைத் திருப்பித் தரணும். இப்பவே செஞ்சுடலாமா? நோ ப்ராப்ளம். விஷயம் தேவையான அளவு ஆபத்தான ஒன்னா இருப்பதால, அவங்க எல்லாரையும் ஒன்னா வெச்சு உடனடியா சந்திப்பதே சிறந்தது.''

தன்னிருக்கையிலிருந்து நொண்டியபடி எழுந்த அவன், உணவகத்தின் குறுக்கே வேகமாக நழுவி, மிஸ் நிக்கும் அவளுடைய நண்பர்களும் ஒரு டேபிளைச் சுற்றி உட்காரப் போன அதே நொடியில் அவர்களை அடைந்து, மரியாதை கலந்த சிறு வணக்கத்துக்குப் பிறகு அத்தொப்பியை அவளிடம் திருப்பித் தந்தான் அவன்.

அவர்கள், நாலு பேர் கொண்ட ஒரு நண்பர் கூட்டம். மிஸ் நிக் பக்லே, கமாண்டர் சாலஞ்சர், மற்றுமோர் ஆள் மற்றும் மற்றுமொரு பெண். நாங்கள் எங்கு உட்கார்ந்திருந்தோமோ அங்கிருந்து இவர்களை சரியாக பார்த்து கணிக்கவல்ல துல்லிய கோணத்திலிருந்தோம். நொடி நழுவ நழுவ, கடல்படை மனிதனின் சிரிப்புப் பெருகி வெடிச்சிரிப்பாய் வளர்ந்துக் கொண்டிருந்தது. அவன், அலட்டலற்ற, விரும்பத்தக்க மனிதனாய் தோன்றினான். ஏற்கெனவே அவன் மீது எனக்குள் ஒரு பிடிப்பு உண்டாகி விட்டிருந்தது.

சாப்பாட்டு நேரம் நெடுகிலும் என் நண்பன் அமைதியாகவும் ஒட்டுதலற்றும் இருந்தான். கையில் அகப்பட்ட ரொட்டியைக் கசக்கினான்... விளங்காத சின்னச்சின்ன உறுமல்கள் தந்தான்... டேபிளில் இருப்பவற்றை எதற்காகவோ சரியாய் நகர்த்தி வைப்பதில் நேரங்கடத்தினான். பேச முயன்றேன்... ஆனால் உரையாடலுக்கு வழியற்றுப் போய் விட, விட்டு விட்டேன்.

அவனுக்கு வந்திருந்த சிற்றுண்டியைச் சாப்பிட்டு முடித்த பிறகும் கூட அவன் உட்கார்ந்திருப்பதை நீட்டித்துக் கொண்டிருந்தான். அந்த நண்பர் கூட்டம் எழுந்த போது தான் அவனும் எழுந்தான். வராண்டாவில் அவர்களனைவரும் வரிசையான போது, ஒரு மிலிட்டரி காரன் போல நெடுநெடுவென நடந்து போன அவன் நேரடியாக மிஸ் நிக்கிடம் பேசத் துவங்கி விட்டான்.

''மேடம்... உங்க பொன்னான நேரத்துல சில நொடிகள் எனக்குக் கிடைக்குமா?''

அந்தப் பெண் முகஞ்சுளித்தாள். அவளுடைய உணர்வுகளை நான் உடனடியாக உணர்ந்தேன். இந்த விளங்காத குள்ள மனிதன் நிச்சயம் ஓர் இடையூறாய் ஆகப்போகிறான் என்ற பயம் அவளிடம் தெரிந்தது. அவளுக்காக அப்போது என்னால் வெறும் பரிதாபம் தான் பட முடிந்தது. விருப்பற்று, சில அடிகள் நகர்ந்துப் போனாள் அவள்.

உடனடியாக என்றே சொல்ல வேண்டும்... பொய்ரெட் அவள் காதுகளில் முணுமுணுத்த ஏதோ வார்த்தைகளுக்காக அவளுடைய முகத்தில் ஆச்சரியப் புயல் மேவி வீசியது.

இதற்கிடையில், சகஜமாய் இருக்க இயலாமல் நான் சங்கோஜப் பட்டுக் கொண்டிருந்தேன். என்னைக் காப்பாற்ற சிகரெட்டை சாமர்த்தியமாய் நீட்டியபடி என்னிடம் வந்த சாலஞ்சர், பொதுவான சம்பாஷணையைத் துவங்கினான். இவனுடன் சாப்பிட்டுக் கொண் டிருந்த மனிதனைக் காட்டிலும் எனக்கும் இவனுக்கும் அலைவரிசை நன்றாய் ஒத்துப்போவதாய் நினைத்தேன் நான். இப்போது கூடயிருந்த அந்த மற்றவனைக் கணிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நல்ல உசரம், வெண்நிறம். ஆடம்பர இளைஞன். சதைப்பிடிப்பான மூக்கு. கர்வம்பிடித்த போக்கு தென்பட்ட அவன் இழுத்து இழுத்துப் பேசியதில் தளர்ச்சியிருந்தது. அவன் பழகியதில் சற்று கொழுப்பு மிகுந் திருந்தது... அது எனக்குப் பிடிக்கவில்லை.

பிறகு அந்த மற்றொரு பெண்ணைப் பார்த்தேன். எனக்கு நேரெதிரில் வரும்படியான ஒரு பெரிய இருக்கையில் அமர்ந்திருந்தாள் அவள். அப்போது தான் அவள் அணிந்திருந்த தொப்பியைக் கழற்றியிருக்க வேண்டும். அவள் ஓர் அசாதாரண வகை - எப்போதுமே அலுத்து சலித்தவள் போன்ற வகையில். அவளுக்குக் கூந்தலிருந்தது - ஆனால் நிறமற்று. அது, நடு வகிடெடுத்து காதுகளை மூடி வழிந்து பின்னால் நுனியில் முடிச்சிடப்பட்டிருந்தது. அவள் முகம் வெளுத்துப்போய் உலர்ந்து கிடந்தது. இத்தனையிருந்தும் வித்தியாசமாய் ஈர்க்கவும் செய்தது. மெலிதான சாம்பல் நிறத்திலிருந்த அவளுடைய கண்களின் மணிகள் பெரிதாயிருந்தன. அனைத்திலிருந்தும் விலகியேயிருக்கும் விளக்கவொண்ணா படைப்பாயிருந்தாள் அவள். என்னை அவள் முறைத்துக் கொண்டிருந்தாள். திடுமென பேசினாள்.

''நிக்குடன் உங்கள் நண்பன் முடிக்கும் வரை - உட்காருங்கள்.''

அவளுக்குக் கவர்ந்திழுக்கும் குரல்வளம் அமைந்திருந்தது. சோர்வாயும் செயற்கைத்தனம் மிகுந்தும் அது வெளிப்பட்டாலும் அதனோடு ஒருவித ஈர்ப்புமிருந்தது... ஒலித்தும் அதிர்ந்து கொண்டே யிருக்கும் மணியோசைபோல். நான் சந்தித்தவர்களிலேயே அதிகபட்ச சோர்வாய் நான் பார்த்த ஒரே நபர் என்ற பதிவை அவள் என்னுள் ஏற்படுத்தினாள். சோர்வு, உடலால் அல்ல - மனத்தால். ஏதோ உலகிலுள்ள அத்தனையையும் அனுபவித்து விட்டு மொத்தத்தில் இங்கு எல்லாமும் ஒன்றுமற்ற வெற்றிடம் என்பதைக் கண்டு விட்டவளைப் போல.

''காலைல காலிடறி கீழே விழுந்து கணுக்காலை திருப்பிக்கிட்ட என் நண்பனுக்கு தக்க சமயத்துல உதவினது மிஸ் பக்லே தான்'' - அவள் சுட்டிக்காட்டிய இடத்தில் உட்கார்ந்தபடி விளக்கினேன் நான்.

''அவ சொன்னா'' - அதே ஒட்டுறவற்ற பாவனையில் அவள் கண்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தன. ''இப்ப அவர் காலுக்கு ஒன்னு மில்லியே?''

''அப்போதைக்கு ஏற்பட்ட வலி தான்... வேற பெரிசா ஒன்னு மில்லே.''

''ஓ! அப்போ இந்த விஷயம் முழுக்கவும் அவளா உற்பத்தி பண்ணி சரடு விடலைனு தெரிஞ்சுக்கிறதுல சந்தோஷமா இருக்கு. வானத்து லிருந்து நேரா பூமி இறங்கியுள்ள இவளைப் போன்ற உலக மகா புளுகி இன்னொருத்தியை உங்களால காட்டவே முடியாது தெரியுமோ? ஆச்சரிய அதிசயம் - நிச்சயமா அது ஒரு வரம் தான்.''

இதற்கு என்ன சொல்வதென்று எனக்கு ஒன்றும் தெரியவில்லை. எனது இந்த அவஸ்தை அவளுக்கு வேடிக்கையாயிருந்திருக்க வேண்டும். ''அவ என்னோட பழைய நண்பர்கள்ல ஒருத்தி'' என அவளே தொடர்ந்தாள்: ''நீயே சொல்லு ஜிம்... எப்படியாப்பட்ட புளுகி அவ, ஆங்? அதிசயத்தக்க வகையில அவ விட்ட அந்தக் கார் கதை - ஆனா அப்படியெல்லாம் எதுவும் கிடையாதுங்கறான் இந்த ஜிம்.''

அந்த வெள்ளைத்தோல் மனிதன், மிருதுவான அதே சமயம் வளமான குரலில் சொன்னான்: ''எனக்கு கார் பத்தியெல்லாம் கொஞ்சம் வெவரம் தெரியும் - ஏமாத்திட முடியாது.''

சொன்னவன் பாதி முகத்தைத் திருப்பிப் பார்த்தான். வெளியே

யிருந்த பல கார்களுக்கு நடுவில் ஒரு பெரிய சிகப்பு நிறக் காரிருந்தது. வேறெந்தக் காரையும் விடவும் நீளமாயும் சிகப்பாயும் தெரிந்தது அது. பாலிஷ் செய்யப்பட்டு பளபளக்கும் மெட்டல் மேற்தளம் கொண்டிருந்தது அந்த சூப்பர் கார்.

''அது உங்க காரா?'' - திடுமெனா உந்தித் தள்ளப்பட்டுக் கேட்டேன் நான்.

அவன் ஒப்புதலாய் தலையசைத்தான்: ''யெஸ்.''

'இருக்கலாம்!' என அர்த்தமில்லாமல் பிதற்றி விட எனக்குள் வேகமொன்று வந்த கணத்தில் பொய்ரெட் வந்து எங்களோடு சேர்ந்து கொண்டிருந்தான். நான் எழுந்துக் கொள்ள, என்னைக் கையோடு உடனே இழுத்துக் கொண்ட அவன், கூட்டத்தினருக்கு விடைபெறும் சிரிப்பை உதிர்த்துக் காட்டி, என்னோடு துரிதமாய் அகன்றான்.

''ஏற்பாடு செஞ்சுட்டேன், ஹேஸ்டிங்ஸ். கடைசி வீட்டுக்குப் போய் இன்னிக்கு ஆறரை மணிக்கு நாம மிஸ் நிக்'கைச் சந்திக்கறோம். மோட்டார் விளையாட்டைக் கடல்ல முடிச்சுட்டு அப்போ அவங்க திரும்பியிருப்பாங்களாம். நிச்சயமா, நிச்சயமா - அவங்க பத்திரமா திரும்பியிருப்பாங்க.''

அவனுடைய முகம் ஏதோ அவசர ஆர்வத்திலிருக்க... குரலில் சிறு வேதனை கிடந்தது.

''நீ அவ கிட்டே என்ன சொன்னே?''

''என்னை சந்திப்பதற்கு கொஞ்ச நேரத்தை ஒதுக்கித் தர கேட்டுக்கிட்டேன் - எத்தனை சீக்கிரம் முடியுமோ அத்தனை சீக்கிரமா. இதுக்கு அவங்களுக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லே - இது இயற்கை தானே... நான் புது மனுஷன் வேற; 'யாரிந்த குள்ளன்? எனக்கு வலை வீசப் பார்க்கிறானா? இல்லே, திடீர்னு பணக்காரனாயிட்டு அர்த்த ராத்திரியில குடை பிடிக்கும் அற்பனா? இல்லே, புதுமுகம் தேடும் ஏதாவது சினிமா டைரக்டரா இருக்குமா?' இப்படியெல்லாம் நினைக்கிறாங்க, மிஸ் நிக்! அவங்க என்னை ஒதுக்கித் தள்ளியிருக்கணும்னு நினைச்சிருந்தா கண்டிப்பா செஞ்சிருக்கலாம் - ஆனா அந்த இடத்துல... நாலு பேர் காத்திருக்கும் அவசரக் கட்டத்துல... வாக்குவாதத்தைத் தவிர்க்கும்படி நொடிப் பொழுதுல முடிவெடுக்க வேண்டிய தருணத்துல... நிச்சயமா ஒத்துக்கிட்டுத் தான் ஆகணும். ஆறரைக்கு

திரும்பிடுவேன்னு சொன்னாங்க.''

அப்படியானால் ''ஓ கே'' என்றேன் நான். மத்தியானம் முழுக்க பூனைக்குட்டிபோல இருந்தான் அவன். துள்ளித்துள்ளி அறையின் குறுக்கும் நெடுக்கும் அப்படியொரு நடை நடந்திருப்பான். அவனுக்குள் முணுமுணுத்துக் கொண்டும், அறையிலிருப்பவற்றின் இடங்களை நேர்த்தியாய் இன்னும் அழகு படுத்திக் கொண்டும், நடந்தே அறையின் தளத்தைத் தேய்த்தான். அவனோடு என்னத்தையாவது பேசலாம் என நான் வாயெடுத்தால் அதை தடுக்கும் விதத்தில் கையை வீசிக் காட்டி மறுத்து விட்டான்.

ஒருவழியாய் ஆறு மணிக்கே ஓட்டலறையை விட்டு நாங்கள் கிளம்பி விட்டோம்.

நாங்கள் காலையில் அமர்ந்திருந்த பால்கனியைக் கடக்கும்போது, ''இதை நம்பவே முடியலே'' என்று நான் குறிப்பிட்டேன். ''ஓட்டல் தோட்டத்துல உட்கார்ந்திருக்கும்போது ஒருத்தனைச் சுட முயற்சிக்க முடியுமா? பைத்தியக்காரன் தான் அப்படியெல்லாம் பண்ணுவான்.''

''இதுல உன் கருத்திலிருந்து நான் வேறுபடறேன், நண்பா. ஒரு வகையில, இது தான் ரொம்பப் பாதுகாப்பான முயற்சி. முதல் பாயின்ட்... தோட்டம் வெறிச்சோடிக் கிடக்கு. ஓட்டலுக்கு வருகிற கூட்டம் ஒரு ஆட்டு மந்தை மாதிரியானது. பால்கனியிலே உட்கார்ந்துக் கிட்டு நேரா குறிவெச்சுக் கடலைப் பார்த்துக்கிட்டிருப்பது இங்கு ஓர் எழுதா விதி போன்றது. ஆக எல்லாரும் இங்கே பால்கனியில கூடிடறாங்க. நான் மட்டும் தான் தோட்டத்தையும் பாரத்துக்கிட்டு உட்கார்ந்திருந்தேன். அப்படியிருந்தும் எனக்கு எதுவும் தென்படலே. நிறைய பதுங்குமிடங்களிருக்கு கவனிச்சியா - மரங்கள், செடிகள், புதர்கள். அதுங்களுக்குள்ளே, ஒருத்தனால, நல்லா வசதியா, யாரும் கவனிக்காத வண்ணம் பதுங்கியிருந்து, இந்த வழியா மிஸ் நிக் வருவதற்காக காத்திருப்பது - வெகு சுலபம். அவங்க இந்த வழியாத் தான் வந்தாகணும். வருவாங்க. கடைசி வீட்டிலிருந்து ரோடு வழியா ஓட்டலுக்கு வருவது, பயங்கர சுத்து. மேடம் நிக் பக்லே போன்றவங்க எப்பவுமே லேட்டா கிளம்பி குறுக்குப் பாதையில அவசரஅவசரமா போகும் ரகம்!''

''நீ என்ன சொன்னாலும், இதிலிருக்கும் ஆபத்து ரொம்ப

அதிகம்டா. அவனை நிச்சயமா யாராவது கவனிச்சுடலாம் - மேலும், சுடுவதை ஒரு விபத்து போல நீ நடத்திக் காட்டிட முடியாது.''

''விபத்து போல முடியாதுதான் - ஒத்துக்கறேன்.''

''என்ன சொல்றே நீ?''

''ஒன்னுமில்லே - திடீர்னு ஒரு சிறு ஊகம். எனக்கே அது சரியானு தெரியலே. அதை இப்போதைக்கு ஒத்தி வெப்போம். இப்ப கவனி. இது நடந்தேற - ஓர் அதிமுக்கிய கண்டிஷன் பூர்த்தியாகியிருக்கணும்.''

''எது அது?''

''நிச்சயம் அதை உன்னால சொல்ல முடியும், ஹேஸ்டிங்ஸ்.''

''நீயே புத்திசாலி என்பதை என் தோல்வி மூலமா நீ அறிவிச்சுக் கறதுல நான் தடையா இருக்க விரும்பலே, நண்பா!''

''ஆஹ்ஹா! பழிக்கிறியா! பெருந்தன்மை...?! ஒழி! இப்ப கண் முன்னாடி துள்ளி வந்து நிற்பது இது ஒன்னுதான்டா? இலக்கு வெளிப்படையா தெரிஞ்சுடக் கூடாது. அப்படி தெரிஞ்சுடற மாதிரி அவன் பண்ணியிருந்தான்னா, ஓஹ்... அவன் ஆபத்தை தைரியமாத் தான் கையில எடுத்திருக்கான்னு அர்த்தம். மக்கள் சொல்வாங்கப்பா: அந்த ஆள் சுட்டிருப்பானோனு தோணுது; அதோ, அங்கே ஒருத்தன் இருந்தான்... அவனாத் தானிருக்கணும்; குண்டைச் சுட்டவன் அப்போ எந்த இடத்துல இருந்திருப்பான்?' இல்லையா? ஆகவே, நிச்சயமா, அந்தக் கொலைகாரன், முகந்தெரியாத கொலைகாரன்னு தான் நான் இப்போதைக்கு சொல்லணும். அவன், வெளிப்படையா தெரிஞ்சுடக் கூடாது. இதனால தான் ஹேஸ்டிங்ஸ் நான் ரொம்பவும் பயப்படறேன்! ஆமாம், அடிச்சு சொல்றேன்டா - இந்த நிலைமையில நான் பயப்படறேன், பயப்படறேன். எனக்குள்ளே சொல்லிக்கிறேன்: 'அவங்கல்ல மொத்தம் நாலு பேர் இருக்காங்க.' இன்னொன்னும் சொல்லிக்கிறேன்: 'அவங்க எல்லாம் ஒன்னா சேர்ந்திருக்கும்போது எதுவும் நடக்க முடியாது.' கடைசியா சொல்லிக்கறேன்: 'அப்படி யிருந்தும் நடந்திருக்கு.' நடுங்கறேன்டா. கூடவே அந்த விபத்துகள் - அவற்றை பற்றி நான் கேட்கணும்!''

சட்டென திரும்பினான் அவன். ''கிளம்பு. இன்னும் நிறைய நேர மிருக்கு. இந்த சாலையின் எதிர் பாதையில நாம போவோம். இந்தத் தோட்டம் நமக்கு சொல்ல எதுவும் கிடையாது. கடைசி வீட்டுக்குப்

போகும் இந்த மற்றொரு சுற்று வழியை நாம கொஞ்சம் ஆராய் வோம்.''

எங்களுடைய இந்தப் பாதை ஓட்டலின் முன்புறக் கேட்டில் துவங்கி வெளியேறி, கூர்மையாய் மேலேறிய குன்று ஒன்றில் தொடர்ந்து, அங்கு உச்சியில் வலப்புறத் திருப்பத்தில் முடிந்தது. திருப்பத்தில், *'கடைசி வீட்டுக்கு மட்டும்'* என்ற சுவரொட்டி வழிகாட்டுதலோடு குறுகலான சந்து ஒன்று போனது.

அதனைத் தொடர்ந்தோம் நாங்கள். சில நூறு அடிகளின் முடிவில் எதிர்பாரா வளைவு ஒன்றைக் காட்டிய சந்து, பெயிண்ட் அடித்திருந்தால் கொஞ்சமாவது பார்க்க சகிக்கும் என எண்ணத் தோன்றிய துருப்பிடித்த ஒரு ஜோடி கேட்டுகளில் சட்டென முடிந்தது.

கேட்டுக்குள் நுழைந்ததும், அதன் வலப்புறத்தில், சிறு தங்குமறை ஒன்றிருந்தது. இது, கேட்டுகள் இருந்த நிலைமைக்கும் நுழைவிலிருந்து வீடு வரை நீண்ட புற்களாலான பாதைக்கும் நேரெதிரான நேர்த்தியான காட்சியைத் தந்தது. ஜன்னல் கதவுகளும் பட்டிகளும் சமீபத்தில் தான் பெயிண்ட் அடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஜன்னல்களில் தூய்மையான சீலைகள் ஆடின. அதனைச் சுற்றி அமைந்திருந்த தோட்டம் தூசு துரும்பு இன்றி சுத்தமாய் காக்கப்பட்டிருந்தது.

தற்சமயம் பூச்செடியொன்றின் பாத்தி வேலையிலிருந்த ஒரு மனிதன் தலை நிமிர்ந்து எங்களைப் பார்த்தான். கேட் கிறீச்சிட்டதில் நிமிர்ந்த அவன் திரும்பி எங்களைப் பார்த்தான். அவன் அறுபதைக் கடந்து, குறைந்தபட்சம் ஆறடி உயரமிருந்தான். கனமான கண்ணாடி... அனுபவ ரேகை ஓடிய முகம். அவனது தலை ஏறத்தாழ முழுக்கவும் வழுக்கை விழுந்திருந்தது. வெளிப்படையாய் தெரியும் நீல நிறத்திலிருந்த அவனது கண்கள் மினுக்கிக் கொண்டேயிருந்தன. நம்பத்தகுந்த ஜீவனாய் தோன்றினான் அவன்.

நாங்கள் கடந்து போகும்போது, ''குட் ஆஃப்டர்நூன்'' என்றான்.

அதற்கு நான் கனிவாய் புன்னகைத்தாலும் வீடு வரை இட்டுச்சென்ற பாதையில் நாங்கள் முன்னேறிக் கொண்டிருக்கும்போதே, அவனுடைய நீல நிறக் கண்கள் யாரிவர்கள் என எங்கள் முதுகினை விசாரிப்பதை என்னால் உணர முடிந்தது.

''எனக்கு ஆச்சரியமாயிருக்கு'' என்றான் பொய்ரெட்.

அப்படி எதைப்பார்த்து அவன் ஆச்சரியமானான் என்பதை சொல்ல மெனக்கெடாமல் அத்தோடு அப்படியே விட்டு விட்டான் அவன்.

வீடு, மிகப் பெரியதானதாக இருப்பினும், சஞ்சலத்தில் மூழ்கியிருக்கும் பதிப்பினைத்தான் உண்டுபண்ணியது. வீட்டின் கூரைகளை மரக்கிளைகள் கவிழ்ந்து தொடும் அளவுக்கு சுற்றி வர மரங்களால் மூடப்பட்டிருந்த அவ்வீடு, சிதிலமடைந்திருப்பது துல்லியமாய் தெரிந்தது. தொங்கியக் கயிறைப் பிடித்து இழுக்க பலமான சக்தியைத் திரட்ட வேண்டியது ஒருபுறமிருக்க... இழுத்து விட்டவுடனே உண்டாகும் ஒலியானது துவங்கினால் ஓயாது சோகமாய் அழுவது போல எதிரொலித்துக் கொண்டேயிருக்கும்படியான அழைப்பு மணியை அடிக்குமுன்... கணிக்கும் தொனியில் வீட்டினை ஒருமுறை அளந்துக் கொண்டான் ஹெர்குல்.

நடுத்தர வயது பெண்மணியால் கதவு திறக்கப்பட்டது. 'நாகரீகமான பெண்' - அவளை நான் உணர்ந்ததை இப்படித்தான் விவரிக்க வேண்டும். முழு மரியாதை தந்த பெண் - ஆனாலும் வருத்தம் தோய்ந்த முகத்தோடே.... எதிலும் துளியும் ஈடுபாடில்லாமல்.

செல்வி பக்லே இன்னும் திரும்பவில்லை என்றாள் அவள். அவளுடன் எங்களுக்கு முன்பதிவு இருக்கிறது என்பதை விளக்கினான் பொய்ரெட். புதியவர்கள் (அதிலும் இவனைப் போல இங்கிலாந்து நாடு அல்லாதவர்கள்) என்றாலே சந்தேகங்கொள்ள வேண்டும் என்ற தினுசிலிருந்த அவளுடைய நம்பிக்கையைப் பெற பொய்ரெட்டுக்கு சிறு சிரமமிருந்தது. அங்கு என்னுடைய தோற்றம் தான் அவளுடைய சிரமத்தைத் தணிக்க உதவியது என்பதை இங்கு நான் பெருமையுடன் குறிப்பிட்டாக வேண்டும். உள்ளே விடப்பட்டு வரவேற்பறையில் இருக்கை தரப்பட்ட நாங்கள் மிஸ் பக்லே திரும்பும்வரை காத்திருக்க அனுமதிக்கப் பட்டோம்.

இவ்வறையில் கிலேசமான சூழல் ஏதுமில்லை. கடலைப் பார்த்தபடி அறை முழுக்கவும் சூரிய ஒளியால் பிரகாசிக்கும்படி இருந்தது. அறை அலங்கோலமாயும் எவ்விதமான நாகரீகப் பூச்சுக்கும் இடங்கொடாது க்ரேதாயுக அமைப்பிலும் இருந்தது. பட்டுத்துணியில் பூக்கள் வரையப்பட்ட திரைச்சீலை வண்ணம் மங்கிப் போயிருந்தது. கல்லாய் கிடந்த குஷன்கள் புதிய அலங்காரமான உறைகளால் மூடப்பட்

டிருந்தன. குடும்பப் படங்கள் சுவரில் ஆங்காங்கே தொங்கின. அவற்றில் சில ஓவியங்கள் குறிப்பிட வேண்டிய அளவுக்கு அழகாயிருந்ததாய் எனக்குப்பட்டது. ஒரு கிராமஃபோன் மெஷினும் அதனருகில் சிதறலாய் சில இசைத்தட்டுகளும் மூலையிலிருந்தன. ஒரு புத்தகமும் இல்லை... செய்தித்தாள் மட்டும் பாதி திறந்து பாதி மூடி சோஃபாவின் நுனியில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது. அதை ஒரு முகச்சுளிப்போடு போய் எடுத்துக் கீழே வைத்தான். செயின்ட் ஜா பகுதியையும் தொடர்பு கொள்ள தகவல்களையும் தரும் வாராந்திரி அது. வீக்லி ஹெரால்ட். அப்போது, அதனை மறுபடியும் எடுத்துக் கொள்ள எதுவோ அவனை உந்தித்தள்ள, மீண்டுமொரு எடுத்து அதில் ஒரு பத்தியை அவன் கவனித்துக் கொண்டிருந்தபோது வாசற்கதவு திறக்கப்பட்டு மிஸ் பக்லே உள்ளே நுழைந்தாள்.

''ஐஸ் கொண்டு வா, எமிலன்'' என தன் தோள் வழியே ஆணையைப் பிறப்பித்தவள், தானாக எங்களுடன் பேச ஆரம்பித்தாள்.

''இதோ, உங்களுக்கு முன்னாடி, நான். ம், சொல்லுங்க. என்ன விஷயமா இருக்குமோனு ரொம்ப எதிர்பார்ப்போட இருக்கேன் நான். உங்க புதுப்படத்துக்கு நீங்க ரொம்ப நாளா தேடிக்கிட்டிருந்த ஹீரோயினா, நான்? நீங்க -'' என்று பொய்ரொட்டைப் பார்த்துக் குறிப்பிட்டவள், ''அத்தனை மரியாதைக்குரியவரா தான் தெரியறீங்க. அதனால இதைத் தவிர வேற எதையும் என்னால ஊகிக்க முடியலே. என்ன, ரொக்கமா நல்ல பெரிய தொகையோட வந்திருக்கீங்களா...?!''

''ஓ, மேடம் ...'' - துவங்கினான் பொய்ரெட்.

''ஐயோ, தயவுசெய்து அப்படியெல்லாம் ஒண்ணும் கிடையாதுனு மட்டும் சொல்லிடாதீங்க, ப்ளீஸ்'' என ஏறக்குறைய கெஞ்சினாள் அவள். ''அற்புதமான ஓவியங்கள் வரையக்கூடியவர்னு அறிமுகப் படுத்திக்கிட்டு என்னை மாடலா உட்கார வெச்சு, வரைஞ்சு, அதுங்களைக் கையில தூக்கித் தந்துட்டுப் போயிடாதீங்க! ம்ம், அப்படியிருக்க முடியாது. இங்கிலாந்துலேயே மிகப்பெரிய ஓட்டலும் பணம் ஏகமா செலவாகும் ஓட்டலுமான மெஜஸ்டிக்கில், ஓர் ஏழை ஓவியன் வந்து தங்க முடியாது. ம்ம்.''

எங்களுக்கு அறைக் கதவினைத் திறந்து விட்ட பெண்மணி ஒரு ட்ரேயில் பாட்டில்களுடனும் ஐஸ் கட்டிகளுடனும் வந்தாள்.

பேசியபடியே பானங்களையும் ஐஸ்களையும் லாகவமாய் கலந்தாள் நிக். கடைசியில், எதற்குமே பதில் தராமல் பேசாதேயிருந்த பொய்ரெட்டின் அமைதி அவளுக்குப் புதிராகியிருக்க வேண்டும்... கோப்பைகளை நிரப்புவதிலிருந்த தீவிரத்தை அப்படியே நிறுத்திக் கொண்டு, ''நல்ல விஷயம் தானே?'' என்றாள் அவள்.

''அதையே தான் நானும் உங்களுக்கு எதிர்பார்க்கிறேன், மேடம்'' என்றான் பொய்ரெட். ''உங்க உடல்நலத்துக்கு பாதகமில்லையெனும் நல்ல விஷயம் - எப்போதும், என்றும் பாதிக்கப்படாமல், உங்கள் உடல் நலமாகவே இருக்கிறது எனும் நல்ல விஷயம்.''

இளையவள் ஒன்றும் முட்டாள் கிடையாது. சொன்ன பொய்ரெட்டின் குரலில் இருந்த பாவத்தை அவள் பிடித்து விடாமல் இல்லை. கேட்டாள்: ''ஏதாவது குறிப்பா சொல்ல வேண்டியிருக்கா?''

''ஆமாம் மேடம். இந்த...''

இப்போது உள்ளங்கையில் குண்டினைச் சுமந்துக் கொண்டு அவளை நோக்கி கையை நீட்டினான். புதிர்ப்போடப்பட்டவளாய், அக்குண்டினைத் துள்ளிப் பாய்ந்து கைப்பற்றினாள்.

''அது என்னனு உங்களுக்குத் தெரியுமா?''

''ம். எனக்கு தெரியும். புல்லட்.''

''மிகச்சரி. டியர் மேடம்... இன்னிக்குக் காலையில உங்க முகத்துக்கு வெகு அருகில் பறந்து போனது, குளவி கிடையாது - இந்த புல்லட் தான்.''

''அறிவுகெட்ட ஏதோ ஒரு முட்டாள் க்ரிமினல், ஓட்டல் தோட்டத்துல துப்பாக்கி சுட்டுக்கிட்டிருந்தான்னா சொல்ல வரீங்க?''

''இது அப்படித்தான் தோணுது.''

''என்ன சாபமிது'' என்று வெளிப்படையாகவே சொல்லி விட்ட நிக், ''எனக்குனே நடக்குதா இப்படி?'' என்றாள் ஆச்சரியத் தொனியில். பின் சொன்னாள்: ''இது நாலாவது.''

''ஆமாம்'' என்றான் பொய்ரெட், தீவிரமாய். ''இது - நெம்பர் நாலு. ஆங்... மேடம் நிக்... அந்த மீதி மூன்றையும் பற்றி நான் அறிய விரும்பறேன். அந்த விபத்துகள்.''

அவனைப் பார்த்து முறைத்தாள் அவள்.

''எனக்கு நிச்சயப்படுத்தப்படணும், மிஸ் நிக் - அவை விபத்துகள்

தானாலு...!''

''ஆமாம், பின்னே! அப்படியில்லைன்னா அவை வேற என்னவா இருக்க முடியும்?''

''ஆமாம். ப்ளீஸ்! ஒரு பெரிய ஷாக்குக்கு உங்களை நீங்களே தயார் படுத்திக்கங்க. ஏன், யாராவது உங்க வாழ்க்கை மேல குறி வெச்சிருந்தா?''

இதற்கு நிக் கொடுத்த முழு பதிலும் ஒரு வெடிச்சிரிப்பாகவே ஆனது. இந்த ஊகம் அவளுக்குத் தாள முடியாத கேலியாய் பட்டது.

''என்ன ஓர் ஆச்சரியமான எண்ணம்! என்னருமை புது நண்பரே! இந்த உலகத்தல, யார் என்னோட பைசா பெறாத உயிருக்குப் போய் உலை வைக்க முடியும்? மண்டையைப் போட்டா, கோடிகோடி மில்லியன் பணம் கொட்டோகொட்டுனு கொட்டும் ஓர் அதியற்புத இளவரசி கிடையாது, நான். என்னை ஒருத்தன் கொலை பண்ண முயற்சி பண்றான் என்பது கற்பனைக்கு நல்லா த்ரில்லா இருக்கலாம்... ஆனா. ப்பூ, இதுல எனக்குத் துளி நம்பிக்கை கிடையாது.''

''இப்ப எனக்கு அந்த விபத்துகளைப் பற்றி சொல்ல முடியுமா, மேடம்?''

''ஏன், சொல்ல முடியாம. ஆனா அதுல உப்பு சப்பு இருக்காது. அவையெல்லாமும் ஜஸ்ட் முட்டாள்தனமான சம்பவங்கள். என் படுக்கைக்கு மேல நல்ல கனமான ஓவியம் ஒண்ணு தொங்கிக்கிட்டிருக்கு. அது ராத்திரி விழுந்துடுச்சு. வீட்டுல கீழே எங்கேயோ மூடாம ஆடிக்கிட்டிருந்த கதவோட சத்தம் கேட்டது; அது எதுனு பார்த்து மூடப் போன காரணத்தால... இதுலேந்து நான் தப்பிச்சேன். எதேர்சையா நடந்த விஷயமிது. அது என் தலையில வெகு சரியா விழுந்திருந்தா - கூழாக்கியிருக்கும். இது நெம்பர் ஒன்.''

பொய்ரெட் இதற்குப் புன்னகைக்கவில்லை. ''தொடருங்க மேடம்'' என்று மட்டும் சொன்னான். ''நாம ரெண்டாவதுக்குப் போவோம்.''

''ஓ, அது இதைவிட சத்தற்றது. தொற்றியேறும்படியான ஒரு மலைப்பாதை கடற்கரையில் உண்டு. இதில் தொற்றியபடி போனால் கடல் வரை கொண்டு போய் இறக்கி விடும். அந்த வழியில் நான் குளிக்கப் போவதுண்டு. அங்கே ஒரு வழுக்குப் பாறையிருக்கு. அதுலே ஏறி கடலுக்குள்ள குதிக்கலாம். அங்கே... ஒரு நாள்... கடல் அலைகளால்

ஓயாம அடிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும் பாறைகள்ல ஒண்ணு எப்படியோ தன்னிலையிழந்து என்னை நோக்கி ஹோனு கத்திக்கிட்டே விழுந்தது - மயிரிழையில அதுல நான் தப்பிச்சேன். மூணாவது சம்பவம் வித்தியாசமானது. என்ன காரணத்தினாலோ காரின் ப்ரேக்ல கோளாறு உண்டாச்சு - என்ன காரணத்தாலேனு தெரியலே. ரிப்பேர் பண்ணின ஷெட் காரன் என்னவோ சொல்லி விளக்கினான் - என்னால புரிஞ்சுக்க முடியல. எதெப்படியோ - அந்தக் காரை மட்டும் எடுத்துக் கிட்டு வீடு தாண்டி நான் மலைப்பாதையில இறங்கியிருந்தேன்னா... அவ்ளோ தான்... நிறுத்த முடியாத வேகத்துல பறக்கும் நான், பள்ளத் துக்குல எங்கேயோ கூழாகியிருப்பேன்னு சொன்னான் மெக்கானிக். வழக்கமா எதையாவது மறந்துட்டுப் புறப்படும் நான், அன்னிக்குக் காரை நகர்த்தின உடனேயே எதையோ ஒண்ணை நினைச்சு வண்டியை நிறுத்தப் பார்த்து அது முடியாம வாசலிலிருந்த சுவத்துல இடிச்சதோட நின்னேனோ பிழைச்சேனோ!''

''அப்படி, கார்ல நேர்ந்த கோளாறு என்னனு உங்களால எனக்கு இப்ப சொல்ல முடியாதா?''

'' 'மோட்டர் ஷெட்'ல போய் நீங்களே நேரடியா அதைப் பத்தி விசாரிச்சுக்கலாம். அவனுங்களுக்குத் தெரியும். ரொம்ப சுலபமா அவிழ்த்து எடுத்து விடும் ஏதோ ஒரு ஸ்க்ரூ சம்பந்தப்பட்டதுனு நினைக்கிறேன். எவெலினோட பையன் விளையாட்டா கைவரிசையைக் காட்டியிருப்பானோனு எனக்கு சந்தேகமுண்டு.. இந்த கார், சைக்கிள் இதுகளோடு பசங்களுக்கு நட்பு ஜாஸ்தியுண்டு. அப்படியெல்லாம் எதுவும் கிடையாதுனு சொல்றா எவெலின் - அவ கார்கிட்டேயே போனது கிடையாதாம். அப்போ அந்த ஸ்க்ருவாவே நழுவி விழுந்திருக்கணும். மலைப்பாதை. குலுக்கல் அதிகமாச்சே.''

''உங்க வீட்டுல கார் ஷெட் எங்கேயிருக்கு, மேடம்?''

''வீட்டைச் சுத்திக்கிட்டுப் போனீங்கனா - எதிர்ப் பக்கத்துல.''

''அது பூட்டி வைக்கப்படுமா?''

நிக்கின் கண்கள் அகலமாயின. ''ஓ, நோ. கிடையவே கிடையாது.''

''யார் வேணும்னாலும் உங்க காரைப் போய் நோண்டலாம் - ஒருத்தரும் கவனிக்காம.''

''ம் - ஆமாம் - அப்படித்தான் நான் நினைக்கிறேன். ஆனா அப்படி

செய்வது ரொம்பக் கீழ்த்தரமானது இல்லையா...?!''

''கிடையாது, மேடம். இதுல கீழ்த்தரமெல்லாம் கிடையாது. உங்களுக்கு இன்னும் புரியலே. நீங்க ஆபத்துல இருக்கீங்க - நெருங்கி அழுத்தும் ஆபத்துல! நான் இதை உங்களுக்கு இப்போ நிச்சயப்படுத்தி சொல்றேன் - நான்! இதுல, நான் யார்னு உங்களுக்கு இன்னும் தெரியாது.''

மூச்சற்றுப் போனவளாய், ''தெ-ரி-யா-து'' என்றாள் நிக்.

''ஹெர்குல் பொய்ரெட்.''

''ஓ!'' என்றாள் வீழ்த்தப்பட்ட குரலில் ''ஓ, யெஸ்'' என்றாள் சில நொடிகளில், ஆச்சரியமாய். ''ஹெர்குல் பொய்ரெட்!''

''அப்போ, உங்களுக்கு என் பேர் தெரிஞ்சிருக்கு!''

''ஓ, யெஸ்''

அவள் லஜ்ஜையாய் நெளிந்தாள். சிறு குழப்பம் தெறித்தது... ஆனாலும் தான் குறி வைக்கப்பட்டதை உணர்ந்த பாவனை அவள் முகத்தில் உதித்தது. பொய்ரெட் அவளையே கூராய் கிரகித்துக் கொண்டிருந்தான்.

''உங்க முகத்துல நிச்சயமற்ற தன்மை தெரியுது. அப்படினா, நீங்க என் கேஸ்களைப் பற்றியெல்லாம் அதிகம் கேள்விப்பட்டது கிடையாதுனு நினைக்கிறேன்.''

''இருக்கலாம் - எல்லாத்தையும் படிக்காமலிருக்கலாம் - ஓஹ், ஆனா பேர் - அது எனக்கு நல்லா பரிச்சயம்.''

''என்னருமை மேடம்... நீங்க சாந்தமா பொய் சொல்றீங்க. நீங்க சின்னப் பொண்ணு - குழந்தை மாதிரி. படிக்கும் சேதிகளெல்லாம் அப்படியப்படியே மனசுல நின்னுடாது - பேர்கள் உட்பட! எத்தனை பிரபல சேதியாயிருந்தாலும், அதனைலை ஒஞ்சதும், மறந்துடும். இப்போ என் நண்பன் சொல்வான் - கேட்டுக்குங்க.''

நிக் சட்டென என்னைத் திரும்பிப் பார்த்தாள். நான் சற்றே சிக்கலாய் உணர்ந்தபடி பேச தொண்டையைச் செருமிக் கொண்டேன்: ''திருமிகு ஹெர்குல் பொய்ரெட் - ஒரு மாபெரும் துப்பறியும் மேதை.''

''ஆஹ், நண்பா! இவ்வளவு தான் உன்னால் சொல்ல முடிந்தது! மேதகு மேடம்மிடம், நான், ஒப்புயர்வற்ற, தனித்துவம் மிகுந்த, இது வரை வரலாறு காணாத மாபெரும் துப்பறியும் நிபுணன் - அப்படினு

சொல்லு!''

''இதெல்லாம் இப்போ தேவையில்லாதது'' என்றேன் நான் கடுமையாய். ''ரொம்ப பீத்தாதே. அதான் எல்லாத்தையும் நீயே இப்போ சொல்லிக்கிட்டியே. அப்புறம்?''

''ஆமாமாம்... பெருந்தன்மை மிக முக்கியம். தற்பெருமை கூடவே கூடாத குணம், இல்லையா...?!''

''குரைக்கனே, கூட ஒரு நாயை வெச்சுக்கிட்டு வருவாங்களாம். யாரந்த நாய்?'' என்ற அவள் என்னைப் பார்த்து புன்னகைத்தாள்.

''வந்த வேலை என்னனே சொல்லாம மானத்தை வாங்காதேடா'' என்றேன் நான் கடுகடுப்பாய்.

''நல்லது. இப்ப பேசின எல்லாமும் ரொம்ப ரொம்ப ஆச்சரிய மானவை! என்னை யாரோ வழியிலிருந்து மொத்தமா நீக்கி விட முயற்சிப்பதாகவா நினைக்கிறீங்க? கேட்க விறுவிறுப்பாயிருக்கு. ஆனால், பார்க்கப் போனா, அப்படியெல்லாம் எதுவும் நிஜமா நடக்கலே. புத்தகங்களுக்குத்தான் இதெல்லாம் பொருந்தும், ஓ கே! புது வியாதி ஒண்ணுக்கு புதுசா ஒரு மருந்தைக் கண்டுபிடிச்ச டாக்டர், அதைப் பரிசோதிச்சு பார்க்க ஊர்ல இருக்கும் எல்லாருக்கும் அந்த வியாதி வரணும்னு வேண்டிக்கிட்டானாம்... அப்படிப்பட்ட கதையா இருக்கு, திருமிகு பொய்ரெட், உங்க கதை!''

''ஷட்...'' என்று இடியாய் இடித்தான் பொய்ரெட். ''விளையாடாம சீரியஸா இருக்க மாட்டீங்க? இந்தக் காலத்து சின்னப் பசங்களுக்கு எப்போ விழிப்பா பேசணும்னே தெரியாதா, ஆங்? ஓட்டல் தோட்டத் துல, ஓர் அழகு பிணமா, தொப்பிக்கு பதிலா தலையில சின்னதா ஒரு துளையை வாங்கிகிட்டு நீங்க விழுந்து கிடந்திருந்தீங்கன்னா... இது இத்தனை ஜோக்கா அமைஞ்சிருக்காது மேடம். இப்போ கேலி செஞ்சு இப்படி சிரிக்கிறீங்களே, இதை, அப்படி நடந்திருந்தா உங்களால செஞ்சிருக்க முடியாது.''

''அப்போ, ஏதாவது ஆவிக்கூட்டத்துல வந்து, அப்பவும் இப்படித் தான் நான் சிரிச்சிருப்பேன்'' என்றாள் நிக். ''ஆனா, சீரியஸாத் தான் நான் பேசிக்கிட்டிருக்கேன், திரு பொய்ரெட். நான் விளையாடலே. உங்க தொழில் அப்படி. அதனால, விபரீதமா எது நடந்தாலும் அதைக் கொலை மாதிரி உங்களை என்ன வெச்சு ... ப்ச், விடுங்க. நடந்துள்ள

அத்தனையும் விபத்துகளாதான் இருக்க முடியும்.''

''நீங்க சரியான அடங்காப்பிடாரி, மேடம்.''

''இது தான் என் பெயருக்கான காரணம், தெரியுமா! என் தாத்தாவும் என் போலவே தானாம். இங்கே இருக்கிற எல்லாரும் அவரை 'ஓல்ட் நிக்' அப்படித்தான் கூப்பிட்டிருக்காங்க. அவர் ஒரு பொல்லாத மனிதர் - ஆனா, ஜாலி டைப். அவரை எனக்கு அதீத்மா பிடிக்கும். அவர் எங்கெல்லாம் போறாரோ அங்கெல்லாம் நாளும் கூடவே போய் வந்ததாலே என்னை 'யங் நிக்' அப்படினு கூப்பிட ஆரம்பிச்சுட்டாங்க... அதுவே நிலைச்சுடுச்சு. ஆனா என பெயர் - மக்தல்ா.''

''இது ஒரு பிரபலமற்ற பெயர்.''

''ஆமாம். இது ஒரு வகையில குடும்பப் பெயர். பக்லே குடும்பத்துல நிறைய மக்தலாக்கள் இருந்திருக்காங்க. அது ஒண்ணு'' - சுவரிலிருந்த ஒரு படத்தைப் பார்த்து ஒப்புதலாய் தலையசைத்தாள்.

''ஆஹ்!'' என்று அதைப் பார்த்து சொன்னவன், பிறகு, அங்கிருந்த பெரிய அலமாரியின் மேலிருந்த ஒரு படத்தைப் பார்த்தபடி சொன்னான்: ''அதுவா உங்க தாத்தா, மேடம்?''

''ஆமாம். பார்ப்பவர்களை அப்படியே பிடித்து நிறுத்தும் ஓவியம், இல்லே? ஜிம், எத்தனை கொடுத்தாலும் அதை வாங்கிக் கொள்வதா சொல்லி முன் வந்தான். ம்ம். நான் தரப்போவதில்லே. எனக்கு ஓல்ட் நிக் மேல இன்னும் நீங்கா பிரியம் இருக்கு.''

''ஆஹ்!'' - பொய்ரெட் ஒரு நிமிடம் போல அமைதியாயிருந்து விட்டு உண்மையாய் பேசினான்: ''நல்லா கவனியுங்க, மேடம். நான் உங்களை விளையாட்டுத்தனத்தையெல்லாம் மூட்டை கட்டி வெச்சுட்டு கூர்மையா இருக்கும்படி வேண்டிக் கேட்டுக்கிறேன். நீங்க ஆபத்துல இருக்கீங்க. யெஸ். இன்னிக்கு, யாரோ ஒருத்தர், உங்களை, 'மாவ்ஸர்' எனும் ஒருவகை ஜெர்மன் துப்பாக்கியால சுட்டிருக்காங்க.''

''மாவ்ஸர் பிஸ்டல்?'' - ஒரு கணம் அவள் துணுக்குற்றுப் போனாள்.

''ஆமாம், ஏன்? மாவ்ஸர் பிஸ்டல் வெச்சிருக்கிற யாரையாவது உங்களுக்குத் தெரியுமா?''

அவள் புன்னகைத்தாள். ''அந்த அரியவகை, என்கிட்டேயே ஒண்ணு இருக்கு.''

''உங்ககிட்டே இருக்கா?''

''ஆமாம் - அது என் அப்பாவுடையது. பட்டாளத்திலிருந்து அதை வாங்கியிருக்கார் அவர். வாங்கிய தேதியிலிருந்து அது இங்கேயே தான் சும்மா கிடக்கு. அதோ அந்த டிராயர்லதான். அதை நான் சமீபத்துல எதேச்சையா பார்த்தேன்.''

அவள் ஒரு பழைய மாடல் பீரோவின் தட்டு ஒன்றினைச் சுட்டிக் காட்டினாள். தற்சமயம், எதுவோ ஒன்று அவளுக்குள் பிடிபட்டவளைப் போல, சட்டென எழுந்து குறுக்காய் போய் அந்தத் தட்டினைப் பிடித்திழுத்துத் திறந்தாள். முகம் வெற்றிடமாகிப் போனவளாய் திரும்பினாள் அவள். ''ஓஹ்...!'' என்று பேசிய அவள் குரல், புது பாவம் கொண்டிருந்தது. அவள் சொன்னாள்:

''அது - அது காணலே.''

அத்தியாயம் 3

# விபத்துகள்?

இந்தக் கட்டத்திலிருந்து, போய்க் கொண்டிருந்த சம்பாஷணை புது அரிதாரம் பூசிக்கொண்டது. இது வரை பொய்ரெட்டும் அந்தப் பொண்ணும் எதிரும் புதிருமாகவே பேசி வந்தனர். ஒருவர் பேசியதை மற்றவர் உள்வாங்கிக் கொள்ளாத அளவுக்கு அவர்களிருவருக்கு மிடையே உருவாகியிருந்த நீண்ட தலைமுறை இடைவெளி, இணைக்க முடியாத பிளவை உண்டுபண்ணியிருந்தது. பொய்ரெட்டுடைய கீர்த்தியும் புகழும் அவளுக்கு எவ்வகையிலும் அர்த்தமாகவில்லை. அந்தந்தக் காலகட்டங்களில் யார் புகழோடு பேசப்படுகிறார்களோ அவர்களைப் பற்றி மட்டுமே அறிந்திருந்த நுனிப்புல் தலைமுறையைச் சேர்ந்த நிக்'குக்கு, துப்பறியும் நிபுணனான அவனுடைய எச்சரிக்கைகள் எதுவும் எடுபடவில்லை. அவளைப் பொறுத்தமட்டில், பொய்ரெட், தான் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கழுத்தறுக்கும் ஒரு கோமாளி முதியவன்.

அவனுடைய இந்த நிலைப்பாடு அவனை உலுக்கியேவிட்டது. குறிப்பாக, அவனுடைய செருக்கு, அவதிக்குள்ளானது. ஹெர்குல் பொய்ரெட் என்றால் உலகின் எந்த மூலைக்கும் தெரியும் என்பது அவனுடைய விடாப்பிடியான கொள்கை. இங்கு, அப்படியெல்லாம் எதுவும் தெரியாத ஒருத்தி. 'அவனுக்கு நல்லா வேணும்' என நினைப்பதை என்னால் தவிர்க்க முடியாவிட்டாலும், இப்போது கையிலுள்ள விஷயத்தை நினைக்கும்போது, அந்தப்பெண் செய்வது அவ்வளவு உசிதமாய் படவில்லை.

இந்நிலையில், பிஸ்டல் காணாமல் போன செய்தி கண்டுபிடிக்கப் பட்டதும், விஷயம், ஒரு புதுக்கோணத்தில் பார்க்கப்பட்டது; இதனை, 

இதுவரை செய்ததுபோல ஒரு வியப்பூட்டும் ஜோக்காய் பார்ப்பதிலிருந்து நிக் கொஞ்சமாய் விலகினாள். இன்னும்கூட பேசப்பட்டுக் கொண்டிருந்ததை அவள் ஒரு கனமற்ற நிகழ்வாய் தான் கருதினாள்... ஏனென்றால், நடக்கும் எதையுமே அப்படி கனமற்று எடுத்துக் கொள்வது தான் அவளது குணமாயிருந்தது. ஆயினும், குறித்துக் கொள்ளும்படியான ஒரு குணமாற்றமும் அவளிடம் விளைந்திருந்தது.

திரும்பி வந்தவள் அங்கிருந்த ஒரு நாற்காலியின் பிடியில் புருவ முடிச்சுகளுடன் ஆழ சிந்திக்தவாறு அமர்ந்தாள். ''இது எங்கேயோ இடிக்குது'' என்றாள் அதே சிந்தனையுடன்.

பொய்ரெட் ஒரு சுழற்சுற்றாய் என்னை நோக்கித் திரும்பினான். ''உனக்கு இப்ப ஞாபகம் வருதா, ஹேஸ்டிங்ஸ்? எனக்குள் திடீர்னு ஒரு சிறு ஊகம்னு சொன்னேனே... அது!'' என்றான் பரபரப்பாய். ''ஆமாம், அது, என்னோட அந்த சின்ன ஊகம், கரெக்ட் தான். ஓட்டல் தோட்டத்துல துப்பாக்கியால் சுடப்பட்ட நிலையில மேடம் கண்டெடுக்கப் பட்டிருந்தா என்னவாகியிருக்கும்? அப்படி, கொலையாகி பிரேதமான ஒரு நிலையில, சில மணி நேரங்கள் வரை அவங்களை யாரும் கவனிச்சிருக்கவே முடியாது. அப்படியும் இப்படியுமா சில பேர் நடந்துக்கிட்டே இருந்தாலும் உடனடியா யாரும் கவனிச்சிருக்க மாட்டாங்க. மேலும், அவங்க கைக்கு அருகாமையில - கையிலிருந்து நழுவிய நிலையில - அவங்களோட சொந்தத் துப்பாக்கி. சந்தேகத்துக் கிடமின்றி, வேலைக்காரி எலென் அதை அடையாளங் காட்டிடுவா. ஏதோ மனக்கவலை... தூக்கமின்மை... தாளா இழப்பு... மரணபயம்... போன்ற ஏதாவது காரணங்கள் சுழலும்...''

நிக் இருப்புக்கொள்ளாமல் நெளிந்தாள். ''நீங்க சொல்வதிலும் அர்த்தமிருக்கு'' என்றாள். ''எனக்கு மரணம் பற்றிய பயம் இருந்தது. நான் நரம்பதிர்விலேயே இருக்கேன்னு கூட பலர் சொல்வதுண்டு. ஆமாம் - நீங்க சொல்ற மாதிரியெல்லாம் - காரணங்கள் சுழலலாம்...''

''தற்கொலைனு ஒரு தீர்ப்பு வரும். வேற யாருடைய கைரேகைகளும் இல்லாமல், மேடமுடைய பிஸ்டலில் வசதியா பதிஞ்சிருக்கும் அவங்களுடைய விரல் பதிவுகளே இதுக்கு சாதகமான சாட்சி தரும். ஓஹ்... எத்தனை சுலபமா வழக்கு முடிஞ்சுடுது.''

''எத்தனை கொடூரமான கூத்து'' என்றாள் நிக், ஆனால் இம்முறை, பழைய மாதிரியான கேலி அவள் குரலில் இல்லாததைக் கண்டு மகிழ்ந்தேன்.

அவளுக்கு இப்போதாவது புரிகின்றதே என அங்கீகரித்துக் கொண்ட பொய்ரெட், ''கவனியுங்க மேடம்... இனி மறுபடியும் இதுபோல ஒண்ணு அரங்கேறிடக் கூடாது'' என்றான். ''யெஸ்... ஐந்தாவது தடவை, சக்ஸஸ் கிடைச்சுடலாம்.''

''அப்ப உடனடியா இறுதிச்சடங்குக்கு ஏற்பாடு பண்ணுங்க'' - முணுமுணுப்பாய் குறிப்பிட்டாள் நிக்.

''சீச்சீ. நானும் என் நண்பனும் இருக்கோம் - அதையெல்லாம் முன்கூட்டியே முறியடிச்சு வெற்றி கொள்ள.''

என்னையும் அவன் சேர்த்துக் கொண்டு குறிப்பிட்டதில் நான் குதூகலமானேன். என் இருப்பினைக் கண்டுகொள்ளாமல் விட்டு விடும் வழக்கம் அவனுக்கு உண்டு.

''ஆமாம்'' என இடைபுகுந்தேன் நான். ''நீங்க படபடப்பாக வேண் டாம், மிஸ் பக்லே. நாங்க உங்களுக்குப் பாதுகாப்பா இருப்போம்.''

''எத்தனை அற்புதமானவங்க நீங்க'' என்றாள் அவள். ''என்னைப் பொறுத்தவரைக்கும் இந்த முழு சமாச்சாரமும் ஆச்சரியமாயிருக்கு. மேலும், ரொம்ப ரொம்ப த்ரில்லிங்.''

இந்நிலையிலும் அவள், அவளுடைய வழக்கப்படி நடப்பதில் ஒட்டுதலற்றே தெரிந்தாலும், அவளுடைய அக்கண்கள், ஆமாம், அவை, கலங்கிப் போயிருப்பது எனக்குத் தெரிந்தது.

''இப்போ முதல் வேலையா செய்ய வேண்டியது'' என்ற பொய்ரெட் குறிப்பிட்டான்: ''கலந்தாலோசிக்கணும்.'' உட்கார்ந்துக் கொண்ட அவன், நேசமான பார்வையை அவளை நோக்கி வீசினான். ''முதல்ல, வழக்கமா கேட்கப்படும் ஆரம்பக் கேள்வி: மேடம், உங்களுக்கு எதிரிகள் யாராவது இருக்காங்களா?''

தன்னிச்சையாக, மறுப்பாய் தலையசைத்தாள் நிக். ''அப்படியேதும் இருப்பதா எனக்குத் தெரியலே'' என்றாள் அவள்.

''ஓ. அப்போ அந்த சாத்தியக்கூறினை நாம ஒதுக்கிடுவோம். அடுத்து சினிமாவிலும் டிடெக்டிவ் நாவலிலும் கேட்கப்படும் கேள்விக்குப் போவோம், உங்க மரணத்தால அதிகம் லாபம் யாருக்குப் போகும்,

மேடம்?''

''அப்படியெதுவும் எனக்குத் தெரியலே'' என்றாள் அவள். ''அதனால தான் நடக்கும் இத்தனையும் எனக்கு செமத்தியான ஒரு முட்டாள்தனமா தெரியுது. உலுத்துக் கொட்டும் இது ஒண்ணு இருக்கு... இதுவும் கூரையெல்லாம் சிதிலமடைஞ்சுப் போய்... ஒழுகிக்கிட்டு... மேலும், இதையும் கடைசி செங்கல் வரைக்கும் அடகு வெச்சாச்சு.''

''இது அடகு வைக்கப்பட்டிருக்கு, ஆங்?''

''ஆமாம். இதை நான் அடகு வைக்க வேண்டி வந்தது. ரெண்டு மரணக் கடமைகள் வந்தன - ஒண்ணைத் தொடர்ந்து மற்றொன்று - அடுத்தடுத்து. முதல்ல என் தாத்தா போனார், ஆறு வருஷத்துக்கு முன்னாடி. பின்னாடியே என் சகோதரன். என் பண சம்பந்தப்பட்ட அத்தனை வசதிகளையும் இந்த ரெண்டு இழப்புகளும் மூடி போட்டு மூடின.''

''உங்க அப்பா?''

''போரிலிருந்து வந்த அவர் நிமோனியா தாக்கப்பட்டு 1919ல் இறந்துட்டார். நான் சின்ன குழந்தையா இருந்தபோதே அம்மா தவறிட்டாங்க. இங்கே என் தாத்தா கூட நான் வாழ்ந்து வந்தேன். தாத்தாவோட அப்பாவால ஒத்துப்போக முடியலே. அதனால என்னை இங்கேயே விட்டுட்டு தன் சொந்தக் கணக்குல ஊருரா சுத்தி வருவது அவருக்கு விடுதலையா பட்டது. கெரால்ட் - இவன் என் சகோதரன்... இவனும் தாத்தாவோட ஒத்துப் போகலே. நானும் ஒரு பையனாயிருந்திருந்தா அந்தக் கிழவனோட ஒத்துப் போயிருக்க மாட்டேன் என்பது மட்டும் நிச்சயம். பெண்ணாயிருந்ததால பொழச்சேன். அவரோட ஆரம்பக் கால குணாதிசயத்தின் ஒரு சில்லு நான் என்று அடிக்கடி சொல்லி மகிழ்ந்த தாத்தா அவரைப் போலவே நானும் கலகலவெனும் ஓர் ஆன்மாவா இருப்பதா சொல்லிக்கிட்டே இருப்பார். (இப்போது அவள் சிரித்துக் கொண்டாள்). அவர், யாராலும் அவ்ளோ சீக்கிரத்துல அங்கீகரிக்க முடியாத ஒரு கிழட்டு முரடன் என்பது என் கணிப்பு. ஆனா, அதே சமயம், அபரிமிதமான அதிர்ஷ்டக்காரர். அவர் எதைத் தொட்டாலும் அது தங்கமா மாறிடும் என்றொரு பழமொழி இங்கு உலவியதுண்டு. அவர் ஒரு சூதாடி - வெற்றிகரமான சூதாடி - ஆனா சேர்த்த அத்தனையையும் சூதாடியே விட்ட சூதாடியும் கூட! அவர்

மறைந்தபோது இந்த வீடும் நிலமும் தவிர வேற கிடையாது. அவர் போன போது எனக்கு வயசு 16... கெரால்டுக்கு 22. மூணு வருஷத்துக்கு முன்னாடி ஒரு மோட்டார் வண்டி விபத்துல கெரால்டு இறந்து விட இந்த இடம் எனக்கு வந்து சேர்ந்தது.''

''உங்களுக்கு அப்புறமா மேடம்? யார் உங்களுக்கு அடுத்து வரும் உடனடி வாரிசு?''

''சார்ல்ஸ். உறவுக்காரப் பய. சார்ல்ஸ் வைஸ் முழு பெயர். இங்கே தான் வக்கீலா இருக்கான். ரொம்ப நல்லவன்... நம்பகமானவன்... ஆனா டல் பேர்வழி. எனக்கு நல்லா அறிவுரை தருவான். என் ஊதாரித்தனமான சில விஷயங்களைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஜீவன்.''

''உங்க சம்பந்தமான விவகாரங்களுக்கு அவர் உதவறாரா, ஆங்?''

''வெல், ஆமாம். ஒருத்தர் கூடவே உதவ வேண்டிய அளவுக்கு கூடை நிறைய விவகாரங்கள் கிடையாது. இதை அடகு வைக்க ஏற்பாடு செஞ்சு தந்தான். வாடகைக்கு ஆள் கிடைக்க உதவினான்.''

''ஆஹ் - வாடகை. அதைப்பத்தி தான் நான் கேட்கணும்னு இருந்தேன். இது வாடகைக்கா விடப்பட்டிருக்கு?''

''ஆமாம் - சில ஆஸ்திரேலியர்களுக்கு. க்ராஃப்ட் என்பது அவங்க குடும்பப் பெயர். ரொம்ப ஒட்டிக்க ஒட்டிக்க பழகறவங்க, தெரியுமா. வர்ணிக்க முடியாத அளவுக்கு கனிவானவங்க. இளம் பட்டாணி வாங்கிட்டு வருவாங்க, நான் கொறிக்க. காய் கனி வாங்கித் தருவாங்க. இது போல நிறைய. இப்படித் தோட்டத்தை நான் கந்தர்வகோலமா போட்டு வெச்சிருப்பதைப் பார்த்து மொதல்ல அதிர்ந்து போயிட்டாங்க. அன்புத் தொல்லையாலேயே என்னை அவங்க இம்சைப் படுத்திக்கிட்டிருக்காங்க. அதுவும் அந்த ஆள்... ஊஃப், தொல்லைத் தாங்கலே. அவ, உடைஞ்சுப் போயிடற மாதிரி இருக்கா - பாவம்... ஒத்துழைக்காத உடம்பு. எப்பப்பாரும் சோஃபாலியே படுத்துக்கிட்டு! எப்படியோ ஒழியட்டும்... வாடகையை சரியா தந்துடுதுங்க. இது பெரிய விஷயமில்லே...!?''

''எத்தனை நாளா அவங்க இங்கே இருக்காங்க?''

''இருக்கும், ஒரு ஆறு மாசமா.''

''சரி... இவர், உங்க அப்பா பக்கத்து உறவா அல்லது அம்மா பக்கத்து

உறவா?''

''அம்மா. அம்மா பெயர் ஆமி வைஸ்.''

''ஓ! இவரைத் தவிர வேற உறவுகள் ஏதாவது இருக்கா?''

''தூரத்து, பக்லே பரம்பரை உறவுகளிருக்கு. யாக்-டிஷர் பகுதியில.''

''வேற நாதியே கிடையாதா?''

''நோ.''

''தனிமை, தனிமை.''

நிக், அவனைப் பார்த்து விழித்தாள். ''தனிமை? என்ன கோமாளித் தனமான எண்ணம்? நான் இங்கே வந்து ரொம்ப நாளெல்லாம் தங்குவது கிடையாது, தெரியுமா? நான் வாடிக்கையா லண்டன்ல தானிருப்பேன். உறவுகள், மிக சிக்கலான ஒன்று. நெருங்க விட்டா, எல்லாத்துலேயும் மூக்கை நுழைக்குங்க, அதுங்க. சொந்தக்கால்ல நிற்பதுல தான் த்ரில்லே இருக்கு.''

''நீங்க ரொம்ப நவீனமான மாடர்ன் பொண்ணு போல தெரியுது, மேடம். இப்ப, உங்க வீட்டைக் கவனிச்சுக்கிறவளைப் பற்றி.''

''மாடர்ன்... கேட்கவே எவ்ளோ இனிமையாயிருக்கு. ஓகே... என் வீட்டைக் கவனிச்சுக்கிறவ, எலென். அவ புருஷன் - ஏறக்குறைய ஒரு தோட்டக்காரன் போல. ரொம்ப ஒழுங்கெல்லாம் கிடையாது. ரெண்டு பேருக்கும் சேர்த்து கம்மியா தான் பணம் தரேன் - இதுக்குக் காரணமுண்டு... அவங்க பிள்ளையை இங்கேயே வெச்சுக்க அனுமதி தந்திருக்கேன்... அதனால. நான் இங்கே வந்து தங்கினேன்னா எனக்காக எல்லாத்தையும் எலென் பண்ணிடுவா. பார்ட்டினு ஏதாவது இங்கே ஏற்பாடு பண்ணினேன்னா, ரெண்டு பேரும், யார் யார் என்னென்ன பண்ணும்னு பிரிச்சுப்போம். உதவி செஞ்சுப்போம். திங்கட்கிழமை ஒரு பார்ட்டி தரேன், தெரியுமா?''

''திங்கள் - ஓஹ். இன்னிக்கு சனி. ம். இப்ப உங்க நண்பர்கள் பற்றி, மிஸ். உதாரணத்துக்கு இன்னிக்கு நீங்க சேர்ந்து லஞ்ச் சாப்பிட்டீங்களே, அவங்க?''

''ஓ கே. ஃப்ரெட்டி ரைஸ் - அந்த வெள்ளைச் சதை பொண்ணு - அவ என்னோட அற்புதமான தோழி. ஆனா வாழ்க்கையில பாவம் திண்டாடிப் போனவ. பிசாசு ஒருத்தனுக்கு வாழ்க்கைப்பட்டா. குடி, கும்மாளம் - நாய் பய ஒரு புரிஞ்சுக்க முடியாத கெட்ட மூட்டை.

ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி அவனை விட்டு அவ விலகற மாதிரி ஆயிடுச்சு. அப்போவேந்து எங்கெல்லாமோ சுத்தி திரிஞ்சுக் கிட்டிருக்கா. எப்படியாவது அவன்கிட்டேயிருந்து டைவர்ஸ் வாங்கி ஜிம் லாஸரஸுடன் அவ இணைஞ்சுடணும் என்பதுதான் என் பிரார்த்தனையே.''

''லாஸரஸ்? ஆர்ட் டீலர், ஆங்?''

''ஆமாம். ஜிம், ஒரே பையன். பணத்துல மிதக்கிறான். அவனோட காரை நீங்க பார்த்தீங்கள்லே? நீங்களே கூச்சப்படற அளவுக்கு, மரியாதை தெரிஞ்ச பையன்; அவ்ளோ பணிவா நடந்துப்பான். ஃப்ரெட்டி மேல பக்தியா கிடக்கான். எங்கே போனாலும் ரெண்டும் ஒண்ணாவே போகுதுங்க. மெஜஸ்டிக் ஓட்டல்ல வார இறுதிக்காக வந்து தங்கியிருக்காங்க... எனக்காக திங்கட்கிழமை இங்கே வராங்க.''

''மிஸஸ் ரைஸுடைய கணவர்?''

''அந்தப் பிசாசா? ஓ! அவனை எல்லாரும் கழட்டி விட்டாச்சு. அவன் எங்கே கெடக்கான்னு ஒருத்தருக்கும் தெரியாது, இது தான் ஃப்ரெட்டியை இம்சை பண்ணுது. எங்கே இருக்கான்னே தெரியாத ஒருத்தனை உங்களால டைவர்ஸ் பண்ண முடியாது இல்லே?!''

''ம்.''

''பாவம், அவ'' என்றாள் நிக், வாட்டமாய். ''துரதிர்ஷ்டசாலி. பார்த்துப் பண்ணி வெச்ச கலியாணம் தான். அவனை அப்படிப் பிடிச்சு போச்சு அவளுக்கு... அவன் கிட்டேயே தன்னை ஒப்படைச்சா... அவனுக்கும் அவ மேல இஷ்டம்னான்... அப்புறம் தான், ஜஸ்ட் சாயங்காலம் டிபன் வாங்கித்தர ஒரு பொண்ணை ஓட்டலுக்குக் கூட்டிட்டுப் போகக் கூட அவன் கையில தம்புடி கிடையாதுங்கிறது தெரிஞ்சது. இது எல்லாத்துக்கும் முடிவு? தூக்கியெறிஞ்சுட்டு வந்துட்டா ரைஸ். கையில கிடைச்சதை எடுத்துக்கிட்டு அன்னிக்கு ஓடினவன் தான்... அவனைப் பத்தி ஒரு தகவல் இல்லே. பிச்சைக்காரப் பய - இப்படித்தான் சொல்வேன் அவனை.''

''இப்படியுமா...?'' என ஆச்சரியமானேன் நான்.

''என் நண்பன் ஹேஸ்டிங்ஸுக்கு அதிர்ச்சி'' என்று குறிப்பிட்டான் பொய்ரெட். ''நீங்க ரொம்பவும் ஜாக்கிரதையா இருக்கணும், மேடம். அவன் இன்னிக்குத் தேதியில உங்க பட்டியல்ல கிடையாதுனு நீங்க

சொல்றீங்க. ஆனா அவன் திரும்பி வரலாம், இல்லையா?''

''இதுக்கெல்லாம் போய் ஷாக் ஆவறதுல அர்த்தம் கிடையாது ஸார்'' என்றான் கண்ணகல. ''இப்படிப்பட்ட பிரகஸ்பதிகளும் இருக்கானுங்களு எல்லாருக்கும் தான் தெரியுமே. ஆனா, நாய் பய பணத்தை சுருட்ட போட்ட மகா மட்டமான திட்டமிது. பாவப்பட்ட ரைஸ் தான், அந்த சமயத்துல எங்கே போவது எங்கே அண்டுவதுனே எதுவும் தெரியாமா துடிதுடிச்சுப் போனா.''

''ஆமாமாம். பாராட்டும்படியான விஷயமா இது? சரி... உங்களோட அந்த மற்றொரு நண்பன், மேடம். கமாண்டர் சாலஞ்சர்?''

''ஜார்ஜ்? ஜார்ஜை எனக்கு ரொம்ப நல்லா தெரியும். கடைசி அஞ்சு வருஷமா திக்'கான பழக்கம்னு சொல்வேன். நல்ல பட்டாளத்தான் - ஜார்ஜ்.''

''அவனைக் கலியாணம் பண்ணிக்கச் சொல்லி உங்ககிட்டே கேட்டுக்கிட்டே இருக்கான், ஆங்?''

''அப்பப்போ அதை அவன் சொல்லிக்கிட்டுத் தானிருக்கான். விடிய காலையில கண் முழிச்சதும். இல்லே ரெண்டு க்ளாஸ் அடிச்சதும்.''

''ஆனா நீங்க அசையா கல்லா இருக்கீங்க?''

''ஜார்ஜால என்ன பலனிருக்கு? நானும் அவனும் ஒருத்தரையொருத்தர் கட்டிக்கிட்டு என்ன ஆயிடப் போகுது? ரெண்டு பேருக்குமே இணைச்சுப் போடும் எந்த ஒற்றுமையும் கிடையாது. ஒருத்தன் ஜார்ஜோட கொஞ்சமிருந்தாலே அசாத்திய போராயிடுவான். இன்னிக்குத் தேதியில அவனுக்கு வயசு நாற்பதைத் தொடப் போகுது. ம்!''

இந்தக் குறிப்பு என்னை லேசாக நெளிய வைத்தது.

''அவனுக்கும் வயசு ரொம்ப! அதான்...'' என என் நெளிசலைச் சுட்டிக்காட்டிய பொய்ரெட், ''என்னைப் பற்றி கவலை வேண்டாம்'' என்றான். ''நான் உங்க தாத்தா.''

''தெரியுது. அதனால இனி ஏங்க வேணாம். வா போதும்.''

புன்னகைத்தபடி ''சொல்லு நிக்'' என உடனடியாய் மாறிக் கொண்ட பொய்ரெட், ''அந்த விபத்துகளைப் பற்றி இன்னும் விவரமா சொல்லு. உதாரணத்துக்கு, விழுந்த அந்தப்படம்?''

''அதை மறுபடியும் மாட்டிட்டேன் - புது கயிறுல. வேணும்னா

வந்து நீங்களே பாருங்க.''

அமர்ந்திருந்த அறையை விட்டு எழுந்து முன்னால் வழிகாட்டிக் கொண்டு அவள் போக நாங்கள் தொடர்ந்தோம். உரையாடலில் இடம்பெற்றிருந்த ஓவியம் ஓர் ஆயில்-பெயிண்டிங் வகை. கனமான சட்டம் போடப்பட்டிருந்தது. அது, கட்டிலின் தலைமாட்டுக்கு மேலே வெகு சரியாய் தொங்கிக் கொண்டிருந்தது.

''உங்க அனுமதியோட, மேடம்...'' என்ற முணுமுணுப்போடு பூட்ஸைக் கழற்றி விட்டு கட்டிலில் ஏறினான் பொய்ரெட். சட்டம் போடப்பட்டிருந்த படத்தையும் அதன் கயிற்றினையும் பரிசீலித்த அவன், ஒட்டுமொத்த கனத்தையும் தோராயமாய் கணித்தான். ஒரு ராஜாங்க மேட்டுமையோடு இறங்கினான்.

''இத்தனை கனமான படம் தலையில விழுந்ததுனா என்ன ஆறது? ஊஃப்...! முன்னாடி இது கட்டப்பட்டிருந்த கயிறு, மேடம் நிக், இதே போன்ற கம்பிக் கயிறா?''

''ஆமாம், ஆனா இந்த அளவுக்கு கனமான கம்பி கிடையாது, அது. இந்தத் தடவை தடிமனான கயிறா பார்த்து கட்டினேன்.''

''உங்க முன் ஜாக்கிரதை விளங்குது. ஆங்... அது பிய்ந்த இடத்தை நீங்க பார்த்தீங்களா? கயிறின் அறுந்த பகுதி உராய்வுல தேய்ந்தாற் மாதிரி இருந்ததா?''

''பார்த்திருக்கலாம் - ஆனா அதுல குறிப்பா எதையும் நான் எதிர்பார்த்து, பார்க்கலே. அதுல அப்படி நான் என்னத்தை எதிர்பார்க்க இருக்கு?''

''அதுவும் சரிதான் - அறுந்த கயிறுல நீங்க எதை எதிர்பார்ப்பது? இருந்தாலும், அந்தத் துண்டுக் கயிறை நான் பார்த்தா நலம். வீட்டுல எங்கேயாவது அதை எடுத்து வெச்சிருக்கீங்களா?''

''படத்துலேயே தான் அது இருந்தது. புது கயறை மாத்தின ஆளு அதை எடுத்து எறிஞ்சிருக்கணும்.''

''ப்ச். அதை நான் பார்த்திருக்கணும்.''

''அது ஒரு விபத்தா நடந்த ஒண்ணுனு இன்னுமா நீங்க கருதலே? நிச்சயமா அது வேற எதுவாவும் இருக்காது, ஸார்.''

''அது ஒரு விபத்தாவே இருக்கலாம். அப்படி சொல்ல வாய்ப்பிருக்கு. ஆனா உங்க காரோட ப்ரேக்குக்கு நிகழ்ந்துள்ள பழுது - அது,

நிச்சயமா விபத்து கிடையாது. அப்புறம் மலையுச்சியிலிருந்து நழுவி விழுந்த பெருங்கல் - ஆங்... அந்த விபத்து நடந்த இடத்தையும் நான் என் கண்ணால பார்த்துட விரும்பறேன்.''

எங்களை வெளியே தோட்டத்துப் பக்கம் அழைத்துப் போன நிக், அப்படியே மலையுச்சிக்கு இட்டுச் சென்றாள். பாறையிலிருந்து கரடு முரடான பாதை ஒன்று கீழிறங்கியது. நிக், எங்கு விபத்து நடந்தது என்பதை விளக்கிக் கூறும்போது சிந்தனையாய் ஆமோதித்துத் தலை யாட்டிக் கொண்டேயிருந்த பொய்ரெட், பின் கேட்டான்: ''தோட்டத் துக்குப் போக எத்தனை வழிகள் இருக்கு, மேடம்?''

''முன்பக்கம் வழியிருக்கு. வியாபாரிங்களுக்குனு தனியா ஒரு வழியிருக்கு -அதோ அந்தப் பாதையில பாதி வழி போனா அந்த கேட் இருக்கு. இங்கே இந்த உச்சியின் பக்கத்துலேயே ஒரு கேட் இருக்கு; இதுல வெளியேறினா உடனேயே கோணல் மாணலான ஒரு பாதை கிடைக்கும். அந்த பீச்சிலிருந்து மெஜஸ்டிக் ஓட்டல் போக உதவும் பாதை அது. இதெல்லாம் தவிர வேலியோரத்துல ஒரு சின்ன இடுக்குப் பாதையுண்டு; மெஜஸ்டிக் தோட்டத்துக்குக் கொண்டு போய் விடும் அந்தப் பாதை. அந்த வழியில தான் நான் இன்னிக்குக் காலையில கூட போனேன். மெஜஸ்டிக் தோட்டத்து வழியா போவது தான் டவுனுக்குப் போக உள்ள ஒரே சுருக்கு வழி.''

''உங்க அந்தத் தோட்டக்காரன் - அவன் வழக்கமா எங்கே வேலை பண்ணிக்கிட்டிருப்பான்?''

''அடுக்களையை ஒட்டியிருக்கும் பெரிய தோட்டத்துல தான் எதையாவது பண்ணிக்கிட்டிருப்பான். இல்லேனா, தோட்ட சாமான் களைப் போட்டு வெக்கிற குடிசையில உட்கார்ந்துக்கிட்டு ஏதாவது கத்திரி கித்திரியைக் கூர் பண்றா மாதிரி காட்டிக்கிட்டிருப்பான்.''

''அது, வீட்டை சுற்றி வந்தா - மறு பக்கத்துல, ஆங்?''

''ம்.''

''அப்போ யார் வேணும்னாலும் வீட்டோட இந்தப் பக்கம் இங்கே வந்து, பெருங்குண்டை கூட வெச்சு செட் பண்ணிட்டுப் போகலாம் - ஓர் ஈ காக்கா கவனிக்காம.''

சட்டென்று ஒரு திடீர் நடுக்கத்தைக் காட்டினாள் நிக். ''நீங்க... நீங்க... நீங்க அப்படித்தான் நிச்சயமா நடந்திருக்கணும்னு நினைக்

கிறீங்களா?'' - கேட்டாள். ''நோ. என்னால அப்படி நம்பவே முடியலே. அப்படி நினைப்பதே கூட முழு அற்பத்தனமா தெரியுது எனக்கு.''

தனது பாக்கெட்டிலிருந்த மறுபடியும் அதே புல்லட்டை வெளியி லெடுத்து அதைப் பார்த்தான் பொய்ரெட். ''இது அற்பமான விஷயம் கிடையாதே, மிஸ் நிக்'' என்றான் மிருதுவாய்.

''அவன் ஒரு முழு பைத்தியக்காரனாத் தானிருக்க முடியும்.''

''இருக்கக் கூடும். நீங்க சொல்வது, இரவு சாப்பிட்டு விட்டு உட்கார்ந்து விவாதிக்க ஏற்ற நல்ல ஒரு தலைப்பு - எல்லா கொலை காரர்களும் பைத்தியக்காரர்களா? அவங்களுடைய மூளையின் சிந்திக்கும் சாம்பல் நிற செல்களோட ஆக்கத்தில் பிழையிருக்கலாம் - ஆமாம், அதுக்கு நிறைய வாய்ப்பிருக்கு. ஆனா இந்த ஆராய்ச்சியெல் லாம் ஒரு டாக்டருக்கான சரக்கு. என்னைப் பொறுத்தவரைக்கும் - நான் ஆராய்ச்சிப் பண்ண வேற சரக்கு இருக்கு. ஒன்னுந்தெரியாத பலியாளைப் பற்றி நான் நிறைய சிந்திக்க வேண்டியிருக்கே தவிர, குற்றவாளியைப் பற்றி அல்ல என் கவனம், இரையின் மீது - கொலைகாரனின் மீதல்ல. ஆக, நான் இப்போ முழுக்க கவனிப்பது உங்களை, டியர் மேடம், முகந்தெரியாத உங்க கொலையாளியை அல்ல. நீங்க இளையவர். அழகியவர். சூரியனின் சுந்தர வெளிச்சத்தில் உலகமே பூரித்துப் போயுள்ளது. அதை நீங்க அனுபவிக்கணும். மேலும் அன்பும் காதலும் வாழ்க்கையும் உங்களுக்கு முன்னாடி விரிஞ்சுக் கிடக்கு. ஓகே... உங்க நண்பர்களைப் பற்றி சொல்லுங்க. மிஸஸ் ரைஸ் மற்றும் மிஸ்டர் லாஸரஸ் - இங்கே அவங்க வந்திருக்காங்க இல்லையா? எத்தனை நாட்களா?''

''இந்தப் பகுதிக்கு புதன்கிழமை வந்தாள் ஃப்ரெட்டரி. டேவன்-டாக் பகுதியிருக்கு இல்லையா... அங்கே சில நண்பர்களோட ஓரிரு இரவுகள் தங்கிட்டு, நேத்திக்கு இங்கே வந்தா. ஜிம் ஏதோ டூர்ல சுத்திக்கிட்டே இருக்கான்னு நினைக்கிறேன்.''

''அப்புறம், அந்த கமாண்டர் சாலஞ்சர்?''

''அவர் டேவன்-போர்ட்ல இருக்கார். எப்பல்லாம் முடியுதோ அப்பல்லாம் அவரோட காரை எடுத்துக்கிட்டு வந்துடுவார். முக்காவாசி வார இறுதியில தான் வருவார்.''

பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத்தான். நாங்கள் வீடு நோக்கித்

திரும்பிக் கொண்டிருந்தோம். அமைதியே நிலவியது, ஆனால், திடுமென அவன் கேட்டான்: ''நீங்க அதிகம் நம்பற மாதிரியான நண்பர் உங்களுக்கு உண்டா, மேடம்?''

''ஃப்ரெட்டி இருக்கா.''

''மிஸஸ் ரைஸ் தவிர?''

''ம், சட்டுனு தெரியலே. இருக்கும்னு நினைக்கிறேன். ஏன்?''

''ஏன்னா, உங்க கூட தங்க, ஒரு நண்பரை நீங்க உங்களுடன் வெச்சுக்கணும்னு நான் விரும்பறேன் - உடனடியாக.''

''ஓஹ்!''

சுத்தமாய் வீழ்த்தப்பட்டவளாய் தோன்றினாள் நிக். அவள் சில நொடிகள் அமைதியாகிப் போனாள், சிந்தனையில். பிறகு சற்று சந்தேகமாய் அவள் சொன்னாள்? ''மேக்கி இருக்கா. அவளைக் கூப்பிட்டுக்கலாம்னு நினைக்கிறேன்.''

''யாரந்த மேக்கி?''

''யாக்-டிஷர் பகுதியில சில உறவுங்க இருக்குனு சொன்னே னில்லே... அந்த வகை. பெரிய குடும்பம். மதபோதகர் தொழில். என் வயசு அவளுக்கு. கோடைக்காலத்துல எப்படியாவது ஒரு தடவை அவளை நான் கூட்டிட்டு வந்து தங்க வெச்சுப்பேன். அவளை வெச்சுக் கிட்டு அப்படி ஒண்ணும் ஆட்டமும் பாட்டமுமா கொண்டாடிட முடியாது... சுத்தக் கட்டுப்பெட்டி. ஃபேஷனே தெரியாத பொண்ணு. அவளை இந்த வருஷம் தவிர்த்துடணும்னு நினைச்சிருக்கேன்.''

''பண்ணிடாதீங்க, மேடம். உங்க அந்த உறவுக்காரப் பொண்ணு தான் பாராட்டுமளவுக்கு உதவப் போறா. நான் என் மண்டையில வெச்சிருந்த பொண்ணு மாதிரி... ஜஸ்ட் அப்படியே இருக்கா அவ.''

''அப்ப சரி'' என்றாள் நிக், ஒரு பெருமூச்சுடன். ''அவளுக்குத் தகவல் அனுப்பிடறேன். அவளை விட்டா வேற யாரைப் பிடிக்கிறதுனு இப்போ யோசிச்சுக்கிட்டிருந்தேன். எல்லாருக்கும் இப்படி அப்படி நகர முடியாம வேலை. வேற எந்த வேலையும் அவளுக்கில்லைனா, முத வேலையா வந்துடுவா. அது போகட்டும்... அவ என்னத்தைப் பண்ணணும்னு நீங்க எதிர்பார்க்கிறீங்க.''

''அவளும் உங்க அறையில உறங்க உங்களால ஏற்பாடு பண்ண முடியுமா?''

''பண்ணிடலாம்.''

''அதை ஒரு வித்தியாசமான வேண்டுகோளா அவ எடுத்துக்க மாட்டாளோ?''

''ஓ, நோ. மேகி சிந்திக்கவே மாட்டா! வருவதை எதிர்கொள்ளும் வகை! தூய கிருத்தவர்கள் நம்பிக்கையுடனும் அர்ப்பணிப்புடனும் வாழ்க்கையை நடத்துவாங்க. ஓ கே... திங்கட்கிழமை வந்து சேருனு அவளுக்கு ஒரு தந்தி அனுப்பிடறேன்.''

''ஏன் நாளைக்கே வரச் சொல்லக் கூடாது?''

''ஞாயிற்றுக் கிழமையேவா? இங்கே எனக்கு ஏதோ உயிர் போற நெருக்கடினு தவிச்சுடுவா அவ. ம்ம். திங்கள்தான் சொல்வேன். அவகிட்டேயும் என் தலைக்கு மேல தொங்குவதா நீங்க நம்பற பயங்கரத்தை சொல்லப் போறீங்களா?''

''அப்போ இன்னும் நீங்க இந்த விஷயத்தை ஜோக்காகத் தான் கருதறீங்களா? செம நெஞ்சுரம் தான் போங்க.''

''இப்படி லேசா எடுத்துக் கொள்வது, பயத்தைத் தணிக்குது, இல்லையா...?'' என்றாள் நிக்.

அவள் சொன்ன விதத்திலிருந்த எதுவோ என்னை அறைந்தது... நான் அவளை ஆர்வமாய் பக்கவாட்டில் நோட்டமிட்டேன். எதுவோ ஒன்றை அவள் சொல்லாமல் விட்டு விட்டாளோ என்றோர் எண்ணம் என்னுள் விளைந்தது. நாங்கள் வரவேற்பறைக்கு மீண்டும் வந்து சேர்ந்தோம். போய்ரெட், சோஃபாவடியில் இருந்த செய்தித்தாளில் விரல்களை மேய விட்டுக் கொண்டிருந்தான்.

''நீங்க இதைப் படிப்பதுண்டா, மேடம்?'' என்றான் திடுதிப்பென்று.

''எது? செயின்ட் லூ ஹெரால்ட்'டையா? முக்கியத்துவம் தந்து பார்க்கிறதெல்லாம் கிடையாது. சும்மா திருப்புவேன்.''

''அப்படியா. ஆங், மேடம்... நீங்க உயில் ஏதாவது தயார் பண்ணி வெச்சதுண்டா?''

''ஆமாம். பண்ணினேன். ஆறு மாசத்துக்கு முன்னாடி. ஆப்-க்கு முன்னாடி.''

''ஆப்?''

''ம். ஆமாம். ஆப். ஆபரேஷன். அப்பெண்டிஸைட்டீஸ். யாரோ நான் உயில் எழுதியே ஆகணும்னு சொன்னாங்க... ஸோ. செஞ்சேன். அது

முக்கியம்னு நானும் நெனச்சேன்.''

''அந்த உயிலின் சாராம்சம்?''

''கடைசி வீட்டை சார்ல்ஸுக்கு விட்டு வைத்தேன். எனக்குனு எழுதி வைக்க ரொம்ப எதுவும் கிடையாது... இருப்பதை ஃப்ரெட்டிக்கு எழுதினேன். ஆனா, வீட்டை நான் எழுதியிருந்தாலும், அதோட கூட அதன் அடகும் இல்லே சேர்ந்து போகுது... இதை நான் கவனிச்சிருக்கணும்.''

தன்னிச்சையாய் தலையசைத்தான் பொய்ரெட். பிறகு, ''இப்போ நான் விடை பெறுகிறேன், மேடம். ஜாக்கிரதை'' என்றான்.

''எது குறித்து?'' - கேட்டாள் நிக்.

''நீங்க புத்திசாலி. உங்க கேள்வியும் சரி தான்... ஆமாம் - எந்த திசையில நீங்க ஜாக்கிரதையா இருப்பது? யாரால தான் சொல்ல முடியும்? ஆனா, நம்பிக்கை வையுங்க மேடம். இன்னும் ஓரிரு நாட்கள்ல நான் உண்மையைக் கண்டுபிடிச்சிருப்பேன்.''

''அது வரைக்கும் - விஷங்கள், குண்டுகள், துப்பாக்கிகள், மோட்டார் வாகன விபத்துகள், விஷம் தோய்த்த அம்புகள்... இவை குறித்தெல்லாம் நான் ஜாக்கிரதையா இருக்கணும்'' - நிக் வேடிக்கையாய் முடித்தாள்.

''உங்களை நீங்களே முகமூடி போட்டு மறைச்சுக்கிற முட்டாள்தனத்தைப் பண்ணாதீங்க, நிக்'' - ஆழ்ந்து குறிப்பிட்டான் பொய்ரெட்.

வாசற்கதவை அடைந்தபோது தயங்கி நின்றான் அவன்.

''மேடம்...'' என்றழைத்த அவன், ''உங்க தாத்தாவோட படத்துக்கு ஜிம் லாஸரஸ் எத்தனை கேட்டான்?''

''ஐம்பது பவுண்டு.''

''ஆஹ்!'' என்றான் பொய்ரெட். மிகுந்த மரியாதையோடு அலமாரிக்கு மேலிருந்த மந்தமான முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

''ஆனா, நான் ஏற்கெனவே உங்ககிட்டே சொன்ன மாதிரி, ஓல்ட் பாயோட படத்தை நான் விற்க விரும்பலே.''

''வேண்டாம்'' என்று சிந்தனை செய்தபடி சொன்னான் பொய்ரெட். ''வேண்டாம்.''

அத்தியாயம் 4

# அதுல என்னவோ இருக்கணும்!

நாங்களிருவரும் தெருவிறங்கிய உடனேயே ''பொய்ரெட்'' என அழைத்தேன் நான் ''உனக்கு ஒரு விஷயம் தெரிஞ்சாகணும்னு எனக்குப்படுது'' என்றேன்.

''என்னதுடா, அது?''

காரில் ஏற்பட்ட கோளாறு பற்றிய மிஸஸ் ரைஸின் கணிப்பினை நான் சொன்னேன்.

''அதுபோலவும் சில பைத்திய வகைகள் இருக்கு ஹேஸ்டிங்ஸ்... மறுக்க முடியாது. அதிசயமான மரணங்களிலிருந்து தப்பிச்சுட்ட மாதிரி இண்ட்ரஸ்டிங்கா சொல்லி தன்னைத்தானே முன்னிறுத்திக்கப் பார்ப்பது. அந்த நடந்திராத கதைகளையே திருப்பி ஞாபகப்படுத்திப் பேசி மத்தவங்களை வியக்க வைப்பது. ஆமாம்... இப்படிப்பட்ட சாயல் இதுலேயும் இருக்கு. அவங்க சொன்ன கட்டுக்கதையைத் தூக்கி நிறுத்த உடம்புல காயங்களை உண்டுபண்ணிக்கக் கூட அவங்க தயங்க மாட்டாங்க.''

''அப்போ - உனக்கு - தோணலியா - பொய்ரெட் ...''

''நிக்கும் அந்த வகைனா? ம்ம்... அப்படி கிடையாது. அவங்களுக்கு முன்னால திலைவிரிச்சுக்கிட்டு நிற்கிற ஆபத்தைப் பற்றி அவங்க மண்டையில உறைக்க வைக்க நாம படாதபாடு பட வேண்டியிருந்ததை நீயே பார்த்தியே, ஹேஸ்டிங்ஸ். கடைசி வரைக்கும் நம்பாமலேயில்லே இருந்தாங்க?! சின்னவ-அப்படிப்பட்ட தலை முறையை சேர்ந்தவ - இளைய தலைமுறை. எப்படியிருந்தாலும் கேட்க விறுவிறுப்பா தானிருக்கு - மிஸஸ் ரைஸ் சொன்னதை சொல்றேன். ஆங்... அவ ஏன் அப்படி சொல்லணும்? நிக் சொல்வதெல்லாம்

உண்மையா கூட இருக்கலாம் எனும்போது, அவ ஏன் அப்படி சொல்லணும்? இது - தேவையற்ற காமெண்ட் ஹேஸ்டிங்ஸ்."

"ஆமாம்" என்றேன் நான். "நெஜந்தான். வேணும்னே இந்தக் கருத்தைப் பிடிச்சு இழுத்துக்கிட்டு வந்து எங்க உரையாடலுக்குள்ளே திணிச்சா அவ. இப்படி அவ செஞ்சதுக்கான எந்தக் காரணமும் எனக்குத் தட்டுப்படலே."

"இது தான் விளங்கலே. இப்படி சின்னச்சின்ன விளங்காத அதிசயங்கள் இடையிடையே வரணும்னு விரும்பறேன். இவை தான் குறிப்பிடத்தகுந்தவை. சரியான பாதையைக் காட்டுபவை."

"சரியான பாதை - எது நோக்கி?"

"எதுக்கு இப்போ என்னால பதில் தர முடியாதோ அந்தக் கேள்வியைத் தூக்கி நீ வீசறேடா ஹேஸ்டிங்ஸ்! எது நோக்கி? அதானே, எதை நோக்கி! ஓஹ்... நமக்கு அது தெரியவே வராது நண்பா, நாம அங்கே போய் சேரும் வரை."

"சொல்லு, பொய்ரெட்" என்ற நான் கேட்டேன்? "அவ உறவுக்காரப் பொண்ணைக் கூட்டிட்டு வந்து தங்க வெச்சாதான் ஆச்சுனு ஏன் நீ உடும்புப்பிடியா இருந்தே?"

மேற்கொண்டு இதே கேள்வியை நான் தொடராத வண்ணம் நிறுத்தும்படி சைகை காட்டியவன், பரபரப்பாய் ஆள்காட்டி விரலை என்னை நோக்கி நீட்டி "நினைச்சு பாரு ஹேஸ்டிங்ஸ்" என்றான். "ஒரு நிமிஷம் நினைச்சு பாருடா! கண்ணைக் கட்டிக் காட்டுல விட்டா மாதிரி நிக்கிறோம் நாம! நம் கைகள் கட்டப்பட்டிருக்கு! ஒரு கொலை நிகழ்ந்தபிறகு கொலைகாரனைத் தேடி வளைச்சுப் பிடிக்கும் விஷயம் சுலபம். கொலைகாரன், தனது அடையாளத்தை, ஒரு கொலையை செய்யுமிடத்தில் எப்படியாவது விட்டுட்டுப் போவான். நிச்சயமா. என் போன்ற சூட்டிகையான துப்பறியும் நிபுணன் மூக்கை நுழைச்சான்னா, மத்தவங்க கண்களுக்கு சுலபமா புலப்படாத அந்த அடையாளத்தை கனக்கச்சிதமா பிடிச்சுடுவான். ஆனா இந்த கேஸ்ல அடையாளங்கள் இல்லை - ஏன்னா கொலை நடக்கலே. சொல்லப்போனா அப்படி ஒரு கொலையை நாமும் எதிர்பார்க்கலே. கொலை நடப்பதற்கு முன்னாடியே அக்கொலையைப் பற்றித் துப்பறிவதென்பது, ஒரு சாத்தியப்படாத கஷ்டம்டா."

''எது நம்முடைய முதல் குறிக்கோள்? மேடமுடைய பாதுகாப்பு. இது அத்தனை கலபம் கிடையாது. இது சுலபமே கிடையாது ஹேஸ்டிங்ஸ். அவங்களையே நாம இரவு பகலா கண்காணிச்சுக்கிட்டே இருக்க முடியாது. இதுக்காக கனம் கனமா பூட்ஸ் போட்ட ஒரு போலீஸ் காரனையும் அவங்க பின்னாலேயே திரிய விட முடியாது. ஓர் இளைய கன்னி தூங்கும் படுக்கையறையில ஓர் இரவு முழுக்க நம்மால தங்கியிருக்க முடியுமா? லஜ்ஜையான சமாச்சாரமது.''

''இந்நிலையில நம்மால் ஒண்ணு மட்டும் பண்ண முடியும். நம்முடைய கொலைகாரனுக்கு நிலைமையை ரொம்பக் கடினமாக்கித் தர முடியும். மேடமை நாம உஷார்படுத்தி அவங்களை அவங்களே பக்காவா பாதுகாத்துக்க செஞ்சுடலாம்... கூடவே, பாகுபாடற்ற ஒரு சாட்சியையும் ஒட்ட வெச்சுடலாம். இந்த ரெண்டு சூழலையும் ஜெயித்து முன்னேற ரொம்ப புத்திசாலியான மூளை தேவைப்படும்.''

இங்கு சற்று நிறுத்திக் கொண்ட அவன், பிறகு, முழுக்கவும் வித்தியாசப்பட்ட தொனியில் சொன்னான்? ''ஆனா, ஹேஸ்டிங்ஸ், எனக்கு எதுல பயம்னா ...''

''ம்?''

''எனக்கு எதுல பயம்னா ... அவன் படுபுத்திசாலியானவன்டா. எனக்கு சஞ்சலமா இருக்கு ஹேஸ்டிங்ஸ். ஹோ, எனக்கு படபடப்பா வருது. உள்ளுக்குள்ளே உதறுது.''

''பொய்ரெட்'' என கண்ணைகல அழைத்த நான், ''நீ என்னை ரொம்ப பயமுறுத்தறே'' என்றேன். ''என் நரம்புகள் திருகுது.''

''அதே தான்டா எனக்கும்; கவனி நண்பா. அந்த பேப்பர்... வீக்லி ஹெரால்ட். அந்தத் தாள் ஒரு முறை திறக்கப்பட்டு பிறகு மடிக்கப்பட்டிருந்தது. எந்தப் பகுதியில் தெரியுமா - பின்வரும் தகவலை சொன்ன ஒரு சின்ன பத்தியில்: 'மெஜஸ்டிக் ஓட்டல்ல தங்கியிருக்கும் நபர்கள்ல திரு ஹெர்குல் பொய்ரெட் மற்றும் திரு ஹேஸ்டிங்ஸ்...' ஒரு வேளை - ஒரு வேளை, யாரோ அந்தப் பத்தியைப் படிச்சிருக்காங்கனு வெச்சுக்கோ. அவங்களுக்கு என்னைப் பற்றித் தெரிஞ்சிருந்தா?! நான், என் துறையில பிரபலம், ஹேஸ்டிங்ஸ் ...''

''நிக்குக்கு ஒரு மண்ணும் தெரியலே'' என்றேன் நான் இறுக்கமாய்.

''அவங்க ஒரு சின்னப் பொண்ணு - நாம கணக்குல எடுத்துக்க

வேணாம். ஒரு திட்டமிடும் ஆள் - கொலைகாரன் - அவனுக்கு என்னைத் தெரிஞ்சிருக்கும்டா. அதனால அவனுக்கு பயம் பிடிச்சிருக்கும். ஆச்சரியமாயிருப்பான். அவனுக்குள்ளேயே கேள்விகள் கேட்டுப்பான். மூன்று முறை அவன் மேடமுடைய உயிரோட விளையாடியிருக்கான்; இப்போ அவனுக்கு வெகு அருகிலேயே த கிரேட் ஹெர்குல் பொய்ரெட் வந்திறங்கியிருக்கான். 'இது எதிர்பாராம நடந்துள்ள நிகழ்வா? இல்லே ...' இப்படி வியப்பான் அவன். 'கிடையாது... இது எதிர்பாராம நடந்தது கிடையாது' அப்படினு தான் அவனால ஒரு முடிவுக்கு வர முடியும். அப்போ... அவன் என்னடா பண்ணுவான்?''

''அமுக்கி வாசிப்பான். அவன் தடயங்களே தெரியாதபடி பதுங்கிடுவான்.''

''ஆமாம். ஆமாம். ரொம்ப சரி. ஆனால், ஒரு வேளை, பயமேயில்லாம இயங்கும் துரோதனாயிருந்தா...? ஓஹ்... நேரம் வீணாகிடக் கூடாதுனு கருதி படு வேகமா இயங்கிடலாமில்லையா? இது குறித்து நான் என் விசாரணைகளை முடுக்கி விடுவதற்குக் கூட நேரம் தராம... 'மேடம் மரணம்' எனும் சேதியை நிஜமாக்கிடுவன். யெஸ். துணிவுள்ள அகங்காரன் பண்ணக்கூடியது - இது தான்.''

''அந்தப் பத்தியை மிஸ் பக்லேயே கூட படிச்சிருக்கலாமில்லையா? அதை வேற யாரோ தான் படிச்சிருக்காங்கனு ஏன் நீ குழம்பணும்?''

''அந்தப் பத்தியைப் படிச்ச ஆசாமி மிஸ் நிக் பக்லே கிடையாது. நான் என் பேரைப் பற்றியும் புகழைப் பற்றியும் சொன்ன போது அது அவங்ககிட்டே எந்த பாதிப்பையும் ஏற்படுத்திடலே. அந்தப் பெயர் துப்பறியும் துறையில் புகழ் பெற்றது என்பது கூட அங்களுக்கு விளங்கலே. அவங்க முகத்துல எவ்வித மாற்றமும் ஏற்படலே. தவிர, கடலலைகளின் நிலைமையைத் தெரிஞ்சுக்க மட்டும் தான் அவங்க அந்த பேப்பரையே படிப்பதா நம்மகிட்டே சொன்னாங்க. வேறெதுக்கும் கிடையாது. அந்தக் குறிப்பட்டப் பக்கத்துல கடலலைகள் பற்றிய அட்டவணை - இல்லை.''

''அப்படினா அந்த வீட்டிலிருக்கும் யாரோ தான்னு நீ சொல்றியா...?''

''அந்த வீட்டிலிருக்கும் யாரோ... அல்லது உள்ளே வந்து எடுக்குமளவுக்கான உரிமையுள்ள யாரோ. ரெண்டாவது சாத்தியம் சுலபமாப்

படுது. கதவும் ஜன்னலும் திறந்தேயிருக்கு. மிஸ் பக்லேயின் நண்பர்கள் அவற்றின் வழியா வராங்க... போறாங்க.''

''உனக்கு ஏதாவது ஐடியா இருக்கா? ஏதாவது சந்தேகங்கள்?''

கைகளை விரித்துக் காட்டினான் பொய்ரெட். ''ஒன்னும் கிடையாது. இலக்கு எதுவாயிருந்தாலும் ஏற்கெனவே நான் கணிச்சிருப்பது போல, அது, வெளிப்படையா இல்லே. இதுதான் அந்தத் தலைமறைக் கொலைகாரனின் பாதுகாப்பே. இந்தப் பாதுகாப்பால தான், இன்னிக்குக் காலையில அவனால் அப்படி இயங்க முடிஞ்சிருக்கு. மேலோட்டமா பார்க்கும்போது, மிஸ் பக்லேயின் மரணத்தை எதிர்பார்த்திருப்பது போல யாரும் தென்படலே. சொத்து? கடைசி வீடு? நேரா அவங்களோட உறவுக்காரப் பையனுக்குத் தான் போகுது - ஆனா, அடகு வைக்கப்பட்டுள்ள... பயங்கரமா சிதிலமடைந்துள்ள ஒரு வீட்டை, அவன் நிச்சயம் எதிர்பார்த்துக் காத்திருக்கானா என்ன?! இது, குடும்பம், காலகாலமா தங்கின வீடும் கிடையாது. அவனும் பக்லே பரம்பரையில வரலே, நாம இந்த சார்ல்ஸ் வைஸைப் பார்த்தாகணும்டா.''

''அப்புறம் அந்த மேடம்... அவளோட அந்த அந்நியமான கண்கள், வாழ்க்கையே தொலைந்து போய் விட்டது போல அவளுடைய பாவம்...''

''ஓ, நீயும் அதை உணர்ந்தியா?'' என்றேன் நான் கண்ணகல.

''அவளுக்கு இந்த விஷயத்துல என்ன அப்படி ஓர் ஈடுபாடு? தன்னோட தோழி ஒரு புளுகினு அவ உன்கிட்டே சொல்றா. எதுக்காக? ஏன் அப்படி அவ உன்கிட்டே சொல்லணும்? நிக் எதையாவது சொல்லிடுவாளோனு அவ பயப்படறாளா? அது காரோட தொடர்புடைய ஏதாவது ஒன்றா? இல்லே, அவ பயத்துக்கான உண்மை காரணம் வேறெதோ இருக்க, இதை ஒரு சும்மா ஓர் உதாரணத்துக்கு சொல்லியிருப்பாளா? பேய்... காரை யாராவது நோண்டியிருப்பாங்களா? அப்படினா அது யார்? அது பற்றி அவளுக்குத் தெரியுமா?''

''அப்புறம், அந்த அழகிய மகன் மிஸ்டர் லாஸரஸ். இந்த முழு சமாச்சாரத்துலேயும் அவன் எங்கே பொருந்தறான்? அவனோட படகு போன்ற அந்தக்கார்... நல்ல பணம். ஏதாவது ஒரு வகையில அவனுக்கும் இதோட ஒரு தொடர்பு இருக்குமா? காமாண்டர் சாலஞ்சர்...''

''அவன் மேலதப்புத்தண்டா தெரியலே'' என்றேன் நான் வேகமாய். ''இதுல நான் நிச்சயமா இருக்கேன். ஒரு நிஜமான பக்கா ஜென்டில் அவன்.''

''சந்தேகங்களுக்கு இடந்தராம, நீ கருதற மாதிரியான ஒரு நல்ல மூட்டையாதான் அவன் தெரிறான். நான் ஓர் ஆங்கிலேயனா இல்லாம இருப்பதால் அவங்களோட எவ்விதமான இடையூறும் இல்லாம என்னால இந்த வழக்கைத் துப்பறிய முடியும், ஆங்! இதோட கமாண்டரைத் தொடர்பு படுத்திப் பார்ப்பது எனக்குக் கஷ்டமாத் தானிருக்கு. அப்படி அவரைத் தொடர்பு படுத்தவும் எனக்கு எவ்வித ஆரம்பக் காரணங்களும் பிடிபடலே.''

''அப்படித்தான் போகுது. அவரை உள்ளே கொண்டுட்டு வர முடியாது'' என்றேன் நான் கதகதப்பாய்.

வேறு சிந்தனையின் ஆதிக்கத்தோடே என்னைப் பார்த்தான் பொய்ரெட். ''என் மேல தாக்கத்தை ஏற்படுத்தி விடும் அசாதாரண திறமை கொண்டிருக்கே, ஹேஸ்டிங்ஸ். தப்பான திசையில நீ கட்டும் அழுத்தமான விளக்கங்கள், வேற வழியில்லாம அதே திசையில நானும் வந்து விடும்படி என்னைத் தள்ளிடுது! எல்லாத்தையும் எளிதில் நம்பிடும் பேதமை மிகுந்த, உண்மையான, மதிப்புமிக்க... இப்படி ஒரு வெகுளியான கலவை நீ. நம்ப வெச்சு சுலபமா உன்னை ஏமாத்திடலாம் - இதனால, எந்தக் களவாடிப் பயலும் உன்னை அப்படியே அவனுக்குள்ளே இழுத்துடலாம்டா. எண்ணெய் கிணறுனு காட்டி ஒரு தண்ணீர் கிணத்தை உனக்கு அதிக விலைக்கு வித்துடலாம்டா... ஒன்னுமில்லாம புதர் மண்டிக்கிடக்கும் ஒரு குகையை தங்கச் சுரங்கம்னு காட்டி உன்கிட்டேயிருந்து காசு கறந்துடலாம், ஆங்! உன்னை மாதிரியான நூற்றுக்கணக்கான பேதைகளிடமிருந்து தான் சுருட்டறவன் அவனுக்குத் தேவையான திருட்டு வேலையை முடிக்கக்கறான். ஹே, விடு... நான் இந்த கமாண்டர் சாலஞ்சரைப் படிக்கணும். நீ என்னோட சந்தேகங்களைத் தட்டியெழுப்பிட்டே.''

''டேய், டேய்'' என கோபமாய் கத்தினேன் நான். ''நீ என்னை முழுக்க முழுக்கத் தப்பாப் புரிஞ்சுக்கிட்டேயிருக்கே. என்னைப் போல உலகத்தின் அனைத்துக் கதவுகளையும் தட்டித் திறந்துப் பார்த்துட்டு வந்துள்ள ஒருத்தனுக்கு ...''

''ஒரு மண்ணும் தெரியாது'' என முடித்தான் பொய்ரெட். ''இது ஆச்சரியம் தான் - ஆனா, இது, அப்படித்தான்.''

''நீ இப்படி என்னை ஒரு முட்டாள் மாதிரி கணக்குப் போடறியே பொய்ரெட்... அப்படின்னா அர்ஜெண்டினாவில நான் பெற்ற அந்த மாபெரும் வெற்றி?''

''அது மாபெரும் வெற்றி தான் - உன் மனைவியும் உன் கூட இருந்ததனால!''

''அவ எப்பவுமே என் முடிவுபடி நடப்பவ... தெரிஞ்சுக்கோ.''

''அவ எத்தனை வசீகரமோ அந்த அளவுக்கு சூட்டிகையும் கூட'' என்ற அவன், ''நாம சண்டை போட்டுக்க வேண்டாம், நண்பா'' என்றான். ''அதோ, அங்கே நமக்கு முன்னாடி இருக்கும் பலகை, 'மோட் ஷெட்'னு அறிவிக்குது. அது தான் மேடம் நிக் பக்லே சொன்ன கார் கேரேஜ்னு நினைக்கிறேன். சில விசாரணைகள், அந்தக் கார் சமாச்சாரம் பற்றிய உண்மைகளை நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிடும்.''

இப்படியே அந்த கேரேஜுக்குள் நுழைந்தோம்... செல்வி பக்லே எங்களை அனுப்பி வைத்ததாய் அறிமுகப்படுத்திக் கொண்டான் பொய்ரெட். ஒருசில நாட்கள் மதியப்பொழுதுக்கு மட்டும் ஒரு காரை வாடகைக்கு அமர்த்திக் கொள்வது பற்றி விஷயங்களைக் கேட்டு அறிந்துக் கொண்ட அவன், இந்த சம்பாஷணையின் வழியாக, சமீபத்தில் நடந்து முடிந்திருந்த நிக் பக்லேயின் கார் சங்கதி பற்றிய திசையில் பேச்சினை சுலபமாக திசை திருப்பி விட்டான்.

உடனேயே அந்தக் கடையுடைய சொந்தக்காரனின் குரல் உயர்ந்து ஒலிக்க ஆரம்பித்தது. அவன் இதுவரை கேள்விப்பட்டேயிராத அசாதாரண ஆச்சரியம் அது. ரொம்ப தொழில்நுட்பரீதியாக அவனுடைய விளக்கங்கள் திரும்பின. எனக்கு இந்த மெக்கானிக்கல்'லாக பேசும் பேச்சிலெல்லாம் சடுபாடு கிடையாது. என்னை விட பொய்ரெட்டுக்கு இப்படிப்பட்ட பேச்சுகளில் இண்ட்ரஸ்ட்டே கிடையாது என்பதே என் கணிப்பு. ஆனாலும், சில நிஜங்கள், தப்பர்த்தம் தராமல் தளர்த்தொட்டன. அந்தக்கார், யாராலோ நோண்டப்பட்டுள்ளது. இதனால் காருக்கு ஏற்படுத்தப்பட்ட பாதிப்பு எதுவோ, அது, உடனடியாய் நிறைவேற்றப்பட்டுள்ளது... அதிக நேரம் எடுத்துக்

கொள்ளாமல்.

''ஆக, இது தான் விஷயம்'' என்றான் பொய்ரெட், நாங்கள் வெளியேறிய போது. ''லிட்டில் நிக் தான் சரி... அந்த லாஸரஸ் சொன்னது தப்பு. ஹேஸ்டிங்ஸ், அருமை தோழா, இவையத்தனையும் விறுவிறுப்பா இருக்குடா.''

''இப்ப நாம என்ன செய்றது?''

''போஸ்ட் ஆபீஸ் போறோம். காலங்கடக்கலேனா, ஒரு தந்தியை உடனடியா அனுப்பறோம்.''

''தந்தி?''

''ஆமாம்'' என்றான் பொய்ரெட். ''ஒரு தந்தி.''

அங்கு போஸ்ட் ஆபீஸ் இன்னமும் திறந்திருந்தது. எழுத வேண்டியதை எழுதித் தந்து தந்தியை அனுப்பி வைத்தான் பொய்ரெட். அதில் எழுதப்பட்ட சங்கதியைப் பற்றி அவன் என்னிடம் மூச்சு விட வில்லை. நானாக கேட்க வேண்டும் என அவன் எண்ணியிருக்க, நான் அப்படிச் செய்வதை நாசூக்காகத் தவிர்த்து விட்டேன்.

நாங்கள் திரும்பி ஓட்டல் வந்தடைந்தபோது, ''நாளைக்கு ஞாயிற்றுக் கிழமைனு நினைச்சா எரிச்சலாகுது'' என்றான். ''திங்கள் காலை வரைக்கும் நாம போய் சார்ல்ஸ் வைஸைப் பார்க்க முடியாது.''

''அவருடைய சொந்த முகவரியில போய் நீ அவரைப் பார்த்துடலா மில்லே?''

''நிச்சயமா. ஆனா அதைத் தான் பண்ணிடக்கூடாது என்பதுல நான் துடிப்பா இருக்கேன்டா. அவரை முதல்ல நான் தொழில்ரீதியா கன்ஸல்ட் பண்ண விரும்பறேன். அதனடிப்படையில அவரைப் பற்றிய என் மதிப்பீட்டை நான் முடிக்கணும்.''

''ஆமாம்'' என்றேன் நான் சிறு சிந்தனையோடு. ''அது தான் சிறந்ததா இருக்கும்.''

''உதாரணத்துக்கு... ஒரு சின்னக் கேள்விக்குக் கிடைக்கும் விடை நிலைமையையே முழுக்க மாற்றிப் போட்டுடலாம். அன்னிக்குக் காலைல பனிரெண்டரை மணிக்கு சார்ல்ஸ் அவரோட அலுவலகத்தல தான் இருந்திருந்தார்னா... மெஜஸ்டிக் தோட்டத்துல குண்டெறிஞ்சது நிச்சயமா அவரா இருக்க முடியாது.''

''இவனுங்கள்ல யாராயிருந்தாலுமே, ஓட்டல்ல இருந்தா மாதிரி ஒரு

செட்-அப் பண்ணியிருக்க மாட்டாங்களா?''

''அதைக் கண்டுபிடிக்கறது ரொம்ப ரொம்பக் கஷ்டம்டா. கூட யிருந்தவங்களை விட்டுட்டு ஓரிரு நிமிஷங்க இப்படியப்படி போய் வருவது அவங்களுக்கு ரொம்ப சுலபம். அவசரம்னு சொல்லிட்டு அங்கிருந்த திறந்த அகலமான ஜன்னல்கள் வழியாகவோ, அல்லது கதவுகள் வழியாகவோ வெளியேறி, வரவேற்பறை டைனிங் ஹால் பால்கனி அத்தனையையும் மளமளவென்னு கடந்து, அந்த மறைவான இடத்துக்கு இளையவள் வரும் நேரத்துல சரியா வந்து பதுங்கி, குண்டை சுட்டுட்டு, ஒண்ணுந்தெரியாதது போல திரும்பியிருக்கலாம். ஆனாலும், அருமை நண்பா, இப்பவும், இந்த நாடகத்துல இருக்கிற எல்லா கதாபாத்திரங்களையும் நாம ஒருத்தர் விடாம கணக்கில் எடுத்துக்கிட்டோமானு தெரியலே. அந்த மரியாதைக்குரிய எலென் மேலும் இன்னும் நாம பார்த்திராத அவளோட கணவன். ரெண்டு பேரும் அங்கேயே தான் தங்கியிருக்காங்க. நாமறியாத வஞ்சம் அவங்க நெஞ்சுல இருக்கலாம்... சொல்ல முடியாது. நமக்கு அறிமுகமாகாத ஆஸ்திரேலியர்களும் அங்கே இருக்காங்க. இவங்க தவிரவும் நண்பர் களிருக்கலாம்... அங்கே வந்து தங்கிச் செல்பவர்கள் இருக்கலாம்... அவங்க மேல எல்லாம் மிஸ் பக்லேவுக்கு சந்தேகம் இல்லாததால் அவங்களைப் பற்றியெல்லாம் நம்மகிட்டே அவங்க சொல்லாம விட்டிருக்கலாம். ஹேஸ்டிங்ஸ்... இதுக்குப் பின்னாடி என்னவோ இருக்குனு என்னால நம்பாம இருக்க முடியலேடா. என்னவோ ஒண்ணு... இன்னும் வெளிச்சத்துக்கு வராத ஏதோ ஒண்ணு. மிஸ் பக்லே சொன்னதை விடவும் அவங்களுக்கு விஷயங்கள் தெரியும்னு எனக்குள்ளே ஓர் எண்ணம்டா.''

''எதையோ மறைச்சுப் பேசறாங்கன்னா நீ நினைக்கிறே?''

''ஆமாம்.''

''யாரையோ பொத்தி மறைக்கும் காரணத்துக்காக இருக்கலாமோ?''

தன் சக்தியத்தனையையும் திரட்டி மறுத்துத் தலையசைத்தான் பொய்ரெட்.

''இல்லை, இல்லை. அவங்க முழுக்கவும் வெளிப்படையா இருப்பது போன்ற பதிவைத்தான் என்னுள்ளே ஏற்படுத்தியிருக்காங்க. அவங்க உயிர் மேல நடத்தப்பட்டுள்ள இந்த விபத்துகளைப்

பொறுத்தமட்டில் அவங்களுக்கு என்னவெல்லாம் தெரியுமோ அத்தனையையும் சொல்லிட்டாங்க என்பதுல எனக்கு மறுப்பு கிடையாது. ஆனால் வேறெதுவோ இருக்கு - அதுக்கும் கொலை முயற்சிகளுக்கும் சம்பந்தமே கிடையாதுனு அவங்க கருதும் எதுவோ ஒண்ணு. அந்த எதுவோ ஒண்ணு என்ன என்பதை அறிந்துகொள்ள நான் துடிக்கிறேன். என்னால, தன்னடக்கத்தோட தான் சொல்லிக்கிறேன் ஹேஸ்டிங்ஸ், இந்த ஹெர்குல் பொய்ரெட்டால, அவங்க எதுல துளியும் சம்பந்தமே கிடையாதுனு கருதறாங்களோ அதுல ஏதாவது தொடர்பினைப் பார்க்க முடியும். நான் தேடும் க்ளுவை அது எனக்குத் தரலாம். அது வரை ஹேஸ்டிங்ஸ், இதுக்கெல்லாம் பின்னாடி இயங்குவதா நான் நம்பற மாதிரி ஒரு காரணம் பொத்துக் கொண்டு வெளியே வரும் வரைக்கும்... நான் இருட்டுல தான்டா வைக்கப்பட்டிருப்பேன். எதுவோ ஒண்ணு இதுல இருக்கு - இந்த வழக்கோட சம்பந்தப்பட்ட அது... நான் இன்னமும் புரிந்து கொள்ளாதது. என்னதுடா அது?''

நான் ஆதரவாய், ''நீ கண்டுபிடிப்பே'' என்றேன்.

''அதை நான் கண்டுபிடிக்கும்போது'' என்ற அவன் சொன்னான்: ''காலங்கடந்திருக்கக் கூடாது.''

*அத்தியாயம் 5*

# மிஸ்டர் அண்ட் மிஸஸ் க்ராஃபெட்

**அ**ன்றைய தினம் சாயங்காலம், ஓட்டலில் நடன விருந்திருந்தது. அங்கு தனது நண்பர்களுடன் இரவு விருந்திலிருந்த நிக் எங்களைப் பார்த்ததும் உல்லாசமாய் வரவேற்றாள்.

அந்த மாலை வேளையில், பட்டுப்பூச்சிகள் போன்று வடிவமைத்து தரை வரை வழிந்தோடிய சிஃபான் வகை வழவழ உடையணிந்திருந் தாள் அவள். நல்ல ரோஸ் நிறத்திலிருந்த அதன் மேற்பகுதியிலிருந்து எழுந்தன, அவளது வெண்நிற கழுத்தும் தோள்களும் மற்றும் அந்தச் சின்ன அழகிய தலையும்.

''கவர்ந்திழுக்கும் ராட்சஸி'' என்றேன் நான்.

''அவங்க தோழிக்கு எதிர் குணம், ஆங்?''

ஃப்ரெட்டரி ரைஸ் வெண்நிறத்தில் உடையணிந்திருந்தாள். தொய்ந்து, தளர்ந்துப் போய் சோர்ந்திருந்த ரைஸின் நடனம், நிக்கின் ஆற்று வெள்ளம் போன்ற நடனசைவுகளிலிருந்து, எத்தனை முடியுமோ அத்தனை விலகியிருந்தது.

''அவ ரொம்ப அழகுடா'' என்றான் பொய்ரெட் திடீரென்று.

''யார்? நம் நிக்?''

''இல்லை - அந்த இன்னொருத்தி. அவ நல்லவளா? இல்லே, நிஜத்துல கொடூரமானவளா? சந்தோஷமில்லாமத்தானிருக்காளா? பதில்லை, சட்டுனு ஒருத்தரால சொல்லிட முடியாது. ஆனா, நான் சொல்றேன் நண்பா, அவ அழுத்தமானவ.''

''என்ன சொல்றே நீ?'' - ஆர்வமாய் கேட்டேன் நான்.

புன்னகையாய் சொன்னான்: ''உடனடியாவோ, கொஞ்சம் காலந் தாழ்த்தியோ... நீயே உணர்வே பாரு. நான் சொன்னது மட்டும் ஞாபகம் வெச்சுக்கோ.''

தற்சமயம், என்னை ஆச்சரியத்தில் தூக்கிப்போடும் விதமாய், அவன் எழுந்துக் கொண்டான். நிக், அப்போது ஜார்ஜ் சாலஞ்சருடன் நடனமாடிக் கொண்டிருந்தாள்; ஃப்ரெட்டரியும் லாஸரஸும் அந்தக் கணத்தில் தான் முடித்துக் கொண்டு தத்தம் நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர். பிறகு லாஸரஸ் மட்டும் எழுந்துக் கொண்டு தள்ளிப் போயிருந்தார். மிஸஸ் ரைஸ் மட்டும் தனித்திருந்தார். அவளிருந்த டேபிளுக்கு நேராய் போனான் பொய்ரெட். நான் தொடர்ந்தேன்.

அங்கு அவன் கடைபிடித்த அணுகுமுறை, நேரடியாகவும், எடுத்துக் கொண்ட விஷயத்தைக் குறி வைத்த ஒன்றாகவும் இருந்தது.

''அனுமதி கிடைக்குமா?'' - அவளிருந்த நாற்காலியின் பின்னால் கை வைத்து பிறகு அப்படியே அவள் முகம் வரை குனிந்து, ''உங்க நண்பன் நடனமாடிட்டிருக்கும் போது உங்ககூட கொஞ்சம் பேசிடணும்னு நான் துடிக்கிறேன்'' என்றான்.

''அப்படியா?'' - அவளது குரல், அதிரரமலும், ஈடுபாடேயின்றியும் ஒலித்தது.

''மேடம்... உங்க தோழி உங்ககிட்டே சொல்லிட்டாங்களானு எனக்குத் தெரியாது. சொல்லலேனா - நான் அதை செய்றேன். இன்னிக்கு, அவங்களைக் கொலை செய்ய முயற்சி நடந்திருக்கு.''

அவளுடைய அகலமான சாம்பல நிறக் கண்கள் கலவரத்திலும் ஆச்சரியத்திலும் அகன்டன. கண்மணிகள்... நீரிலாடும் அவ்விழிகள்... அனைவயும் அகலமாயின.

''என்ன சொல்றீங்க நீங்க?''

''இந்த ஓட்டலுடைய தோட்டத்துல வெச்சு மேடம் நிக் சுடப் பட்டிருக்காங்க.''

அப்போது சட்டென்று சிரித்தாள் அவள். மிருதுவான, சொல்பவர் மீது பரிதாபப்படும், நம்பிக்கையற்ற சிரிப்பு அது.

''அப்படி நிக் உங்களாண்டை சொன்னாளா?''

''இல்லே மேடம். நானே என் ரெண்டு கண்களால் பார்க்கும்படி ஆச்சு. இதோயிருக்கு புல்லட்.''

அவளுக்கு முன்னால் அதனை இவன் பிடித்துக் காட்ட அவள் சற்று பின்வாங்கினாள்.

''ஆனா, ஆனா...''

''இது மேடமுடைய வழக்கமான கற்பனை கிடையாது. நான் ஷியாரன்டி. இதுக்கு மேலயும் விஷயங்களிருக்கு. கடந்த சில நாட்கள்ல ஆச்சரியப்பட வைக்கும் பலசம்பவங்கள்... விபத்துகள்... நடந்திருக்கு. நீங்க கேள்விப்பட்டிருப்பீங்களே'' என்றவன், உடனேயே, ''ம்ம்'' என மறுத்து விட்டு, ''நீங்க கேள்விப்பட்டிருக்க முடியாது'' என்றான். ''நீங்க இங்கே வந்ததே, நேத்து தானே, ம்?''

''ஆமாம் - நேற்று.''

''வர்றதுக்கு முன்னாடி உங்க நண்பர்கள் கூட தங்கியிருந்ததா கேள்விப்பட்டேன். டேவிஸ்டாக் பகுதியில.''

''ஆமாம்.''

''அங்கே தங்கியிருந்த அந்த மற்ற நண்பர்கள் யார் யாரா இருக்கும்னு யோசிக்கிறேன், மேடம்!''

அவளது புருவங்களை உயர்த்திக் கொண்டாள். ''அதைப் பற்றியெல்லாம் உங்ககிட்டே நான் சொல்ல ஏதாவது நல்ல காரணமிருக்கா?'' என்று கேட்டாள் இறுக்கமாய்.

ஒன்றும் தெரியா வெகுளிபோல சட்டென ஆனான் பொய்ரெட். ''மன்னிக்கணும், மன்னிக்கணும், மேடம். நான் சரியா விளக்கலேனு நினைக்கிறேன். எனக்கும் டேவிஸ்டாக் பகுதியில நண்பர்கள் இருப்பதால, ஒரு வேளை அவங்கள்ல யாரையாவது நீங்க சந்திச்சிருப்பீங்களோ எனும் அவாவில கேட்டுட்டேன். பச்சனன்... இது தான் என் நண்பர் கூட்டத்தினுடைய பெயர்.''

மறுத்துத் தலையசைத்தாள் அவள். ''அவங்களை எனக்கு ஞாபகமில்லே. அவங்களை நான் சந்திச்சிருப்பேன்னும் தோணலே.'' தற்சமயம் அவளுடைய குரல் நட்பாயிருந்தது. ''நண்பர்கள் பற்றி போரடிக்க வேண்டாமே. நிக் பற்றி பேசுவோம். யார் அவளை நோக்கி சுட்டது? ஏன்?''

''யார்னு எனக்குத் தெரியிலே - இது வரைக்கும்'' என்றான் அவன். ''ஆனா நான் கண்டுபிடிப்பேன். ஓஹ், யெஸ்... நான் கண்டுபிடிச்சுடுவேன்! ஒன்னு தெரியுமா... நான் ஒரு துப்பறியும் அதிகாரி. ஹெர்குல் பொய்ரெட், என் பெயர்.''

''ரொம்ப பிரபலமான பெயர்.''

''ஹோ... ரொம்ப கனிவானவங்க நீங்க மேடம்.''

இதற்கு நான் அவனைப் பார்த்து முறைத்தேன். அப்போது அவள் மெல்லமாய் கேட்டாள்: ''நான் என்ன பண்ணணும்?''

இக்கேள்வியால் அவள் எங்களிருவரையும் ஆச்சரியப்படுத்தி விட்டாள் என்று சொல்லலாம். இதை நாங்கள் துளியும் எதிர்பார்க்க வில்லை.

''உங்க தோழியைக் கவனிச்சுக்குமாறு கேட்டுக்கிறேன், மேடம்.''

''நான் செய்வேன்.''

''அவ்ளோதான்.''

அவன் எழுந்துக் கொண்டான். விரைவாய் வணக்கம் சொல்லிக் கொண்டான். நாங்கள் எங்களுடைய மேஜைக்கே திரும்பி விட்டோம்.

''பொய்ரெட்'' என் அழைத்த நான், ''இந்த விஷயத்துல நீ கை வைப்பதை, நீ ரொம்பவும் வெளிப்படையா காட்டிக்கிற மாதிரி தெரியலே?'' என கேட்டேன். ''ரகசியம் காக்கவேணாமா?''

''நண்பா, வேற என்னத்தை என்னால பண்ண முடியும்? சாதுர்யம் கம்மியா தோணலாம்... ஆனா இது பாதுகாப்பை ஏற்படுத்தித் தருது. என்னால இதை விளையாட்டா எடுத்துக்க முடியாது. எல்லயிருந் தாலும் இதுல ஒரு விஷயம் தானா வெளியே வந்து பட்டவர்த்தனமா தெரியுது.''

''என்னது அது?''

''மிஸஸ் ரைஸ் டேவிஸ்டாக் போகவில்லை. அப்ப இவ எங்கே இருந்திருப்பா? ஆஹ்! அதை நான் கண்டுபிடிக்கிறேன். ஹெர்குல் பொய்ரெட்டிடமிருந்து தகவல்களை மறைச்சு வெச்சுட முடியாது. அதோ பார்... சுந்தர வாஸரஸ் திரும்பிட்டான். அவன்கிட்டே அவ சொல்லிக்கிட்டிருக்கா. கவனி, கவனி. அவன் நம்மளைக் குறி வெச்சு பார்க்கிறான், அவன் புத்திசாலிடா! அவன் தலையோட வடிவத்தைப் பார்த்தேயில்லே! எனக்கு இப்பவே தெரிஞ்சுடக் கூடாதானு இருக்கு ...''

''எது?'' - பாதியில் பேசியதை அவன் நிறுத்தியதால் நான் கேட்டேன்.

''எனக்கு திங்கட்கிழமை எது தெரிய வருமோ அது'' - சங்கேதமாய் மறுபதில் தந்தான் அவன்.

நான் அவனைப் பார்த்தேன். ஆனால் ஒன்றும் பேசவில்லை. அவன்

பெருமூச்சு விட்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் நிக் எங்களுடைய மேஜையைக் கடந்து போனான். அவளுடன் ஆடியவனிடமிருந்து பிரிந்து வந்து, இறங்கி அமரும் ஒரு பெரும் பறவையாய் எங்களிடம் வந்தமர்ந்துக் கொண்டாள் அவள்.

''உயிர் போற அளவுக்கு ஆடியாச்சு'' என்றாள் அவள் எங்களிடம்.

''மேடமுக்கு, இது புதுசோ?''

''ஆமாம். இருந்தாலும் ஜாலியா இருந்தது.''

கைகளை அசைத்து ஆட்டி மறுபடியும் அவள் விடைபெற்றுப் போனாள்.

''அவ அப்படி சொல்லியிருக்க வேண்டாம்னு எனக்குப்படுது'' என்றேன் நான், சன்னமாய். ''உயிர் போற அளவுக்கு ஆடியாச்சு. ச்சே... அது எனக்குப் பிடிக்கலே.''

''எனக்கும்தான். ஆனா அது தான் உண்மை. அந்த இளையவளுக்கு, ஓஹ்... நல்ல தன்னம்பிக்கை இருக்கு, தெரியுமா. ஆனா, துரதிர்ஷ்ட வசமா, அது, இந்தத் தருணத்துல தேவையேயில்லாத ஒரு அசட்டு தைரியம். இப்பத் தேவை முன்ஜாக்கிரதை... வெகுண்டெழும் தன்னம்பிக்கை அல்ல.''

அடுத்த நாள் ஞாயிறு. நாங்களிருவரும் ஓட்டலின் பெரிய பால்கனியில் அமர்ந்திருந்தோம். திடுதிப்பென்று காலில் வெந்நீர் கொட்டி விட்டதைப் போல பொய்ரெட் எழுந்து நின்றபோது மணி பதினொன்றிருக்கலாம்.

''வா, என் இனிய நண்பா!'' என்றான் வழக்கமான நாடகப்பாணியில். ''ஒரு சின்ன பரிசோதனையை நாம செஞ்சு பார்ப்பம். மிஸஸூம் லாஸரஸூம் கிளம்பி கார்ல போயிருக்காங்க என்பதை நான் ஊர்ஜிதப்படுத்திக்கிட்டேன்... நம்ம மேடமும் கூட போயிருக்காங்க. கடற்கரை வசதியா இருக்கு.''

''எதுக்கு வசதியா?''

''நீயே பார்ப்பே.''

நாங்கள் படிகளிறங்கி வந்து சிறு புல் பாதையைக் கடந்தோம்... அங்கிருந்த கேட், வளைந்து நெளிந்து எப்படியெல்லாமோ சென்று கடைசியில் கடற்கரையில் போய் விழுந்த ஒரு பாதைக்கு வழி விட்டு

நின்றது. சில ஜோடி நீச்சல்காரர்கள் வந்தார்கள். அவர்கள் சிரித்துக் கொண்டும் பேசிக் கொண்டும் எங்களைக் கடந்து போனார்கள்.

அவர்களெல்லாம் போனதும், பொய்ரெட் ஓரிடத்தைக் குறி வைத்து நடந்து போனான். அங்கு, உயிரற்ற ஒரு சிறு கேட், அதன் ஆணி களிலெல்லாம் அசாத்திய துரு தாங்கி பாதி அழிந்தும் அழியாமலும் இருந்த பொய்ப்பலகையைத் தாங்கி நின்றது. 'கடைசி வீடு. தனியார் பகுதி.' கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒருவரும் இல்லை. அதன் வழியே நாங்கள் அமைதியாய் நழுவினோம்.

அடுத்த நிமிடம் வீட்டுக்கு முன்னாலிருந்த மரங்களடர்ந்த பகுதிக்கு வந்திருந்தோம். சுற்றுவட்டாரத்தில் யாரும் இல்லை. அப்பகுதியின் உச்சி வரை சிறுநடை போன பொய்ரெட் அங்கிருந்து தெரிந்த எல்லாப் பகுதிகளையும் பார்த்தான். பிறகு அவன் வீட்டை நோக்கியே திரும்பி வந்தான். கம்பிகளில்லாமல் வெறும் கதவு மட்டும் கொண்ட பெரிய பிரெஞ்சு வகை ஜன்னல்கள் அப்போது திறந்திருந்தன. அதன் வழியே நுழைந்து நாங்கள் வரவேற்பறைக்குள் விழுந்தோம். அங்கு கணப்பொழுதைக் கூட பொய்ரெட் வீணாக்க வில்லை. பட்டென கதவினைத் திறந்துக் கொண்டு அவன் ஹாலுக் குள் நுழைந்தான். அங்கிருந்து அப்படியே அவன் படிகளேற... நான் அவன் அடிகளையொற்றி! நேராய் நிக்கின் படுக்கையறைக்குள் நுழைந்து விட்ட அவன், அங்கிருந்த மெத்தையின் விளிம்பில் அமர்ந்து, ஒப்புதலான சிறு தலையசைவோடு என்னைப் பார்த்துக் கண்ணடித்தான்.

''எத்தனை சுலபமா முடிஞ்சுதுனு கவனிச்சியா ஹேஸ்டிங்ஸ்! நாம வந்ததை ஒரு நாதி கவனிக்கலே. நாம போகப் போறதையும் ஒருவரும் பார்க்கப் போறது கிடையாது. நாம என்ன பண்ணனும்னு நினைக் கிறோமோ அதை அற்புதமா, பாதுகாப்பா, இங்கே செஞ்சு முடிச்சுட லாம். உதாரணத்துக்கு இங்கே தொங்கும் கனமான ஏதாவது ஒரு படத்தின் கயிறோடு நாம கொஞ்சமா விளையாடி, அது சில மணி நேரங்கள்ல அறுந்து விழும்படி செய்யலாம். அப்படியே யாராவது வீட்டு வாசல்ல நின்னுக்கிட்டு நாம உள்ளே வருவதைக் கவனிச்சுட்டாங்கனு வெச்சுக்கோ... இதுக்கும் வசதியா ஒரு எக்ஸ்கியூஸ் இருக்கு. இந்த வீட்டு மக்களோட நண்பர்கள் என்பதே

அது!''

''அப்படினா அடையாளந்தெரியாத வெளியாளா இருக்கவே இருக்காதுனு முடிவே கட்டிடலாம்னு சொல்றியா?''

''கரெக்ட், அதைத்தான் நான் சொல்ல வரேன் ஹேஸ்டிங்ஸ். இந்த விஷயத்தின் அடி நாதமா இயங்கிக்கிட்டிருப்பது, வெளியிலிருக்கும் ஏதோ பைத்தியக்காரன் கிடையாது. அதுக்குப் பதிலா, வீட்டுக்கு அருகாமையிலேயே நாம் தேட வேண்டும்.''

அறையை விட்டு வெளியேற அவன் திரும்பி விட நானும் அவனைத் தொடரலானேன். இருவரில் ஒருவரும் பிறகு பேசவில்லை. இருவரும் மூளைக்குள் குழம்பிப் போயிருந்தோம் எனலாம்.

படிக்கட்டுகளின் வளைவை அடைந்த போது நாங்களிருவரும் செய்வதறியாது அப்படியே நின்றுப் போனோம். ஒரு மனிதர் மேலேறி வந்துக் கொண்டிருந்தார்.

அவரும் நின்றுப் போனார். அவர் முகம் இருட்டான நிழலுக் குள்ளிருந்தது, ஆனாலும், அவருடைய நிலைமையானது, அதிர்ந்துப் போய் பின்வாங்கும் ஒருவனுடைய நிலையாயிருந்தது. அவர் தான் முதலில், பெருங்குரலெடுத்து, எங்களை விழித்தும்படி பேசியது.

''இங்கே நீங்க ரெண்டு பேரும் தனியா வந்து என்னப் பண்ணிக் கிட்டிருக்கீங்கனு எனக்குத் தெரியணும்.''

''ஓஹ்'' என்றான் பொய்ரெட். ''குடியிருக்கும் க்ராஃப்ட் குடும்பத் தலைவர்னு நினைக்கிறேன் ...''

''அதான் என் குடும்பப் பேர். அதுக்கென்ன இப்ப ...?''

''உரையாட, நாம வரவேற்பறைக்குப் போயிடலாமா? அது நல்லதா யிருக்கும்னு நினைக்கிறேன்.''

இதற்கு வழி விட்டார்... பட்டென திரும்பி மளமளவென கீழிறங்கினார். அவரடியையொற்றி நாங்களும் வேகமாய்ப் பின்தொடர்ந்தோம். வரவேற்பறையில், கதவுகள் மூடிய நிலையில், மரியாதையாய் முதுகு வளைத்து வணக்கம் தெரிவித்தான் பொய்ரெட்.

''என்னை நானே அறிமுகப்படுத்திக்கறேன். ஹெர்குல் பொய்ரெட் - உங்களுடைய சேவைக்கு!''

எதிராளியின் முகம் சற்று மேகம் விலகியது. ''ஓஹ்!'' என்றார் அவர் சன்னமாய். ''நீங்கதான் அந்தக் குள்ளனா? நான் உங்களைப் பற்றி

படிச்சிருக்கேன்.''

''அந்த, செயின்ட் லூ ஹெராஸ்டிஃபேயரா?''

''ஆங்? கொஞ்ச நாளைக்கு முன்னாடி ஆஸ்திரேலியாவில இருக்கும் போது படிச்சது. ஃபிரெஞ்சு இல்ல, நீங்க?''

''பெல்ஜியன். பாதகமில்லே. இது என் நண்பன், கேப்டன் ஹேஸ்டிங்ஸ்.''

''உங்களை சந்திப்பதுல மகிழ்ச்சி. ஆனா, சொல்லுங்க, எந்தப் பெரிய விஷயமா வந்திருக்கீங்க? அதுவும் இங்கே வந்து என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்க? ஏதாவது - பிரச்சினை?''

''அது, நீங்க பிரச்சினைனு எதைக் கேட்கறீங்க என்பதைப் பொறுத்திருக்கு.''

ஒப்புதலாய் தலையசைத்துக் கொண்டார் அவர். முன் வழுக்கையும் முன்னேறும் வயதும் ஆகியிருந்தாலும், அழகாய் தோன்றினார் அவர். அவருடைய உடற்கட்டு ஒரு பிரம்மாண்டம். அவருக்கு கனமான தொங்கும் முகமிருந்தது - அதனை, ஓர் ஒழுங்கற்ற முகம் என நான் வர்ணித்துக் கொண்டேன். உற்று நோக்கித் துளைத்துக் கொண்டு உள்புகும் அவருடைய நீல நிற வகை விழிகள், அவரைப் பற்றிய விவரங்களில் குறித்துக் கொள்ள வேண்டிய ஒன்று.

''தக்காளி மற்றும் வெள்ளரிக்காய் நிறைய வாங்கினேன்... குட்டி நிக்குக்கு அவற்றை கொடுத்துட்டுப் போகலாம்னு வந்தேன். அவ வெச்சிருக்கிற ஆளு பைசாக்குப் பிரயோஜனமில்லே... பேசாமலே உட்கார்ந்திருப்பான் போல. தோட்டத்துல ஒண்ணு வளர்க்கிறது கிடையாது. சோம்பேறி மூட்டை. நானும் அம்மாவும் மட்டும் தனியா. பைத்தியம் பிடிச்சுடுது எங்களுக்கு. பக்கத்துலேயே இருப்பதால முடிஞ்சதை ஏதாவது உதவணும்னு தோணுது. நாங்க சாப்பிடத் தேவையானதை விட அதிகமா தக்காளி வாங்கிட்டு வந்தேன் - நிக்குக்கும் சேர்த்து. அக்கம்பக்கத்துக்காரங்க அனுசரணையா இருக்கணும், என்ன சொல்றீங்க? வழக்கம்போல ஜன்னல் வழியா உள்ளே வந்தேன் நான். கூடையை ஓரத்துல வெச்சேன். அப்படியே திரும்பியிருக்கணும்... அப்போ தான் காலடி ஓசைகளும் ஆண்கள் பேசற ஓசையும் மேலிருந்து வந்தன. வித்தியாசமாப்பட்டுது எனக்கு. இந்தப் பக்கத்துல திருடனுங்க பயங்கிடையாது - ஆனாலும் அப்படி

ஏதாவது சாத்தியம் தானே. அது போல எவனும் மேல இல்லையேனு ஊர்ஜிதப்படுத்திக்க விரும்பினேன். அப்போ தான் கீழே இறங்கி வந்துக்கிட்டிருந்த உங்க ரெண்டு பேரையும் நான் படிக்கட்டுல பார்த்தேன். அது எனக்கு ஆச்சரியத்தைத் தான் தந்தது. நீங்க இப்போ மாபெரும் துப்பறியும் நிபுணரா உங்களை அறிமுகப்படுத்துக்கிறீங்க. என்ன இதெல்லாம்?''

''பெருசா ஒண்ணும் கிடையாது - ஸிம்பிள்'' என்றான் பொய்ரெட், சிரிப்பூடே. ''சில நாட்களுக்கு முன்னாடி மேடமுக்கு அச்சுறுத்தும் அனுபவம் ஒண்ணு நடந்திருக்கு. அதுவும் ராத்திரியில. ஒரு கனமான படம் அவங்க தலைக்கு பக்கத்துல விழுந்திருக்கு. இது பத்தி மேடம் உங்ககிட்டே சொல்லியிருக்கணுமே?''

''சொன்னாங்க. அதிசயமான எஸ்கேப்.''

''அந்தப்படம் அப்படி மறுபடியும் விழுந்துடாம இருக்க ஒரு ஸ்பெஷல் சங்கிலி வாங்கிக்கிட்டு வந்த கட்டித்தர்றதா மேடம் கிட்டே சொல்லியிருந்தேன். ஆனா இன்னிக்குக் காலையிலேயே கிளம்பி வெளியே போகப்போவதா சொன்னாங்க அவங்க. ஆனா நான் வந்து என்ன அளவுக்கு செயின் வேணும்னு அளந்துட்டுப் போவதா முடிவெடுத்தேன். ஸிம்பிள்.''

வேறொன்றும் கிடையாது என குழந்தைப் போல கைகளை விரித்துக் காட்டி, அவனுக்கே உரிய கைது பண்ணும் காந்தச் சிரிப்பினைக் காட்டினான்.

க்ராஃபட் குடும்பத்தின் தலைவரான அவர் நீண்ட நெடுமூச்சு விட்டார். ''அப்போ - அவ்ளோ தானா?''

''ம். ஒண்ணும் இல்லாததுக்குப் போய் நீங்க அரண்டிருக்கீங்க. நானும் என் நண்பனும் சட்டத்துக்கு பவ்யமாய் அடிபணியும் பிரஜைகள்!''

''உங்களை நான் நேத்து பார்த்தேன் போலிருக்கே?'' - மெதுவாய் கேட்டார் அவர். ''குறிப்பா, நேத்து சாயங்காலம். நாங்கயிருக்கும் இந்த சின்ன பகுதியைக் கடந்து போவதைப் பார்த்தேனே.''

''ஆஹ்! நீங்க தோட்டத்துல வேலை பண்ணிக்கிட்டிருந்தீங்க. ஒரு குட்-ஆஃப்ட்டர்நூன் சொன்னாக் கூட அது உங்களுக்குத் தொந்தர வாயிடும் போல, அத்தனை சாந்தமா தெரிஞ்சீங்க.''

''அது சரிதான். ஓஓ... ஆக, நான் வண்டி வண்டியா கேள்விப் பட்டிருக்கும் அந்த அசகாய ஹெர்குல் பொய்ரெட், அது நீங்க தான்! சொல்லுங்க, இப்ப நீங்க என்ன ரொம்ப பிஸியா? அப்படி இல்லேனா அப்படியே என்னோட கிளம்பி வந்து ஒரு கப் காபி சாப்பிடலாமே. ஆஸ்திரேலியன் பாணி காலை காபி, ரொம்ப வித்தியாசமாயிருக்கும். அப்படியே ஓல்ட் லேடியைப் பார்த்தா மாதிரியுமிருக்கும். உங்களைப் பற்றி நிறைய செய்தித்தாள்கள்ல படிச்சு புருவம் உயர்த்தின ஓல்ட் லேடி அவங்க!''

''நீங்க ரொம்ப கனிவா நடந்துக்கிறீங்க, மிஸ்டர். எங்களுக்கு இப்போ ஒரு ஜோலி கிடையாது... உங்க கூட வருவதை குஷியா நினைக்கிறோம்.''

''இது அழகு.''

''நீ அதை கரெக்டா அளந்துட்டே இல்லே ஹேஸ்டிங்ஸ்?'' என்று என் பக்கம் திரும்பினான் பொய்ரெட்.

மிகச்சரியாய் அளந்து விட்டதாய் உத்தரவாதம் தந்த நானும் வந்திருந்த புது நண்பனோடு இணைந்துக் கொண்டு கிளம்பினேன்.

க்ராஃப்ட், ஒரு லொட லொட வம்பன்; இதை சீக்கிரமாகவே நாங்கள் உணர்ந்து விட்டோம். அவர்களுக்கு மெல்போர்னிலிருக்கும் வீடு பற்றி பேசினார்... ஆரம்பக்காலத்தில் அனுபவித்த வேதனைகள் பற்றி சொன்னார்... மனைவியை சந்தித்தது பற்றி, அவர்களிருவரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட பிரயத்தனங்கள் பற்றி, இறுதியாய் அவருக்கு உதவிய அதிர்ஷ்டம் பற்றி, பெற்ற வெற்றி பற்றி...

''ரெண்டாவது கருத்துக்கு இடங்கொடுக்காம உடனே கிளம்பிடறதா முடிவெடுத்தோம்'' - சொன்னார் அவர். ''கிராமம் போல பழைமை புதைந்த பகுதிக்குப் போயிடணும்னு எங்க ரெண்டு பேருக்குமே தாகமிருந்தது. அப்படியே செஞ்சோம். உலகின் இந்த மூலைக்கு வந்தோம் - என் மனைவியோட உறவுகள் சிலரை சந்திக்க முயற்சி பண்ணினோம் - அவங்க இந்தப் பகுதியிலிருந்து வந்தவங்க தான். ஆனால் எங்களால அவங்கள்ல யாரையும் கண்டுபிடிக்க முடியலே. பிறகு இந்தக் கண்டத்தை ஒரு சுற்று சுற்றி வந்தோம் - பாரீஸ், ரோம், இத்தாலியின் ஏரிகள், ஃப்ளாரன்ஸ் - இப்படி எல்லா இடமும். இது போல நாங்க இத்தாலி போயிருந்த போது தான் அந்த ரயில் விபத்து

நிகழ்ந்தது. என் துரதிர்ஷ்ட மனைவி அதுல படு மோசமா தாக்கப் பட்டா. கொடூரம், கொடுமை. அவளை மிகச்சிறந்த டாக்டர்ங்க கிட்டேயெல்லாம் கூட்டிட்டுப் போயிட்டேன்; அவங்க எல்லாரும் ஒண்ணையே தான் சொல்றாங்க - 'நேரம் வரும்' காத்திருங்க. மரமா படுத்துக்கிட்டு நல்ல நேரம் வரும்னு காத்திருக்கணுமாம். அது முதுகெலும்புல ஏற்பட்ட அடி.''

''என்ன ஒரு துரதிர்ஷ்டம்!''

''கெட்ட நேரம், இல்லையா? அப்படி நடந்துதுதா... இருந்தாலும் அவளுக்கு ஒரே ஒரு ஆசை மட்டும் மனசுல இருந்துக்கிட்டே இருந்தது. இந்தப் பகுதிக்கு வந்துடணும். இங்கே எங்களுக்குனு சொந்தமா ஒரு சின்ன இடம் இருந்தா கூட போதும் - என் மனசு நிறைஞ்சுடும்னா. கண்றாவியாயிருந்த பல அழுக்கடைஞ்ச இடங்களை நாங்க பார்த்தோம்... அதிர்ஷ்டவசமா இது எங்களுக்குக் கிடைச்சது. அமைதியாயிருக்கு. நல்லாயிருக்கு. மூட்டைகட்டி தனியா ஓரத்துல வெச்ச மாதிரி! கார் ஓசை கிடையாது... ரெக்கார்ட் பாட்டு கிடையாது... நமக்கு நாமேனு இருக்கலாம். உடனடியா வாங்கிட்டேன்.''

இந்தக் கடைசி வார்த்தைகளோடு நாங்கள் அவரிருந்த ஜாகைக்கே வந்து விட்டிருந்தோம். எதிரொலிக்கும் அளவுக்கு உரக்க ''கூயீ...'' என கத்தினார். இதற்கு பதிலாய் இன்னொரு ''கூயீ...'' வந்து சேர்ந்தது.

''உள்ளே வாங்க'' என்றது அங்கிருந்த க்ராஃப்ட்டின் மகன். திறந்திருந்த கதவின் வழியாக அவன் உள்ளே நுழைந்து, ஒரு சில படிகளின் ஏற்றங்களுக்குப் பிறகு ஓர் இதமான படுக்கையறைக்கு எங்களை இட்டுச் சென்றிருந்தான். அங்கேயிருந்த சோபாவில் ஒரு குண்டான நடுத்தர வயது பெண்மணி உட்கார்ந்திருந்தாள். தலையெங்கும் பஞ்சாய் நரைத்திருந்த அவளிடம் மிக இனிமையான புன்னகை இருந்தது.

''இதை யார்னு நினைக்கிறீங்கம்மா?'' என அவளிடம் கேட்டான் க்ராஃப்ட் வாரிசு. ''ரொம்ப ஸ்பெஷலான, உலகம் கொண்டாடும் துப்பறியும் மேதை ஹெர்குல் பொய்ரெட். உன்னோட கொஞ்ச நேரம் அரட்டையடிக்கக் கூட்டிட்டு வந்திருக்கேன்.''

''என் சந்தோஷத்தை என்ன வார்த்தை போட்டு நான் விவரிப்பேன்'' - பொய்ரெட்டின் கைகளை அன்பாய் பிடித்துக் குலுக்கியபடி.

சந்தோஷமாய் கூவியது, க்ராஃப்ட் குடும்பத்தின் தலைவி. ''உங்க ப்ளு ட்ரையின் கேஸ் பத்திப் படிச்சிருக்கேன். அந்த ட்ரெயின்லேயே நீங்க இருந்துருக்கீங்க, ஓஹ்... என்ன ஒரு த்ரில்லிங். தவிரவும் உங்களோட பல கேஸ்களை நான் படிச்சிருக்கேன். முதுகுத்தண்டு வலி ஆரம்பச்சதிலிருந்து எனக்கு வேற வேலை? உலகத்துல இருக்கிற எல்லா துப்பறியும் கதைகளையும் கேஸ்களையும் கொண்டு வந்து கொட்டிப் படிச்சுத் தீர்த்திருப்பேன்னு நினைக்கிறேன்! இவற்றைவிட வேற எதுவும் நேரத்தை வேகமா ஓட்ட உதவறாப்பல தெரியலே'' என முடித்தாள் அவள். ''பெர்த்... நீ எடித்தைக் கூப்பிட்டு டீ கொண்டு வரச் சொல்லு.''

''சரியா சொன்னீங்கம்மா.''

''அவ நர்ஸாவும் இருக்கிற வேலைக்காரி'' என விவரிக்கலானாள் அவள். ''காலையில என்னைத் தயார்படுத்த தினமும் அவ வரா. வேற வேலைக்காரங்களை நாங்க வெச்சுக்கல. பெர்த் ஒருத்தன் போதும். நல்லா சமைக்கிறான். வீட்டைப் பாதுகாக்கிறான். இவையும் தோட்ட வேலையுமே அவனுக்கு சரியாயிருக்கு.''

''இதோ வந்தாச்சு'' - ஒரு ட்ரேயுடன் திரும்பியிருந்த பெர்த் க்ராஃப்ட், குதூகலமாய் அறிவித்தான். ''இதோ, டீ. இது நம் வாழ்வின் மிக அற்புதமான பொன்னாள், இல்லையா?''

கொஞ்சமாய் முன்னுக்கு வளைந்து வந்து டீ கோப்பையை எடுத்துக் கொள்ளும்போது, ''நீங்க இங்கே தங்க வந்திருக்காப்பல தெரியுது'' என்றாள் க்ராஃப்ட் குடும்பத்தலைவி.

''ஆமாம். ஒரு சின்ன விடுமுறைக்காக.''

''ஆனா நீங்க தொழிலிலிருந்து ரிடையர் ஆயிட்டதாகவும், இனிமே உங்களுக்கு முழுக்கவும் விடுமுறைனுமில்லே படிச்சேன்!''

''ஆஹ்... மேடம், நீங்க நியூஸ் பேப்பர்ல படிக்கிற எல்லாத்தையும் நம்பிடக்கூடாது.''

''அதென்னவோ நிஜந்தான். அப்ப நீங்க இன்னும் உங்க பிஸினஸைத் தொடர்ந்துக்கிட்டுத் தானிருக்கீங்களா?''

''என்னை ஈர்த்துப் பிடிக்கும் கேஸ் கிடைக்கும் பட்சத்தில்.''

''இப்போ நீங்க இங்கே அப்படி ஒரு வழக்கின் வாலைப் பிடிச்சுக் கிட்டு வரலேன்னு நினைக்கிறேன்!'' என்று நாசூக்காய் கேட்டான்

மிஸ்டர் பெர்த். ''விடுமுறையெல்லாம் சொல்வது அதை மறைச்சு வெக்க இருக்கலாம், ஆங்?''

''அவருக்கு தர்மசங்கடம் உண்டாக்கும் கேள்விகளையெல்லாம் நீ கேட்கக்கூடாது, பெர்த்'' என்றாள் அவள். ''அப்புறம் அவர் இங்கே வருவதையே நிறுத்திடுவார். நாங்க ரொம்ப சாதாரணமானவங்க பொய்ரெட். எங்களைத் தேடி நீங்களும் உங்க நண்பரும் வந்து இன்னிக்கு ரொம்ப பெரிய விருந்து தந்துட்டீங்க. எங்களுக்கு எத்தனை பெரிய சந்தோஷத்தைத் தந்திருக்கீங்கனு உங்களுக்கே கூட தெரியாது.''

அவள் உள்ளத்திலிருக்கும் உவகையை வெளியிடுவதில் அவள் அத்தனை வெளிப்படையாகவும் இயற்கையாகவும் இருந்தபடியால், என் நெஞ்சு முழுக்க அவள் மீது அன்பு சொரிந்தது.

''அங்கேயிருந்த படத்துல ஏதோ கோளாறு'' என்றான் பெர்த் க்ராஃப்ட்.

ஆழ்ந்த அனுதாப உணர்வோடு, ''அந்த சின்னப் பொண்ணு செத்துல்ல போயிருக்கும்'' என்றாள் அம்மாக்காரி. ''அவ ஓர் உயிரோட்டமுள்ள பொண்ணு. இங்கே வரும்போதெல்லாம் அட்டகாசமா இருந்துட்டுத்தான் போவா. அக்கம்பக்கத்து மக்களுக்கு அவளை அத்தனை பிடிப்பதில்லேனு கேள்வி. ஆனா இது போன்ற பழம்பஞ்சாங்க ஆங்கிலேயே பகுதிகளின் வருத்தமான நிலை அது தான். ஒரு பெண்ணுக்குள் துடிப்பும் கும்மாளமும் இருப்பதை அவர்கள் விரும்புவதில்லை. அதனால அவ இங்கேயே ரொம்ப நாள் தாங்காததுல ஒண்ணும் ஆச்சரியம் கிடையாது. அவளோட அந்த நீள மூக்கு உறவுக்காரப் பய எத்தனை முயன்று பார்த்தும், ம்ம், அவ மனசை மாத்த முடியலே.''

''கிசுகிசு வேண்டாம், மிஸ்ஸி'' என்றார் அவளது கணவன்.

''ஹோஹோ'' என்றான் பொய்ரெட். ''அப்படிப் போகுதா கதை. ஆக, மிஸ்டர் சார்ல்ஸ் வைஸ், அவனோட இளைய தோழி மீது காதல்ல இருக்கான், ஆங்?''

''அவ மேல கிறுக்காத்தான் அவன் கிடக்கான்'' என்றாள் மிஸஸ் கிராஃப்ட். ''ஆனா, அவ, ஒரு வக்கீலைப் போய் கலியாணம் பண்ணிக்க மாட்டா. இதுக்காக அவளை நான் குத்தஞ்சொல்ல மாட்டேன். அவன்

ஒரு ஏழை வக்கீல் தானே. அந்தக் கப்பல்காரன் - சாலஞ்சர் - அவனை இவ மணந்துக்கிட்டா நான் மகிழ்வேன். ஆனா அவன் இவளை விட ரொம்ப மூத்தவன்... இருந்தாத்தான் என்ன? இப்போதைக்கு அவளுக்குத் தேவை - நிலையான பிடிப்பு - வேற எதுவும் கிடையாது. எல்லா இடங்களுக்கும்... கண்டம் கண்டமா தாண்டி நீந்திட்டு வரலாமில்லே! வேணும்னா, எப்பப்பாரும் ஒருவித ரகசிய முக பாவத்தோடேலே அலையும் அந்த மிஸஸ் ரைஸையும் கூட சேர்த்துக்க லாம். அவ ரொம்ப இனிமையானவ, திருமிகு பொய்ரெட்; எனக்கு இது நல்லாவே தெரியும். இருந்தாலும் எனக்கு அவளைப் பத்தின கவலை நிறைய இருக்கு. கொஞ்சகாலமா அவ நிம்மதியா இருக்கிற மாதிரியே தெரியலே. பேய் பிடிச்சு ஆட்டற மாதிரி முழிக்கிறா. அது என்னை விசனப்படுத்துது! அவ மேல தனி அக்கறை நான் காட்ட காரணமு மிருக்கு. இல்லையா பெர்க்?''

மிஸ்டர் க்ராஃப்ட் ஏனோ திடுமென இருக்கையினின்றும் எழுந்து கொண்டார்.

''அதுக்குள்ளேயெல்லாம் மூக்கை நுழைக்க அவசியமில்லே, மில்லி'' என்றார். ''திருமிகு பொய்ரெட்... ஆஸ்திரேலியாவின் சில புகைப்படங்களைப் பார்க்க உங்களுக்கு விருப்பமிருக்குமானு தெரியலே...?!''

''ஒய் நாட்?''

எவ்வித நிகழ்வுகளும் இன்றி எங்களுடைய சந்திப்பு பிறகு ஓடியது. பத்து நிமிடங்களுக்குப் பின் நாங்கள் கிளம்பினோம்.

''நல்ல மக்கள்'' என்றேன் நான். ''ரொம்ப சிம்பிள்... கர்வமற்ற தாழ்மை. அச்சு அசலாய் ஆஸ்திரேலிய மண்வாசனையின் அடை யாளம்.''

''உனக்கு அவங்களைப் பிடிச்சுதா?''

''உனக்குப் பிடிக்கலே?''

''அவங்க மிக இனிமையானவங்க - நல்ல நட்பு பாராட்டறாங்க.''

''ம்ம். நீ வேற என்னவோ நினைக்கிறே? எனக்குத் தெரியும். என்ன சொல்லு.''

''அவங்க, அதீத மண்வாசனையோட... ஆஸ்திரேலிய மண் வாசனையோட இருக்காங்க'' என்றான் ஆழ்ந்த சிந்தனையோடு.

''அந்த கூயீ எனும் கதறல்... ஆஸ்திரேலியப் புகைப்படங்களைப் பார்த்தே தீர வேண்டும் எனும் பலவந்தம்... இதெல்லாம், அவங்கவங்க பாகத்தை படு துல்லியமா நடிக்கிற மாதிரி தெரியலே...?''

''என்ன மாதிரியான ஒரு சந்தேகக் கிழம், நீ!''

''ரொம்ப சரியா சொன்னே, தோழா. நான் எல்லோர் மீதும் - எல்லா வற்றின் மேலும் -சந்தேகத்துல இருக்கேன். காரணம் பயம், ஹேஸ்டிங்ஸ் பயம்.''

*அத்தியாயம் 6*

# மிஸ்டர் வைஸுடன் ஒரு சந்திப்பு

காலைச் சிற்றுண்டிக்கு சாதாரண பதார்த்தங்களைப் பிடித்துக் கொண்டான் பொய்ரெட். முட்டையையும் பன்றியிறைச்சியையும் நான் வெட்டுவது அவனைப் புரட்டிப் போட்டு இம்சிக்குமாம் - அவன் எப்போதும் சொல்வான். இதன் விளைவாக ரொட்டி டீயுடன் அவன் மெத்தையிலிருந்து எழுந்திருக்க, அன்றைய நாளை, நான், வழக்கமான ஆங்கிலேய வழக்கப்படி முட்டை மாமிச வகையறாக்களுடன் ஆரம்பித்தேன்.

திங்கட்கிழமை காலையில் நான் கீழிறங்கிப் போகும்போது அவன் அறையைப் பார்த்தேன். மிக அற்புதமான இரவு உடையோடு அவன் மெத்தையில் அமர்ந்திருந்தான்.

''வாடா ஹேஸ்டிங்ஸ். உன்னைத் தான் கூப்பிடணும்னு நினைச்சுக் கிட்டிருந்தேன். இந்தக் குறிப்பை நான் மேடமுக்கு எழுதியிருக்கேன். இதை நீ உடனடியா கொண்டு போய் அவங்க கையில கொடுத்துப் புண்ணியம் கட்டிக்கக் கூடாதா?''

அதை நோக்கி நான் என் கையை நீட்டினேன். பொய்ரெட் என்னைப் பார்த்து பெருமூச்செறிந்தான். ''இப்படித்தான் ஹேஸ்டிங்ஸ், இப்படியேதான்... ஓர வகிடெடுக்காம நீ நடு வகிடு எடுக்கும் போது, ஓஹ்... உன் முகத்துக்கு என்ன சுத்தமான ஒரு லுக் கிடைக்குது தெரியுமா! உன் தோற்றத்துக்கே ஒரு லட்சணம் வந்துடுது. அப்புறம் உன் மீசை. மீசை வெச்சுகணும்னு நீ முடிவு பண்ணிட்டேனா அது அச்சு அசலா நிஜத்தன்மை கொண்டு இருக்கிற மாதிரி வளர்த்துக்கணும் - என்னுடையதை மாதிரி.''

இப்படிப்பட்ட சிந்தனையைக் கேட்டு நடுங்கி விட்ட நான்,

வெடுக்கென்று அவன் கையிலிருந்த சீட்டைப் பிடுங்கிக் கொண்டு உடனே வெளியேறி விட்டேன்.

நான் வரவேற்பறையிலிருந்த அவனுடன் வந்து சேர்ந்துக் கொள்ளும் போது செல்வி பக்லே வந்திருப்பதாக தகவல் கிடைத்தது. அவளை எங்களிடம் கொண்டு வரும்படியான அனுமதியை பொய்ரெட் அளித்தான்.

அலைக்கழிப்பட்டவளைப் போல வெறுப்பாய் உள்ளே வந்தாள் அவள். வழக்கமாயிருப்பதை விட அவளுடைய கண்களுக்குக் கீழே யான கருவட்டம் சற்று கூடியிருப்பதாய் உணர்ந்தேன் நான். அவள் கையில் ஒரு தந்தியைச் சுமந்திருந்தாள். அதை ''இந்தாங்க'' என்று அவள் பொய்ரெட்டிடம் தந்தாள். ''இது உங்களை சந்தோஷப் படுத்தும்னு நினைக்கிறேன்.''

பொய்ரெட் அதை சத்தமாகவே படித்தான்.

''இன்று ஐந்தரைக்கு வருகிறேன் - மேக்கி.''

''என் நர்ஸ் மற்றும் காப்பாளன் - இவ!'' என்று கிண்டல் வைத்து சொன்னாள் நிக். ''நீங்க நினைப்பது தப்பு, தெரியுமா? எந்த வகை மூளையும் மேக்கிக்குக் கிடையாது. நல்லா வேலை செய்வா - அதுக்குத் தான் அவ லாயக்கு. கொலைகாரன் பதுங்கியிருக்கும் இடத்துல உதவ, பத்து மடங்கு உதவியா இருப்பா, ஃப்ரெட்டரி. இவளை விடவும் பலமா இருப்பான் ஜிம் லாஸரஸ்.''

''அப்புறம் அந்த கமாண்டர் சாலஞ்ஜர்?''

''ஓ! ஜார்ஜ்! அவன் மூக்குக்குக் கீழே சரியா வந்து நிக்கிற வரைக்கும் - எதையுமே அவன் கவனிக்க மாட்டான்! கலகலப்பா அரட்டையடிக்க பய செமத்தியான உபயோகமா இருப்பான். ஜார்ஜ்!''

போட்டிருந்த தொப்பியைச் கழற்றியபடி தொடர்ந்துக் கொண்டிருந் தாள் அவள்: ''உள்ளே அனுமதிக்குமாறு நீங்க எழுதி அனுப்பியிருந்த ஆளை என்னத்தையோ பண்ணிக்கோனு உள்ளே விட்டுட்டேன். அவன் பண்றதைப் பார்த்தா ஆச்சரியமா இருக்கு. ரெக்கார்டிங் யந்திரம் எதையாவது... இல்லேனா, அப்படிப்பட்ட எதையாவது பொருத்த வந்திருக்கானா, அவன்?''

பொய்ரெட் மறுப்பாய் தலையசைத்தான். ''சேச்சே. யந்திரமெல் லாம் ஒண்ணும் கிடையாது. எனக்குள்ளே இருக்கும் ஓர் உத்தேசத்தை

சரிபார்த்துக்க, மேடம். நான் தெரிந்துகொள்ள விரும்பும் ஒன்றுக்காக.''

''அப்ப சரி'' என்றாள் அவள். ''இதெல்லாம் செமத்தியான வேடிக்கையா இருக்கு, இல்லே?''

பொய்ரெட் மிருதுவாய் கேட்டான்: ''அப்படியா இருக்கு, மேடம்?''

ஜன்னலைப் பார்த்தபடி, எங்களுக்கு முதுகு காட்டிக் கொண்டு ஒரு நிமிடம் நின்று கொண்டிருந்தாள் அவள். பிறகு திரும்பினாள். வீரம்பேசிய துணிச்சலான அத்தனை உணர்வும் அவள் முகத்திலிருந்து போயிருந்தது. கண்ணீரைக் கட்டுப்படுத்தி அடக்கி வைக்க முடியாது திருகிப் போகும் குழந்தையின் முகமாய் ஆகியிருந்தது அவளுடைய முகம்.

பொய்ரெட் கேட்ட கேள்விக்கு, ''நோ'' என பதில் தந்தாள். ''உண்மையா பார்க்கப்போனா - அப்படி கிடையாது. எனக்கு பயமாயிருக்கு - எனக்கு பயமாயிருக்கு. நான் பயங்கரமா பயந்திருக்கேன். நடுங்கிக்கிட்டிருக்கேன். இத்தனைக்கும் நான், என்னை, எப்பவுமே படு துணிச்சலானவனு தான் நினைச்சுக்கிட்டிருக்கேன்.''

''அப்படிப்பட்டவங்க தான் நீங்க, மேடம். எப்பவுமே நீங்க தைரியசாலிதான். நானும் ஹேஸ்டிங்ஸூம், ரெண்டு பேருமே, உங்களுடைய துணிச்சலையும் உற்சாகத்தையும் கண்டு பிரமிச்சுப் பாராட்டியிருக்கோம்.''

''ஆமாம், மேடம்'' என்றேன் நான் கதகதப்பாய்.

''இல்லை'' என்றாள் நிக், விசையுடன் தலையை மறுப்பாய் அசைத்து. ''நான் துணிச்சலானவ கிடையாது. என்னைக் கலக்குவது - அந்த - அந்தக் காத்திருத்தல். இன்னும் ஏதாவது நடந்திடுமோனு வயிற்றுக் கலக்கலோடு எல்லா நேரமும் காத்திருத்தல். அப்படி நடந்தா, அது எந்த மாதிரி நடக்கும்! இப்படி வேற கலங்கடிக்கும் சிந்தனைகள். எப்படியோ, அது நடந்தே தீரும்னு வேற எதிர்பார்த்துக் கிடப்பது.''

''ஆமாம், ஆமாம். ஒத்துக்கிறேன். மன உளைச்சல்தான், அது.''

''நேத்து ராத்திரி நான் என் படுக்கையை இழுத்து ரூமுக்கு நடுவுல போட்டுக்கிட்டேன் தெரியுமா. ஜன்னலையெல்லாம் இழுத்து மூடி விட்டேன். கதவை உள்பக்கமா தாளிட்டுக்கிட்டேன். நான் இன்னிக்குக் காலையில இங்கே வரும்போது சுத்திக்கிட்டு பிரதான

சாலை வழியாத் தான் வந்தேன். என்னால - வழக்கம்போல - சாராசரியா - தோட்டத்து வழியா வர முடியலே. அந்த வழியா நடப்பதை நினைச் சாலே ஏதோ என் நரம்பெல்லாம் திருகி வெடிச்சுடற மாதிரியிருக்கு, திரு பொய்ரெட். இருக்கிற எந்த வேலையும் நினைவுக்கு வராம இப்பல்லாம் இந்த பயந்தான் உச்சந்தலையில நிக்குது.''

''என்ன சொல்ல வர்றீங்க, மிஸ் நிக்? இருக்கிற எல்லா வேலையும் நினைவுக்கு வராம - அப்படின்னா?''

இதற்கு மறுபதில் தருவதற்கு முன் அவளிடம் தாற்காலிக இடை வேளை உருவாகியது.

''விசேஷமா எதையும் குறிப்பிட்டு இதை நான் சொல்லலை. 'நாகரீக வாழ்க்கை தரும் மன இறுக்கங்கள்' அப்படினு நியூஸ் பேப்பர்கள்ல அலசறாங்க இல்லே - அந்த வகையா இருக்கும். நிறைய பார்ட்டிகள் - ஏகப்பட்ட சிகரெட்கள் - இத்யாதி இத்யாதி. இதனாலெல் லாம் தான் இப்படி ஒரு கேலிக்கூத்தான நிலைக்கு நான் தள்ளப் பட்டிருக்கணும்.''

ஒரு நாற்காலிக்குள் தன்னை அவள் அப்படியே புதைத்துக் கொண் டாள். அவளுடைய விரல்கள் தன்னிச்சையாய் இணைந்தும் பிரிந்தும் நரம்பதிர்விலிருந்தன.

''நீங்க என்கிட்டே வெளிப்படையா இருக்க மாட்டேங்கறீங்க, மேடம்'' என, எதிர்பாராத ஒரு கணத்தில் பட்டென்று அறைந்தான் பொய்ரெட். ''வேற என்னவோ இருக்கு.''

''ஒண்ணும் கிடையாது. அப்படியெல்லாம் - நிஜமா - ஒண்ணுமே கிடையாது.''

''நீங்க என்கிட்டே சொல்லாத ஏதோ ஒண்ணு இன்னுமிருக்கு.''

இதற்கு அவள் உண்மையான தவிப்புடன் சொன்னாள்: ''நுணுக்க மான சின்ன விஷயத்தைக் கூட நான் உங்ககிட்டே சொல்லியிருக்கேன். யெஸ்.''

''இந்த விபத்துகளைப் பற்றி - உங்களைக் குறி வெச்சு நடந்த இந்தத் தாக்குதல்களைப் பற்றி - யெஸ்... உண்மையா சொல்லியிருக்கீங்க.''

''வெல், அப்புறம்?''

''உங்க நெஞ்சுல இருக்கிற... உங்க வாழ்க்கையில இருக்கிற எல்லாத்தையும், நீங்க என்கிட்டே சொல்லலை.''

அவள் இதற்கு மெதுவாய் கேட்டாள்: "அப்படி யாராலாவது பண்ண முடியுமா?"

"ஆஹ், அப்படினா..." என்று வெற்றியாய் குறிப்பிட்ட பொய்ரெட், "... நீங்களே ஒத்துக்கறீங்க, ஆங்?" என்று குறிப்பிட்டான்.

அவள் மறுத்துத் தலையசைத்தாள். அவன் அவளைக் கூர்மையாய் கண்காணித்தபடி யிருந்தான்.

"ஒரு வேளை..." என்று ஆலோசிப்பது போல் ஆரம்பித்த அவன், "ஒரு வேளை, அது, நீங்க சம்பந்தப்பட்ட ரகசியம் கிடையாதோ?" என்றான்.

அவளுடைய இமைகளில் சட்டென சில படபடப்புகளை நான் பார்த்ததாய் நினைக்கிறேன். ஆனால் உடனேயே அவள் துள்ளியெழுந்து விட்டாள்.

"உண்மையாகவும், நிஜமாயும், நடந்துக்கிட்டிருக்கிற இந்த முட்டாள்தனமான கூத்து சம்பந்தப்பட்ட மிக சின்ன விஷயத்தைக் கூட நான் உங்ககிட்டே சொல்லிட்டேன், திரு பொய்ரெட். எதையும் மறைக்கலே. ஆகவே, வேற எவனையோ பற்றி எனக்கு ஏதோ தெரியும்னு நீங்க நினைச்சாலோ, அல்லது சந்தேகப்பட்டாலோ, அது தவறு. யார் மேலயும் எவ்வித சந்தேகமுமே இல்லாதது தான், இந்த விஷயத்துல என்னைப் பைத்தியமா ஆக்குது. நான் முட்டாள் கிடையாது, ஸார். அந்த விபத்துகளெல்லாம் நிஜமாகவே விபத்துகளா இல்லாதபட்சத்தில், அவை, சர்வ நிச்சயமா, ரொம்பவும் அருகாமையில் இருக்கிற யாராலோதான் வடிவமைக்கப்பட்டிருக்கும்... யாராலோ... என்னை அறிந்த யாராலோதான் அப்படினு - எனக்கும் நல்லாவே புரியுது. யாரது? இதுதான், என்னால தாள முடியாத இம்சையாயிருக்கு. ஏன்னா - அந்த யாரோ யாராயிருக்கும்னு எனக்குத் துளியும்... கிஞ்சித்தும் ஊகம் கிடையாது."

அவள் ஜன்னலோரத்துக்குப் போய்விட்டாள். வெளியே பார்த்தபடியே நின்று கொண்டிருந்தாள். பேச வேண்டாம் என எனக்கு சைகை காட்டினான் பொய்ரெட். அப்பெண்ணின் சுயக்கட்டுப்பாடு இப்போது சற்று உடைந்திருப்பதால், அவளாய் முன் வந்து மேலும் ஏதாவது கொட்டுவாள் என்பது அவன் எண்ணம்.

பிறகு அவள் பேசியபோது இருந்த பாவம், முழுசும் புதிதாய்

மாறியிருந்த நிலையிலிருந்தது. கனவாய்... தூரத்துக் கனவில் மிதக்கும் தொனியில்...

"பைத்தியக்காரத்தனமான ஆசை ஒண்ணு என் மனசுல இருந்தது பற்றி உங்களுக்குத் தெரியுமா? கடைசி வீட்டை நான் நேசிக்கிறேன். அங்கே எப்படியாவது ஒரு நாடகம் நடத்திப் பார்த்துடணும்னு எனக்கு அவா இருந்துக்கிட்டே இருந்தது. அங்கே - அதுல - ஒரு நாடகத்துக்கான சூழல், செட்-அப் - இயற்கையாவே இருக்கு. விதவிதமான எல்லா நாடகங்களையும் அங்கே நான் நடத்திப் பார்த்திருக்கேன் - மனசுக் குள்ளேயே! இப்பப் பாருங்க... அங்கேயே ஒரு நாடகம் நடக்கறா மாதிரி இருக்கு. என்ன, அதை நான் தயாரிக்காததுதான் ஒரு குறை. மாறாக, அதுல நானே இருக்கேன். அதுக்குள்ளே மிகச் சரியா நானே இருக்கேன். அந்நாடகத்துல, ஒரு வேளை, ஆரம்பத்துலேயே இறந்து விடும் கதாபாத்திரமா நான்தான் இருப்பேன், போல!"

அவளுடைய குரல் இப்போது உடைந்தது.

"ஏய், ஏய், மேடம்" என்று இடைபுகுந்த பொய்ரெட்டின் குரல் இப்போது விறுவிறுப்பாயும் உற்சாகமாயும் இருந்தது. "இது உதவாது. வேண்டாம். இது அதைரியம். ம்ம்."

அவள் திரும்பி, அவனைக் கூர்மையாய் பார்த்தாள். "நான் அதைரிய மானவனு ஃப்ரெட்டரி சொன்னாளா?" என்று கேட்டாள். "நான் அப்படிப்பட்டவனு அவ சொல்வதுண்டு - சில சமயங்கள்ல. ஆனா ஃப்ரெட்டரி சொல்ற எல்லாத்தையும் நீங்க எப்பவும் நம்பிடக்கூடாது. சில நேரங்கள் இருக்கு திரு பொய்ரெட்... யெஸ், அவ, அவளா இருக்காத சில நேரங்களும் இருக்கு."

இப்போது இடைவேளை விளைந்தது. பிறகு பொய்ரெட் துளியும் சம்பந்தமேயில்லாத ஒரு கேள்வியைக் கேட்டான்: "சொல்லுங்க மேடம்... கடைசி வீட்டுக்காக எப்போதாவது யாராவது முன் வந்து கேட்டதுண்டா?"

"அதை விற்பதற்காகவா?"

"அதே தான்."

"கிடையாது."

"நல்ல பணம் கொடுப்பதாயிருந்தா அதை விற்பது பற்றி நீங்க யோசிப்பீங்களா?"

கேள்வியை சில நொடிகள் செலவழித்து உள் வாங்கிக் கொண்ட நிக் ''ம்ம்'' என மறுத்தாள். ''அப்படி நான் ஒத்துப்பேன்னு எனக்குத் தோணலே. நம்ப முடியாத அளவுக்குப் பெருந்தொகையா வந்து, அதை ஒத்துக்காம ஒதுக்கறது முட்டாள்தனம்னு ஒரு பேரம் வரும் வரைக்கும் - நோ தான்! தவிர, அதை விற்க எனக்கு இஷ்டமே கிடையாது, தெரியுமா?! அத்தனை தூரத்துக்கு எனக்கு அது பிடிக்கும்.''

''அப்படித்தான். எனக்கு அது புரியுது.''

நிக் மெதுவாய் கதவு வரை நகர்ந்தாள். ''இன்னிக்கு ராத்திரி பட்டாசு திருவிழாயிருக்கு. நீங்க வரீங்களா? டின்னர் எட்டு மணிக்கு. பட்டாசு கோலாகாலம் ஒன்பதரைக்குத் துவங்கும். துறைமுகத்தைப் பார்த்தபடியிருக்கும் தோட்டப்பகுதிலிருந்து ரொம்ப நல்லா தெரியும்.''

''நான் குதூகலமாயிடுவேன்.''

''ரெண்டு பேருக்கும் சேர்த்துத்தான் சொல்றேன்'' என்றாள் நிக்.

''ரொம்ப நன்றி'' என்றேன் நான்.

''அவிந்து கிடக்கிற மன உற்சாகத்தைத் தட்டியெழுப்பி விட்டுத் துள்ள வைக்கும் ஒரு பார்ட்டிக்கு ஈடு இணை வேற கிடையாது'' என குறிப்பு தந்தாள் நிக். இந்தக் கடைசி வார்த்தைகளோடு சிறு புன்னகையைச் சிந்தி விட்டுக் கிளம்பிப் போனாள் அவள்.

அவனுடைய தொப்பியைப் போய் எடுத்துக் கொண்ட பொய்ரெட், அதில், கண்ணுக்கே புலப்படாத அளவிலிருந்த சிறு தூசியினைத் தட்டி விட்டான்.

''நாம் வெளியே போறோமா?'' என கேட்டேன் நான்.

''நாம கையாள வேண்டிய சட்டபூர்வமான ஒரு விஷயமிருக்கு, நண்பா.''

''ம். அது என்னனு எனக்குப் புரியுது.''

''உனக்குள்ளும் இருக்கிற சின்ன சாதுர்யம் அவ்வப்போது விஷயங்களை உனக்குப் புரிய வைக்காம போகாது, ஹேஸ்டிங்ஸ்.''

வைஸ் அண்ட் கோ, நகரின் மெயின் ஸ்ட்ரீட்டில் அமைந்திருந்தது. நாங்களிருவரும் படியேறி முதல் தளத்தில் மூன்று குமாஸ்தாக்கள் விறுவிறுவென எழுத்துப்பணியில் ஈடுபட்டிருந்த ஓர் அறைக்குள் நுழைந்தோம். பொய்ரெட், சார்ல்ஸ் வைஸைப் பார்க்க வேண்டும் என்று கேட்டான்.

தொலைபேசியில் என்னவோ முணுமுணுத்த ஒரு காரியதரிசி, அதற்கு மறுபதில் கிடைக்கப்பெற, அது, எங்களுக்கு சாதகமானதாக தோன்ற, மிஸ்டர் வைஸ் எங்களைப் பார்க்க விழைவதாக குறிப்பிட்ட அவன், ஒரு சிறு பாதை வழியாக எங்களுக்கு வழி காட்டி அழைத்துப் போய், அங்கிருந்த ஓர் அறையின் கதவினைத் தட்டி, திறந்து, நாங்கள் உள்ளேற வழி விட்டபடி ஒதுங்கி நின்றான்.

சட்டரீதியான பேப்பர் குவியலிருந்த ஒரு பெரிய மேஜையின் அந்தப் பக்கத்திலிருந்த வைஸ் எழுந்து எங்களை வரவேற்றான்.

அவன் ஓர் உயரமான இளைஞன். ஏனோ வெளிறிப் போனவனாய் இருந்த அவன் சுலபத்தில் புரிந்து கொள்ள முடியாதவனாய் தெரிந்தான். இரண்டு பொட்டுகளிலும் முன் வழுக்கை வாங்கியிருந்த அவன், கண்ணாடி போட்டிருந்தான். நல்ல கலராயிருந்தான்.

பொய்ரெட், தேவைப்பட்டால் தர்க்கம் செய்து சண்டையிட தயாராகவே வந்திருந்தான். அதிர்ஷ்டவசமாக, அவனிடம், இன்னும் கையொப்பமாகாத ஓர் ஒப்பந்தம் இருந்தது... அது சம்பந்தமான சில சட்ட நுணுக்க சந்தேகங்களுக்காக, அவனுக்கு திரு வைஸின் ஆலோசனை தேவைப்பட்டது.

ஜாக்கிரதையாகவும் கேட்கப்பட்டதற்கு சரியாகவும் பதில் பேசிய வைஸ், பொய்ரெட் குறிப்பிட்ட சந்தேகங்களை சீக்கிரத்திலேயே பிடித்து விட்டான். அதிலிருந்த சில தெளிவிற்ற சில பதங்களை விளக்கவும் அவனால் முடிந்தது.

''நான் உங்களுக்கு ரொம்ப கடமைப்பட்டிருக்கேன்'' என முணு முணுத்த பொய்ரெட், ''என்னைப் போன்ற ஆங்கிலேயன் அல்லாதவனுக்கு இந்த இங்கிலாந்து சட்ட விஷயங்களும் பதங்களும் ஒரு திருகு வலி'' என்றான்.

இந்த சமயத்தில் தான், பொய்ரெட்டை இங்கு அனுப்பி வைத்தது யாரென்று வினவினான் அவன்.

''மிஸ் பக்லே'' என்று சிரத்தையாய் பதிலளித்தான் பொய்ரெட். ''உங்க உறவு தானே அவங்க, ம்? ரொம்ப கவர்ந்திழுக்கும் இளைய பெண், ஆங்? குழப்பத்திலிருக்கேன்னு அவங்க கிட்டே நான் குறிப்பிடும்போது அவங்கதான் என்னை உங்ககிட்டே போகும்படி

அனுப்பி வெச்சாங்க. சனிக்கிழமையே உங்களை நான் பார்த்து விட முயற்சித்தேன் - பனிரெண்டரை வாக்கில். ஆனா - உங்களைப் பிடிக்க முடியலே.''

''ஆமாம். எனக்கு நினைவிருக்கு. சனிக்கிழமை கொஞ்சம் சீக்கிரமாவே கிளம்பிட்டேன்.''

''மேடம், அந்தப் பெரிய வீட்டுல இருப்பதை, ரொம்பத் தனிமையா உணரணும்னு நினைக்கிறேன். அவங்க அங்கே தனியா தானே இருக்காங்க?''

''ஆமாமாம்.''

''சொல்லுங்க திரு வைஸ்... அந்த வீடு, மார்க்கெட்டுல நல்ல விலை போற வகையில இருக்கா?''

''அடிமட்டத்து விலைக்குக்கூட அது லாயக்கில்லைனுதான் சொல்வேன்.''

''நான், வீணா பொழுதுபோக்கா வம்பளக்க இங்கே வரலே, மிஸ்டர் வைஸ். வந்ததுக்கு எனக்கொரு காரணமிருக்கு -அப்படியொரு இடத்தை வாங்கத்தான் நானே இங்கேயும் அங்கேயுமா தேடிக்கிட்டிருக்கேன். செயின்ட் லூவின் சிநேகம் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. அந்த வீடு சிதிலமடைஞ்ச நிலையில தானிருக்குனு நான் ஒத்துக்கறேன். அதுக்குப் போய் ஏன் செலவழிக்கணும்னு அதைப் பாதுகாக்க நிறைய செலவழிப்பதில்லைனு நினைக்கிறேன். இப்படிப் பட்ட ஒரு நிலையில, அதை விற்க, மேடம் மனசு மாறி முன்வர மாட்டாங்களா?''

''அதுக்குக் கடுகத்தனை கூட வழியில்லே'' என்று முழு முடிவாய் மறுத்துத் தலையசைத்தான் அவன். ''அவ அந்த இடத்து மேல தன்னை முழுசா அர்ப்பணிச்சுக் கிடக்கா. எதாலும் அதை விற்கும்படி அவளை ஏவி விட முடியாது... எனக்கு நல்லா தெரியும். அது ஒரு பரம்பரை சொத்து - புரிஞ்சுக்குங்க.''

''எனக்கு அது விளங்கிடுச்சு... ஆனா...''

''அதை விற்பது பற்றிய விவாதம் தேவையே இல்லாத ஒன்று, ஸார். என் உறவான அவளைப் பற்றி எனக்கு நல்லாவே தெரியும். மதவெறி இருக்கு இல்லே... அது மாதிரியான ஒரு வெறித்தனமான பாசம் அவளுக்கு அந்த வீட்டு மேல இருக்கு.''

சில நிமிடங்களுக்குப் பிறகு நாங்கள் மறுபடியும் தெருவிறங்கி யிருந்தோம்.

''வெல், ஹேஸ்டிங்ஸ்'' என்ற பொய்ரெட், ''உன் மேல என்ன மாதிரி யான பதிப்பை இந்த ரைஸ் உருவாக்கினான்?'' என்றான்.

கேள்வியை நான் முதலில் உள்வாங்கிக் கொண்டேன். ''நெகடிவ் பதிப்பு தான்'' என்றேன். ''ஏன் இப்படி எதிர்மறையா நடந்துக்கிறான் என்று ஆர்வத்தைத் தூண்டும் வகை.''

''ஒரு நல்ல கனமான பாத்திரம் இல்லேங்கிறே, ஆங்?''

''நிச்சயமா அப்படித்தான். மறுபடியும் ஒரு தடவைப் சந்திச்சுடவே கூடாது என என்னை வைக்கும் ஆள். ரொம்ப சாதாரணம்.''

''அவனுடைய தோற்றம் நம்மை அப்படியே கவர்ந்திழுக்கும் வகையெல்லாம் கிடையாது. நாங்க பேசிக்கொண்டு முன்னேறின உரையாடல்ல ஏதாவது ஒத்தே வராத அம்சத்தை நீ கவனிச்சியாடா?''

''ஆ-மா-ம்'' என்றேன் நான் நிதானமாய். ''கவனிச்சேன். கடைசி வீட்டை விற்பது பற்றிய விஷயத்துல.''

''ரொம்ப சரி. கடைசி வீட்டின் மீது மேடம் வைத்திருக்கும் அபிலாஷையை, நீ, ஒரு வெறித்தனமான பாசம்னு விவரிச்சிருப் பியா?''

''அது ரொம்பவும் கடுமையான விமர்சனம்.''

''ஆமாம் - ஆனா, மிஸ்டர் வைஸ் கடுமையான பதங்களைப் பயன்படுத்துபவர் கிடையாது. அவருடைய நீதிமன்ற குணாதிசயம் - அழுக்கி வாசிப்பது தானே தவிர, உரக்க விவரிப்பது கிடையாது. அப்படியானாலும், மேடம், அவர்களுடைய மூதாதையர்கள் வீட்டின் மீது வெறித்தனமான பாசம் கொண்டவங்கனு விவரிக்கிறார், அவர்.''

''அப்படியொரு பதிவு அவங்க மனசுல இருக்கிற மாதிரி இன்னிக்குக் காலையில நிச் காட்டிக்கவே இல்லே'' என்றேன் நான். ''சாதாரணமா குடும்பத்துல ஒரு பரம்பரை வீட்டின் மீதிருக்கும் நிலைப்பாட்டையே அவங்களும் முன் வைப்பதா தான் நான் நினைச்சேன். அவங்களுக்கு அந்த வீட்டு மேல மதிப்பும் ஆசையுமிருக்கு - இது, பரம்பரை பரம்பரையா பாதுகாக்கப்படும் ஒரு வீட்டின் மீது யாருக்குமிருக்கும் ஒரு நன்மதிப்பு. அவ்ளோ தான். இதுக்கு மேல எதுவும் அவங்ககிட்டே நிச்சயமா கிடையாது.''

''ஆக மொத்ததுல, ரெண்டுல ஒண்ணு, பொய் சொல்லுது'' என்றான் பொய்ரெட் சிந்தனையுடன்.

''வைஸ் போய் பொய் சொல்வார்னு யாரும் நம்ப மாட்டாங்க.''

''அதிருக்கட்டும். இன்னொரு விஷயத்தையும் நீ கவனிச்சியா, ஹேஸ்டிங்ஸ்?''

''எது அது?''

''சனிக்கிழமையன்று பனிரெண்டரை மணிக்கு அவர் ஆபீஸ்ல இல்லே.''

அத்தியாயம் 7

# துயரம்

அன்று மாலை கடைசி வீட்டை நாங்கள் அடைந்தபோது பார்த்த முதல் நபர் நிக் தான். அற்புதமான உடை அணிந்துக் கொண்டு அறைக்குள் ஆடிக் கொண்டிருந்தாள் அவள்.

''ஓ! இது, நீங்க தானா!''

''மேடம்... இது எனக்கு அவமானமாயிருக்கு!''

''ஓ, ஸாரி, ஸாரி. என் உடைகள் எப்ப வரும்னு நான் ஆர்வமா காத்துக்கிட்டிருக்கேன். அதான், டெய்லரோனு நினைச்சேன்! சத்யம் பண்ணாங்க... நிச்சயம் தந்துடுவோம்னு சத்யம் பண்ணாங்க.''

''ஓ, டிரஸ் பிரச்சினையா! அப்ப இன்னிக்கு ராத்திரி டான்ஸ் இருக்கு, ஆங்?''

''ஆமாம். மொதல்ல நெருப்பு மூட்டல்... அப்புறம் நாங்க எல்லாரும் ஆடப்போறோம். அ-தா-வ-து... நாங்க எல்லாம் ஆடப் போறோம்னு... ... ...''

இப்போது அவளது குரலில் திடுமென்று வீழ்ச்சி தெரிந்தது. ஆனால் அடுத்த நிமிடம் அவள் சிரித்துக் கொண்டிருந்தாள். ''எப்பவும் இடம் கொடுக்காதே! இது தான் என் குறிக்கோள் - எப்போதும். கலங்கடிக்கும் விபத்துகளைப் பற்றி நீ எப்பவும் நினைக்கவே நினைக்காதே! அப்போது அது உனக்கு நேரவே நேராது! இன்னிக்கு ராத்திரி நான் பழையபடி துடுக்கான துணிகரப் பெண்ணாயிட்டேன். உல்லாசமா இருக்கப் போறேன். முடிஞ்ச அளவு கொம்மாளமடிக்கப் போறேன்.''

படிக்கட்டுகளில் காலடி ஓசைகள் கேட்டன. நிக் திரும்பினாள்.

''ஓ, மேக்கி. மேக்கி வந்துட்டா. ஏய், மேக்கி, இங்கே பாரு... ரகசிய மாய் என் தலை கொய்ய போடப்பட்டிருக்கும் திட்டங்களிலிருந்து

என்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் காவலர்கள், இவர்கள். இவங்களைக் கூட்டிட்டு வரவேற்பறை போ. விஷயத்தை இவங்க உன்கிட்டே சொல்லட்டும்.''

இதன் விளைவாய் நாங்கள் மேக்கி பக்லேவுக்கு கை குலுக்கல்கள் தந்தோம். அவளும், கேட்டுக் கொள்ளப்பட்டதன்படி, எங்களை அழைத்துக் கொண்டு வரவேற்பறைக்குப் போனாள். எனக்குள் உடனடியாய் அவள் குறித்து நல்லபிப்ராயம் உருவானது.

சாந்தமாகயிருந்த அவளது நல்ல மனமே, எனக்குள் ஒரு சிறந்த அபிப்பிராயத்தை உண்டுபண்ணியிருக்க வேண்டும் என கருதுகிறேன். அமைதியான பெண். ஈர்க்கும் அழகு, ஆனால் நாகரீகப் பூச்சு குறைந்த பழைய பாணியில். நிச்சயமாய் ரொம்ப ஸ்மார்ட் கிடையாது. அவள் முகம் அரிதாரத்துக்குப் பழக்கப்படாத ஒன்றாயிருந்தது. ரொம்ப சிம்பிளான, சற்றே கசங்கிப் போன நிலையிலிருந்த ஒரு கறுப்பு நிற உடையை அந்த நல்மாலை வேளைக்கு அவள் அணிந்திருந்தாள். வெளிப்படையான நீலநிற விழிகளும் மெதுவாய் நகரும் இனிமையான குரலும் பெற்றிருந்தாள்.

''ரொம்பவும் ஆச்சரியமான விஷயங்களா நிக் என்கிட்டே சொல்லிக்கிட்டிருந்தா'' என்றாள் அவள். ''நிச்சயம் அதெல்லாம் அவ ரொம்பவும் மிகைப்படுத்தி சொல்பவைகளாத்தானிருக்கணும், இல்லையா? யார்தான் நிக்குக்கு கேடு நினைப்பாங்க? இந்த உலகத்துல ஒருத்தரைக் கூட அவ பகைச்சுக்கிட்டிருக்க முடியாது.''

நம்பக்கூடாத தன்மை, அவளுடைய குரலில் கனமாய் இருந்தது. பொய்ரெட்டை அவள் ஒருவித அந்நியத் தன்மையோடு கவனித்துக் கொண்டிருந்தாள். மேக்கி பக்லே போன்ற பழமை மாறாத பெண்களுக்கு வேற்று நாட்டவர் என்றாலே சந்தேகங்கொள்ள வைக்கும் என நான் அப்போது உணர்ந்தேன்.

''ஆனாலுங்கூட....'' என சாந்தமாய் குரலெடுத்த பொய்ரெட், ''ஆனா, அதுதான் உண்மை. நான் ஊர்ஜிதமா சொல்வேன்'' என்றான்.

அவள் இதற்கு மறுபதில் ஏதும் தரவில்லை. ஆனால் அவளது முகம் நம்ப மறுத்த நிலையிலேயே இருந்தது.

''என்னவோ இன்னிக்கே எல்லாம் முடிஞ்சுடப் போவது மாதிரி இருக்கா நிக்'' என்றாள் அவள். ''என்ன காரணம்னே எனக்குத்

தெரியலே. காட்டுத்தனமான சந்தோஷத்துல மிதந்துக்கிட்டிருப்பது மாதிரி தெரியறா அவ.''

அந்த வர்ணனை - என்னவோ இன்னிக்கே எல்லாம் முடிஞ்சுடப் போவது மாதிரி- அது; எனக்குள் ஒரு சில்லென்ற நடுக்கத்தைப் பரப்பி விட்டது. மேலும் அவளது குரலில் தெரிந்த ஏதோ ஒரு தொனி எனக்கு ஒரு திடீர் ஆச்சரியமாய் பட்டது.

''நீங்க ஸ்காட்டிஷா, மிஸ் பக்லே?'' என இடைமறித்துக் கேட்டேன் நான்.

''என் அம்மா ஒரு ஸ்காட்டிஷ்.''

நான் கவனித்தேன்... பொய்ரெட்டைவிட என்னை அவள் அதிகம் அங்கீகரித்துப் பார்த்தாள். இவ்வழக்கு பற்றிய அறிவிப்புகளில் பொய்ரெட்டின் வார்த்தைகளைவிட என் வார்த்தைகள் அவளிடம் அதிக மரியாதையுடன் பெறப்படும் என தோன்றியது எனக்கு.

''உங்க உறவுக்காரப் பொண்ணு, இந்த விஷயத்துல ஏகப்பட்ட துணிச்சலோட இயங்கிக்கிட்டிருக்கு'' என்றேன் நான். ''கொஞ்சமும் பயந்துடாம, எப்பவும் போலவே இருந்துடணும்னு முடிவா இருக்காங்க, அவங்க.''

''இந்த நிலைமையில, அது ஒண்ணு தானே வழி... என்ன சொல் றீங்க?'' என்றாள் அவள். ''உள்ளுக்குள்ளே என்னதான் உதறலிருந் தாலும் அதை வெளியே கொட்டி பெரிய நாடகம் நடத்துறதுல எந்த பலனும் விளைஞ்சுடாது எனும் கோணத்துல சொல்றேன். அது, கூடயிருக்கிற எல்லோரிடமும், ஆறுதலுக்கு பதில் அசௌகரியத்தையே ஏற்படுத்தும்.'' இங்கு நிறுத்திய அவள், மிருதுவான குரலெடுத்து சொன் னாள்: ''எனக்கு நிக் மேல தனி பிரியம் உண்டு. அவ எப்பவுமே எனக்கு உதவிகரமாத் தானிருந்திருக்கா.''

அந்த சமயத்தில் அறைக்குள் திருமதி ஃப்ரெட்ரிக்கா ரைஸ் நுழைந்த தால் இதில் நாங்கள் மேற்கொண்டு எதுவும் சொல்லயியலவில்லை. நீல நிற பெரிய கவுன் அணிந்திருந்த அவள், ஒடிந்து விடுவது போலிருந்தாள். விரைவிலேயே அவளை லாஸரஸ் பின்தொடர்ந்து வந்தான். அப்புறம் நடனமாடியபடி, நிக். கறுப்பு ஃப்ராக் போட்டிருந்த அவளைச் சுற்றி பழமை பொதிந்த சிகப்பு நிற சைனா அங்கியொன்று அற்புதமாய் சுற்றியிருந்தது.

''ஹாய்'' என்ற அவள், ''ஒரு சின்ன ஒயின் பார்ட்டி?'' என்றாள்.

நாங்களெல்லோரும் குடித்தோம். அவளை நோக்கி கோப்பையை உயர்த்தினான் லாஸரஸ். ''அது ஒரு அற்புத அங்கி, நிக்'' என்றான் அவன். ''அது பழசு தானே, ஆங்?''

''ஆமாம். க்ரேட் க்ரேட் க்ரேட் அங்கிள் திமோத்தி எங்கேயோ பிரயாணம் போய் வந்தபோது வாங்கி வந்தது.''

''அழகு. இது நிஜ அழகு. நீ தேடினாலும் இது போல பொருத்தமா இன்னொண்ணு கிடைக்காது.''

''கதகதப்பாயிருக்கும்'' என்று விவரித்தாள் நிக். ''குளிர்ல நெருப்பு மூட்டி ஆடும்போது இது அம்சமா அமைஞ்சுடும். அழகானதும் கூட. இருந்தாலும் நான் - நான் கறுப்பை வெறுக்கிறேன்.''

''நெசந்தான்'' என்றாள் ஃப்ரெட்டரி. ''உன்னை நான் கறுப்புல பார்த்த மாதிரி ஞாபகமே கிடையாது. நிக், அப்புறம் எதுக்கு இதை வாங்கிக்கிட்டே?''

''ஓ, எனக்கே தெரியலே'' என விரல்களை நடன பாவனையில் விரித்து அவள் சொன்னாள்; ஆனாலும் அப்போது சுழிந்த அவளுடைய உதடுகளில் விளங்காத ஏதோ ஒரு வலியினை நான் கண்டேன். ''எதுக்காக செய்றோம்னே தெரியாம சில விஷயங்களை செஞ்சுட றோம்.''

சாப்பிடப் போனோம். ரகசியம் பொதிந்த தொனியிலிருந்த ஒரு பணி யாளன் - தாற்காலிகமாக பணியில் அமர்த்தப்பட்டிருக்க வேண்டும் - வந்தான். உணவு சுமாராகத்தானிருந்தது. ஆனால் திராட்சை பழச்சாறு, அற்புதம்.

''ஜார்ஜ் இன்னும் வரலே'' என்றாள் நிக். ''ப்ளைமவுத் வரைக்கும் நேத்து ராத்திரி அவன் கிளம்பிப் போனது ஒரு முட்டாள்தனம். இன்னிக்கு சாயந்திரம் எந்த நேரத்திலும் வந்து சேர்ந்துடுவான்னு நினைக்கிறேன். ஆடறதுக்காவது வந்துடுவான். மேக்கிக்குத்துணையா ஓர் ஆளைப் பிடிச்சுட்டேன். மனசைப் பறிகொடுக்கிற அளவுக்கு இருக்க மாட்டான், ஆனாலும் பேச்சுத் துணைக்காச்சுல்லே...!''

சன்னமான ஒரு கர்ஜனையோசை ஜன்னல் வழியாய் உள்ளே வந்தது. ''இந்த ஸ்பீட்-போட்டுங்க வேற. ச்சே. இந்த சத்தமே எனக்கு ஆகலே'' என்றான் லாஸரஸ்.

''அது வேகப்படகு கிடையாது'' என்றான் நிக். ''விமானம்.''

''இருக்கலாம்.''

''இருக்கலாம் என்ன! அது தான். சத்தமே வித்தியாசமாயிருக்கே.''

''பறக்கிற இந்த மனுசங்க எல்லாரையும் நான் வியக்கிறேன்'' என்றான் லாஸரஸ். ''மைக்கேல் ஸெட்டான் மட்டும் இந்த உலகத்தைப் பறந்தே சுற்றி வரும் விஷயத்துல ஜெயிச்சிருந்தான்னா, இன்னிக்குத் தேதியில உலகின் முதல் ஹீரோ அவனாத்தானிருப்பான். அப்படி அவனால முடியாம ஆயிட்டதுக்கு மனசார வருந்தறேன். அப்படிப்பட்ட ஓர் இங்கிலாந்துக்காரனை நாம இழந்திருக்கவே கூடாது.''

''அவன் இன்னமும் கூட எங்கேயாவது நலமாயிருக்கலாம்'' என்றான் நிக்.

''அது ரொம்ப கஷ்டம். ஆயிரத்துல ஒருத்தனுக்குத்தான் அந்த அதிர்ஷ்டம் கிடைக்கும். பரிதாபத்துக்குரிய 'மேட்' ஸெட்டான்.''

''எல்லாரும் அவனை 'மேட்' ஸெட்டான்னு தான் கூப்பிட்டாங்க, இல்லே?'' என கேட்டது, ஃப்ரெட்டரி.

லாஸரஸ் ஒப்புதலாய் தலையசைத்தான். ''அவனே கூட ஒரு பைத்தியக்காரக் குடும்பத்திலிருந்துதான் வர்றான்'' என்றும் சொன்னான். ''ஒரு வாரத்துக்கு முன்னாடி செத்த அவன் மாமன் - சர் மேத்யூ ஸெட்டான் - அவன் ஒரு கிறுக்கன்.''

''கையிலிருக்கும் மில்லியன் மில்லியனான பணத்தையெல்லாம் கொட்டி பறவைகள் சரணாலயம் நடத்தினது, அவன்தானே'' என கேட்டான் ஃப்ரெட்டரி.

''ஆமாம். தீவு தீவா வாங்குவான். பெரும் பெண் பித்தன் தெரியுமோ. சில பொண்ணுங்க செருப்புல அடிச்சு அவன் வண்டவாளத்தைத் தண்டவாளத்துல ஏத்திச்சுங்கனு கேள்விப்பட்டிருக்கேன். மளமளனு ஓடிப்போய் பறவைகள் வரலாற்றோடு தஞ்சம் புகுந்துட்டான். ஆறுதல் தேடி.''

''மைக்கேல் ஸெட்டான் செத்துட்டான்னு ஏன் நீ சொல்றே?'' - நச்சரித்தான் நிக். ''அந்த அளவுக்கு அவநம்பிக்கை அடைய எனக்கு எந்தவொரு காரணமும் தெரியலே - இன்று வரைக்கும்.''

''ஓஓ... உனக்கு அவனைத் தெரியுமில்லே'' என்றான் லாஸரஸ்.

''இதை நான் மறந்துட்டேன்.''

''ஃப்ரெட்டரியும் நானும் அவனை லேடாக்கெட் பகுதியில போன வருஷம் சந்திச்சிருக்கோம்'' என்றான் நிக். ''அவன் அதியற்புத ஆச்சரிய மானவனா இருந்தான்... இல்லையா ஃப்ரெட்டரி?''

''என்னைக் கேட்காதே டார்லிங். அவன் உன்னை ஜெயிச்சவன் - என்னையில்லை. அவன் உன்னை ஒரு முறை வெளியே கூட்டிட்டுப் போனான், இல்லையா?''

''ஆமாம். ஸ்கார்-பாரா பகுதியில். அது அத்தனை ருசிகரமாயிருந்தது. ஸிம்ப்ளி சூப்பர்.''

சாந்தமான சம்பாஷணை தொனியில் மேக்கி என்னைப் பார்த்துக் கேட்டாள்? ''நீங்க மேல பறந்ததுண்டா, கேப்டன் ஹேஸ்டிங்ஸ்?''

ஒரு முறை பாரீஸுக்குப் போய் திரும்பி வந்த பிரயாணம் ஒன்று தான் காற்று வழி நிகழ்ந்த என் ஒரே பிரயாண அனுபவம் என்பதை நான் சொல்லிவிடும்படி ஆனது.

சட்டென, ஒரு வித ஆச்சரியக் கொக்கரிப்போடு துள்ளியெழுந்தாள் நிக். ''ஓ, டெலிபோன். எனக்காகக் காத்திருக்க வேணாம். நேரமாகுது. நிறைய பேரை வேற நான் வரச் சொல்லியிருக்கேன்.''

அவள் அறையை விட்டு வெளியேறி விட்டாள். நான் கைக்கடி யாரத்தைப் பார்த்தேன். ஒன்பது தான். பழச்சாறுகள் வந்தன... தீர்ந்தன. பொய்ரெட்டும் லாஸரஸும் கலை சம்பந்தமாகப் பேசிக் கொண்டிருந்தனர். ஓவியங்கள், கலைப்பிரியர்களை மயக்கிப் போடும் சிறப்பான கலை வேலைப்பாடாக மார்க்கெட்டில் விற்கின்றன என்றார் லாஸரஸ். மரச்சாமான்கள் மற்றும் அழகு படுத்துதல் போன்றவற்றில் விளைந்துள்ள புது உத்திகளைப் பற்றி பேசியபடி உரையாடலில் முன்னேறிக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

நான், இப்பக்கத்தில், இந்த மேக்கி பெண்ணோடு பேசிப் பார்க்கும் என் பணியில் இறங்கினேன். அவள் ஒரு அசையா கல் என்பதை உடனேயே உணர்ந்தேன். இனிமையாய் பேசினாள்... ஆனால் போடப் பட்ட வசனத்தை, உரையாடலை வளர்க்கும் விதமாய் திருப்பித் தராமல் அப்படி அப்படியே நிறுத்திக் கொண்டாள். மூச்சு வாங்க மலையேறுவதைப் போலிருந்தது அவளுடனான உரையாடல்.

கனவு காணுபவளைப் போன்றதோர் அமைதியில் இருந்தாள்

ஃப்ரெட்டரி. அவளுடைய கை முட்டி மேஜையிலும், அவள் முகத்தைச் சுற்றி வட்டமிட்டு எழுந்த சிகரெட் புகையின் பின்னணியிலும் அவள் தியானத்திலிருக்கும் ஒரு தேவதைபோலத் தோன்றினாள்.

நிக் மறுபடியும் அவள் தலையைக் காட்டியபோது மணி ஒன்பது இருபது. ''இங்கேயிருந்து எல்லாரும் வெளியே வாங்களேன். ஒண்ணொண்ணா வர ஆரம்பிக்குது.''

நாங்கள் மரியாதையாய் எழுந்து கொண்டோம். வருவோரை வரவேற்பதில் மூழ்கிப் போனாள் நிக். ஒரு டஜன் பேருக்கும் மேல் வரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். வந்ததில் பலர் ஈடுபாடற்றே தெரிந்தனர். நிக், ஒரு சிறப்பான வரவேற்புரை நங்கையாக ஆகிப்போயிருந்ததைக் கவனித்தேன். அவளுடைய நாகரீக பூச்சையெல்லாம் சற்று ஓரங்கட்டி வைத்து விட்டுப் பாரம்பரிய பாணியிலேயே அவள் அனைவரையும் வரவேற்றாள். அழைக்கப்பட்டு வந்திருந்தவர்களில் சார்ல்ஸ் வைஸையும் கவனித்தேன்.

தற்சமயம் கடலையும் துறைமுகத்தையும் நோக்கியிருந்த தோட்டத்தின் ஒரு பகுதிக்கு நாங்களெல்லோரும் போனோம். வயதானவர்களுக்காக அங்கு சில நாற்காலிகள் போடப்பட்டிருந்தன... ஆனால் எங்களில் அநேகமாய் அனைவருமே நின்று கொண்டுதானிருந்தோம். முதல் ராக்கெட், விண் நோக்கி சீறிப் பாய்ந்தது.

அத்தருணத்தில் எனக்கு மிகவும் பரிச்சயப்பட்டிருந்த ஒரு குரலைக் கேட்டு நான் திரும்ப, அங்கு நிக், திரு க்ராஃப்ட்டை வரவேற்றுக் கொண்டிருந்தாள்.

''ச்சே, இது ரொம்ப தப்புப்பா'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள் அவள். ''நம்ம கூட உங்கம்மாவும் இருக்க முடியாம ஆயிடுச்சே, ப்ச். ஒரு ஸ்ட்ரெட்சரை வெச்சாவது அவங்களை நாம கூட்டிட்டு வந்திருக்கணும்.''

''அது, புவர் மதருடைய துரதிர்ஷ்டம். என்ன பண்ணுவது? ஆனா அது குறித்து அவங்க ஒரு தடவை கூட அலுத்துக்கிட்டது கிடையாது. அது தான் அவங்களோட இனிமையான பக்கம். ஹாஹா... என்ன அழகு!'' - வானில் வெடித்துச் சிதறிய வண்ணவண்ணப் பட்டாசுப் பூக்களைப் பார்த்ததால் சொன்னது இது.

அன்றைய இரவு ஓர் இருள் இரவு. நிலா கிடையாது. மூன்று

நாட்களில் பவுர்ணமி. வழக்கமான கோடை இரவு போல, அன்றைய இரவிலும் குளிர் தூக்கலாயிருந்தது. எனக்கு அடுத்து இருந்த மேக்கி பக்லே நடுங்கினாள்.

''நான் உள்ளே ஓடிப் போய் ஒரு கோட்'டை எடுத்துக்கிட்டு வந்துடறேனே'' - முணுமுணுத்தாள் அவள்.

''நான் போய் கொண்டு வரேன்.''

''ம்ம். உங்களுக்கு அது எங்கே இருக்குனு தெரியாது.''

அவள் வீடு நோக்கித் திரும்பி விட்டாள். அத்தருணத்தில் ஃப்ரெட்டரிக்காரைஸின் குரல் அழைத்தது: ''ஓ, மேக்கி. என்னுடையதையும் எடுத்துக்கிட்டு வந்துடேன். அது என்னோட ரூமிலே இருக்கு.''

''அவ காதுல வாங்கிக்கலே'' என்றான் நிக். ''நான் எடுத்துக்கிட்டு வரேன், ஃப்ரெட்டரி. எனக்கும் என்னோட குளிர் கோட் வேணும். இந்த மேலங்கி பத்தலே. காத்து வேற ப்ராணனை வாங்குது.''

அவன் சொன்னது போலவே கடலிலிருந்து கூராய் குளிர்க்காற்று வந்து கொண்டுதானிருந்தது.

துறைமுகத்தின் இறக்குமதி மேடையில் பொருட்கள் இறங்கிக் கொண்டிருந்தன. எனக்கு அடுத்து நின்று கொண்டிருந்த ஒரு வயோதிகப் பெண்மணியுடன் நான் சம்பாஷணையில் விழுந்தேன். என் வாழ்க்கை முறை, பணி, இஷ்டங்கள், எத்தனை நாள் தங்கியிருக்கத் திட்டம் போன்ற கேள்விகளிலெல்லாம் அவள் ஆழமாய் இறங்கிப் பேசினாள்.

கடும் வெடி! பச்சை நிற நட்சத்திரங்களின் மழை வானத்தை ரொப்பியது. அவை நீலமாய் மாறின. பின்பு சிகப்பாய். கடைசியில் வெள்ளி நிறமாய்.

இன்னொரு வெடிப்பு. மேலும் கூட ஒன்று.

''ஓ என்கிறார்கள் அல்லது ஆ என்கிறார்கள்'' - என் காதுகளுக்கு அருகில் திடுமென விளைந்த பொய்ரெட், தான் கவனித்ததை சொன்னான். ''இறுதியில், ஒன்றுமற்ற வித்தையாய் இது ஆகின்றது. ப்ர்ர்ர்! இந்தப் புல்லு ஒரு பக்கம் பிசுபிசுனு கால்ல. இந்த சிலுசிலுப்பு எனக்கு இம்சைடா.''

''சிலுசிலுப்பு, ஓர் இம்சை? அதுவும் இந்த இனிமையான இரவுல?''

''இனிமையான இரவு! இல்லையா, இனிமையான இரவு! மொட மொடனு மழை பெய்யாத வரைக்கும் இது இனிமையான இரவே

தான். ஆனா, நண்பா, இருக்கிற குளிர் உடம்புக்கு நல்லதுல்லே. ஒரு தெர்மா-மீட்டர் இருந்தா தெரியும்... எப்படி குளிர்கொட்டுதுனு.''

''இருக்கலாம்'' என ஏற்றுக்கொண்ட நான், ''ஸோ வாட்? நான் ஒரு கோட் போட்டுப்பேன். ஆச்சு'' என்றேன்.

''புத்திசாலிதான். நல்ல கோடைப் பிரதேசத்திலிருந்து நீ வந்திருக்கே.''

''நடுங்காதே. இரு. உன்னுடையதை நான் எடுத்துக்கிட்டு வரேன்.''

ஆனால், பொய்ரெட் முதலில் ஒரு காலை எடுத்து பவ்யமாய் பூமியில் வைத்தான். பிறகு அடுத்த காலையும் மெதுவாய் பூமியில் பதிய விட்டான். பூனை போல. ''பிசுபிசுனு கால்ல ஒட்டுற பனி பிடிக்கலைப்பா'' என்று இச்செயலுக்கு விளக்கமும் தந்தான். ''நான் வீட்டுக்கே போயிடறேனே.''

இன்னும் எரிச்சலாய் எதையோ அவன் முணுமுணுத்தபடியிருக்க நாங்கள் இருவரும் வீடு நோக்கி நடையைக் கட்டினோம். தள்ளியிருந்த சாமான்கள் இறக்கும் துறைமுகப் பகுதியிலிருந்து, அடுத்து ஒரு லக்கேஜ் இறக்கப்படுவதற்கான கரவோசைகள், இங்கே எங்களை வந்து அடைந்தன. சாமானோ அல்லது கும்பலாய் ஆட்களோ வந்திருக்க வேண்டும். 'எங்கள் பார்வையாளர்களின் வரவு நல்வரவாகட்டும்' என்றொரு அறிவிப்பு மினுமினுத்திருக்க வேண்டும் என எண்ணிக் கொண்டேன்.

''நாமெல்லாம் மனத்தளவில் குழந்தைகளாகவே தானிருக்கோம்'' என்றான் பொய்ரெட் சிந்தனையோடு. ''பார்ட்டி, விளையாட்டு, திருட்டுப் பார்வை...!''

நான் என் உள்ளங்கையால் அவனைப் பிடித்திருந்தேன். பிடித்த கையால் அவனை இறுக்கிக் கொண்டிருந்தேன். என் இன்னொரு கை அவனுக்குச் சுட்டிக் காட்டியது.

வீட்டிலிருந்து நாங்கள் ஒரு நூறு அடி தூரத்தில்கூட இருந்திருக்க மாட்டோம். அங்கே, ஜஸ்ட் எங்களுக்கு முன்னால், எங்களுக்கும் அங்கிருந்த திறந்த அந்த ஃப்ரெஞ்சு ஜன்னலுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில், தாறுமாறான கோணத்தில் ஓர் உடல் ரத்த சிகப்பு நிற மேலங்கியால் மூட்டையாய் சுற்றப்பட்டுக் கிடந்தது.

''டேய்'' ரகசியமாய் என் காதுக்குள்ளேயே முணுமுணுத்தான் பொய்ரெட். ''டேய்...''

அத்தியாயம் 8

# கொலைகார மேலங்கி

நாங்களிருவரும், அந்த இடத்திலேயே, பயத்தில் உறைந்து, நகரும் த்ராணியற்று, அப்படியே ஒரு நிமிடம் போல நின்றிருப்போம்... ஆனால் அதுவே எங்களுக்கு ஒரு நீண்ட மணிநேரம் போல அனுபவ மானது. பிறகு என் கையை ஓங்கி உதறிவிட்டு பொய்ரெட் முன்னோக்கி நடந்தான். சாவி கொடுத்த இயந்திரம் போல இறுக்கமாய் போனான் அவன்.

''அது, நடந்துடுச்சு'' என்றான் அவன். அவன் குரலிலிருந்த கசப்பான வேதனையை எனக்கு வார்த்தைகள் போட்டு விளக்கத் தெரியவில்லை. ''எல்லாம் செஞ்சும், என்னுடைய தற்காப்புகளையும் மீறி, அது நடந்துடுச்சுடா. ஆஹ்! மன்னிக்க முடியாத குற்றம், என்னுடையது தான். நான் ஏன் அவனுக்குத் துணையா இல்லாம போனேன்? அதுவும் இந்தக் கூட்டத்துல. ஓ... நான் முன்கூட்டியே கணிச்சிருக்கணும். யெஸ்... கணிச்சிருக்கணும். ஒரு நொடிப்பொழுது கூட அவனை நான் தனிச்சு விட்டிருக்கக் கூடாது. ஓ, ஹேஸ்டிங்ஸ்!''

''நீ எதுக்கு குற்றஞ்சுமத்திக்கறே'' என்றேன் நான். என் நாக்கு, இறங்காமல், மேலண்ணத்தில் அப்படியே ஒட்டிக் கொண்டு விட்டது. வேறெதுவுமே பேச நாவுக்கு தெம்பற்று ஆனது.

நடந்துள்ளதற்கு, பொய்ரெட்டால், ஒரு சோகமான தலையசைப்பை மட்டுமே மறுப்பாய் ஆட்டிக் காட்ட முடிந்தது. உடலுக்கு அருகில் முட்டி போட்டு அமர்ந்தான்.

அப்போது, அந்தக் கணத்தில், நாங்கள் இரண்டாவது அதிர்ச்சியை அனுபவித்தோம்.

நிக்கின் கொண்டாட்டமான கிறீச்சிடும் உல்லாசக் குரல் படு

துல்லியமாய் அங்கு கேட்க, நிக்'கே கூட, அடுத்த சில நொடிகளில், அறையின் வெளிச்சப் பின்னணியில் ஜன்னலின் வழியே எட்டிப் பார்த்தாள்.

''ஸாரி... நேரமாயிடுச்சு மேக்கி...'' என்றாள் அவள். ''ஆனா ...''

பிறகு, அவளுக்கு முன்னால் விரிந்து கிடந்த காட்சியினைக் கண்டு விட்ட அவள், உடைந்துக் கத்தி விட்டாள்.

கடுமையாய் அதிர்ந்து போன பொய்ரெட், வராண்டாத் தரையில் கிடந்த உடலை ஒரு திருப்புத் திருப்பிப் போட்டான். நான் முன்னுக்கு வளைந்து வேகமாய் குனிந்தேன்.

கீழே உணர்வற்றுக் கிடந்த மேக்கி பக்லேயின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன் நான்.

அடுத்த நிமிடத்தில் நிக் எங்களுடன் வந்து சேர்ந்து விட்டிருந்தாள். கட்டுப்படுத்த முடியாமல், அவள் தொண்டை கிழிய வீறிட்டாள்.

''மேக்கி, ஓ மேக்கி - இது சாத்தியமில்லை - இது நடக்கவே முடியாது - மேக்கி ...''

இன்னமும் கூட, பொய்ரெட், கிடந்த பெண்ணின் உடலைப் பரிசோதனை செய்தபடித்தானிருந்தான். கடைசியாய் ஓர் எம்பலோடு எழுந்து நின்றான் அவன்.

''அவ - அவ'' - கேட்ட நிக்கின் குரல் உடைந்து போயிற்று.

''ஆமாம், மேடம். அவ, இறந்துட்டா.''

''ஏன்? ஏன்? யார் அவளைக் கொல்ல நினைச்சிருப்பாங்க?''

அதற்கான பொய்ரெட்டின் மறுபதில் உடனடியாகவும் முடிவான தாகவும் வந்தது. ''அவங்க, அவளைக் கொல்லணும்னு குறி வைக்கலே, மேடம். குறி வைக்கப்பட்டது - நீங்க! போர்த்தியிருந்த மேலங்கியினால அவனுங்க ஏமாந்துட்டாங்க.''

இப்பொழுது இன்னும் பெரிய அழுகை நிக்கிடமிருந்து விளைந்தது. ''அது ஏன் நானாகவே இருந்து தொலைச்சிருக்கக் கூடாது?'' - துடிதுடித்தாள். ''ஓ, அது ஏன் நானாகவே இருந்து தொலைச்சிருக்கக் கூடாது? அது தானே எனக்கு நல்லதா இருந்திருக்கும்? ஓ, இது தெரிஞ்ச பிறகு, இப்போ எனக்கு வாழ்க்கையே பிடிக்கலையே. இப்ப நான் சந்தோஷப்படுவேன் - ஏற்றுப்பேன் - மரணத்தை.''

அவள் ஆதரவு தேடி கைகளை விண் நோக்கி நீட்டி அலற...

உடனேயே நடுநடுங்கவும் ஆரம்பித்தாள். துரிதமாய் நான் சுரவளைய மிட்டு அவளை ஆசுவாசமாக்குவதில் இறங்கினேன்.

''அவங்களை வீட்டுக்குள்ளே கூட்டிட்டுப் போயிடு, ஹேஸ்டிங்ஸ்'' என்றான் பொய்ரெட். ''அப்புறம் போலீஸுக்கு போன் போடு.''

''போலீஸ்?''

''யெஸ். இங்கே யாரோ ஒருத்தர் சுடப்பட்டிருக்காங்கனு சொல்லு. ம். பிறகு நீ மேடம் கூடவே இரு. எக்காரணம் கொண்டும் அவங்களை தனியா விட்டுடாதே.''

கட்டளைகளின் தேவையை உணர்ந்தவனாய் தலையசைத்தேன் நான். பாதி மயங்கிப் போயிருந்த பெண்ணைத் தாங்கியபடி வரவேற்பறை ஃபிரெஞ்சு ஜன்னல் வழியாய் உள்ளே நுழைந்தேன். அவளுடைய தலைக்கு ஒரு தலகாணியை அண்டை கொடுத்து வைத்து அங்கிருந்த சோஃபாவில் அவளை சாய விட்டேன் நான். பிறகு அறைக்குள் டெலிபோனைத் தேடி அரக்கபரக்கலானேன்.

எலென் மீது ஏறத்தாழ மோதிவிட்ட நிலையில் துணுக்குற்று விலகினேன் நான். அவள் அங்கு அவளுடைய மரியாதை ததும்பும் முகத்தில் மிகவும் புதிரான ஓர் உணர்வைப் பிரதிபலித்தபடி நின்று கொண்டிருந்தாள். அவள் கண்களில் மினுமினுப்பு அதிகமிருந்தது. காய்ந்திருந்த உதடுகளின் மீது நாக்கை ஓட்டி ஈரப்படுத்திக் கொண்டேயிருந்தாள். கிளர்ந்தெழுந்தவளைப் போல அவளது விரல்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. என்னைப் பார்த்தவுடனேயே அவள் பேச ஆரம்பித்து விட்டாள்.

''ஏ-ஏ-ஏதாவது நடந்துடுச்சா, ஸார்?''

''ஆமாம்'' என்றேன் நான் படக்கென்று. ''டெலிபோன் எங்கேயிருக்கு?''

''எ-எ-துவும் மோசமா நடந்துடலியே, ஸார்?''

''ஒரு விபத்து நடந்துடுச்சு'' என்றேன் நான் பொதுவாய். ''யாருக்கோ காயம் ஏற்பட்டிருக்கு. நான் போன் பண்ணணும்.''

''காயம் யாருக்கு, ஸார்?''

தெரிந்துகொள்ள வேண்டும் என்ற பேரவா அவள் முகத்தில் தெறித்தது.

''மிஸ் பக்லே. மிஸ் மேக்கி பக்லே.''

''மிஸ் மேக்கி, மிஸ் மேக்கி? நிச்சயமா - தெரியுமா, ஸார் - அது, மேக்கிதான்னு நிச்சயமா தெரியுமா, ஸார்?''

''நிச்சயமா எனக்கு தெரியும்'' என்றேன் நான். ''ஏன்?''

''ஓ! ஓ...ஓ...ஓ...ஒண்ணுமில்லே. ஒரு வேளை அது வேற ஏதாவது பெண்ணாயிருந்துடக் கூடாதாங்கிற ஆதங்கத்துல கேட்டேன். ஓ... ஓ...ஒரு வேளை அது மிஸஸ் ரைஸாயிருக்குமோனு.........''

''கவனி முதல்ல'' என்றேன் நான். ''டெலிபோன்?''

''அது இந்த சின்ன அறையில இருக்கு, ஸார்'' என்ற அவள், அவ்வறையின் கதவை விலக்கிக் காட்டினாள். இருந்தது.

''தேங்க் யூ'' என்றேன் நான். ஆனால் அவள் மேலும் மலங்க மலங்க விழிக்க வேண்டி வந்ததால், அழுத்தமாய் சொன்னேன்: ''இது தான் எனக்கு வேணும். தேங்க் யூ.''

''டாக்டர் க்ரஹாம் வேணும்னா ...''

''வேண்டாம் வேண்டாம்'' என்றேன் நான். ''அவ்ளோ தான். போ.''

எவ்வளவு மெதுவாய் முடியுமோ அவ்வளவு மெதுவாய், முறைத்த படி வேண்டாவெறுப்பாய் வெளியேறினாள் அவள். வெளியே கதவிடுக்கில் மறைந்துக் கொண்டு அவள் ஒட்டுக் கேட்கப்போவது நிச்சயம்தான். ஆனால் அதற்கு என்னால் எதுவும் பண்ண முடியாது. சீக்கிரத்திலேயே நடந்துள்ள அத்தனையும் அவளுக்கும் தெரிய வரத்தானே போகின்றது?

ஒருவேளை அவள் வெளியே மறைந்து நின்று ஒட்டுக் கேட்டிருந் தாளென்றால், அதைக் காட்டிக் கொள்ளாமல் வெகு துரிதமாக ஓடி மறைந்துமிருக்க வேண்டும். நான் வெளியே வந்தபோது கண்ணில் ஒருவரும் தட்டுப்படவில்லை. வரவேற்பறைக்கே திரும்பிப் போனேன் நான். நிக், நிமிர்ந்து உட்கார முயற்சித்துக் கொண்டிருந்தாள்.

''எ...எ...எ...எனக்குக் கொ...ஞ்...ச...ம்... பிராண்டி கொண்டு வந்து தர முடியுமா?''

அது மயக்கத்தை உடனே தணிக்கும் மருந்து. ஆகவே, ''நிச்சயமா'' என்றேன் நான்.

நான் அடுக்களைக்கு விரைந்தேன். எனக்கு தேவையானதைக் கண்டேன், எடுத்துக் கொண்டு திரும்பினேன். ஸ்பிரிட்டை ஓரிரு மடக்கு குடித்ததன் விளைவு அவளைப் புத்துணர்வுக்குள்ளாக்கியது.

அவள் வெளிறிப் போயிருந்த கன்னங்களில் நிறம் கூடியது. அவள் தலைமாட்டிலிருந்த குஷனை சற்று வசதியாக்கி விட்டேன்.

''நடந்ததெல்லாம் - ஓ, ரொம்ப கொடூரமானது'' என நடுநடுங்கினாள். ''எல்லாரும் - எல்லாமும் - ரொம்ப குரூரமானவை.''

''புரியுது. டியர், புரியுது.''

''இல்லை. உங்களுக்குப் புரியலே. புரியவும் செய்யாது. இவையத்தனையும் வேஸ்ட், வேஸ்ட். அது நானா இருந்திருக்கணும். ஆமாம்... அப்போ எல்லாருக்கும் நலமா முடிஞ்சிருக்கும்.''

''ஜுரம் கண்டவங்க மாதிரி அனத்தாதீங்க.''

பிறகு, அவள் திடுமென அழ ஆரம்பித்தாள். அமைதியான, நம்பிக்கையிழந்த, ஒரு சிறு குழந்தையின் மவுனக் குமுறலது. அதுதான் அவளுக்கு மிகச்சிறந்த நிவாரணி என அப்போது நான் உணர்ந்தேன். ஆகவே அவளுடைய கண்ணீரைத் துடைத்தெறியும் வேலையில் இறங்குவதை நான் தவிர்த்து விட்டேன்.

நடந்துள்ள கொடூரத்தின் வீச்சு சற்றே மட்டுப்பட்டவுடன் நான் ஜன்னல் வரை போய் நின்றுகொண்டு வெளியே எட்டிப் பார்த்தேன். வெளிப்படையாய் அலறிய சில குரல்களை நான் சில நிமிடங்களுக்கு முன்னால் கேட்டிருந்தேன். அவர்களனைவரும் இப்போது அங்கிருந்தனர். நடந்துள்ள துயரத்தை சுற்றி ஓர் அரை வட்டமாய் நின்று கொண்டிருந்தார்கள். தன் கட்டுக்குள் அவர்களனைவரையும் சற்று தள்ளி நிற்கும்படி வைத்திருந்தான் பொய்ரெட்.

இவற்றை நான் கவனித்துக் கொண்டிருக்கும்போதே இரண்டு யூனிபார்ம் போட்ட உருவங்கள் புற்தரையைக் கடந்தபடி இப்பக்கமாய் வந்து கொண்டிருந்தார்கள். போலீஸ் வந்தாயிற்று.

நான் ஓசையெழுப்பாது சோபாவிலிருந்த என்னுடைய இருக்கைக்கு நகர்ந்தேன். கண்ணீரில் தோய்ந்திருந்த அவளுடைய முகத்தை உணர்த்தினாள் நிக்.

''நான் இப்போ ஏதாவது உதவ வேண்டாமா?''

''நோ, டியர். வேண்டாம். அதையெல்லாம் பொய்ரெட் கவனிச்சுப்பான். அவன்கிட்டே விட்டுடுங்க.''

ஓரிரு நிமிடங்கள் பேசாதிருந்த நிக் பின் சொன்னாள்; ''பாவப்பட்ட மேக்கி. பாவப்பட்ட கிழ மேக்கி. தன் வாழ்நாள் முழுக்கவும் ஒரு

ஜீவராசியைக்கூட ரணப்படுத்தியறியாத ஆன்மா. அவளுக்கா இது நடக்கணும்? எனக்கென்னவோ நான்தான் அவளைக் கொன்னுட்டா மாதிரியிருக்கு. பேசாம அவ இடத்துல இருந்தவளை நான்தானே தந்தி போட்டுக்கூப்பிட்டேன்.''

நான் வருத்தம் தோய்ந்து மறுப்பாய் தலையசைத்துக் கொண்டேன். இத்தனை இளையவளால் எப்படி எதிர்காலத்தில் நடப்பவற்றையெல் லாம் முன்கூட்டியே அறிந்து வைக்க முடியும்? நிக்குடைய ஒரு நண்பர் வந்து இவளுடன் கூட தங்கினால் தான் ஆயிற்று என பொய்ரெட் அழுத்தமாக குறிப்பிட்டபோது, அவனுக்கே கூடத்தான், ஒரு மரணத் துக்கே சாசனமெழுதித் தருவதாய் எப்படி ஆருடம் தெரிந்திருக்கும்?

நாங்கள் பேசாமலேயே அமர்ந்திருந்தோம். வெளியே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறிந்துக் கொள்வதில் எனக்கு ஆர்வம் மிகுந்தது. ஆனால் நான் பொய்ரெட்டுக்குக் கொடுத்த வாக்கினைத் தட்டாமல் பாதுகாக்க, என்னிடத்திலேயே தங்கி விட்டேன்.

பொய்ரெட்டும் ஓர் இன்ஸ்பெக்டரும் கதவினைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தபோது ஏதோ மணிநேரங்கள் கடந்து போய் விட்ட உணர்வு ஏற்பட்டது. அவர்களுடன்கூட இன்னொருவரும் வந்தார். அவர் டாக்டர் கிரஹாம் என வெளிப்படையாகவே தெரிந்தது. அவர் உடனடியாக நேராய் நிக்கிடம் வந்து விட்டார்.

''எப்படி இருக்கீங்க மிஸ் பக்லே? இது உங்களுக்குத் தாங்க முடியாத ஒரு ஷாக்கா இருக்கணும்.'' அவருடைய விரல்கள் பேசியபடி அவளுடைய நாடித்துடிப்பைப் படித்தன. ''மோசமாயில்லே.''

என் பக்கமாய் திரும்பினார் அவர். ''அவ ஏதாவது சாப்பிட்டாளா?''

''கொஞ்சம் பிராண்டி'' என்றேன் நான்.

''எனக்கு ஒண்ணுமில்லே'' என்றாள் நிக், இப்போது சற்று துணிவு கொண்டவளாய்.

''சில கேள்விகளுக்கு பதில் சொல்லுமளவுக்கு, ம்?''

''யெஸ்.''

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒரு சின்ன இருமலோடு முன் வந்தார். கரத்தற்ற புன்முறுவலோடு அவரை வரவேற்றாள் நிக்.

''இந்த தடவை, நான் போக்குவரத்து விதியை மீறியதுக்காக நாம சந்திக்கலே'' என்று நினைவூட்டினாள் அவள்.

இருவரும் ஒருத்தருக்கொருத்தர் அறிமுகம் இல்லாதவர்கள் அல்ல என்பதை நான் கணக்கிட்டேன்.

''இது ரொம்ப சிக்கலான விஷயம், மிஸ் பக்லே'' என்றார் இன்ஸ்பெக்டர். ''நடந்ததுக்கு நான் மிகவும் வருந்தறேன். ஸாரி. எனக்கு மிகப்பிரபலமான பெயராய் விளங்கும் திருமிகு பொய்ரெட் இங்கே இருக்கார். இந்த சிக்கல்ல அவர் நம்ம கூடயிருப்பதற்கு நாம பெருமைப்படணும். ஆங்... மெஜஸ்டிக் ஓட்டல் மைதானத்துல நீங்க இருந்தபோது உங்களை நோக்கி ஒரு சுற்று துப்பாக்கி குண்டு சுடப்பட்டதாய் கொஞ்சமும் சந்தேகத்துக்கிடமின்றி ஊர்ஜிதமா சொல்றார் அவர். அப்படியா?''

நிக் ஒப்புதலாய் தலையசைத்தாள். ''அது ஏதோ ஒரு குளவினு தான் நான் ஆரம்பத்துல நினைச்சேன்'' என்றாள். ''ஆனா, அது, அப்படி கிடையாது.''

''அதுக்கு முன்னாடியும் சில வித்தியாசமான விபத்துகளை நீங்க எதிர் கொண்டிருக்கீங்க போல...?''

''ஆமாம். அதிலும், அடுத்தடுத்து அவை நடந்திருப்பது, ரொம்பவும் மாறுபட்டு தெரியுது.''

அவற்றை பற்றிய சிறு விளக்கத்தை முன் வைத்தாள் நிக்.

''இதையெல்லாம் தான் நானும் கேள்விப்பட்டேன். ஓ கே. அதெப்படி உங்களுடைய மேலங்கியை உங்க தோழி உடுத்திக் கொள்வது போல நேர்ந்தது?''

''வெளியே இடம்பெற்றுக் கொண்டிருந்த பட்டாசு கொண்டாட்டங்களைப் பார்ப்பதில் குளிர் ரொம்ப இருந்தது. நடுங்கிச்சு. அவளோட கோட் ஒன்றை எடுக்க ரெண்டு பேரும் உள்ளே வந்தோம். வந்ததும் நான் என்னோட மேலங்கியைக் கழற்றி இதோ இந்த சோபாவில் அப்படியே போட்டேன். பிறகு மாடிக்கு ஏறிப்போன நான் இப்போ போட்டுக்கிட்டிருக்கிற இதோ இந்த கோட்டை எடுத்துப் போட்டுக் கிட்டேன். என்னோட இன்னொரு ஃபிரண்ட் மிஸஸ் ரைஸுக்குத் தேவையான ஒரு கோட்டையும் அவளோட அறையிலிருந்து எடுத்துக் கிட்டேன். அது, கீழே, ஜன்னலுக்குப் பக்கத்துல தான் இப்பகூட இருக்கு. அப்போ, என்னை வெளியே கூப்பிட்டு, அவளோட கோட் எங்கேயிருக்குனு கண்டுபிடிக்க முடியலைனு மேக்கி குரல் கொடுத்தா.

அது கீழேயே தானிருக்கணும்னு நான் சொன்னேன். மறுபடியும் கீழேயே தேடினா அவ, அப்ப கூட அவளால எங்கேயிருக்குனு கண்டு பிடிக்க முடியலேனு அலறினா. அப்படினா அது கார்லயே இருக்கணும்னு சொன்னேன் நான். அவ எதிர்பார்த்தது கனமான கோட் - வெளியே அடிக்கிற கூதலைத் தாங்குமளவுக்கு தடிமனா. அதனால எங்கிட்டேயிருக்கிற கோட்டுல கனமான ஒண்ணை எடுத்துக்கிட்டு கீழே வரேன்னு சத்தமா சொன்னேன். அதனால என்ன... பரவாயில் லேனு சொன்ன அவ - கீழே கிடந்த என் மேலங்கி எனக்கு வேணாம்னா, அதையே அவ போர்த்திக் கொள்வதா சொன்னா. நிச்சயமா அப்படினு அங்கீகரிச்சு பதில் சொன்ன நான், அது பத்து மானும் கேட்டேன். ஓ, போதுமேனா அவ. அந்த மேலங்கிக் குளிருக்கு அடக்கமா இருக்கும்னா. அவளுக்கு ஏதாவது ஒண்ணு போர்த்திக்கத் தேவைப்பட்டிருக்கு. அப்ப சரினு சொன்ன நான், ஒரு நிமிஷத்துல கீழே வந்துடறேன்னு குரல் அனுப்பினேன். அப்படி நான் வெளியே வந்த போது ...''

குரல் உடைந்துப் போக... நிறுத்திக் கொண்டாள்.

''இப்ப நீங்க உடைஞ்சுப் போகாதீங்க, மிஸ் பக்லே. ஜஸ்ட், இதை மட்டும் சொல்லுங்க. உங்களுக்கு குண்டு வெடிப்பு ஓசை கேட்டுதா? அல்லது ஓசைகள்?''

நிக், மறுத்துத் தலையசைத்தாள். ''இல்லை. வெடிக்கும் பட்டாசுகள். மற்றும் உஸ்ஸ்ஸ்ஸென்று சீறும் ராக்கெட்டுகள். அவ்ளோ தான்.''

''இதுல தானிருக்கு'' என்றார் இன்ஸ்பெக்டர். ''இந்தக் களேபர சத்தத்துல ஒரு சுற்று குண்டு வெடிப்பு நிகழ்ந்தா அதை உங்களால நிச்சயமா கேட்க முடியாது தான். இந்தக் கேள்விக்கு பதில் தேடறதுல பொருள் கிடையாது. இப்படியெல்லாம் உங்க மேல தாக்குதல்கள் நடத்துவது யாராயிருக்கும்னு உங்களுக்குள்ளே ஏதாவது க்ளு இருக்கா? ஊகங்கள்?''

''சின்னதா கூட ஐடியா கிடையாது'' என்றாள் அவள். ''என்னால கற்பனை கூட பண்ண முடியலே.''

''விட்டுடுங்க'' என்றார் இன்ஸ்பெக்டர். ''ஏதோ கிறுக்குப் பிடிச்ச ஒரு பைத்தியக்காரனாத் தான் எனக்குப்படுது. இழுத்தடிக்கப் போகுது,

இது-சரி... இன்னிக்கு இதுக்கு மேல எந்தக் கேள்வியையும் உங்களைக் கேட்டுத் தொந்தரவு பண்ண நான் விரும்பலே, மிஸ். வார்த்தைகளில் சொல்வதற்கும் மேலா, நடந்துள்ளதற்கு நான் ரொம்பவும் வருந்தறேன்.''

இப்போது டாக்டர் க்ரஹாம் முன்வந்தார். ''நீங்க இனி மேற்கொண்டு இங்கே தங்க வேண்டாம், மிஸ் பக்லே'' என்றார் அவர். ''நடந்ததையெல்லாம் நானும் திரு பொய்ரெட்கிட்டே பேசி தெரிஞ்சுக்கிட்டேன். ஓர் அற்புதமான மருத்துவக் காப்பகம் எனக்குத் தெரியும். உங்க மனசுக்கு மோசமான ஷாக் ஏற்பட்டிருக்கு. அதனால இப்ப உங்களுக்கு மிக முக்கியமா தேவைப்படுவது - முழு ஓய்வு ...''

நிக்கின் கண்கள் தற்சமயம் பேசிக் கொண்டிருப்பவரின் மீது இல்லை. அவளுடைய பார்வை பொய்ரெட் பக்கம் போயிருந்தது. ''இது - வெறும் ஷாக்கால மட்டும் தானா?'' - அப்படியே பார்த்தபடி கேட்டாள் நிக்.

பொய்ரெட் இப்போது நிக்கினை நெருங்கியிருந்தான். ''பத்திரமான இடத்துல இருப்பதாய் நீ உணர வேண்டும் நிக். நானும், நீ, ஒரு பாதுகாப்பான இடத்துல தான் இருக்கேனு நிம்மதியாயிருக்கணும். அங்கே உன்னை நல்லபடியா கவனிச்சுக்க ஒரு நர்ஸிருப்பா. அவ உன்கூடவே தான் எப்பவும் இருப்பா. ராத்திரி பகலா. நீ எழுந்து பயத்துல அலறும்போது உறுதுணையா உன் கைக்கெட்டும் தூரத்துலேயே அவ இருப்பா - புரியுதா?''

''யெஸ்'' என்றாள் நிக். ''எனக்குப் புரியுது. ஆனா உங்களுக்குத் தான் ஒண்ணும் புரியலே. எனக்குத் துளி கூட பயம் கிடையாது. எந்த நிலைமையை எதிர்பார்த்தும் நான் பயப்படலே, ஓ கே? என்னை ஒருத்தர் கொலை பண்ணணும்னு விரும்பினா, அவங்க பண்ணிக்க லாம்.''

''உஷ்ஷ்ஷ்...'' என்றேன் நான். ''நீங்க ரொம்ப டென்ஷன்ல இருக்கீங்க.''

''உங்களுக்குத் தெரியாது. உங்கள்ல யாருக்கும் தெரியாது!''

''எனக்கென்னவோ திரு பொய்ரெட்டின் திட்டம் மிகச் சிறந்ததா தோணுது'' என்று தற்போது மிருதுவாய் டாக்டர் இடைபுகுந்தார்: ''நானே என் கார்ல உங்களைக் கூட்டிட்டுப் போறேன். இன்னிக்கு

ராத்திரி உங்களுக்கு முழு ஓய்வு உண்டாக சின்னதா மருத்துவமும் செஞ்சுடறேன். இப்போ என்ன சொல்றீங்க?''

''எனக்கு ஒண்ணுமில்லே'' என்றாள் நிக். ''உங்களுக்கெல்லாம் என்ன பிடிக்குதோ செய்ங்க. எதுவானாலும் எனக்கு ஓ கே.''

பொய்ரெட் தன் கையை அவளுடையதன் மீது பதித்தான். ''எனக்குத் தெரியும் மேடம். இப்போ நீங்க என்ன உணர்வீங்கனு எனக்குத் தெரியும். உங்களுக்கு முன்னாடி நெஞ்சடைத்து வெட்கித் தலைகுனிந்து நான் நின்னுக்கிட்டிருக்கேன். பாதுகாப்பதா சத்தியம் செஞ்சு தந்த என்னால, பாதுகாக்க முடியலே. நான் தோத்துட்டேன். நான் ஒரு மடையன். ஆனா ஒண்ணு மட்டும் நம்புங்க மேடம்... இந்த தோல்வியினால என் மனம் புழுங்கிப் புகைஞ்சுக்கிட்டிருக்கு. எந்த அளவுக்கு நான் துடிச்சுக்கிட்டிருக்கேன்னு மட்டும் உங்களால பிரிச்சறிய முடிஞ்சுதுனா, என்னை நீங்க மன்னிச்சுடுவீங்க. நிச்சயமா.''

''போகட்டும்'' என்றாள் நிக், இன்னமும், அதே உயிர்ப்பற்ற குரலில். ''உங்களை நீங்களே குற்றஞ்சுமத்திக்க வேணாம். அதுக்குத் தேவையே யில்லை. உங்களால முடிஞ்ச உச்சபட்சத்தை நீங்க செஞ்சீங்க. எனக்கு அது நல்லாவே தெரியும். இதுக்கு யாராலும் எதுவும் பண்ணியிருக்க முடியாதுனு எனக்கு விளங்குது. உங்களைவிட அதிகமா செயல் பட்டிருக்கவும் முடியாது. ஸோ, தயவுசெஞ்சு மனசொடிஞ்சுப் போயி டாதீங்க.''

''நீங்க ரொம்ப மேன்மையானவங்க, மேடம்.''

''இல்லை. நான்...''

இப்போது சிறு இடையூறு விளைந்தது. கதவு புயலாய் திறக்கப்பட உள்ளே ஜார்ஜ் சாலஞ்சர் நுழைந்துக் கொண்டிருந்தான்.

''என்ன இதெல்லாம்?'' என கத்தினான் அவன். ''நான் இப்பத்தான் வரேன். வாசல்ல போலீஸ்காரன். யாரோ இறந்துட்டதாகாத்து வாக்குல சேதி. என்ன இந்தக் கூத்தெல்லாம்? ஐயோ, கடவுளே - சொல்லுங்க. அது - அது - நிக் இல்லையாதே?''

அவன் குரலில் இருந்த பரிதவிப்பைக் கேட்பதற்கே நாராசமா யிருந்தது. அப்போது சட்டென நான் உணர்ந்தேன்... பொய்ரெட்டும் டாக்டரும், காட்சியிலிருந்து நிக்கை அப்படியே உறிஞ்சி மறைத் திருந்தனர்.

யாராவது அவனுக்கு பதில் தர அவகாசம் கொடுக்கப்படுவதற்கு முன், அவனே மறுபடியும் கேள்வியைத் திருப்பினான்: ''சொல்லுங்க - அது உண்மையாயிருக்கக் கூடாது - நிக், சாகலையே ம், சொல்லுங்க...''

''இல்லை நண்பா'' என்றான் பொய்ரெட், அமரிக்கையாய். ''அவ உயிரோட இருக்கா.''

சொல்லி விட்டு, பின்புறம் இருந்த அவள் தெரியும்படி விலகிக் கொண்டான் பொய்ரெட்.

ஒரு சில கணங்கள் நம்பிக்கையற்று அவளைப் பார்த்து முறைத்தபடி நின்றான் சாலஞ்சர். பின், குடி போதை கொண்டவனைப் போல குளறிப் பேசினான்: ''நிக் - நிக்.''

அப்போது சட்டென்று சோபாவுக்குப் பக்கத்தில் முட்டி போட்டு அமர்ந்த அவன், அவனுடைய முகத்தை அவள் உள்ளங்கைகளுக்குள் புதைத்து மறைத்துக் கொண்டு அமுக்கிய குரலில் கத்தினான்: ''நிக் - மை டார்லிங் - நீ தான் இறந்துட்டதா நான் நெனச்சேன்.''

நிக் உட்கார முயற்சித்தாள். ''என்ன ஆயிடுச்சு ஜார்ஜ்? முட்டாள் போல நடந்துக்காதே. நான் பாதுகாப்பாத் தானிருக்கேன்.''

அவன் தலையை நிமிர்ந்து சுற்றுமுற்றும் மிருகத்தனமாய் பார்த்தான். ''ஆனா யாரோ தவறியிருக்காங்க. போலீஸ்காரன் சொன்னான்.''

இதற்கு, ''ஆமாம்'' என்றாள் நிக். ''மேக்கி. பரிதாபத்துக்குரிய கிழ மேக்கி. ஓ!''

ஒரு சுழிப்பு அவள் முகத்தைத் திருகியது. பொய்ரெட்டும் டாக்டரும் முன்னுக்கு ஓடி வந்தனர். கிரஹாம் அவள் நடக்க உதவினார். இரு ஆண்களும் ஆளுக்கொரு பக்கமாய் அவளைத் தாங்கி நடத்தி அறையை விட்டு வெளியேற உதவினார்கள்.

''எத்தனை சீக்கிரமா நீங்க போய் படுக்கையில படுக்கிறீங்களோ அத்தனை நல்லது உங்களுக்கு'' என மருத்துவக் குறிப்பு தந்தார் டாக்டர். ''உங்களை நான் இப்பவே என் கார்ல அழைச்சுக்கிட்டுப் போகப் போறேன். மிஸஸ் ரைஸ்கிட்டே உடனடியா நீங்க கொண்டு போகத் தேவையான சாமான்களையெல்லாம் நான் ஏற்கெனவே பேக் பண்ண சொல்லிட்டேன்.''

அவர்கள் அறையை விட்டு மறைந்திருந்தனர். சாலஞ்சர் என்

கையைப் பிடித்தான்.

''எனக்கு ஒண்ணும் விளங்கலே. அவளை எங்கே கூட்டிட்டுப் போறாங்க?''

நான் விளக்கினேன்.

''ஓ! அப்படியா! ஆனா என்ன சோகமான காரியம் நடந்திருக்கு ஹேஸ்டிங்ஸ். ஓ, தாங்கலியே.''

''வந்து கொஞ்சம் குடியுங்க'' என்றேன் நான். ''நீங்க எல்லாருமே தூள் தூளா சிதறியிருக்கீங்க.''

''அது தான் சிறந்ததுனு நினைக்கிறேன்.''

நாங்கள் டைனிங் அறைக்குள் சேர்ந்திருந்தோம்.

கெட்டியான விஸ்கியையும் சோடாவையும் ஒன்றாய் கலக்கும் போது ''த பாருங்க'' என்றான் அவன். ''அது நிக்குனுதான் நான் நினைச்சேன்.''

கமாண்டர் சாலஞ்சரின் உணர்வுபூர்வமான வெடிப்பின் மீதே எனக்கு சந்தேகம் வந்தது. காதலை அதிகம் வெளிப்படையாய் காட்டும் காதலன் என்றுமே இருந்தது கிடையாது. யெஸ்!

*அத்தியாயம் 9*

# ஒன்று முதல் பத்து வரை

அடுத்து வந்த இரவினை நான் என் வாழ்நாளில் மறப்பேனா என்பது சந்தேகமே. சுய பச்சாதாபத்துக்கு பொய்ரெட் முழு இரையாகி விட்டிருந்தான். அது என்னை கதிகலங்க அடித்தது. அறையின் மேலும் கீழும் வேகவேகமாக நடந்து கொண்டு, என் ஆட்சேபணைகளை யெல்லாம் ஓர் ஓரம் தூக்கி வைத்து விட்டு, தன்னைத் தானே தலை முதல் கால் வரை சபித்துக் கொண்டிருந்தான் அவன்.

''தன்னைப் பற்றி ரொம்ப ஓசத்தலா தற்பெருமை கொண்டிருந்தா என்ன நடக்கும்? இது தான் நடக்கும். நான் தண்டிக்கப்பட்டு விட்டேன் - யெஸ். நான், ஹெர்குல் பொய்ரெட், தண்டிக்கப்பட்டு விட்டேன். நான் தான் எப்பவும் சரி என்ற என் எண்ணத்துக்குக் கிடைத்துள்ள சாட்டையடி.''

''அப்படியெல்லாம் கிடையாதுடா'' என நான் இடைசெருகிக் கொண்டேன்.

''ஆனா யார்தான்டா கற்பனை பண்ணியிருப்பாங்க - யாராலதான் கற்பனை பண்ண முடியும் - இப்படி ஒரு கொடூரத்தை? எல்லா முன் ஜாக்கிரதை நடவடிக்கைகளையும் நான் எடுத்தாச்சுனு நினைச் சிருந்தேன். கொலைகாரனைக் கூட நான் எச்சரித்திருந்தேன் ...''

''கொலைகாரனை எச்சரித்தியா?''

''கவனி. கவனம் முழுவதையும் நான் என் பக்கமா திருப்பி விட்டேன். யாருடைய? அவனுடைய! அந்த யாரோ ஒருவன் - அவனை, நான் சந்தேகப்படுகிறேன் என்பதை நல்லா குறித்துக் கொள்ளும்படி செய்தேன். கொலை செய்ய அவன் மறுபடி ஒரு முயற்சியை செய்வது ரொம்ப ஆபத்தானது என அவனை நான் உணரச் செய்தேன் - அல்லது

அப்படி அவனை நான் உணரச் செய்ததாய் நினைத்தேன். மேடமைச் சுற்றிலும் நான் அற்புதமான ஒரு தடுப்புச் சுவரினை எழுப்பி யிருந்தேன். ஆனா, அவன் அதுக்குள்ளேயே நழுவி நுழையறான்! படு தைரியமா - நம் கண்களுக்கெல்லாம் முன்னாடியே - அவன் அந்தத் தடுப்புச்சுவரில் கன்னமிட்டு உள்ளே நுழைஞ்சுடறான். நாம் எல்லாரும் இருக்கும்போதே, நாம் எல்லாரும் கண்கொத்தி பாம்பா எச்சரிக்கை யுடன் இருக்கும்போதே, அவன், அவனுக்கு வேண்டிய பொருளை எடுத்துக்கிட்டு ஓடிடறான். ஆஹ்...!''

''அவனுக்கு வேண்டியதை அவன் ஒன்னும் எடுத்துடலே'' - நான் நினைவுபடுத்தினேன்.

''அது தவறி விட்ட குறி தான் ஹேஸ்டிங்ஸ். ஆனா முயற்சி பண்ணி வெற்றியடைஞ்சுட்டான் இல்லே! என்னைப் பொறுத்தவரைக்கும் ரெண்டும் ஒண்ணு தான். ஒரு மனித உயிர் பறிக்கப்பட்டாச்சுடா - யார்து என்பது ஒரு பொருட்டே கிடையாது.''

''நெஜந்தான்'' என்றேன் நான். ''நான் இதைக் குறிப்பிடலே.''

''ஆனா, இன்னொரு பக்கத்துல பார்த்தா நீ சொல்றதும் உண்மை தான். அது தான் விஷயத்தை இன்னும் பலமா ஆபத்தாக்குது - பத்து மடங்கு ஆபத்தாக்குது - பன்மடங்கு ஆபத்தாக்குது! அவனைப் பொறுத்தவரைக்கும், அடைய வேண்டியதை அவன் இன்னும் அடையலே. விளங்குதா, என் நண்பா? இவ்வழக்கின் கோணம் மாற்றப் பட்டிருக்கு - இன்னும் ஆபத்தான திசையிலே. இதன் அர்த்தம்... ஓர் உயிர் இல்லே - ரெண்டு உயிர்டா, ரெண்டு உயிர் தியாகம் செய்யப் படும்.''

நான் கறாராய் சொன்னேன்: ''நீ இங்கேயே இருக்கும்போது - அது முடியாது.''

அவன் அப்படியே ஸ்தம்பித்தான், என் கையை இறுக்கமாய் முறுக்குவது போல முறித்தான்.

''நன்றி நண்பா நன்றி! நீ இன்னும் என்னை நம்பறியாடா... இந்தக் கிழவன் மேல இன்னும் நீ நம்பிக்கை வெச்சிருக்கியாடா! நீ எனக் குள்ளே புது உற்சாகத்தை... தன்னம்பிக்கையை செலுத்திட்டேடா. நான் செஞ்ச தவறை நானே நிவர்த்திப் பண்றேன் பார். ஏன்னா - ஒரு தவறு இருந்திருக்கு. இருந்திருக்கணும். வழக்கமா, அற்புதமா வரிசைக்

கிரமமா அடுக்கப்படும் என் ஊகங்கள்ல எங்கேயோ எப்படியோ சின்ன தவறு நடந்திருக்கணும். நான் மறுபடியும் துவங்கறேன். யெஸ், நான் ஆரம்பத்திலிருந்து துவங்கறேன். பார்... இந்த தடவை - நான் தோற்க மாட்டேன்.''

''அப்படின்னா நீ இன்னமும்...'' என்று துவங்கிய நான் கேட்டேன்: ''... நீ இன்னமும் நிக் பக்லேயின் வாழ்க்கை ஆபத்துல இருக்குனு நம்பறியா?''

''நண்பா... அப்புறம் வேற எந்தக் காரணத்தை மனசுல வெச்சுக் கிட்டு நான் அவளை மருத்துவக் காப்பகத்துக்கு அனுப்பினேன்?''

''அப்போ அவ அதிர்ச்சிக்கான மருத்துவத்துக்காக அனுப்பலியா...?''

''ஷாக்! ஒரு நர்ஸிங் ஹோம்ல தங்கியிருந்து அதனால ஷாக்கிலிருந்து விடுபடுவதை விட, வீட்டுல தனிமையில நிம்மதியா இருந்தே ஒருத்தரால அதிர்ச்சியிலிருந்து விடுபட்டுவிட முடியும். ஃபினாயில் வாசனை அடிச்சுக்கிட்டேயிருக்கும் தரை, நர்ஸுகளின் வளவள வம்பு, தட்டில் வரும் ஆறின உணவு, முடிவற்ற கழுவும் ஓசை - இதெல்லாம் அதிர்ச்சியை எரிச்சலாக்கித்தான் தருமே தவிர வேற செய்யாது. நோ, நோ. அனுப்பினது பாதுகாப்புக்கு - பாதுகாப்பு தவிர வேற எதுக்கும் கிடையாது. நான் டாக்டரை என் நம்பிக்கைக்குப் பாத்திரமானவரா ஆக்கிக்கிட்டேன். அவர் ஒத்துக்கிட்டார். தேவையான ஏற்பாடுகளைப் பண்ணித் தரேன்னார். ஒருத்தரும் நண்பா - அவளோட மிக நெருங்கிய தோழர் கூட - அவளைச் சந்திக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். நீயும் நானும் மட்டும்தான் அனுமதிக்கு தகுதியானவர்கள். 'டாக்டரின் ஆணை' - இது தான் போர்வை! யாரும் மறுக்க முடியாத வசதியான வாக்கியம்.''

''ஆமாம்'' என்றேன் நான். ''ஆனா...''

''ஆனா, என்ன ஹேஸ்டிங்ஸ்?''

''ஆனா... இதை, மாசக்கணக்கா தொடர முடியாதே...?''

''மிகச் சரியான எச்சரிக்கை. ஆனா இது நாம கொஞ்சம் இளைப்பாற நேரம் ஒதுக்கித் தருது, இல்லையா? மேலும் நம்முடைய அணுகு முறையின் பிரயாணம் மாறியிருக்குனு உனக்கே விளங்கணும், ம்?''

''எந்த வகையில?''

''நம்முடைய ஆரம்பக் குறிக்கோள், மேடமுடைய பாதுகாப்பை

உறுதி செய்வதா இருந்தது. ஆனா இப்ப நமக்கிருக்கிற இலக்கு மிகவும் சிம்பிளான ஒன்று - நமக்கு மிகப் பழக்கப்பட்ட ஓர் இலக்கு. அது, கொலைகாரனைத் தேடிப் பிடிக்க வேண்டியதாகும்; இதை விட ஓரங்குலம் அதிகமும் கிடையாது... ஓரங்குலம் கம்மியும் கிடையாது.''

''இதைப் போய் நீ சிம்பிள்ங்கிறியா?''

''நிச்சயமா இது சுலபமானதுதான். நான் முன்பொரு முறை சொன்னதுபோல, கொலைகாரன், குற்றத்தை செய்ய ஒப்புக்கொண்டு இறங்கியிருக்கிறான். இப்போ திறந்த வெளியில வந்து நின்னுக் கிட்டிருக்கான்.''

''உனக்கு விளங்கலையா ...?'' என்ற நான் சற்று தயங்கினேன். பின்னர் தொடர்ந்தேன்: ''போலீஸ் தான் கரெக்ட்டுனு உனக்கு விளங்கலையா? ஏதோ பித்துப்பிடிச்சு அலையற ஒரு கிறுக்குப் பைத்தியக்காரனோட கோரத்தாண்டவம் இதுன்னு உனக்குப் படலியா?''

''அப்படிப்பட்ட ஒன்னு கிடையாது இதுன்னு - எனக்கு படு துல்லியமா தெரியும்.''

''அப்போ, உனக்குள்ளே ...''

நான் நிறுத்தி விட்டேன். நான் பேச வேண்டிய வாக்கியத்தை சரியாக அவனே தொடர்ந்தான், ஆழ்ந்த தொனியோடு.

''அப்போ எனக்குள்ளே, அந்தக் கொலைகாரன் மேடமுடைய நெருங்கிய வட்டத்துக்குள்ளேயே இருக்கான்னு எண்ணமிருக்கானு கேட்க விரும்பறே, ஆங்? யெஸ். ஆமாம், நண்பா. அப்படித்தான்.''

''ஆனா, நேற்றைய இரவு, இந்த சாத்தியக்கூறினை, முழுக்கவும் பெருக்கித் தள்ளியிருக்கணுமே. நாம எல்லாரும் அங்கேயே தானிருந்தோம், மேலும் ...''

அவன் குறுக்கிட்டான்.

''நம்மகூட இருந்த ஒருத்தர், அங்கேயிருக்கிற மலை உச்சி வரை மெல்ல நழுவி போய்ட்டு வரலேனு உன்னால சத்தியம் பண்ண முடியுமா, ஹேஸ்டிங்ஸ்? அங்கே இருந்த நபர்கள்ல யாராவது ஒருத்தரை நீ சுட்டிக்காட்டி அவரை அங்கிருந்த முழு நேரமும் நீ பார்த்துக்கிட்டே இருந்தேனு உன்னால உறுதியா சொல்ல முடியுமா?''

அவனிடமிருந்து வந்து விழுந்த வார்த்தைகளில் அடிக்கப்பட்ட

நான், "மு-டி-யா-து" என்றேன் மெதுவாய். "அப்படி என்னால சொல்ல முடியும்னு எனக்கே தோணலே. அது ஒரு கரும் இருட்டு வேளை. நம்மள்ல எல்லாருமே அங்குமிங்கும் போய் வந்துக்கிட்டுத் தானிருந்தோம். பற்பல சந்தர்ப்பங்கள்ல மிஸஸ் ரைஸ், லாஸரஸ், நீ, க்ராஃப்ட், வைஸ் என எல்லாரையும் பார்த்தேன். ஆனா இவங்க எல்லாரையும் அங்கே நான் எப்பவும் பார்க்கலே."

பொய்ரெட் அவனது தலையை ஒப்புதலாய் அசைத்துக் காட்டினான். "எக்ஸாக்ட்லி. சொற்பமான ஒருசில நிமிடங்கள் யதேஷ்டம்... அவன் நழுவி, போய்ட்டு, திரும்ப. அந்த ரெண்டு பொண்ணுங்களும் வீட்டுக்குள்ளே போகுதுங்க. கொலைகாரன் ஒருத்தரும் கவனிக்காத வண்ணம் நழுவி, அங்கே வராண்டாவில இருந்த தடிமனான மரத்துக்குப் பின்னாடி ஒளிஞ்சுக்கிறான். மிஸ் நிக் பக்லே - அப்படினு அவன் நினைச்சுக்கிறான் - ஃப்ரெஞ்சு ஜன்னல் வழியா வெளியேறி அவனுக்கு மிக நெருக்கத்துல கடந்துப் போறா. அவன் உடனுக்குடன், அடுத்தடுத்து, மூன்று சுற்று குண்டு வெடிப்புகளை நிகழ்த்திடறான்..."

"மூணு?" - நான் தடுக்கவியலாதவனாய் இடைபுகுந்தேன்.

"ஆமாம், இந்த தடவை அவன் ஏமாந்துட விரும்பலே. உடம்புல மூணு குண்டுகளை நாம பார்த்தோம்."

"அடப்பாவி. இந்த முயற்சி, ஆபத்தானதில்லே?"

"ஒரு குண்டு ஏற்படுத்தவல்ல விளைவுகளோடு ஒப்பிடும்போது, இதுல ஆபத்து கம்மி. 'மவுஸர் பிஸ்டல்' வகை அதிக ஓசையெழுப்புவது கிடையாது. வெடிச்சுக்கிட்டிருந்த பட்டாசு வெடிச்சத்தம் போலத்தான் இதுவும் ஓசை தரும். இந்த சத்தங்களோட மிக அழகா ஒத்துப் போயிடும்."

"நீ அந்த பிஸ்டலைக் கண்டெடுத்தியா?" - கேட்டேன் நான்.

"இல்லை. அதுல தான் ஹேஸ்டிங்ஸ், இந்த விஷயத்துல வெளியாள் எவனோட கைவரிசையும் கிடையாது என்கிற என்னுடைய ஆட்சேபிக்க முடியாத சாட்சியமே அடங்கியிருக்கு. மிஸ் பக்லேவுடைய துப்பாக்கி அதனிடத்திலிருந்து எடுக்கப்பட்டதுக்கு ஒரு காரணம் தான் இருக்க முடியும்னு நாம முடிவுக்கு வந்திருந்தோம், நினைவிருக்கா? அது - அவங்களுடைய மரணத்துக்கு தற்கொலை எனும் சாயம் பூச."

''ஆமாம்.''

''அது தான் ஒரே சாத்தியமான காரணம், ஓ.கே? ஆனா இப்போ இனிமே தற்கொலை எனும் பாசாங்கு கிடையாது. அந்தப் போலித் தன்மையைக் காட்டி நம்மளை இனிமே ஏமாத்தக் கூடாதுனு கொலை காரனுக்குத் தெரியும். சொல்லப்போனா, நமக்கு என்ன தெரியுமோ, அது அவனுக்கும் தெரியும்.''

பொய்ரெட்டின் இறுதி விடையை ஆமோதித்து என் முகம் பிரதிபலித்தது.

''அந்த பிஸ்டலை வெச்சுக்கிட்டு அவன் என்ன பண்ணியிருப் பான்னு நீ நினைக்கிறே?''

இதற்கு பொய்ரெட் தோள்களைக் குலுக்கினான். ''அது பற்றி அபிப்ராயம் சொல்வது ரொம்ப கடினம். ஆனா அருகிலேயே கடல் வாகா இருந்ததை நாம மறந்துடக் கூடாது. நல்ல வேகமான தட்டெறிதல் போல துப்பாக்கியெறிதல் - பிஸ்டல் மூழ்கிடுது - பிறகு மீட்கவே முடியாத அளவுக்கு கடலோட கரைஞ்சுடுது. இப்படித்தான்னு நாம அறுதியிட்டு சொல்ல முடியாது - ஆனா நானா இருந்திருந்தா இதைத் தான் செஞ்சிருப்பேன்.''

இது தான் நிதர்சனம் என்று அவன் குரலில் இருந்த தொனி என்னை சற்று நடுங்க வைத்தது. ''அவன் - அவன் - ஒரு தப்பான ஆளைக் கொன்னுட்ட விஷயத்தை -உணர்ந்துட்டான்னு சொல்ல வர்றியா?''

''இல்லே. அவனுக்கு இந்த விஷயம் தெரிஞ்சிருக்காது என்பதுல நான் நிச்சயமா இருக்கேன்'' என்றான் அவன் கறாராய். ''உண்மை தெரிய வரும்போது அது அவனுக்கு ஒரு துன்ப அதிர்ச்சியா இருக்கும். முகத்துல அதை காட்டாம மறைச்சு ஒண்ணுமே நடக்காதது போல இருப்பதென்பது - அவ்வளவு சுலபமா இருக்காது.''

சட்டென எனக்கு எலென்னின் அந்நியத்தனமான நடவடிக்கை நினைவுக்கு வந்தது. அவளுடைய விளக்கவொண்ணா முகமூடியை நான் பொய்ரெட்டிடம் உடனே விளக்கினேன். இதில் அதிக ஈடுபாடு கொண்டவனாய் அவன் தெரிந்தான்.

''அப்படியா - செத்தது மேக்கி என்பதுல அவ பொறிக்குள்ளே மாட்டிக்கிட்ட அதிர்ச்சியைக் காட்டினாளா?''

''பெரும் ஆச்சரியம்.''

''இது அசாதாரணமாயிருக்கு. மேலும், எதிர்பாரா விதமாய் ஒரு துக்கம் நடந்திருப்பது அவளுக்கு துளியும் ஆச்சரியமாயில்லே என்பதையும் கவனி. யெஸ்... இதுல நாம கவனிக்க வேண்டிய எதுவோ இருக்கு. யாரிவ, இந்த எவெலன்? ரொம்ப சாந்தமா... ஆங்கிலேயனுக்கே உரிய மிகுந்த மட்டு மரியாதையோட? ஒருவேளை இவ தான் அந்த ...'' இந்த இடத்தில் உடைந்தான் அவன்.

''ஒரு வேளை இவளை நீ அந்த விபத்துகளோடு இணைத்து பார்க்க நினைச்சேன்னா...'' என்ற நான், ''... அந்த மாபெரும் பாறாங்கல்லை நகர்த்தி உருட்ட ஹெர்குலஸ் போன்ற ஆண் தோள் வலிமை அவசியம்'' என சுட்டிக் காட்டினேன்.

''அப்படி ஒரு தேவையும் கிடையாது ஹேஸ்டிங்ஸ். அது ஒட்டுல தொங்கிக்கிட்டிருந்த பெரிய சைஸ் கல்லு. அதை நெம்ப வேண்டிய தெம்பிருந்திருந்தா, அதுவே போதும். ஓ யெஸ், அதை யார் வேணும்னாலும் செஞ்சிருக்கலாம்.''

மெல்லமாய் அறையின் மேலும் கீழும் நடந்துக் கொண்டிருந்ததைத் தொடர்ந்தான் அவன்.

''நேற்று கடைசி வீட்டுல இருந்த யாராயிருந்தாலும் அவங்க சந்தேகப்பட்டியலுக்குள் வந்துடறாங்க. ஆனா வந்து போன விருந்தாளிகள் - ம்ம், நோ. அதுல ஒருத்தரா இருக்கும்னு எனக்குப் படலே. இதுல அவங்கள்ல ஒவ்வொருத்தரும், வெறும் பார்வை யாளர்கள் - என்னைப் பொறுத்த வரைக்கும். அவங்களுக்குள்ளும் வீட்டுக்கு வந்திருந்த அந்த இளைய காரிகைக்கும் எந்தவிதமான நெருக்கமும் கிடையாது.''

''சார்ல்ஸ் வைஸ் இருந்தான்'' - நான் குறிப்பிட்டேன்.

''ஆமாம். நாம அவரை மறந்துடக் கூடாது. அவர், தர்க்கரீதியா, நம்முடைய சந்தேகப்பட்டியல்ல நெம்பர் 1 இடத்தைப் பிடித்துள்ள வர்.'' உதவியற்ற நிலைமையை இப்போது பிரதிபலித்த அவன் என் எதிரிலிருந்த ஓர் இருக்கையில் அவனை அப்படியே போட்டுக் கொண்டு உட்கார்ந்தான். ''வெற்றிடம். இது தான் நாம எப்போதுமே திரும்பத் திரும்ப வந்து முட்டிக் கொண்டு நிற்குமிடம்! சரி... அடுத்து, இலக்கு! இந்த க்ரைமை நாம முழுசா புரிஞ்சக்கணும்னா, கொலைக் கான இலக்கு நமக்குத் தெரிஞ்சாகணும். இந்த கேஸ்ல, இதுல தான்

ஹேஸ்டிங்ஸ் நான் தொடர்ச்சியா தோற்றுப் போறேன். மேடம் நிக்கினை வெட்டி சாய்க்கணும்னு யார்கிட்டே இலக்குத் தென்படுது? முட்டாள்தனமான சந்தேகங்கள் வரை என்னை நானே இட்டுச் சென்று தேடியாச்சு. நான், ஹெர்குல் பொய்ரெட், படு கேவலமான கற்பனைகள் வரை தாழ்ந்து அலசியாச்சு. மட்டரகமான ஒரு க்ரைம் த்ரில்லர் கதையில வருவது போன்ற குணாதிசயங்களையெல்லாம் நானும் தரிச்சுப் பார்த்தாச்சு. தாத்தா - ஓல்ட் நிக் - அவர் பணத்தை சூதாடி சூதாடியே அழிச்சவர். அப்படித்தானா... இது உண்மைதானா? - இப்படி ஒரு கேள்வியை நானே கேட்டுக்கிட்டேன். மாறாக, அத்தனை பணத்தையும் அவர் எங்கேயாவது பதுக்கி வெச்சிருப்பாரோ? கடைசி வீட்டுக்குள்ளேயே அது எங்கேயாவது மறைத்து வைக்கப்பட்டிருக்குமோ? அங்கேயே எங்காவது தரைக்குள்ளே புதைச்சு வைக்கப்பட்டு? எனக்கே சொல்றதுக்கு வெட்கமாயிருக்கு... இந்த எண்ணத்தை மனசுல வெச்சுக்கிட்டுத்தான் கடைசி வீட்டினை யாராவது வாங்க வந்தாங்களானே நான் கேள்வி கேட்டேன்!''

''ஆனா பொய்ரெட்...'' என ஆர்வமாய் அழைத்த நான், ''சொல்லப் போனா இது ஒரு பிரகாசமான ஐடியா'' என்றேன் நான். ''அதுக்குள்ளே ஏதாவது இருந்தாலும் இருக்கலாம்.''

பொய்ரெட் உறுமினான். ''நீ இப்படித்தான் சொல்வே - நான் எதிர்பார்த்தேன்! உன்னோட த்ரில்லர் விரும்பும் மூளைக்கு, புதைக்கப்பட்டுள்ள பொக்கிஷங்கள் எனும் தலைப்பு கொண்டாட்டமாயிருக்கும் என்பது நான் எதிர்பார்த்தது தான்.''

''ஏன், ஏன்... ஏங்குறேன்...?! அப்படி எதுவும் ஏன் இருக்கக் கூடாதுங்கறேன்...?!''

''மேடமோட அப்பனைப் பற்றி நான் இன்னும் மோசமான, தரமற்ற கற்பனைக்கெல்லாம் போனேன். அவர் ஒரு உலகம் சுற்றும் மனிதர். சும்மா ஒரு பேச்சுக்கு! அப்படி சுத்தும்போது அவர் ஒரு நகையைத் திருடிடறார். இறைவனின் கண் அப்படினு வெச்சுக்கோயேன். பொறாமை பிடிச்ச பூசாரிக் கூட்டம் எப்படியோ பின்தொடர்ந்து உண்மையைக் கண்டுபிடிச்சுடுது. மொறைக்காதேடா... இதே பொய்ரெட் தான், இந்த அளவுக்கு சத்தற்ற கற்பனைகளுக்கெல்லாம் இடம் கொடுத்தது!''

''இந்த அப்பங்காரனைப் பற்றி இன்னும் சில ஊகங்கள் எனக்கு உண்டு'' - அவன் மேற்கொண்டு பேசியபடியிருந்தான்: ''இது சாத்திய மான ஒரு ஐடியாவா படுது. ஊருரா சுத்திக்கிட்டிருக்கும்போது, அந்த மனுஷன், ஏதாவது ரெண்டாவது கலியாணம் முடிச்சிருப்பானா? இந்த சார்ல்ஸ் லைலை விடவும் வேற யாராவது நெருக்கமா சொத்துரிமை கொண்டாட முடியுமா? இப்படியேயிருந்தாலும், ஹேஸ்டிங்ஸ், இது நம்மளை ஒரு மூலையில கொண்டு போய் முடக்கத்தான் செய்யுதே தவிர வேற கிடையாது. இங்கே சொத்துனு கொண்டாட ஒரு மண்ணும் கிடையாது எனும் அதே நெருக்கடியில தான் நாம போய் நிக்கறோம்.

''இப்படி எந்த சாத்தியக்கூறையும் நான் ஒதுக்கிடலே. லாஸரஸ் மூலமா முன்மொழியப்பட்டதா மேடம் நிக்கே சொன்ன தொகையைக் கூட நான் விட்டு வைக்கலே. நினைவிருக்கா உனக்கு? தாத்தாவோட படத்தை வாங்கிக் கொள்வதா வந்த முன்மொழிதல். ஒரு சிறந்த நிபுணனுக்கு சனிக்கிழமை அன்று தந்தியடிச்சிருந்த நான், அவனை வந்து அந்தப் படத்தை மதிப்பீடு செய்து தரும்படி சொல்லியிருந்தேன். அந்த ஆளை உள்ளே விடும்படிதான் காலையில மேடமுக்கு நான் ஒரு நோட் அனுப்பியிருந்தேன். ஒரு வேளை, அந்தப்படம் பல்லாயிரம் பவுண்டுகள் மதிப்புள்ளதா இருந்தா...?''

''லாஸரஸ் போன்ற பணக்காரங்க ...''

''அவர் ஒரு பணக்காரரா? தோற்றங்கள் தான் எல்லாமும் கிடையாது ஹேஸ்டிங்ஸ். அரண்மனை போன்ற ஷோரூம், லாபகரம் போல தோற்றமளிக்கும் பிஸினெஸ் என்று தோன்றினாலும், சில வியாபாரங்கள் நெஜத்துல அழுகிப்போன அஸ்திவாரத்து மேல இருக்கும், தெரியுமா? அப்போ அந்த முதலாளி என்ன பண்ண முடியும்? சுத்திச்சுத்தி ஓடி எல்லாம் தன்னோட கெட்ட நேரம்னா கதறிக் கிட்டிருப்பான், ஆங்? கிடையாது. மாறாக ஒரு ஆடம்பர கார் வாங்குவான். சாதாரணமா செலவழிப்பதை விட கொஞ்சம் அதிகமா செலவழிப்பான். பகட்டா வாழறதா காட்டிப்பான். இதெல்லாம் - கடனுக்கு, தெரிஞ்சுக்கோ. ஆனா, நினைவுச்சின்னம் போல நடத்தப் படும் சிறப்பான பிஸினெஸ், சில ஆயிரம் பவுண்டுகள் கையோட கிடைச்சா போதும் எனும் அவசரத்துல சுக்குநூறா உடைஞ்சு மறைஞ்சுடும் - சில சமயங்கள்ல.

''சரிசரி, நீ என்ன சொல்ல வரேன்னு தெரியுது...'' என்று என் மறுப்பை ஒதுக்கித் தள்ளிபடி பேசினான் அவன்: ''இதெல்லாம் கற்பனைக்குக்கூட சாத்தியமில்லாததுனு சொல்ல வர்ரே, இல்லியா? ஆனா, பழிவாங்கும் பூசாரி மற்றும் புதைக்கப்பட்ட பொக்கிஷம் அளவுக்கு இது குழந்தைத்தனமானது கிடையாதுனு ஒத்துக்கிறியா? இங்கு நடக்கும் சில விஷயங்களோட, இது, அப்படியே ஒத்துத்தான் போகுது. இதுல நாம எதையும் ஒதுக்க முடியாது - எதையும். உண்மைக்குப் பக்கத்துல நம்மைக் கொண்டு போகவல்ல எதையும்.''

ஜாக்கிரதையாய் அவனுக்கு முன்னாலிருந்த மேஜை சாமான்களை அழகாய் வரிசைப்படுத்தினான். பிறகு அவன் பேசியபோது அவன் குரல் ஆழ்ந்தும், முதல் முறையாய், சாந்தமாயும் இருந்தது.

''இலக்கு!'' - சொன்னான் அவன். ''இதையே நாம மறுபடியும் அலசுவோம். சாந்தமா. வரிசைக்கிரமமா. ஒரு, முறையோட. ஆரம்பிக்க, ஒரு கேள்வி. கொலை ஒன்று நிகழ, எத்தனை வகையான இலக்குகள் இருக்கு? என்னென்ன இலக்குகள், ஒரு மனித ஜீவனை இயக்கி, இன்னொரு மனித ஜீவனை வாங்கும்படி பண்ணுது?''

''தற்போதைக்கு உளவெறி பிடிப்பதால் நடக்கும் கொலைகளை ஒதுக்கி வைப்போம். ஏன்னா, அப்படிப்பட்ட வெறியன் கையில நம் கேஸ் அடங்கிக் கிடக்கலே என்பதுல நான் ரொம்பவும் ஸ்திரமா யிருக்கேன். கட்டுப்படுத்த முடியாத குரோதத்தால அந்தக் கணத்துல நடந்து விடும் கொலை வகைகளையும் நாம இப்போதைக்கு ஒத்தி வைக்க வேண்டியுள்ளது. இது, திட்டமிட்ட, ஈவிரக்கமற்ற கொலை. இப்படிப்பட்ட கொலைகளை என்ன வகையான இலக்குகள் இயக்கி விடுகின்றன?''

''முதல்ல வருவது - லாபம். மேடம் நிக் செத்தால், அதனால யார் அதிபட்ச லாபம் ஈட்டுவது? நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ. உடனடியா சார்ல்ஸ் வைஸை நாம இறக்கி நிறுத்தலாம். அவருக்கு சொத்து ரீதியா உடைமைகள் வருது - அவை ஒண்ணும் அவ்வளவு பெருந்தொகையை ஈட்டித்தராது என்றாலும், ஏதோ வருது. அடகுக்காரனுக்குத் தர வேண்டியதைத் தந்துட்டு அதே இடத்துல சின்னதா ஒரு குடில் கட்டிக்கிட்டு... இந்த மாதிரி வெளிப்படையாகவே அவன் லாபம் ஈட்டிடலாம். இது சாத்தியமானதே. ஒரு வேளை அந்த

இடம் அவனது குடும்பம் வசித்த இடமாயிருந்து, அந்த இடத்தில் வாழ்வதன் மீது அவனுக்கு அடங்கா மனத்தாழத்து ஆசை இருந்தால், நிக்கின் சாவு இன்னும் கூட அவனுக்குத் தேவையான ஒன்றாக இருக்கும். இது, சில மனித ஜீவன்களுக்குள், அகற்றவே முடியாத ஆழமான பதிவாகப் பதியப்பட்டிருக்கும். அப்படியானால், இவ்வகை தாகம், இறுதியில ஒரு கொலையில் கொண்டு போய் விட்டிருக்கும் கதையெல்லாம் எனக்கு நல்லா தெரியும். ஆனா, மிஸ்டர் வைஸைப் பொறுத்தமட்டில், அப்படியெல்லாம் எந்த மோட்டிவும் எனக்குப் படலே.''

''இன்னொரு நபர்... மேடம் நிக் மரணிப்பதால முழு லாபம் அடையக்கூடிய ஒரு நபர்... அவர், திருமதி ரைஸ். ஆனா, இங்கேயும், கிடைக்கக்கூடிய தொகை ரொம்ப ரொம்ப கம்மியான ஒன்றாத் தானிருக்கும். இவங்க ரெண்டு பேரையும் தவிர, மேடம் நிக்கின் மரணத்தால லாபம் அடையும் எவரும், எனக்குத் தெரிஞ்சு இல்லே.

''இன்னோர் இலக்கு என்ன? வெறுப்பு - அல்லது வெறுப்பாய் உருமாறி விட்ட காதல். காதல் கொலை. இங்கு நமக்கு உதவ வருவது மேடம் கிராஃப்ட் சொன்ன குறிப்பு. சார்ல்ஸ் வைஸ் மற்றும் கமாண்டர் சாலஞ்சர் ஆகிய இருவரும் மேடம் நிக் மேல காதல்ல இருப்பதா அவங்க சொன்னாங்க.''

''அந்த ரெண்டாவது காதலை நாமளே கூட கண்கூடா பாரத்தோம்னு நினைக்கிறேன்'' என்று குறிப்பிட்டேன் நான், சிறு புன்னகையோடு.

''ஆமாம். இதயமே அவதான் என்கிற மாதிரியில்லே காட்டிக் கிட்டான், அந்த உன்னத கடல் பிரயாணி! இப்ப கவனி... தான் ஏமாற்றப் பட்டு விட்டோம்னு ஒரு வேளை சார்ல்ஸ் வைஸ் நினைச்சா, அவனோட அந்த உறவுக்காரப் பொண்ணை மற்றவனுக்கு விட்டுக் கொடுக்கிறதுக்கு பதிலா கொன்னுப் போட்டு விடுவதே மேல் எனும் அளவுக்கா அவனோட பாதிப்பு வீரியமாயிருக்கும்?''

''இது நாடகத்தனமாயிருக்கு'' என்றேன் நான் சந்தேகமாய்.

''இங்கே ஆங்கிலேய உறவுமுறையில இந்த அளவுக்கு காதல் தீவிரம் கிடையாதுனு நீ சொல்வே. நானும் அதை ஒத்துக்கறேன். இருந்தாலும் கூட ஹேஸ்டிங்ஸ்... ஆங்கிலேயர்கள் சிலருக்கும் கீழை நாடுகள் போல உணர்ச்சிவயப்படும் குணமிருக்கும். அதிலும் சார்ல்ஸ் வைஸ் போன்ற

ஆட்கள் கிட்டே அப்படிப்பட்ட குணாதிசத்தை நிச்சயம் எதிர்பார்க்க லாம். அவன் ஓர் அமுக்கப்பட்ட இளைஞன் - அதாவது தன் உள் உணர்வுகளை அத்தனை சீக்கிரத்தில் வெளியுலகுக்குக் காட்டி விடாத வகை. அப்படிப்பட்டவர்களுக்குள் தான் வன்முறை உணர்வு அதிக மிருக்கும். உணர்ச்சி வெடிப்பின் காரணமாக இடம்பெற்று விடவல்ல கொலைகளுடன் கமாண்டரை நான் ஒருபோதும் பொருத்திப் பார்க்கவே மாட்டேன். ம்ம், சாலஞ்சர் அப்படிப்பட்ட வகையே கிடையாது. ஆனா இந்த சார்ல்ஸ் வைஸைப் பொறுத்தமட்டில்... இது சாத்தியமே. இருந்தாலும் இந்த தர்க்கம் என்னை முழுசா திருப்திப் படுத்தலே.''

''கொலைக்கான மற்றுமோர் இலக்கு - பொறாமை. இதை, நான், மேலே கடைசியா சொன்னதிலிருந்து பிரிச்சு வெச்சுப் பார்க்கிறேன். ஏன்னா, பொறாமை என்பது, எப்பவுமே காமம் சார்ந்தே இருக்கணும் என்பது விதி கிடையாது. எதையாவது அடைய வேண்டும் என்பதுல பொறாமை இருக்கலாம் - தானே முதல் என்றிருக்க வேண்டும் என்பதுல பொறாமை இருக்கலாம். இது போல ஏதாவது ஒரு பொறாமை வகை இக்கொலைக்கு ஜவாப்தாரியா இருக்குமா? மேடம் மேல பொறாமை கொள்ள யார்கிட்டே காரணம் தென்படுது? இன்னொரு பெண்? இதுல மிஸஸ் ரைஸ் மட்டும் தான் ஒரே பெண்... அவங்களுக்கும் மேடமுக்கும் இடையே நமக்குத் தெரிஞ்சு எவ்விதமான போட்டி பொறாமையும் தென்படலே. ஆனா, இது, நமக்குத் தெரிஞ்சு! இருவருக்குள்ளேயும் ஏதாவது இருந்தாலும் இருக்கலாம்.''

''கடைசியா - பயம். ஒரு வேளை, மேடம் நிக், வேறு யாருடைய வெளியே தெரியக்கூடாத ரகசியம் எதையாவது, தனக்குள்ளே பதுக்கி வெச்சிருக்காங்களா? அது வெளியே தெரிஞ்சுட்டா, அந்த நபரோட வாழ்க்கையே சின்னாபின்னமாகி விடுமளவுக்கு, அது அத்தனை மோசமானதா இருக்குமா? இப்படி ஏதாவது காரணமிருந்தா, அது போல ஒண்ணு தனக்குத் தெரியும் என்பதே மேடமுக்குத் தெரியாது என்று நாம நிச்சயம் சொல்லலாம். இதுவும், நாம சொல்லலாம்... அவ்ளோ தான்; நிச்சயம் கிடையாது. இது தான் காரணம்னா, நம்ம பாடு ரொம்ப கஷ்டமா ஆயிடுது ஹேஸ்டிங்ஸ். ஏன்னா, அவங்க

அறியாமலே கொலைக்கான க்ளுவை அவங்க கையில வெச்சிருப்ப தால, அது என்ன என்பதை எடுத்து நம்மகிட்டே சொல்ல... ம்ம், அவங்களால முடியாது.''

''இதுகூட சாத்தியம்னா நீ நினைக்கிறே?''

''ஓர் அனுமானம் தான். ஒப்புக்கொள்கிற மாதிரியா ஒரு தியரி அல்லது துப்பு, எனக்கு எங்கேயும் எதிலேயும் தென்படாததாலே, நான் இது நோக்கி செலுத்தப்பட்டுள்ளேன். மற்ற எல்லா சாத்தியக்கூறுகளை யும் நீ ஒதுக்கித் தள்ளிட்ட பிறகு எது மிஞ்சியிருக்கோ அதன் பக்கமா நீ தங்கிடறே - மீதியெல்லாம் காரணமா இல்லாததால் - இது தான் காரணம்னு.........''

பிறகு வெகு நேரம் அவன் மவுனமாக இருந்தான்.

உறுதியாய், உள்ளுக்குள் போவதிலிருந்து தன்னைத்தானே விடுவித்து எழுந்துக் கொண்டவன், ஒரு தாளைத் தன் பக்கமாய் உருவி இழுத்துக் கொண்டு, எழுதத் துவங்கினான்.

''நண்பா, நான் ஒரு பட்டியலை உருவாக்கிக்கிட்டிருக்கேன். இது, மேடம் பக்லேவைச் சுற்றிலுமிருக்கும் ஆட்களுடைய பட்டியல். இந்தப் பட்டியலுக்குள்ளேயே, நான் சரியா அனுமானிச்சிருக்கும் பட்சத்தில், கொலைகாரனின் பெயருமிருக்கும்.''

இருபது நிமிடங்கள் வரை எடுத்துக் கொண்டு அவன் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தான். பிறகு அத்தாளை என்னை நோக்கி வீசியெறிந்தான். ''பார் நண்பா... ஏதாவது விளங்குதானு சொல்லு.''

கீழே நான் தருவது தான் அத்தாளிலிருந்தது:

1. எலென்
2. அவளுடைய தோட்டக்கார கணவன்
3. இவர்களுடைய குழந்தை
4. க்ராஃப்ட்
5. திருமதி க்ராஃப்ட்
6. மிஸஸ் ரைஸ்
7. திரு லாஸரஸ்
8. கமாண்டர் சாலஞ்சர்
9. திரு சார்ல்ஸ் வைஸ்
10. ?

பின்குறிப்புகள்:

**1. எலென்:** சூழ்நிலை இவளை சந்தேகத்துக்குள்ளாக்குகின்றது. கொலை பற்றி கேட்டதும் இவளிடம் காணப்பட்ட குணாதிசயம் மற்றும் பேசியவை. நடந்த விபத்துகளை நடத்த வாய்ப்புகள் உள்ளன... பிஸ்டல் பற்றி தெரிந்து கொள்ள சந்தர்ப்பங்கள் இருந்திருக்கும்; ஆனால் காரை பிரேக் இல்லாமல் ஆக்க இவளால் முடிந்திருக்குமா என்பது சந்தேகமே, மேலும் கொலை போன்றவை, இவள் நிலையை விட மிக உயரமான இடத்தில் இருப்பவை. *இலக்கு:* வெளியே தெரியாத ஏதோ காரணத்தால் உள்ளூர பகை இல்லாதபட்சத்தில், இல்லவே இல்லை. *பின்குறிப்பு:* இவளுடைய பிறப்பு வளர்ப்பு பற்றிய விசாரணைகள் தேவை. நிக்குடனான தினசரி உறவும் அலசப்பட வேண்டும்.

**2. அவளுடைய தோட்டக்கார கணவன்:** மேலே உள்ள நிலையே தான். காரை சேதப்படுத்த வாய்ப்புகள் பிரகாசம். *பின்குறிப்பு:* சந்தித்தே ஆக வேண்டும்.

**3. இவர்களுடைய குழந்தை:** ஒதுக்கி விடலாம். *பின்குறிப்பு:* சந்தித்தே ஆக வேண்டும். விலைமதிப்பற்ற தகவல் ஏதாவது தரக்கூடும்.

**4. க்ராஃப்ட்:** நாங்கள் பார்த்தபோது படுக்கையறை செல்லும் படிக்கட்டுகளில் ஏறிக்கொண்டிருந்தார் என்பதுதான் பெருத்த சந்தேகத்தை விளைவிக்கின்றது. தயாராய் ஒரு விளக்கத்தையும் தந்தார். அது உண்மையாயிருக்கலாம். உண்மையாய் இல்லாமலும் இருக்கலாம்! *இலக்கு:* ம்ம்.

**5. திருமதி க்ராஃப்ட்:** சந்தகங்கொள்ள வைக்கும் சூழல் ஏதும் தென்படவில்லை. *இலக்கு:* ம்ம்.

**6. திருமதி ரைஸ்:** முழு வாய்ப்பும் இருந்திருக்கின்றது. நிக்கை ஒரு கோட் கொண்டு வரும்படி கேட்டதே இவள்தான். நிக் ஒரு பொய் சொல்பவள் என்ற கருத்தைத் திணித்தவள்... மேலும் அவள் சொன்ன விபத்துகள் நம்பகமற்றவை என்ற நிலைப்பாட்டையும் ஏற்படுத்திய வள். விபத்துகள் நடந்தபோது டேவிஸ்டாக்கில் இவள் இருந்திருக்க வில்லை. எங்கே இருந்தாள்? *இலக்கு:* லாபம்? ரொம்ப கம்மி. பொறாமை? இருக்கலாம், ஆனால் அப்படி எதுவும் தெரியவில்லை. பயம்? இதுவும் இருக்கலாம், ஆனால் அப்படி எதுவும் தெரியவில்லை. *பின்குறிப்பு:* இதெல்லாம் பற்றி நிக்குடன் பேசிப் பார்க்க வேண்டும்.

அப்போது இவ்விஷயத்தில் ஏதாவது ஒளி படர்கிறதா என கவனிக்க வேண்டும். இவருடைய திருமண பந்தம் சம்பந்தமாய் கூட ஏதாவது இருக்கலாம்.

*7. திரு லாஸரஸ்:* இவர் மீது பொதுவான சந்தேகங்கொள்ள வாய்ப்பிருக்கின்றது. படங்களை வாங்கிக் கொள்ள முன் வந்திருக்கிறார். காரின் பிரேக்குகள் நன்றாயிருந்ததாக சொல்லியிருக்கிறார் (மிஸஸ் ரைஸ் சொன்னது படி). வெள்ளிக்கிழமைக்கு முன்னாலேயே இங்கெங்காவது பக்கத்திலேயே இருந்திருக்கலாம். *இலக்கு:* அந்தப் படம் மூலம் ஏதாவது லாபம் கிடைக்காதவரை, ம்ம். பயம்? அப்படியேதுமிருக்காது. *பின்குறிப்பு:* செயின்ட் லூ வந்து இறங்குவதற்கு முன்னால் லாஸரஸ் எங்கிருந்தார் என கண்டுபிடி. இவருடைய கம்பெனியான லாஸரஸ் அண்ட் சன்ஸின் நிதிநிலைமை பற்றி கண்டு வை.

*8. கமாண்டர் சாலஞ்சர்:* சந்தேகங் கொள்ளும்படி ஏதுமில்லை. வீட்டின் அருகாமையிலேயே அந்த முழு வாரமும் இருந்திருப்பதால், விபத்துகளுக்கு அதிக சாத்தியம் தென்படுகின்றது. கொலை நடந்து அரை மணி கழித்துதான் வந்து சேர்ந்தார். *இலக்கு:* ம்ம். தென்படவில்லை.

*9. திரு வைஸ்:* ஒட்டல் தோட்டத்தில் குண்டு சுடப்பட்டபோது இவர் ஆபீஸில் இருந்திருக்கவில்லை... இதனால் சந்தேகம் வலுக்கின்றது. நல்ல சந்தர்ப்பம் அமைந்திருந்தது. கடைசி வீட்டினை விற்பது பற்றிய அறிக்கையெல்லாம் சந்தேகத்துக்குட்பட்டவை. அமுக்கப்பட்ட குணநலம். பிஸ்டல் பற்றி தெரிந்து வைத்திருந்திருக்கக் கூடும். *இலக்கு:* லாபம்? சிறிது. காதல் அல்லது வெறுப்பு? இவருடைய குணநலனை வைத்துப் பார்க்கும்போது சாத்தியமே. பயம்? சாத்தியமில்லை. *பின்குறிப்பு:* யாருக்கு அடகு வைக்கப்பட்டது என கண்டுபிடி. வைஸின் அலுவலக நிலைமையைக் கண்டு வை.

*10.?* பத்தாவதாய் ஓர் ஆள் இருக்கலாம். உதாரணத்துக்கு - ஒரு வெளியாள். அப்படியானால் முன்னால் சொல்லப்பட்டுள்ள யாருடனாவது இணைப்பில்லாமல் முடியாது. அப்படியானால், அந்த இணைப்பு 1, 4 மேலும் 5 அல்லது 6 இவர்களுடனிருக்க வேண்டும். அப்படியொரு பத்தாவது ஆள் மட்டுமிருந்து விட்டால், அவனுடைய

இருப்பு பின்வருவனவற்றை விளக்கி விடும்: 1. கொலை நடந்ததில் எவெலினிடம் காணப்பட்ட கம்மியான ஆச்சரியம் மற்றும் அவளடைந்த இனிமையான திருப்தி. (ஆனால், இந்த திருப்திகூட, அவளைப் போன்ற வேலைக்காரக் கூட்டத்துக்கு பக்கத்து வீட்டில் விழும் ஒரு சாவின் மீது இயற்கையாய் எழும் ஒருவித எதிர்பார்ப்பு கலந்த கிளர்ச்சியாகக் கூடயிருக்கலாம்). 2. க்ராஃப்ட் மற்றும் அவருடைய மனைவி ஆகியோர் இங்கு தங்க வந்ததற்கான காரணம். 3. மிஸஸ் ரைஸின் ரகசியம் வெளியாகி விடுமோ எனும் பயம் அல்லது பொறாமைக்கான இலக்கினை விளக்கலாம்.

நான் படிப்பதையே பொய்ரெட் பார்த்த வண்ணமிருந்தான். ''இது ஓர் அற்புதமான உழைப்பு'' என்றேன் நான் கதகதப்பாய். ''இது, எல்லா சாத்தியக்கூறுகளையும் மிகத் தெளிவா எடுத்து வைக்குது.''

''ஆமாம்'' என்றான் அவன் சிந்தனையோடு. தாளை என்னிட மிருந்து பெற்றுக் கொண்டான். ''ஒரேயொரு பெயர் மட்டும் கண்ணுக்கு முன்னால பூதாகாரமா தெரியுது ஹேஸ்டிங்ஸ். சார்ல்ஸ் வைஸ். அவருக்குத் தான் சிறப்பான வாய்ப்புகள் இருந்திருக்கு. அவருக்கு நாம ரெண்டு இலக்குகளைத் தந்திருப்பதையும் கவனி.''

''ஆமாம். அவர் தான் நாம ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் வெளிப்படையா தெரியும் நெம்பர் ஒன் சஸ்பெக்ட்.''

''இதுவேயும் ஒரேயொரு சங்கதி அவருக்கு எதிரா வந்து நிக்குதுடா'' என்றான் திடீரென்ற எரிச்சலோடு. ''கொலை செய்யப்பட்டிருக்கும் அசாத்திய தைரியம்! இது ஆரம்பத்திலிருந்து தனித்துவமா தெரியுது. இதனால தான், நான் சொன்னது மாதிரி, இலக்கு வெளிப்படையா தெரிஞ்சுடக் கூடாது.''

''ஆமாம். இதையே தான் நீ ஆரம்பத்துல சொன்னே.''

''அதையே தான் நான் இப்பவும் சொல்றேன்.''

திடுமென உருவான வெறியோடியங்கிய அவன், மேசைமேலிருந்த எழுதிய தாள்களை ஒரே சுருட்டாக சுருட்டி பூமியில் வீசினான்.

''எதுக்குடா இப்படி...'' என நான் ஆச்சரியப்பட்டு சொல்ல வாயெடுக்குமுன் ''நோ'' என்று அலறி விட்டான் அவன். ''நோ. அந்தப் பட்டியல் ஒரு வெத்து வேட்டு. இருந்தாலும், அது, என் சிந்தனையைச் சுத்திகரிச்சிருச்சு. வரிசையாகவும், ஒழுங்காகவும்! ஆமாம்... வழக்கை

இப்படி அடுக்கிப் பார்த்தால்தான் விடை கிடைக்கும். நம்முன் இருக்கும் சாட்சிகளை, தீர்க்கமாயும் செம்மையாயும் நுட்பமாயும் சரிவர அடுக்கணும். இது தான் முதல் ஆரம்பக்கட்டம். இதற்கு அடுத்த கட்டம்...''

''?''

''அடுத்த கட்டம் - உளவியல் சார்ந்த தேடல். சைக்காலஜி. மனித மூளையின் சாம்பல் நிற செல்கள் தான் தர்க்கரீதியா சிந்திக்க உதவுபவை யாம்... அவற்றை நாம சரியா பயன்படுத்த வேண்டிய கட்டமிது! இப்போதைக்கு, ஹேஸ்டிங்ஸ், நீ படுக்கைக்குப் போவது சிறந்ததுனு நினைக்கிறேன்.''

''மாட்டேன்'' என்றேன் நான். ''நீயும் போற வரைக்கும் நான் தூங்கப் போக மாட்டேன். உன்னை நான் இப்படியே தனியா விட முடியாது.''

''நன்றியுள்ள தோழன்டா நீ! ஆனா தெரிஞ்சுக்கோ ஹேஸ்டிங்ஸ்... உன்னால நான் சிந்திக்க உதவ முடியாது. அதைத் தான் நான் இப்பப் பண்ணப் போறேன் - சிந்திப்பது.''

இப்போதும் நான் மறுத்துத்தான் தலையசைத்தேன்.

''நீ என்கூட ஏதாவது விஷயத்தை விவாதிக்க நினைக்கலாம்...''

''ஒழி ஒழி. நீயொரு உன்னத நண்பன். அப்போ தயவுசெய்து அந்த ஈஸி-சேரிலாவது போய் சாய். என்னை விடு.''

இதனை நான் ஒப்புக் கொண்டேன். தற்சமயம் நாங்களிருந்த அறை மிதக்க ஆரம்பித்தது... பின் முழுக ஆரம்பித்தது. தூக்கக் கலக்கம்! இந்த மயக்கத்தில் நான் கடைசியாய் பார்த்தது: கீழே கசக்கி வீசப்பட்டிருந்த காகிதங்களைப் பொறுப்பாய் பொய்ரெட் எடுத்து அங்கிருந்த குப்பைக்கூடையில் ஒப்படைப்பதை.

பிறகு நான் தூங்கிப் போயிருக்க வேண்டும்.

*அத்தியாயம் 10*

# நிக்கின் ரகசியம்

நான் எழுந்திருக்கும் போது பகலாகியிருந்தது.

முன்னிரவில் நான் எங்கே பார்த்தேனோ அதேயிடத்தில் உட்கார்ந்திருந்தான் பொய்ரெட். அவன் உட்கார்ந்திருந்த அபிநயம் கூட அப்படியே தானிருந்தது... ஆனால் அவன் முகம் மாறியிருந்தது. எனக்கு மிகப்பிரபலமான வகையில் அவனுடைய கண்கள் வித்தியாசமான பச்சை நிறங்கொண்டு பூனையின் கண்களைப் போல மினுமினுத்துக் கொண்டிருந்தன.

எழுந்து நெட்டைக்குத்தலாய் உட்கார முடியாவண்ணம் சிக்கலாயும் இறுக்கமாயும் அசௌகரியமாகவும் உணர்ந்தேன். இந்த வயசான காலத்தில் போய் சேரில் படுத்துத் தூங்கு எனும் ஆலோசனை எனக்குத் தரப்பட்டிருக்கக் கூடாது. ஆனால், படுக்கப்போகும் போது எத்தனை துள்ளலான மனோநிலையுடன் போனேனோ அதே நிலையுடன் எழுந்தேன் நான்.

''பொய்ரெட்'' என கத்தலாய் அழைத்தேன். ''நீ எதையாவது கண்டுபிடிச்சுட்டியா?'' என்றேன்.

ஒப்புதலாய் தலையசைத்தான். முன்னால் வளைந்து வந்த அவன், டேபிளில் தாளங்களிட்டான்.

''சொல்லு ஹேஸ்டிங்ஸ்... மொதல்ல, இந்த மூணு கேள்விகளுக்கு நீ பதில் சொல்லு. *சமீப காலமா ஏன் மேடம் நிக் சரிவர தூங்கறதில்லே? அவங்க எதுக்காக கறுப்பு நிறத்துல ஈவினிங் டிரஸ் வாங்கியிருக்கணும் - அவங்களுக்குக் கறுப்பே பிடிக்காத போது? நேற்றிரவு அவங்க எதுக்காக 'இப்போ எனக்கு வாழ்க்கையே பிடிக்கலையே' அப்படினு சொன்னாங்க?''*

நான் முழித்தேன். இக்கேள்விகளெல்லாம் வழக்கிலிருந்து தள்ளியிருப்பவையாக தோன்றியது.

''இக்கேள்விகளுக்கு பதில் சொல்லு ஹேஸ்டிங்ஸ், ம்!''

''வெல் - முதல் கேள்வியைப் பொறுத்த வரைக்கும், கொஞ்ச காலமாகவே கவலையா இருப்பதா அவங்க சொல்லியிருக்காங்க.''

''வெகு சரி. அப்போ, எதைக் குறித்து அவங்க கவலைப்பட்டுக் கிட்டிருந்தாங்க?''

''அந்தக் கறுப்பு உடை - வெல்... எல்லாருமே ஒரு கட்டத்துல மாற்றத்தை விரும்பறாங்க.''

''கலியாணமானவனாயிருந்தாலும், உனக்கு பொம்பளைங்க சைக்காலஜியைப் பாராட்டத் தெரியலேடா. கலர்ல ஒரு பொண்ணு தான் நல்லாயில்லேனு நினைச்சுட்டான்னா, கலர் துணிகளையே அவ ஒதுக்க ஆரம்பிச்சுடுவா.''

''அப்புறம் கடைசி கேள்வி - வெல், அப்படிப்பட்ட ஷாக்குக்குப் பிறகு ஒருத்தர் இயற்கையா சொல்லக்கூடிய வசனம் தானது.''

''இல்லை நண்பா... அது இயற்கையா சொல்லக்கூடிய ஒரு வசனமே கிடையாது. தன்னோட உறவுக்காரப் பொண்ணு கண்ணுக்கு முன்னாடி மூட்டையா கிடப்பதைப் பார்த்து அதிர்ச்சியில அறையப்படுவது; அதுக்காக தன்னைத்தானே நொந்துக் கொண்டது, இப்படி எல்லாமே சரி தான். ஆனா அந்த வர்ணனை - ம்ம், அதை வாடிக்கையான ஒண்ணா ஏத்துக்க முடியாது. வாழ்க்கையில தேய்ஞ்சு ஓஞ்சுப் போயிட்ட ஓர் உணர்வோடு... இனி வாழ்க்கையே தனக்கு ருசியற்ற ஒன்று என்ற உணர்வோடு அதை சொன்னாங்க. அதுக்கு முன்னாடி ஒரு தடவை கூட இப்படிப்பட்ட ஒரு பூரண வெறுப்பை அவங்க காட்டினதே கிடையாது. அவங்க துணிச்சலா இருந்தாங்க, யெஸ்; எதிர்த்து நிற்க சொடுக்குப் போட்டு தயாரா யிருந்தாங்க - ஆனா அப்புறமா அந்தப் பிரளயம் வெடிச்சவுடன்தான் அவங்க பயப்படறாங்க. பயம் - குறிச்சுக்கோ. ஏன்? ஏன்னா வாழ்க்கை என்பது அவங்களுக்கு அத்தனை ருசிகரமாயிருந்திருக்கு; அதனால அவங்க சாக விரும்பலே. ஆனா இந்த மரணத்துக்குப் பிறகு, வாழ்க்கையின் சாரமற்று விட்டதைப் போன்ற ஒரு நிலையில் நிக் - நோ! அவங்க அப்படி கிடையவே கிடையாது. டின்னருக்கு முன்னாடி கூட

அப்படிப்பட்ட ஒரு விரக்தி நிலைமையில அவங்க இல்லை. இங்கே, ஹேஸ்டிங்ஸ், நமக்கு, ஒரு உளவியல் மாற்றம், அதாவது சைக்க லாஜிக்கல் சேஞ்ச், இருக்குடா. இதுதான் விறுவிறுப்பைக் கூட்டுது. எது அவங்களுடைய வாழ்க்கை பற்றிய நிலைப்பாட்டையே இப்படி மாற்றியிருக்கும்?''

''அவங்களோட உறவுக்காரப் பொண்ணோட மரணம் தந்த அதிர்ச்சி.''

''ஆனா எனக்கு ஆச்சரியமாயிருக்கு. அது, அவங்களைப் பேச விடாம மரத்துப் போக வெச்ச ஓர் அதிர்ச்சியே. ஆனா ஒரு வேளை இந்த மாற்றம் இதுக்கு முன்னாடியே இருந்திருந்தால்? அப்போ, இதற்கு வேற ஏதாவது காரணமா இருக்க முடியுமா?''

''அப்படி எதுவும் எனக்குத் தெரியாது.''

''யோசி ஹேஸ்டிங்ஸ். உன்னோட மூளையின் சின்னச்சின்ன சாம்பல் செல்களை இயக்கி விடு.''

''என்னால முடியலேடா...''

''எப்போ நமக்கு அவங்களை முழுசா கவனிக்கக் கடைசி சந்தர்ப்பம் அமைஞ்சது?''

''வெல், என் நினைவுக்குத் தெரிஞ்சு, டின்னர்ல.''

''வெரி சரி. அதுக்குப் பிறகு, அவங்க வெறுமனே வந்த பார்வை யாளர்களை வரவேற்பதைத் தான் பார்த்தோம். இது ஒரு சராசரி வழக்கம். டின்னரின் இறுதியில என்ன நடந்தது, ஹேஸ்டிங்ஸ்?''

''அவங்க டெலிபோன் பக்கமா நகர்ந்தாங்க'' - நான் மெல்லமாய் சொன்னேன்.

''வாடா வா, நீ கடைசியா அந்த கட்டத்துக்கு சரியா வர்றே. அவங்க டெலிபோனுக்குப் போனாங்க. அப்புறம் அவங்களை ரொம்ப நேரம் காணலே. அத்தனை இடைவேளை, ஒரு டெலிபோன் அழைப்புக்கு ரொம்ப ஜாஸ்தி. யார் அவங்க கூட டெலிபோன்ல பேசினது? பேசின வங்க என்ன சொல்லியிருப்பாங்க? அவங்க உண்மையாவே டெலிபோன் பண்ணியிருப்பாங்களா? அந்த இருபது நிமிடங்கள்ல என்னென்னெல்லாம் நடந்ததுனு நாம கண்டுபிடிக்கணும் ஹேஸ்டிங்ஸ். எனக்கென்னவோ அதுல நாம தேடும் துப்புகள் இருக்குமோனு தோணுது.''

''அப்படியாடா நினைக்கிறே? நெஜமா?''

''ஆமாண்டா. ஆரம்பத்திலிருந்தே, மேடம் எதையோ நம்ம கிட்டே முழுக்க சொல்லாம மறைச்சு வெக்கிறாங்கனு நான் சொல்லிட்டு வரேன். அதுக்கும் கொலைக்கும் எந்தத் தொடர்பும் இருக்காதுனு அவங்க நினைக்கிறாங்க - ஆனா, நான், ஹெர்குல் பொய்ரெட், அவங்களைவிட சிறப்பா எல்லாத்தையும் அறிஞ்சவன். அதுக்குத் தொடர்பிருக்கணும். ஏதோ ஒரு இணைப்புத் துண்டு காணவில்லைனு எனக்கு ஆரம்பத்திலிருந்தே சந்தேகமிருக்கு. அப்படி ஓர் இணைப்பு மட்டும் காணாமல் போகலைனா - எனக்கு இந்த முழு சமாச்சாரமும் உள்ளங்கை நெல்லிக்கனியா தெரிஞ் சிருக்கும். அப்படி பட்டவர்த்தனமா தெரியாததாலே, நண்பா, இந்த மர்மத்தின் திறவுகோலே கண்ணுக்குப் புலப்படாமலிருக்கும் அந்த இணைப்புதான்! நான் நினைப்பது சரி தான்னு, ஹேஸ்டிங்ஸ், எனக்குத் தெரியும்.''

''ஆக, எனக்கு அந்த மூன்று கேள்விகளுக்கான விடைகள் தெரிஞ் சாகணும். அதுக்குப் பிறகு, அதுக்குப் பிறகு, எனக்கு, மெதுமெதுவா விஷயங்கள் தெரிய வரும்.........''

இறுகிப் போயிருந்த என் கால்களை நீட்டி சரி செய்ய எழுந்த நான், ''ஒரு ஷேவ் மற்றும் குளியல்'' என்றேன்.

குளித்து முடித்து விட்டு வேறு உடைகளை மாற்றிக் கொண்டதும் தேவலாம் என உணர்ந்தேன். இரவு நேரத்துக் குழப்பங்கள் உண்டு பண்ணியிருந்த இறுக்கம் தளர்ந்ததைப்போலத் தோன்றியது. காலை சிற்றுண்டி சாப்பிட டைனிங் டேபிளுக்கு வந்த நான் சூடாய் ஒரு கோப்பை காபி என்னுடைய சக்தியை புதுப்பித்துத் தரும் என உணர்ந்தேன்.

செய்தித்தாளை நோட்டம் விட்டேன். பெருசாய் சேதியொன்று மில்லை... மைக்கேல் ஸெட்டானின் மரணம் நிஜமே என்ற ஊர்ஜிதத்தைத் தவிர. இதே போல, நாளை, 'பட்டாசு வெடித்துக் கொண்டாடிய பார்ட்டியில் இளம் பெண் மர்மமான முறையில் மரணம்' என்றொரு முக்கிய சேதி வருமோ என எண்ணி வியந்தேன் நான்.

நான் டிபன் சாப்பிட்டு அப்போது தான் முடித்திருப்பேன்...

ஃப்ரெட்டரிக்கா ரைஸ் என் டேபிள் வரை வந்தாள். கறுப்பு நிற மெல்லிய பாவாடையும் வெள்ளை காலர் வைத்த சட்டையும் போட்டிருந்தாள் அவள். அவளுடைய வெள்ளைத் தோலழகு எப்போதையும் விட இப்போது தூக்கலாயிருந்தது.

''நான் திரு பொய்ரெட்டைப் பார்க்கணும், கேப்டன் ஹேஸ்டிங்ஸ். அவர் இன்னும் மேல இருக்காரா? உங்களுக்குத் தெரியுமா?''

''உங்களை இப்பவே கையோட நான் மேலே கூட்டிட்டுப் போறன்'' என்றேன் நான். ''அவன் வரவேற்பறையில இருப்பான்.''

''தேங்க் யூ.''

''குழப்பமான தூக்கமில்லாம, நிம்மதியா தூங்கியிருப்பீங்கனு நெனைக்கிறேன்'' என்றேன் நான், இருவரும் டைனிங் அறையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தபோது.

''அது ஒரு ஷாக்'' என்றாள் அவள், ஆழ்ந்த குரலெடுத்து. ''ஆனா எனக்கு அந்தப் பரிதாபத்துக்குரிய பொண்ணைத் தெரியாது. அதனால நிக் அளவுக்கு பாதிப்பு இல்லே.''

''இந்தப் பொண்ணை நீங்க இதுக்கு முன்னால பார்த்ததே கிடையாதுனு நினைக்கிறேன்...?''

''ஒரு தடவை - ஸ்கார்-பாரோ பகுதியில பார்த்திருக்கேன். நிக்குடன் சாப்பிட வந்திருந்தாள்.''

''அவங்களோட அம்மா அப்பாவுக்கு, பாவம், இது ஒரு பேரிடியா இருக்கும்.''

''தாள முடியாத இடியா.''

இதை அவள் உணர்ந்தெல்லாம் சொல்லவில்லை. அகந்தை பிடித்தவளாயிருக்க வேண்டும் என எண்ணிக் கொண்டேன். அவள் சம்பந்தப்பட்டிராத எதுவும் அவளுக்கு முக்கியமானதாய்ப் படுவதில்லை.

சிற்றுண்டியை முடித்திருந்த பொய்ரெட் செய்தித்தாளைப் படித்தபடி உட்கார்ந்திருந்தான். அவனுக்கே உரிய படு பாந்தமான சாந்தத்தோடு ரைஸை வரவேற்றான். அவள் உட்கார ஒரு நாற்காலியையும் இழுத்துப் போட்டான்.

சின்ன சத்தற்ற புன்னகையோடு இதற்கு நன்றி சொன்ன அவள் உட்கார்ந்துக் கொண்டாள். அவளுடைய இரு கைகளும் நாற்காலியின் தத்தம் கைப்பிடிகளில் அமர்ந்திருந்தன. நெட்டைக்குத்தலாய்

உட்கார்ந்து, எதிரேயிருப்பவற்றை நேர்பார்வை பார்த்தபடியிருந்தாள் அவள். உரையாடலுக்குள் அவள் விரைந்து நுழையவில்லை. அவளுடைய தனிமைத்தன்மையும் நிழலாய் இருந்த நிலைப்பாடும், சிறு அச்சம் உண்டாக்குபவையாய் இருந்தன.

ஒரு வழியாய், ''மிஸ்டர் பொய்ரெட்'' என்றவள், ''நேற்றிரவு நடந்த கூத்து முழுக்கவும், அதே விஷயத்தின் பகுதி தான் என்பதுல சந்தேகமே கிடையாதா? - என்ன சொல்ல வர்றேன்னா, குறி வைக்கப்பட்ட இரை, நிக் தானா?'' என கேட்டாள்.

''சந்தேகமே கிடையாதுனு தான் நான் சொல்வேன்.''

ஃப்ரெட்டரிக்கா முகம் சற்றே வாடியது. ''நிக்குக்கு வசீகரமான வாழ்க்கை வாய்ச்சிருக்கு.''

அவள் குரலின் அடியில் என்னவென என்னால் விளங்கிக் கொள்ள முடியாத ஏதோ ஒரு சுழற்சி தெரிந்தது.

''சிலருக்குத் தான் அப்படியொரு லக் அமையும்னு சொல்வாங்க'' - குறிப்பிட்டான் பொய்ரெட்.

''இருக்கலாம். அதை எதிர்த்துப் போராடுவதென்பது சுத்த மடத் தனம்.''

இப்போது அசூயை மட்டுமே அவள் குரலில் இருந்தது. சில நொடி களுக்குப் பிறகு அவளே தான் தொடர்ந்தாள்: ''நான் உங்ககிட்டே மன்னிப்புக் கேட்டுக்கறேன், திரு பொய்ரெட். நிக் சார்பாகவும். நேத்து ராத்திரி வரைக்கும் நான் நம்பவேயில்லே. இத்தனை பயங்கரமான ஆபத்துனு நான் கனவு கூட காணலே.''

''அப்படியா மேடம்?''

''ஒவ்வொண்ணையும் வெகு ஜாக்கிரதையா கையாளணும்னு இப்ப விளங்குது. நிக்கின் உடனடி வட்டத்துக்குள் வரும் நண்பர்கள் அனைவரும் சந்தேகப்பட்டியலிலிருந்து விலக்க முடியாதுனு நினைக் கிறேன். கோமாளித்தனம்... ஆனா வேற வழி கிடையாதே. நான் சொல்றது சரி தானே, திரு பொய்ரெட்?''

''நீங்க ரொம்ப புத்திசாலி, மேடம்.''

''அன்னிக்கு, டேவிஸ்டாக் பற்றி என்கிட்டே நீங்க சில கேள்விகள் கேட்டீங்க, பொய்ரெட். நீங்களே இப்பவோ நாளைக்கோ கண்டு பிடிச்சுடும் நிலை இருப்பதால, நானே இப்போ உங்ககிட்டே

உண்மையை சொல்லிடறேன். நான் டேவிஸ்டாக்கில் இல்லை.''

''அப்படியா, மேடம்?''

''இந்தப் பகுதிக்கு லாஸரஸுடன் சேர்ந்து நான் போன வாரத் துவக்கத்திலேயே வந்துட்டேன். இதைப் பற்றி தேவையற்ற பேச்சுகள் உண்டாவதை நாங்க விரும்பலே. ஷெல்லா-கோம்ப் எனும் பகுதியில தங்கியிருந்தோம்.''

''அது, இங்கேயிருந்து ஏறத்தாழ ஏழு மைல் தூரமிருக்குமா?''

''ஏறத்தாழ - யெஸ்.''

இன்னும், அந்த, தூரத்து அசூயை.

''நான் கொஞ்சம் லஜ்ஜையா கேட்கலாமா, மேடம்?''

''இந்தக் காலத்துல அப்படியெல்லாம் இருக்கா என்ன?''

''ஆஹ்! அதுவும் சரிதான். நீங்களும் மிஸ்டர் லாஸரஸும் எத்தனை நாட்கள் நண்பர்களாயிருக்கிங்க?''

''நான் அவரை ஆறு மாதங்களுக்கு முன்னாடி சந்திச்சேன்.''

''நீங்க - மனசுல - அவரை - சமீப காலமா - சுமக்கிறீங்களா, மேடம்?''

ஃப்ரெட்டரிக்கா ரைஸ் இதற்கு தனது தோள்களைக் குலுக்கிக் காட்டினாள். ''அவர் - பணக்காரர்.''

''ஓ, நோ'' - சற்றே சுத்தலாய் சொன்னான் பொய்ரெட். ''அப்படி சொல்றது அவ்ளோ அழகில்லே, மேடம்.''

விளங்காமல் ஆச்சரியப்பட்டவளாய் தோன்றினாள் அவள்.

''இதை நீங்களே கொஞ்ச நேரத்துல சொல்லிடறதுக்கு முன்னாடி - நானே என்னைப் பற்றி இப்படி கோடிக்காட்டிடறது, சரிதானே?''

''வெல் - அப்போ சரிதான்'' என்றான் பொய்ரெட். ''மறுபடியும் சொல்றேன் மேடம் - நீங்க ரொம்ப சாதுர்யம் மேடம். புத்திசாலி.''

''உடனடியா அப்படி ஒரு டிப்ளமோவே நீங்க எனக்குத் தந்துடுவீங்க போல'' என்ற அவள் எழுந்துக் கொண்டாள்.

''வேற எதையும் நீங்க என்கிட்டே சொல்ல பிரியப்படலியா, மேடம்?''

''அப்படி எதுவும் இருப்பதா எனக்குத் தெரியலே - நோ. நான் நிக்குக்காக சில பூக்களை வாங்கிக்கிட்டு அவ எப்படி இருக்கானு பார்க்கப் போறேன்.''

''ஆஹ், இது உங்களோட மென்மையைக் காட்டுது. ஓ கே... நீங்க ரொம்ப வெளிப்படையா இருந்ததுக்கு, தேங்க்ஸ் மேடம்.''

அவள் அவனைக் கூர்மையாய் ஊடுருவினாள். ஏதோ பேசப் போகிறாள் என்றே பட்டது. பிறகு அப்படி செய்யாமல் இருப்பதே மேல் என உணர்ந்தவளாய் கதவு கடந்து வெளியேறினாள். இதற்காக நான் கதவினைத் திறந்து விட்டபடி நின்றபோது சுரத்தற்று என்னைப் பார்த்து சிறிதாய் சிரித்தாள்.

''அவ புத்திசாலி'' என்றான் பொய்ரெட். ''யெஸ், ஆனா, அதே போன்றவன் தான் பொய்ரெட்டும்!''

''என்னடா சொல்றே?''

''லாஸரஸ் என்பவனுடைய பணக்காரத்தன்மையை இங்கே தூக்கிக் கிட்டு வந்து மெனக்கெட்டு என் மூளைக்குள்ளே வெச்சு விசையோட திணிச்சதெல்லாம் சரி தான் ...''

''அப்படி அவங்க பேசினது எனக்கு அருவெருப்பு உண்டு பண்ணினதுனு தான் சொல்லணும்.''

''டேய்... சரியான ரியாக்ஷனை நீ எப்பவுமே தப்பான இடத்துல தரேடா! அது களையா பட்டதா அல்லது அருவெருப்பா பட்டதா என்பது கிடையாது இப்ப நமக்குத் தேவை. மேடம் ரைஸுக்கு மனசார பழகிற ஒரு பணக்கார ஃப்ரண்ட் இருந்து, இவங்க கேட்கிற எல்லாத்தையும் எழுதித் தரும் தயாள குணமும் கொண்டவங்களா அந்தத் தோழி இருந்தால் - கிடைக்கப் போகிற ஒரு சிறு பங்குக்காக ஏன் மிஸஸ் ரைஸ் அந்த உயிர்த்தோழியைக் கொல்லக் கூடாது?''

''ஓ!''

''இது தான் சரியான நேரத்துல தர சரியான ரியாக்ஷன் - ஓ!''

''அப்போ ஏன் இவங்க நர்ஸிங் ஹோமுக்குப் போவதை நீ நிறுத்தக் கூடாது?''

''நானா ஏன் என் கை இதுல இருக்கிறதா காட்டிக்கணும்? மேடம் நிக்கை, அவங்க ஃப்ரண்ட்ஸ் சந்திப்பதிலிருந்து பிரித்து வைப்பது, ஹெர்குல் பொய்ரெட்டா என்ன? நோ, நோ! டாக்டருங்களும் நர்ஸுகளும் தான். அந்த அழுக்க வைக்கும் நர்ஸுகள். 'டாக்டர் ஆர்டர்' எனும் போர்வையில!''

''அந்தக் காப்பக நர்ஸுங்க மிஸஸ் ரைஸை உள்ளே விட்டுடு

வாங்கனு உனக்கு பயமே ஏற்படலையா? மேடம் நிக் இவங்களை உள்ளே விடணும்னு வலியுறுத்தினா?''

''யாரும் உள்ளே விடப்பட மாட்டாங்க ஹேஸ்டிங்ஸ் - உன்னையும் என்னையும் தவிர. உனக்கு இப்படியும் ஒரு குழப்பம் உள்ளூர இருக்குனா, கிளம்பு. எத்தனை சீக்கிரம் முடியுமோ அத்தனை சீக்கிரம் நாமளே அங்கே போயிடுவோம்.''

வரவேற்பறை கதவு அடித்தாற்போல் திறக்கப்பட, ஜார்ஜ் சாலஞ்ஜர் பாய்ந்து வந்தார். அவருடைய கனமான முகத்தோல் வெறுப்பில் தகதகத்தது.

''கவனியுங்க, மிஸ்டர் பொய்ரெட்'' என்றான். ''இதுக்கு என்ன அர்த்தம்? நிக்கைப் போட்டு வெச்சிருக்கிற அந்தக் கன்றாவி நர்ஸிங் ஹோம் கூட பேசினேன். அவ எப்படியிருக்கானு கேட்டேன்... எத்தனை மணிக்கு வந்து அவளைப் பார்க்கலாம்னு கேட்டேன். அவளைப் பார்க்க டாக்டர்ங்க விட மாட்டாங்கனு சொல்றாஙுங்க அந்த நர்ஸுங்க. இதோட அர்த்தம் என்னனு எனக்குத் தெரிஞ்சாகணும். வெளிப்படையாவே கேட்கிறேனே... இதெல்லாம் உன்னோட வேலையா? இல்லே, நிக் நிச்சயமாவே ஷாக்ல அவதிப்படறாளா?''

''நர்ஸிங் ஹோம் எப்படி நடந்துக்கணும்னு நான் எந்தவிதமான அறிவுறுத்தல்களும் தரலேனு நிச்சயப்படுத்த விரும்பறேன், ஸார். அப்படி மூக்கை நுழைக்கிறவன் கிடையாது, நான். ஏன் நீங்க அந்த சூப்பர் டாக்டருக்கே போன் பண்ணிடக் கூடாது - என்ன அவரோட பேர் - ஆங்... க்ரஹாம்.''

''பண்ணினேன். அவ எப்படியிருக்கணும்னு எதிர்பார்க்கிறோமோ அப்படியே இருக்கானு சொல்றாரு. வழக்கமான பாட்டு. ஆனா எனக்கு இந்த ட்ரிக்கெல்லாம் நல்லாவே தெரியும் - என் மாமாவே ஒரு டாக்டர் தான். ஹார்லே தெருவுல. நரம்பு நிபுணர். சைக்கோ - அதாவது, நரம்பு மற்றும் உளவியல் சம்பந்தப்பட்ட ஸ்பெஷலிஸ்ட். உறவினர்களையும் நண்பர்களையும் பசப்பலான வார்த்தைகளைப் பேசி தூர நிக்க வெச்சுடும் டாக்டருங்க வித்தை - நான் நிறையவே கேள்விப் பட்டிருக்கேன். யாரையும் சந்திக்கக் கூடாத ஒரு கட்டத்துல நிக் இருப்பதா என்னால நம்ப முடியாது. நீங்க தான் இந்த சங்கதிகளின் அடியிலே இருந்து இயக்கறீங்கனு சொல்றேன், பொய்ரெட்.''

மிகக்கனிவான வகையில் அவனைப் பார்த்து புன்னகைத்தான் பொய்ரெட். காதலன் என்று ஒருவன் இருந்தால், அவன் மீது தனித்துவம் மிக்க கனிவு பொய்ரெட்டிடம் இருப்பதை நான் கவனித்த துண்டு.

''கொஞ்சம் நான் சொல்வதையும் கவனியுங்க, நண்பா'' என்றான் அவன். ''ஒரு பார்வையாளனை உள்ளே அனுப்பினா அது போல வரும் மத்தவங்களை அப்புறம் ஒதுக்கி வைக்க முடியாம ஆயிடும். சொல்றது புரியுதா? விட்டா, எல்லாரையும் விடணும்... இல்லேனா ஒருத்தனையும் விடக்கூடாது. நமக்கு மேட்முடைய பாதுகாப்பு மிக மிக அவசியம் - உங்களுக்கும் எனக்கும் - உண்டா, இல்லையா? நிச்சயமா - அப்படித்தானே? அப்படினா, தெரிஞ்சுக்கோங்க, ஒருத்தனையும் உள்ளே விடக்கூடாது!''

''இப்ப உங்களைப் புரியுது'' என்ற சாலஞ்சர் பட்டென கேட்டான்: ''இருந்தாலும், ஏன் ...''

''ஷட். மேற்கொண்டு நாம எதுவும் சொல்லப் போவதில்லே. நாம துடுக்கா விட்ட வார்த்தைகளைக் கூட தற்போதைக்கு மறந்துடுவோம். விவேகம்-கூர்மையா வியூகமைக்கும் விவேகம் - ஆங், இப்போதைக்கு தேவையானதெல்லாம் இது தான் ...!''

''என் நாக்கைக் கட்டுப்படுத்த முடியாம பேசிட்டேன்'' என்றான் கடற்படைக்காரன் சாந்தமாய்.

வந்த சடுதிக்குள் உக்கிரமாய் ஆடிய சாலஞ்சர் வெளியேறியதும் என்னிடம் பொய்ரெட் சொன்னான் : ''நீயும் நானும் காதுங்காதும் வெச்சா மாதிரி கிளம்பறோம்.''

''நிக்?''

''யெஸ்.''

''போய் அந்த மூணு கேள்விகளுக்கான விடையைக் கேட்கப் போறோமா?''

''யெஸ். நாம கேட்போம். சொல்லப்போனா, அவற்றுக்கான விடை, எனக்கே கூட தெரியும்.''

''என்ன?'' - ஆச்சரியமானேன்.

''யெஸ்.''

''ஆனா எப்பப்பா கண்டுபிடிச்சே?''

''என் காலை டிபனை நான் சாப்பிட்டுக்கிட்டிருக்கும்போது, ஹேஸ்டிங்ஸ்.''

''என்கிட்டே சொல்லு!''

''நோ. மேடம் வாயாலேயே நீ அந்த விடைகளைக் கேட்கணும்னு விரும்பறேன்.''

பிறகு, பேச்சை மாற்றும் விதமாக, ஒரு கடிதத்தை என் பக்கமாய் நகர்த்தினான் அவன். அது, ஓல்ட் நிக்கோலஸ் பக்லேவின் ஓவியப் படத்தினை பரிசீத்து கணிப்புக் கூற பொய்ரெட் அனுப்பியிருந்த நிபுணன் தந்திருந்த ரிப்போர்ட். அந்த ஓவியம் அதிகபட்சம் இருபது பவுண்டுகளுக்குத் தான் போகும் என்று நிச்சயப்படுத்தியிருந்தது அவ்வறிக்கை.

''ஆக, இது, ஒரு விஷயத்தை விளக்கிடுது'' என்றான் பொய்ரெட். ''இருபது பவுண்டுகள். ஆனா ஐம்பது பவுண்டுகள் தர ஒப்புக்கிட்டிருக்கார் லாஸரஸ். பார்க்க தீட்சண்யமாத் தெரியும் ஒருத்தன் செஞ்சிருக்கும் தப்பான முடிவு! ஆனா, இதுல... இதுலதான், நாம மேற்கொண்டு பயணிப்பதற்கான துருப்பை நாம பிடிக்கணும்.''

குன்றின் உயரமான பகுதியில் வளைகுடாவைப் பார்த்தவாக்கில் கட்டப்பட்டிந்தது நர்ஸிங் ஹோம். வெள்ளை கோட் ஆசாமி ஒருத்தன் எங்களை எதிர்கொண்டான். கீழேயே ஓர் அறைக்கு அனுப்பப்பட்ட எங்களை சுறுசுறுப்பாய் தோன்றிய ஒரு தாதி தற்சமயம் நெருங்கி வந்தாள்.

பொய்ரெட்டை ஒரேயொரு பார்வை பார்த்தது, அவளுக்குப் போதுமானதாயிருந்தது. குள்ள துப்பறியும் நிபுணனைப் பற்றிய நுணுக்கமான விவரிப்புகளோடு நிக் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளையும் டாக்டர் க்ரஹாமிடமிருந்து அவள் பெற்றிருப்பது வெளிப்படையாய் தெரிந்தது. வந்த புன்னகையைக் கூட மட்டுப்படுத்தி மறைத்துக் கொண்டாள் அவள்.

''ராத்திரிப் பொழுதை நல்லா அமைதியா கழிச்சாங்க, நிக்'' என்றவள், ''வாங்க, மேலே போவோம்'' என்றாள்.

சுகந்தமாயிருந்த ஓர் அறையில், சூரியக்கதிர்கள் வசதியாய் உள்ளே வந்து கொண்டிருக்கும் வகையில் நாங்கள் நிக்கினைப் பார்த்தோம். குறுகலாயிருந்த இரும்புப் கட்டிலில், அவள், அகுலயை அடைந்

திருந்த ஒரு குழந்தையைப் போல தோன்றினாள். அவள் முகம் வெளிறிப் போயிருந்தது. கண்கள் சந்தேகத்தினால் சிவப்பு நிறம் கண்டிருந்தன. கவனிக்கும் த்ராணியற்றவளாயும் களைத்தும் தோன்றினாள் நிக்.

''என்னைப் பார்க்க வந்ததுக்கு நன்றி'' என்றாள் அவள், உணர்வற்ற தட்டையான குரலில்.

தனது இரண்டு உள்ளங்கைகளுக்குள்ளும் அவளுடைய ஒரு கையை எடுத்துப் புதைத்துக் கொண்டான் பொய்ரெட். ''நம்பிக்கையாயிருங்க, மேடம். வாழறதுக்கு ஏதாவது ஒரு காரணம் எப்பவும் இருக்கும்.''

இவ்வார்த்தைகள் அவளைத் துனுக்குற வைத்துத் தட்டி யெழுப்பின. முகத்துத் தொய்வினை சட்டெனை விலக்கினாள். நேர்கொண்ட பார்வை பார்த்தாள். ''ஓ'' என்றாள். ''ஓ!''

''கொஞ்சநாளா உங்களை எது உறுத்திக்கிட்டே இருந்ததுனு - உங்க மனசை எது போட்டு அரிச்சு எடுத்துக்கிட்டே இருந்ததுனு - என்கிட்டே இப்பவாவது நீங்க சொல்லக்கூடாதா, மேடம்? இல்லே, நானே ஊகிக்கட்டுமா?! அதுக்காக என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்களை நான் முன்கூட்டியே தந்துடட்டுமா, டியர் மேடம்?''

''ஓஹ்... அப்போ அது உங்களுக்கு முன்கூட்டியே தெரியுமா?'' - கொஞ்சமாய் உருவாகியிருந்த அவளுடைய முகத்தின் உயிர்ப்பு அப்படியே வடிந்து வெளிறியது. ''இப்போ அதை யார் தெரிஞ்சுக் கிட்டாலும் எந்த பாதகமும் இல்லே. இப்போதான் எல்லாமே முடிஞ்சுப் போயிடுச்சே. இனிமே அவரை நான் எப்பவுமே பார்க்க முடியாதே, பார்க்க முடியாதே.''

அவள் குரல் சுக்குநூறானது.

''நம்பிக்கை, நம்பிக்கை மேடம் - தைரியத்தை விட்டுடக் கூடாது.''

''எனக்குள்ளே எந்தத் துணிவும் கிடையாது, பொய்ரெட். எந்த நம்பிக்கையும் விட்டு வைக்கப்படலே. எல்லாம் போச்சு. கடந்த சில வாரங்களா எனக்குள்ளேயிருந்த எல்லா நம்பிக்கைகளையும் நான் செலவழிச்சு தீர்த்தாச்சு. நம்பிக்கையோட எதிர்பார்த்து, எதிர்பார்த்து - இப்பத்தான் கொஞ்ச காலமா - அந்த நம்பிக்கையெல்லாம் முறிஞ்சிருக்குமானு, கொண்டிருந்த நம்பிக்கைக்கு எதிரா எதிர்பார்த்து ...''

நான் முழித்துக் கொண்டிருந்தேன். பேசப்பட்டதில் ஒரு வார்த்தை கூட எனக்கு அர்த்தமாகவில்லை.

''இவனைப் பார்த்தாவது ஆறுதலடையுங்க'' என்றாள் பொய்ரெட்! ''நாம பேசறதுல ஒரு மண்ணும் இவனுக்கு விளங்கலே!''

அவளுடைய துக்கமான விழிகள் இப்போது என்னைக் கண்டன. விளக்கினாள்: ''மைக்கேல் ஸெட்டான் - வானத்துல பறப்பவர்.'' என்றாள் சிந்தனையாய் அவள். ''அவருக்கும் எனக்கும் திருமணம் நிச்சயமாகியிருந்தது. இப்போ, அவர் இறந்துட்டார்.''

அத்தியாயம் 11

# இலக்கு

நான் அங்கு பேச்சு மூச்சற்று ஆனேன்.

பொய்ரெட் பக்கம் திரும்பினேன். ''இதைதான் நீ சொன்னியாடா?''

''யெஸ் ஃப்ரண்ட். இன்னிக்குக் காலையிலே - எனக்குத் தெரியும்.''

''எப்படி உனக்குத் தெரியும்? எப்படிடா ஊகிச்சே? சாப்பிடும்போது கூட ஒண்ணும் விளங்கலேனு தானேடா நீ சொன்னே?''

''அப்படிதான்டா அப்போ வரைக்கும் குழப்பிச்சு. நியூஸ் பேப்பரின் முதல் பக்கம். உடனேயே நேற்று டின்னரின் போது நடந்த உரையாடல் நினைவுக்கு வந்தது - அப்போ, எல்லாத்தையும் என்னால பார்க்க முடிஞ்சது.''

மறுபடியும் நிக் பக்கமாய் அவன் திரும்பிக் கொண்டான். ''நேற்று ராத்திரிதான் நீங்க செய்தியைக் கேள்விப்பட்டீங்களா?''

''ஆமாம். ஒயர்லெஸ் வானொலியில. டெலிபோன்னு சொல்லிட்டு விலகினேன். நான் மட்டும் தனியா அந்த செய்தியைக் கேட்க நினைச்சேன் - ஒரு வேளை... ... ...'' - மிகவும் கஷ்டப்பட்டு பேச வந்ததை விழுங்கினாள். ''கடைசியா அதை நானே கேட்டேன்... ... ...''

''தெரியும், தெரியும்'' - அவளுடைய கையை தன்னுடைய உள்ளங்கைகளுக்குள் எடுத்துப் பொத்திக் கொண்டான்.

''நடைபிணமா நின்றேன். எல்லாரும் வேற வரத் தொடங்கியிருந்தாங்க. அந்த பயங்கர நிலையிலிருந்து எப்படி நான் மீண்டு வந்தேன்னு எனக்கே தெரியலே. எல்லாமே இப்ப எனக்குக் கனவா இருக்கு. என்னிலிருந்து நான் வெளியே வந்தேன் - அதனால தான் என்னால எப்போதும் போல சாதாரணமா நடந்துக்க முடிஞ்சிருக்கு. ஆனா, நிஜமான நான், உள்ளுக்குள்ளே பிரளயம் கண்ட பூமிபோல

சிதைஞ்சிருந்தேன். இந்த நாடகத்தை சுலபத்துல புரிஞ்சுக்க முடியாது.''

''யெஸ் யெஸ். விளங்குது.''

''இதுக்கு அப்புறமா நான் ஃப்ரெட்டரியுடைய மேலங்கி எடுக்கப் போனபோது, ஒரு நிமிஷம் நிலைகுலைஞ்சு போனேன். நெஞ்சுடைஞ்சுப் போனேன். ஆனாலும் என்னை உடனடியா என் கட்டுக்குள்ளே இழுத்துக் கொண்டு வந்தேன். மேக்கி ஒருபக்கம் அவ கோட் பற்றிக் கேட்டு கத்திக்கிட்டே இருந்தா. கடைசியா என்னோட மேலங்கியை எடுத்துக்கிட்டு அவ கிளம்பி விட... நான் முகத்துக்குக் கொஞ்சமா பவுடர் போட்டு சரி செஞ்சுக்கிட்டு அவ பின்னாடியே கிளம்பினேன். அங்கே, அவ, செத்துக்கிடக்கா.''

''ஆமாமாம். அது ஒரு தாளவொண்ணா ஷாக்கா இருந்திருக்கணும்.''

''உங்களுக்குப் புரியலே. அப்படி கிடையாது-நான் கோபமா ஆனேன்! அது நானா ஏனிருந்திருக்கக் கூடாதுனு துடிச்சுப் போனேன். அந்தக் கணத்துல நான் செத்துப் போயிடணும்னு நினைச்சேன் - ஆனா அங்கே நான் உயிரோட - இன்னும் பல வருஷங்கள் நரக வேதனையோட வாழ்வதற்காக! மைக்கேல் போயிட்டான் - எங்கேயோ காத தூரத்துல - பசிபிக் கடல்ல மூழ்கி. ஓ, பொய்ரெட்.''

''அமைதி, அமைதி.''

''எனக்கு வாழ விருப்பமில்லே. நான் வாழ விரும்பலே, யெஸ்'' - அவள் கட்டுப்படுத்த முடியாமல் ஒலியெடுத்துக் கதறினாள்.

''எனக்கும் நல்லா விளங்குது மேடம், நல்லா விளங்குது. நாம எல்லோருக்குமே வாழ்வை விட சாவே உகந்தது என்று மனப்பூர்வமா எண்ணும் ஒரு கட்டம் வாழ்க்கையில வரத்தான் செய்யுது. ஆனா அது கடந்து போயிடுது - துக்கமும் பச்சாதாபமும் கடந்து போயிடுது. இப்போ இப்படி சொன்னா உங்களுக்கு ஏத்துக்க முடியாதுனு எனக்குத் தெரியும். என்னைப் போன்ற ஒரு கிழவன் வந்து அறிவுரை சொல்வது - இந்தக் கட்டத்துல - பிரயோஜனமற்றதாய் தான் முடியும். வெறும் வார்த்தைகள் - இப்படித்தான் உங்களுக்குத் தோணும் - வெறும் வார்த்தைகள்.''

''அவனை மறந்துடுவேன்னா நினைக்கறீங்க? அப்படி அவனை மறந்துட்டு இன்னொருத்தனுக்கு வாழ்க்கைப் படுவேன்னா

சொல்றீங்க? நெவர்!''

இப்போது மெத்தையில் நிமிர்ந்து உட்கார்ந்துக் கொண்டவள் அழகாய் தெரிந்தாள். அவளுடைய இரு கைகளும் இயலாமையால் கட்டுண்டு துடித்துக் கொண்டிருந்தன. கன்னங்கள், சிகப்பாய் கொழுந்து விட்டெரிந்தன.

பொய்ரெட் மிருதுவாய் சொன்னான்: ''கிடையவே கிடையாது. அந்தக் கோணத்துல நான் எதையுமே நினைக்கலே. நீங்க ரொம்ப அதிர்ஷ்டசாலி, மேடம். நீங்க, ஒரு துணிகர வீரனால விரும்பப் பட்டிருக்கீங்க - ஒரு நிஜ ஹீரோவால! அவரை நீங்க எப்படி சந்திக்கும் படி நேர்ந்தது?''

''லே டாக்கெட் பகுதியில. கடந்த செப்டம்பர்ல. கிட்டத்தட்ட ஒரு வருடத்துக்கு முன்னாடி.''

''நீங்க ரெண்டு பேரும் நிச்சயமானது - எப்போ?''

''கிறிஸ்துமஸ் முடிஞ்ச உடனே. ஆனா அதை ரகசியமா வைக்க வேண்டிய தேவையிருந்தது.''

''அது ஏன் அப்படி?''

''மைக்கேலின் அங்கிள் - ஓல்ட் சர் மேத்யூ ஸெட்டானால். அவர் பறவைகளை நேசித்தார். பெண்களை வெறுத்தார்.''

''ஆஹ்!''

''அவர் நிதானமற்றவர். முழு புத்தியற்றவர். பெண்கள் ஓர் ஆணின் வாழ்க்கையைக் குட்டிச்சுவராக்கவல்ல எமன்கள் என்பது அவரோட நிலைப்பாடு. மைக்கேலோ, அவரையே முழுக்க முழுக்க சார்ந்து வாழ்க்கையை ஓட்டிக்கிட்டிருந்தார். மைக்கேலின் திறமை மீது பார்ப்பவர்கள் பிரமிக்குமளவுக்கு பெருமை கொண்டிருந்தார் அவர். அல்பெட்ஸைக் கட்ட பணந்தந்தவர் அவர் தான்; உலகத்தை அதுல சுற்றிவர ஆன செலவுகளை ஏற்றுக் கொண்டவரும் அவர் தான். அல்பெட்ஸ் இருவருடைய இன்பகரமான கனவு.''

''ஓ.''

''யெஸ். இந்த நிலையில, எங்க நிச்சயதார்த்தம் பற்றி துளி கசிஞ்சாலும் போச்சு... அத்தனையும் மண்ணாயிடும்னு எச்சரித்தார் மைக்கேல். ராணுவ ரகசியம் போல பாதுகாக்கணும்னு சொல்லிட்டார், நானும் கட்டுப்பட்டேன். ஒருத்தர்கிட்ட நான் மூச்சு காட்டலே -

ஃப்ரெட்டரி உட்பட.''

சற்றே முகஞ்சுளித்தான் பொய்ரெட். ''என்கிட்டே சொல்லியிருக்க லாமே, மேடம்!''

நிக் அவனைப் பார்த்து முழித்தாள். ''சொல்லியிருந்தா மட்டும் பெருசா என்ன வித்தியாசம் விளைஞ்சிருக்கப் போகுது? என் மேல நடந்திருக்கும் இந்த மர்மமான தாக்குதல்களுக்கும் அதுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையே? ம்ம்... நோ. நான் மைக்கேல் கிட்டே சத்தியம் பண்ணிக் கொடுத்திருந்தேன் - அதை நானும் காப்பாற் றினேன். ஆனா அதைக் காப்பத்தறது ஒரு பிரம்மப்பிரயத்தனமா இருந்தது. எப்பப்பாரும் படபடப்பு... யாராவது தெரிஞ்சுக்கு வாங்களோ எனும் தேடுதல்... ஓஹ்! இதுல, பார்க்கும் எல்லாரும், நீ கொஞ்ச நாளா படபடப்பா இருக்கேனு வேற சொல்லி, இருக்கிற படபடப்பை இன்னும் கூட்டி விடுவது! அதுக்கான காரணத்தை விளக்க முடியாம நான் ஆடிப்போவது!''

''யெஸ். எல்லாத்தையும் சேர்த்துப் போட்டுப் புரிஞ்சுக்க முடியுது.''

''இதுக்கு முன்னாடியும் ஒரு முறை அவர் காணாமப் போனார், தெரியுமா? இந்தியாவுக்குப் போகும் வழியில பாலைவனத்தைக் கடக்கும்போது. தாளமுடியாம துடிதுடிக்கப் போனேன். அப்புறம் அது சரியாச்சு. அவரோட மெஷின்ல ஏதோ கோளாறு. அதை சரி பண்ணிட்டு பிரயாணத்தைத் தொடர்ந்திருக்கார். அதே மாதிரியே இந்த தடவையும் இருந்துடக் கூடாதானு உள்ளுக்குள்ளே வேண்டிக்கிட்டே இருந்தேன் நான். எல்லோரும் அவன் செத்திருப்பான்னே சொல்லிக்கிட்டிருந்தாங்க - ஆனா நான் மட்டும் உள்ளுக்குள்ளே அவர் நலமாத்தானிருப்பார்னே சொல்லிக்கிட்டிருந்தேன். நெஜமா. ஆனா, நேற்று ராத்திரி ...''

அவளது குரல் அமுங்கி அறுந்தது.

''அது வரைக்கும் நீங்க நம்பிக்கையோடவே இருந்தீங்களா?''

''சொல்லத் தெரியலே. அதை நம்ப நான் மறுத்தேன் என்பது தான் சரியா இருக்கும்னு தோணுது. அவருக்கு அப்படி ஆயிருக்கும்னு நானே என் வாய் விட்டு விவாதிப்பதைப் போன்ற வேற ஒரு கொடுமை இருந்துட முடியாது.''

''என்னால அந்தக் கொடுமையை உணர முடியுது. ஆங்... ஒரு தடவை கூட மேடம் ரைஸ் கிட்டே இது பற்றி சொல்லிடணும்னு

உங்களுக்குள்ளே உந்துதல் வரலியா?''

''பயந்தப்போ, சொல்லிடலாமானு தோணிச்சு.''

''அவங்க ஊகிச்சிருப்பாங்கனு - நீங்க நினைக்கலியா?''

''அப்படி நினைக்கலேனு தான் தோணுது'' - நிக், இக்கேள்வியை ஜாக்கிரதையாய் கையாண்டாள். ''இதைப் பற்றி எப்பவும் எதுவும் அவ சொன்னதில்லே. ஒரு சில சமங்கள்ல சின்னச்சின்ன காமெண்ட் அடிச்சதுண்டு...'' நாங்க ரெண்டு பேரும் க்ரேட் ஃப்ரண்ட்ஸ், அப்படி யிப்படினு.''

''ஸெட்டானுடைய அங்கிள் மரணமடைஞ்சபோது கூட உங்க ரெண்டு பேர் விஷயத்தை சொல்ல நீங்க சிந்திக்கலையா? அவர் ஒரு வாரத்துக்கு முன்னாடி இறந்துட்ட சேதி உங்களுக்குத் தெரியு மில்லையா?''

''தெரியும். அவருக்கு ஏதோ ஆபரேஷன் நடந்ததா சொன்னாங்க. அந்த சமயத்துல யாரிருந்தாலும் அவங்க கிட்டே சொல்லியிருப்பேன்னு தான் தோணுது. ஆனா அந்த சமயத்துல போய் இதை சொல்வது சிறந்த ஒண்ணா இருந்திருக்காது, இல்லையா? பேப்பர் முழுக்க மைக்கேலைச் சுட்டிக்காட்டி செய்திகள் வந்திருந்தபோது நான் எங்க விஷயத்தைப் போட்டு உடைப்பது, ஏதோ என்னை நானே முன் நிறுத்திக்க விரும்புவதுபோல ஆகியிருக்காதா? உடனே நிருபனுங்க என்னை சுற்றி வட்டமடிச்சிருப்பானுங்க - இன்டர்வியூவுக்கு. இதெல்லாம் ரொம்ப கீழ்த்தரமான விளம்பரமாதான் ஆகியிருக்கும். இப்படி செய்வது மைக்கேலுக்குப் பிடிக்காது என்பது இதுல முக்கியம்.''

''ஒத்துக்கறேன், மேடம். பப்ளிக்கா உங்களால சொல்லியிருக்க முடியாது தான். தனிப்பட்ட முறையில ஒரு ஃப்ரண்ட் கிட்டே பேசியிருக்கலமேனு தான் நான் சொல்ல வந்தேன்.''

''பேசாமலிருப்பதே சிறந்ததுனு முடிவாயிருந்தேன். நாம யார்கிட்டேயாவது சொல்லப் போய் அவங்க அதை என்ன மாதிரி எடுத்துப்பாங்களோ?''

ஒப்புதலாய் தலையசைத்தான் பொய்ரெட். பின் கேட்டான்: ''உங்களுக்கும் உங்க உறவான திரு வைலஸுக்கும் இடையிலான உறவு, எந்த அளவில இருக்கு? நல்லா இருக்கா?'' - சட்டென பேச்சை மாற்றுரொரு விதமாய் கேட்டான் அவன்.

''சார்ல்ஸ்? எது அவனை உங்க மண்டைக்குள்ளே போட்டது?''

''சும்மா அதிசயிச்சுக்கிட்டிருந்தேன் - அவ்வளோதான்.''

''அதிசயிக்க என்னயிருக்கு இதுல?'' என்றவள், ''லைவ்ஸ் என்றால் பாதகமற்ற அப்படினு அர்த்தம்'' என்றாள். ''வெளியே வரவே வராத நபர் அவன். இந்தப் பகுதியை விட்டு வெளியே போகவே போகாத வன். அவனுக்கு என் மேல ஈர்ப்பு இல்லேனு நினைக்கிறேன்.''

''மேடம், மேடம். ஆனா அவர் தன்னோட அத்தனை சம்பத்துக் களையும் உங்க காலடியில போட்டு துதிக்கிறதா இல்லே நான் கேள்விப் பட்டேன்?!''

''ஒருவர் மீது ஈர்ப்பு இல்லாம இருப்பது, அவரை முழுக்க ஒதுக்கி வெறுப்பதா ஆகாதே. அவர், என் வாழ்க்கை முறை மாறியாகணும்னு நினைக்கிறார். நான் நடத்தும் கேளிக்கை விருந்துகள், என் கவர்ச்சி, என் நண்பர்கள், நான் பேசும் விதம்... எதுவும் அவருக்கு ஏற்புடைய தில்லை. என்னை எப்படியாவது மாத்திடலாம்னு அவர் எப்பவும் நம்பிக்கையோட இருக்கார் என்பது என் எண்ணம்.''

சற்று நிதானித்து நிறுத்தியவள் பின்பு ஒரு சிறு கண்ணடிப்புடன் சொன்னாள்: ''இந்தத் தகவலையெல்லாம் துருவியெடுக்க நீங்க யாரை ஸ்க்ரூ பண்ணினீங்க?''

''என்னை நீங்க குறைச்சு எடைபோடக் கூடாது, மேடம். அந்த ஆஸ்திரேலியன் லேடி திருமதி க்ராஃப்ட்டுடன் நான் ஒரு சின்ன சந்திப்பு நடத்தினேன்.''

''அவங்க கூட செலவழிக்க கொஞ்சம் அவகாசம் கிடைச்சு பேசினா - அவங்க ஒரு டியர்னு விளங்கும். தாள முடியாம பாசம் வைப்பாங்க. தன் வீடு, பிள்ளைக்குட்டிங்க, பாசம் - இப்படிப்பட்ட விதம் அவங்க.''

''நானே கூட, உணர்ச்சிவயப்பட்டு ஆழப் பாசம் வைக்கும் ஓர் ஓல்ட் கட்டுப்பெட்டி தான் மேடம்.''

''நீங்களா? என்னைக் கேட்டா, உங்க ரெண்டு பேர்ல, காப்டன் ஹேஸ்டிங்ஸ் தான் ரொம்ப மிருதுவானவர்னு சொல்லியிருப்பேன்.''

இதை நான் அவளுடைய முகத்துக்கு நேராகவே எரிச்சலாய் ஒதுக்கி னேன்.

''எரியறான்'' என்றான் பொய்ரெட், என்னுடைய அசௌகரி யத்தைக் குதூகலமாய் நோட்டமிட்டபடி. ''ஆனா நீங்க சொல்றதும் சரி,

தான் மேடம். யெஸ், யூ ஆர் ரைட்.''

''அப்படியெல்லாம் ஒண்ணும் கிடையாது'' என்று கோபமாகவே சொன்னேன் நான்.

''ஹேஸ்டிங்ஸுக்கு தனித்துவம் வாய்ந்த - அவனுக்கு மட்டுமே பொருந்தும் - அழகிய குணாதிசயம் ஒண்ணு இருக்கு. சில சமயங்கள்ல அது தான் எனக்கு மாபெரும் தொல்லையா அமைஞ்சுடுது.''

''முட்டாள் மாதிரி பேச வேண்டாம், பொய்ரெட்.''

''சொல்லப்போனா, எங்கேயும் கெடுதலே கிடையாது என்பது அவனோட நிலைப்பாடு. அதனால எங்கும் எதிலும் அவன் குற்றங் களைப் பார்க்கவே மாட்டான். அப்படி தப்பித்தவறி அவன் பார்த்துட் டான்னு வெச்சுக்கோங்க... அவனுக்குள்ளேயே மூளும் பொறுமையற்ற வெறுப்பு, அதை வகுந்து புரிஞ்சுக்க விடாம செஞ்சுடும். ஆக மொத்தத்துல, இது ஒரு, கிடைக்க அரிதான ஆனாலும் அழகான குணாதிசம். ஹே, ஹே, இதை மறுக்கப் பார்க்காதே. இது - நான் சொல்றது போன்றது தான்!''

இப்போது நிக், ''நீங்க என்கிட்டே மிகக் கனிவா நடந்துக்கிறீங்க'' என்றாள்.

''அதெல்லாம் ஒண்ணும் கிடையாது, மேடம். நாம இன்னும் பண்ண வேண்டியது நிறைய இருக்கு. அவற்றின் துவக்கமா - நீங்க இங்கேயே இருக்கிறீங்க. உங்களுக்கு வரும் கட்டளைளை நீங்க மதிச்சு நடக்கணும். நான் என்ன பண்ண சொல்றேனோ அதைத்தான் நீங்க செய்யணும். இந்தக் கட்டத்துல எனக்கு இடையூறுகள் வரக்கூடாது.''

அசூயையாய் பெருமூச்செறிந்தாள் நிக்.

''நீங்க என்னவெல்லாம் பண்ண சொல்றீங்களோ அத்தனையும் நான் செய்றேன். நான் என்ன பண்றேன் என்பதுல எல்லாம், எனக்கு இப்ப துளியும் ஆர்வம் கிடையாது.''

''இப்போதைக்கு எந்த ஃப்ரண்டையும் சந்திக்கக் கூடாது.''

''நோ ப்ராப்ளம். நான் யாரையும் பார்க்கவும் விரும்பலே.''

''நீங்க சும்மாவே இருக்க வேண்டியது தான் உங்க வேலை. இயங்க வேண்டிய வேலை, எங்களுடையது. இப்போ, மேடம், உங்களை விட்டுட்டு நான் கிளம்பப் போறேன். உங்களுக்கு நேர்ந்துள்ள துயரத்தை நான் மேலும் மேலும் கிளறிப் பேசப் போவது கிடையாது.''

கதவு வரை போனவன், அதன் பிடியில் கை வைத்தபடி நின்றான். அவன் தோள் வழியே பின்வரும் வாக்கியத்தைப் பேச ''ஆங்... நீங்க ஒரு தடவை, உயில் ஒண்ணு எழுதினதா சொன்னீங்க. எங்கேயிருக்கு, இந்த உயில்?''

''ஓ! அது எங்கே கிடக்கோ?! என்கிட்டே தான் எங்கேயாவது இருக்கும்.''

''*கடைசி வீட்டிலா?*''

''யெஸ்.''

''பீரோவுக்குள்ளே? பத்திரமா பூட்டப்பட்டு?''

''ஓ, எனக்கு நிச்சயமா தெரியலியே. அது அங்கே தான் எங்கேயாவது இருக்கும்.'' சொன்ன அவள் முகஞ்சுளித்தாள். ''நான் எதுலயும் ஒழுங்கு கிடையாது, தெரியுமோ. பேப்பர்கள், தஸ்தாவேஜுகள், இதெல்லாம், முக்கால்வாசி என் படிக்கும் அறையிலிருக்கும் டேபிள் மேல தான் இருக்கும். பல பில்கள் அங்கேதான் அப்படியே கிடக்கும். அதுங்களோட உயிலும் இருக்கலாம். இல்லே, என் படுக்கையறையில இருக்கலாம்.''

''அதைத் தேட நீங்க என்னை அனுமதிக்கிறீங்க, இல்லையா?''

''தேடணும்னு நீங்க விரும்பினா - யெஸ். உங்களுக்கு என்னவெல்லாம் வேணுமோ அவையத்தனையையும் தேடிக்குங்க.''

''என்ன கனிவு. உங்களோட அனுமதியை நான் உடனடியா உபயோகிக்கிறேன்.''

அத்தியாயம் 12

# எலெவன்

நாங்கள் நர்ஸிங் ஹோம் படியிறங்கி வெளிக் காற்றுக்குள் கரையும் வரை ஒரு வார்த்தை பேசவில்லை அவன். பிறகு என்னை அப்படியே அவனோடு இறுக்கிக் கொண்டான். ''கவனிச்சியா ஹேஸ்டிங்ஸ், கவனிச்சியா? என் கணிப்பு சரி! என் ஊகம் சரி! என்னவோ ஒண்ணு காணாம மறைஞ்சுக் கிடக்குனு நான் நினைச்சேன் - புதிர் போன்ற ஒன்று. அந்தக் கண்ணுக்குத் தெரியாமயிருந்த இணைப்பு கிடைக்காம இந்த முழு கேஸும் அர்த்தமற்றது.''

என்ன செய்வதென்று விளங்காமல் அவன் குதி குதியென்று குதித்தான். இப்படித் துள்ளுமளவுக்கு எந்தப் பெரிய திருப்பத்தையும் என்னால் பார்க்க முடியவில்லை.

''இந்த இணைப்பு உள்ளே மறைஞ்சே தானிருந்திருக்கும். வழக்கு முழுக்கவும்! ஆனா என்னனு என்னால பார்க்க முடியலே. என்னவோ மறைஞ்சிருக்கு எனும் அளவுக்குத் தெரிஞ்சுக்கிட்டேன் - ஆனா அந்த என்னவோ என்னதுனு தான் பிரிச்சறிய முடியலே. ஆஹ்!''

''சரி, சரி. இது, இந்தக் கொலைல முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும்னா சொல்ல வரே?''

''டேய், டேய்... உனக்கே அது தெரியலே?''

''உண்மையா சொல்லணும்னா - ம்ம்.''

''இப்படியும் முடியுமா? இது நாம எதை எதிர்பார்த்துக் கிட்டிருந்தோமோ - அதை - அந்த மறைந்து கிடக்கும் இலக்கு - அதை - அதை - அந்த இலக்கையே - இது கோடிக்காட்டுதேடா...! இதுவா தெரியலே...!''

''என் கண்ணுக்குப் புலப்படாத அளவுக்கு புதைஞ்சுக்கிடக்குப்

போல! பொறாமை மாதிரி எதையாவது நீ குறிப்பிடறியா?''

''பொறாமை? நோ நோ என்னருமை நண்பா. வழக்கமான இலக்கு. தப்பிக்காம எல்லா கொலைகளிலும் முக்கியமாய் தெரியும் தவிர்க்க முடியாத இலக்கு. மணி! பணம்டா, பணம்.''

நான் முழித்தேன். அவன் சாந்தமாய் முன்னெறிக் கொண்டிருந்தான். ''கவனி நண்பா. ஜஸ்ட் ஒரு வாரத்துக்கு முன்னாடி சர் மேத்யூ லெட்டான் காலமாறார். மேலும், சர் மேத்யூ லெட்டான் ஒரு மில்லியனர்! இங்கிலாந்தின் கொடை பணக்காரர்களில் ஒருவர்.''

''இருக்கலாம். ஆனா ...''

''பொறு. ஒவ்வொண்ணா. அவருக்கு ஓர் உறவு. அந்த உறவு மேல அப்படி அவருக்கு அபிலாஷை. ஆகவே அவர் மேல தான் தன்னுடைய அத்தனை சொத்துகளையும் அவர் விட்டு வெச்சிருப்பார்னு நாம வசதியா எடுத்துக்கலாம்.''

''ஆனா ...''

''அவருடைய பொழுதுபோக்குக்கு விட்டு வைக்க மாட்டாரா - தன் மரணத்தின் வாயிலா வரும் தொகையில அவர் உயிர் போல நடத்தின பொழுதுபோக்குக்கு எதையும் விட்டு வைக்க மாட்டாரா...? யெஸ். ஆனா பெரும்பாலான ஒட்டுமொத்தப் பணமும் மைக்கேல் லெட்டானுக்குத்தான் போகும். போன செவ்வாய்க்கிழமை லெட்டான் காணம போயிருக்கார் எனும் செய்தி கிளம்புது - உடனே புதன்கிழமையே மேடமுடைய வாழ்க்கையின் மீது தாக்குதல் ஆரம்ப மாயிடுது. ஒரு வேளை ஹேஸ்டிங்ஸ், தான் பறக்க ஆரம்பிப்பதற்கு முன்னாடி ஓர் உயிலை மைக்கேல் லெட்டான் எழுதி, அதன்படி தனக்கு வரவுள்ள அத்தனை தொகையையும் தன்னுடைய துணைக்குப் போகும்படி அவர் எழுதியிருந்தால்.........?''

''இது வெறும் கற்பனை சப்பைக்கட்டு.''

''இது வெறும் கற்பனை சப்பைக்கட்டு - யெஸ். இருக்கலாம். ஆனா நடந்தது இப்படித்தான் இருந்தாகணும். ஏன்னா, இப்படி இல்லாவிட் டால், நடந்துள்ள எதற்குமே எந்த அர்த்தமும் தர முடியாது. கைபிருப்பி லுள்ளது ஒண்ணும் விரல் விட்டு எண்ணும்படியான சின்ன தொகை கிடையாதுடா. அது ஒரு மாபெரும் சொத்து.''

விஷயத்தை என் மண்டைக்குள் ஓட விட்டபடி சற்று நேரம்

அமைதியாயிருந்தேன் நான். பொய்ரெட், துளி கூட யோசனைகளின்றி முடிவெடுக்கிறான் என்றே எனக்குப்பட்டது. இருந்தாலும் உள்ளூர அவன் சரிதான் என்றும் தோன்றியது. இதற்கு, தான் சொல்வது தான் சரியென அவனிடமிருந்து வெளியான அசாதாரண வீச்சு தந்த தாக்கம் கூட காரணமாயிருக்கலாம். ஆயினும் இதையெல்லாம் இன்னும் அதிகமாய் நிரூபித்துக் காட்ட வேண்டிய தேவையிருப்பதும் விளங்கியது.

''அவங்களுக்குள்ளே நடந்த நிச்சயதார்த்தம் தான் ஒருத்தருக்கும் தெரியாதே'' என வாதிட்டேன் நான்.

''பார்! யாருக்காவது தெரியும்டா. எதுவுமே ரகசியமாக இருக்க முடியாது - எப்பவுமே, எப்படியோ யாரோ தெரிஞ்சுக்கிறாங்க. அப்படி தெரியாமலே இருந்துட்டாலும், ஊகிக்கிறாங்க. மேடம் ரைஸ் சந்தேகப் பட்டாங்க. ஆமாம்னு நிக்கும் ஒத்துக்கிட்டதை கவனிச்சே இல்லே? தனக்கு ஏற்பட்ட அந்த சந்தேகங்களை அவங்க நிஜங்களா ஆக்கிட வாயில்லே?''

''எப்படி?''

''வெல். ஒண்ணு நிச்சயம் - மைக்கேல் செட்டானுக்கும் மேடம் நிக்குக்கும் இடையே கூடுதப் போக்குவரத்து இருந்திருக்கணும். கொஞ்ச நாளாகவே ரெண்டு பேரும் நெருக்கமான தொடர்புல இருந்திருக்காங்க. மேடமுடைய நெருங்கியத் தோழி அவங்களை ஒரு பொறுப்பற்ற பொண்ணு என்பதைத் தவிர வேற எப்படியும் வர்ணிக்க விரும்பலே. எடுத்தா எடுத்த இடம், வெச்சா வெச்ச இடம். இது தான் நிக். வீடு முழுக்கப் பரப்பி வெக்கிறாங்க. அவங்க வாழ்க்கையில எதையாவது ரகசியமா மறைவா வெச்சிருப்பாங்களா என்பது, எனக்குப் பெருத்த சந்தேகம் தான். ஓ, யெஸ். அவங்களைப் பற்றிய அந்தரங்கங்களைத் தெரிஞ்சுக்கிறது ரொம்ப சுலபம்டா.''

''அப்படினா, ஃப்ரெட்டரிக்கா ரைஸுக்கு, அவங்க தோழி செஞ்சிருக்கிற உயில் பற்றிய விவரங்களெல்லாம் தெரியுமா என்ன?''

''சந்தேகமில்லாம. ஓ, யெஸ் மேன். அது இப்போ முழுக்க சுருங்கிடுச்சு. நான் கொடுத்த 1 முதல் 10 வரையிலான பட்டியல் உனக்கு ஞாபகமிருக்குல்லே? அது வெறும் ரெண்டு நபர்களா இப்போ சுருங்கிடுச்சு. வேலைக்காரங்களை நான் விலக்கிடறேன். கேப்டன்

சாலஞ்சரையும் நான் ஒதுக்கிடறேன் · இங்கிருந்து முப்பது மைல் மட்டுமேயிருக்கும் ப்ளை-மவுத்திலிருந்து இங்கே வந்து சேர அவர் அசாதாரண ஒன்றரை மணி நேரம் எடுத்துக் கொண்டிருந்த போதிலும்! வெறும் இருபது பவுண்டு பெறுமானமுள்ள ஒரு படத்துக்குப் போய் ஐம்பது பவுண்டு தர முன் வந்த அந்த நீள மூக்கு மிஸ்டர் லாஸரஸையும் தள்ளிடறேன். நெஞ்சார பழகும் கனிவானவங்களான ஆஸ்திரேலியர் களையும் நீக்கிடறேன். இன்னும் ரெண்டு பேரை மட்டும் பட்டியல்ல நான் மிச்சம் வைக்கிறேன்.''

''ஒண்ணு, ஃப்ரெட்டரிக்கா ரைஸ்'' என்றேன் நான் மெதுவாய். சொல்லும் போதே, தங்க நிற முடி கொண்டு, வெளிறி உடைந்துப் போய்க் கிடந்த அவரது அமைப்பினை நான் பார்த்தேன்.

''ஆமாம். அவங்க நிச்சயமா உண்டு. எத்தனை தான் ஜாக்கிரதையா மேடம் நிக்குடைய உயில் வார்த்தைகள் வேயப்பட்டிருந்தாலும், அவங்களுக்கு அப்புறமா வருவது, மேடம் ரைஸ் தான். கடைசி வீட்டைத் தவிர எல்லாமும் அவளுக்குப் போயிடும். மேடம் மேக்கிக்கு பதிலா மேடம் நிக் மட்டும் நேற்று சுடப்பட்டிருந்தா இன்னிக்கு மேடம் ரைஸ் இங்கிலாந்தின் பணக்காரப் பெண்மணியா எழுந்து நின்னிருப்பாங்க.''

''என்னால நம்பவே முடியலே!''

''என்ன சொல்ல வரே? ஓர் அழகிய பெண் கொலைகாரியா திற்பதையா நம்ப முடியலேனு சொல்ல வரே? நீதிபதிகள் கிட்டே இந்த ஒரு பாயிண்ட் சிக்கலை ஏற்படுத்தும். அழகியா கொலைகாரி? போகட்டும். இன்னும் ஒருத்தர் மேலயும் சந்தேகம் உண்டு.''

''யார்?''

''சார்ல்ஸ் வைஸ்.''

''ஆனா அந்த வீட்டுல இவருக்கு உரிமையிருக்கே?''

''ஆமாம் - ஆனா அது அவருக்கே தெரியாம இருக்கலாமே. அவர் தான் மேடம் நிக்குடைய உயிலைத் தயார் பண்ணிட்டு ஒப்படைச்சிருப் பாரா? இருக்காதுனு நினைக்கிறேன். எனில், அது, அவர்கிட்டேயே தானிருக்குமே தவிர, 'என்கிட்டே தான் எங்கேயாவது இருக்கும்'னு நிக் சொன்னாங்களே... அப்படியெல்லாம் அவங்க வீட்டுல எங்கேயாவது இருக்காது. அப்படினா, புரிஞ்சுக்கோ ஹேஸ்டிங்ஸ், அந்த உயில் பற்றி

அவருக்கு ஒண்ணுமே தெரியாம இருக்கும் சாத்தியக்கூறு நிறைய இருக்கு. நிக் உயில்னு ஒண்ணு பண்ணவேயில்லேனு தான் அவர் நினைக்கக் கூடும்... இந்த நிலைமையில, 'மகனுக்கு அடுத்த உறவு' எனும் தகுதியில அவருக்கு வீட்டு உரிமை வந்துடும்.''

''புரியலேடா, புரியலே!''

''சார்ல்ஸும் ஓல்ட் நிக்குக்கு மீதமுள்ள ஒரே உறவுடா. நிக்கும் இல்லேனு ஆகி, வேற எந்த உயிலும் இல்லேனு ஆனா, வீடு சார்ல்ஸுக்குத் தானே போகும்?''

''நீ கடைசியிலே சொன்னியே...'' என்ற நான், ''அது உண்மையிலேயே அதிக சாத்தியமா படுதுடா.''

''வஞ்சக வக்கீல். கதைகள்ல வரும் பிரபல பாத்திரம் போல. வக்கீலா இருந்துக்கிட்டே இன்னொரு பக்கம் அவருக்கு உக்கிரமான மற்றொரு முகமொன்றுமிருந்தா, அவரைப் பற்றி நாம சந்தேகப்படுவது நிச்சயம் தான்னு ஆயிடும் ஹேஸ்டிங்ஸ். நடந்துக்கிட்டிருக்கிற விஷயத்துல மிஸஸை விட அதிகம் தென்படுவது சார்ல்ஸ் தான் என்பதே நிஜம். அந்த பிஸ்டல் பற்றி சார்ல்ஸுக்குத் தான் நிறைய தெரிஞ்சிருக்கும்... அவர் தான் அதை உபயோகப்படுத்தியிருக்க வாய்ப்பு அதிகம் உள்ளவர்.''

''அந்தப் பெருங்கல்லை கீழே உருட்டித் தள்ளும் வாய்ப்பும் உள்ளவர்.''

''இருக்கலாம். ஆனா, அதை உருட்டித் தள்ள, சும்மா ஒரு நெம்பு நெம்பியிருந்தாலே போதும்னு நான் சொன்னதை மறக்க வேண்டாம். சரியான நிமிடத்துல பாறை உருட்டப்படாமல் தவறியதும், அதனால அது மேடம் நிக்கைக் குறி தவற விட்டதும், ஒரு பெண்ணின் கை வரிசையைத் தான் மிகைப்படுத்திக் காட்டுது. இன்னிக்குத் தேதியில பல பெண்கள் ஆண்களுக்கு சமமான இயந்திர சக்தி கொண்டு திகழ்ந்தாலும், மோட்டமுடைய காரை வேகவேகமா செயலிழக்கச் செய்ததுல ஓர் ஆணுடைய விசைதான் முக்கியமா தெரியுது. இத்தனைக்கும் நடுவுல, ஓரிரு தியரிகள், மிஸ்டர் வைஸ் மீதான சந்தேகத்துக்கு எதிரா இருக்கு.''

''எதெது?''

''ரெண்டு பேருக்கும் நடந்த நிச்சயதார்த்தத்தைப் பற்றிய தகவலைத்

தெரிஞ்சிருப்பதுல - மிஸஸை விட சார்ல்ஸுக்கு வாய்ப்பு கம்மி. இன்னொன்னுமிருக்கு. அவருடைய நடவடிக்கைகள் - அதிதுரிதமா இருக்கு.''

''என்ன சொல்றேங்கிறதைப் புரியும்படியா பேசுப்பா. ஊஃப்... தலை கொதிக்குது.''

''வெல்... நேற்று இரவு வரைக்கும் லெட்டான் செத்தான் என்பது குறித்து ஆதாரபூர்வ அறிவிப்பு கிடையாது. ஆதாரங்களேதுமின்றி, அவசர அவசரமா இயங்குவது, ஒரு லீகல் வக்கீலின் நடவடிக்கைக்கு மிக மிக எதிரானது.''

''ஆமாம்'' என்றேன் நான். ''ஒரு பெண் சட்டுனு முடிவெடுத்து இயங்கிடுவா.''

''எக்ஸாக்ட்லி. இது தான் பெண் புத்தி.''

''நிக் உயிர் பிழைத்த விதம் மகா ஆச்சரியமானதா இருக்கு. கொஞ்சமும் நம்ப முடியாத சங்கதி.''

அப்போது திடுமென 'நிக்குக்கு வசீகரமான வாழ்க்கை வாய்ச்சிருக்கு' என்று ஃப்ரெட்டரிக்கா ரைஸ் சொன்னபோது அவர் குரலில் இருந்த தொனி நினைவுக்கு வந்தது. சற்றே நடுங்கிப் போனேன்.

தற்சமயம் வளைந்து சுழிந்துப் போய்க் கொண்டிருந்த மலையுச்சிப் பாதையில் நாங்களிருவரும் ஏறிக் கொண்டிருந்தோம். இந்த சந்திப்பின் சிறிய கேட் வழியாகத்தான் நாங்கள் கடைசி வீட்டுக்குள் போயிருந்தோம்.

''ஊஃப்'' என்றான் பொய்ரெட். ''அந்த ஏற்றம் படு செங்குத்தாயிருக்கு'' என்றவன், தனது மீசையை உருவி விட்டபடி ''நான், யார் குற்றமற்றவங்களோ அவங்க பக்கத்துல நிக்கறேன்'' என்றான். ''நான் நிக் பக்கமா நிக்கறேன் - ஏன்னா அவங்க தாக்கப்பட்டிருக்காங்க. நான் மேடம் மேக்கிக்காக பேசறேன் - ஏன்னா அவங்க கொல்லப் பட்டிருக்காங்க.''

''அப்படினா நீ ஃப்ரெட்டரிக்கா ரைஸ் மற்றும் சார்ல்ஸ் வைஸ் ஆகியோருக்கு எதிரா?''

''நோ, நோ, ஹேஸ்டிங்ஸ். நான் திறந்த மனசோடத்தான் இருக்கேன். தற்போதைக்கு இந்த ரெண்டு பேர்தான் முன் வந்து நிக்கறாங்கனு சொல்ல வந்தேன்.''

நாங்கள் வீட்டை ஒட்டி ஓடிய வராண்டா பகுதி பக்கமாய் இப்போது வந்திருந்தோம். ஒரு மனிதன் அங்கு புல் வெட்டும் இயந்திரத்தை ஓட்டிக் கொண்டிருந்தான். நீளமான முட்டாள் முகம் அவனுக்கு. மந்த விழிகள். அவனடியில் பத்து வயது மதிக்கத்தக்க சிறுவன்; அழுக் கேறிய ஆனால் புத்திசாலி பார்வையோடு.

வரும்போது, அந்தப் புல் வெட்டும் இயந்திரத்தின் ஓசையை நாங்கள் கேட்கவில்லை என்பது என் மூளைக்குள் வெட்டியது. எனில் இத்தோட்டக்காரன் இப்போது வேலை செய்து கொண்டிருக்கவில்லை போலும் என நானாய் எண்ணிக் கொண்டேன். வேலையிலிருந்து தாற்காலிகமாய் ஓய்வெடுத்துக் கொண்டிருக்க வேண்டும்... எங்களைப் பார்த்தவுடன் குதித்தெழுந்து வேலைக்குள் நுழைந்திருக்கலாம்.

''குட் மார்னிங்'' என்றான் பொய்ரெட்.

''குட் மார்னிங்.''

''தோட்டக்காரன்னு நினைக்கிறேன். வீட்டு வேலைங்களை செய்யும் அந்தம்மாவோட கணவன்.''

''இது எங்கப்பா'' என்றான் சிறுவன்.

''சரிதான் ஸார்'' என்றான் அவன் பொய்ரெட் சொன்னதற்கு. ''நீங்க இங்கிலாந்து கிடையாது இல்லே? வெளிநாடு. பெல்ஜியம்? ஆங்... அம்மா பற்றி ஏதாவது சேதி கிடைச்சுதா, ஸார்?''

''அவங்களைப் பார்த்த கையாட வந்திருக்கேன். நேற்று ராத்திரி அவங்களுக்கு அமைதியா கழிஞ்சிருக்கு.''

''இங்கே எங்களைப் பார்க்க போலீஸ் வந்திருந்தது'' என்றான் பையன். ''அங்கே தான் அந்தம்மா செத்துது. படிகளுக்குப் பக்கத் துலேயே. இங்கேயே ஒரு பன்னி கொல்லப்பட்டதையும் நான் பார்த்திருக்கேன். ஏன்ப்பா?''

''ஆஹ்!'' என்றான் தகப்பனார் எவ்வித உணர்ச்சியுமற்று.

''அப்பா பன்னிங்களைக் கொல்லுவார். பண்ணுவே தானேப்பா? ஒரு பன்னியைக் கொல்லும்போது நானே பார்த்திருக்கேன். எனக்கு அது ரொம்ப புடிச்சுது.''

''பன்னிங்களைக் கொல்லுவது சின்னப்பசங்களுக்கு குஷியா யிருக்கும்'' என்று, ஏதோ மாறா இயற்கை விதியொன்றைக் குறிப்பிடு வது போல் சொன்னான் தோட்டக்காரன்.

''பிஸ்டல்ல சுட்டிருக்காங்க, அந்தப் பொம்பிளையை'' - தொடர்ந்தான் சிறுவன். ''தொண்டையில சுடலே. நேர!''

நாங்கள் இப்போது வீட்டுக்குள் நுழைந்திருந்தபோது, பிணம் பற்றியே பேசும் அந்தப் பிசாசுக் குழந்தையிடமிருந்து விடுதலை பெற்றதில் நிம்மதியானேன்.

வரவேற்பறைக்குள் பொய்ரெட் நுழைந்து விட்டிருந்தான். அவ்வறையின் ஜன்னல்கள் திறந்திருந்தன. அப்போது, துக்கத்தை அனுஷ்டிக்க வழக்கமாய் இங்கிலாந்து மக்கள் உடுக்கும் முழு கறுப் புடையிலிருந்த எலென் அங்கு வந்தாள். எங்களைப் பார்த்ததில் அவள் எந்த ஆச்சரியத்தையும் காட்டவில்லை.

மிஸ் பக்லேவின் அனுமதியுடன் இங்கு வீட்டினைப் பரிசோதிக்க வந்திருப்பதாய் அவளுக்கு விளக்கினான் பொய்ரெட்.

''நல்லது, ஸார்.''

''போலீஸ் முடிச்சுட்டாங்களா?''

''அவங்களுக்குத் தேவைப்பட்ட அத்தனையையும் பார்த்துட்டதா தான் சொன்னாங்க, ஸார். இன்னிக்கு அதிகாலையில வந்துட்டாங்க. தோட்டத்துலயே இருந்தாங்க. எதையாவது கண்டெடுத்திருப்பாங்களானு தெரியலே, ஸார்.''

சொல்லி விட்டு அவள் அறையை விட்டு வெளியேறியிருக்க வேண்டும்... அதனை, பொய்ரெட்டின் ஒரு கேள்வி தடுத்தது.

''நேத்து ராத்திரி... மிஸ் பக்லே சுடப்பட்டுட்டாங்கனு கேட்டவுடன், நீங்க அதிக ஆச்சரியமானீங்களா?''

''ஆமாம், ஸார். படு ஆச்சரியமானேன். மிஸ் மேக்கி ரொம்ப நல்ல பொண்ணா பழகினாங்க. அவங்களைப் போய் தாக்குமளவுக்கு வஞ்சகம் நிறைஞ்ச ஒருத்தர் இங்கே இருப்பாங்கனு என்னால கற்பனை கூட பண்ணிப் பார்க்க முடியலே, ஸார்.''

''பதிலா - வேற யாராவது சுடப்பட்டிருந்தால், நீங்க இத்தனை ஆச்சரியமாகியிருக்க மாட்டீங்க, அப்படித்தானே?''

''நீங்க என்ன பேசறீங்கனு எனக்கு விளங்கலே, ஸார்.''

''நேத்து ராத்திரி நான் ஹாலுக்கு வந்தபோது...'' என்று நான் இடை புகுந்தேன்: ''... உடனேயே யாருக்காவது ஏதாவது அடிபட்டிருச்சானு நீங்க என்னைக் கேட்டீங்க. அப்படி எதையாவது எதிர்பார்த்து நீங்க

காத்திருந்தீங்களா?''

அவள் அமைதியாய் நின்றாள். அவள் உடுத்தியிருந்த உடையின் நுனியை அவளது விரல்கள் வேகமாய் உருட்டின. மறுப்பாய் தலையசைத்த அவள், முணுமுணுத்தாள்: ''உங்களைப் போன்றவங்களுக்கு என்ன சொன்னாலும் புரிய வைக்க முடியாது.''

''ஆமாமாம்'' என்ற பொய்ரெட் சொன்னான்: ''நான் புரிஞ்சுக்கிறேன். நீங்க சொல்லப்போவது எத்தனை தான் வேடிக்கையானதா இருந்தாலும் அதை நான் புரிஞ்சுக்கிறேன்.''

அவனை சந்தேகமாய் நிமிர்ந்து பார்த்தாள். பிறகு அவனை நம்பலாம் என்று மனதினை ஆக்கிக் கொண்டவளாய் தெரிந்தாள்.

''கவனியுங்க, ஸார்'' என்றாள். ''இது ஒண்ணும் நல்ல வீடு கிடையாது.''

நான் சற்று ஆச்சரியமானேன். கூடவே அவளது வார்த்தைகளை வெறுத்தேன். பொய்ரெட்டோ, சொல்லப்பட்ட விமர்சனம் ஒன்றும் எதிர்பார்க்காத ஒன்று கிடையாது என்பது போல சாதாரணமாய் எடுத்துக் கொண்டான்.

''பழைசாயிடுச்சுனு சொல்ல வரீங்களா?''

''ஆமாம், ஸார். நல்ல வீடு கிடையாது.''

''ரொம்ப நாளா இங்கே இருக்கீங்களா?''

''ஆறு வருஷமா, ஸார். சின்னப் பொண்ணாயிருக்கும்போதே இங்கே வந்துட்டேன். அடுக்களையில, சமையக்காரியா. அது சர் நிக்கோலஸ் காலம். இப்படியே தான் அப்பவும் இருந்தது.''

அவளைக் கவனமாய் பார்க்க ஆரம்பித்தான் பொய்ரெட். ''பழைய வீடுகள்ல...'' என்றவன், சொன்னான்: ''என்னவோ பேய் உலாத்தற மாதிரி ஓர் உணர்வு இருந்துக்கிட்டேயிருக்கும்.''

''அதே... அதே தான் ஸார்'' என்றாள் அவள் ஆர்வமாய். ''கெட்ட எண்ணங்கள். நிகழ்வுகளும் கூட கெட்டதாகவே. அழுகிப்போன மாதிரியிருக்கும் ஸார், வீட்டை விட்டுட்டுப் போகவும் முடியாது. சொந்தமாச்சே. என்னிக்காவது இந்த வீட்டுல ஒரு கெட்ட சமாச்சாரம் நடக்கத்தான் போகுதுனு நான் தீர்மானமா இருந்தேன், ஸார்.''

''வெல்... நீங்க நினைச்சது தான் சரினு நிரூபணமாயிடுச்சு.''

''யெஸ், ஸார்.''

அவளது தொனியின் அடியில், மிகச் சின்னதாய், திருப்தி தெரிந்தது... ஒருவன் செய்த எதிர்கால கணிப்பு சரியாய் முடிந்து விட்டதால் உருவாகும் திருப்தி அது.

''ஆனா அது மிஸ் மேக்கியா இருக்கும்னு நீங்க நினைக்கலியா?''

''ம்ம். இல்லே, ஸார். யாரும் அவங்களை வெறுத்தது கிடையாது - எனக்கு நிச்சயமா தெரியும்.''

அந்த வார்த்தைகளில் ஏதோ ஒரு துப்பு புதைந்துக் கிடப்பதாய் எனக்கு விளங்கியது. இதையே இன்னும் தோண்டினால் நிச்சயம் ஒளி கிடைக்கும். அதைத் தான் பொய்ரெட் செய்யப் போகிறான் என நான் ஆர்வமானேன். ஆனால் அவனோ முற்றிலும் வேறொரு விஷயத்துக்குள் புகுந்து விட்டான்.

''சுடப்பட்ட ஓசைகளை நீங்க கேட்கவேயில்லையா?

''கூடவே கேட்டுக்கிட்டிருந்த பட்டாசு ஓசைகளை வெச்சுக்கிட்டு என்னால இதைக் கேட்டிருக்க முடியாதே, ஸார். பட்பட்னு அத்தனை சத்தம், அதுங்க.''

''நீங்க வெளியே போய் பட்டாசு திருவிழாவைப் பார்க்கலியோ?''

''நோ. டின்னர் சாப்பிட்டதை நான் அப்போ சுத்தம் பண்ணி முடிக்கலே.''

''வெயிட்டர் உங்களுக்கு உதவிக்கிட்டிருந்தாரா?''

''நோ, ஸார். வானத்துல பட்டாசுங்க வெடிக்கிறதைப் பாக்கறதுக்கு அவன் தோட்டத்துக்குப் போயிருந்தான்.''

''ஆனா, நீங்க போகலே.''

''நோ, ஸார்.''

''அது ஏன் அப்படி?''

''வேலைங்களை முடிச்சுடணும்னு இருந்தேன்.''

''வண்ண வண்ணப் பட்டாசுங்கள் உங்களுக்குப் பிடித்த மில்லையா?''

''ஓ, யெஸ் ஸார். இல்லாமலில்லை. கவனியுங்க... அந்த விழா ரெண்டு நாளைக்கு இருக்கு. நாளைக்கு சாயங்காலம் எனக்கும் வில்லியமுக்கும் விடுமுறை. நேரா டவுனுக்கே போய் அங்கேயிருந்து பார்க்கத் திட்டமிட்டிருக்கோம்.''

''புரியுது. ஆங்... மேடம் மேக்கி அவங்களோட கோட்'டைக்

கேட்டதையும் உடனே அது அவங்களுக்குக் கிடைக்காத சங்கதி யையும், நீங்க கேட்டீங்க இல்லே?''

''மிஸ் நிக் மாடிப்பகுதிக்கு ஓடின சத்தத்தை நான் கேட்டேன், ஸார். முன்னாடி ஹாலிலிருந்து கூப்பிட்ட மேக்கி எதையோ கிடைக்கலேனு சொன்னதும் கேட்டது; கூடவே, 'சரி... நான் மேலங்கியை எடுத்துக் கறேன்...' அப்படினு அவங்க சொன்னதும்.''

''கேட்கறதுக்கு மன்னிக்கணும்'' என்ற பொய்ரெட் கேட்டான்: ''அவங்க தேடிக்கிட்டிருந்த கோட்டைத் தேடி எடுத்துத் தரும் முயற்சியிலே நீங்க இறங்கலையா? அல்லது, அதை விட்டுட்டு வந்திருந்த கார்லேந்து எடுத்து வந்து தர முயற்சிக்கலையா?''

''நான் பண்ண வேண்டிய வேலைங்களே என் தலைக்கு மேல இருந்தது, ஸார்.''

''ஆமாமாம். மேலும், அந்த ரெண்டு இளைய கன்னிகளும் உங்களை அப்படி பண்ண சொல்லாததிலும் ஆச்சரியமில்லே. அவங்க, நீங்க வெளியே பட்டாசு வெடிக்கிறதைப் பார்த்துக்கிட்டிருப்பீங்கனு நினைச்சு உங்களைக் கூப்பிடாம விட்டிருக்கலாம்.''

''யெஸ், ஸார்.''

''அப்படியா?! அப்படினா கடந்த வருடங்கள்ல நீங்க தவறாம பட்டாசு விழாவைக் கண்டு களிச்சிருக்கீங்க, ஆங்?''

வெளிறிப் போக ஆரம்பித்திருந்த அவனுடைய முகவாயில் சட்டென ஒரு நடுக்கம் வந்து சென்றது. ''நீங்க என்ன பேசறீங்கனு எனக்குப் புரியலே, ஸார். எங்களுக்குத் தோட்டத்துக்குப் போக எப்பவும் அனுமதியுண்டு. யாரும் தடுக்க மாட்டாங்க. இந்த வருஷம், பட்டாசு கொண்டாட்டத்தைப் பார்க்காம, இருக்கிற வேலைங்களை சீக்கிரம் ஏறக்கட்டுவோம்னு நான் முடிவெடுப்பது என்னோட உரிமைனு நான் நினைக்கிறேன்.''

''அம்மா, அம்மா. நான் உங்களை மடக்கணும்னு அப்படிக் கேட்கலே. அதானே... நீங்க ஏன் நீங்க நினைக்கிற மாதிரியே பண்ணக் கூடாது? ஒரு மாற்றம், இந்த வருஷம்...! மாற்றங்கள் எப்பவுமே இன்பந்தானே?''

அப்படியே சற்று நிறுத்திக் கொண்டவன், கூடுதலாய் சொன்னான்: ''ஆங்... இப்ப இன்னொரு சங்கதி. இதுல உங்களோட உதவி

கிடைக்குமா தெரியலே. இது ஒரு அரதப்பழைய வீடு - அந்தக் காலத்து வீடு. அப்படினா, இதுல, ஏதாவது ஒரு ரகசிய அறை, அல்லது ரகசிய வழி இருக்கா...? இதைப் பற்றி உங்களுக்கு எதாவது தெரியுமா?''

''வெல்... ஒரு தள்ளுக்கதவு கொண்ட சின்ன இடமுண்டு - இதே அறையில தான். சின்னப் பெண்ணாயிருந்தபோது அதை எனக்குக் காட்டினதா ஞாபகம். அது சரியா எந்தப் பகுதியில இருக்குனுதான் இப்ப எனக்கு நினைவு வர மாட்டேங்குது. அல்லது, ஒரு வேளை அது லைப்ரரியில இருக்குமோ? சரியா தெரியலையே.''

''ஓர் ஆள் மறைஞ்சுப் பதுங்கி நிக்கும் அளவுக்குப் பெருசோ?''

''ஓ, நோ, நிச்சயம் அப்படி கிடையாது, ஸார். ஒரு சின்ன கப்-போர்ட் மாதிரி. மாடிப்படி கீழான வளைவு போல. ஓரடி சதுரம் தானிருக்கும், ஸார். அதுக்கு மேல இருக்காது.''

''ஓ, அப்படியா?''

நடுக்கம் மீண்டும் அவள் முகத்தை அறைந்தது. ''நான் எங்கேயாவது ஒளிஞ்சிருந்தேன்னு நீங்க நினைச்சா - நான் அப்படி எதுவும் பண்ணலே! மிஸ் நிக் படியிறங்கி விரைவதை நான் கேட்டேன்... வெளியேறு வதையும் கேட்டேன்... அப்புறம் ஓர் அலறல். நான் ஹாலுக்கு வந்தேன் - என்னனு - ஏதுன்னு பார்க்க. இது கடவுள் மீதாணை, ஸார். கடவுள் மீதாணை.''

## அத்தியாயம் 13

# கடிதங்கள்

வெற்றிகரமாய் எலெனிடமிருந்து விலகியதும், ஒருவித சிந்தனை பொதிந்த முகத்தை என்னை நோக்கித் திருப்பினான் பொய்ரெட்.

''அவ அந்தத் துப்பாக்கி சுடப்பட்ட ஓசையைக் கேட்டிருப்பாளா? எனக்கென்வோ கேட்டிருக்கானே தோணுது. அவ கேட்டிருக்கா. அதனால கிச்சன் கதவைத் திறந்திருக்கா. அப்போ நிக் படிகள்ல வேகவேகமா இறங்கி வெளியேறும் அரவத்தைக் கேட்கிறா. அப்படி என்னதான் நடந்திருக்கும்னு பார்க்க அவளே ஹால் வரைக்கும் வர்ரா. இதெல்லாம், அப்படிப்பட்ட ஒரு கட்டத்துல இயற்கையா நடப்பவை தான். ஆனா, அந்த மாலைப்பொழுதுல அவ என்ன காரணத்துக்காக வெளியே இடம்பெற்ற வாண வேடிக்கையப் போய்ப் பார்க்காம பின்தங்கியிருக்கா? இதைத்தான் நான் தெரிஞ்சுக்க விரும்பறேன், ஹேஸ்டிங்ஸ்.''

''உள்ளே ஏதாவது ரகசியப் பதுங்குமிடமிருக்கானு நீ கேட்டதன் பின்னணி என்ன?''

''ஜஸ்ட் ஒரு விந்தையான ஐடியா - அது. அவ்ளோ தான். இன்னும் எண் பத்தை நாம முழுக்க விலக்கிடலையே!''

''எண் 10?''

''ம். என் பட்டியலின் கடைசி ஆள். நம்மைக் குடைந்தெடுக்கும் முகந்தெரியா வெளியாள். இந்த எலெனோட தொடர்புள்ள ஏதோ ஒரு காரணத்துக்காக நேற்று ராத்திரி அந்த எண் பத்து வீட்டுக்கு வந்திருந்ததா வெச்சுப்போம். வீட்டுக்குள்ளேயே இருக்கும் ஒரு ரகசிய அறையில அவன் - அவன் என்பதே என் அனுமானம் - அவன் பதுங்கிக்கிறான். ஒரு பொண்ணு அவனைக் கடந்துப் போக, அவளை அவன் நிக்குனு எடுத்துக்கறான். அவளை வெளி வரை பின்தொடரும் அவன் -

அவனை கட்டுடறான். என்ன... முட்டாள், அடிமுட்டாள் அப்படினு என்னை நினைக்கறியா! எப்படி பார்த்தாலும் அங்கே எவ்விதமான மறையும் இடங்களும் கிடையாதுனு நமக்கு இப்ப தெரியும். நேற்றிரவு கிச்சன்லேயே இருந்துட எலென் எடுத்த முடிவிருக்கே... அது மிக ஆபத்தானது. சரி வா... நாம போய் மேடமுடைய உயிலைத் தேடுவோம்."

படிக்குமறையில் எவ்வித ஆவணங்களும் இல்லை. நாங்கள் லைப்ரரிக்குப் போகும் முடிவெடுத்தோம். அது வாசல் பார்த்திருந்த ஓர் இருட்டறை. பழைய மாடல் மரத்தாலான பீரோக்களும் எழுதும் மேஜைகளும் இருந்தன.

இந்த அறையைச் சுற்றி வந்து பார்க்க எங்களுக்கு சற்று நேரம் தேவைப்பட்டது. இருந்த எல்லாமும் முழு குழப்பத்தில் சிதறிக் கிடந்தன. கொடுக்க வேண்டிய பில்கள் கொடுத்ததற்கான ரசீதுகள் என எல்லாமும் கலந்தடித்திருந்தன. அழைப்பிதழ்கள், பணத்தை சீக்கிரம் தரச்சொல்லி அழுத்தும் கடிதங்கள், நண்பர்களிடமிருந்து வந்த கடிதங்கள்.

"இதையெல்லாம் முதல்ல அடுக்குவோம்" என ஸ்திரமாய் சொன்ன பொய்ரெட் குறிப்பிட்டான்: "ஓர் ஒழுங்கோட. வரிசைக் கிரமமா."

சொன்னபடி அப்படியே செய்தான். அரை மணி நேரம் கழித்து முகமெங்கும் திருப்தி நிறைந்த பாவத்துடன் அமர்ந்தான் அவன். எல்லாமும் சுத்தமாக வகைப்படுத்தப்பட்டன... அடுக்கப் பட்டன... கோப்புகளில் பூட்டவும்பட்டன.

"இப்போ ஒரே ஒரு வேலை மட்டும் சர்வ நிச்சயமா நம்ம முன்னாடி நிக்குது. நாம எதையுமே மிஸ் பண்ணிடும் சாத்தியமே இல்லாத அளவுக்கு நாம இங்கேயிருக்கிற எல்லாத்தையும் இப்போ ஒரு தடவைப் படிச்சுடறோம்."

"வேண்டாம்னு நினைக்கிறேன். நமக்கு உதவும்படி இங்கே எந்த ஆவணமும் கிடையாது."

"இது தவிர."

என்னை நோக்கி, ஒரு கடிதத்தை குறுக்காய் சுண்டி விட்டான். பெரிய கிறுக்கலான கையெழுத்தில் அது எழுதப்பட்டிருந்தது.

*டார்லிங்...*

*பார்ட்டி ரொம்ப ரொம்ப அமைதியாயிருந்தது. பறவை போல இன்னிக்கு உணர்ந்தேன். அந்த சனியனை நீ தொடாதது புத்திசாலித்தனம் டார்லிங்... அதை எப்பவும் நீ பழகிடாதே. அப்புறம் விடறது அத்தனை கஷ்டமான காரியமா ஆகிடும். என் பாய் ஃப்ரெண்டுக்கு சீக்கிரம் சரக்கை அனுப்பும்படி எழுதிட்டேன். என்ன நரகம் இந்த வாழ்க்கை!*

*யுவர்ஸ், ஃப்ரெட்டரி.*

''போன பிப்ரவரி தேதி போட்டிருக்கு'' என சொன்னான் பொய்ரெட் சிந்தனையோடு. ''போதை மருந்து எடுத்துக்கிறாங்க அவங்க. ட்ரக்ஸ். அவளைப் பார்த்த மாத்திரத்திலேயே நான் இதை தெரிஞ்சுக் கிட்டேன்.''

''நிஜமாவா சொல்றே? இப்படி ஒரு விஷயத்தை நான் அவகிட்டே சந்தேகமே படலேப்பா.''

''இது ஏறத்தாழ வெளிப்படையாவே தெரிஞ்சுதுடா. இதுக்கு, அவங்க கண்ணை மட்டும் நீ கவனிச்சேனா போதும். கூடவே அசாதாரணமா திடீர் திடீர்னு மாறும் அவங்க குணம் வேற இருக்கு. சில சமயம் துள்ளலோடு குதிக்கிறாங்க; சில சமயம் சுரத்தற்று ஆயிடறாங்க - காலியா.''

''போதை மருந்து தர்ம சிந்தனைகளைப் பாதிக்குது, இல்லையா?''

''தவிர்க்க முடியாது. ஆனா மேடம் ரைஸ் முழுக்க முழுக்க அடிமையாகிவிட்ட ஒரு வகையா எனக்குத் தோணலே. அவங்க இப்பத்தான் அதன் ஆரம்பத்துல இருக்காங்க - முடிவுல அல்ல.''

''அப்போ - நிக்?''

''அவங்க கிட்டே இதன் எந்த அறிகுறியும் தெரியலே. இது போன்ற பார்ட்டிகள்ல அங்கொன்றும் இங்கொன்றுமா அவங்க கலந்துக்கிட் டிருக்கலாம் - ஆனா, அவங்க போதை எடுத்துக்கிறவங்க கிடையாது.''

''இதைக் கேட்க எனக்கு சந்தோஷமாயிருக்கு.''

'அவங்க கட்டுப்பாட்டுல ஃப்ரெட்டரிக்கா இருப்பதே இல்லை' என்று ஃப்ரெட்டரிக்கா குறித்து நிக் என்னிடம் சொல்லியிருந்த வர்ணனை எனக்குள் ஓடி மறைந்தது. பொய்ரெட் தலையாட்டிக் கொண்டே கையிலிருந்த கடிதத்தைக் குட்டிக் கொண்டிருந்தான்.

''நான் எதுலயும் ஒழுங்கு கிடையாது, தெரியுமோனு இதையெல் லாம்தான் அவங்க நம்மகிட்டே சொல்லியிருக்கணும்! வெல்... இங்கே நாம, நீ சொன்னது மாதிரி, எதுவும் கிடைக்காத தோல்வியைத்தான் தழுவியிருக்கோம். நாம மேடமுடைய ரூம் வரைக்கும் இப்போ போவோம்.''

நிக் அறையிலும் ஒரு டேபிள் இருந்தது, ஆனால், லைப்ரரியை ஒப்பிடும்போது அதில் கொஞ்சமாய்தான் வைக்கப்பட்டிருந்தன. இந்த அறையிலும், உயில் இருப்பதற்கான அறிகுறிகளே கிடைக்கவில்லை. அவளுடைய காரின் பதிவுப் புத்தகம் ஒன்றும் வங்கி சார்ந்த கடித மொன்றும் தான் எங்களுக்குக் கிடைத்தன.

களைத்துப் போன தொனியில் பெருமூச்செறிந்தான் பொய்ரெட்.

''இந்தக் காலத்து சின்னப் பொண்ணுங்க, சரியான முறையில பயிற்சி கொடுத்து வளர்க்கப்படுதில்லே. வேலைகளை ஓர் ஒழுங்கோட செய்யறது... வரிசைக்கிரமமா அழகா செய்யறது... என, சிரத்தையா வளர்க்கப்படும் விதிகளெல்லாம் இந்தப் பொண்ணுங்களுக்குக் கிடையாது போல. அவங்க - மேடம் நிக் - வசீகரமானவங்க. ஆனா, எதையும் ஈஸியா எடுத்துக்கும் அவங்களால பிரயோஜனம் கிடையாது. அவங்களுக்கும் பிரயோஜனம் கிடையாது, ஹேஸ்டிங்ஸ்.''

அவன் தற்சமயம் அங்கிருந்த ஒரு டேபிளின் தட்டுகளை இழுத்து அவற்றுள் என்னென்ன இருக்கின்றன என்ற சோதனையில் இருந்தான்.

அதனுள் இருந்தவற்றை அரசல் புரசலாக பார்த்த நான் உடனேயே லஜ்ஜையாகி, ''வேணாம்ப்பா அதெல்லாம்...'' என்றேன். ''பெண் களுடைய உள்ளாடைகள்டா.''

இதற்கு தனது தேடலை நிறுத்திய அவன், ''இதுல என்னடா யிருக்கு?'' என்றான் ஆச்சரியமானவனாய்.

''ச்சை. அதாவது - அதையெல்லாம் போய் - நாம தொட்டு விலக்கி - என்னடா நீ...?''

''சந்தேகமே கிடையாதுடா ஹேஸ்டிங்ஸ் - நீ சுத்த பழைய பஞ்சாங்கம்டா. மேடம் நிக் இங்கே இருந்தாலும் இதையே தான் சொல்லியிருப்பாங்க அந்தக் காலத்துக் கட்டுப்பெட்டி மனுஷன்யா நீங்கிற மாதிரி கூட கூடுதலா வாரியிருக்கலாம்! உள்ளாடைங்க பற்றி யெல்லாம் பேச இந்தக் காலத்துச் சின்னப் பொண்ணுங்க துளியும்

கூச்சப்படுவது கிடையாது, தெரியுமா? பெட்டிகோட் - ப்ரா - எலாஸ்டிக்ஜட்டி - இதுல எதுவுமே இனி எதிர்காலத்துல காதோடு காதா பேச வேண்டிய ரகசிய வார்த்தைகள் கிடையாது...! பீச்சுக்குப் போய் பாரு... இதெல்லாம் உன் காலுக்கடியிலேயே அவிழ்த்துப் போடப் பட்டுக் கிடக்கும். நீ என்னடான்னா இதைப் பற்றி, விட்டு விட்டு - பயந்து பயந்து பேசறே...!''

''அதை விடு. ஆனா நீ இப்பப் பண்ற இந்த உத்தியோகத்துக்கு அப்படி ஒரு தேவையிருப்பதா எனக்குப் படலே.''

''நண்பா, மொதல்ல கண்ணைத் தொறந்து பாரு. அவங்களுடைய இந்த சொத்துகளை அவங்க மறைச்சுப் பூட்டி வெக்கலே. ஆக, அவங்க எதையாவது மறைச்சுப் பதுக்கி வெக்கணும்னு நினைச்சிருந் தாங்ன்னா, எங்கே ஒளிச்சிருப்பாங்க? நிச்சயமா பெட்டிகோட்டுகள் மற்றும் அதற்கு இணையான சமாச்சாரங்களுக்குக் கீழே தான். ஆஹ்! இதென்ன இங்கே அடியில செருகிக்கிடக்கு?''

சற்றே நிறம் மங்கியிருந்த ஒரு பிங்க் நிற ரிப்பனால் கட்டப்பட்டிருந்த ஒரு கொத்துக் கடிதங்களைத் தற்போது கையில் தூக்கி வைத்துக் கொண்டு நின்றான் பொய்ரெட். ''என் கணிப்பு சரினா - இவை, மிஸ்டர் மைக்கேல் ஸெட்டான் எழுதியிருக்கும் காதல் கடிதங்களா இருக்கும்.''

சர்வ சாதாரணமாக ரிப்பனைத் தளர்த்தி கடிதங்களைப் பிரிக்க ஆரம்பித்தானவன்.

''பொய்ரெட்...'' - குற்றஞ்சுமத்தும் வகையில், கத்தி விட்டேன் நான். ''நீ இப்படி பண்ணவே கூடாது, ஆமாம். விளையாட்டு விஷய மில்லே இது.''

''நான் விளையாடலே நண்பா'' - திடுமென்று அவனுடைய குரல், தீவிரமாகவும் நிச்சயமாகவும் கனமாய் ஒலித்தது. ''நான் விளை யாடலே. ஒரு கொலைக்காரனைத் தேடி ஓடிக்கிட்டிருக்கேன்'' என்ற அவனது குரல் கடுமையாகியிருந்தது.

''ஆமாம்...'' என அக்குரலின் தீவிரத்தால் சற்று பதுங்கிய நான், ''இருந்தாலும் - அந்தத் தனிப்பட்ட கடிதங்களை - நாகரீகமற்று எடுத்து...''

''இந்தக் கடிதங்கள் ஒன்னும் எனக்கு அப்படி உதவிடப் போவது கிடையாது தான் - ஆனால், மாறாக, சின்ன தகவல் ஏதாவது கொடுத்து

உதவிடலாம் இல்லையா? கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நான் பயன்படுத்திக்கணும், ஃபிரண்ட். ஒரு ஜோடிக் கண்களை விட இரு ஜோடிக் கண்கள் பார்ப்பது, சாதகமானதா தானிருக்கும். ஆகவே - வா! வரும்போதே, உறுதியான அந்த எலென் பொண்ணுக்கு இந்தக் கடிதங்கள் அனைத்தும் மனப்பாடமா தெரியும் என்பதையும் ஜீரணிச்சுக்கிட்டே வா.''

அவன் சொன்னது போல பண்ண எனக்கு விருப்பமில்லை. இருந்தபோதிலும், பொய்ரெட்டின் நிலையிலிருந்து பார்க்கும் போது எதையும் விட்டு வைக்கக் கூடாது என்பதில் நான் மெல்ல மெல்ல ஸ்திரமானேன்; கூடவே, 'எதை வேணும்னாலும் வீட்டுல பார்த்துக் குங்க...' எனும் ரீதியில் நிக் தந்திருந்த அனுமதி, தார்மீக ரீதியாய் என்னிடம் விளைந்திருந்த தயக்கத்தை ஒதுக்க உதவியது.

கடந்த ஜனவரியில் தொடங்கி, கடிதங்கள் பல தேதிகளில் எழுதப்பட்டிருந்தது.

*புது வருட தினம்*

*'டார்லிங் - புது வருடம் பிறந்து விட்டது... நான் சில உறுதிகளை இந்த வருடத்தில் எடுத்துக் கொண்டுள்ளேன். நீ நிஜமாய் என்னைக் காதலிக்கிறாய் என்பதைக் கேட்கவே எனக்கு ஆச்சரிய அதிசயமாய் இருக்கின்றது. இதனால் என் வாழ்க்கையின் அர்த்தத்தையே நீ மாற்றி விட்டாய். நம் கண்கள் சந்தித்த அந்த முதல் சந்திப்பிலிருந்தே - இது - நம்மிருவருக்கும் தெரியும் என்றே நான் நினைக்கிறேன். என்னருமை பெண்ணே, ஹாப்பி நியூ இயர்.*
*உனது, என்றென்றும்,*
*மைக்கேல்.'*

*பிப்ரவரி 8*

*'அருமையிலும் அருமையான, டியர் லவ்.*

*உன்னை அடிக்கடி பார்க்க வாய்க்கக் கூடாதா என்று நான் எப்படி ஏங்கிக் கொண்டிருக்கிறேன் என உனக்குத் தெரியுமா? இது முடியாது போவது, பெருந்தண்டனை, இல்லையா? தேவையில்லாமல் பொத்திப்*

பொத்தி மறைத்து வைப்பது எனக்குத் துளியும் பிடிக்கவில்லை. பொய்யும் ரகசியமும் உனக்கு எந்த அளவுக்கு வேதனை தருகின்றன என எனக்குப் புரிகின்றது. எனக்கும்தான். ஆனால், சத்தியமாய் சொல்கிறேன், விஷயம் கசிந்து விட்டால் நம்முடைய காதல் வண்டி தலைகுப்புற குடைசாய்ந்து விடும். சீக்கிரம் நடக்கும் கலியாணங்களின் மீதும் அதனால் ஓர் ஆணின் வளர்ச்சியில் ஏற்படும் முட்டுக் கட்டைகள் பற்றியும் நிறைய நிறைய வெறுப்பில் உள்ளவர் என் மாமா. ஏதோ, என் தேவதையான நீ வந்து, என்னுடைய வாழ்க்கையை சீர்குலைத்து விடுவதைப் போல அவருக்கு எண்ணம்! நீ! என் தேவதை வந்து!

கவலைப் படாமல் கலகலப்பாயிரு டார்லிங். எல்லாம் சரியாய் முடியும்.

உன், மைக்கேல்.'

*மார்ச் 2*

'நேற்று பறந்து கொண்டிருக்கும்போது உன்னை அதிகம் நினைத்தேன். ஸ்கார்-பொரா பகுதியின் மீது பறந்து கொண்டிருந்தேன். ஸ்கார்-பொரா. ஆசிர்வதிக்கப்பட்ட ஸ்கார்-பொரா. அதிர்ஷ்டம் செய்த ஸ்கார்-பொரா. உலகின் அதியற்புத ஆனந்த சொர்க்கபுரி, ஸ்கார்-பொரா. ஆங், டார்லிங்... உனக்குத் தெரியாது, உன்னை நான் எத்தனை காதலிக்கிறேன் என்று!

உன் டார்லிங், மைக்கேல்.'

*ஏப்ரல் 18*

'உயிரின் உயிரே...

வெடிக்கத்தான் போகிறது. நிச்சயமாய். நான் இதைப் பற்றிப் பேச்சை எடுத்தால் (எடுக்கத்தான் போகிறேன்), எனக்கும் அங்கிள் மாத்யூவுக்கும் இடையே கடும் தகராறு மூளத்தான் போகின்றது. ஒரு வேளை அவருக்கு இது பிடிக்காமல் போய் விட்டால்... வெல், நான் எதற்காக கவலைப்பட

வேண்டும்? அல்பெட்ராஸ் பற்றி நீண்டு நீண்டு நான் சொன்ன தொழில்நுட்ப விஷயங்களில் நீ அத்தனை ஈடுபாடாய் காது கொடுத்துக் கேட்டது எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது, டார்லிங். உன்னை நான் அவனோடு தூக்கிச் சுமந்து கொண்டு பறக்க வேண்டும் என எத்தனை துடிப்பிலிருக்கிறேன், தெரியுமா! ஒரு நாள் நடக்கும்! எக்காரணம் கொண்டும் நீ என்னைப் பற்றிய கவலையில் விழ வேண்டாம். இந்த சாகசம், வெளியிலிருந்து பார்த்தால் தெரிவது போல அப்படியொன்றும் மகா ஆபத்து நிறைந்தது கிடையாது. மேலும், நீ என்னையே நினைந்து வேண்டிக் கொண்டிருக்கும்போது என்னை அவன் அத்தனை சுலபத்தில் கொன்றுத் தூக்கிப் போக முடியாது!

எல்லாமும் சுபமாக முடிய உள்ளன, என் இனிய நினைவே! உன் மைக்கேல் வார்த்தைகளை நம்பு!'

ஏப்ரல் 20

'தேவதையே.

நீ சொல்வது அத்தனையும் மிகச்சரி. உன் கடிதங்கள் எல்லாவற்றை யும் நான் பொக்கிஷமாய் பாதுகாக்கப் போகிறேன். உன் தரத்துக்கு நான் பாதி கூட தகுதியில்லாதவன். எவரையும் விட நீ மிக வித்தியாசமானவள். நான் உன்னைப் பெருமையாய் பார்க்கிறேன்.

உன், மைக்கேல்.'

(இக்கடிதம் தேதி குறிப்பிடாதது.)

'உயிரின் உயிரே.

வெல் - நாளை நான் கிளம்புகிறேன். உடல் முழுக்கக் கிளர்ச்சியிலும் எதிர்பார்ப்பிலும் இருக்கிறேன். வெற்றி நிச்சயம் என்பதே என் நிலைப்பாடு. அந்தப் பழைய நண்பனான என்னருமை அல்பெட்ராஸ் தயாராக்கப்பட்டு விட்டது. அவன் என்னை ஏமாற்றி விட மாட்டான்,

சந்தோஷமாயிரு, இனியவளே. கவலையே படாதே. இதில் ஆபத்து உள்ளது, இல்லையெனவில்லை ஆங்... யாரோ ஒருத்தர், நான் உயில்

எழுதிவிட்டுக் கிளம்பினால்தான் நல்லது என்று அறிவுறுத்தினார். சரியென்றே எனக்குப்பட்டது. எனவே, செய்தேன். ஓர் அரை வெள்ளைத்தாளில் எழுதி, ஓல்ட் ஒயிட்ஃபீல்டுக்கு அனுப்பி வைத்து விட்டேன். அவர் இருப்பிடம்வரை போய் வர அவகாசம் அமையவில்லை. ஒரு முறை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்... ஓர் ஆள் மூன்றே வார்த்தைகளில் உயில் எழுதினானாம்! 'என்னுடைய எல்லாமும் அம்மாவுக்கே.' அது சட்டப்படி செல்லுமாம். என் உயிலும் ஏறக்குறைய அப்படியே தான் - எனக்கு உன் பெயர், மக்தலா என்று தெரியும். என்ன ஒரு சாதுர்யம் பார்த்தாயா! ஓரிருவர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளனர்.

உயில் எழுதி வைத்துக் கிளம்புகிறேனே என்றெல்லாம் நினைத்து விசனப்படாதே. இதெல்லாம் எனக்குப் பிடித்தமேயில்லை... இருந்தாலும் செய்தேன். மாறாமல் வரும் பருவகாலங்கள்போல சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவேன். இந்தியா, ஆஸ்திரேலியா என எங்கு போனாலும் அங்கிருந்தெல்லாம் உனக்குத் தவறாது தந்தியனுப்புகிறேன். நம்பிக்கையாயிரு. எல்லாம் சரியாய் முடியப் போகின்றன. ஓ கே?

குட் நைட் அண்ட் கடவுள் உன்னை ஆசிர்வதிக்க!
மைக்கேல்.'

அனைத்துக் கடிதங்களையும் பொய்ரெட் மறுபடியும் ஒன்று சேர்த்து மடித்து விட்டான்.

''நிச்சயப்படுத்திக் கொள்ள நான் இதையெல்லாம் படிச்சிருக்கணும்னு இப்பவாவது உனக்கு விளங்குதா ஹேஸ்டிங்ஸ்? எல்லாமும், நான் சொன்னது போலத்தானிருக்கு.''

''இதையே நீ வேற ஏதாவது வழியா கண்டுபிடிச்சிருக்கலாம்.''

''முடியாது ஹேஸ்டிங்ஸ். அப்படி எந்த வழியிலும் கண்டுபிடிக்க முடியாத ஒரு நிலைமை. இந்த வழி மட்டும்தான் தெரிஞ்சது. இப்ப நம் கையில சில விலைமதிப்பற்ற சாட்சிகள் விழுந்திருக்கு.''

''எதைச் சொல்றே?''

''மைக்கேல், மேடம் நிக்குக்கு சாதகமா பண்ணியிருக்கிற உயில்,

கைப்பட எழுதி பதியப்பட்டிருக்கு எனும் நிஜம் இப்ப நமக்குத் தெரிய வந்தாச்சு. இக்கடிதங்களைப் படிக்க நேர்ந்த யாராக இருந்தாலும் இந்த நிஜத்தினை அறியப் பெற்றிருப்பாங்க. இப்படிப் பொறுப்பற்று திறந்த பீரோவுக்குள் போட்டு வைக்கப்பட்டிருக்கும் கடிதங்களை யார் வேணும்னாலும் படிக்கலாம் என்பதையும் கவனிக்க.''

''எலென்?''

''நிச்சயமா, எலென். இங்கேயிருந்து கிளம்புவதற்கு முன்னாடி இதுக்காக அவ மேல சிறு பரிசோதனை பண்ணிப் பார்த்துடுவோம்.''

''இங்கே உயிலின் அறிகுறியே தட்டுப்படலே.''

''ஆமாம். இது ஆச்சரியம். ஆனா அதைத் தூக்கி ஒரு பரண் மேலயோ, இல்லே ஏதாவது பெட்டிக்குள்ளேயோ போட்டு வெச்சிருக்கும் சாத்தியக்கூறும் உண்டு. இது பற்றி மேடம் நிக்குடைய ஞாபகத்தைத் தூண்டிப் பார்த்து விடை தேட நாம முயற்சி செஞ்சாகணும். இப்போதைக்கு, இங்கே, இதுக்கு மேல தோண்ட ஒண்ணும் கிடையாதுனு நினைக்கிறேன்.''

நாங்கள் இறங்கிக் கொண்டிருந்த போது எலென் ஹாலில் தூசு தட்டிக் கொண்டிருந்தாள்.

நாங்கள் அவளைக் கடந்து வெளியேறிக் கொண்டிருந்தபோது பொய்ரெட் மிகக் கனிவாக அவளுக்கு குட் மார்னிங் பகிர்ந்தான். நிலைக் கதவருகே போனதும் பின்வரும் கேள்வியைக் கேட்க அவன் திரும்பினான்: ''பறக்கும் மனிதனான மைக்கேல் செட்டானுடன் மேடம் நிக்குக்கு நிச்சயதார்த்தம் ஆன சேதி உங்களுக்குத் தெரியும்னு நினைக்கிறேன்?''

அவள் முழித்தாள். ''என்ன? சமீபமா பேப்பர்ல அடிப்பட்டுக் கிட்டிருக்கும் செட்டானா?''

''ஆமாம்.''

''தெரியவே தெரியாது. அவனையா? மேடமுடன் நிச்சய மாயிடுச்சுனா நினைப்பது?''

நாங்கள் வெளியேறிய பிறகு, ''திருப்தியளிக்கும்படியான... ஏற்றுக் கொள்ளும்படியான முழு ஆச்சரியம் அவ முகத்துல எழுந்தது'' என்று குறிப்பிட்டுக் காட்டினேன் நான்.

''ஆமாம். அது நம்பத்தகுந்த ஒன்றாத்தானிருந்தது.''

''அப்படித்தான்'' என்று மறுபடியும் அழுத்தி நினைவூட்டினேன் நான்.

''அந்தக் கடிதங்கள் - அவை, மாசக்கணக்கா அங்கேயே தூங்கி கிட்டிருக்கே, ஹேஸ்டிங்ஸ்? நோ, நோ மைஃபிரெண்ட், நோ.''

'சரிதான்' என நினைத்துக் கொண்டேன் நான். 'தேவையே இல்லாமல், கேஸுக்கு சம்பந்தமற்றுக் கிடக்கும் விஷயங்களுக் கெல்லாம் மூக்கை நுழைச்சுக்கிட்டிருக்க - நாமெல்லாம், ஹெர்குல் பொய்ரெட்டுகள் கிடையாதே!' - ஆனால் நான் வாய் திறந்து எதுவும் சொல்லவில்லை.

''இந்த எலென் - அவ ஒரு புரிந்துகொள்ள முடியாதவ'' என்றான் பொய்ரெட். ''இது எனக்குப் பிடிக்கலே. எனக்கு விளங்கா ஏதோ ஒண்ணு - இங்கே இருக்கு.''

*அத்தியாயம் 14*

# காணாமல் போன உயிலின் மர்மம்

நேராக திரும்பி நர்ஸிங் ஹோமுக்கே நாங்கள் பிரயாணமானோம். எங்களை மறுபடியும் உடனடியாகவே பார்த்ததில் நிக் ஆச்சரியமானாள்.

''யெஸ், மேடம்'' என்றான் பொய்ரெட், அவளது கேள்வி நிறைந்த பார்வைக்கு விடையாய். ''இந்த கேஸில் நான் ஒரு கரடி போல. குதித்தோடி மறுபடியும் வந்துட்டேன். உங்களோட இந்த விவகாரத்துல எல்லாத்தையும் நான் வரிசைப்படுத்திட்டேன்னு சொல்லிக்க விரும்பறேன். எல்லாமும் இப்போ அழகா அம்சமா அடுக்கப் பட்டாச்சு.''

அடக்க முடியாத புன்சிரிப்பை அடக்கிக்கொண்டு நிக், பொய்ரெட்டிடம் கேட்டாள்: ''நீங்க ரொம்ப சீரா நேர்த்தியா இயங்குபவரோ, பொய்ரெட்?''

''இங்கேயிருக்கும் ஹேஸ்டிங்ஸை இது குறித்துக் கேளுங்க.''

அந்தப் பெண்ணும் விசாரிக்கும் பார்வையை என்மேல் போட்டாள். சின்னச்சின்ன விஷயங்களிலும் அவனுக்கிருக்கும் விசித்திர குணாதிசயத்தை நான் விளக்க வேண்டியதாயிற்று. சரியான சதுரத்தில் செய்யப்படாத வறுத்த ரொட்டி அவனுக்குப் பிடிக்காது; ஒரே வடிவமாயில்லாது பல சைஸ்களில் இருக்கும் முட்டைகளின் ட்ரேயை விரும்பாதவன்; ஓர் ஒழுங்கில்லாது மைதானம் முழுக்க ஏனோதானோவென்று போகும் கோல்ஃப் விளையாட்டு அவனுக்கு அறவே பிடிக்காதது; ஓர் அலமாரியில் ஒழுங்கற்று அடுக்கப்பட்டிருந்த பொருட்களை நேர் செய்ய பொய்ரெட் எடுத்துக் கொண்ட மெனக்கெடலில் ஒரு வழக்கினையே அவனால் முடிக்க இயன்றதுவரை

சொன்னேன்.

பக்கத்திலேயே புன்முறுவிக் கொண்டு உட்கார்ந்திருந்தான் பொய்ரெட்.

''என்னை வெச்சுக்கிட்டு நல்லா கதை சொல்றான், இவன்'' என்றான் நான் முடித்ததும். ''பார்க்கப்போனா அவன் சொன்ன அத்தனையும் என்னவோ நிஜந்தான். ஒரு பக்கமா வகிடெடுக்காம நடுவுல வகிடெடுத்து ரெண்டு பக்கத்துக் கேசங்களையும் சரிசமமா பிரிடானு நான் இவனை வற்புறுத்தி வற்புறுத்தி ஆனா அது முடியாம தோற்ற கதை உண்டு மேடம்! பாருங்க... ஒரு பக்கம் நிறையா, மறுபக்கம் கம்மியா, எப்படி ஓர் ஒழுங்கற்ற வரிசையற்ற போக்கை இவன் முகத்துக்கு இவனுடைய கேசம் தருதுனு...?!''

''அய்யய்யயோ... அத்தனை சகுனம் பார்ப்பீங்களா நீங்க...?! அப்ப என் கூந்தலையும் தான் நீங்க மறுக்கப் போறீங்க!'' என்றாள் நிக். ''நான் ஓரவகிடு தான் எடுக்கிறேன். அப்ப நீங்க ஃப்ரெட்டரியைப் பாராட்ட லாம் - அவ நடுவில உடைப்பா!''

''அன்னிக்கு சாயந்திரம் அந்தம்மாவை இவன் அப்படி சிலாகிச் சான்'' என்றேன் நான், உப்பு சப்பற்று. ''இப்பல்ல தெரியுது விஷயம்!''

''விஷயத்தை விட்டு விலக வேண்டாமே'' என்றான் பொய்ரெட். ''நான் இங்கே இப்ப ஒரு முக்கியமான விஷயத்துக்காக வந்திருக்கேன். மிஸ்... உங்களோட அந்த உயில்... அது எனக்குக் கிடைக்கலே, மிஸ்.''

''ஓஹ்!'' - அவள் தனது புருவங்களைச் சுருக்கிக் கொண்டாள். ''அது அத்தனை முக்கியமா இப்ப? நான்தான் சாகலையே. ஒருத்தர் மண்டையைப் போடற வரைக்கும் அவரோட உயில்கள் முக்கியத் துவம் பெற்றவை கிடையாது, இல்லையா?''

''அது சரி தான். இருந்தாலும், உங்க உயில் மேல என்னை அறியாம எனக்கு ஈர்ப்பு இருக்கு. அது குறித்து பல்வேறு சின்னச் சின்ன ஐடியாக்கள் என்னுள்ளே உதயமாகியிருக்கு. யோசியுங்க மேடம்... அதை எங்கே வெச்சீங்கனு ஞாபகப்படுத்தப் பாருங்க. அதை நீங்க கடைசியா எங்கே பார்த்தீங்க?''

''குறிப்பிட்ட ஓரிடத்துல அதைக் கொண்டு போய் வெச்சிருக்க மாட்டேன்னு தான் தோணுது'' என்றாள் நிக். ''எந்தப் பொருளையும் குறிப்பிட்ட ஓரிடமா பார்த்து வைக்கிற வழக்கமே எனக்குக் கிடையாது.

ஏதாவது ஒரு டிராயருக்குள்ளே அதைத் திணிச்சு வெச்சிருக்கலாம்.''

''ரகசிய இடம் எதுக்குள்ளேயும் நீங்க அதை வெக்கலியா?''

''ரகசிய... ...... என்னது? இடமா?''

''உங்க வேலைக்காரி எலென், வரவேற்பறையிலேயோ அல்லது லைப்ரரியிலேயோ, ரகசிய பதுங்குமிடம் போன்ற ஒன்று இருப்பதா சொல்றா...!''

''முட்டாள்தனம்'' என்றாள் அவள். ''அப்படியெல்லாம் ஒரு பகுதி வீட்டுல இருப்பதா நான் கேள்விப்பட்டதே கிடையாது. எலெனா அப்படிச் சொன்னா?''

''அவளோட சின்ன வயசிலிருந்தே அவ கடைசி வீட்டுல வேலையிலிருப்பதா தெரிய வந்தது. சமையக்காரன் அவகிட்டே அதைக் காட்டியிருக்கான்.''

''அப்படியெல்லாம் இப்பத்தான் நான் முதல் முறையா கேள்விப் படறேன். தாத்தாவுக்கு வேணும்னா அது பற்றியெல்லாம் தெரிஞ் சிருக்கலாம், ஆனா, அப்படியிருந்ததா, அவர் என்கிட்டேயெல்லாம் எதையுமே சொல்லலே. அப்படி ஏதாவதுயிருந்திருந்தா அவர் என்கிட்டே நிச்சயமா சொல்லியிருப்பார் என்பது என் கணிப்பு. மிஸ்டர் பொய்ரெட்... எலென் இது பற்றி அவளாகதை கட்டி விடலே என்பதுல நீங்க நிச்சயமா இருக்கிங்களா?''

''இல்லை மேடம். எனக்கு அதுல நிச்சயம் கிடையாது. எலெனைப் பொறுத்த வரைக்கும், எதுவோ... எ-து-வோ இருக்கு. எனக்கு விளங்காத ஏதோ ஒண்ணு - உங்க எலென்கிட்டே இருக்கு.''

''ஓஹ்! அவளை அப்படி நான் நினைக்க மாட்டேன். வில்லியம் ஒரு அரை கிறுக்கன். அந்தக் குழந்தை ஓர் அழுக்கு மூட்டை. ஆனா எலென், ஆல் ரைட் தான். மரியாதைச் சாறு.''

''நேற்று நடந்த பட்டாசு விழாவை வெளியில போய் ரசிக்க அவங் களுக்கு நீங்க எப்பவாவது விடுமுறை தந்திருக்கிங்களா, மேடம்?''

''அஃப்கோர்ஸ். அது வாடிக்கை தான். போய்ட்டு வந்து அப்புறமா எல்லாத்தையும் சுத்தம் பண்ணி வைப்பாங்க.''

''இருந்தும் அவங்க வெளியே போகலே.''

''ஓ யெஸ். அவ போனா.''

''உங்களுக்கெப்படி தெரியும், மேடம்?''

''ஓ, ஓ, ஓ. ஆமாம். எனக்குத் தெரியாதுனு தான் சொல்லணும். ஏன்னா - நான் அவளை வெளியிலே போகத்தான் சொன்னேன். இதுக்கு நன்றியும் சொன்னா. அதனால அவ அப்புறமா வெளியே போயிருக் கணும்னு நானா நினைச்சுக்கிட்டேன்.''

''உங்க நெனப்புக்கு மாறாக - அவங்க வீட்டிலேயேதான் இருந்திருக்காங்க.''

''ஆனா - இது எத்தனை விசித்திரமா இருக்கு!''

''இதை விசித்திரம்னா எடுத்துக்கிறீங்க?''

''ஆமாம். எனக்கு அப்படித்தான் இருக்கு. இதுபோல அவ முன்னாடி பண்ணினதே கிடையாது. ஏன் தங்கினானு சொன்னாளா அவ?''

''என்கிட்டே அவ நிஜக் காரணத்தை சொல்லலே - இதுல நான் நிச்சயமாயிருக்கேன்.''

நிக் அவளைத் துளைக்கும் பார்வை பார்த்தாள். ''அது - அவசியமா?''

பொய்ரெட் அவனது கைகளைக் காற்றில் விரித்தான். ''அதை என்னால சொல்ல முடியலே, மேடம். பட்... நிஜக்காரணம் எனக்கு கிடைக்கலே.''

''இந்த ரகசிய இடம் பற்றிய குறிப்பிலேயும் தான்'' என்றாள் நிக், அவனுடைய கருத்தையே பிரதிபலிக்கும் வகையில். ''அது பயமுறுத்துமளவுக்கான விசித்திரமாயிருக்கு. மேலும், ரகசியம் - பதுங்குமிடம் - இதெல்லாம் ஏத்துக்கற மாதிரியேயில்லே. ஆங்... அது எங்கேயிருக்குனு அவ உங்ககிட்டே காட்டினாளா?''

''அவங்களுக்கு உடனடியா ஞாபகம் வரலேனு சொன்னாங்க.''

''அப்படி ஒண்ணு உள்ளே இருக்குனு என்னால நம்ப முடியாது.''

''ஆனா அப்படி ஒண்ணு இருக்கு என்பது போலத்தான் விஷயம் போகுது.''

''அவளுக்குக் கிறுக்குப் பிடிக்க ஆரம்பிச்சிருக்கணும்.''

''ஆனா அவங்களால கடந்தகாலத்து வரலாற்றை அப்படியே நினைவுபடுத்தி சொல்ல முடியுது, ஆங்! மேலும் கடைசி வீடு, வாழுவதற்கு உகந்த வீடே அல்லனு வேற அவங்க சொன்னாங்க.''

நிக் சிறு நடுக்கத்தைக் காட்டினாள். ''இந்த விஷயத்துல அவ சரியோனு எனக்குப் படுது'' என்றாள் மெதுவாய். ''சில சமயங்கள்ல

நானே கூட அப்படி உணர்ந்திருக்கேன். ஒரு விளக்க முடியாத ரகசிய உணர்வு எழுது, அந்த வீட்டுல... ... ...''

அவளது கண்கள் அகல விரிந்து கறுத்து இருண்டன. அக்கண்கள் அறையப்பட்டதைப் போல நிலைகுத்தின. பொய்ரெட் பேச்சை மாற்றும் விதத்தில் இயங்கத் துவங்கினான்.

''நாம பேச வேண்டிய விஷயத்தை விட்டுட்டு எங்கெல்லாமோ சுத்தறோம், மேடம். உயில். மக்தலா பக்லே கடைசியாய் எழுதிய உயில்.''

''ஆமாமாம்... உயில். உயில்! அதை நான் கொடுத்து வெச்சேன்'' என்றாள் இப்போது சற்றே பெருமையாய். ''கடன் சம்பந்தமான எல்லாத்தையும் அடைச்சுடுங்கனு சொல்லி, உயிலை நான் ஒப்படைச்சது இப்ப நினைவுக்கு வருது. இதே மாதிரி ஒரு காட்சி வந்த புத்தகத்தை நான் படிச்சுக்கிட்டிருந்தபோது எனக்கு நினைவுக்கு வந்தது. யெஸ்.''

''அப்போ உயில் எழுத வேண்டிய ஆவணப் பத்திரத்தாளை நீங்க உபயோகப்படுத்தலையா?''

''இல்லே. அதுக்கெல்லாம் அப்போ அவகாசம் இல்லே. நர்ஸிங் ஹோமுக்கு அவசரமா நான் போய்க்கிட்டிருந்தேன். தவிர மிஸ்டர் க்ராஃப்ட் வேற உயில் பத்திரமெல்லாம் ரொம்ப ஆபத்தானவைனு சொன்னார். ரொம்ப சட்டரீதியா இல்லாம சிம்பிள் உயில் போதுமேனார்.''

''மிஸ்டர் க்ராஃப்ட்? அவர் இருந்தாரா?''

''ஆமாம். என்னை, உயில் எதாவது பண்ணியிருக்கியானு கேட்டதே அவர்தான். ஒரு வேளை நான் இறந்துட்டா - அதாவது - அதாவது ... ''

''... அதாவது, உயில் மாதிரி எதுவும் எழுதாம இறந்துட்டா...!''

''ஆமாம். அதே தான். உயில் மாதிரி ஒண்ணை தயார் பண்ணாம யாராவது மண்டையைப் போட்டுட்டா, அத்தனையும் அரசாங்கத்துக்கில்லே போகும்னார்.''

''எத்தனை உதவிகரம், அந்த எக்ஸலண்ட் க்ராஃப்ட்...!''

''ஓ, நிச்சயமா'' என்றாள் நிக் இதமாய்! ''அவர் தான் எலெனையும் அவளோட புருஷனையும் கூட்டிட்டு வந்தது. சாட்சி கையொப்பம் போட. ஓ, இவ்ளோ நடந்திருக்கு! நான் எப்படி ஒரு முட்டாளா

இருந்திருக்கேன்! ச்சே!''

அவளைத் துளைக்கும் பார்வையை இருவருமே பார்த்தோம்.

''வடிகட்டின முட்டாளா இருந்திருக்கேன். கடைசி வீட்டுக்குப் போய் தேட உங்களுக்கு அனுமதி தர்ர வரைக்கும் கூட நினைவு வரலே பாருங்களேன். ஆனா அது இருப்பது சார்ல்ஸ் வைவஸ் கிட்டே! என் உறவுக்காரப் பையன் இருக்கார் இல்லே - சார்ல்ஸ் வைவஸ்!''

''ஓ, அப்படியா! இத்தனை தான் நடந்தவையா?''

''அதை வெச்சுக்கத் தகுந்த ஆள் ஒரு வக்கீல்தான்னு சொன்னார், மிஸ்டர்க்ராஃப்ட்.''

''எத்தனை சரியான நபர், அந்த மிஸ்டர் க்ராஃப்ட்!''

''சில சமயங்கள்ல இந்த ஆண்கள் ஒப்பிட முடியாத அளவுக்கு உதவிகரமா இருந்துடறாங்க'' என்றான் நிக். ''ஒரு வக்கீல் இல்லேனா பாங்க். இப்படித்தான் அவர் சொன்னார். இதுக்கு, சார்ல்ஸ் தான் சரியா இருக்கும்னு நான் சொன்னேன். உடனே அதை ஓர் உறைக்குள்ளே போட்டு ஒட்டி அவருக்கு அனுப்பி வெச்சோம்.''

பக்கத்திலிருந்த தலையணையில் ஒரு பெருமூச்சோடு சாய்ந்து கொண்டாள் அவள்.

''இந்த அளவுக்கு நான் ஒரு புத்தி பேதலிச்சா மாதிரி நடந்து கிட்டதுக்கு என்னை நீங்க மன்னிக்கணும். ஆனா இப்ப எல்லாம் சரியாயிடுச்சு. சார்ல்ஸ் அதை வெச்சிருக்கார் - அதை நீங்க பார்த்து தான் ஆகணும்னா, அஃப்கோர்ஸ், அவர் நிச்சயம் காட்டுவார்.''

புன்னகைத்தபடி, ''அப்படி காட்ட சொல்லி நீங்க அனுமதி சீட்டு ஒண்ணுத் தந்தால் தான்...'' என்றான் பொய்ரெட்.

''அப்படியெல்லாம் ஒண்ணும் கிடையாது.''

''நோ மேடம். இது தான் விவேகம்.''

''எப்படியோ... ஆனா என்னைப் பொறுத்த வரைக்கும் இது ஸில்லி'' என்றவள் ஒரு துண்டுச் சீட்டினை எடுத்துக் கொண்டு ''என்னத்தை எழுத'' என்றாள் அவள்.

வகைப்படுத்தப்பட்ட வார்த்தைகளைப் பொய்ரெட் சொல்ல, அவள் மரியாதையாய் எழுதினாள். அதை அவளிடமிருந்து எடுத்துக் கொள்ளும் போது ''தேங்க் யூ மேடம்'' என்றான்.

''உங்களுக்கு தொடர்ச்சியாய் சங்கடங்களை ஏற்படுத்திக்

கொடுத்ததுக்கு நான் மறுபடியும் மன்னிப்புக் கேட்டுக்கறேன், திருமிகு பொய்ரெட். முழு பூசணிக்காய் போன்ற சமாச்சாரத்தைக் கூட ஒரு சிலர் எப்படி சட்டுனு மறந்துத் தொலைச்சுடறாங்க, பாருங்க...!''

''சிந்தனையில் ஒழுங்கும், சீரான அணுகுமுறையும் இருக்கும் யாரும் இப்படி மறப்பது கிடையாது, மேடம்.''

''அப்படி ஏதாவது ஒரு கோர்ஸ் நான் படிச்சாகணும்'' என்றாள் நிக். ''என்னைப் பத்தி எனக்கே ஒரு தாழ்வு மனப்பான்மையை உண்டு பண்ணிட்டீங்க, நீங்க.''

''அப்படியெல்லாம் நான் பண்ணவே இல்லே - பண்ணவும் மாட்டேன், மேடம்'' என்ற பொய்ரெட், தற்போது அறையை ஒரு வட்டம் நோட்டமிட்டான். ''அறையிலுள்ள உங்களுடைய பூக்கள் எல்லாம் - பிரமாதம், மேடம்.''

''நல்லா இருக்கு இல்லே...? வளைவு அலங்காரங்களெல்லாம் ஃப்ரெட்டரி கைங்கர்யம்... ரோஜாக்கள் ஜார்ஜ் பண்ணியவை... லில்லி மலர்கள் ஜிம்மின் பங்களிப்பு. ஆங்... இங்கே பாருங்களேன்...''

அவளருகிலிருந்த பெட்டி ஒன்றிலிருந்து ஒரு பெரிய திராட்சைக் கொத்து ஒன்றினை எடுத்துத் தூக்கிக் காட்டினாள் அவள்.

பொய்ரெட்டின் இதமான முகம் சட்டென்று கலவரம் கொண்டது. விறுவிறுவென முன்னுக்கு வளைந்தான் அவன். ''இதிலிருந்து நீங்க எதையுமே சாப்பிடலையே?''

''இது வரைக்கும் சாப்பிடலே.''

''சாப்பிட்டுடாதீங்க. வெளியிலிருந்து உள்ளே வரும் எதையுமே நீங்க சாப்பிடக் கூடாது, மேடம். எதையுமே. விளங்குதா?''

''ஓஹ்!'' - அவள் அவனைக் கண்ணகல முறைத்தாள். அவளுடைய முகத்திலிருந்த வசீகர நிறம் உள் வாங்கியது. ''அப்படியா! அப்படினா - இன்னும் அது முடியலேனா நீங்க நினைக்கிறீங்க? அவனுங்க இன்னும் முயற்சி பண்ணிக்கிட்டே இருக்கானுங்கனா நினைக்கிறீங்க?'' - வலுவற்ற ரகசியக் குரலாய் இருந்தது அவள் பேசியது.

அவளுடைய கையை எடுத்துக் கொண்டான் பொய்ரெட். ''அதைப் பற்றி நினைக்கவே நினைக்காதீங்க. இங்கே - நீங்க - சேஃப். ஓ கே?! ஆனா நினைவிருக்கட்டும்... வெளியிலிருந்து வரும் எதற்கும் - நோ!''

அறையை விட்டு நாங்கள் கிளம்பும்போது தலையணைக்குள்

வெளிறிப் போய்க்கிடந்த அந்த முகத்தை நான் அதிகமாய் உள்வாங்கிக் கொண்டேன்.

பொய்ரெட் அவனுடைய கைக்கடியாரத்தை பார்த்தான். ''ஓஹ்... மிஸ்டர் வைவஸ் லஞ்சுக்கு கிளம்பறதுக்கு முன்னாடியே அவரைப் பிடிச்சுட சரியான அவகாசமிருக்கு. வேகம், வேகம்.''

சார்ல்ஸ் வைவஸின் அறைக்குள் நாங்கள் அதிக தாமதமின்றி அனுமதிக்கப்பட்டோம்.

இளைய வக்கீல் நுழைந்த எங்களை வரவேற்க எழுந்து நின்றார். வழக்கமாய் உணர்ச்சிபூர்வமற்று சாதாரணமாய் இருப்பது போலவே தான் இருந்தார் அவர்.

''குட் மார்னிங் மிஸ்டர் பொய்ரெட். என்னிடமிருந்து என்ன உதவி வேணும்?''

எந்த முஸ்தீபும் காட்டாமல் நிக் கொடுத்த சீட்டினை அவரிடம் காட்டினான் பொய்ரெட். அதை அவர் வாங்கிக் கொண்டார். படித்தார். குழப்பமடைந்த கதியில் அதனை மறுபடியும் மேலேயிருந்து ஒருமுறை படித்தார்.

''மன்னிக்கணும். இதிலே எழுதியிருப்பது என்னனு விளங்காம இருக்கேன்!''

''அதுல மேடம் நிக் தான் சொல்ல வந்ததை வெளிப்படையா புரியும்படி குறிப்பிடலே?''

''இந்தக் கடிதத்துல...'' என்று தன் விரல் நகத்தால் அதனைத் தட்டிக் காட்டிய அவர், ''... கடந்த பிப்ரவரியில, அவ உயில் எழுதி அதை என்கிட்டே பாதுகாப்பா கொடுத்து வெச்சதாகவும் அதை இப்போ உங்ககிட்டே கொடுக்கும்படியும் எனக்கு எழுதியிருக்கா'' என்றார்.

''ஆமாம், மிஸ்டர்.''

''ஆனா, டியர் ஸார், பாதுகாப்பா என் கட்டுப்பாட்டுல இருக்கும்படி என்னிடம் எந்த உயிலும் கொடுக்கப்படலே.''

''என்னது?''

''என் அறிவுக்கு எட்டி அவ எந்த உயிலும் பண்ணவும் இல்லே. யெஸ். நான் அவளுக்காக எந்த உயிலும் ஏற்பாடு பண்ணித் தரலே.''

''அப்படி ஓர் உயிலை, ஒரு நோட்டுப் புத்தகத்தோட பேப்பரைக் கிழிச்சு அவங்களே கைப்பட எழுதி அதை உங்களுக்கு போஸ்ட்டும்

பண்ணிதா எனக்குத் தெரிய வந்திருக்கு.''

வக்கீல் தனது தலையை அகலமாய் மறுத்துத் தலையசைத்தார். ''அப்படி ஏதாவது நிஜமாவே நடந்திருந்தா, அது என் கைக்கு வந்து கிடைக்கலே எனும் என் நிலையைத்தான் நான் உங்களுக்கு இப்ப சொல்ல முடியும்.''

''உண்மையாவா, மிஸ்டர் வைஸ் ...''

''அப்படி எதுவும் என் கைக்கு வரலே, மிஸ்டல் பொய்ரெட்.''

அங்கு சிறு தாமதம் நிலவியது. பின் பொய்ரெட் எழுந்து கொண்டான். ''அப்படிதான்னா, நான் மேற்கொண்டு சொல்ல வேற எதுவும் கிடையாது, மிஸ்டர் வைஸ். எங்கேயோ தப்பு நடந்திருக் கணும்.''

''நிச்சயமா ஏதோ தப்பு நடந்திருக்கணும்'' - சொன்ன அவரும் எழுந்து கொண்டார்.

''குட் பை மிஸ்டர் வைஸ்.''

''குட் பை மிஸ்டர் பொய்ரெட்.''

மீண்டுமொரு நாங்கள் நடுத்தெருவில் வந்து நின்றபோது, ''அவ அப்படி சொல்றா - இவன் இப்படி சொல்றான்'' என்றேன் நான்.

நான் சொன்ன தொனியில் அவன் சிரித்தான்.

''இந்தாளு பொய் சொல்றான்னு நினைக்கிறியா?''

''பதில் சொல்வது ரொம்ப கஷ்டம். அவருக்கு இரும்பு வார்ப்பு போல உணர்ச்சி காட்டாத முகமிருக்கு. கூடவே எதையோ துப்ப முடியாம முழுங்கிட்ட மாதிரி ஒரு முழிப்பு. அவர் மனசுல என்ன ஓடுதுனே புரியலே. அவர் எடுத்துள்ள நிலைப்பாட்டிலிருந்து கொஞ்சமும் வளைஞ்சுக் கொடுக்க மாட்டார் என்பது மட்டும் சுத்தமா தெரியுது - அவர் அந்த உயிலைக் கிடைக்கப் பெறவேயில்லை. இது தான் அந்த நிலைப்பாடு.''

''அனுப்பினதுக்கான எழுத்து பூர்வமான ரஸீது அவ கிட்டே இருந்தாகணுமில்லே?''

''அப்படிப்பட்ட விஷயம் பத்தியெல்லாம் தன் தலையைப் போட்டுக் கொஞ்சமும் சிரமப்படுத்திக்காத ஜீவன் - அந்த நிக். தபால்ல போட்டுட்டாங்க. அதோட அந்த விஷயம் அவங்களுக்கு முடிஞ்சிருக்கும். தவிர அதே நாள்ல அவங்களோட அப்பண்டிக்ஸை

எடுப்பதற்காக நர்ஸிங் ஹோம்ல போய் விழுந்திருக்காங்க. அதுக்கான படபடப்புலதான் அவங்க முழுக்கவும் இருந்திருக்கணும்.''

''வெல்... அப்போ, நாம இப்ப பண்ண வேண்டியது என்ன?''

''நாம நேரா போய் மிஸ்டர் க்ராஃப்ட்டைப் பார்க்கிறோம். இந்த விஷயம் பற்றி அவருக்கு என்னவெல்லாம் நினைவிலிருக்குனு பார்ப்போமே. இதெல்லாம் முழுக்க முழுக்க அவர் தூண்டி விட்ட வேலை போலல்லே இருக்கு...?!''

''இதைப் பண்ணத் தூண்டி அவருக்கு எந்த லாபமும் விளைஞ்சுடப் போவதில்லே'' என்றேன் நான் சிந்தனையாய்.

''இல்லை. அவர் பக்கத்துல நின்னுப் பார்க்கும்போது அவருக்கு எந்த லாபமும் இல்லைனு தான் எனக்கும் தெரியுது. அவர் ஜஸ்ட் ஒரு துறுதுறு ஆள் - அக்கம்பக்கத்து வீட்டு மக்களோட தட்டுமுட்டு வேலைகளுக்கு உதவியா இருந்து ஏற்பாடுகள் செஞ்சுத் தருவது ...''

இதே குணாதிசயம்தான் மிஸ்டர் க்ராஃப்ட்டின் அடி முதல் நுனி வரையிலான குணம் என்று நானும் உணர்ந்தேன். நமது இந்த உலகத்தில் தன் தேவைகளைத் தவிர்த்து பிற வேலைகளில் மூச்சு வாங்க உழைக்கும் ஒரு ஜீவன் என்றே எனக்கும் பட்டது.

அடுக்களையில் நீராவிக்குக் காட்டிக் கொண்டு சட்டைக் காலரின் கறையை மும்மூரமாக நீக்கிக் கொண்டிருக்கும் ஜோலியில் அவரை நாங்கள் பிடித்தோம். அந்த சிறு குடியிருப்புப் பகுதியை மெல்லியக் காரமணம் சூழ்ந்திருந்தது.

கொலை பற்றி ஆவலாய் பேசுவதற்காக, செய்து கொண்டிருந்த வேலையை உவந்து கைவிட்டுவிட்டு முன்வந்தார் திரு க்ராஃப்ட். ''கையெல்லாம் கஞ்சி. மேலே போவோம் வாங்க. இந்த விஷயத்துக்குள்ளே அம்மாவும் இருக்கப் பிரியப்படுவாங்க. நாம மட்டும் இங்கே உக்காந்து தனியா பேசினா தொலைச்சுப்புடுவாங்க. நம்ம மனுஷா ரெண்டு பேர் வராங்க.''

திருமதி க்ராஃப்ட் எங்களை கனிவாய் வரவேற்றார். நிக் பற்றி அறிந்து கொள்ளத் துடிப்பிலிருந்தார். அவருடைய கணவரைவிட எனக்கு திருமதி க்ராஃப்ட் தேவலாம் என இருந்தது.

''அந்தப் பரிதாபப் பொண்ணு...'' என்று ஆரம்பித்தார்: ''நர்ஸிங் ஹோம்ல இருப்பதா சொல்லியிருக்கிங்க, இல்லே? முழுக்க

உடைஞ்சுப் போயிட்டாளாம். இதுல ஆச்சரியப்பட என்னயிருக்கு? கொடூரமான செயல் பொய்ரெட், கொடூரத்தின் உச்சம்பேன். அவளை மாதிரி ஒரு வெகுளிப் பொண்ணையா போய் சுட்டுத் தள்ளுவது? தாங்கலே. அதை நினைச்சாலே குமட்டுது. இப்படி ஈவிரக்கமில்லாத கொடுமை உலகின் வேறெந்தப் பகுதியிலும் நடக்காது. ராத்திரி முழுக்க தூங்காம என்னை முழிக்க வெச்சிடுச்சு, அது.''

''உன்னைத் தனியா விட்டுட்டு வெளியே போனாலே எனக்குப் படபடப்பாயிடுது, ஓல்ட் லேடி'' என்றார் அவரது கணவர். மேல் கோட் போட்டுக் கொண்டு எங்களுடன் இணைந்திருந்தார். ''நேற்று சாயங்காலம் உன்னைத் தனியா இங்கே விட்டு வெச்சுட்டு வெளியே போகவே எனக்கு மனசு வரலே. சமாசாரம் பற்றி நினைச்சாலே என்னை நடுங்க வெக்குது.''

''என்னை இப்படியே விட்டுட்டு நீங்க வெளியேல்லாம் போக முடியாது, ஆமாம், சொல்லிட்டேன்'' என்றார் திருமதி. ''அதுவும் இருட்டிட்ட பிறகு, நிச்சயமா, ம்ம்! இந்தப் பகுதியை விட்டு எத்தனை சீக்கிரத்துல கிளம்ப முடியுமோ அத்தனை சீக்கிரத்துல கிளம்பிடலாம்னு நினைச்சுக்கிட்டிருக்கேன். இப்படி இன்னோர் அனுபவத்தைப் பார்க்க நான் இங்கே இருக்கக் கூடாது. மறுபடியும் அதே வீட்டுல அந்த நிக் பொண்ணால தூங்க முடியுமானு எனக்கு பிரமிப்பாயிருக்கு.''

நாங்கள் சந்திக்க வந்ததன் நோக்கத்தை உடனடியாய் எட்டிப் பிடிப்பதில் சிறு சிரமம் உண்டானது. திரு மற்றும் திருமதி க்ராஃப்ட் ஆகிய இருவரும் விறுவிறுப்பாய் பேசிக் கொண்டேயிருந்தனர்... இந்த சமாச்சாரம் பற்றிய எல்லாவற்றையும் முழுக்கவும் தெரிந்துகொண்டு விடுவதில் துடிதுடிப்பாயுமிருந்தனர். அந்தப் பரிதாபத்துக்குரிய பெண்ணின் உறவினர்கள் வருகிறார்களா? இறுதிச் சடங்குகள் எப்போது? மரண விசாரணையெல்லாம் இருக்க வாய்ப்புண்டா? போலீஸ் இது பற்றி என்ன நினைக்கிறது? இது வரைக்கும் அவர்களுக்கு ஒரு துப்பும் கிடைக்கவில்லையா? ப்ளை-மூத்தில் ஒரு நபர் கைது செய்யப்பட்டுள்ளதாய் பேசப்படுவது நிசந்தானா?

இத்தனை வகையான கேள்விகளுக்கும் விடைகள் தந்து முடித்த பிறகு, லஞ்ச்சாப்பிட்டு விட்டுத்தான் நாங்கள் கிளம்ப வேண்டும் என்று எங்களைத் துளைக்க ஆரம்பித்து விட்டார்கள் அவர்கள். முதன்மை

கான்ஸ்டபிளுடன் லஞ்ச் எடுத்துக்கொள்ள ஏற்கெனவே சொல்லியிருப்பதால், அங்கு விரைவாய் திரும்ப வேண்டி உள்ளது என்ற பொய்ரெட்டின் சமயோஜிதமான குறிப்பு, நாங்கள் உடனடியாய் தம்பதியினரிடமிருந்து கிளம்ப அனுமதி பெற்றுத் தந்தது.

இந்தத் திருப்பத்தில் ஒரு தாற்காலிக தாமதம் விளைய, அப்போது, நாங்கள் சுமந்து வந்திருந்த கேள்வியைத் தூக்கிப் போட்டான் பொய்ரெட்.

''ஏன்...? ஆமாம்... ஆமாம்... அப்படித்தான்'' என்றார் திரு க்ராஃப்ட். திரைச்சீலையின் நுனியைப் பிடித்து மேலும் கீழுமாய் இழுத்தபடியிருந்த அவர், தனக்கே தெரியாது முகம் கடுகடுத்துப் போனார். ''அது பற்றிய எல்லாமும் எனக்கு நல்லா ஞாபகமிருக்கு'' என்றார். ''நாங்க இங்கே குடி வந்த புதுசுலேயே நடந்ததுனு நினைக்கிறேன். ம், நினைவிருக்கு. அப்பெண்டிஸிட்டீஸ் - இப்படித்தான் டாக்டருங்க சொன்னாங்க ...''

''அது அப்பெண்டிஸிட்டீஸா இல்லாமலே ஆகியிருக்கும் சாத்தியமும் இருக்கு'' என இடைபுகுந்தார் திருமதி க்ராஃபட். ''இந்த டாக்டருங்க வேற - வாய்ப்பு கிடைச்சா உங்களை அறுத்துடணும்னு கிடப்பானுங்க. அறுத்துதான் ஆகணும்கிற வகை கிடையாது அது தெரியுமா? அஜீரணத்துல இருந்தா அவ.''

''நான் எதேச்சையாதான் கேட்டேன்'' எனத் தொடரலானார் திரு க்ராஃப்ட்: ''உயில் ஏதாவது செஞ்சிருக்காங்களானு பேச்சுவாக்குல கேட்டேன். ஒரு சின்ன கிண்டலாத்தான் அதை கேட்டேனே தவிர வேற எதுவும் கிடையாது.''

''அப்படியா?''

''உடனேயே அவங்க அங்கேயே அதே இடத்துலேயே எழுதிட்டாங்க. போஸ்ட் ஆபீஸ் போய் ஒரு உயில் பத்திரத்தை வாங்கிட்டு வரப்போவதாகூட கிளம்பினாங்க - நான்தான் வேணாம்னு சொல்லிட்டேன். பத்திரம் பதிஞ்சு எழுதினா நிறைய சிக்கல் பண்ணிடறாங்கனு யாரோ என்கிட்டே சொன்னது நினைவு வந்தது. தவிர, அவரோட உறவுக்காரர் ஒருத்தர் கூட லாயர்தான். எல்லாம் நல்லபடியா போனா அவரே கூட சட்டரீதியா ஒரு நல்ல உயில் பண்ணித் தந்துடலாம். அப்போதைக்கு உயில் ஒன்னை எழுதச் சொன்னது ஒரு

முன்ஜாக்கிரதைக்காகத் தான்.''

''அதுக்கு சாட்சி சொன்னது யார் யார்?''

''ஓ! வீட்டு வேலைக்காரி எலென்... அவ புருஷன்.''

''அதுக்கு அப்புறம்? அதை வெச்சுக்கிட்டு செஞ்சது என்ன?''

''ஓ! அதை நாங்க வைஸுக்கு போஸ்ட் பண்ணினோம். இந்த வக்கீல்னு சொன்னேனே, அவர், ஆங்!''

''அது தபால்ல தான் சேர்க்கப்பட்டதுனு உங்களுக்கு நிச்சயமா தெரியுமா?''

''டியர் திரு பொய்ரெட். நானே என் கைபட போஸ்ட் செஞ்சேன். 'கேட்'டுக்குப் பக்கத்துல இருக்கிற தபால் பெட்டியில.''

''அப்போ, அது, தன் கைக்குக் கிடைக்கவேயில்லைனு மிஸ்டர் வைஸ் சொன்னா ...''

க்ராஃப்ட் முழித்தார். ''தபால்ல அது தவறிடுச்சுனா சொல்ல வறீங்க? ஓ! ஆனா அது நிச்சயமா சாத்தியமே கிடையாது.''

''எதெப்படியோ - அது போஸ்ட் பண்ணப்பட்டதுல நீங்க ஸ்திரமா இருக்கீங்க?''

''நிச்சயமா'' என முழுமனதோடு சொன்னர் க்ராஃப்ட். ''சத்தியம்.''

''ஆஹ்! அப்ப நல்லது'' என்றான் பொய்ரெட். ''அதிர்ஷ்டவசமா இது ஒண்ணும் இப்ப அத்தனை முக்கியம் கிடையாது. மேடம் நிக் உடனடியா சாகப் போவதில்லையே...?!''

வீட்டை விட்டு சற்று தூரம் விலகிப் போன பிறகு, ''யார் பொய் பேசறது?'' என்றான் பொய்ரெட். ''மிஸ்டர் க்ராஃப்ட்டா? இல்லே, மிஸ்டர் வைஸா? மிஸ்டர் க்ராஃப்ட் பொய் பேசுவதற்கு எனக்கு எந்தவிதமான முகாந்திரமும் தட்டுப்படலே. இந்த உயிலைக் கையகப் படுத்தி வைப்பதுல அவருக்கு எந்த அனுகூலமும் வந்துடப் போறதில்லே - அதுவும் அவர் தான் அந்த உயிலையே தயார் பண்ண சொல்லி ஐடியா தந்திருக்கும்போது. யெஸ் - அவர் சொல்லும் எல்லாமும் சுத்தமாயும் வெளிப்படையாயும் இருக்கு; மேலும் மேடம் நிக் சொன்ன அத்தனை சங்கதிகளோடும் க்ராஃப்ட் சொன்னவையும் ஒத்துப் போகுது. இத்தனை இருந்தாலும் ...''

''ம், என்ன?''

''இத்தனை இருந்தாலும் நாம உள்ளே வந்த போது மிஸ்டர் க்ராஃப்ட்

சமையல்ல இருந்ததுல எனக்கு பரம சந்தோஷம். அவருடைய கட்டை விரலின் அட்டகாசமான ரேகைகளை அங்கே கிச்சன் மேடையிலிருந்த ஒரு தாள்ல தடவி விட்டார் அவர். கையில கஞ்சி இல்லே! அவர் கவனிக்காத மாதிரி எப்படியோ அதை நான் கிழிச்சு எடுத்து பத்திரப் படுத்திட்டேன். நம் நண்பரான ஸ்காட்லாண்டு இன்ஸ்பெக்டர் ஜேப்'புக்கு அதை அனுப்பி வெப்போம். இது பற்றி ஏதாவது அவருக்குத் தெரிஞ்சிருக்கும் வாய்ப்புகள் இருக்கலாம்.''

''அப்படியா?''

''கவனி, ஹேஸ்டிங்ஸ். ரொம்ப சரியா இருக்கிற நம் மிஸ்டர் க்ராஃப்ட், அப்படி ரொம்ப சரியா இருக்கத் தகுதியில்லாதவரோனு தோணும் நினைப்பை என்னால முழுசா ஒதுக்கிட முடியலேடா.''

கூடுதலாய் சொன்னான்: ''மயக்கம் வருது. பசியில.''

*அத்தியாயம் 15*

# ஃப்ரெட்டரிக்காவின் புரிந்துகொள்ள இயலாத நடவடிக்கை

முதன்மை கான்ஸ்டபிள் என்றெல்லாம் பொய்ரெட் விட்டிருந்த சரடு அப்படியொன்றும் முழுக்கவும் பொய்மையாகிப் போகவில்லை. நாங்கள் லஞ்ச் முடித்திருந்த கையோடு கலோனல் வெஸ்ட்டன் எங்களைக் காண வந்திருந்தார்.

மிலிட்டரி அமைப்புகள் கொண்டிருந்த நெட்டையான மனிதனாயிருந்தார் அவர். கட்டுக்கடங்கா அழகு செறிந்திருந்தார். பொய்ரெட்டின் வெற்றிகளின் மேல் அவருக்கு நல்ல அறிமுகமிருந்தபடியால், அவன் மீது மரியாதையுடன் கூடிய தனிப்பட்ட பயபக்தியைக் காட்டினார்.

''உங்களை எப்படியோ இங்கே வந்து பிடிச்சது, எங்களோட அதிர்ஷ்டம்தான்'' என்று அதிசயம் ஒன்றைக் கண்டு விட்டதைப் போல திருப்பித் திருப்பி சொன்னார். ஸ்காட்லாண்டு போலீஸ் இலாகாவின் துணையின்றி நடந்துள்ள கொலை மர்மத்தினைக் கண்டுபிடித்து, கொலைகாரனையும் கையுங்களவுமாக பிடித்து விட துடித்துக் கொண்டிருந்தார் கலோனல். ஆனால் ஸ்காட்லாண்டு போலீஸின் துணையை வேறு வழியின்றி நாட வேண்டிய நிலை உருவாகி விடும் போல கட்டங்கள் உருவாகியிருந்தன. இவை தான், பொய்ரெட்டை (அதிர்ஷ்டவசமாக) எதிர்கொண்டு விட்டதால் அவரிடம் ஏற்பட்டிருக்கும் ஆச்சரியத்துக்கான காரணம்.

பொய்ரெட், வந்தவரை அப்படியே தன்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக எடுத்துக் கொண்டு விட்டதாய் பட்டது எனக்கு.

''பிசாசுக்கூட்டங்க'' என்றார் கலோனல். ''இப்படியெல்லாம் ஒரு கேஸை நான் கேள்விப்பட்டதே கிடையாது. வெல், எப்பாடுபட்டாவது அந்தப் பொண்ணை நர்ஸிங் ஹோம்ல பாதுகாப்பா வெச்சிருக்கணும். இருந்தாலும் பொய்ரெட், அப்படியேவா அவங்களை வருஷக்கணக்கா அங்கேயே வெச்சிருக்க முடியும்...?!''

''அதுதான் கலோனல் நம் முன்னாலிருந்து மிரட்டும் விஷயமே. இந்த நிலைமையை சமாளிக்க ஒரே ஒரு வழிதானிருக்கு.''

''அது?''

''நாம, நம்மோட கையை, இதுக்கெல்லாம் காரணகர்த்தாவான ஆள் மீது, பதிச்சாகணும்.''

''ஆஹ...! நீங்க சந்தேகப்படுவது தான் சரின்னே வெச்சுக்கிட்டாலும், இது ஒண்ணும் அத்தனை சுலபமான காரணமா அமையாது, ஸார்.''

''ஒத்துக்கறேன். சாட்சி, சாட்சி! இது, பிசாசா நம்மளை அலைய வைக்கப் போகுது பாருங்க'' - முகம் சுருங்கிப் போனது பொய்ரெட்டுக்கு.

''வழி தெரியாம குருட்டு மூலையில போய் முட்ட வைக்கும் இது மாதிரி வழக்குகள் எப்பவுமே கஷ்டமானவைதான். ஓஹ... அந்த பிஸ்டல் மட்டும் நம்ம கைகளுக்குக் கிடைச்சுட்டா ...''

''ம்ம். கொலைகாரன் மட்டும் புத்திசாலியானவனா இருந்தா - இது கடல்ல கட்டிப் போட்ட கல் மாதிரியான கதை கலோனல். அவ்ளோ சீக்கிரத்துல கிடைச்சுடாது.''

''ஆஹ!'' என சற்றே ரசித்து சொன்ன கலோனல், ''ஆனா முக்கா வாசி கேஸ்ல அவனுங்க மூளையில்லாமதான் நடந்துக்கிறானுங்க. முட்டாள்தனமா அவனுங்க பண்ணுவதைக் கேட்டா நீங்க ஆச்சரியப் பட்டு போவீங்க. கொலைங்களை மையமா வெச்சு நான் இதைப் பேசலே. இங்கெல்லாம் ரொம்ப கொலை வழக்கெல்லாம் கிடையாது - தேங்க் காட்! சாதாரண போலீஸ் கேஸுங்களை வெச்சுக்கிட்டு சொல்றேன். துளி கூட முன் யோசனையின்றி அடிமுட்டாள்தனமா அவனுங்க பண்றதைக் கேட்டா வருஷக்கணக்கா ஆச்சரியத்துலேயே இருப்பீங்க.''

''அவனுங்க முழுக்கவும் மாறுபட்ட மனப்போக்குல இருப்பானுங்க போல.''

''இருக்கலாம். இப்ப லைவல் தான் அந்த ஆள்னா - லெவல், நம்ம பாடு திண்டாட்டந்தான். அவர் ஒரு முன்ஜாக்கிரதை பேர்வழி. அற்புதமான லாயர் வேற. அவரை அவரே காட்டிக் கொடுக்கற மாதிரி நிச்சயமா நடந்துக்க மாட்டார். அந்தப் பொண்ணு - லெவல், அவகிட்டே உண்மையைக் கறந்துடலாம்னு எதிர்பார்க்கலாம். மேலும், பத்துல ஒரு தடவை மறுபடியும் அவ நிச்சயம் முயற்சிப்பா. பெண்களுக்குப் பொறுமை கிடையாது.''

எழுந்து கொண்ட கலோனல் சொன்னார்: ''நாளைக்கு, முதல் மரண விசாரணை. நம்மகிட்டே முன் கூட்டியே நீதிபதி பேசறதா சொல்லி யிருக்கார். எத்தனை கம்மியா முடியுமோ அத்தனை குறைவாத்தான் அவர் விஷயங்களைக் கசிய விடுவார். நமக்குள்ளே உள்ள அனுமானங்கள் எல்லாத்தையும் இப்போதைக்கு இருட்டுலேயே வைப்பது தான் சிறப்பு.''

கதவு வரை போனவர் பிறகு ''கடவுளே...'' என்றபடி சட்டென திரும்பி வந்தார். ''உங்களுக்கு ரொம்ப ஈடுபாடா இருக்கும் விஷயத்தை சொல்லாமலே கிளம்பறேன் பாருங்க'' என்றார். ''அதுல உங்களோட மேலான ஆலோசனையும் எனக்கு வேணும்.''

மீண்டும் உட்கார்ந்து கொண்டு, சட்டைப்பையிலிருந்து, எழுதப் பட்டிருந்த துண்டு காகிதத்தை எடுத்த அவர், அதனை பொய்ரெட்டிடம் தந்தார்.

''அங்கே மைதானத்துல தேடுதல் நடத்தினபோது என்னுடைய போலீஸ் இதைக் கண்டெடுத்திருக்கு. நீங்க எல்லாம் நின்னு பட்டாசு விழாவைக் கண்டு களிச்சுக்கிட்டிருந்த இடத்திலிருந்து, இது கண்டெடுக்கப்பட்ட இடம் ஒண்ணும் அத்தனை தூரமில்லை. உருப்படியா உதவற மாதிரி இது ஒண்ணை மட்டும் தான் அவங்களால அங்கேயிருந்து திரட்ட முடிஞ்சிருக்கு.''

பொய்ரெட் அதைத் தட்டி சமன் செய்தான். கையெழுத்து கொட்டைக் கொட்டையாகவும் அங்குமிங்கும் சிதறியுமிருந்தது.

'... ... ... உடனடியா பணம் கையிலிருந்தாகணும். உன்னால முடியலேன்னா, அப்புறம் என்ன ஆகும்? நான் உன்னை எச்சரிக்கிறேன்... ... ...'

பொய்ரெட் முகம் சுருங்கியது. அதைப் படித்தான். திரும்பத் திரும்பப் படித்தான். ''இது இண்ட்ரஸ்ட்டிங்கா இருக்கு'' என்றான். ''நான் வெச்சுக்கலாமில்லே?''

''நிச்சயமா. இதுல கைரேகைகள் கிடையாது. இதிலிருந்து உங்களால ஏதாவது கோடு போட முடியும்னா, நான் மகிழ்வேன்.''

கலோனல் வெஸ்ட்டன் மறுபடியும் எழுந்து கொண்டார். ''நான் கிளம்பியே ஆகணும். மரண விசாரணை நாளைக்கு. ஆங்... நீங்க சாட்சி சொல்ல கூப்பிடப்படலே - கேப்டன் ஹேஸ்டிங்ஸ் மட்டும் தான் அழைக்கப்பட்டிருக்கார். நீங்க இதுல இருக்கீங்கனு சாதுர்யமான நியூஸ் பேப்பர் ஆளுங்களுக்குத் தெரிஞ்சுடக் கூடாது என்பது காரணம்.''

''புரியுது. பாவப்பட்ட அந்தப் பொண்ணோட உறவுக்காரங்க?''

''அவளோட அப்பாவும் அம்மாவும் யார்க்-டிஷர் பகுதியிலிருந்து கிளம்பி இன்னிக்கு ராத்திரி வராங்க. அஞ்சரை மணிக்கு வராங்க போல. பரிதாபமானவர்கள். அவங்களுக்காக நான் ரொம்ப வருத்தப் படறேன். மறுநாளே பாடியை வாங்கிக்கிட்டு அவங்க கிளம்பறாங்க.'' சொல்லி விட்டு மறுப்பாய் தலையசைத்து வருந்திய கலோனல், ''இதெல்லாம் என்னை ரொம்ப வாட்டுது, மிஸ்டர் பொய்ரெட்'' என்றார்.

''இப்படியெல்லாம் நடக்க யாருக்குத் தான் சம்மதம், கலோனல்? இது, நீங்க சொல்ற மாதிரி, ஜீரணிக்க ரொம்ப கஷ்டமான ஒன்று தான்.''

அவர் கிளம்பிப் போனதும், மற்றுமொரு முறை அந்தத் துண்டு காகிதத்தைப் பரீட்சித்தான் பொய்ரெட்.

''என்ன, ஏதாவது முக்கியமான துப்பா?'' என்று கேட்டேன் நான்.

தோள்களைக் குலுக்கிக் காட்டினான் அவன். ''அப்படி எப்படி உடனடியா சொல்லிட முடியும்? ப்ளாக்-மெயில் சார்ந்த மிரட்டல்னு தெரியுது! நம்ம கூட அன்னிக்கு ராத்திரி பார்ட்டியிலிருந்த யாரோ பணத்துக்காக ரொம்பவும் மோசமான முறையில மிரட்டப்பட்டிருக் காங்க. அது, பார்ட்டியிலே இருந்தவங்க அல்லாத வெளியாளா

இருக்கும் வாய்ப்பும் இருக்கு...''

அந்தக் கையெழுத்தை சின்ன பூதக்கண்ணாடி கொண்டு பரீட்சித்தான் அவன். ''இந்தக் கையெழுத்து எங்கேயோ பார்த்த மாதிரி உனக்கு படுதா, ஹேஸ்டிங்ஸ்?''

''எதையோ இது எனக்கு நினைவூட்டுது. ஆஹ்! மிஸஸ் ரைஸ் எழுதின அந்தச் சின்ன குறிப்பு.''

''யெஸ்'' என்றான் பொய்ரெட் மெல்லமாய். ''ஒற்றுமைகள் இருக்கு. நிச்சயமா, ஐயமின்றி, ஒற்றுமைகளிருக்கு. இது விசித்திரமாயிருக்குடா. இப்பவும் கூட இது மேடம் ரைஸே எழுதினதா இருக்குமானு எனக்கு சந்தேகமாயிருக்கு'' என்றவன், ''வாங்க'' என்றான், கதவில் கேட்ட தட்டு மோசைக்கு.

வந்தது கமாண்டர் சாலஞ்சர்.

''சும்மா வந்தேன்'' என்றார். ''ஏதாவது முன்னேற்றங்கள் நடந்திருக்கானு தெரிஞ்சுக்கலாம்னு ...''

''இந்த நொடியில, நான் ரொம்பவும் பின்தங்கியிருப்பதாத் தான் எனக்கே படுது'' என்றான் பொய்ரெட். ''முன்னேற முடியவேயில்லே.''

''நம்ப முடியலே, திரு பொய்ரெட். உங்களைப் பற்றி நான் சமீபத்துல கேள்விப்பட்டேன். எத்தனை சாதுர்யமான அதிமேதாவி நீங்க. துப்பறிதலில் தோல்வியே கண்டது கிடையாதாமே, நீங்க?!''

''அது நிஜங்கிடையாது'' என்றான் பொய்ரெட். ''கேவலமான அனுபவங்களும் உண்டு. பத்து இருபது வருஷங்களுக்கு முன்னால் பெல்ஜியத்தில் நடந்தது அது. உன்கிட்டே கூட சொல்லியிருக்கேனே, ஹேஸ்டிங்ஸ் - அந்த 'ஒரு பெட்டி சாக்லெட்' கேஸ்.''

''நினைவிருக்கு.''

இப்படிச் சொல்லி விட்டு நான் சிரித்துக் கொண்டேன். அந்தக் கதையை என்னிடம் அன்று பொய்ரெட் சொல்லி முடித்தபோது, அவன் அகந்தை கொண்டு இயங்குவதாய் எனக்குப்பட்டால் உடனே நான் 'சாக்லெட் பாக்ஸ்' என்று சொல்லி விட வேண்டும் என அறிவுறுத்தியிருந்தான்!

''ஓ. இருக்கட்டுமே'' என்றான் சாலஞ்சர். ''அது நடந்து எத்தனை வருஷமாகுது? ஆனா இப்ப உங்க கீர்த்தியே வேற இல்லையா? இந்த வழக்கோட அடி ஆழம் வரை போய் பார்க்காம விட மாட்டீங்க, ஆங்?''

''அதென்னவோ ஒத்துக்கறேன். என் மேல் ஆணை. நான் தான் அந்தக் கொலைகாரனுடைய வாசனையை மோப்பம் பிடித்துள்ள ஒரே நாய். விடப்போவதில்லை.''

''குட். ஏதாவது ஊகங்கள் விளைந்திருக்கா?''

''எனக்கு ரெண்டு பேர் மீதான சந்தேகம் இருக்கு.''

''அவங்க யார் யார்னு நான் கேட்கக் கூடாதுனு நினைக்கிறேன்.''

''நானும் அதை உங்ககிட்டே சொல்லக் கூடாது! நான் தப்பா கூட கணிச்சிருக்கலாம் இல்லையா?''

''சம்பவம் நடந்தபோது நான் இங்கே இல்லாததுலே ஒண்ணும் குழப்பம் கிடையாதே...?'' - சுரத்தற்ற கண்ணடிப்போடு கேட்டது, சாலஞ்சர்.

பொய்ரெட், தனக்கு முன்னால் பொன்னிற முகத்தோட உட்கார்ந்திருந்த கமாண்டரைப் பார்த்து வசீகரமாய் புன்னகைத்தான். ''8.30 கடந்த ஒரு சில நிமிடங்கள்ல நீங்க டேவன்போர்ட்டை விட்டுக் கிளம்பியிருக்கிங்க. நீங்க இங்கே பத்து ஐந்துக்கு வந்து இறங்கிறீங்க - அதாவது கொலை நடந்து இருபது நிமிடங்கள் கழித்து. ஆனா பாருங்க, டேவன்போர்ட்டிலிருந்து நம் பகுதிக்கான தூரம் அதிகபட்சம் முப்பது மைல்கள் தான். இணைப்பு சாலை நல்லா இருப்பதால நீங்களே கூட பல முறை ஒரு மணி நேர பிரயாணத்துக்குள்ளே இங்கே வந்திருப்பீங்க. ஆக, கவனியுங்க, சம்பவம் நடந்த போது நீங்க இல்லாம இருந்தது - குழப்புது.''

''வெல், நான் ...''

''நான் எல்லாத்தையும் விசாரிக்கிறேன் என்பது இதுலேந்து உங்களுக்குப் புரிஞ்சிருக்கும். நீங்க சம்பவ நேரத்துல இல்லாம போனது, அத்தனை சாதகமா இல்லே. சம்பவ இடத்துல இல்லாம அப்போ வேற எங்கேயோ இருப்பது மட்டும் ஒரு கொலைக்கான எல்லாமும் கிடையாது; இன்னும் பல விஷயங்கள் இருக்கு. உங்களுக்கு மேடம் நிக்கைக் கலியாணம் கட்டிக்க ஆசையிருக்குனு நினைக்கிறேன்?''

கடற்படை ஆளின் முகம் அலையாலடிக்கப்பட்டது.

''அவளைக் கலியாணம் கட்டியாகணும்னு நான் எப்பவும் நினைத்ததுண்டு'' என்றான் கிறக்கமாய்.

''சரியா சொன்னீங்க. ஆனா - மேடம் நிக் வேற ஒருத்தனுக்கு நிச்சயம் செய்யப்பட்டுடறாங்க. அந்த இன்னொரு ஆளைக் கொல்ல வேணும்னா இது சிறப்பான காரணமா அமையலாம். ஆனா அது இப்போ தேவையில்லாம ஆயிடுது - அவன் ஒரு நிஜ ஹீரோ போல வீர மரணம் அடைஞ்சிருக்கான்.''

''ஆக, அது நிஜந்தானா? இவளுக்கும் ஸெட்டானுக்கும் நிச்சயம் ஆயாச்சா? இது குறித்த ஒரு புரளி இன்னிக்குக் காலையிலிருந்து டவுனை சுத்திக்கிட்டு இருக்கு.''

''ஆமாம். எத்தனை சீக்கிரமா சேதிகள் பரவுதுனு பார்க்கும்போது விசித்திரமாயிருக்கு. இப்படி நடக்கும்னு நீங்க முன்னமேயே துளி கூடவா மோப்பம் பிடிக்கலே?''

''நிக் யாரோ ஒருத்தன் கூட நிச்சயமாயிருக்கானு எனக்குத் தெரியும் - அவளே ரெண்டு நாளைக்கு முன்னாடி என்கிட்டே சொன்னா. ஆனா அது யார்கூடனு அவ கொஞ்சங்கூட க்ளூ தரலே.''

''அது - மைக்கேல் ஸெட்டான். அவன் அவங்களை விட்டு நிரந்தரமா போயிட்டான் - ஆஹ், இது ஓர் எதிர்பாராத அதிர்ஷ்டம்னு சொல்லலாமா! உங்க பக்கத்திலிருந்து பார்க்கும்போது, இது, நிக்கைக் கொல்லும் காலகட்டம் கிடையாது, ஆங்...?! போய் விட்ட தனது காதலனுக்காக அவ விசும்பறா. ஆனா, இதயம், எப்படியோ அதுவாகவே தானா ஆறுதலடைஞ்சுடுது. அவங்களும் சின்னப் பொண்ணு. ஆங், மிஸ்டர்... அவங்க உங்க மேல ரொம்பவும் ஆர்வமா இருக்காங்கனு நினைக்கிறேன்.........''

சாலஞ்சர் ஒருசில கணங்கள் மவுனமாக இருந்தான். ''அப்படினா... ......'' என்று அவன் ஏதோ முணுமுணுக்கத் துவங்கும்போது, வாசல் கதவில் சில தட்டுகள் விழுந்தன.

அங்கு - ஸீப்ரெட்டரிக்கா ரைஸ்.

''நான் உனக்காகத் தான் எதிர்பார்த்துக்கிட்டிருந்தேன்'' என்றாள் அவள். ''நீ இங்கே இருப்பதா சொன்னாங்க. என்னோட கைக்கடி யாரத்தை திருப்பி வாங்கிக்கிட்டு வந்துட்டியானு கேட்க வந்தேன்.''

''ஓ, யெஸ். இன்னிக்குக் காலையிலேயே.''

தனது சட்டைப் பையிலிருந்து அதை எடுத்து அவளிடம் ஒப்படைத் தான் கமாண்டர். வழக்கமாய்ப் பார்க்கமுடியாத ஓர் அசாதாரண வாட்சாய்

இருந்தது அது - கோளம் போல வட்ட வடிவம்; வெறும் கறுப்புப் பட்டையில் கட்டப்பட்டிருந்தது அது. ஏறக்குறைய இதே போன்ற வடிவம் கொண்ட ஒரு கைக்கடியாரத்தை நான் நிக்கின் மணிக்கட்டில் பார்த்த ஞாபகம் வந்தது.

''இனிமே அது நல்ல நேரம் காட்டும்னு நினைக்கிறேன்.''

''ப்ச், சரியான அக்கப்போர் இது. இதுல ஏதாவது ஒண்ணு ரிப்பேர் ஆகிக்கிட்டே இருக்கும்.''

''இதெல்லாம் அழகுக்குத் தான் மேடம்... பயன்பாட்டுக்கு ஒத்து வராது'' என்றான் பொய்ரெட்.

''ரெண்டும் ஒண்ணுல இருக்கிற மாதிரி அமையாதா?'' - எங்களில் ஒவ்வொருவரையும் மாற்றி மாற்றிப் பார்த்தாள் அவள். ''ஓ... நான் உங்களுடைய சந்திப்புக்கு இடையூறா நுழைஞ்சுட்டேனா?''

''நோ, மேடம், நோ. நாங்க கிசுகிசு பற்றிப் பேசிக்கிட்டிருந்தோம் - க்ரைம் பற்றி அல்ல. சேதியெல்லாம் எப்படி மளமளனு பரவுதுனு வியந்துக்கிட்டிருந்தோம் - வீரதீர ஆணான காலஞ்சென்ற லெட்டா னோடு நிக் பக்லேவுக்கு நடந்திருந்த நிச்சயதார்த்தம் பற்றி சொல்றேன்.''

''ஆக, நிக், மைக்கெல் லெட்டானோடு நிச்சயமாகியிருந்தாள்... ஆங்?'' என்றாள் ஃப்ரெட்டரிக்கா பேராச்சரியத்தோடு.

''இது உங்களை ஆச்சரியமாக்குதா, மேடம்?''

''கொஞ்சமா. ஏன்னு எனக்கே தெரியலே. கடைசி முறை சந்திச்ச போது அவகிட்டே அவன் தன் மனசு முழுக்கவும் பறி கொடுத்துட்டான் என்பதை நான் நிச்சயமாவே கவனிச்சேன். ஆனா, அந்தத் தவிப்பு, கிருஸ்துமஸுக்கு அப்புறமா அவங்க ரெண்டு பேர் கிட்டேயும் அப்படியே அடங்கி விட்டதையும் நான் கவனிச்சேன். எனக்குத் தெரிஞ்சு, அவங்க ரெண்டு பேரும் சந்திப்பது கூட மிகவும் குறைஞ்சது.''

''அந்த ரகசியத்தை - அவங்க ரெண்டு பேருமே அந்த அளவுக்குக் கட்டிக்காத்தாங்க.''

''இதெல்லாம் அந்த ஓல்ட் சர் மேத்யூவாலதான் என்பது என் ஊகம். அவன் அரை லூசு என்பது என் கணிப்பு.''

''இதைப்பற்றி உங்களுக்கு ஐயங்களே வரலையா, மேடம்?

பார்க்கப்போனா நீச் உங்களோட மிக நெருக்கமான தோழி வேற?''

''தேவைனா, முழு ரகசியம் காக்கும் பிசாசு அவ'' - முணுமுணுத் தாள் ஸெக்ரெட்டரிக்கா. ''சமீபகாலமா அவ ஏன் அப்படி படபடப்பா இருந்தானு எனக்கு இப்ப புரியுது. அன்னிக்கு ஒரு நாள் அவ என்னவோ சொன்னதை வெச்சே நான் ஊகிச்சிருக்கணும்.''

''உங்களுடைய இளைய தோழி - ரொம்ப வசீகரமானவங்க மேடம்.''

''ஓல்ட் ஜிம் லாஸரஸ் இதே மாதிரி எண்ணிய ஒரு நேரமுண்டு'' என்றான் சாலஞ்சர்... அவனுக்கே உரிய உரத்த லஜ்ஜையற்ற சிரிப்போடு.

''ஓ! ஜிம் ...'' - அவள் தோள்களைக் குலுக்கிக் கொண்டாள்; ஆனால் எனக்கு அவள் எரிச்சலானதாய்பட்டது.

பொய்ரெட் பக்கம் திரும்பினாள் அவள். ''சொல்லுங்க பொய்ரெட்'' என்றாள். ''நீங்க...''

நிறுத்தி விட்டாள். அவளது உயரமான உருவம் அதிகார தோரணை கொண்டது. அவளுடைய முகம் இன்னமும் வெளிறியது. அவளுடைய கண்கள் மேஜையின் மையத்தில் நிலை கொண்டிருந்தன.

''உங்களுக்கு உடம்பு சுகமில்லே, மேடம்.''

சொன்ன நான் அவளருகில் ஒரு நாற்காலியைத் தள்ளிச் சென்றேன்... அவள் அதில் புதைய உதவினேன். இப்போது மறுப்பாய் தலையசைத்த அவள், ''ஐ ஆம் ஆல் ரைட்'' என முணுமுணுத்தாள். சொல்லி விட்டு முன் வளைந்து வந்து தன்னிரு கைகளுக்குள்ளும் முகத்தை புதைத்துக் கொண்டாள். நாங்கள் அவளை அவலட்சணமாய் நெளிந்தபடி பார்த்துக் கொண்டிருந்தோம்.

சில நிமிடத்துக்குள் அவள் நிமிர்ந்து உட்கார்ந்துக் கொண்டாள்.

''ஜார்ஜ், டார்லிங், ரொம்ப கவலையாயிட்டாப்ல இருக்கு. ஒன்னுமில்லே. நாம கொலை பற்றி பேசுவோம். ஏதாவது விறுவிறுப்பா இருக்கிற மாதிரி. திரு பொய்ரெட் இந்த கேஸ்ல நுழைஞ்சிருக்காரானு எனக்குத் தெரியணும்.''

''அதைப் பத்தி இப்பவே சொல்வது ரொம்ப கஷ்டம் மேடம்'' என்றான் பொய்ரெட் பட்டும்படாமல்.

''ஆனா உங்களுக்குள்ளே ஊகங்கள் இருக்கு - ஆங்?''

''இருக்கலாம். இருக்கு. ஆனா எனக்கு வண்டி வண்டியா சாட்சிகள் வேணும்.''

''ஓ!'' - நிச்சயமற்றத் தன்மையில் சொன்னாள்.

இப்போது திடுமென எழுந்து கொண்டாள் அவள். ''எனக்குத் தலையை உடைக்குது. போய் படுத்துடணும். நாளைக்கு நான் நிக்கைப் பார்க்க அனுமதிப்பாங்கனு நினைக்கிறேன்.''

அறையை அப்படியே விட்டுவிட்டுக் கிளம்பி விட்டாள் அவள். சாலஞ்சர் முகஞ்சுளித்தான். ''என்ன மாதிரி கெமிஸ்ட்ரியில இந்தப் பொண்ணு ஆக்கப்பட்டிருக்கானு எவனாலயும் கண்டுபிடிக்க முடியாது. நிக் வேணும்னா இவ மேல ஆவலா இருக்கலாம்... ஆனா எனக்கென்னவோ இவளுக்கு நிக் மேல ஆர்வமிருப்பதா தோணலே. ஆனா, இந்தப் பொண்ணுங்க விஷயத்துல, நாம எதையும் அறுதியிட்டு சொல்லிடவும் முடியாதே. டார்லிங் டார்லிங் டார்லிங்னே சொல்லிக்கிட்டு அலையுங்க - ஆனா நிஜத்துல அது 'தூ...'ங்கிற அளவுக்கான இகழ்ச்சியாகூட இருக்கும். நீங்க வெளியே போறீங்களா, பொய்ரெட்?''

தற்சமயம் பொய்ரெட் எழுந்து விட்டிருந்தான். அவனுடைய தொப்பியை அணிய தயார் பண்ணிக் கொண்டிருந்தான்.

''யெஸ். டவுன் வரைக்கும் போறேன்.''

''எனக்கு எந்த ஜோலியும் இல்லே. நானும் உடன் வரலாமா?''

''சர்வ நிச்சயமா. அது எனக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும்.''

நாங்கள் அறையை விட்டு வந்திருந்தோம். பொய்ரெட் ஒரு சின்ன எக்ஸ்க்யூஸ் மீ சொல்லி விட்டு மீண்டும் அறைக்குப் போனான்.

''என் கைத்தடி'' என்றான் திரும்பி வந்து எங்களுடன் இணைந்து கொள்ளும்போது.

சாலஞ்சர் சின்னதாய் துடித்து பின்வாங்கினான். பொய்ரெட்டின் தங்க முலாம் பூசப்பட்ட கைத்தடி ஒரு ஆடம்பரப் பொருளாய் இருந்தது.

பொய்ரெட்டின் முதல் விஸிட், ஒரு பூக்கடையாக அமைந்தது. கடைசியாய் தங்க அலங்காரம் செய்யப்பட்டிருந்த ஒரு கூடையைத் தெரிந்தெடுத்து அதில் ஆரஞ்சு நிற மலரலங்காரம் நிரப்பப்பட வேண்டும் என்றான். நீல நிற வில் போன்ற கயிறுகளால் அதில் நிறையவே கட்ட

வேண்டியிருந்தது.

கடைக்காரப் பெண்மணி அவனிடம் ஒரு சின்ன அட்டையைத்தர, அதில் அவன், 'With best compliments from Hercule Poirot' என எழுதினான்.

''நான் அவளுக்கு இன்னிக்குக் காலையில சில மலர்களை அனுப்பியிருந்தேன்'' என்றான் சாலஞ்சர். ''அவளுக்கு சில பழங்களை அனுப்பப் போறேன்.''

''வேஸ்ட்.''

''என்னது?''

''அது வீண்'னேன். சாப்பிட உகந்தவைக்கு - அங்கு அனுமதி கிடையாது.''

''யார் சொன்னது அப்படி?''

''நான் சொல்றேன் அப்படி. அப்படி ஒரு சட்டத்தையே நான் அங்கே கொண்டு வந்திருக்கேன். இது பற்றி ஏற்கெனவே மேடம் நிக்குக்கு அறிவுறுத்தல் முடிஞ்சாச்சு. அவங்களும் புரிஞ்சுக்கிட்டாங்க.''

''ஓ, கடவுளே!'' என்றான் சாலஞ்சர்.

முழுக்கவும் உலுக்கப்பட்டவனைப் போல தெரிந்தான் அவன். அவன் பொய்ரெட்டை விளங்கா ஆர்வத்தோடு கவனித்தான். ''ஆக இன்னும் அது அப்படியே தானிருக்கு, இல்லே?'' என கேட்டேன்.

''இன்னும் நீங்க - பயந்து சாகறீங்க.''

*அத்தியாயம் 16*

# மிஸ்டர் விட்ஃபீல்டுடன் ஒரு சந்திப்பு

காய்ந்த எலும்புத் துண்டினைப் போல உப்பு சப்பற்றுப் போனது மரண விசாரணை. அந்த உடல் யார் என்பதைப் பற்றிய அடையாளம் காண வேண்டி வந்தது. அதற்கு நான் சாட்சி தந்தேன். மருத்துவ அறிக்கைகள் தொடர்ந்து வந்தன.

ஒரு வாரத்துக்கு விசாரணை தள்ளிப்போடப்பட்டது.

தினசரி செய்தித்தாள்களின் தலையாய சேதியாகியது செயின்ட் ஹூ கொலை. இதற்குமுன் 'லெஸட்டான் காணவில்லை. பறக்கும் மனிதனின் விளங்கா விதி' போன்றவை பந்தல் கட்டுப்பட்டு முன்னிலை வகித்திருந்தன.

இப்போது லெஸட்டான் செத்தவனாகி அவனுக்கு உரிய மரியாதைகளும் அனுஷ்டிக்கப்பட்டு விட்ட நிலையில், வேறொரு கிளர்ந்தெழும் சேதிக்காக இருக்கை காத்திருந்தது. செயின்ட் ஹூ சேதி, ப்ரஸ்ஸுக்கு இறைவனாய் அனுப்பி வைத்த அதிர்ஷ்ட திருப்பமானது.

ரிப்போர்ட்டர்களுக்கு சிறப்பானதொரு ஏமாற்றமாய் ஆகிப்போன மரண விசாரணைக்குப் பிறகு நானும் பொய்ரெட்டும் திரு கில்ஸ் பக்லே மற்றும் அவருடைய மனைவி ஆகியோரைத் தேடிப்போய் சந்தித்தோம். மேக்கியின் அப்பாவும் அம்மாவும் வசீகரிக்கும் ஜோடியாய் தோன்றினார்கள். படாடோபமற்ற அமரிக்கையானவர் களாய் தெரிந்தார்கள்.

அதிலும் மிஸஸ் பக்லே, நற்குணங்களின் உறைவிடமாய் திகழ்ந்தார். நல்ல நெட்டை. நல்ல சிகப்பு. அவரது கணவர் சற்று உயரம்

கம்மியாகவும் நரை விழுந்தும் இருந்தார். அதைரியம் அறையும் தன்னம்பிக்கை குன்றிய காற்று அவரிடமிருந்து விளைந்தது.

அவர்களை வென்று, இருவரின் உயிரான மகளைத் திரும்பயியலா இடத்துக்குக் கல்விச் சென்று விட்ட துரதிர்ஷ்ட விதியின் வலிமையால், பெற்றவர்கள் உலுக்கப்பட்டுக் கிடந்தனர். ''எங்க மேக்கி...'' என்றே தான் அவளைக் குறிப்பிடும் போதெல்லாம் சொன்னார்கள்.

''இப்ப நினைச்சாலும் எனக்கு அடிவயித்தைக் கலக்குது'' என்று சொன்னார் திரு பக்லே. ''என்ன அருமை பெருமையான மக அவ, திரு பொய்ரெட். அத்தனை பதவிசு - சுயநலமே கிடையாது அவளுக்கு. எப்பப்பாரும் மத்தவங்களைத் தான் அவ நினைச்சுக்கிட்டேயிருப்பா. யாருக்குப்பா அவளைக் காயப்படுத்தத் தோணியிருக்கும்?''

''என்னால தந்தியைப் புரிஞ்சுக்கவே முடியலே'' என்றது, மிஸஸ் பக்லே. ''எங்ககிட்டேயிருந்து அவ கிளம்பி வந்ததை, அதுக்கு முந்தைய காலைல தான் நாங்க எங்க ரெண்டு ஜோடி கண்களால பார்த்திருந்தோம்.''

''மூச்சு விட்டுக்கிட்டு நாங்க ரெண்டு பேரும் செத்துப் போயிருக்கோம்'' என முணுமுணுப்பாய் கலங்கினார் மிஸ்டர் பக்லே.

''கலோனல் வெஸ்ட்டன் ரொம்ப கனிவா நடத்தினார்'' என்றார் மிஸஸ் பக்லே. ''இந்த அராஜகத்தை செஞ்ச மனுஷனைக் கண்டு பிடிக்கத் தேவையான அத்தனையும் முடுக்கி விடப்பட்டுள்ளதாய் உத்திரவாதம் தந்தார் அவர். அவன் ஒரு பைத்தியக்காரனாத் தானிருக்க முடியும். வேறெந்த விளக்கமும் இதுக்குக் கிடையாது.''

''மேடம்...'' என்ற பொய்ரெட், ''உங்களுடைய இழப்புல நான் எத்தனை அனுதாபப்படுகிறேன் என்பதை வார்த்தைகளால விவரிக்க முடியாது'' என்றான். ''அதே போல, உங்க துணிவைப் பார்த்தும் நான் எத்தனை வியக்கிறேன் தெரியுமா...?!''

''உடைஞ்சு நொறுங்கிப் போவது மட்டும் எங்க மேக்கியைக் கொண்டு வந்து மறுபடியும் முன்னாடி நிறுத்திடாதே'' என்றாள் அவள் வருத்தமாய்.

''என் மனைவி ஒரு தங்கம்'' என்றார், கிருஸ்துவ பாதிரியாய் நின்ற மிஸ்டர் பக்லே. ''அவளுடைய நம்பிக்கையும் துணிவும் என்னை விட அசாத்தியமானவை. ஆனா - இங்கே நடந்துள்ள அத்தனையும் - படு

பயங்கரமானவை, திரு பொய்ரெட் - நடுநடுங்க வைப்பவை.''

''எனக்கும் தெரியும், எனக்கும் தெரியும்.''

''நீங்க பெரும்துப்பறியும் மேதை, திரு பொய்ரெட்... ஆங்?'' என கேட்டார் மிஸஸ்.

''அப்படித்தான் சொல்றாங்க, மேடம்.''

''ஓஹ்! காது பட கேட்டிருக்கேன். ஒதுக்குப்புறமா கிராமங்களில்கூட உங்க பேச்சு ஆங்காங்கே அடி படுவதுண்டு. நீங்க உண்மையைக் கண்டுபிடிக்க போறீங்களா, பொய்ரெட்?''

''அது நடக்கற வரைக்கும் - நான் ஓய மாட்டேன், மேடம்.''

''அந்த உண்மை உங்களைவந்தடையும், திரு பொய்ரெட்'' என்றார் மதகுருவாய் தோன்றிய மிஸ்டர் பக்லே. ''சாத்தான் தண்டனை யிலிருந்து தப்ப முடியாது.''

''சாத்தான், எப்போதும் தண்டிக்கப்படாமல் போவது கிடையாது, ஸார். ஆனால், அந்த தண்டனை, சில சமயங்களில், ரகசியமாய் அரங்கேறி விடுவதுண்டு.''

''அப்படினா? என்ன சொல்ல வரீங்க, திரு பொய்ரெட்?''

பொய்ரெட் மறுத்து தலையை மட்டும் அசைத்தான்.

இப்போது ''புவர் நிக்'' என்றார் திருமதி பக்லே. அவளுக்காக அடியாழம் வரை நான் வருந்தறேன். ரொம்பவும் சோகத்தைப் பிழியும் ஒரு கடிதம் வந்தது எனக்கு. 'மேக்கி சாகறதுக்காகத் தான் அவளை இங்கே நான் வரச் சொல்லி வற்புறுத்தினேனா'னு, பாவம் புலம்பித் தீர்த்திருக்கா அந்தக் கடிதத்துல.''

''இது ஆடிப்போன அவ மனசின் நடுக்கம்'' என்றார் மிஸ்டர் பக்லே.

''இருக்கலாம். ஆனா அவ எந்த அளவுக்கு உணர்ச்சிபூர்வமா வருந்தறானு எனக்குத் தெரியும். அவளைப் பார்க்க என்னை அனுமதிக்கணும்னு வேண்டிக்கறேன். அவளோட குடும்ப ஆட்களைக் கூட சந்திக்க அனுமதிக்காது சிறைபடுத்தி வெச்சிருப்பது எனக்கு ரொம்ப அசாதாரணமா படுது.''

''டாக்டர்களும் நர்ஸுங்களும் இந்த விஷயத்துல படு ஸ்ட்ரிக்ட்'' என்றான் பொய்ரெட், உத்வேகமாய். ''அவங்க தான் இப்படி சட்ட திட்டங்களைப் போடுவதே - எனவே - யாராலும் அதை உடைச்சுக் கிட்டு முன்னேற முடியாது. அவ உணர்ச்சிவசப்படுவாளோனு -

உங்களைப் பார்த்ததும் பொத்துக்கிட்டு இயற்கையா அவளுக்குள்ளே வரும் உணர்ச்சிவசத்தால அவ உடைஞ்சுடுவாளோனு - அவங்க பயப்படறாங்க.''

''ம், இருக்கலாம்'' என்றார் திரு பக்லே சந்தேகத்துடன். ''ஆனா நான் இந்த நர்ஸிங் ஹோமையெல்லாம் சார்ந்திருப்பது கிடையாது. அந்த இடத்துலேந்து உடனே விடுதலையாகி அவ நேரடியா என்னோட கிளம்பும்படி அவங்க வழி செஞ்சு தந்தாங்கன்னா... நிக் நல்லபடியா ஆகிடுவா.''

''இது சாத்தியம் தான் - ஆனா அவங்க இதுக்கு அனுமதி தருவாங்கனு எனக்குத் தோணலே. மேடம் நிக்கை நீங்க பார்த்து ரொம்ப நாளாகியிருக்கும் இல்லே?''

''இருக்கும் - ஒரு வருஷம். கடந்த வசந்தகாலத்தில் பார்த்தது. அப்போ அவ ஸ்கார்-பரோ வந்திருந்தா. மேக்கியும் அங்கே போய் அவளோட ஒரு நாள் கழிச்சா. அப்புறம் அவளும் எங்ககூட வந்திருந்து ஒரு ராத்திரி தங்கியிருந்தா. அவளோட நட்பு வட்டாரம் எனக்குப் பிடிக்காத ஒண்ணாயிருந்தாலும் கூட - அவ ஒரு கலகல படைப்பு. அவ இப்போ வாழ்ந்துகிட்டிருக்கும் ஒரு வாழ்க்கை - ம்... எல்லாம் அவளோட தப்பு கிடையாது. அவளை நல்ல முறையா வளர்த்து ஆளாக்க ஆரோக்கியமான ஒரு சூழல் அமையாமப் போச்சு.''

''அது ஓர் அந்நியமான வீடு - அந்தக் கடைசி வீடு'' என சிந்தனை பொதிந்து சொன்னான் பொய்ரெட்.

''எனக்கு அது பிடிக்கவே பிடிக்காது'' என்றார் மிஸஸ் பக்லே. ''எப்பவுமே. அதுல ஒட்டு மொத்தமா என்னவோ தப்பிருக்கு. ஓல்ட் நிக்கோலஸை நான் தீவிரமா வெறுத்தேன். என்னை நடுநடுங்க வைப்பார், அவர்.''

''நல்ல மனுஷனில்லேனு நினைக்கிறேன்'' என்றார் அவருடைய கணவன். ''ஆனா அவர்கிட்டே விளக்க முடியாத ஓர் ஈர்ப்பிருந்தது.''

''அப்படியெல்லாம் நான் எப்பவும் உணர்ந்தது கிடையாது'' என்றார் திருமதி பக்லே. ''பேய் பிடிச்சிருப்பது போன்ற உணர்வு வரும், அந்த வீட்டைப் பார்த்தாலே. நாம அந்த வீட்டுக்கு மேக்கியை அனுப்பியிருக்கவே கூடாதோனு இப்பத் தோணுது எனக்கு.''

''ஆஹ்! இப்போ நினைக்கிறோம்...'' - தலையை மறுப்பாய்

அசைத்தபடி குறிப்பிட்டார் திரு பக்லே.

''வெல்...'' என்ற பொய்ரெட், ''உங்க நேரத்துல நான் ரொம்பவும் இடைபுகுந்து தொந்தரவு பண்ணிக்கிட்டிருக்கக் கூடாது. உங்களைப் பார்த்து எனது ஆழ்ந்த அனுதாபங்களைச் சமர்ப்பிக்கத்தான் நான் நினைச்சேன்.''

''நீங்க ரொம்ப கனிவானவர், திரு பொய்ரெட். நீங்க எங்களுக்கு உதவும் எல்லாவற்றுக்கும் நாங்க ரொம்பவும் கடமைப்பட்டிருக்கோம்.''

''நீங்க யாக்-டிஷருக்கு எப்போ திரும்பறீங்க?''

''நாளைக்கு. துக்ககரமான பிரயாணம். குட்-பை திரு பொய்ரெட். மீண்டும் நன்றிகள்.''

''ரொம்ப சிம்பிளான மற்றும் ருசிகரமான இருவர்'' என்றேன் நான், கிளம்பிய பிறகு.

பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத்தான்.

''நெனச்சா, நெஞ்சே கனத்துப் போகுது, இல்லையாடா? காரணமேயில்லாத - பிரயோஜனமேயில்லா - ஒரு துக்கம். ஆஹ்... ஆனா நான் என்னையே கடுமையா வெறுக்கறேன், தெரியுமா? நான், ஹெர்குல் பொய்ரெட், ஸ்தலத்துல இருந்திருக்கேன்... ஆனா நடந்த குற்றத்தைத் தடுக்காம!''

''யாராலும் அதைத் தடுத்திருக்கவே முடியாது.''

''யோசிக்காம பேசறே, ஹேஸ்டிங்ஸ். எந்த சாதாரண மனுஷனாலும் தடுத்திருக்க முடியாது - யெஸ். ஆனா, சூட்டிகையான செயல்களை சாமர்த்தியமா செய்து முடிக்க உதவும் மூளையின் தரமான சாம்பல் நிற செல்கள் இயற்கையாவே அதிகம் உள்ள ஹெர்குல் பொய்ரெட், அவையில்லாத சாதாரணமானவர்களை விட புத்திசாலித்தனமா இயங்காம தோற்றிருக்கும்போது... இனி அவனால என்னடா பிரயோஜனம்?''

''வெல்...'' என்ற நான் சொன்னேன்: ''நீ இந்தக் கோணத்துல அர்த்தப்படுத்தினேனா ...''

''ஆமாம். அப்படித்தான். நான் தரங்குறைஞ்சுப் போயிட்டேன்டா. வேஸ்ட்டாயிட்டேன்டா. முழுக்கவும் தரமற்று போயிட்டேன்டா.''

மனச்சாட்சி உறுத்த ஒரு சாதாரண மனிதன் போடும்

அங்கலாய்ப்பாய்த் தான் நான் பொய்ரெட்டின் 'தரங்குறைந்துப் போன' சங்கதியை எடுத்துக் கொண்டேன், ஆகவே, எந்தக் குறிப்பும் நான் தரவில்லை.

''இப்போ'' என்றவன் சொன்னான்: ''லண்டனுக்கு.''

''லண்டனுக்கா?''

''யெஸ்.''

''டேய்!''

''ரெண்டு மணிக்கான ட்ரெயினை அவசரப்படாம நாம பிடிச்சுடலாம். இங்கே எல்லாமும் அமைதியா போயிட்டிருக்கு. மேடம் நர்ஸிங் ஹோம்ல பாதுகாப்பா இருக்காங்க. யாராலும் அவங்களுக்கு இக்கட்டை ஏற்படுத்த முடியாது. ஆகையினால, காவல் நாய்கள், சற்றே இளைப்பாறி வரலாம். எனக்குத் தேவைப்படும் ஓரிரு தகவல்கள் பாக்கியிருக்கு.''

லண்டனுக்குப் போய் இறங்கியதும் எங்களுடைய முதல் வேலை காலஞ்சென்ற கேப்டன் ஸெட்டானுடைய வக்கிலான விட்ஃபீல்டைப் போய்ப் பார்ப்பதாய் அமைந்தது.

பொய்ரெட் இச்சந்திப்புக்கான ஏற்பாட்டினை முன்னமேயே செய்திருந்தான். அப்போது மணி ஏற்கெனவே ஆறினைத் தாண்டிப் போயிருந்தாலும் நாங்கள் திரு விட்ஃபீல்டை நேரடியாய் சந்திக்க முடிந்தது. அவர் தான் விட்ஃபீல்ட் அண்ட் கோ எனும் சட்டக் கம்பெனியின் தலைவர்.

அழுத்தமான பதிப்பினை ஏற்படுத்தும் சாயலில் இருந்தார் விட்ஃபீல்ட். அவருக்கு முன்னால், முதன்மை கான்ஸ்டபிளிடமிருந்து வந்திருந்த ஒரு கடிதத்தையும் மற்றும் ஸ்காட்லாண்டு யார்டின் ஏதோவோர் உயரதிகாரியிடமிருந்து வந்திருக்கும் ஒரு கடிதத்தையும் அவர் போட்டு வைத்திருந்தார்.

''இதெல்லாம் ரொம்பவும் எதிர்பாராத, அசாதாரண கொடுமைகள், மிஸ்டர்... மிஸ்டர்... ஆங், பொய்ரெட்'' - கையிலிருந்த மூக்குக் கண்ணாடிக்கு பளபளப்புக் கூட்டத் துடைத்துக் கொண்டே சொன்னாரவர்.

''ரொம்பச் சரியா சொன்னீங்க, மிஸ்டர் விட்ஃபீல்ட். அப்படிப் பார்த்தா கொலையும் தான் ஓர் எதிர்பாராத, அடாவடியானது -

அசாதாரணமானது.''

''நிஜம், நிஜம். ஆனா இந்தக் கொலைக்கும் என் க்ளையண்ட்டுக்கு நடந்துள்ள விபத்துக்கும் நாம எவ்வித தொடர்பையும் பார்க்க முடியாது, இல்லையா?''

''எனக்கு அப்படித்தான் படுது.''

''ஓ, உங்களுக்கு அப்படிப் படுது? நல்லது இப்போ இருக்கும் நிலைமையில, உங்களுக்கு என்ன உதவியெல்லாம் என்னால தர முடியுமோ அவையத்தனையையும் நான் செஞ்சாகணும்னு சர் ஹென்றி, இதோ, கட்டளையா எழுதி அனுப்பியிருக்கார். என் சக்திக்குட்பட்ட எந்த உதவியை செய்யவும் நான் தயார்.''

''சட்டரீதியான ஆலோசனைகள் தருவதற்கு, காலஞ்சென்ற ஸெட்டானுக்கு நீங்க தான் உதவிகரமா இயங்கியிருக்கீங்க, ஆங்?''

''ஸெட்டான் குடும்பத்தின் அனைவருக்கும், மை டியர் ஸார். நாங்க ஆலோசனை தந்திருக்கோம்... எங்க சட்டக் கம்பெனி அவங்களுக்கு உதவிகரமா இருந்திருக்கு...! அதுவும், கடந்த நூறு வருடமா.''

''க்ரேட். மறைந்த மேத்யூ ஸெட்டான் உயில் எழுதியிருந்தாரா?''

''நாங்கதான் அவருக்கு பண்ணிக் கொடுத்தோம்.''

''அதுல அவரோட சொத்துகளை அவர் எப்படி விட்டு வெச்சார்?''

''அதுல நிறைய பங்குகள் பண்ணியிருந்தார். தேசிய அருங் காட்சியகத்துக்கு ஒரு பங்கு - இப்படி. ஆனா, அவரோட கணக்கிட முடியாத சொத்தின் பெரும்பகுதியை - அது ஒரு மாபெரும்பகுதினு சொல்லிக்க விரும்பறேன் - அதை, கேப்டன் மைக்கேல் ஸெட் டானுக்கு அப்படியே விட்டு வெச்சிருந்தார். அவருக்கு வேற ஒரு நெருங்கிய சொந்தம் கிடையாது.''

''மாபெரும் தொகைனா சொல்றீங்க?''

''மறைந்த சர் மேத்யூ, இங்கிலாந்தின் இரண்டாவது பணக்காரன்'' என கமுக்கமாய் முன் வைத்தார் விட்ஃபீல்ட்.

''அவருக்கு விசித்திரமான சில குணாதிசயங்களும் எண்ணங்களும் இருந்திருக்கு போல. அப்படித்தானே?''

இதற்கு மிஸ்டர் விட்ஃபீல்ட் அவனைக் கடுமையாய் முறைத்தார். ''ஒரு கோடானு கோடீஸ்வரனுக்கு, சற்று விசித்திரமா இருக்க அனுமதியுண்டு, திரு பொய்ரெட். அப்படிப்பட்டவர்களிடமிருந்து

எதிர்பார்க்கப்படுவது தான், இந்தக் குணக்குறைபாடு.''

இந்தத் திருத்தத்தை சட்டை பண்ணாமல் கேட்டுக் கொண்ட பொய்ரெட் அடுத்த கேள்விக்குப் போய் விட்டான்: ''அவரது மரணம் ஓர் எதிர்பாரா மரணம்னு கேள்விப்பட்டேன்.''

''மிகவும் எதிர்பாராத ஒண்ணு. சர் மேத்யூவுக்குக் குறிப்பிடும் படியான நல்ல ஆரோக்கியம் இருந்தது. அவருக்குள்ளேயே என்னவோ வளர்ந்திருக்கு - அதைத் தான் ஒருத்தராலும் கவனிக்க முடியாம ஆகியிருக்கு. ஏதோவொரு முக்கியமான சுரப்பியை அது தாக்கியிருக்கு - உடனடியா ஒரு ஆபரேஷனும் தேவைப்பட்டிருக்கு. எப்பவும் சொல்லப்படுவது போல, ஆபரேஷன் என்னவோ சக்ஸஸ் தான். ஆனா சர் மேத்யூ மரணமாயிட்டார்.''

''உடனே அவரோட சொத்துகள் ஸெட்டானுக்கு மாறிடுச்சு.''

''அப்படியே.''

''எனக்குத் தெரிஞ்சு, இங்கிலாந்துக்குப் புறப்படுவதற்கு முன்னாடி கேப்டன் ஸெட்டான் ஓர் உயில் எழுதியிருக்கார் போல?''

''அதைப் போய் நீங்க ஓர் உயில்னு குறிப்பிட விரும்பினீங்கன்னா - ஓ கே, ஓர் உயில்!'' - இதனை, துளியும் விருப்பமற்று சொன்னார் விட்ஃபீல்ட்.

''அது சட்டபூர்வமானது தானே?''

''பக்கா. எழுதினவருடைய எண்ணம் துல்லியமாயிருந்தது. சாட்சிகளும் இருந்தன. ஓ, யெஸ், படு சுத்தமா சட்டரீதியானது தான்.''

''ஆனா நீங்க அதை ஒத்துக்கலே?''

''மை டியர் ஸார். இங்கே நாங்கல்லாம் எதுக்காக இருக்கோம்?''

வக்கீல் மூலமாக எழுதப்படாததன் குத்தலிது. ஈகோ.

''இதுல நிஜம் என்னன்னா'' எனத் தொடர்ந்தார் விட்ஃபீல்ட்: ''உயில் எழுதி வைக்குமளவுக்கு கேப்டன் ஸெட்டான் கிட்டே கொஞ்சமா கூட சொத்துகள் கிடையாது. அவரோட மாமாவிடமிருந்து வந்த கைச்செலவு பணங்களை நம்பித்தான் அவர் இருந்ததே.''

''இந்த உயிலின் சாராம்சம்?'' - டக்கென கேட்டான் பொய்ரெட்.

''அவர் மரணமாகும்பட்சத்தில், அத்தனையையும் அவரது அன்புமிகு மனைவி மக்தலா பக்லேவுக்கு விட்டு வைக்கிறார். அதை நடத்த வேண்டிய சட்டபூர்வ நபராய் என்னை நியமிக்கிறார்.''

''அப்போ எல்லாம் மிஸ் பக்லேவுக்குத் தானா போயிடுது?''

''சர்வ நிச்சயமா எல்லாம் மிஸ் பக்லேவுக்குத் தான் போயிடுது.''

''ஒரு வேளை கடந்த திங்களன்று மிஸ் பக்லே இறந்துவிடும்படி ஆகியிருந்தா?''

''எல்லாமும் அவங்களுக்குத்தான்னு லெட்டான் எழுதியதால, கேப்டன் மரணமானவுடனேயே அத்தனையும் மிஸ் பக்லேவுக்குச் சென்றிருக்கும். நீங்க சொல்றா மாதிரி ஆகியிருந்தா, மிஸ் பக்லே யாரைத் தனது உயில்லே போட்டிருக்காங்களோ அவங்களுக்குப் போகும்; அப்படியெதுவும் அந்தம்மா எழுதலைனா, அத்தனையும், மிஸ் நிக்குடைய அடுத்த நெருங்கிய உறவை அடையும்.''

தற்போது பொய்ரெட் எழுந்து கொண்டான். ''நீங்க கொடுத்த அத்தனை முக்கிய தகவல்களுக்கும் நன்றிகள், மிஸ்டர் விட்ஃபீல்ட்.''

''நாட் அட் ஆல். நாட் அட் ஆல். நான் கூடிய சீக்கரம் மிஸ் நிக்குடனும் தொடர்பு கொள்ளப் போறேன். அதற்கான தகவல் கடிதம் அனுப்பியாச்சு. சட்டரீதியா அவங்களுக்கு செய்ய வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்யக் காத்திருக்கேன்.''

''அவங்க சின்னப் பொண்ணு'' என்ற பொய்ரெட், ''தகுந்த சட்ட ஆலோசனை அவங்களுக்குப் பேருதவியா இருக்கும்'' என்றான்.

''சொத்தை அபகரிக்கும் கூட்டமொண்ணு இருக்கலாம்'' என்றார் விட்ஃபீல்ட்.

''அதுக்கு சாத்தியமிருக்குனு தெரியுது'' என்றான் பொய்ரெட். ''குட் டே, ஸார்.''

''குட், பை திரு பொய்ரெட். உங்களுக்கு உதவிகரமா இருந்ததுல சந்தோஷமடையறேன். உங்க பேர், ஆஹ், எனக்கு பிரபலமாத் தானிருக்கு.''

கனிவாய், அந்தப் பிரபலத்தை ஏற்றுக் கொள்ளும் விதமாய் சொன்னார் அவர்.

''இவையெல்லாமே நீ எப்படி நினைச்சிருந்தியோ அப்படியே தான் நகர்ந்திருக்கு, பொய்ரெட்'' என்றேன் நான், நாங்கள் வெளியேறியிருந்த போது.

''நண்பா - இது இப்படித்தான் இருந்தாகணும். இது வேற எந்த வழியிலும் இருக்க முடியாது. ஓ கே கிளம்பு. நாம இப்போ நேரா,

நம்மளோட டின்னர் சாப்பிடக் காத்திருக்கும் ஜேக்கப் என்கிற ஜேப் - ஸ்காட்லாண்டு யார்டோட சிம்ம சொப்பன இன்ஸ்பெக்டர் - அவரைப் பார்க்கப் போறோம்.''

முன்னமேயே தெரிந்தெடுக்கப் பட்டிருந்த ஓட்டலில், எங்களுக்காக இன்ஸ்பெக்டர் ஜேப் காத்துக் கொண்டிருக்கும்போது சரியாய் நாங்கள் அங்கு சென்று சேர்ந்தோம். பொய்ரெட்டை முழு கனிவு பொங்கிப் பெருக வரவேற்றார் அவர்.

''வருஷம் ஆகுது உங்களை சந்திச்சு, திரு பொய்ரெட். நீங்க ஏதோவொரு கிராமத்துல தலைமறைவாகி காய்கறி பயிரிட்டுக்கிட்டு ஹாய்யா இருக்கீங்களோனு கூட நான் நினைச்சதுண்டு.''

''அதை முயற்சித்தேன் ஜேப், முயற்சித்தேன். ஓய்வு பெற்று கிளம்பி, ஒரு குக்கிரமமா பார்த்து வந்து ஒதுங்கினா கூட அங்கேயும் என்னை விடாம இல்ல துரத்துது - கொலை!'' - பெருமூச்செறிந்தான் அவன்.

''கூடவே கேப்டன் ஹேஸ்டிங்ஸுமா?'' என்ற ஜேப், ''எப்படி இருக்கீங்க?'' என்றார்.

''ரொம்ப சௌகரியமா. தேங்க்ஸ்.''

''என்ன... மறுபடியும் கொலைகள் நிறைந்த சூழலுக்குள்ளே மாட்டிக்கிட்டாச்சா?''

''யெஸ். கொலைகள் நிறைந்த சூழலே.''

''வெல். இதுக்காகவெல்லாம் நீங்க தொய்ந்து போகக் கூடாது ஓல்ட்மேன்'' என்றார் ஜேப். ''இழுத்துக் கட்டிக்கிட்டு ஓடியாடி ஒரு கேஸை ஜெயிக்க இப்ப உங்களால முடியாம போயிருக்கலாம்; அதுக்காக, சின்னப் பொழுதுல பம்பரமா சுழன்றதையெல்லாம் நினைச்சுப் பார்த்து பெருமூச்சு விடக்கூடாது, ஆங்! வருடங்கள் போகப் போக நாம எல்லாருமே துவண்டுதான் போறோம். சின்னவங்க முன்னுக்கு வர வழி விட்டு நிக்கணும் - புரிஞ்சுக்குங்க.''

''இப்படியெல்லாம் தள்ளாமை வந்தாலும், ஓல்ட் நாய்க்குத்தான் அத்தனை தந்திரங்களும் அத்துப்படியாகியிருக்கும், ஓ கே?'' என முணுமுணுத்தான் பொய்ரெட். ''அவன், நயவஞ்சகம் மிக்கவன். சாமர்த்தியமானவன். பிடிச்ச மோப்பத்தை அவன் தப்பிக்க விடுவதே இல்லே.''

''ஓ, வெல் - நாம மனிதப் பிறவிகளைப் பற்றிப் பேசிக்கிட்டு

இருக்கோம் - நாய்களைப் பற்றி அல்ல.''

''ரெண்டுத்துக்கும் அத்தனை வித்தியாசங்கள் இருக்கா என்ன?''

''அடேயப்பா... அது நாம பார்க்கிற கோணத்தைப் பொறுத்தது. ஆளை விடு. ஆனா நீங்க உடம்பை எப்பவுமே ஜாக்கிரதையா பாதுகாப்பீங்க போலயிருக்கு! என்ன ஹேஸ்டிங்ஸ் சொல்றது சரிதானே...?! எப்பவும் அப்படியே இருக்கீங்க. முன்னால முடி கொஞ்சம் சிதறியிருக்கே தவிர - ஆள் மாறவேயில்ல. அதுவும் அந்தக் காளான் வளர்ப்பு... வாவ்!''

''காளான்?'' என்றான் பொய்ரெட். ''என்னது அது?''

''உன்னோட மீசையின் வனப்பை சொல்றார் அவர்'' என்றேன் நான் பொறுமையாய்.

''அது - செழிப்பான ஒரு சொகுசு!'' - ஆசையாய் அதனைத் தடவி நீட்டிவிட்டபடி சொன்னான் அவன்.

இதற்கு ஜேப் அடக்க முடியாத சிம்ம சிரிப்புக்குள் புகுந்து வந்தார். பிறகு ஓரிரு நிமிடங்களுக்குப் பின், ''வெல்... நீங்க சொல்லியிருந்த உங்களோட துக்கடா வேலைங்களை முடிச்சிருக்கேன்'' என்றார். ''நீங்க எனக்குப் பரிசோதனைக்காக அனுப்பி வெச்சிருந்த அந்தக் கை ரேகைகளைச் சொல்றேன்...''

''ஹோங்...'' என்றான் பொய்ரெட் ஆர்வமாய்.

''ஒண்ணும் பண்றதுக்கில்லே. அந்தக் கொலைகாரன் ஜெண்டில் மேன் எவனோ - அவன், இது வரைக்கும் எங்க கைகள்ல அகப் பட்டவன் கிடையாது. மெல்போர்ன் பகுதிக்கும் தகவல் அனுப்பிக் கேட்டேன். இந்த ரேகைகள் கொண்ட எவனும் அப்பகுதி சரகத்திலும் பிடிபட்டவன் கிடையாது. ஆக - அவங்களுக்கும் ஒண்ணும் தெரியலே.''

''ஆஹ்!''

''கழுவுற மீன்ல நழுவின மீனா ஆயிடுச்சு. அந்த சமயத்துல, அங்கிருந்தப் பயல்கள்ல ஒருத்தன் கிடையாது - அவன்.''

இப்படி சொன்ன ஜேக்கப், ''நீங்க கொடுத்த இன்னொரு ஜோலியைப் பொறுத்த வரைக்கும்...'' எனத் துவங்கினார்.

''யெஸ்?''

''லாஸரஸ் அண்ட் சன்ஸ், நல்ல பேரோட இயங்கிக்கிட்டிருக்கு.

அவங்க எடுத்துக்கொள்ளும் எல்லா விவகாரங்களிலும் நேர்மையாவும் மேன்மை பொருந்தியும் தான் நடந்துக்கிறாங்க. ஆனா ரொம்ப கறாராம் - ஆனா இது நமக்குத் தேவையில்லாதது. பிஸினஸ்ல ஒருத்தர் கறாராத்தான் இருந்தாகணும். மத்தபடி அவங்க ஆல் ரைட் தான். அவங்க கொஞ்சம் சங்கடமான நிலையில இருக்காங்களாம், இது கூடுதல் தகவல் - பணரீதியா.''

''ஓஹ்! அப்படியா சங்கதி?''

''ஆமாம் - ஒவிய பிஸினஸ்ல ஏற்பட்டுள்ள மந்த நிலைமையும் விலை வீழ்ச்சியும் அவங்களைத் தாக்கியிருப்பது நிஜம். அலங்கார வேலைப்பாடு நிறைந்த மரச்சாமான்களுக்கு கிராக்கி குறைஞ்சுப் போனது வேற ஒரு கூடுதல் இடி. நவநாகரீக சாமான்கள் மார்க்கெட்டுக்குள் நுழைய நுழைய, பழையன கழிதல் தவிர்க்கவியலாததா ஆகிடுது. போன வருஷம் புது ஜாகையை வேற கட்டியிருக்காங்க - ஆனா, இருந்தாலும் -நான் சொன்னது போலவே பணமுடை நெருக்கிக்கிட்டுதானிருக்கு.''

''நான் உங்களுக்கு ரொம்ப கடமைப்பட்டிருக்கேன்.''

''நாட் அட் ஆல். அப்படியெல்லாம் பேசலாகாது. நான் பண்ணிக் குடுத்திருப்பதெல்லாம் என்னோட தினசரி வேலைங்க கிடையாது. நீங்க தெரிஞ்சுக்கணும்னு சொன்னது. ஒரே காரணத்தால எப்படியாவது பண்ணித் தந்துடணும்னு முடிவு கட்டி இயங்கினேன். எங்களால எந்தத் தகவலையும் அடைய முடியும்.''

''ஓ, என்னருமை ஜேப். நீங்க இல்லாம போயிருந்தா என்னால என்ன செஞ்சிருக்க முடியும்?''

''ஓ, ஆல் ரைட். பழைய நண்பனொருவனுக்காக மனமொப்பி உதவுவது சுகம். நான் என்னுடைய சில பழைய வழக்குகளை உங்க கைக்கு மாற்றி துளி வேலை பண்ணாம ஜெயிச்சிருக்கேன், இல்லே?''

இது, இன்ஸ்பெக்டரின் சில தீர்க்க முடியாத வழக்குகளை, உட்கார்ந்த இடத்திலிருந்தே சிந்தித்து காய் நகர்த்தி பொய்ரெட் சரியாய் முடித்துத் தந்தமைக்காக, சமயம் பார்த்து அவர் தரும் பாராட்டாய் எனக்குப்பட்டது.

''அவை சுவைமிகும் நாட்கள் - யெஸ்.''

''ஷுவரா! அந்நாட்களைப் பற்றி இப்போ மறுபடியும் உங்களோட

அனவனாவ எனக்குத் துளியும் ஆட்சேபனை கிடையாது. நீங்க கடைபிடிக்கும் துப்பறியும் முறைகள் வேணும்னா பழைய பெருங்காய டப்பாவா இருக்கலாம் பொய்ரெட்... ஆனா அவற்றின்படி நடந்து நீங்க எப்பவுமே சரியான தீர்வைத் தான் அடையறீங்க - யெஸ்!''

''நான் கேட்டிருந்த இன்னொரு கேள்வி என்ன ஆச்சு? டாக்டர் மெக்-அலீஸ்டர்?''

''ஓ, அவர்! அவர் ஒரு பெண்களுக்கான மருத்துவர். பிரசவம் பார்க்க எனும் அர்த்தத்துல இதை சொல்லலே. நரம்பு மருத்துவர். மேற் கூரைக்கு ஆரஞ்சு நிறம்... சுவர்களுக்கு பிங்க் நிறம்... இப்படிப்பட்ட சூழல்ல உங்களைத் தூங்க சொல்பவர்கள்; உங்களோட காம ஆசைகள் பற்றி உங்களிடமே பேசுவது... எல்லாவற்றையும் களைஞ்சுட சொல்லுதல்! என்னைக் கேட்டா அவனை ஒரு வாத்து டாக்டர்னு தான் சொல்வேன் - அரைகுறை வைத்தியன். ஆனா எப்படியோ பெண் நோயாளிகள் அவனுக்குக் கிடைச்சுடறாங்க. அவன்கிட்டே இதுங்க ஆட்டு மந்தையா போய் விழுதுங்கப்பா. அடிக்கடி வெளிநாடுகளுக்குப் போறான் - பாரீஸ்ல கூட மெடிக்கல் பிஸினஸ் பண்றதா கேள்வி.''

''எதுக்காக இப்ப டாக்டர் மெக்-அலீஸ்டர்?'' - ஒன்றும் விளங்காது கேட்டேன் நான். இப்பெயரை நான் இவ்வழக்கில் எங்கும் எப்போதும் கேட்டது கிடையாது. எனவே, ''எங்கேயிருந்து குதிக்கிறார், இவர்?'' என்றேன்.

''டாக்டர் மெக்-அலீஸ்டர், கமாண்டர் சாலஞ்சரின் மாமா'' என விளக்கினான் பொய்ரெட். ''அவரோட டாக்டர் மாமா பற்றி அவர் குறிப்பிட்டது நினைவில்லே உனக்கு?''

''எத்தனை மனப்பாடமா இருக்கேடா நீ'' என்றேன் நான் ஆச்சரியந்தாளாமல். ''அவர் தான் சர் மாத்யூவை ஆபரேஷன் பண்ணி யிருப்பார்னு நீ நினைச்சியா?''

''அவர் அறுவை சிகிச்சை மருத்துவர் கிடையாது'' என்றார் ஜேப்.

''நண்பா...'' என்ற பொய்ரெட், ''நான் எல்லாத்துக்குள்ளேயும் மூக்கை நுழைச்சுப் பார்க்க விரும்பறேன்'' என்றான். ''ஹெர்குல் பொய்ரெட் ஒரு செமத்தியான நாய். ஒரு நல்ல நாய் மோப்பத்தைப் பின்தொடர்ந்து போய்க்கிட்டேயிருக்கும் - நிக்காது. அப்படி மோந்து பார்க்க துரதிர்ஷ்டவசமா எதுவும் இல்லேனா, மூக்கைத் துருத்திக்கிட்டு

அது இங்கேயும் அங்கேயும் தேடும் - எது நல்லதா தோணலையோ அப்படி ஒன்னைத் தேடித்தேடி! அப்படிப்பட்ட நாயே, இந்த பொய்ரெட். இப்படி செய்வதுல, ஏறக்குறைய எப்போதும், ஆமாம் நண்பா... மூக்காவாசி சமயங்கள்ல, இந்த நாய் கண்டுபிடிச்சுடுது!''

''ம்...'' என்று பெருமூச்சோடு சலித்துக் கொண்ட ஜேப், ''நாம பார்க்கும் இந்த வேலை ஒன்னும் பீற்றிக் கொள்ளும்படியான வேலை கிடையாது'' என்றார். ''நோ. இது நல்ல பணியே கிடையாது. உங்களோட வேலை என்னுதை விட படு மோசமானது. தனியார் துப்பறியும் பணி. அங்கீகாரமில்லாதது ஒரு தலைவலி. பல இடங்களுக்குள் அனுமதி பெற்று நுழைவதே உங்களுக்கு பிரம்மப்பிரயத்தனமா இருக்கும்.''

''அதுக்காக நான் மூடி மறைப்பதோ மாறுவேடத்துல போவதோ கிடையாது ஜேப்'' என்றான் பொய்ரெட். ''என்னை நானே மறைத்துக் கொண்டு ஒரே ஓரிடத்துக்குக் கூட துப்பறிய போனது கிடையாது. ஹெர்குல் பொய்ரெட்டாவே தான் போவேன்.''

''அப்படி உங்களை மறைச்சுக்கவும் முடியாது'' என்றார் ஜேப். ''உங்க அமைப்பு தனித்தன்மை பெற்றது. ஒரு தடவைப் பார்த்து விட்டால், ஆயுசுக்கு மறக்க முடியாது.''

பொய்ரெட் அவரை சந்தேகம் தொனிக்கப் பார்த்தான்.

அன்றைய மாலைப் பொழுது மனதுக்கு இசைந்து இனிமையாய் அமைந்தது. நாங்கள் ஞாபக அலைகளின் மத்தியில் வீழ்ந்து கிடந்தோம். இந்த வழக்கு, அந்த வழக்கு, இன்னொரு வழக்கு, மற்றுமொரு வழக்கு! பழைய கீர்த்திகளைப் பேசுவதில் நானும் மிக மகிழ்ந்தேன் என்று தான் சொல்ல வேண்டும். ஹெர்குல் பொய்ரெட் தீர்த்து வைத்த ஒவ்வொன்றும் தான் எத்தனை கடுமையானவை - ஆபத்தானவை. அவை - இன்பமான நாட்களே. அனுபவபூர்வமாக அமைந்திட்ட அச்சுவைமிகு நாட்கள் கடந்து போய் தான் எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன!

ஆனால், பாவம், ஹெர்குல் பொய்ரெட் - இந்த வழக்கினால் நிருகிப் போய்க் கிடக்கின்றான்; என்னால் இதைக் கண்கூடாய்ப் பார்க்க முடிகின்றது. அவனுடைய சக்தி முன்பு போல இல்லை. இவ்வழக்கில் இவன் தோற்றுத்தான் போகப் போகிறான் என்றே எனக்குப்பட்டது -

மேக்கினைக் கொன்ற கொலைகாரன் சட்டத்துக்கு முன் கொண்டு வரப்படாமலே போய் விடுவான் என்றே என் உள்மனம் கதறியது.

''உற்சாகமா இருடா'' என்று என் தோள்களை இப்போது தட்டினான் பொய்ரெட். ''எல்லாமும் முடிஞ்சுப் போயிடலே. அதனால, நீ இப்படி முகத்தைத் தொங்கப்போட்டுக்கிட்டு என்னை வெறுப்பேத்தாதே, ப்ளீஸ்.''

''ஒண்ணுமில்லே. நான் நல்லாதானிருக்கேன்.''

''அப்படியே தான் நானும். அப்படியே தான் ஜேப்பும்.''

''ஆக நாம எல்லோருமே நல்லாதானிருக்கோம்'' என அறிவித்தார் ஜேப்.

இத்தகைய இனிமையான குறிப்போடு, நாங்கள் விடை பெற்று பிரிந்தோம்.

அடுத்த நாள் காலை நாங்கள் செயின்ட் லூவுக்குத் திருப்பிப் பயணமானோம். ஓட்டலுக்கு வந்த கையோடு நர்ஸிங் ஹோமுக்கு போன் போட்டு பொய்ரெட் நிக்குடன் பேச வேண்டும் என்று தெரிவித்தான்.

அப்போது சட்டென அவன் முகம் மாறிப் போனதை கவனித்தேன் நான் - கையிலிருந்த ரிஸீவரை ஏறத்தாழ அவன் தவறவே விட்டு விட்டான்.

''என்ன, என்ன? இன்னொரு தடவை சொல்லுங்க. ப்ளீஸ்.''

ஓரிரு நிமிடங்கள் பொறுமையை வலுக்கட்டாயமாய் கடைபிடித்த படி கேட்டுக் கொண்டிருந்தான் அவன். பிறகு, ''யெஸ், யெஸ். நான் உடனே அங்கே வரேன்'' என்றான்.

வெளிறிப் போன முகத்தோடு என்னைத் திரும்பிப் பார்த்தான் அவன். ''நான் எதுக்கா இப்போ வேலை மெனக்கெட்டு கிளம்பிப் போனேன், ஹேஸ்டிங்ஸ்? எதுக்காக நான் ரொம்ப முக்கியமா வெளியேறினேன்?''

''என்ன நடந்திருக்கு?''

''மேடம் நிக் மிக ஆபத்தா இருக்காங்க. கொகைன் விஷம். ரொம்ப கலபமா அவளை அவனுங்க அடைஞ்சுட்டானுங்க. நண்பா! நண்பா! எதுக்காகடா நான் கிளம்பிப் போனேன்?''

*அத்தியாயம் 17*

# பெட்டி நிறைய சாக்லெட்டுகள்

நர்ஸிங் ஹோம் போகும் வழி நெடுகிலும், அவனுக்குள்ளேயே மிகவும் முணுமுணுப்பாய் பேசிக்கொண்டிருந்தான். தன்னைத்தானே நொந்து கொள்ளும் மனோநிலையில் கிடந்தான் அவன்.

''எனக்குத் தெரிஞ்சிருக்கணும்'' என உறுமினான். ''எனக்கு முன்னமேயே தெரிஞ்சிருக்கணும்! தெரிஞ்சிருந்தா மட்டும் என்னால எப்படித்தான் தடுத்திருக்க முடியும்? நாந்தான் எல்லா பாதுகாப்பு நடவடிக்கைகளையும் முன்னேற்பாடா செஞ்சிருந்தேனே! இப்படி நடந்திருக்க சாத்தியமேயில்லே - இது முடியவே முடியாது. அவங்களை ஒருத்தராலும் நெருங்கியிருக்க முடியாது. அப்ப யார் என் கட்டளைகளை அவமதித்திருப்பது?''

நர்ஸிங் ஹோம் போனபோது கீழ்த்தளத்திலிருந்த ஒரு சிறு அறையில் நாங்கள் காக்க வைக்கப்பட்டோம். பிறகு சில நிமிடங்களில் டாக்டர் க்ரஹாம் எங்களை நாடி வந்தார். அசதியாயும் வெளிறிப்போயும் தெரிந்தார் அவர்.

''எழுந்திருங்க'' என்றார் அவர். ''இது நல்லபடியாத்தான் முடியப் போகுது. அந்தப் பாழாப் போற வஸ்துவை இவங்க எந்த அளவுக்கு உட்கொண்டிருக்காங்க என்பதை தெரிஞ்சுக்கிறது தான் கடினமாயிருக்கு - ஆனா, இது முக்கியம்.''

''என்னது அது?''

''கொகைன்.''

''அவங்க பிழைச்சிடுவாங்களா?''

''யெஸ், யெஸ். பின்னே! பிழைச்சிடுவாங்க.''

''ஆனா இது எப்படி டாக்டர் நடந்தது? எப்படி அவனுங்க நிச்

வரைக்கும் நெருங்கியிருக்காங்க? யார் உள்ளே அனுமதிக்கப் பட்டது?'' - மையப்படுத்தப்பட்ட கிளர்ச்சியில் ஏறத்தாழ நடனமாடிக் கொண் டிருந்தான் பொய்ரெட்.

''யாரும் உள்ளே அனுமதிக்கப்படலே.''

''நோ.''

''இது தான் உண்மை.''

''அப்போ எப்படி ...''

''இது நடந்தது ஒரு பெட்டி சாக்லெட்டுகளாலே.''

''ஆஹ்! இது முட்டாள்தனம். வெளியிலிருந்து வரும் எதையும் - எதையும் - சாப்பிடக்கூடாதுனு நான் அவங்க கிட்டே தலை தலையா சொல்லியிருந்தேனே...!''

''அது பற்றியெல்லாம் எனக்கு எதுவும் தெரியாது. ஒரு பொண்ணை சாக்லெட்டுகளை நெருங்குவதிலிருந்து தள்ளி நிறுத்தி வைப்பதென்பது ஏலாத ஒன்று. அவங்க ஒண்ணே ஒண்ணைத்தான் எடுத்து சாப்பிட் டிருக்காங்க. தேங்க் காட்.''

''எல்லா சாக்லெட்டுகளிலுமா கொகைன் இருந்தது?''

''நோ. அந்தப் பொண்ணு ஒரு சாக்லெட்டைத்தான் எடுத்து சாப்பிட்டிருக்கு. அதோட கூட டப்பாவின் மேலேயே இன்னும் ரெண்டு இருந்திருக்கு. கொகைனோட. மற்ற எல்லாமும் அபாயமற்றவை.''

''எப்படி அதை தயாரிச்சிருக்காங்க?''

''கசமுசானு தான். சாக்லெட்டை மத்தியில அறுத்திருக்காங்க. அதுக்குள்ளேயிருந்த சாக்லெட் கூழோட கூட கொகைனையும் குத்திக் கலந்திருக்கானுங்க. அப்புறம் அப்படியே பழையபடி சேர்ந்து அழுத்தி ஒட்டியிருக்கானுங்க. திறமையற்ற முறையில. வீட்டுல ஏனோ தானோனு பண்ணுவது போல.''

பொய்ரெட் உறுமினான். ''சரி... இப்ப நான் மேடமைப் பார்க்க முடியுமா?''

''ஒரு மணி நேரம் கழிச்சுத் திரும்பி வர முடியும்னா - பார்க்கலாம்'' என்றார் டாக்டர். ''சராசரியாகுங்க மேன். அவங்க ஒண்ணும் இப்போ செத்துடப் போவதில்லே.''

அடுத்த ஒரு மணி நேரத்துக்கு நாங்கள் செயின்ட் லூ தெருக்களில் நடந்து கொண்டிருந்தோம். பொய்ரெட்டின் மனதைத் திசை மாற்றும்

படி, கண்களில் எதெல்லாம் அழகாய் படுகின்றனவோ அதையெல்லாம் காட்டி நான் பேசிப் பார்த்தேன். இப்படி பலமுறை செய்தேன். ஆனால் ஒவ்வொரு முறையும் மறுப்பாய் தலையசைத்து துடித்த அவன் சொன்னான்: ''எனக்கு பயமாயிருக்கு, ஹேஸ்டிங்ஸ், எனக்கு பயமாயிருக்கு...''

அவன் இதனை சொன்ன அமானுஷ்யமான விதம் சும்மாயிருந்த என்னையும் சேர்த்து பயப்பட வைத்தது.

''கவனி ஹேஸ்டிங்ஸ், கவனி. நான் முழுக்க முழுக்க தப்பா இருந்திருக்கேன். ஆரம்பத்திலிருந்தே நான் தப்புத் தப்பா கணக்குப் போட்டிருக்கேன்.''

''சொத்து காரணமில்லேனு சொல்ல வரியா...''

''நோ, நோ. அந்த இலக்குல நான் சரியாத்தான் கணிச்சிருக்கேன். ஆனா, இன்னமும், இன்னொரு சிடுக்கு கண்ணுக்குத் தெரியா இருக்கு. ஆமாம், இதுல இன்னும் என்னவோ ஒண்ணு இருக்கு!''

பிறகு பீறிட்டடிக்கும் ஒரு வெடிப்பாய் அவன் சொன்னான்: ''நான் முன்னமேயே அவங்க கிட்டே பந்தயம் கட்டாத குறையா எச்சரிக்கலே? 'வெளியிலிருந்து வரும் எதையும் தொடாதீங்க.' ஆனா, அவங்க, ஹெர்குல் பொய்ரெட்டின் கட்டளையை அவமதிச்சிட்டாங்க. நாலு முறை மரணத்தின் வாய் வரை போய் திரும்பியிருப்பது அவங்களுக்குப் போதவில்லையா? அவங்க ஐந்தாவதா ஒரு சான்ஸையும் முயற்சித்துப் பார்த்திருக்கணுமா? ஆஹ்!''

ஒருவழியாய் நாங்கள் திரும்பி வந்து சேர்ந்தோம். சிறு காத்திருக்கலுக்குப் பிறகு இருவரும் முதல் தளத்துக்கு வழியனுப்பப்பட்டோம்.

நிக் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவளது கண் விழிகளிரண்டும் தீர்ப்பற்றுக் காய்ந்து கிடந்தன. பெரும் நடுநடுக்கத்திலிருப்பவளைப் போல தோன்றினாள். கைகளிரண்டும் வேகவேகமாய் முடிச்சிட்டும் பிரிந்த வண்ணமுமிருந்தன.

''மறுபடியும்'' என முணுமுணுத்தாள் அவள்.

அவளைப் பார்த்த கணத்தில் நிஜமான உணர்ச்சிப் பெருக்கினை வெளியிட்டான் பொய்ரெட். சிக்கிய தொண்டையைச் சரிசெய்து கொண்ட அவன், அவளுடைய கையை எடுத்து தனது உள்ளங்கையில் பொத்திப் பத்திரம் உணர்த்தினான். ''மேடம். மேடம்.''

விரக்தியாய், ''அவனுங்க இந்த முறை என்னை அடைஞ்சிருந்தாங்கன்னா நான் துளியும் வருத்தப்பட்டிருக்கவே மாட்டேன், ஸார்'' என்றான் நிக். ''இது என்னைக் கொல்லுது - கொல்லுது. இதுக்கு நிஜக்கொலையே தேவலாம்.''

''???''

''எனக்குள்ளே இருக்கும் எதுவோ என்னை அத்தனை சீக்கிரம் விட்டுக் கொடுக்க மாட்டேங்குது.''

''அது தான் ஆன்மா. நீங்க ஒரு பரிசுத்தமான ஆன்மாவா இருக்கணும், மேடம்.''

''நீங்க என்னை சேர்த்து விட்டிருக்கிற இந்த ஓல்ட் நர்ஸிங் ஹோம், அத்தனை பாதுகாப்பானதா இல்லை போல'' என்றாள் இப்போது.

''இருந்திருக்கும் மேடம் - நீங்க மட்டும் நான் இட்டுச்சென்ற கட்டளைகளைக் கடைபிடிச்சிருந்தீங்கன்னா ...''

ஆச்சரியப்பட்டுப் போனவளாய், 'என்ன பேசுகிறோம் என்பதை தெரிந்து தான் பேசுகிறாரா?' எனும் தினுசில் பொய்ரெட்டை அவன் அதிசயப்பார்வை பார்த்தாள். அவள் சொன்னாள்: ''நான் மதிச்சு நடந்தேன்.''

''வெளியிலிருந்து வரும் என்ன சமாச்சாரமாயிருந்தாலும் அதை நீங்க சாப்பிடக்கூடாதுனு நான் உங்ககிட்டே அடிச்சு சொல்லிட்டுப் போகலே?''

''யெஸ். அப்படி நான் எதையுமே சாப்பிடலே.''

''அப்போ இந்த சாக்லெட்டுகள் ...''

''வெல். அவை நல்லவை தானே! நீங்க தானே அனுப்பியிருந்தீங்க!''

''என்ன சொன்னீங்க நீங்க இப்ப?''

''நீங்க தானே எனக்கு அவற்றை அனுப்பியிருந்தீங்க!''

''நான்? சத்தியமா கிடையாது. அப்படி எதையும் நான் பண்ணவே இல்லே.''

''நீங்க பண்ணியிருக்கீங்க. உங்க கார்ட் தான் பெட்டியின் மேலேயே ஒட்டியிருந்ததே...?!''

''என்ன, என்ன?''

வலித்து வலித்து நடந்தபடி டேபிள் வரை இறங்கிப் போனான் நிக். நர்ஸ் உடனடியாய் முன்னுக்கு வந்தாள். ''பெட்டியில் ஒட்டியிருந்த

துண்டு அன்பளிப்பு அட்டை வேணுமா மேடம்?''

''யெஸ், ப்ளீஸ், நர்ஸ்.''

கண நேர தாமதம் அறையில் உண்டானது. பிறகு கையில் அதனை சுமந்து கொண்டு திரும்பி வந்தாள் நர்ஸ்.

''இதோ இருக்கு அது.''

மூச்சடைத்துப் போனேன் நான். அப்படியே ஆனான் பொய்ரெட்டும். அந்த அட்டையில், கூடை பூவை வாங்கிய பொய்ரெட் அவனுக்கே உரித்தான பூரிக்கும் கையெழுத்தில் எழுதியிருந்த அதே வாசகங்கள், அட்டையிலிருந்தன. 'With best compliments from Hercule Poirot.

குற்றஞ்சுமத்தும் விதமாய், ''நீங்களே பாருங்க'' என்றாள் நிக்.

''நான் இதை எழுதவே'' - கதறி விட்டான் பொய்ரெட்.

''என்ன சொன்னீங்க?!''

''ஆனாலும்'' என்று அழுங்கிச் சொன்ன அவன் ''ஆனாலும் - இது என்னுடைய கையெழுத்தே தான்.''

''எனக்கும் அது தெரியுமே. ஆரஞ்சு நிற மலரலங்காரத்தோட எனக்கு வந்த பூக்கூடையில இருந்த கையெழுத்து இதே தான். இதனாலதான் சாக்லெட் உங்ககிட்டேயிருந்து வந்திருக்கு எனும் விஷயத்துல நான் சந்தேகமேபடலே.''

பொய்ரெட் மறுப்பாய் தலையசைத்துக் கொண்டான். ''யெஸ்... எப்படி உங்களால் சந்தேகப்பட்டிருக்க முடியும்? ஓ, ராட்சஸன்! புத்திசாலித்தனமா இயங்கியிருக்கும் கொடூர அரக்கன்! இப்படி ஒரு வழியைத் திட்டமிட! ஓ, அவன் ஒரு ஜீனியஸ் - ஆமாமாம்... ஒரு மேதாவியேதான்! 'With best compliments from Hercule Poirot'. எத்தனை சுலபம்! இருந்தாலும் இப்படி ஜெயிக்க ஒருத்தன் செமத்தியா யோசிச்சிருக்கணும். அதைத் தான் நான் பண்ணலே - சிந்திக்கலே. இப்படி ஒரு நகர்த்தலை முன்கூட்டியே அனுமானிக்க நான் தவறியிருக்கேன். ச்சே!''

நிக் இருப்புக் கொள்ளாமல் நெளிந்தாள்.

''உங்களுக்குள்ளேயே கலவரமாகாதீங்க, மேடம். நீங்க குற்றமற்றவங்க. இங்கே நான்தான் குற்றஞ்சுமத்தப்பட வேண்டியவன். குருடன் - மடையன் - ஃபூல்! அவங்க பண்ணி ஜெயித்திருக்கும் இந்த நகர்த்தலை நிச்சயமா முன்கூட்டியே சிந்திச்சு மடக்கியிருக்கணும்.

யெஸ், யெஸ். நான் அனுமானிச்சிருக்கணும்.''

அவனுடைய முகவாய் அவன் நெஞ்சுக்குள் குனிந்து புதைந்து நின்றது. தாள முடியாத நிலைமை என்பதற்கான பொருத்தமான உதாரணமாய் அவன் நின்றான்.

மளமளவென்று மெத்தையை நெருங்கியிருந்த நர்ஸ், நோயாளியின் நலன் கருதி நடப்பவற்றை ஏற்றுக் கொள்ளவியலாது என்ற பாவத்தை முகத்தில் தாங்கி, ''இதெல்லாம் போதும்னு ...'' என கடுப்பாய் இழுத்தாள்.

''ஆங்...? யெஸ், யெஸ்... நான் கிளம்பிடறேன். நீங்க உற்சாகமா இருக்கணும் மேடம். இது தான் நான் செய்யும் கடைசி தவறாயிருக்கும். நான் வெட்கப்படறேன்... வேதனைப்படறேன். நான் நயவஞ்சகமா ஏமாற்றப்பட்டிருக்கேன். தலைகுப்புற கவிழ்த்துத் தள்ளப்பட்டிருக்கேன். ஒரு பள்ளிக்கூடப் பையனை தந்திரமா கவுப்பது போல என்னைக் கவிழ்த்திருக்காங்க. போகட்டும். இது மறுபடியும் ஒருமுறை நடக்காது. நான் சத்தியம் பண்ணித் தரேன். வாடா, ஹேஸ்டிங்ஸ்.''

பொய்ரெட்டின் அடுத்த முதலடி, அங்கிருக்கும் தலைமை நர்ஸைக் காண்பதாய் இருந்தது. அவள், எதிர்பார்த்தபடி, நடந்துள்ள அத்தனையையும் கேட்டு அடி வரை குலுக்கப்பட்டிருந்தாள்.

''இது, எனக்கு படு பயங்கரமானதா படுது, மிஸ்டர் பொய்ரெட். படு படு கோரம். இப்படியெல்லாம் ஒரு கொடூர கொலை முயற்சி என் மருத்துவமனையில நடக்கணும்னு இருக்கே..?!''

பொய்ரெட் கருணையாகவும் அதே சமயம் தந்திரமானவனாகவும் இயங்கினான். அவளைப் போதுமான அளவுக்கு சமாதானம் பண்ணி வைத்து விட்டு, அந்தக் கொலைகார பார்ஸல் வந்த போதிருந்த சூழலைப் பற்றி விசாரிப்பதில் இறங்கினான். இந்தக்கட்டத்தில், அப்போது யாரெல்லாம் மருத்துவமனை டியூட்டியில் இருந்தார்களோ அவர்களனைவரையும் சந்திக்க ஏற்பாடு பண்ணித் தருவதாய் முன் வந்தாள் அவள்.

இதற்காக அழைக்கப்பட்ட ஆடவனுக்கு வயது இருபத்தியிரண்டு இருக்கும். பெயர் ஹூட். முட்டாளாயிருந்தாலும் உண்மை ஊழியன் என்றது அவனுடைய நடவடிக்கைகள். இருப்பினும் அவனை முதலில்

லகுவாக்கினான் பொய்ரெட்.

''உன் மேல எந்தக் குற்றமும் சுமத்தப்படாது'' என்றான் கனிவாய். ''ஆனா, என்கிட்டே நீங்க, இந்த பார்ஸல் எப்போ எப்படி வந்து சேர்ந்தது என்பதை ஒழுங்கா சொல்லிடணும்னு நான் விரும்பறேன்.''

டியூட்டியிலிருந்த அவன் புதிராய் பார்த்தான். பிறகு, ''இதை சொல்வது கடினம் ஸார்'' என்றான் மெதுவாய். ''நிறைய பேர் வராங்க... பேஷண்ட் பற்றி விசாரிக்கிறாங்க... அவங்களுக்குத் தரும்படி அன்பளிப்பு சாமான்களை விட்டுட்டுப் போறாங்க.''

''நர்ஸ் இது நேத்து வந்ததா சொல்றாங்க'' என்றேன் நான். ''ஆறு மணியையொட்டி.''

பயலின் முகம் பிரகாமானது. ''இப்போ எனக்கு நினைவுக்கு வருது, ஸார்'' என்றான். ''ஒரு ஜெண்டில்மேன் கொண்டு வந்தார்.''

''ஒல்லியான மனுஷன்? நல்ல கலரான முடி?''

''நல்ல கலரான முடி தான் ஸார் - ஆனா அவர் ஒல்லியானு எனக்குத் தெரியலே ஸார்.''

''சார்ல்ஸ் வைஸ் அவரே எடுத்துக்கிட்டு வந்த குடுத்திருப்பாரா என்ன?'' என பொய்ரெட்டிடம் முணுமுணுத்தேன் நான்.

ஆனால் இந்தப் பயலுக்கு லோக்கல் பெயரெல்லாம் அத்துப்படியாயிருக்கலாம் என்பதை நான் மறந்து விட்டேன்.

''அது மிஸ்டர் வைஸ்'' கிடையாது என்றான் அவன். ''எனக்கு அவரைத் தெரியும். வந்தது பெருசான மனுஷன் - நல்ல அழகும் கூட - பெரிய கார்ல வந்தாரு.''

''லாஸரஸ்'' - நான் ஆச்சரியமாய் சொன்னேன்.

பொய்ரெட் என்னை நோக்கி ஓர் எச்சரிக்கை பார்வையை சுட்டான். என் முந்திரிக்கொட்டை தனத்துக்கு நான் வருந்தினேன்.

''அவர் ஒரு பெரிய கார்ல வந்து இந்த பார்ஸலை விட்டுட்டுப் போயிட்டார்.''

''பெறுநர் பகுதியில மிஸ் பக்லேவுக்குனு இருந்ததா?''

''யெஸ், ஸார்.''

''அதை வெச்சுக்கிட்டு நீ அப்புறம் என்ன பண்ணினே?''

''நான் அதைத் தொடலே, ஸார். நர்ஸ் அதை மேலே தூக்கிக்கிட்டு

போனாங்க.''

''அப்படியே இருக்கலாம்; ஆனா அதை அந்த ஜென்டில்மேன் கிட்டேயிருந்து வாங்கும்போது நீ தொட்டுத்தானே இருக்கணும்?''

''ஓ! அப்போ, நிச்சயமா, தொடத்தானே ஸார் வேணும்! அவர் கிட்டேயிருந்து வாங்கிக்கிட்ட நான், டேபிள்ல வெச்சேன்.''

''எந்த டேபிள்? ப்ளீஸ் என் கிட்டே அதைக் காட்டு.''

அவன் எங்களை ஹாலுக்கு அழைத்துப் போனான். முன்கதவு திறந்திருந்தது. அதற்கு நெருக்கமாய், ஹாலில், சலவைக்கல் மேலவப் பட்டிருந்த பெரிய கனமான டேபிளொன்று இருந்தது... அதில் கடிதங்களும் பார்ஸல்களும் பரவிக்கிடந்தன.

''வரும் எல்லாமும் இதன் மேலத்தான் வைக்கப்படும், ஸார். அப்புறமா நர்ஸ், அததை அந்தந்த பேஷண்ட்டுங்களுக்குக் கொண்டு போய் தந்துடுவா.''

''எந்த நேரத்துல அந்தப் பார்ஸல் இங்கே விடப்பட்டதுனு உனக்குத் தெரியுமா?''

''ஐந்தரை... இல்லேனா அதைக் கடந்தவுடனே இருக்கணும் ஸார். அப்போதான் போஸ்ட் வந்திருந்தது... அதை வெச்சு சொல்றேன். போஸ்ட் அஞ்சரைக்குத் தான் எப்பவும் வரும். அன்னிக்கு மத்தியானம் ரொம்ப பிஸியா போச்சு. நிறைய பேர் வந்தாங்க. பூங்கொத்துகளை விட்டுட்டுப் போனாங்க. சிலர் பேஷண்ட்டுகளைப் பார்க்கவும் போனாங்க.''

''தேங்க் யூ. இப்ப, பார்ஸலைக் கொண்டு போன அந்த நர்ஸைப் பார்க்கலாம்னு நினைக்கிறேன்.''

அந்த நர்ஸ், அப்போது தான் பணிக்கு சேர்ந்திருந்த புதியவளா யிருந்தது. சின்னப் பொண்ணு. முழுக்க முழுக்க கிளர்ச்சியிலும் அதிர்விலுமிருந்தாள். அவள் டியூட்டிக்கு வந்தவுடன் ஆறு மணியை யொட்டி தூக்கிப் போனதாய் ஞாபகப்படுத்தி சொன்னாள் அவள்.

''ஆறு மணி'' என முணுமுணுப்பாய் சொன்னான் பொய்ரெட். ''அப்போ இருபது அல்லது முப்பது நிமிடங்களா அந்தப் பார்ஸல் கீழே மேஜையிலேயே கிடந்திருக்கு.''

''மன்னிக்கணும், கேட்கலே.''

''ஒன்னுமில்லே மேடம். தொடருங்க. நீங்க பார்ஸலைத் தூக்கிக்

கிட்டு மேடம் நிக் கிட்டே போனீங்க.''

''ஆமாம். அவங்களுக்கு நிறைய சாமான்கள் வந்திருந்தது. இந்தப் பெட்டி - சில மலரலங்கார அன்பளிப்புகளும் இருந்தன. இனிப்புப் பட்டாணி - மிஸ்டர் அண்ட் மிஸஸ் க்ராஃப்ட் கிட்டேயிருந்துனு நினைவு. எல்லாத்தையும் அதே நேரத்துல தான் கொண்டு போனேன். போஸ்ட்லேயும் ஒரு பார்ஸல் வந்திருந்தது. நிக்குக்கு. இதுல ஆச்சரியப் பட என்னயிருக்குனா, அதுவும், ஃபுல்லர் வகை சாக்லெட்டுகள் அடங்கிய ஒரு பெட்டி!''

''திருப்பிச் சொல்லு. ரெண்டாவது டப்பாவா?''

''ஆமாம். ஒரே மாதிரி எதிர்பாராம நடந்திருக்கலாம். மிஸ் பக்லே ரெண்டையும் திறந்தாங்க. 'ஓ! என்ன ஒரு கொடுமை! இதையெல் லாம் சாப்பிட எனக்கு அனுமதி கிடையாது!'ன்னாங்க. ரெண்டும் ஒரே மாதிரியான சாக்லெட்டுங்கதானானு மூடியைத் தூக்கித் திறந்து பார்த்தாங்க. அதுல ஒண்ணுல தான் உங்க கார்டு இருந்தது. 'அந்தப் போலியான ஆபத்து நிறைந்த இன்னொரு பெட்டியைத் தூக்கி அந்தாண்டை வையுங்க நர்ஸ்... இந்த சூப்பர் சாக்லெட்டுங் களை நான் அதுங்களோட கலந்துடப் போறேன்'னாங்க. குஷி யானாங்க.''

கொட்டிக்கொண்டு தொடர்ந்த நர்ஸின் பேச்சினைத் தடுத்தான் பொய்ரெட்: ''ரெண்டு பாக்ஸுனு நீங்க சொல்றீங்க? அந்த இன்னொரு பெட்டி யார்கிட்டேயிருந்து?''

''அதுல எந்தப் பெயரும் இல்ல.''

''எது என்கிட்டேயிருந்து - அதாவது என்கிட்டேயிருந்து என்பது போன்ற மாயையை தாங்கி - வந்தது, ஆங்? போஸ்ட்ல வந்த பெட்டியா? இல்ல, இன்னொண்ணா?''

''எனக்கு நினைவுபடுத்த முடியலே, ஸார். ஸாரி. மேலே போய் மிஸ் பக்லேகிட்டவே வேணும்னா கேட்டுப் பார்க்கட்டுமா?''

''ரொம்ப புண்ணியமா போகும்.''

படிகளேறி பாய்ந்தாள்.

''ரெண்டு பெட்டிங்க'' என முணுமுணுத்தான் பொய்ரெட். ''இங்கே நமக்கு முன்னாடி குழப்பம் இருக்கு.''

மூச்சிரைக்க திரும்பியிருந்தாள் நர்ஸ். ''மிஸ் பக்லேவால நிச்சயப்

படுத்தி சொல்ல தெரியலே. உள்ளே என்னயிருக்குனு பார்க்கிறதுக்கு முன்னாடி அந்த ரெண்டையுமே அவங்க திறந்திருக்காங்க. ஆனாலும் போஸ்ட்ல வந்த டப்பா கிடையாது அதுனு இவங்க நினைக்கிறாங்க.''

''ஓ!'' என்றான் பொய்ரெட், சற்று குழம்பியவனாய்.

''உங்ககிட்டேயிருந்து வந்த பெட்டி, தபால்ல வந்த பெட்டி கிடையாது - இப்படித்தான் அவங்க நினைக்கிறாங்க. ஆனா அவங்களால நிச்சயப்படுத்த முடியலே.''

''முட்டாள் கூட்டம்!'' என்றான் பொய்ரெட், நாங்கள் வெளியே வந்து நடந்து போய்க் கொண்டிருந்தபோது. ''ஒருத்தருக்குமா நிச்சயப் படுத்தி சொல்ல முடியாது? டிடெக்டிவ் புத்தகங்கள்ல ஆகணும்னா கதையை வளர்க்க இப்படி எதையாவது போட்டு இழுக்கலாம். ஆனா நிஜத்துல? நடந்ததைக் கூடவா நினைவுபடுத்த முடியாம போகும்? ஒருவருமா நிச்சயத்தன்மையில்லாம இப்படி குழம்புவாங்க? மத்தவங்களை விடு. நான்? நான், எனக்குள்ளே, நிச்சயத்தன்மையோட இருக்கேனா? ஓ, நோ. இல்லையே. ஓராயிரம் முறை - இல்லையே!''

''லாஸரஸ்'' என்றேன் நான்.

''ஆமாண்டா. இது ஓர் ஆச்சரியம், இல்லே?''

''நீ அவர்கிட்டே இதைப்பற்றியெல்லாம் ஏதாவது சொல்லப் போறியா?''

''சர்வ நிச்சயமா. இதை அவர் எப்படி எடுத்துக்கிறார் என்பதைப் பார்க்க எனக்கு ஆவலா இருக்கு. கூடவே, மேடமுடைய ஆபத்தான கட்டத்தை நாம மிகைப்படுத்தி சொல்லிப் பார்ப்போம். மரணத்தின் வாசல்ல அவங்க நின்னுக்கிட்டு தவிக்கிறாங்கனு சும்மா வார்த்தைகள்ல சொல்லுவதால எந்தக் கெடுதலும் விளைஞ்சுடப் போவதில்லே. என்ன, விளங்குதா? பயபக்தியான உன் முகம் பாராட்டப்பட வேண்டிய ஒன்றுடா. சொன்னதையே சொல்லும் கிளிப்பிள்ளை போல.''

லாஸரஸைத் தேடிப் போன போது அவரைப் பார்த்து விட முடிந்தது எங்கள் அதிர்ஷ்டம். ஓட்டலுக்கு வெளியில், அவருடைய காரின் முன்பகுதியில் குனிந்து கொண்டு எதையோ பண்ணியபடியிருந்தார் அவர்.

பொய்ரெட் நேராய் அவரிடமே போய் விட்டான். எவ்வித முன்னுரையும் இல்லாமல், ''நேற்று சாயங்காலம் மிஸ்டர் லாஸரஸ்,

மேடம் நிக்குக்குனு ஒரு பெட்டி நிறைய சாக்லெட்டை நீங்க ஆஸ்பத்திரியில கொடுத்துட்டு வந்திருக்கிங்க'' என்றான்.

இதற்கு லாஸரஸ் ஆச்சரியப்பட்டுப் போனவராய்ப் பார்த்தார். ''ஆமாம்... என்ன இப்போ?''

''இது உங்களுடைய நல்ல மனசைக் காட்டுது.''

''சொல்லப்போனா அது ஃப்ரெட்டரி கிட்டேயிருந்து வந்தது - மிஸஸ் ரைஸ்... தெரியுமில்லே! அவங்க என்னை அதை வாங்கிக்கிட்டு வரச் சொன்னாங்க.''

''ஓ. அப்படியா.''

''நான் தான் கார்ல எடுத்துக்கிட்டு கொண்டு போனது.''

''விளங்குது.''

ஓரிரு நிமிடங்கள் அமைதியாய் இருந்த பொய்ரெட் பின்பு கேட்டான்: ''மேடம் ரைஸ்? எங்கே அவங்க?''

''பால்கனியில இருக்காங்கனு நினைக்கிறேன்.''

டீ அருந்திக் கொண்டிருந்த ஃப்ரெட்டரிக்காவைச் சந்தித்தோம். படபடப்பான முகத்தோடு எங்களிருவரையும் எதிர்கொண்டார் அவர்.

''என்ன இது திடீர்னு? மறுபடியும் நிக் மோசமாயிட்டானு கேள்விப் பட்டேனே?''

''நடப்பதெல்லாம் விளங்காத மர்மமான நிகழ்வுகளா இருக்கு மேடம். சொல்லுங்க... நீங்க நேற்று அவங்களுக்கு ஒரு டப்பா நிறைய சாக்லெட்டுகளை அனுப்பியிருந்தீங்களா?''

''ஆமாம். பின்னே என்ன பண்றது? அவதான் வாங்கித் தான்னு என்னைக் கேட்டுக்கிட்டா.''

''அவங்களுக்காக வாங்கித் தரணும்னு அவங்க உங்களைக் கேட்டுக் கிட்டாங்களா?''

''யெஸ்.''

''ஆனா யாரையும் பார்க்க அவங்களுக்கு அனுமதியே கிடையாதே. நீங்க எப்படி அவங்களை சந்திச்சீங்க?''

''நான் ஒன்னும் போய் பார்க்கலே ஸார். அவதான் டெலிபோன் பண்ணினது.''

''ஆஹ்! அப்போ அவங்க சொன்னது - என்ன?''

''அவளுக்காக, 2 பவுண்டு விலை கொண்ட ஃபுல்லர்

சாக்லெட்டப்பா ஒண்ணு என்னால வாங்கித் தர முடியுமா? இது தான்.''

''அவங்க குரல் அப்போ எப்படியிருந்தது? பலஹீனமா?''

''கிடையாது - கிடையவே கிடையாது. நல்லா கணமாத்தானிருந்தது. ஆனா ஏதோ ஒரு வகையில - வித்தியாசமானதா. அவ தான் பேசறானு நான் ஆரம்பத்துல கண்டுபிடிக்கவே இல்லே.''

''பேசுவது யார்னு அவங்க உங்ககிட்டே சொல்லும் வரைக்கும்...?!''

''யெஸ்.''

''அது உங்க ஃப்ரண்டு தான் என்பதுல நீங்க நிச்சயமா இருக்கீங்களா, மேடம்?''

உலுக்கப்பட்டவளாய் இப்போது தெரிந்தாள் ஃப்ரெட்ரிக்கா.

''நான் - நான் - நான்...! ஓஹ், ஏன் இப்படி கேட்கறீங்க? ஆமாம், அது, அவ தான், அது பின்னே வேற யாரா இருந்திருக்க முடியும்?''

''இது ஓர் இண்ட்ரஸ்டிங் கேள்வி, மேடம்.''

''உங்களால் - நம்ப - முடியலியா...''

''அந்தக் குரல் அறிமுகப்படுத்திக்கலேனா, அது அவ குரல்தான்னு உங்களால சத்தியமா சொல்ல முடியுமா, மேடம்?''

''நோ'' என்றாள் ஃப்ரெட்டரிக்கா மெதுவாய். ''அது என்னால முடியாது. அவ குரல் நிச்சயமா வேறுபட்டுத் தானிருந்தது. போன்ல கோளாறா இருக்கும்னு நினைச்சேன்... இல்லே, அவ உடம்பு நல்லாயில்லாததாலேனு...''

''பேசுவது யார்னு அவ அறிமுகம் தரலேனா உங்களால அந்தக் குரலுக்கு சொந்தக்காரரைக் கண்டுபிடிச்சிருக்கவே முடியாது?''

''ஆமாமாம். என்னால முடிஞ்சிருக்கும்னு தோணலே. அதுவும் நிக்குனு புரிஞ்சுக்கிட்டிருக்க மாட்டேன். ஓ, அப்ப, யாரது திரு பொய்ரெட்? யாரது?''

''அதைத்தான் நான் தெரிஞ்சுக்கத் துடிக்கிறேன், மேடம்.''

பொய்ரெட் முகத்தில் பரவிய ஆழ்ந்த உணர்வு, அவளுடைய சந்தேகத்தைத் தட்டியெழுப்பியது. ''நிக்குக்கு? அவளுக்கு ஏதாவது ஆகிடுச்சா?'' - சூச்சடைக்கக் கேட்டாள் அவள்.

''அவங்களுக்கு உடம்பு சரியில்லே. ரொம்ப மோசமாயிருக்காங்க. அந்த சாக்லெட்டுகள் மேடம் - அவை விஷம் நிறைந்தவை.''

''நான் அவளுக்கு அனுப்பின சாக்லெட்டுகளா? ஓ, இது சாத்தியமே

கிடையாது. நோ, நோ.''

''அவங்க மரண வாசல்ல நின்றுக்கிட்டிருப்பதால - சாத்தியம் தான் மேடம்.''

''ஓ, காட்'' என்றாள் தனது உள்ளங்கைகளுக்குள் தலையைப் புதைத்துக் கொண்டு. பின் நடுநடுங்க நிமிர்ந்தாள். ''எனக்குப் புரியவே யில்லையே. அந்த இன்னொண்ணுல வேணும்னா இருந்திருக்கலாம் - ஆனா இதுல, ம்ம், முடியாது. என்னையும் ஜிம்மையும் தவிர அதை வேற யாரும் தொடலே. நீங்க ஏதோ மாபெரும் தவறு பண்றீங்க, மிஸ்டர் பொய்ரெட்.''

''ம்ம். இதுல நான் எந்த விதமான தவறோ குற்றமோ பண்ணலே - என்னோட பேர் தாங்கிய கார்டு அதுல இருந்தாலும் கூட...!''

பொய்ரெட்டை அவள் வெறுமையாய் பார்த்தாள்.

''மேடம் மட்டும் இறந்துட்டா ...'' இப்படி சொல்லி விட்டு மிரட்டும் தொனியில் அப்படியே விட்டு விட்டான் அவன்.

விசும்பினாள் அவள்.

திரும்பிக் கொண்ட அவன், கையோடு என்னையும் சேர்ந்து இழுத்துக் கொண்டு வரவேற்பறை வரை போனான். அவனுடைய தொப்பியை அங்கிருந்த மேஜையில் சுழற்றி எறிந்தான்.

''எனக்கு எதுவுமே புரியலே - எதுவுமே! இருட்டுல இருக்கேன் நான். மேடம் மரணத்தால லாபமடையப் போவது யார்? மேடம் ரைஸ். அவங்க சாக்லெட் வாங்கி அனுப்பியிருக்காங்க. ஒத்துக்கறாங்க. கூடவே ஏதோ போன் வந்ததா ஒரு கதையையும் சிருஷ்டிக்கிறாங்க! மேடம் ரைஸ்! நடந்திருப்பது ரொம்ப சுலபமா நடத்தி முடிக்கப் பட்டுள்ள ஒரு விஷயம்; ஆனாலும் முட்டாள்தனமானது. ஆஹ் - ஆனா, மேடம் ரைஸ் முட்டாள் கிடையாதே!''

''வெல், அப்போ ...''

''பொறு பொறு. அவங்க கொகைன் எடுத்துக்கிறாங்க, ஹேஸ்டிங்ஸ். அவங்க கொகைன் எடுத்துக்கிறாங்க என்பதுல நான் ஸ்திரமா இருக்கேன். இந்தக் கணிப்புல தப்பே கிடையாது. இந்த சாக்லெட்டுகளிலும் கொகைன் இருக்கு. ஆங், மேலும்: அந்த இன்னொண்ணுல வேணும்னா இருந்திருக்கலாம் - ஆனா இதுல, ம்ம், முடியாது. இப்படி எதனால அவங்க சொன்னாங்க? இதுக்கு

விளக்கம் வந்தாகணும்! மேடம் ரைஸுக்கு என்னவெல்லாம் தெரியும்? அவங்களுக்கு என்னவோ தெரியும்; ஆனா அதை அவங்க பேசும்படி பண்ண என்னால முடியலியே. பேச்சாலேயே பய முறுத்திப் பேசப் பண்ணக்கூடிய வகை கிடையாது அவங்க. ஆனா, அவங்களுக்கு என்னவோ தெரியும், ஹேஸ்டிங்ஸ். டெலிபோன் பற்றி அவங்க விட்ட கதை உண்மை தானா, அல்லது திரித்து விட்ட பொய்யா? அப்படியே அது உண்மைனு ஆகிவிட்டால், அது யாருடைய குரல்?

''கவனிச்சுக்கோ ஹேஸ்டிங்ஸ்... இவையெல்லாமே சுடும் இருட்டாயிருக்கு. மையிருட்டு.''

''எப்பவும் விடியலுக்கு முன்பு கருமிருட்டு தான்'' என்றேன் நான், தன்னம்பிகையைப் புதுப்பிக்கும் தொனியில்.

அவன் மறுப்பாய் தலையசைத்து விட்டான். ''அப்புறம் அந்த இன்னொரு சாக்லெட் பெட்டி - தபால்ல வந்த அது. அதை நாம முக்கியப்படுத்தாம ஒதுக்கிடலாமா? நோ. அப்படி நம்மால பண்ண முடியாது. ஏன்னா எது தபால்ல வந்தது என்பதுல மேடம் நிச்சயமா யில்லே. இது வேற வெறுப்பேத்துது!'' - உறுமினான் அவன்.

இப்போதும் நான் எதுவோ பேச வாயெடுக்க கையமர்த்தி அடக்கி விட்டான் அவன். ''நோ, நோ. இன்னொரு முட்டாள் பழமொழி வேணாம். பழமொழியாலயே அடிக்காதே, ப்ளீஸ்! நீ என் நல்ல நண்பன்னா ... உதவிகரமான நல்ல நண்பன்னா ...''

''யெஸ்...?'' - நான் ஆர்வமானேன்.

''முதல்ல வெளியே போ! போய் எனக்காக ஒரு சீட்டுக்கட்டு வாங்கி வா.''

நான் முழித்தேன். ''பண்றேன்'' என்றேன் நான் இறுக்கமாய்.

எப்படியோ என்னை இங்கிருந்து கட்டி வெளியேற்றினால் போதும் என்பதற்காகத் தான் அவன் இப்படியொரு தந்திரம் செய்துள்ளான் என என்னால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனால் இந்த முடிவு ஒரு தப்பான அனுமானம் என்பதை உடனேயே புரிந்து கொள்ள முடிந்தது. அன்றிரவு, பத்து மணியையொட்டி வரவேற்பறை வந்தபோது, அங்கு, சீட்டுகளை ஒன்றின் மேல் அடுக்கி நிற்க வைத்து, பொய்ரெட் வீடு கட்டிக் கொண்டிருப்பது தென்பட்டது.

உடனே எனக்கு ஞாபகம் வந்தது!

அவனுடைய அதிர்ந்து கொண்டிருக்கும் நரம்புகளையெல்லாம் கட்டியிழுத்து அடக்கி நிலைப்படுத்த - அவன் கடைபிடிக்கும் ஒரு த்ரேதாயுக வித்தையிது.

அடுக்கிக் கொண்டே மிக முணுமுணுப்பாய் பேசிக்கொண்டிருந்தான்: "யெஸ். நினைவிருக்கட்டும் உனக்கு. ஒருத்தனுக்கு நிலையான ஆடாத மனசு வேண்டும். ஒன்றின் மேல் ஒன்றாக - மிகச்சரியான இடமா பார்த்து வைக்கணும் - சரியான எடை கொண்ட சீட்டா அடுக்கணும் - இப்படியே மேல மேல. இன்னும் மேல. நீ படுக்கப் போ ஹேஸ்டிங்ஸ். என்னை இப்படியே விட்டுடு - என் சீட்டு வீட்டோட. என் மனசை நான் ஒருநிலைப்படுத்தியாகணும்."

நான் உலுக்கப்பட்டு எழுப்பப்பட்டபோது மணி காலை ஐந்து. என் படுக்கைக்கு அருகில் நின்று கொண்டிருந்தான் பொய்ரெட். சமாதான மாகி விட்டவனாயும் மகிழ்ச்சி நிறைந்தவனாயும் தோன்றினான் அவன். "நீ என்ன சொன்னியோ அது மிக சரி, நண்பா. ஓ, அற்புதமா பொருந்துது."

அரைகுறையாய் முழித்திருந்ததால் மலங்க மலங்க முழித்தேன் நான்.

"எப்பவும் விடியலுக்கு முன்பு கருமிருட்டு தான் - இதுதானே நீ சொன்னது. கொஞ்ச நேரம் முன்னாடி வரை கருமிருட்டாத் தானிருந்தது. ஆஹ்... இப்போ, வெளிச்சம் தான்."

ஜன்னல் வழியாய் வெளியே பார்த்தேன். அவன் சொல்வது சரிதான்.

"நோ, நோ ஹேஸ்டிங்ஸ். நான் சொன்னது, கைகளை. மனதினை. பார் - நடுக்கமேயில்லை. மூளையின் சமயோஜித சாம்பல் நிற செல்களின் விழிப்பு!"

அமைதியாகிவிட்டு பிறகு சாந்தமாய் சொன்னான்: "கவனி, ஹேஸ்டிங்ஸ். மேடம் நிக், இறந்துட்டாங்க."

"என்னது?" - கதறி விட்டேன் நான். சட்டென முழுதுமாய் விழித்து விட்டேன்.

"உஷ், உஷ் - எல்லாம் இப்போ நான் சொல்றா மாதிரி. கவனி. உண்மையா கிடையாது - ஆனா இப்படி ஓர் ஏற்பாடு பண்ண முடியும். யெஸ். இருபத்து நாலு மணி நேரத்துக்கு இப்படிப் பண்ண முடியும்.

டாக்டர்கள் நர்ஸ்கள் துணை கொண்டு நான் பண்றுவேன்.

''இது வரைக்கும் விளங்குதில்லே, ஹேஸ்டிங்ஸ்? கொலை - வெற்றிகரமா முடிஞ்சாச்சு. நாலு தடவை அவன் முயற்சி பண்ணினான். தோத்துட்டான். ஐந்தாவது முறை முயன்றான். ஜெயிச்சுட்டான்.''

''இப்போ, நாம, அடுத்து என்ன நடக்குதுனு பார்க்கப் போறோம்.........''

''அது படு சுவாரஸ்யமா இருக்கும். பார்த்துக்கிட்டே இரேன்.''

அத்தியாயம் 18

# ஜன்னலில் ஒரு முகம்

மறுநாள் நடந்த அத்தனை நிகழ்வுகளும் என்னுள் அரளம்புரளு மாகத் தான் பதிந்துள்ளன. அடித்த காய்ச்சலின் காரணமாக தலை தூக்க முடியாத துரதிர்ஷ்ட நிலை உருவாகியிருந்தது. ஒரு முறை நான் மலேரியாவில் விழுந்தது முதல் இப்படிப்பட்ட ஜுர நடுக்கம் அடிக்கடி விளைவது வழக்கமான ஒன்றாகிப் போனது.

இதன் விளைவாக மறுநாள் நடந்த எல்லாமும் எனக்குள் ஒரு படுபயங்கர அனுபவத்துக்கு இணையாகத்தான் பதிந்துள்ளன. இந்த அமளியில், அடிக்கடி வந்து தலை காட்டி செல்லும் சர்க்கஸ் கோமாளி போல, அடிக்கடி வந்து போன பொய்ரெட் மட்டும் தான் என் நினைவில் இருக்கிறான்.

தனக்குள் தானே அப்படி கொண்டாடிக் கொண்டிருந்தான் பொய்ரெட். உலுக்கப்பட்ட ஒருவன் தன்னம்பிக்கை முழுவதையும் இழந்து நிற்பதைப் போன்ற அவனுடைய காட்சித்தோற்றம் மெச்சும்படியிருந்தது. அவனுக்குள் உருவாகியிருக்கும் முடிவினை அவன் எப்படி அடைந்தான் என்பதை எனக்கு விளக்கத் தெரிய வில்லை. காலையில் தான், அது என்ன என்பதையும் அவன் என்னிடம் உடைத்திருந்தான். எப்படியோ அப்படியொரு முடிவினை, அவன் இறுதியாய் அடைந்திருந்தான்.

அதை நடைமுறைப்படுத்திக் காட்டுவதென்பது அத்தனை சுலபமொன்றும் கிடையாது... தேவைப்படும் தந்திர உபாயங்களும், வஞ்சக திட்டங்களும் மிகப் பிரம்மாண்டமானவையாகவே இருக்கும். முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் வேலைக்கு எந்த ஆங்கிலேயனும் தன்னை முழுக்க ஒப்படைத்து ஒத்துழைக்க வர

மாட்டான்; ஆனால் இப்படிப்பட்ட வகைக்குக் கொஞ்சமும் குறையாத ஒன்று தான் பொய்ரெட்டின் திட்டமும்! முதலில் அவன், டாக்டர் க்ரஹாமை இந்தத் திட்டத்திற்கு ஏற்றாற் போல மாற்றியாக வேண்டும். அப்படி க்ரஹாமை இவன் பக்கமாய் திசை திருப்பிய பிறகு, ஆஸ்பத்திரியின் முதன்மை நர்ஸ் மற்றும் இன்னபிற சம்பந்தப்பட்ட பணியாட்கள் அனைவரையும் வரிசையாய் அவனுடைய வட்டத்துக்குள் கொண்டு வந்து நம்பகத்தனமாய் அடைத்து வைக்க வேண்டும். இதிலும், எதிர்கொள்ள வேண்டிய சங்கடங்கள், அளவுக்கதிகமாகவே இருக்கும்.

இவர்கள் ஒரு பக்கமென்றால் முதன்மை கான்ஸ்டபிளும் போலீஸ் கூட்டமும் இன்னொரு பக்கம். இதில், அதிகார பிரச்சினைகள் பொய்ரெட்டைத் திண்டாட அடிக்கும். எனினும், கலோனல் வெஸ்ட்டனிடமிருந்து, அவருக்கே விருப்பமில்லாத சம்மதத்தை ஒருவழியாய் கட்டாயப்படுத்திப் பிடுங்கிக் கொண்டான் பொய்ரெட். நடக்கும் எதுவும் தனது பொறுப்பாகாது என்பதைத் துல்லியமாய் முன் வைத்து விட்டுத்தான் முன் வந்தார் கலோனல். உலகெங்கும் பரவவிருக்கும் இந்த சேதிக்கு பொய்ரெட் - பொய்ரெட் மட்டும் தான் - ஜவாப்தாரி! பொய்ரெட் இதை ஏற்றுக் கொண்டான். இது என்றல்ல... தன் திட்டத்தை செயல்படுத்த விடுவதாயின் அவன் எதை வேண்டுமானாலும் ஏற்றுக் கொண்டிருப்பான்.

எனது கால் முட்டிக்குக் கீழே பெரும் கம்பளியொன்றைப் போர்த்திய நிலையில், நாளின் பெரும்பாலான பகுதியினை நான் ஈஸி-சேரில் சாய்ந்து கொண்டபடியே கழித்தேன். ஒவ்வொரு மூன்று மணிநேரங்களுக்கு ஒரு முறை பொய்ரெட் வெடிப்பது போல் உள்ளே நுழைந்து திட்டத்தின் முன்னேற்றம் பற்றி சொல்லிச் செல்வான்.

தற்சமயம், ''ஒரு மலர் வளையம் சொல்லிட்டு வந்தேன்டா'' என்றான். ''மலர்களாலேயே வேயப்பட்ட பிரமிக்கத்தக்க ஒரு மலர் வளையம். லில்லி மலர்கள் நண்பா... வெறும் லில்லி மலர்கள் மட்டும். ஆஹ்... என்ன ஒரு கேலிக்கூத்து! 'With heartfelt regrets. From Hercule Poirot.' என்ன காமெடி!'' - மறுபடியும் ஓடி விட்டான்.

''மேடம் ரைஸுடன் நடந்த மிகவும் கசப்பான உரையாடலிலிருந்து அப்படியே வந்துள்ளேன்'' என்றான் அடுத்த முறை. ''முழு கறுப்பு

உடையில அலங்காரம் பண்ணிக்கிட்டு வந்திருந்தா அவ. அவ நெருங்கிய தோழி - என்ன துயரம்! நான் பச்சாதாபம் செய்வது போல உறுமிக் காட்டினேன். நிக் - அவ சொல்றா - எப்பவும் குஷியான பொண்ணாம். உயிர்ப்புள்ள துள்ளலான பொண்ணாம். அவ செத்துப் போய்க் கிடப்பதை கற்பனை பண்ணிக்கூட பார்க்க முடியலையாம். 'நானும் ஒத்துக்கறேன்' என்றேன். 'இப்படி ஒரு சின்ன உசுரைக் கொத்தா பறிச்சுக்கிட்டுப் போய் விடுவது தான் இறப்பு தர்மம்'னேன். 'பிரயோஜனமற்றவைகளும் கிழடுகளும் அப்படியே விடப்பட்டு வாழ்கின்றன' னு சொன்ன நான் மறுபடியும் கறுவலாய் உறுமினேன்.''

''இதையெல்லாம் நீ எப்படிக் கொண்டாடிக்கிட்டிருக்கேடா'' என்றேன் நான், வெறுவெற்று.

''இது என் திட்டத்தின் ஒரு பகுதி. தட்ஸ் ஆல். வெல்... சம்பிரதாய துக்க சோகங்கள் முடிஞ்சதும் பிறகு, அவங்க, இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சமாச்சாரத்துக்குள்ளே நுழையறாங்க. முழு இரவும் அந்த இனிப்புகளைப் பற்றியே ஆச்சரியத்தபடி முழிச்சுக்கிட்டே இருந்தாங்க. திருப்பித் திருப்பி: 'இது சாத்தியமே கிடையாது. நோ, நோ.' இதுக்கு நான், 'மேடம்'னு கூப்பிட்டு, 'இது சாத்தியமே. பரிசோதனை ரிப்போர்ட்டை வேணும்னா நீங்களே பார்க்கலாம்'னு சொல்றேன். பிறகு, கொஞ்சமும் நிலையற்ற நடுங்கிய குரலில் அவர் பேசுகிறார்: 'அது கொலைகன்? அப்படித்தானே சொன்னீங்க?'ங்கிறா. நான் ஒப்புதல் தெரிவிக்கிறேன். இதுக்கு அவ சொன்னது: 'ஓ மை காட். எனக்குப் புரியலியே.'''

''அவங்க சொல்வதே கூட நிஜமாயிருக்கலாம், இல்லையா?''

''அவங்க ஆபத்துல மாட்டிக்கிட்டிருப்பது அவங்களுக்கே தெரியும்டா. அவங்க புத்திசாலி... இதை நான் உன்கிட்டே முன்னமேயே கோடிக் காட்டியிருக்கேன். ஆமாம், அவங்க ஆபத்துல இருக்காங்க, அது அவங்களுக்கே கூட தெரியும்.''

''இருந்தாலும், இப்போ, அவங்க குற்றமற்றவங்கனு நீ முதல் முறையா நினைப்பது மாதிரி எனக்குத் தோணுது பொய்ரெட்.''

பொய்ரெட் கடுமையாய் பார்த்தான். அவனுடைய நடவடிக்கையிலிருந்த கிளர்ச்சி வடிந்தது. ''நீ இப்ப சொன்னது ஆழ்ந்த முக்கியத்துவம் வாய்ந்தது ஹேஸ்டிங்ஸ். இல்லே - எனக்கென்னவோ -

உண்மைகள் சரியா அந்தந்த இடத்தில் பொருந்தி நிக்காத மாதிரி ஏனோ தோணுது. இந்தக் கொலைக்குற்றங்கள்ல - சூட்சும தந்திரம் இருக்கும்... சாதுர்யமான புத்திகூர்மை இயங்கியிருக்கும்... இல்லையா? ஆனா இதுல அப்படி எந்த நுணுக்கமான அணுகு முறையும் இதுவரை தென்படலே. வெளிப்படையா துல்லியமா தெரியும் கொடூரம் மட்டும் தான் புலப்படுது. நோ, இது சரி கிடையாது.''

டேபிளில் அப்படியே தாங்கலாய் உட்கார்ந்து கொண்டான் அவன்.

''கவனி. நம் முன்னாலிருக்கும் நிஜங்களைப் பரீட்சிப்போம். மூன்று சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மேடம் வாங்கி லாலாரஸால் கொண்டு வந்த தரப்பட்டுள்ள இனிப்புகள். எனில், குற்றவாளி, இவங்கள்ல யாரோ ஒருத்தராகவோ அல்லது இருவருமாகவோ இருக்கக் கூடும். அப்புறம் அந்த டெலிபோன் அழைப்பு. மேடம் நிக்கிடமிருந்து அழைக்கப்பட்டது போல. அது ஒரு தனிப்புரடு - மணல் கயிறு. நிச்சயமா, மெகா பொய்னு வெளிப்படையா, ஒளிவுமறை வின்றி தெரியுது.

''ரெண்டாவது? அந்த ரெண்டாவது இனிப்புப் பெட்டி - தபால்ல வந்தது. யார் வேணும்னாலும் அந்த இனிப்புகளை அனுப்பியிருக்க லாம். நம் சந்தேகப்பட்டியிலிலிருக்கும் 1-லிருந்து 10 வரையிலான நபர்களில் யார் வேண்டுமானாலும்! ஆனா, அது தான் குற்றமுள்ள இனிப்புப் பெட்டினா, அந்த டெலிபோன் அழைப்புக்கான காரணம் என்ன? தேவை என்ன? எதுக்காக ரெண்டாவது பெட்டி உள்ளே வந்து விவகாரத்தை சிக்கலாக்குது?''

நான் மறுப்பாய் தலையசைத்தேன். டெம்பரேச்சர் 102ல் இருக்கும்போது எவ்வகையான சிக்கலும் எனக்குத் தேவையற்ற முட்டாள்தனமான ஒன்றாய்தான் தோன்றியது!

''மூன்றாவது? விஷம் வைக்கப்பட்ட பெட்டி, அப்படி விஷமேது மில்லாத (மேடம் வாங்கின) பெட்டிக்கு பதிலா மாற்றப்பட்டிருக்கு. அப்படினா, வந்த தொலைபேசி அழைப்பு அர்த்தமுள்ளது... மகா புத்திசாலித்தனமானது. மேடமை வலைக்குள்ளே இழுத்துப் போடும் தந்திரம். இது ரொம்ப லாஜிக்கலா படுது. ஆனாலும் இதுல சிக்கல் இல்லாமலில்லே. சரியான தருணத்துல இந்தப்பெட்டி மாற்றலை

எப்படி வெற்றிகரமா நிகழ்த்திக் காட்டியிருக்க முடியும்? ஆஸ்பத்திரி நர்ஸ், மாற்றப்பட்ட பெட்டிக்கு பதிலா சரியான பெட்டியைத் தூக்கிட்டு மாடிக்குப் போகும்படி ஆகியிருந்தா? இந்த மாற்று வேலை இப்படி பிசுபிசுத்துப் போகும் வாய்ப்பு ஏராளமா தெரியுதே! நோ, இதுல அர்த்தமே கிடையாது.''

''அது லாஸரஸா இருந்தால்... பிசுபிசுக்குமா!'' என நான் குறிப்பு தந்தேன்.

பொய்ரெட் என்னை நிமிர்ந்து பார்த்தான்.

''புத்திசாலித்தனமான, அதே சமயம் சிக்கலில்லாமல் எளிமையா தெரியும் ஒரு துப்பினை நீ சுட்டிக்காட்டியிருக்கே, ஹேஸ்டிங்ஸ். கைக்கு மெய்யா தெரியுது... ஆனாலும் நான் கவனிக்கத் தவறி யிருக்கேன், பார்த்தியா! ஆனா, இது, மேலும் விளங்காத ஆச்சரியமான சங்கதிகளைக் கிளறும். லாஸரஸ், மேடம் ரைஸுடைய மிக நெருங்கிய நண்பன், அவரைத் தூக்கியேற்றி நிறுத்தத் தேவையான அத்தனையை யும் சிரத்தையாய் செய்யறார்! இது, நமக்கு இன்று வரை விளங்காத சில ஆச்சரிய சாத்தியக்கூறுகளைச் சிந்திக்க வழி தருது. சிக்கல் - படு சிக்கல்.''

நான் என் கண்களை மூடிக் கொண்டேன். நான் சாமர்த்தியமாக குறிப்பு தந்து உதவியுள்ளேன் என்ற அளவில் எனக்குத் திருப்திதான் ஆயினும் சிக்கலான எதையும் சிந்திக்க நான் தயாராயில்லை. தூங்க விரும்பினேன்.

பொய்ரெட் பேசிக் கொண்டே போனதாய் ஞாபகம். ஆனால் நான் செவி மடுக்கவில்லை. அவனுடைய குரல் சற்றே சமாதானமாய் போய்க் கொண்டிருந்தது... ஆனால் தெளிவற்று.

அடுத்து அவனை நான் பார்த்தது, மத்தியானப்பொழுதில். ''நான் போட்ட சின்ன திட்டம், பூக்கடைக்காரன்களுக்கு நல்ல லாபத்தை ஈட்டித் தந்திருக்கிறது...'' என்றான். ''ஒவ்வொருத்தரும் மலர் வளையத் துக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மிஸ்டர் க்ராஃப்ட், மிஸ்டர் வைஸ், கமாண்டர் சாலஞ்சர் ...''

அவன் சொன்ன கடைசி பெயர் என் நெஞ்சுக்குள் தாளா பச்சா தாபத்தை ஏற்படுத்தியது. ''கவனி பொய்ரெட்'' என்றேன் நான் அவசர மாய். ''சாலஞ்சரை இந்த விளையாட்டிலிருந்து நீ ஒத்தி வெச்சுடனும்.

பாவம்... கவலையிலேயே மனுஷன் வெடிச்சுச் சிதறிடுவான். இது அழகல்ல.''

''அவர் பக்கம் உனக்கு எப்பவுமே ஒரு அபிலாஷை இருக்கு, ஹேஸ்டிங்ஸ்.''

''எனக்கு அவரைப் பிடிக்குது. அவன் தலை முதல் கால் வரை மரியாதை மிகுந்த ஜென்டில்மேன். நீ அவரை உன் நம்பிக்கைக்குப் பாத்திரமானவரா நம்பணும்.''

பொய்ரெட் மறுத்துத் தலையசைத்தான். ''நோ, ஃபிரண்ட். நான் யாரையும் விதிவிலக்காக்க முடியாது.''

''ஆனால் இந்த சமாச்சாரத்துல அவருக்கு ஏதாவது தொடர்பிருக்கும்னு நீயும் சந்தேகப்படலியே...! என்ன?''

''நான் யாரையும் விதிவிலக்காக்கலே.''

''ப்ச். அவர் எப்படி துடிதுடிச்சுப் போவார்னு ஒரு கணம் நினைச்சுப் பாரு.''

''மாறாக, எத்தனை சந்தோஷமான ஓர் ஆச்சரியத்தை அவருக்கு நான் உண்டு பண்ணித் தரப் போகிறேன்னு நினைக்கத்தான் நான் விரும்பறேன்! மனசார காதலிச்சவளை மரித்துப் போன நிலையில பார்ப்பது - ஆனா உடனேயே அவ உயிர் கொண்டு எழுவதைக் கண்டு பிரமிப்பது! உணர்ச்சிபூர்வமான ஒரு சூப்பர் ஸீன் இது - பிரமாதம், போ!''

''எத்தனை மரம் போன்ற இரும்பு இதயம் உனக்கு. அவர்கிட்டே நீ இந்தத் திட்டத்தை சொன்னா அவர் ரகசியத்தை அற்புதமா மூடி பாதுகாப்பார்டா. சொன்னா கேளு.''

''எனக்கு அப்படி முழு நம்பிக்கை கிடையாது.''

''அவர் சத்தியத்தின் மறு உருவம். இதுல நான் நிச்சயமா இருக்கேன்.''

''ரகசியத்தை வெளியே விட்டுடாம பாதுகாத்து வைப்பதுல, இந்தக் குணந்தான் பெரிய இடையூறா இருந்துத் தொலையும். ஒரு ரகசியத்தைப் பொத்திப் பொத்திப் பாதுகாக்க, பிரம்மாண்டமான நிறைய பொய்களை நம்பும்படி சொல்லிக்கிட்டேயிருக்கணும். இந்தக் காமடியை, ரொம்பவும் ஸீரியஸா நடிச்சுக்காட்டி தொய்ந்து விடாம தூக்கி நிறுத்திக்கிட்டே இருக்க ஒரு ரசனை அத்தியாவசியம். இப்படி பாசாங்கு காட்டி நடிச்சுக்கிட்டேயிருக்க அவரால முடியுமா? நீ

சொல்லும்படியான ஓர் ஆள் தான் அவர்னா, ம்ம், நிச்சயமா அவரால முடியாது.''

''ஆக, நீ அவர்கிட்டே சொல்ல மாட்டே?''

''உணர்ச்சிபூர்வமா ஒருத்தன் வெடிச்சுக் கதறுவான் எனும் அற்பக் காரணத்துக்காக என்னுடைய முக்கியமான இந்த ஐடியாவை என்னால விட்டுக் கொடுக்க முடியாது. வாழ்வா சாவா எனும் இக்கட்டுடன் நாம விளையாடிக்கிட்டிருக்கோம், நண்பா. வாழ்க்கையில கஷ்டப்படுதல் - நல்லதுக்குத் தான். உன்னோட மதப்பாதிரியார்கள் கூட இதையே தானே வேத விளக்கமா சொல்றாங்க, ஆங்?!''

இதற்கு மேலும் அவனுடைய முடிவினை உலுக்கிப் பார்க்க நான் முற்படவில்லை. அவன் முடிவு, இறுதியாக்கப்பட்டு விட்டதை என்னால் பார்க்க முடிந்தது.

''டின்னருக்கு நான் ஒண்ணும் பெருசா அலங்காரம் பண்ணிக்கப் போவதில்லே'' என்று முணுமுணுத்தான் அவன். ''இந்த சேதியால, நான், அடியாழம் வரை உலுக்கப்பட்டுள்ள ஒரு வயோதிகன்! இது தான் நான் போட வேண்டிய பாத்திரம், ஓ கே? என்னோட மனோதைரியம் அத்தனையும் தவிடு பொடியாகியாச்சு. நான் உடைந்து சுக்கு நூறாகிக் கிடக்கிறேன். என் முயற்சியில நான் தோத்துட்டேன். டின்னர்ல என்னால எதையும் சாப்பிட முடியாத அளவுக்கு, தொண்டையடைக்கும் துக்கம்! என் தட்டிலிருக்கும் உணவு, சுவைக்கப்படாது. இது தான் அந்தப் பாத்திரத்தின் சிறப்பான குணாதிசமாயிருக்கும், என்ன...?!''

அவன் திரும்பி அறைக்கு வந்தது பற்றி எனக்கு தெரியாது. நான், ஆழ்ந்த நித்திரையில் இருந்திருக்க வேண்டும்.

நான் விழித்தெழுந்த போது அவன் டேபிளில் எழுதிக் கொண்டிருந்தான். அவனுக்கு முன்னால் சமன் செய்யப்பட்டிருந்த ஒரு சுசங்கியத் தாளிருந்தது. அதில் தான், ஒன்றிலிருந்து பத்து வரை என அவன் பட்டியல் போட்டிருந்தான் என்பது என் நினைவுக்கு வந்தது; போட்ட பிறகு கசக்கி அதனை அவன் விட்டெறிந்திருந்தான்.

வார்த்தைகளில் நான் சொல்லியிராத என் சிந்தனையை, ஏற்றுக் கொள்ளும் விதமாய் தலையசைத்துக் காட்டினான் அவன்.

''ஆமாண்டா. நான் இதுக்கு மறுபடியும் உயிர் கொடுத்திருக்கேன்.

வேற ஒரு கோணத்திலிருந்து இதன் மீதான சிந்தனையில நான் இயங்கிக்கிட்டிருக்கேன். ஒவ்வொரு நபரைப் பற்றிய ஒரு கேள்விப் பட்டியலை நான் தொகுத்துக்கிட்டிருந்தேன்டா. இந்தக் கேள்வி களுக்கும் கொலைக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லாம கூட யிருக்கலாம் - இக்கேள்விகள், ஜஸ்ட் எனக்கு விளக்கம் தெரியாதவை - இன்னும் விளக்கப்படாமல் இருப்பவை. இவற்றிற்கு என் மூளையிலிருந்தே விடைகளைத் தேடிக்கிட்டிருக்கேன்.''

''எத்தனை தூரத்துக்கு உனக்கு விடைகள் கிடைச்சிருக்கு?''

''முடிச்சிட்டேன்! கேட்கிறியா? உடம்புக் தேவலையா?''

''ஆமாம். சொல்லப்போனா, இப்ப நான் ரொம்ப ரிலாக்ஸ்டா உணர்றேன்.''

''ரொம்ப வசதியா போச்சு. முழுக்கப் படிக்கிறேன். இதுல சிலவற்றை நீ நிச்சயமா சிறுபிள்ளைத்தனமான அற்பமா நினைக்கத் தான் போறே, பாரேன்.''

தொண்டையக் கனைத்துக் கொண்டான் அவன்.

**1. எலென்:** வெளியே நடந்த பட்டாசு விழாவைப் பார்க்கப்போகாம இவ எதுக்காக வீட்டுக்குள்ளேயே இருந்தாள்? (மேடம் நிக் ஆச்சரியப் பட்டு சொன்னதை சாட்சியா வெச்சு இது, வழக்கத்துக்கு மாறானது.) என்ன நடக்கும்னு அவ நினைச்சா, அல்லது சந்தேகப்பட்டா? அவ யாரையாவது வீட்டுக்குள்ளே அனுமதிச்சிருப்பாளா - உதாரணத்துக்கு எண் 10. ரகசிய இடம் அது இதுங்கறாளே... அதெல்லாம் உண்மை தானா? அப்படி அங்கே ஒண்ணு இருப்பது உண்மைதான்னா, அது எங்கேயிருக்குனு ஏன் அவளால உடனடியா ஞாபகப்படுத்த முடியலே? (அப்படி ஒண்ணு இருந்தா அது எதுனு நிச்சயமா தெரிஞ்சிருக்கவல்ல மேடம் நிக்கே, அப்படியெல்லாம் எதுவும் கிடையாதுங்கிறாங்க.) அப்படி ஓரிடத்தை அவளே சிருஷ்டிச்சிருந்தாளா, எதுக்காக? மைக்கேல் ஸெட்டானின் காதல் கடிதங்களை அவள் படிச்சிருப்பாளா... அல்லது, மேடம் நிக்கின் நிச்சயதார்த்தம் பற்றிய அவளுடைய ஆச்சரியம், இயல்பானது தானா?

**2. அவளுடைய கணவன்:** நம் கண்களுக்குத் தெரிவது போல, நிஜமாவே அவன் ஒரு முட்டாள் தானா? எலெனுக்கு என்னவெல்லாம் தெரிஞ்சிருக்கோ அதெல்லாம் அவனுக்கும் தெரிஞ்சிருக்குமா,

தெரிஞ்சிருக்காதா? ஏதாவது ஒரு வகையில, அவன், ஒரு மெண்ட்டல் கேஸா இருக்கும் வாய்ப்பிருக்கா?

**3. அக்குழந்தை :** ரத்தத்தைப் பார்த்தவுடன் குழந்தைக்குள் விளையும் குதூகலம், இப்படிப்பட்ட சின்னப்பசங்களுக்கு இயற்கையிலேயே இருக்கும் ஒரு விறுவிறுப்பின் தாக்கம் தானா? அல்லது, ஆரோக்கியம் குன்றிய குழந்தையின் அறிகுறியா? (மன) நோயுற்ற அறிகுறியின் காரணம் தான் அப்படினா, இந்த அறிகுறி குழந்தைக்குள் இறங்கி யிருப்பது அப்பாவிடமிருந்தா அல்லது அம்மாவிடமிருந்தா? எப்பவாவது இந்தக் குழந்தை விளையாட்டு துப்பாக்கியைச் சுட்டுப் பார்த்திருக்குமா?

**4. மிஸ்டர் க்ராஃப்ட் :** யார்? உண்மையில் அவர் எங்கேயிருந்து வந்திருக்கிறார்? தொண்டையப் பிடிச்சுக்கிட்டு சத்தியம் பண்றாரே, அந்த உயிலைப் போஸ்ட் பண்ணினேன்னு... அப்படி உண்மையாகவே அவர் தபால்ல சேர்த்திருப்பாரா? அதைப் போஸ்ட் பண்ணாம வைக்க அவருக்கு என்ன காரணம்... அல்லது இலக்கு இருக்க முடியும்?

**5. மேற்சொன்ன அதே கேள்விகள் :** யாரந்த குடும்பத் தலைவர்கள் - மிஸ்டர் அண்ட் மிஸஸ் க்ராஃப்ட்? ஏதாவது காரணத்துக்காக அவங்க இரண்டு பேரும் இங்கே வந்து பதுங்கியிருக்காங்களோ? அப்படினா, என்ன காரணத்துக்காக? அவங்களுக்கும் பக்லே குடும்பத்துக்கும் ஏதாவது தொடர்புகள் இருக்கா?

**6. மிஸஸ் ரைஸ் :** நிக்குக்கும் மைக்கெல் ஸெட்டானுக்கும் இடையே நடந்த நிச்சயதார்த்தம் பற்றி இவங்களுக்கு நிஜமாவே தெரிஞ்சிருக்கா? இல்லே சும்மா அவங்களே ஊகிச்சுட்டு சொல்றாங்களா? ரெண்டு காதலர்களுக்கும் இடையே நடந்த கடிதப் பரிவர்த்தனையை அவங்க படிச்சிருப்பாங்களா? (அப்படினா ரெண்டு பேருக்குமிடையேயான உறவு முறை அவங்களுக்குத் தெரிய வந்திருக்கலாம்.) மேடம் நிக் இல்லாம போகும்போது, அவங்களுக்கு அடுத்து நிற்கும் சொத்துக்கான உறவுமுறை இவங்களேனு மிஸஸுக்குத் தெரியுமா? (இருக்கலாம். இந்த மேடம் நிக்கே கூட எனக்கப்புறம் நீ தான்டீனு சொல்லி யிருக்கும்.) லாஸரஸ், மேடம் நிக்கின் வசீகரத்தால் ஈர்க்கப்பட்டார் என்று கமாண்டர் சாலஞ்சர் ஆலோசித்ததா சொல்லப்படுவதுல ஏதாவது நிஜம் இருக்க வாய்ப்பிருக்கா? (இதுக்கு கிடைக்கும் விடை,

ரெண்டு நண்பர்களிடமும் காணப்படும் மிகக் குறைந்த குணக் குறைவுக்கான காரணத்தை விளக்கலாம்.) போதை மருந்தை சப்ளை பண்ணும் 'பாய் ஃபிரண்ட்' அப்படினு அவங்க சொன்ன ஆள் யார்? ஒரு வேளை இது பத்தாவதாக இருக்க வாய்ப்பிருக்கா? இந்த அறையில ஒரு நாள் அவங்க என்ன காரணத்துக்காக மயக்கம் போட்டு விழுந்தாங்க? பேசினதுல வந்து விழுந்த ஏதாவது ஒரு வார்த்தைக்காக இருக்குமா அல்லது அவங்க எதையாவது பார்த்திருப்பாங்களா? சாக்லெட் வாங்கிக்கிட்டு வரும்படி வந்ததா அவங்க சொல்லும் டெலிபோன் சேதியின் சாராம்சம் சரிதானா - அல்லது, வேணும்னே சொல்லப்படும் பொய்யா? அந்த இன்னொரு டப்பால வேணும்னா விஷமிருந்திருக்கலாம் - ஆனா இதுல, ம்ம், முடியாது...னு சொன்னாங்களே, இதுக்கு அர்த்தம்?''

''கவனிச்சியா ஹேஸ்டிங்ஸ்'' என சட்டென உடைந்தவனாய் சொன்ன பொய்ரெட், ''மேடம் ரைஸ் பற்றி எழும் கேள்விகள் எண்ணிலடங்காதவை. ஆரம்பத்திலிருந்து இறுதி வரை - அவங்க ஒரு புரிந்து கொள்ள முடியாத ஜீவன். இது தான் என்னை ஒரு முடிவெடுக்க இப்போ தள்ளியிருக்கு. ஒண்ணு மேடம் ரைஸ், குற்றவாளி; அல்லது குற்றவாளி யார் என்பது அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கு - அல்லது - அவங்களுக்குத் தெரிஞ்சிருக்குனு அவங்க நினைச்சுக்கிட்டிருக்காங்க. எனில் - அப்படி அவங்க குற்றவாளினு யாரை நினைச்சுக்கிட்டிருக்காங்களோ - அது சரி தானா? அவங்களுக்கு உண்மையாகவே குற்றவாளியின் அடையாளம் தெரிஞ்சிருக்கா, இல்லே, வெறுமனே சந்தேகப்பட்டுக்கிட்டே இப்படி நடந்துக்கிறாங்களா? இத்தனை கேள்விகளுக்கும் மேலே உள்ள ஒரு தலையாயக் கேள்வி? அவங்களை எப்படிப் பேச வைப்பது?''

பெருமூச்செறிந்தான் அவன். ''வெல்... என் கையிலுள்ள கேள்விப் பட்டியலைத் தொடர்கிறேன்.

**7. மிஸ்டர் லாஸரஸ்:** விளக்க முடியாதவர். இவரைப் பற்றிக் கேட்க எந்தவொரு கேள்வியும் கையிலில்லை - ஒரு சற்றே கொடூரமான கேள்வியைத் தவிர. இவர் ஒரு வேளை விஷ சாக்லெட்டுகளை மாற்றி வைத்துத் தொணித்திருப்பாரா? இக்கேள்வியை ஒதுக்கிட்டோம்னா, துளியும் சம்பந்தமேயில்லாத ஒரே ஒரு கேள்வி மட்டும் தான் என்

கையில இருக்கு. அதையும் முன் வெச்சுடறேன். வெறும் இருபது பவுண்டுகளுக்குக் கூட லாயக்கில்லாத ஓர் ஓவியத்துக்குப் போய் எதுக்காக இவர் ஐம்பது பவுண்டு வரை தர முன் வந்துள்ளார்?''

''நிக்கின் மனசுல ஓர் இனிய திருப்பத்தை உண்டு பண்ணி விட நினைச்சிருக்கலாம்'' என்றேன் நான்.

''இப்படி ஒரு வகையில தான் அதைப் பண்ணியாகணுமா? அவர் ஒரு டீலர் - வியாபாரி. நஷ்டத்துக்கு ஒரு பொருளை வாங்க எந்த வியாபாரிக்கும் மனசு வரவே வராது. அவங்ககிட்டே நல்ல பேர் சம்பாதிக்கணும்னா தனிப்பட்ட முறையிலேயே உதவினு சொல்லிக்கிட்டு அவர் பணம் தந்திருப்பார்.''

''எப்படியோ - இது கொலையுடன் எந்த வகையிலும் பொருந்தி நிக்கலே.''

''ஆமாம். இல்லேதான். இருந்தாலும் இதுக்கான காரணத்தை அறிஞ்சுக்க விரும்பறேன். நான் ஓர் உளவியல் மாணவன் - ஓ கே!

இப்போ நாம எட்டாம் எண்ணுக்குள் நுழைகிறோம்.''

8. ***கமாண்டர் சாலஞ்சர்:*** யாரோ ஒருவனோட நிச்சயமாயிடுச்சுனு எதுக்காக மேடம் நிக் இவர்கிட்டே சொன்னாங்க? கமாண்டர் கிட்டே போய் இதை சொல்லுனு எது மேடமை நிர்ப்பந்திச்சு? வேற யார்கிட்டேயும் நிக் சொல்லலை. ஒரு வேளை இவர் அவங்களைக் கேட்டிருப்பாரா? அவரோட அங்கிளுடனான தொடர்பு அவருக்கு எப்படி இருந்தது?''

''அங்கிள்?''

''ஆமாம். அந்த டாக்டர். கேள்விகளுக்குள் சுலபமா அகப்படும் அந்தப் பாத்திரம். பப்ளிக்கா அறிவிக்கிறதுக்கு முன்னாடி ஸெட்டானின் மரணம் ரகசியமா வந்ததா?''

''எதைத் துரத்திக்கிட்டு நீ இப்படி அலையறேனு எனக்கு விளங்கலே பொய்ரெட். ஒரு வேளை சாலஞ்சருக்கே கூட ஸெட்டானின் மரணம் முன்கூட்டியே தெரிஞ்சதா நாம எடுத்துக்கிட்டாலும், இந்தத் தகவல் நம்மை எந்த அனுகூலமான உயரத்துக்கும் எடுத்துச் செல்வதா எனக்குத் தோணலே. அவர் விரும்பின பெண்ணைக் கொல்வதற்குண்டான இலக்கினை இந்த சேதி கோடிக் காட்டலேயில்லே.''

''இதை நானும் முழுசா ஒத்துக்கறேன். நீ சொல்வதிலும்

நியாயமிருக்கு. ஆனா இதெல்லாம் ஜஸ்ட் நான் தெரிஞ்சுக்க விரும்பும் சில விடை தெரியா விஷயங்கள். நான் இன்னும் அந்த நாயாவே தானிருக்கேன் - சரியில்லாத விஷயங்களா பார்த்துப் பார்த்து மோப்பம் பிடிச்சுக்கிட்டு!
9. மிஸ்டர் வைவ்ஸ்: அவருடைய உறவுக்காரப் பொண்ணு, கடைசி வீட்டின் மேல வெச்சிருப்பது கண்மூடித்தனமான விசுவாசம்னாரே - ஏன்? இதை சொல்வதற்கு பின்னாடி இருந்திருக்கவல்ல இலக்கு என்னவாயிருக்கும்? அவர் உயில் கிடைக்கப்பெற்றாரா? இல்லையா? அவர் ஓர் உண்மையான ஆசாமி தானா? இவர், உண்மையற்றவரா?
10. அப்புறம், இப்போ, எண் 10: ஒரு பெரிய கேள்விக்குறிக்கு முன்னாடி இந்த பத்தாவது ஆசாமியை நான் நிறுத்தறேன். அது? எண் பத்து என்றோர் ஆசாமி இருக்கானா, இல்லையா?''

''நண்பா, நண்பா!''

''என்னாச்சு உனக்கு?''

சட்டென்று உருவான கூர்மையான அதிர்ச்சியினால் நான் என் இருக்கையிலிருந்து துள்ளியெழுந்திருந்தேன். நடுநடுங்கும் கைகளை ஜன்னல் நோக்கி குறிப்பிட்டேன் நான்.

''ஒரு முகம் பொய்ரெட்!'' - அலறினேன் நான். ''ஒரு முகம் கண்ணாடியின் மேலே அமுங்கியிருந்தது. ஒரு பயங்கரமான முகம்! இப்போ அது போயிடுச்சு - ஆனா அதை நான் பார்த்தேன்!''

சுழன்றெழுந்து ஜன்னலுக்கு ஓடினான் பொய்ரெட். அதைத் திறந்தும் விட்டான். அதன் வழியே வெளியே தலையை நீட்டித் தேடினான்.

''இப்போ இங்கே ஒருத்தனையும் காணும்'' என்றான் சிந்தனையாய். ''நிச்சயமா தான் சொல்றியா, ஹேஸ்டிங்ஸ்? கற்பனை கிடையாதே?''

''படு நிச்சயமா. அது ஒரு பயங்கரமான முகம்டா.''

''ஒரு பால்கனியிருக்கு. நாம என்ன சொல்லிக்கிட்டிருக்கோம்னு கேட்க அந்த இடத்துக்கு வெகு சுலபமா வரலாம். ஆங்... அது ஒரு பயங்கரமான முகம்னு நீ சொல்லும்போது - என்ன உணர்த்த விரும்பறே ஹேஸ்டிங்ஸ்?''

''ஒரு வெளிறிப்போன - அறையும் முகம். மனித முகம்னே சொல்ல முடியாத மாதிரி.''

''நண்பா - இது நிச்சயமா ஜுரவேகம். ஒரு முகம் - ஓ கே.

அசிங்கமான அவலட்சண முகம்னாலும் - ஓ கே. ஆனா, ஒரு முகம், ஆனா அது மனித முகம்னே சொல்ல முடியாத மாதிரியான முகம்னா - நோ. மூடியக் கண்ணாடி மீது அமுங்கியிருந்த ஒரு முகம் ஏற்படுத்திய பதிப்பினைத் தான் நீ பார்த்திருக்கே. அது கூட அப்படி ஒரு முகத்தைப் பார்த்ததால உருவான ஷாக் வேற. கூடவே காய்ச்சல். எல்லாம் சேர்ந்து குழம்பிட்டே.''

என்னிலையிழந்து, ''அது ஒரு கோரமான முகம்'' என்றேன் நான்.

''உனக்குத் தெரிஞ்ச ஒருவருடைய முகமும் அது கிடையாது - அப்படியா?''

''ஆமாமாம்.''

''ஹூஉம். அது, அப்படி, இருக்கலாம்! அந்த முகத்தை உன்னால அடையாளங்காட்ட முடியுமான்னு எனக்கு சந்தேகமாயிருக்கு. ஆமாம், சந்தேகமாயிருக்கு... எனக்கு ரொம்பவுமே சந்தேகமாயிருக்கு... ... ...''

அவனுடைய தாள்களை ஆழ்ந்த சிந்தனையோடு சேர்த்து எடுத்துக் கொண்டான் அவன்.

''இதுலேயும் ஒரு நல்லது நடந்திருக்கு. நாம பேசின அத்தனையையும் அந்த முகம் ஒட்டுக் கேட்டிருந்தாலும், நாம, மேடம் நிக் உசுரோட இருக்காங்களா இல்லையா என்பது பற்றி எதையுமே பேசலே. என்னத்தையெல்லாம் அந்த ஆள் கேட்டிருந்தாலும், நல்ல வேளையா இதை அவன் கேட்டிருக்க முடியாது.''

''இருந்தாலும் ...'' என குறிப்பிட்டேன் நான். ''உன்னுடைய இந்த அதிமேதாவித்தனமான திட்டம் இப்போதுவரை முன்னேற்றமில்லாமத் தான் கிடக்கு. நிக் இறந்தாச்சு - இருந்தாலும் திடுக்கிடும் எந்தத் திருப்பமும் நிகழலியே!''

''இதுக்குள்ளே அது நடக்கும்னு நான் எதிர்பார்க்கலே. இருபத்து நாலு மணிநேரம் - நான் கெடு வெச்சது. நண்பா, என் கணிப்புகள் தப்பாப் போகாதபட்சத்துல, நாளை, சில விஷயங்கள் தலைதூக்கும். அப்படி நடக்கலேனா ஆரம்பம் முதல் கடைசி வரை நான் தப்பு என்பது ஊர்ஜிதமாயிடும். தபால் இருக்குல்லே! நாளைய தபால் மேல தான் நான் நம்பிக்கை வெச்சிருக்கேன்.''

மறுநாள் காலையில் மிகவும் அயர்ச்சியோடு நான் எழுந்தேன்... ஆனால் காய்ச்சல் விட்டிருந்தது. பசியாகவும் நான் உணர்ந்தேன்.

எனக்கும் பொய்ரெட்டுக்கும், காலை சிற்றுண்டி எங்களுடைய வரவேற்பறைக்கே கொண்டு வந்து தரப்பட்டது.

அவனுடைய கடிதங்களை அவன் வரிசைப்படுத்திக் கொண்டிருக்கும்போதே, ''வெல்...'' என சிறு கிண்டலாய் குறிப்பிட்ட நான், ''நீ என்னத்தை எதிர்பார்த்திருந்தாயோ, அதை, இந்தத் தபால் நிறைவேற்றிடுச்சா?'' என்றேன்.

அப்போதைக்கு இரண்டே இரண்டு கடிதங்களை மட்டும் பிரித்திருந்த பொய்ரெட் எனக்கு மறுபதில் தரவில்லை. தலைவிரித்தாடும் அவனுடைய ஹோதா குறைந்து அவன் அழுக்கி வாசிப்பதாய் உணர்ந்தேன் நான்.

எனக்கு வந்திருந்த தபால்களை நான் உரிக்க ஆரம்பித்தேன். முதல் கடிதம் ஓர் ஆன்மீகக் கூட்டம் பற்றியது. ''எல்லாம் தோத்துப் போச்சுனா நாம அருள்வாக்குக் கேட்கப் போயிடணும்னு நினைக்கிறேன். இறந்தவனுடைய ஆவி வந்து கொலைகாரனைப் பற்றி சாட்சி சொல்லும். ஆஹ்... மிகச்சிறந்த சாட்சியமா அது அமையஞ்சுடும்.''

தன் சிந்தனையகன்று, ''அதெல்லாம் ஒரு மண்ணுக்கும் உதவாது'' என முணுமுணுப்பாய் சொல்லிக் கொண்டான் பொய்ரெட். தொடர்ந்தான்: ''எந்தக் கை தன்னை சுட்டு வீழ்த்தியது என்பது மேக்கி பக்லேவுக்கே தெரியுமா என்பது சந்தேகந்தான். ஆவியா வந்து பேசக் கூடிய சந்தர்ப்பம் விளைஞ்சாலும் கூட அவங்களால நமக்கு உதவிகரமான தகவலைத் தர முடியுமா என்பது சந்தேகம் தான். ஏய்... இது முடியாத ஒண்ணு!''

''என்னதுடா அது?''

''நீ, செத்தவங்க வந்து முன்னாடி நின்னுப் பேசுவதைப் பற்றி சொல்லிக்கிட்டிருக்கும் போது - இதை நான் பிரிக்கிறேன் பாரு!''

அதனை என்பக்கமாய் தூக்கி எறிந்தான் அவன். திருமதி பக்லேயிடமிருந்து வந்திருந்த அது, பின்வருமாறு சென்றது:

திருமிகு பொய்ரெட்...

இங்கு நான் வீடு திரும்பியதும், என் துரதிர்ஷ்ட மகள், செயின்ட் லூ வந்திறங்கியதும் எழுதிப் போட்டிருந்த கடிதம் கிடைக்கப் பெற்றேன். இதில் உங்களுக்கு உதவும்படியாய் எதுவும் கிடையாது என்பது

ஒருபுறமிருந்தாலும் அதனைப் பார்க்க நீங்கள் விரும்பலாம் என நினைத்தேன் நான். உங்களுடைய கனிவுக்கு என் நன்றிகள்.

*உங்கள் உண்மையான*
*ஜீன் பக்லே.*

அதிலிருந்த இணைப்பு என்னுடைய தொண்டைக் குழிக்குள் ஒரு பெரும் பாறாங்கல்லையே கொண்டு வந்து அடைத்தது. அது, நடக்கவுள்ள துயரத்தைப் பற்றிய எந்த ஓர் அறிதலுமற்று, மிக சாதாரண அன்புக் கடிதமாய் பூத்திருந்தது :

*அம்மா!*

*நான் பாதுகாப்பாய் வந்து சேர்ந்தேன். அலுக்கல் குலுக்கற்ற சுகமான பிரயாணம். வந்து சேரும்வரை ரெண்டே ரெண்டு நபர்கள் தான் பெட்டியிலேயே இருந்தார்கள்.*

*இங்கு சீதோஷ்ணம் மிகவும் பாந்தமாய் உள்ளது. நிக், மிக நன்றாகவும் உல்லாசமாகவும் இருக்கிறாள் - ஆனால் கொஞ்சம் இருப்புக் கொள்ளாமல். இதைப் பார்க்கும்போது, அந்த அளவுக்கு பயமுறுத்தி எனக்கொரு தந்தியை அவள் ஏன் அனுப்பியிருக்க வேண்டும் என்று எனக்கு ஆச்சரியமாய் உள்ளது. செவ்வாய்க்கிழமையே வந்து சேர்ந்திருந்தாலும் ஒன்றும் பாதகம் இருந்திருக்காது.*

*வேறு ஒன்றும் இப்போதைக்கு எழுத இல்லை. பக்கத்து வீட்டுக் காரர்களோடு டீ அருந்தக் கிளம்புகிறோம். ஆஸ்திரேலியர்களாம். வாடகைக்கு இருக்கிறார்கள். அவர்கள் கனிவானவர்கள் என்கிறாள் நிக் - ஆனால் தாள முடியாத அளவுக்கு கனிவாம்! மிஸஸ் ரைஸும் மிஸ்டர் லாஸரஸும் தங்க வருகிறார்கள். லாஸரஸ் ஒரு கலைப்பொருள் வியாபாரி. இதை வாசலிலேயே இருக்கும் தபால் பெட்டியில் போட்டு விடுகிறேன். மற்றவற்றை நாளை எழுதுகிறேன்.*

*உங்களன்பு மகள்,*
*மேக்கி.*

*பின்குறிப்பு: எனக்கு தந்தியனுப்பியதில் காரணமிருக்கிறது என்கிறாள் நிக். டீ சாப்பிட்டதும் விளக்கமாய் சொல்வாளாம். துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கிறாள் - ஆயினும் ஏதோ ஒரு ரகசியத்தோடு.*

''இறந்துப் போனவளின் குரல்'' என்றான் பொய்ரெட், அமைதியாய். ''இது - நமக்கு எதையும் சொல்லவில்லை.''

''வாசலில் கேட்'டுக்கருகிலிருக்கும் தபால் பெட்டி'' என்றேன் நான், சுரத்தில்லாமல். ''அதில் தான் உயிலினையும் போஸ்ட் பண்ணியதாய் சொல்கிறார் திருவாளர் க்ராஃப்ட்.''

''அப்படித்தான் சொன்னார். யெஸ் - அப்படித்தான் சொன்னார்!''

''உனக்கு வந்திருக்கும் மற்ற கடிதங்கள்ல இண்டரஸ்டிங்கா எதுவும் வரலியா?''

''நத்திங் ஹேஸ்டிங்ஸ். நான் ரொம்ப உடைஞ்சுப் போயிருக்கேன். இருட்டுல இருக்கேன்டா. இன்னும், இன்னமும், நான் எதையுமே சரியா கண்டுபிடிக்கலே போல தெரியுது. அப்படினா - அப்படினா - இந்த மரண நாடகம் ... ஓஹ்...!''

இந்தத் தருணத்தில்தான் டெலிபோன் மணியடித்தது. பொய்ரெட் அதற்கு பதில் தர எழுந்து போனான். உடனடியாய் அவனது முகத்தில் ஒரு மாற்றம் விளைவதை நான் கவனித்தேன். அவனுடைய மாற்றம் வெளியே தெரியவராதபடி அவனால் கட்டுப்படுத்தப்பட்டாலும் அவனுடைய இன்ப அதிர்வு என் கண்களிலிருந்து தப்ப முடியாது அகப்பட்டுக் கொண்டது.

நடந்து கொண்டிருந்த டெலிபோன் சம்பாஷணைக்கு இவனிடமிருந்து எவ்வித பங்களிப்பும் அதிகம் தரப்படவில்லை. ஆகவே எதை பற்றிப் பேசப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை என்னால் பிரித்தறிய முடியவில்லை.

தற்சமயம் பேசியவருக்கு நன்றி சொல்லிக் கொண்டு ரிஸீவரைப் பொறுத்தியவன், நான் அமர்ந்திருந்த இடம் நோக்கி வந்தான். அவனது கருவிழிகள் கிளர்ச்சியில் மினுமினுத்துக் கொண்டிருந்தன. ''நண்பா... நான் உன்கிட்டே சொல்லியிருந்தேனில்லே?'' என முன்னுரை தந்தவன், ''இப்போதான் ஒண்ணொண்ணா நடக்க ஆரம்பிக்குது'' என்றான்.

''என்னது அது?''

''டெலிபோன்ல வந்தது சார்ல்ஸ் வைஸ். இன்னிக்குக் காலையில, தபால்ல, கடந்த பிப்ரவரி 25 தேதியிட்டு - மேலும் - அவருடைய உறவுக் காரப் பொண்ணு மிஸ் பக்லே கையெழுத்திட்ட உயில், அவருக்கு வந்து

சேர்ந்ததாம்.''

''என்னது? உயில்?''

''நிச்சயமா.''

''அது திரும்பக் கிடைச்சுடுச்சா?''

''ஆஹ்ஹா... அதுவும், அது கிடைக்க வேண்டிய மிகச் சரியான நேரத்துல...! ஆஹ்ஹா!''

''அவர் உண்மையாத்தான் நடந்துக்கிறார்னு நீ நினைக்கிறியா?''

''அல்லது, இத்தனை நாளும் கூட உயிலை அவர் அவர்கூடவே தான் வெச்சிருந்தார்னு நினைக்கிறேனா?! இதைத்தானே நீ கேட்க விரும்பறே? வெல்... கேஸின் வளர்ச்சியில் இதெல்லாம் இடை யிடையே எழுந்த சின்னச்சின்ன ஆர்வத்தைக் கிளறும் சங்கதிகள். ஆனா ஒரு விஷயம் மட்டும் பலிக்குது. மேடம் நிக் மரணமடைஞ்சா மாதிரி படுத்துட்டா, முக்கிய முன்னேற்றங்கள் கேஸ்ல ஏற்படும்னு சொன்னேன் - அவை ஆரம்பிச்சாச்சு!''

''அசாதாரணமான வகையில'' என வலு சேர்த்தேன் நான். ''அப்போ - உன் ஊகங்கள் சரி தான். இந்த உயில் தான் ஃப்ரெட்டரிக்கா ரைஸை சொத்துக்கான அடுத்த வாரிசா முன் நிறுத்தும் உயில்னு நினைக்கிறேன்.''

''மிஸ்டர் வைஸ் உயிலின் சாராம்சம் பற்றி மூச்சு காட்டலே. இந்த உயிலை சந்தேகப்படவும் இப்ப நமக்குக் காரணம் அகப்படலே, ஹேஸ்டிங்ஸ். இவ்வுயில், அவர் சொல்வதை வெச்சுப் பார்த்தா, எலென் மற்றும் அவளோட கணவனால சாட்சி செய்யப்பட்டிருக்கு.''

''ஸோ, நாம மறுபடியும் பழைய நிலைமைக்கே திருப்பப்பட் டிருக்கோம்'' என்றேன் நான். ''ஃப்ரெட்டரிக்கா ரைஸ்.''

''விளக்க முடியாதவள்!''

''ஃப்ரெட்டரிக்கா ரைஸ்'' - தொடர்பில்லாமல், இப்பெயரை நான் முணுமுணுத்தேன். ''வசீகரமான பெயர்.''

''ஃப்ரெட்டி அப்படினு அவங்க நண்பர்கள் வட்டம் கூப்பிடுவதை விட வசீகரமான பெயர்.''

இதற்கு ''ஃப்ரெட்டரிக்காவை சுருக்கிக் கூப்பிட வேற வழியே கிடையாது இல்லே...'' என்று குறிப்பு தந்தேன் நான். ''மார்குரெட்'னு எடுத்துக்கோ. இதை சுருக்கி ஒரு டஸன் பெயர்கள் தரலாம். மேக்கி,

மார்கெட், மாக்கு, மேட்கே...''

''நிஜந்தான். வெல், ஹேஸ்டிங்ஸ்... சில புது அத்தியாயங்கள் இடம்பெறத் துவங்கியிருப்பதுல, இப்ப உனக்கு சந்தோஷந்தானே?''

''பின்னே, இல்லாமலா! ஏய், சொல்லு. இதை நீ நடக்கும்னு கணிச்சியா?''

''நோ. இப்படியே நடக்கும்னு நூறு சதம் நினைக்கலே. சொல்லப் போனா, ரொம்பச் சரியா எனக்குள்ளே நான் எந்த விதமான முடிவையும் வரையறுத்து வைக்கலே. சில முடிவுகளை நாம முன்னாடி கொண்டு வந்து நிறுத்தினா, அந்த முடிவுகளுக்கான காரணங்கள் மறைந்திருக்க முடியாம வெளிப்படையா வந்தே தீரணும் எனும் இயற்கை விதியைத்தான் நான் எனக்கு அடிக்கோடிட்டுக் காட்டியிருந்தேன்.''

மிகவும் மரியாதையாய், ''யெஸ்'' என்றேன் நான்.

''அந்த டெலிபோன் மணி அடிச்ச போது நான் என்ன சொல்ல வந்தேன்?'' என சின்னதாய் யோசித்தான் பொய்ரெட். சில நொடிகள் போயின. ''ஆங்... யெஸ்... மேடம் மேக்கி எழுதியிருந்த அக்கடிதம். அதை மறுபடியும் ஒரு முறை பார்க்க நினைச்சேன். அதுல ஏதோவொண்ணு வித்தியாசமா எனக்குப்பட்டதா ஞாபகம்.''

நான் எங்கே போட்டிருந்தேனோ அங்கிருந்து அதையெடுத்து அவனிடம் தந்தேன்.

அவனுக்குள் மறுபடியுமொருமுறை அவன் அதைப் படித்துக் கொண்டான். நான் எழுந்து அறைக்குள் காலாற நடந்து, பின் ஜன்னலருகே ஆழ்ந்து நின்று கொண்டு, வளைகுடா நெடுகிலும் சீறிப்பாய்ந்துக் கொண்டிருந்த இயந்திரப் படகுகளைப் பார்த்த வண்ணமிருந்தேன்.

அப்போது திடீரென்று என்னை ஒரு கொக்கரிப்பு துணுக்குற வைத்தது. நான் திரும்பி சுற்றிவர பார்த்தேன். அங்கே பொய்ரெட் அவனுடைய முகத்தைத் தனது இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு முன்னும் பின்னுமாய் பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்தான். தப்பிப்பற்று அகப்பட்டுக் கொண்டு விட்ட பரிதவிப்பு அவனுடைய செயலிலிருந்தது.

''ஓஹ்!'' என்று உறுமினான் பொய்ரெட். ''இப்படியா ஒரு குருடனா நான் இருந்திருக்கணும்...?!'' என்று சொல்லிக் கொண்டான்.

''என்னடா விஷயம்?''

''சிக்கல்னு சொன்னேனில்லே, நான்? கடும் சிக்கலான சங்கதினு சொன்னேனில்லே? ஆஹ்! இது தான்டா மிக லகுவான என்பதன் முழு உதாரணம். அத்தனை ஸிம்பிள்! ஆனா, இந்த சுலபத்தன்மையை, இது வரை நான் பார்க்காம விட்டிருப்பது தான், ஓஹ், மன்னிக்கவே முடியாத ஒரு குற்றம்.''

''ஓ, பொய்ரெட். என்ன சக்தி திடீர்னு உன்னை இப்படி ஆட வெக்குது? முதல்ல நீ அமைதியாகு.''

''வெயிட், வெயிட். பேசாதே. எனக்குள்ளே உருவாகியிருக்கும் ஊகங்களை இப்போ நான் அடுக்கியாகணும். ஒழுங்கா, வரிசையா. அதிபுத்திசாலித்தனமான இப்புதிய கண்டுபிடிப்பை மனசுல வெச்சுக்கிட்டு என் அத்தனை ஐடியாக்களையும் நான் வரிசைக்கிரமமா புதுசா அடுக்கியாகணும்.''

அவனுடைய அத்தனை கேள்விகளுக்கும் மீண்டும் மூழ்கிப் போனவன், உதடுகள் மெல்ல அசைந்து படித்துக் கொணடேயிருக்க, அவையனைத்தையும் மறுபடியுமொரு முறை அமைதியாய் பரீட் சித்துக் கொண்டிருந்தான் பொய்ரெட். எல்லாம் விளங்கி விட்ட தோரணையில் ஓரிரு முறை தலையை ஒப்புதலாய் அசைத்துக் கொண்டான்.

பிறகு அக்கேள்விகள் அடங்கிய தாளினை மேஜையில் வைத்து விட்டு, நாற்காலியில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான். ஒரு வழியாய் அவன் தூங்க ஆரம்பித்து விட்டான் என்று தான் நான் நினைத்தேன்.

திடீரென்று நீண்ட பெருமூச்சு விட்டு விழித்துக் கொண்டான் அவன். ''யெஸ்!'' என்றான். ''ஆமாம். எல்லா ஊகங்களும் அழகழகா பொருந்தி நிக்குது. எனக்குப் புரியாத புதிர் போல பட்ட எல்லாமும்! அசாதாரணமா எனக்குத் தோன்றிய அத்தனையும்! அனைத்துக்கும் இந்த வழக்குல ஓரிடம் இருக்கத்தான் செய்யுது!''

''அப்படினா - உனக்கு எல்லாம் விளங்கிடுச்சுனு சொல்ல வரியா?''

''கிட்டத்தட்ட... எல்லாமும். இவ்வழக்கோடு சம்பந்தப்பட்ட எல்லாமும். சில விஷயங்களைப் பொறுத்தமட்டில் என்னுடைய கணக்குகள் மிகச்சரியா இருக்கு. இன்னும் சிலதுல உண்மையிலிருந்து

காத தூரம் விலகியிருக்கு. ஆனா இப்போ அத்தனையும் துல்லியமா விளங்கிடுச்சு. ஓ கே. இன்னிக்கு ரெண்டு கேள்விகளைத் தாங்கி நான் ஒரு தந்தியை அனுப்பப் போறேன் - ஆனா எனக்கு அவற்றுக்கான பதில்கள் முன்னாடியே தெரியும் - எல்லா பதிலும் இதுக்குள்ளே யிருக்கு!'' என்று மண்டையைத் தட்டிக் காட்டினான்.

''அந்த விடைகள் உன் கைகளை வந்தடையும்போது?'' - ஆர்வமாய் கேட்டேன் நான்.

அவன் துள்ளியெழுந்தான். ''நண்பா... உனக்கு நினைவிருக்கா? மேடம் நிக் அவங்க வீடான கடைசி வீட்டுல ஒரு நாடகம் நடத்தணும்னு பிரியப்படுவதா சொன்னாங்க? இன்றிரவு, அப்படி ஒரு நாடகத்தை நாம கடைசி வீட்டுல நடத்திக் காட்டப்போறோம். ஆனா அது ஹெர்குல் பொய்ரெட் தயாரித்தளிக்கும் நாடகமா இருக்கும். மேடம் நிக்குக்கு அதுல நடிக்க ஒரு முக்கிய பாத்திரம் உண்டு.'' இப்போது திடீரென்று முகஞ்சுளித்துப் போனான் அவன். ''விளங்குதா ஹேஸ்டிங்ஸ். நாடகத்துல ஒரு பேய் வரும். ஆமாம், பேய். கடைசி வீடு ஒரு பேயைப் பார்த்தது கிடையாது, இல்லையா? இன்னிக்கு ராத்திரி அந்தக் குறை போகும். ம்ம், திறக்காதே'' - நான் எதையோ பேச முன் வந்தபோது சொன்னான் - ''மேற்கொண்டு நான் எதையும் சொல்வதற் கில்லை. இன்னிக்கு ராத்திரி, ஹேஸ்டிங்ஸ், நாம திட்டமிட்டிருந்த ஹாஸ்யத்தை நடத்திக் காட்டிடுவோம் - அப்படியே உண்மையையும் தோலுரிச்சுக் காட்டிடுவோம். ஆனா, இப்போ, நிறைய வேலைகள் பண்ண வேண்டியிருக்கு - நிறைய.''

அறையிலிருந்து அவசரமாய் வெளியேறினான் அவன்.

*அத்தியாயம் 19*

# பொய்ரெட் தயாரித்தளித்த ஒரு நாடகம்

**க**டைசி வீட்டில் அன்றிரவு கூடியவர்களின் கூட்டம், ஆர்வத்தோடு கூடிய வித்தியாசமான ஒன்றாய் அமைந்தது.

அன்று முழுவதும் நான் பொய்ரெட்டைக் காணவேயில்லை. டின்னருக்குக் கூட அவன் வெளியே எங்கேயோ சாப்பிடப் போய் விட்டான், ஆனால், கடைசி வீட்டில் நான் ஒன்பது மணிக்கு இருந்தே ஆக வேண்டும் என்ற ஒரு குறிப்பினைத் தவறாது எனக்காக விட்டு வைத்திருந்தான். ரொம்ப அலங்காரமெல்லாம் தேவையில்லை என்ற அறிவுறுத்தலும் அதிலிருந்தது.

நடந்த அத்தனையும் கோமாளித்தனமாய் வந்து போன ஒரு கனவாய் தான் என்னுள் பதிந்துள்ளது.

நான் வந்து சேர்ந்ததும் முன்னறைக்கு போகும்படி கேட்டுக் கொள்ளப்பட்டேன். அங்கே நுழைந்து சுற்றும்முற்றும் பார்த்த போது தான், பொய்ரெட்டின் பட்டியலிலிருந்த ஒன்றிலிருந்து பத்து வரையினாலான அனைவரும் அங்கு வந்து கூடியிருப்பது தெரிந்தது. (பத்து மட்டும் இல்லை!)

சொல்லப்போனால், நடக்கவியலாத மிஸஸ் க்ராஃப்ட் கூட அவருக்கே உரிய மருத்துவ நாற்காலியில் வந்து அங்கு அமர்ந்திருந்தார்.

''இது ஒரு மகா ஆச்சரியம், என்ன சொல்றீங்க?'' என்ற அவர் குதூகலமாயிருந்தார். ''இது எனக்கு ஒரு சிறந்த ஆறுதலா அமைஞ் சிருக்கு. யெஸ். எனக்கு இப்பவே இந்த நோஞ்சான் சேரிலிருந்து எழுந்து குதிக்கணும் போல வெறி உண்டாகுது. எல்லாம் மிஸ்டர்

பொய்ரெட்டின் உபயம். வாங்க, என் பக்கத்துல உட்கார்ந்துக்குங்க, கேப்டன் ஹேஸ்டிங்ஸ். நான் கூட, இதுக்கெல்லாம் எதுக்காக நான் வரணும்னு நினைச்சேன்... மிஸ்டர் வைஸ்தான் நான் வந்தே ஆகணும்னு அடம்...!''

''மிஸ்டர் வைஸ்?'' - ஆச்சரியப்பட்டுக் கேட்டேன்.

அங்கிருந்த அலமாரிக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார் சார்ல்ஸ் வைஸ். பொய்ரெட் அவருக்குப் பக்கத்தில் நின்று கொண்டு, மிகவும் விசுவாசமாய், தணிந்த குரலில், அவரோடு என்னவோ பேசிக் கொண்டிருந்தான்.

நான் அறையை ஒரு முறை சுற்றிப் பார்த்தேன். ஆமாம், அவர்கள் அனைவரும் இருக்கிறார்கள். நான் உள்ளே அனுமதிக்கப்பட்டு நுழைந்ததும், கதவுக்குப் பக்கத்திலிருந்த ஒரு நாற்காலியில் எலென் உட்கார்ந்துக் கொண்டாள். அங்கேயே ஒரு நாற்காலியில், மெனக்கெட்டு நெட்டைக்குத்தலாய் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, மூச்சு விட சிரமப்படுபவனைப் போல மலங்கமலங்க இரைத்தபடி, அவளுடைய கணவன். இருப்புக்கொள்ளாத குழந்தை ஆல்ஃபிரட், அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நடுவில் விடாப்பிடியாய் திணித்து விடப்பட்டிருந்தது.

ஏனைய அனைவரும் அங்கிருந்த பெரிய டைனிங் டேபிளைச் சுற்றிலும் அமர்ந்திருந்தனர். ஃப்ரெட்டரிக்கா, அவளுடைய கறுப்பு உடையில்; அவளுக்கருகில் கமாண்டர் சாலஞ்சர். மேஜையின் அடுத்த பக்கத்தில் வாலிபன் க்ராஃப்ட். தற்சமயம், ஒப்புதலான இறுதித் தலையசைப்போடு, மேஜையின் நடுநாயகமான நாற்காலியை அடைந்து உட்கார்ந்துக் கொண்டார். மூச்சு காட்டாமல், லாஸரஸுக்கு அருகில் போடப்பட்டிருந்த ஒரு நாற்காலிக்கு நழுவியிருந்தான் பொய்ரெட்.

தன்னைத் தானே நாடகத்தின் தயாரிப்பாளராய் பொய்ரெட் என்னிடம் சொல்லியிருந்த போதிலும், நாடகத்தில் முக்கிய பாத்திரம் எதையும் தாங்கிக் கொள்ள அவன் திட்டமிட்டிருக்கவில்லை. சார்ல்ஸ் வைஸ் தான் இதன் ஜவாப்தாரி என்று வெளிப்படையாய் தெரியுமாறு ஏற்பாடு செய்திருந்தது. இப்படி செய்து என்ன அதிசயத்தை வெளிப்படுத்த இந்த பொய்ரெட் காத்திருக்கிறான் என்பதில் எனக்கு ஆச்சரியம் மேலோங்கியிருந்தது.

இளைய வக்கீல் தொண்டையைச் செருமிக் கொண்டு எழுந்து நின்றார். எப்போதும் போலவே தான் அவர் இப்போதும் தோன்றினார் - ஜஸ்ட், எவ்வித ஒட்டுதலுமற்று, உணர்ச்சிக் கொந்தளிப்பெல்லாம் இல்லாது, சாதாரணமாய்.

''ஒருவகையில இது சம்பிரதாய ஏற்பாடெல்லாம் இல்லாத ஓர் அளவளாவல்'' எனத் துவங்கினார் : ''ஆனால் இதற்கான சூழ்நிலை கொஞ்சம் விசித்திரமானது. அஃப்கோர்ஸ்... என் உறவுக்காரப் பொண்ணு நிக் மரணமடைஞ்ச நிலையில இது நடத்தப்படுவதை சொல்றேன். அவ விஷம் வைத்துக் கொல்லப்பட்டுள்ளாள் என்பதில் சந்தேகம் கிடையாது. ஆகையினால் பிரேதப் பரிசோதனைத் தவிர்க்க முடியாத ஒன்று. இதெல்லாம் போலீஸ் சமாச்சாரம்... ஒரு வக்கீலா இதுக்குள்ளே மூக்கை நுழைக்க எனக்கு அதிகாரம் கிடையாது; அப்படி நான் செஞ்சா அதைப் போலீஸ் விரும்பவும் செய்யாது.

வழக்கமா, மரணமடைந்தவருடைய உயிலாகப்பட்டது, அவரது இறுதிச் சடங்குகள் முடிந்த கையோடு பப்ளிக்கா வாசிக்கப்படும். ஆனா, இந்த கேஸ்ல சற்று வித்தியாசமா, உயிலின் சாராம்சத்தை இறுதிச்சடங்குகள் முடிவதற்கு முன்னரேயே படித்துக் காட்டிவிட நான் முடிவு செஞ்சிருக்கேன். சொல்லப்போனா, இங்கேயே, இப்போதே படித்து விடுவது தான் என் திட்டமே. நான் குறிப்பிட்டது போல, சூழ்நிலை, வழக்கமா இல்லாம அசாதாரணமா அமைஞ்சு, இப்படி நாம சற்று வித்தியாசமா செயல்படுவதைத் தவிர்க்கவியலாததா ஆக்கியிருக்கு.

இந்த உயிலே கூட என்னுடைய கைக்கு அசாதாரணமான முறையில தான் வந்து சேர்ந்தது. பிப்ரவரினு தேதியிடப்பட்டிருந்த போதிலும் இது என்னை வந்தடைந்தது என்னவோ இன்னிக்குக் காலையில தான். எப்படியிருந்தாலும், இந்த உயில், சந்தேகத்துக்கு அப்பாற்பட்டு, என்னுடைய உறவுக்காரப் பொண்ணான நிக்கின் கையெழுத்துல தான் எழுதப்பட்டிருக்கு. இதுல எனக்கு துளியும் ஐயம் கிடையாது. சட்டப்படியான தஸ்தாவேஜுவா இது இல்லாவிட்டாலும் கூட, மிகச்சரியா சாட்சியளிக்கப்பட்டிருக்கு.''

இங்கு சற்று நிறுத்திக் கொண்டு தொண்டையைச் செருமிக் கொண்டார் அவர்.

ஒவ்வொரு கண்ணும் அவர் மீதே பதிந்துக் கிடந்தன.

நீளமான ஓர் உறைக்குள்ளிருந்து ஒரு தாளினை உருவினார். கடைசி வீட்டிலிருந்த நோட்டுப் புத்தகத்தின் தாள் அது என்றும் அதில் என்னவோ எழுதப்பட்டிருந்தது என்றும், பார்த்துக் கொண்டிருந்த எங்களனைவருக்கும் விளங்கியது.

''ரொம்ப சின்னது'' என்ற வைஸ், அப்போது தேவையான அமைதியைக் காத்தார். பின், படிக்கத் துவங்கினார் :

**"இது மக்தலா பக்லேயின் கடைசி உயில் மற்றும் சொத்துப் பத்திரம். எனது இறுதிச் சடங்குகளுக்கு ஆகும் அனைத்து செலவினையும் ஏற்றுக் கொண்டு முடிக்க எனது உறவான சார்ல்ஸ் வைஸை நியமிக்கிறேன். இதற்கு பிறகு எனக்கு உள்ள அத்தனை சொத்துகளையும் ... என் அப்பாவான பிலிப் பக்லேவுக்கு செய்த உதவிகள் மற்றும் சேவை களுக்காக, மிகுந்த நன்றியோடு செய்யும் ஒரு கைமாறாக எண்ணி, எத்தனை கொடுத்தாலும் தகும் எனும் நிலையில் ... திருமதி மில்டிரட் க்ராஃப்ட்டுக்கு எழுதித் தருகிறேன்.**

***கையொப்பம் : மக்தலா பக்லே***

***சாட்சிகள் : 1. எலென் வில்ஸன் 2. வில்லியம் வில்ஸன்."***

மூர்ச்சையாகிப் போனேன் நான்! அப்படியே தான் மற்றவர்களும் ஆனார்கள் என்றே கருதுகிறேன். படித்ததை உளமார உணர்ந்து கொண்டவரைப் போல ஆமோதிப்பாய் தலையாட்டிக் கொண்டிருந்தார் மிஸஸ் க்ராஃப்ட்.

''இதெல்லாம் உண்மையே'' என்றார் அவர், சாந்தமாய். ''பிலிப் பக்லே அப்ப ஆஸ்திரேலியாவில இருந்தார். வெல்... அந்த சங்கதிகள்ல எது பற்றியும் நான் பேசப் போவது கிடையாது. அது ஒரு ரகசியமா இருந்தது... ரகசியமாவே இருந்து விடுவதே நல்லது. அவளுக்கும் இது தெரியும். நிக்'கை சொல்றேன். அவ அப்பா அவகிட்டே சொல்லி யிருக்கணும். நாங்க இங்கே இந்த இடம் தான் வந்தோம் - ஏன்னா, இந்த இடம் எப்படிப்பட்டதுனு பார்ப்பதற்காக. பிலிப் பக்லே பேசிக்கிட்டேயிருந்த இந்த கடைசி வீட்டின் மீது எனக்கு எப்பவுமே ஓர் ஆர்வ உந்துதல் இருந்துக்கிட்டேயிருந்தது. இதெல்லாமும் அந்த அருமையான பொண்ணுக்குத் தெரிஞ்சேதானிருந்தது... ஆனாலும்

பாவம் அவளால எங்களுக்குப் போதிய மட்டும் விசுவாசம் காட்ட முடியலே. கடைசியா, நாங்க அவளோட வந்து தங்கியே ஆகணும்னு முடிவு செஞ்சா - ஆமாம். ஆனா அப்படி வந்து ஓசியில தங்க எங்களுக்கு மனமொப்பலே. அவளோட வீட்டுல வந்து ஒரு பைசா வாடகை தராம வாழ்ந்தாதான் ஆச்சுனா. பின்னாடி வேற எந்த பேச்சும் வந்துடக் கூடாதேனு நாங்க வாடகையா ஒரு தொகையைத் தர முன் வந்தோம் - தந்தோம் - ஆனா அவ திருப்பிட்டா. அதுக்கெல்லாம் மேல, இப்போ - இது! உலகத்துல நன்றி விசுவாசமெல்லாம் செத்தே போயிடுச்சுனு எவனாவது ஒப்பாரி வெச்சான்னா - வெல், அவனுங்க சொல்வது தப்புனு நான் மல்லுக்கு நிப்பேன்! இது, நன்றிக்கடன்னா என்னனு நிரூபிக்குது!''

அங்கு இன்னமும் ஆச்சரியத்தால் அறையப்பட்டிருந்த அமைதி நிலவிக் கொண்டிருந்தது. பொய்ரெட், வைஸை நோக்கிப் பார்த்தான்.

''இப்படிதான்னு உங்களுக்கு ஏதாவது ஊகமிருந்ததா?''

வைஸ் மறுப்பாய் தலையசைத்தார். ''பிலிப் பக்லே ஆஸ்திரேலியாவில இருந்தார் என்கிற அளவுக்கு எனக்குத் தெரியும். ஆனா அங்கே அவருக்கு அபகீர்த்தி நடந்த மாதிரியெல்லாம் நான் எந்தப் புரளியையும் கேட்டதில்லே.''

இப்போது, அவன், விசாரிக்கும் தொனியில் மிஸஸ் க்ராஃப்ட்டைப் பார்த்தான்.

''நோ. உங்களால என்கிட்டேயிருந்து ஒரு சில்லு வார்த்தையைப் பிடுங்க முடியாது. நான் இதுவரைக்கும் அதுபற்றி ஒரு வார்த்தை பேசினவ கிடையாது - இனியும் பேசப்போவதில்லை. ரகசியம் - என்னோடே, என் கல்லறைக்குப் போகும்.''

வைஸ் எதுவும் சொல்லவில்லை. அவர் சாந்தமாக பென்சிலால் மேஜையைத் தட்டியபடி உட்கார்ந்திருந்தார்.

''மிஸ்டர் வைஸ்...'' என்றழைத்தபடி தனது இருக்கையில் முன் வளைந்து வந்த பொய்ரெட் கேட்டான்: ''அவங்களுக்கு அடுத்த உரிமையுள்ள நபரா, இப்போ நீங்க இந்த உயிலுக்காகப் போராடலாம்னு கருதறேன். எனக்குத் தெரிஞ்சு, உரிமை கொண்டாட, ஏகப்பட்ட சொத்து இப்ப தயாரா காத்திருக்கு. இப்படி ஒரு நிலைமை, உயில் எழுதப்பட்டபோது கிடையாது.''

வைவஸ் அவனைக் கடுமையாய் முறைத்தார். "இந்த உயில் குற்ற மற்றது. பூரணமாய் செல்லுபடியாகக் கூடியது. தன்னுடைய சொத்தைத் தனது விருப்பத்தக்கேற்றாற் போல நிக் செய்திருக்கும் ஏற்பாட்டுக்குப் போட்டாபோட்டியா நிற்க நான் கனவு காணக் கூடாது."

"நீங்க நிஜமாவே ஒரு நேர்மையானவர்" - அனுபவித்து சொன்னார் மிஸஸ் க்ராஃப்ட். "இதெல்லாம் உங்க யோக்கியதையைத் தடம்புரளப் பண்ணிடாது என்பது நிச்சயம்."

அவரைப் பற்றி அம்சமாய் கூறப்பட்ட இந்தக் குறிப்புக்கு சற்றே லஜ்ஜையாகி நெளிந்தார் வைவஸ்.

"வெல்... அம்மா" என்ற பையன் க்ராஃப்ட்டின் குரலில் தெறித்த குதூகலத்தை அவனால் மறைக்க முடியவில்லை. "இது ஓர் ஆச்சரியம். ஆச்சரியமே! என்ன பண்ணப் போறா எனும் விஷயத்தை நிக் என்கிட்டே சொல்லவே இல்லை."

"என்னருமை பொண்ணு" - கைக்குட்டையைக் கண்ணுக்குக் கொண்டு போனபடி சொன்னார் மிஸஸ் க்ராஃப்ட். "பரலோகத்தி லிருந்து இங்கே நடந்துக்கிட்டிருப்பதையெல்லாம் அவ பார்க்கணும்னு ஆசைப்படறேன். பார்த்துக்கிட்டே கூடயிருக்கலாம் - யாருக்குத் தெரியும்?!"

"பார்க்கச் செஞ்சுடலாம்" என்றான் பொய்ரெட்.

சொன்ன அவனுக்கு அப்போது திடுமென்று ஏதோ ஓர் ஐடியா உதித்து விட்டதைப் போல இருந்தது. அறையை ஒரு முறை சுற்றும்முற்றும் பார்த்தான். "ஓர் ஐடியா! நாம இப்போ இங்கே ஒண்ணா இந்த டேபிளைச் சுற்றிவர உட்கார்ந்துக்கிட்டிருக்கோம். ஓ கே. ஓர் ஆவி அழைப்புக் கூட்டத்தை நடத்திப் பார்த்துடலாம்."

"ஆவி அழைப்பு?" - திடுமென அதிர்ச்சியான குரலில் கேட்டார் மிஸஸ் க்ராஃப்ட். "ஆனா, அதெல்லாம் ..."

"யெஸ், யெஸ். அது அத்தனை சுவாரஸ்யமானதாயிருக்கும். ஒண்ணு தெரியுமா... இதோ இங்கிருக்கும் ஹேஸ்டிங்ஸுக்கு ஆவி களைத் துணையாய் கொண்டு உண்மையறியும் சக்தி மிக அதிகம். (என் தலையில் எதற்கு இதைப் பொருத்த வேண்டும், இந்தப் படுபாவி!) வேற்று உலகத்திலிருந்து செய்தியறிந்து தருவது. தனிப்பட்ட திறன்!

இப்போ இங்கேயிருக்கும் சூழ்நிலை அதுக்கு ரொம்ப சாதகமா இருப்பது போல எனக்குத் தோணுது. உனக்கும் அப்படித்தானேடா, ஹேஸ்டிங்ஸ்...?!''

''ஆமாம்'' என்றேன் நான், இதை நடத்திக்காட்டித் தானேயாக வேண்டும் என்ற வற்புறுத்தலோடு.

''குட். எனக்குத் தெரியும்! குயிக்... விளக்குகள்!''

அடுத்த நொடிகளில் எழுந்து விளக்குகளை அணைத்திருந்தான் அவன். ஒரு வேளை யாராவது இதனை எதிர்க்க முனைந்திருந்தால் அப்படி செய்யக்கூட எவ்வித அவகாசமும் தரப்படாமல், இந்த முழு ஏற்பாடும் குழுவின் மீது திணிக்கப்பட்டிருந்தது. சொல்லப்போனால், அந்த உயிலின் சாராம்சத்தின் மீதே, இன்னமும் இவர்களத்தனை பேரும் விழிபிதுங்கிக் கொண்டிருந்தார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

அறை அப்படியொன்றும் முழு இருட்டாகி விடவில்லை. திரைச் சீலைகள் விலக்கப்பட்டிருந்தன. ஜன்னல்கள் திறந்து விடப்பட்டிருந்தன. அது ஒரு கோடையிரவாயிருந்ததால் திறந்த ஜன்னல்களின் வழியாக மங்கிய ஒளி கசிந்துக் கொண்டிருந்தது. அதே இருட்டில், சில நிமிடங்கள் நாங்களனைவரும் அமைதியாய் உட்கார்ந்திருந்த பிறகு, என்னால் அங்கிருந்த தட்டு முட்டு சாமான்கள் நாற்காலிகள் இத்யாதி களின் இருப்பினைத் தோராயமாய் பார்க்க முடிந்தது. இப்போது மேற்கொண்டு என்னத்தை செய்வது என்பதில் நான் ஆச்சரியப்பட்டுக் கிடக்க... இதையெல்லாம் முன்கூட்டியே பாவி சொல்லாமல் விட்டு விட்டானே என மனசார பொய்ரெட்டைச் சபித்தேன்.

இருந்தாலும், என் கண்களைத் தற்போதைக்கு மூடிக் கொண்ட நான், குறட்டை விட்டுக் கொண்டிருப்பவனைப் போல ஒரு வித ஓசை யுடனான சுவாசிப்பைக் கையிலெடுத்துக் கொண்டேன்.

அப்போது ஓசையெழுப்பாது என் இருக்கை வரை வந்தான் பொய்ரெட். சற்று நொடிகளுக்குப் பிறகு தனது இருக்கைக்கே போய் விட்டான். ''யெஸ். அவன் ஆழ்நிலைக்குப் போய் விட்டான்! சீக்கிர மாகவே சங்கதிகள் துவங்கி விடும்!''

இருட்டில், ஒன்றும் செய்யாது, என்னவோ நடக்கப் போகின்றது என எதையோ எதிர்பார்த்தபடி உட்கார்ந்திருப்பதைப் போன்ற சுமை,

வேறிருக்க முடியாது. என் நரம்பதிர்வுக்குள் நான் வசமாக மாட்டிக் கொண்டு விட்டேன் என எனக்கு நன்றாக விளங்கியது - இப்படியே தான் ஏனையவர்களும் இருந்திருக்க வேண்டும். இந்த அழகில், மேற் கொண்டு என்ன நடக்கப் போகின்றது என்ற அரனும்புரனுமான ஊகமாவது எனக்கிருந்தது. இந்த முழு கூத்தின் நாடித்துடிப்பான சங்கதி எனக்குத் தெரியும். பாவம், அது தெரியாத மற்றவர்களின் கதி தான் என்னே!

இருந்தாலும் கூட, நாங்கள் கூடியிருந்த அறையின் கதவு இப்போது சன்னமாய் அசைந்து அசைந்து திறந்தபோது என் இதயம் துடித்தெழுந்து வாய்க்கு வந்தே விட்டது.

துளியும் ஓசையெழுப்பாது இது நிகழ்ந்தபடியால், மூச்சை நிறுத்திப் பார்க்கும் காட்சியாய் தான் அமைந்தது. அது மெதுவாய் திறந்து ஒருக்களித்து ஆகிவிட, பிறகு அவ்வளவுதான்... தொடர்ந்த சில நிமிடங் களுக்கு அப்படியே உறைந்தது நேரம்! அது பாதி திறந்து நின்றுவிட்ட காரணைத்தால் குளிர்ந்த காற்று உள்ளே நுழைந்து பரவுவது போல உணர முடிந்தது. எனக்குத் தெரிந்து, அது, கதவு திறந்ததால் உள்ளே வந்த குளிர் தோட்டத்துக் காற்று தானே தவிர வேறில்லை... ஆனாலும், அதை, நான் படித்த எல்லா பேய்க்கதைகளிலும் ஆவியின் வரவின் போது வர்ணிக்கப்படும் குளிர்க்காற்றாகவே தான் உணர முடிந்தது.

பிறகு நாங்களனைவரும் அதைப் பார்த்தோம்! கதவின் நுழைவாயி லில் சட்டம்போட்ட உருவாய் நின்றது, ஒரு நிழலுருவம். நிக் பக்லே...

ஓசையின்றி, மெதுவாய், கால் நடப்பதைக் காண முடியாதபடி, முன்னேறி வந்தாள் அவள். ஏதோ காற்றில் மிதக்கும் ஒரு பலூனைப் போல அவளது அருகாமை நெருங்கிக் கொண்டிருந்தபடியால், மனிதனற்ற ஒன்று என்று நம்புவதில் சிரமமே உண்டாகவில்லை.

இப்போது தான், எத்தனை அற்புதமான ஒரு நடிகையைக் கலை யுலகம் இது வரை இழந்துள்ளது என்பதை நான் உணர்ந்தேன். நிக், கடைசி வீட்டில் போடப்படும் நாடகத்தில் ஒரு பாத்திரத்தை ஏந்தி நடிக்க ஆவல் கொண்டிருந்தவள். இப்போது அதைப் பண்ணிக் கொண்டிருக்கிறாள். தனது தாகத்தை அடியாழம் வரை அவள் தணித்துக் கொண்டிருப்பதாய் பட்டது எனக்கு. அத்தனை துல்லியமாய்

ப்ங்களித்துக் கொண்டிருந்தாள் அவள்.

அவள் அறைக்குள் மிதந்து வந்து கொண்டிருந்தாள் - சூழ்ந்திருந்த அமைதி முற்றிலுமாய் குலைந்தது.

மருத்துவ நாற்காலியிலிருந்து இப்போது தாள முடியாத கதறல் விளைந்தது. மிஸஸ் க்ராஃப்ட்டிடமிருந்து விளைந்த ஒரு வகை எருக்களிப்பு போன்ற குமட்டல். நடுநடுங்கிப் போனதால் பிரார்த்தனை - சாலஞ்சரிடமிருந்து. சார்ல்ஸ் வைவல் அவரது நாற்காலியை சற்றுப் பின்னுக்குத் தள்ளிப் போட்டுக் கொண்டதாய் ஞாபகம். வாஸரஸ் தன்னிருக்கையில் இருந்தபடியே முன்னால் வளைந்து வந்தார். ஃப்ரெட்டரிக்கா மட்டும் தான் எவ்வித ஓசையோ நகர்த்தலோ இன்றி உட்கார்ந்திருந்தது.

தற்சமயம் ஒரு பெரும் அலறல், கூக்குரல், அறையை ஆக்கிரமித்தது. எலென் நாற்காலியிலிருந்து எழுந்தே விட்டாள்.

''இது அவ!'' என கிறீச்சிட்டாள். ''அவ திரும்பி வந்துட்டா. அவ நடக்கறா! கொலையானவங்க நடப்பாங்கனு சொல்லியிருக்காங்க! இது அவ தான்! இது அவ தான்!''

பிறகு, ஒரு சிறு க்ளிக் ஓசையோடு, விளக்குகள் ஒளி கொண்டன.

சர்க்கஸில் சிங்கத்துக்கு முன்னால் சாட்டை சொடுக்கிக் கொண்டு வெற்றிகரமாய் நிற்கும் மாஸ்டர் போல அங்கே நின்றுக் கொண்டிருந் தான் பொய்ரெட். நிக், அவளுடைய வெண்ணிற மேனி உடையோடு, அறையின் நடுவில் நின்று கொண்டிருந்தாள்.

அங்கு அப்போது முதலில் பேசியது ஃப்ரெட்டரிக்கா. அவள் நம்பகத்தன்மை கொஞ்சமும் அற்ற தினுசில் தனது கையை முன்னுக்கு நீட்டினாள் - தனது தோழியை நோக்கி.

''நிக்'' என்றாள் அவள். ''நீ - நீ, நெசமாவே!''

ஏறத்தாழ வார்த்தையே எழாத கிசுகிசுப்பாய் தான் ஃப்ரெட்டரிக் காவால் பேச முடிந்தது.

நிக் சிரித்தாள். முன்னேறினாள். ''ஆமாம்'' என்றாள். ''நான் நெசமே தான். என் தந்தைக்கு நீங்க செஞ்ச அத்தனை உபகாரங்களுக்கும் மன மொப்பிய தேங்க்ஸ் மிஸஸ் க்ராஃப்ட். ஆனா, இந்தத் திருப்பத்தால, அந்த உயில் விட்டுத்தரும் அத்தனை சொத்துகளையும் தற்போதைக்கு உங்களால கொண்டாட முடியாது!''

''ஓ, மை காட்'' என மூச்சடைத்துப் போனார் மிஸஸ் க்ராஃப்ட். ''ஓ மை காட்'' என்று மீண்டும் தன்னிச்சையாய் கதறியவர் தனது இருக்கை யிலேயே முன்னும் பின்னுமாடி திருகிப் போனார். ''பெர்ட்... மொதல்ல என்னை இங்கிருந்து கூட்டிட்டுப் போயிடு. கூட்டிட்டுப் போயிடுடா, ப்ளீஸ். இத்தனையும் நாடகம். நாடகம் - ஆமாம், நாடகம். ஓஹ்.''

''ஆனா ஒரு வகை விசித்திரமான நாடகம்'' என புன்னகைத்தபடி சொன்னாள் நிக்.

கதவு திறந்தது. அதன் வழியே காற்று போல ஓசையின்றி ஒரு மனுஷன் நுழைந்து முன்னேறினார். யாரது என கவனித்தேன். ஓ... இன்ஸ்பெக்டர் ஜேப். சீக்கிரமாகவே அவர் பொய்ரெட்டைப் பார்த்து, தனக்கு எதிலோ பூரண திருப்தி உண்டாகியாயிற்று என உணர்த்துவது போல ஒப்புதலாய் தலையசைத்தார் அவர். இதற்கு பிறகு அவர் முகம் நெருப்பாய் தகதகத்தது. நோயாளி நாற்காலியில் சுருண்டுக் கொண் டிருந்த உடலைக் குறி வைத்து வேகமாய் சென்றார் அவர்.

அங்கு, ''ஹலோ, ஹலோ, ஹலோ...'' என கண்ணைகல ஆனார் இன்ஸ்பெக்டர். ''என்னது இது?'' என்றார் நம்பயியலாதவராய். ''என் ஓல்ட் ஃப்ரண்ட்! ஆஹ்ஹா...! மில்லி மெர்ட்டான். த க்ரேட்! மறுபடியும் உன் வாலை அவுத்து விட்டு ஆடியிருக்கியா, டியர்?''

இதற்கு மிஸஸ் க்ராஃப்ட்டாய் கிடந்தவரிடமிருந்து உண்டாகிக் கொண்டிருந்த கிறீச்சிடும் கதறல்களையெல்லாம் மூட்டை கட்டி ஓரந்தள்ளி விட்டு கூடியிருந்த ஏனையவரை நோக்கி திரும்பிய இன்ஸ்பெக்டர் ஜேப் பேசினார்: ''இது வரை நாம் சந்தித்தேயிராத மகா புத்திசாலியான ஏமாற்றுப் பேர்வழி. த க்ரேட் மில்லி மெர்ட்டான்! இதுங்க போன கார் விபத்தாகிய சங்கதியெல்லாம் எங்களுக்கும் தெரியும். ஆனா பார்த்தீங்களா... முதுகெலும்பு உடைஞ்சு நகர முடியாம ஆனா கூட அவளோட ரத்தத்துல ஓடும் ஏமாற்றும் தொழில் மட்டும் ஓயவே இல்லே! இவ ஒரு நடிகை தான்... ஊஷ், கை தேர்ந்த நடிகை...!''

''அந்த உயில் ஒரு பொய் உயிலா?'' - பட்டென்று கேட்டார் வைஸ். குரல் முழுவதும் ஆச்சரியம் சுமந்திருந்தார் அவர்.

''பின்னே! அது ஒரு பொய் உயிலே தான்'' என்றாள் நிக் கடுமையாய். ''அது போல ஒரு பைசா பெறாத உயிலை நான் எழுதுவேன்னு நீ

நினைச்சியா? கடைசி வீட்டை நான் உனக்கு எழுதி வெச்சிருக்கேன் சார்ல்ஸ்... அது தவிர்த்த ஏனைய அத்தனையையும் ஃப்ரெட்டரிக்கா வுக்கு.''

பேசிக்கொண்டே நடந்தவள், தற்சமயம் அவளது நண்பனுக்கு பக்கத்தில் போய் நின்றுக் கொண்ட அதே கணத்தில், அது நடந்தது.

ஜன்னலிலிருந்து வெடித்தெழுந்த ஒரு நெருப்புக் கங்கு... அதனால் விளைந்த குண்டொன்று பாய்ந்து சீறும் ஓசை. பிறகு மறுபடியும் இன்னொன்று; உடனடியாகவே உறுமலாய் அடங்கும் ஓசையும் விழுந்து விடும் அரவமும் - வெளியிலிருந்து.........

இவற்றையெல்லாம் தொடர்ந்து, தனது கையிலிருந்து ஒழுகும் ரத்தவீழ்ச்சியோடு, ஃப்ரெட்டரிக்கா....

## அத்தியாயம் 20

# "பத்து"

எல்லாமும் அத்தனை சடுதியில் நடந்து முடிந்துவிட்டபடியால், அங்கு என்ன நடந்தது என்பது, ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது.

பிறகு, வெடிக்கும் ஆச்சரிய எக்காளத்தோடு, ஜன்னல் நோக்கி ஓடினான் பொய்ரெட். சாலஞ்சரும் கூட.

சில கணங்களுக்குப் பின் அவர்களுடன் ஒரு நொண்டி மனிதனையும் சுமந்துக் கொண்டு இருவரும் உள்ளே நுழைந்திருந்தனர். அவனை அப்படியே அங்கிருந்த ஒரு கை வைத்த நாற்காலியில் இறக்கி இருக்க விட்டு அவர்கள் நகர்ந்தபோது, தெரிந்த அவனுடைய முகத்தைக் கண்ட நான் அப்படி ஒரு கதறலை வெளியிட்டு விட்டேன்.

''இந்த முகம் - நான் ஜன்னலில் பார்த்த அதே முகம்... ... ...''

முந்தைய நாள் மாலை எங்களை ஜன்னலின் வழியே கவனித்துக் கொண்டிருந்த முகம் இது. உடனடியாய் நான் அடையாளம் கண்டு கொண்டு விட்டேன். அது ஒரு மனித முகமே அல்ல என்று நான் சொன்னதை, இந்த பொய்ரெட் மிகவும் மிகைப்படுத்தி சொல்லப் படும் ஒன்றாய் கருதியதைக் கூட, இப்போது நான் நினைவுகூர்ந்தேன். இத்தனையிருந்தும், அந்த முகத்தில் இன்னும் கூடுதலாய் இருந்த ஏதோவொன்று எனக்குள் உருவாகியிருந்த இவ்வகை அவன் பற்றிய பதிப்பினை மேலும் வலுவாக்கியளது.

அது ஒரு தொலைந்த முகம் - சாதாரண மனிதத்திலிருந்து பிடுங்கி எறியப்பட்டு விட்ட மர முகம். வெளிறிப்போய், த்ராணியத்தனையும் இழந்து, சீரழிந்து கிடந்த முகம். அது ஜீவனுள்ள முகம் கிடையாது - அதனையிழந்த முகமூடி. உள்ளிருக்கும் ஆன்மா எங்கோ பறந்துபோய் விட்ட நிலையில் களையிழந்து விட்ட - பிரேத முகம்.

இதன் அருகில் ஒரு ரத்த ஓடை வழிந்துக் கொண்டிருந்தது. இது இருந்த நாற்காலிவரை மெள்ள வந்திருந்த ஃப்ரெட்டரிக்கா, அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

பொய்ரெட் இடைபுகுந்து அவரை விசாரிததான்: ''அடிபட்டிடுச்சா, மேடம்?''

அவள் மறுப்பாய் தலையசைத்தாள். ''புல்லட் என் தோளைக் கொஞ்சமாய் கிழித்துப் போனது. அவ்ளோதான்.''

தற்சமயம் அவனை நோக்கி தனது கையை மெல்லமாய் நழுவ விட்டவள், குனிந்து பார்த்தாள்.

அவனுடைய கண்கள் திறந்தன. அவனை அவள் கவனித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான். மன்னிப்புக் கேட்டுக் கதறும் ஒரு குழந்தையின் குரலில் அவன் திடுமென அலறினான்: ''ஓ. ஃப்ரெட்டரி... நான் இப்படி பண்ண நினைக்கவேயில்லே. நம்பு. இப்படி பண்ணுவதற்காக நான்வரவேயில்லே. நீஎப்பவுமே என்கிட்டே மரியாதையா தான் நடந்துக்கிட்டிருக்கே. ஆனா... ... ...''

''விடு ...''

அவனருகே குனிந்து உட்கார்ந்து கொண்டாள் அவள்.

''நான் இப்படி பண்ணணும்னே வரலே ...''

அவன் முகம் தொங்கிப் போனது. விளைந்துக் கொண்டிருந்த இவ்வாக்கியம் முடிக்கப் படவேயில்லை.

ஃப்ரெட்டரிக்கா நிமிர்ந்து பொய்ரெட்டைப் பார்த்தாள்.

''யெஸ் மேடம். அவர் காலமாயிட்டார்'' என்றான் அவன் மிருதுவாய்.

மெல்ல எழுந்துக் கொண்ட அவள், அவனைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தாள். ஒரு கையால் அவனுடைய நெற்றி முழுவதையும் வருடி விட்டாள் - அது பரிதாபத்தை விவரிப்பது போலிருந்தது. பிறகு பெருமூச்செறிந்த அவள் எங்கள் பக்கமாய் திரும்பிக் கொண்டாள். ''இது என் புருஷன்'' என்றாள் மெல்லமாய்.

''10'' - முணுமுணுத்தேன் நான்.

என் குறிப்பினைப் பிடித்த பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத் தான். ''யெஸ்'' என்றான் அவன் சன்னமாய். ''இதுல பத்தாவது நபர் உண்டுனு எனக்கு எப்பவுமே சந்தேகமிருந்தது. முதலிலிருந்தே

சொல்லிக்கிட்டிருக்கேன், இல்லையா?''

''இது என் புருஷன்'' என்றாள் ஃப்ரெட்டரிக்கா மீண்டும். சொன்ன அவளது குரல் விளக்கவொண்ணா அளவுக்கு அசதியிலிருந்தது. அவளுக்காக ஸாஸரஸ் இழுத்துப் போட்டுக் கொடுத்த நாற்காலிக்குள் தன்னை முழுவதுமாகப் புதைத்துக் கொண்டாள் அவள். ''உங்களுக்கு நான் எல்லாத்தையும் சொல்லணும் - சொல்றேன் - இப்பவே. அவர் - முழுக்க முழுக்க நடத்தைக் குறைந்தவர். போதை அடிமை. எனக்கும் போதை எடுத்துக்க கத்துத்தந்தார். இவரை விட்டுட்டு நான் விலகி வந்ததிலிருந்து அந்த அடிமைப் பழக்கத்திலிருந்து விடுபட நான் அத்தனை போராடிக்கிட்டிருக்கேன். என்னைப் பொறுத்தவரைக்கும், ஒருவழியா, அதிலிருந்து விடுபடுவதில் வெற்றியடைஞ்சுட்டேன்னு நான் நினைக்கிறேன். ஆனா அந்த விடுதலையயையடைவது - அத்தனை சிரமமாயிருந்தது. ஓ - அத்தனை சிரமம். போதையிலிருந்து விடுபட்டு வெளியேறுவது எத்தனை சிரமமென்பது ஒருவருக்கும் தெரியாது.''

''ஆனா இவரிடமிருந்து என்னால முழுக்க விடுதலையடைய முடியலே. திரும்பத் திரும்ப வருவார். பணம் கேட்டு பயமுறுத்துவார். சித்ரவதை செய்வார். ப்ளாக்-மெயில் வேற - நான் அவருக்குப் பணம் தர மறுத்தேன்னா, அவரை அவரே சுட்டுக்கிட்டு செத்துடுவார்! இது தான் அவர் கை ஆயுதம். இது கொஞ்ச நாள்ல நீர்த்துப் போனதும், என்னை சுட்டுடுவேன்னு ஆரம்பிச்சார். பாவம், இதுக்கெல்லாம் அவரே முழு காரணமும் கிடையாது. அவர் ஒரு வகை பைத்தியம் - கிறுக்கன்... ... ...''

''எனக்கென்னவோ இவர்தான் மேக்கி பக்லேவை சுட்டிருப்பாரோனு ஓர்எண்ணமிருக்கு. அவளைச்சுடணும்னு துப்பாக்கியைச்சுண்டியிருக்க மாட்டார், நிச்சயமா. அவளை நான்னு நினைச்சிருப்பார்.''

''இதையெல்லாம் நான் முன்னமேயே சொல்லியிருக்கணும்னு நினைக்கிறேன். ஆனா, சொல்லப்போனா, என் ஊகம் சரிதானானு எனக்கே தெரியாது. இதுக்கு நடுவுல, விளக்கங்கள் இல்லாம நிக் எதிர்கொண்ட அந்த விபத்துகள் - சுட்டது என் கணவரா இருக்க முடியாதுனு என்னை நினைக்க வெச்சுடுச்சு; முழுக்கவும் வெளியாளான ஒருத்தனாதான் இருக்கணும்னு முடிவு கட்ட வெச்சுது.

''அப்புறம் - ஒரு நாள் - பொய்ரெட் டேபிளிலிருந்த ஒரு கிழிஞ்ச துண்டு சீட்டுல இவரோட கையெழுத்தை நான் அடையாளம் கண்டேன். எனக்கு இவர் அனுப்பியிருந்த கடிதத்தின் ஒரு துண்டுப் பகுதி அது. உடனடியாகவே இந்த கேஸ்ல பொய்ரெட்டும் இறங்கி யிருக்கார் என்பது விளங்கிப் போயிடுச்சு.''

''அந்தக் கணத்திலிருந்து... கேஸ் முடிய அதிக காலமாகாது என்பதை நான் புரிஞ்சுக்கிட்டேன்.''

''ஆனா எனக்கு அந்த இனிப்புகள் பற்றி ஒன்னுமே விளங்கலே. இவர் நிக்கை விஷம் வைத்துக் கொல்லனும்னு நினைச்சிருக்கவே மாட்டார். இதுல இவருக்கு என்ன வகையான தொடர்பு இருக்க லாம்னும் என்னால கணிக்க முடியலே. இது எனக்குப் புதிர் - புதிர்.''

தன்னிரு கைகளால் முகத்தை மூடிக் கொண்டவள், சில நிமிடங்கள் கழித்து முகத்தைத் தூக்கி, பரிதாபம் மிக்க வகையில் முடித்தாள்: ''அவ்ளோ தான்... ... ...''

அத்தியாயம் 21

# பதினொன்றாவதாய் ஒருத்தன்

லாஸரஸ் அமைதியாய் நகர்ந்து அவள் பக்கத்தில் வந்தான். ''மை டியர்'' என்றான். ''மை டியர்.''

பக்கத்திலிருந்த அலமாரியை அடைந்த பொய்ரெட், அங்கிருந்து ஒரு ஒயின் பாட்டிலை எடுத்து அதில் கொஞ்சத்தைக் கோப்பை ஒன்றில் ஊற்றி ரைஸிடம் கொண்டு வந்து தந்தான். அவள் குடிக்கும்போது பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தான்.

கோப்பையைப் பிறகு அவனிடம் திருப்பித் தந்தவள் புன்னகைத்தாள். ''ஐ'ம் ஆல் ரைட்'' என்றாள். ''அடுத்து - அடுத்து நாம பண்ண வேண்டியது என்ன?''

கேட்டவள், ஜேப்பைப் பார்க்க அவரோ மறுப்பாய் தலையசைத்தார். ''நான் லீவுல இருக்கேன் மிஸஸ் ரைஸ். என் நெருக்கமான ஒரு பழைய நண்பனின் கோரிக்கைக்கு தலை வணங்கி மதிப்புக் கொடுத்து வந்தேன் - அவ்ளோ தான். செயின்ட் லூ பகுதி போலீஸ்காரங்கதான் இந்த கேஸைக் கையில வெச்சிருக்காங்க.''

தற்சமயம் பொய்ரெட்டைப் பார்த்தாள் அவள். ''மிஸ்டர் பொய்ரெட் செயின்ட் லூ நகரப் போலீஸா என்ன?''

''ஓ, நோ மேடம். நான் வெறும் ஓர் ஆலோசகன்... அவ்வளவே.''

''மிஸ்டர் பொய்ரெட்...'' என இப்போது அழைத்த நிக் கேட்டாள்: ''இதையெல்லாம் அப்படியே மூடிடக் கூடாதா என்ன?''

''அதையா நீங்க விரும்பறீங்க, மேடம்?''

''ஆமாம். பார்க்கப்போனா, இதுல அதிகம் இணைந்து நிற்கும் ஜவாப்தாரி ஆள் - நான் தான். என் மேல, மேற்கொண்டு எவ்வித விபத்துகளும் நேராது - இனிமேல்.''

''ஒத்துக்கறேன். இனிமே உங்க மேலே எவ்விதமான விபத்துகளும் நிகழ்த்தப்படாது. யெஸ்.''

''பின்னே என்ன? நீங்க மேக்கியைப் பற்றி யோசிக்கறீங்க. ஆனா, திரு பொய்ரெட், எதுவும் மீண்டும் மேக்கியை இந்த வாழ்க்கைக் குள்ளே கொண்டு வந்து போடாது! இதை நீங்க எல்லாரும் தெரிஞ்சுக்கிற மாதிரி பப்ளிக்கா ஆக்கினீங்கன்னா, பாவம், ஃப்ரெட்டரிக்காவுக்குத் தான் அதிகபட்ச சங்கடங்களை உருவாக்கித் தருவீங்க. அவளுக்கு நேர்ந்ததெல்லாம் பத்தாதா என்ன...?!''

''அவங்களுக்கு நேர்ந்ததெல்லாம் ரொம்ப அதிகம்னா சொல்ல வரீங்க?''

''பின்னே? என்ன பேசறீங்க நீங்க? ஆரம்பத்திலேயே நான் சொல்லி யிருக்கேன் - கடுங்கொடூரமான ஒரு கணவன் அவளுக்கு வாய்ச்சிருக் கான்னு! இன்னிக்கு ராத்திரி நிரூபணமா நீங்களே அவனைப் பார்த்துட் டீங்க - எத்தனை கேவலமானவன் அவன்னு! வெல், அவன் போயிட் டான். அதுவே நடந்துள்ள அனைத்தின் முடிவாகவும் இருந்துட்டுப் போகட்டும். இந்த போலீஸ்காரனுங்க, மேக்கியைச் சுட்டது யார் எனும் தேடுதலில் எப்படியோ தொலையட்டும். கடைசியில அவன் யார்னு அவனுங்க கண்டே பிடிக்க மாட்டாங்க. தட்ஸ் ஆல்.''

''ஆக, இதைத்தான் நீங்க ஒரு முடிவா முன் வைக்கிறீங்க, இல்லையா மேடம்? இதையெல்லாம் அப்படியே மூடிடக் கூடாதா...? ஆங்...?''

''யெஸ், ப்ளீஸ். ஓ ப்ளீஸ், ப்ளீஸ், டியர் பொய்ரெட்.''

பொய்ரெட் மெதுவாய் சுற்றிவர ஒரு முறை பார்த்து ஓய்ந்தான். ''இதுக்கு நீங்கள்லாம் என்ன சொல்றீங்க?''

ஒவ்வொருவரும் இதற்கு ஆலோசனை தந்தார்கள்.

''நான் இதுக்கு ஒத்துக்கிறேன்'' என்றேன் நான் - இப்பதிலுக்கு பொய்ரெட் என்னைக் கூர்மையாய் கவனித்துக் கொண்டிருந்தபோது.

''நானும்'' என்றது, வாஸரஸ்.

''இப்போதைக்கு செய்யத்தக்க ஒரே புத்திசாலித்தனம் இது'' என்றார் சாலஞ்சர்.

''இன்னிக்கு ராத்திரி இந்த ரூம்ல நடந்த அத்தனையையும் நாம எல்லாரும் மறந்துடுவோம்'' - இது தான் ஒரே தீர்வு என்ற ஸ்திரத் தன்மையோடு இது வந்தது வாலிப க்ராஃப்ட்டிடமிருந்து.

''நீங்க இப்படித்தான் சொல்வீங்க'' என இடைமறித்தார் ஜேப்.

''ஏனென்?''

''நானும் வில்லியமும் இதுக்கு எந்த முடிவையும் சொல்ல மாட்டோம் ஸார். இந்தக் குழப்பத்துல பேசாம இருப்பது தான் உசிதம்.''

''நீங்க, மிஸ்டர் வைஸ்?''

''இது போன்ற ஒரு சமாச்சாரத்தை சோத்துல மறைக்கும் பூசணிக்காயைப் போல அத்தனை சுலபமா செஞ்சுட முடியாது - கூடாது. நிஜங்கள், தெரிவிக்கப்பட வேண்டிய இடத்துல தெரிவிக்கப் படத்தான் வேண்டும்.''

''சார்ல்ஸ்!'' என இதற்கு அதிர்வாய் அலறினாள் நிக்.

''மன்னிச்சுடு நிக். இதை நான் சட்டரீதியாத்தான் பார்க்க முடியும்.''

திமிர் சிரிப்பினை உதிர்த்தான் பொய்ரெட். ''ஆக, நீங்க ஏழுல ஒண்ணா தனிச்சு நிக்கறீங்க. ஜேப் - பட்டும் படாம நழுவிடறார்.''

''நான் டியூட்டியில இல்லே. லீவு'' என்று இறுக்கமாய் சொன்னார் ஜேப். ''என்னை இதுல எவ்வகையிலும் சேர்க்க முடியாது.''

''ம். சார்ல்ஸ் மட்டும் தான் அனைவரது கருத்திலுமிருந்து விலகி நிற்கிறார் - சட்டத்தின் பக்கமா! ஒண்ணு தெரியுமா மிஸ்டர் சார்ல்ஸ் வைஸ் - நீங்க சிறந்த குணாதிசம் மிக்க ஆடவனுக்கோர் எடுத்துக் காட்டு, ஆங்!''

வைஸ் 'எப்படியிருந்தாலும் பரவாயில்லை...' எனும் போக்கில் விட்டேற்றித்தனமாய் தோள்களைக் குலுக்கிக் காட்டினார். ''போலீஸாம் என் பக்கம்தான், மிஸ்டர் பொய்ரெட். இதை சட்டத்தின் உதவி கொண்டு மட்டும்தான் கையாள முடியும் - கையாள வேண்டும்.''

''யெஸ் - நீங்க ஓர் உண்மை ஊழியன் - வக்கீல்! இப்படித்தான் சொல்வீங்க. நானும் உங்க பக்கம் தான். பலமற்ற மைனாரிட்டியா உங்க கட்சி இங்கே இருந்தாலும் - நானும் உங்க கட்சியே தான். நானும் உண்மையின் பக்கம் தான். யெஸ்.''

''மிஸ்டர் பொய்ரெட்'' என இதற்கும் அலறினாள் நிக். திக்கற்று விட்ட என்னவோ ஒரு பாவம் அவள் குரலில் இவ்விரு முறையும் தென்பட்டது.

''மேடம் - நீங்கதான் என்னை இந்த கேஸுக்குள்ளே இழுத்து வந்துப் போட்டீங்க. உங்க இஷ்டப்படிதான் நான் இந்த வழக்குக்குள்ளேயே விழுந்தது. இப்பப்போய் நீங்க என் வாயைக் கட்டிப் போட முடியாது.''

எனக்கு மட்டும் மிகப் பரிச்சயமான மிரட்டும் தொனியை அவன் குரல் இப்போது சூடிக் கொண்டது. அவன் சுட்டு விரல் அவன் நோக்கி நீண்டு குற்றஞ்சுமத்தும் பாணியில் சுட்டிக்காட்டிக் கொண்டுமிருந்தது.

சட்டென்று பொய்ரெட் ஆணையாய் சொன்னான் - சொன்னதை ஒருவரும் தட்ட முடியாத அதிகாரத்தில்: ''உட்காருங்க எல்லாரும். லிட்டவுன், ஐ லேப. நான் உங்க எல்லாருக்கும் சொல்றேன் - உண்மையை.''

மகுடிக்கு முன் நாகம் போல அவனுடைய அதிகாரம் மிகும் கட்டளைக்குக் கட்டப்பட்ட நாங்கள் அனைவரும் அப்படியப்படியே உட்கார்ந்து கொண்டோம். அவனது முகத்தையே கவனமாயும் ஆர்வமாயும் ஊடுருவிக் கொண்டிருந்தோம்.

''என்கிட்டே இங்கேயொரு பட்டியலிருக்கு - நடந்துள்ள கொலையுடன் தொடர்புள்ள நபர்களடங்கிய பட்டியல். அவங்களை, வரிசைக்கிரமா, பத்து வரை நான் குறிச்சிருக்கேன். பத்தாவது எண்ணுள்ள நபர் ஒரு முகந்தெரியாத ஆசாமி - பட்டியலிலிருக்கும் யாரோ ஒருவரால் கொலையோடு சம்பந்தப்பட்டுள்ள நபர். இன்னிக்கு ராத்திரி வரைக்கும் அந்தப் பத்தாவது நபர் யார்னு எனக்குத் தெரியாது, ஆனா, அப்படியொரு பத்தாவது நபர் இருப்பது மட்டும் எனக்குத் தெரியும். இன்றிரவு வரிசையா நடந்த நிகழ்வுகள் என் ஊகம் சரிதான்னு நிரூபிச்சிடுச்சு.''

''ஆனா நேத்து, ஒரு பெரிய தப்பைப் பண்ணிட்டதா திடீர்னு உணர்ந்தேன். ஒரு நபர் விடுபட்டுப் போயிருக்கு. ஆகவே என் பட்டியலில் பதினோராவது என்னையும் சேர்த்தேன். *11*.''

''இன்னொரு முகந்தெரியா ஆசாமி?'' - சின்னதாய் மூக்கினை உறிஞ்சியபடி கேட்டது வைஸ்.

''அப்படிச் சொல்லிட முடியாது. முகந்தெரியாத ஆசாமிக்கு நான் பயன்படுத்திய எண் *10*. இன்னொரு முகந்தெரியா ஆசாமியா நான் கருதியிருக்கும் பட்சத்துல அதுவும் இன்னொரு பத்தாம் எண்ணாத் தான் இருந்திருக்கும். இது *11*. *11*, முழுக்கவும் வேறொரு முக்கியத் துவம் கொண்டது. *11*, முதல் பட்டியலிலேயே இடம்பெற்றிருக்க

வேண்டிய ஒரு நபர்... ஆனால், தவிர்க்கப்பட்டு விடுபட்டிருக்கிறார்.''

ஃப்ரெட்டரிக்கா பக்கமாய் இப்போது குனிந்தான் பொய்ரெட். ''நினைவில் வெச்சுக்குங்க மேடம். உங்க கணவர் இந்தக் கொலையைப் பண்ணலே. என் 11 தான் மேடம் மேக்கியைச் சுட்டுத் தள்ளியிருப்பது.''

அவள் விழித்தாள். ''அப்படினா - யாரது 11?''

பொய்ரெட் ஜேப்பைப் பார்த்து ஒப்புதலாய் ஒரு தலையசைப்புக் காட்டினான். முன் வந்த அவர், போலீஸ் கோர்ட்டுகளில் சம்பவங்களை நினைவுகூர்ந்து பேசும் தொனியில் பேசத் துவங்கினார்:

''எனக்குக் கிடைத்தத் தகவல்களின்படி, இன்னிக்கு பிற்பகல் வாக்குல இங்கே வந்து நான் ஒளிஞ்சு நின்னுக்கிட்டேன். வீட்டுக்குள்ளே ரகசியமா அனுமதிக்கப்பட்டேன் நான். வரவேற்பறையின் தடிமனான திரைச்சீலைகளில் ஒன்றுக்குப் பின்னால நான் மறைஞ்சு நின்னுக்கிட்டேன். இப்போ நாமிருக்கும் இந்த அறைக்குள்ளே எல்லோரும் குழுமி நின்னவுடனே ஓர் இளம் பெண் வரைவேற்பறைக்குள்ளே நுழைஞ்சாங்க. விளக்கை ஒளிர விட்டாங்க. அங்கேயிருக்கும் கணப்புக்குப் பக்கத்துல போன அவங்க, அங்கிருந்த பரணுக்கருகி லிருந்த ஒரு சிறு பதுங்குமிடம் போன்ற ஒன்றின் ஸ்பிரிங் கதவு போல இருந்த மூடியைத் திறந்தாங்க. ஆஹ்... அதுக்குள்ளிருந்து பிஸ்டல் ஒன்னை எடுத்தாங்க. அதைக் கையில எடுத்துக்கிட்டு வரவேற்ப றையை விட்டு விலகி வெளியேறினாங்க. அவங்களை நான் பின் தொடர்ந்தேன். அறைக் கதவினை ஒரு சிறு இடுக்களவு திறந்ததுமே அவங்க பண்ணுவது எனக்குத் துல்லியமா தெரிஞ்சது. வந்து சேர்ந் திருந்த அனைவருடைய கோட்டுகளும் மேலங்கிகளும் அங்கே அப்படியே போடப்பட்டிருந்தன. அந்த இளைய பொம்பிளை கையில் கொண்டு போயிருந்த பிஸ்டலை ரொம்ப ஜாக்கிரதையா கைக்குட்டை கொண்டு துடைச்சுட்டு சாம்பல் நிற மேலங்கி ஒன்றின் பைக்குள்ளே திணிச்சுட்டாங்க. அந்த மேலங்கி, மிஸஸ் ரைலண்டையது ...''

இதே கணத்தில் ஓர் அலறல் நிக்கிடமிருந்து பிறிட்டது. ''சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் - உண்மை கிடையாது... பொய், பொய்.''

உடனடியாய் பொய்ரெட் அவளை நோக்கி சுட்டுவிரலை நீட்டினான். ''வெரி குட்'' என்றான். ''கட்டுக்கடங்காம நீங்க செஞ்ச

இதுதான் சாட்சி. தனது சகோதரி முறை வரும் மேக்கியை கட்டது மேடம் நிக்.''

''நீங்க பைத்தியமா என்ன?'' என்றாள் அவள். ''எதுக்காக நான் அவளைக் கொல்லணும்?''

''அவளுக்காக மைக்கேல் செட்டானால் விடப்பட்ட அத்தனை சொத்துகளுக்கும் ஒரே ஜவாப்தாரியா ஆவதற்கு! அவளோட பெயரும் மக்தலா பக்லே. அந்தப் பொண்ணோடதான் செட்டான் நிச்சயம் பண்ணிக் கொண்டது - உங்களோட அல்ல.''

''யூ... யூ... யூ...''

அப்படியே வார்த்தைகள் ஏதும் அகப்படாமல் நடுங்கியபடி நின்றான் நிக். பொய்ரெட் தற்சமயம் ஜேப் பக்கம் திரும்பியிருந்தான். ''போலீஸுக்கு போன் போட்டீங்களா?''

''ஆமாம். அவங்க ஹால்லதான் இருக்காங்க. கைது வாரண்ட் இருக்கு.''

''நீங்க அத்தனை பேரும் முட்டாள்கள்! பைத்தியக்காரர்கள்!'' என்றான் நிக், இகழ்ச்சியாய். ஃப்ரெட்டரிக்கா பக்கமாய் துரிதமாய் நகர்ந்த அவன் கேட்டான்: ''உன் ஞாபகார்த்தமா உன்னோட கைகடியாரத்தை நான் கேட்டா, நீ தருவியா ஃப்ரெட்டி?''

எதற்காக திடீரென கேட்கிறான்? இதென்ன புது திருப்பம்? ஒன்றும் விளங்கவில்லை, ஃப்ரெட்டரிக்காவுக்கு.

அறைந்தாற் போலிருந்த ஃப்ரெட்டரிக்கா, மெதுவாய், இயந்திரத் தனமாய் அவர் கட்டியிருந்த வாட்சினைக் கழற்றி நிக்குக்கு ஒரு நினைவுப் பரிசாய் தந்தாள்.

''தேங்க்ஸ்.''

அத்தியாயம் 22

# கதையின் முடிவு

''நான் விளக்கமா சொல்லணும்னு விரும்பறீங்களா?'' - அவனுக்கே உரித்தான பூரண வெற்றி கண்ட புன்சிரிப்பு எனக்கு நன்கு தெரியும்... அதனை வெளியிட்டபடி சுற்றிவர பார்த்தான் அவன்.

நாங்களனைவரும் வரவேற்பறைக்குள் வந்திருந்தோம். எங்களுடைய எண்ணிக்கையும் கணிசமாய் குறைந்திருந்தது. வந்திருந்த அக்கம்பக்கத்தோர் நிலைமையைப் படித்து நாசூக்காய் வடிந்திருந்தனர். போலீஸுடன் செல்லுமாறு க்ராஃப்ட் அங்கத்தினர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஃப்ரெட்டரிக்கா, லாஸரஸ், சாலஞ்சர், வைஸ் மற்றும் நான் மீதமிருந்தோம்.

''ஃப்ரண்ட்ஸ்... ஒத்துக்கறேன். நான் முட்டாளாக்கப்பட்டேன்... முழுசா, துளி மிச்சமில்லாம முட்டாளாக்கப்பட்டேன்னு ஒத்துக்கறேன். நான் எந்த இடத்துல வேணுமோ அந்த இடத்துல என்னை அழகா பொருத்தி வெச்சு ஏமாத்திட்டாங்க, லிட்டில் நிக்! ஆஹ...! மேடம், உங்க ஃப்ரண்ட் ஒரு கடைஞ்செடுத்த பொய்க்குள்ளினு நீங்க சொன்னது தான் எத்தனை நிஜம்! எத்தனை நிஜம்!''

''நிக் எப்பவுமே பொய் தான் சொல்லியிருக்கா'' என அடங்கி அழுக்கமாய் குறிப்பிட்டார் மிஸஸ் ரைஸ். ''இந்த ஒரே காரணத்தால தான், அதியற்புதமா அவ தப்பிச்சதா சொன்ன விபத்துகள்ல ஒண்ணே ஒண்ணைக் கூட நான் நம்பலே.''

''ஆனா நான் - புத்தியே மழுங்கிப் போனவன் போல நடந்துக்கிட்ட நான் - அதுல எல்லாத்தையும் நம்பினேன்!''

''அவையெல்லாம் நெஜமா நடக்கவேயில்லையா, பின்னே?''

என்று கேட்டேன் நான். விளக்க ஆளில்லாமல் நான் இன்னமும் முழுவதும் குழம்பித்தான் இருந்தேன் என்பதை ஒத்துக் கொள்கிறேன்.

''அவையெல்லாம், அப்படியப்படித்தான் நடந்தன என்ற கானல் நிலைமையை ஏற்படுத்த புத்திசாலித்தனமா உருவாக்கப்பட்டவைடா!''

''அப்படியா?''

''அவையத்தனையும் மேடம் நிக்கின் வாழ்க்கை ஒவ்வொரு நொடியும் ஆபத்துல இருக்கு எனும் பதிவினை சுலபமா உண்டு பண்ணியவை. ஆனா இதுக்கும் முன்னாடி நான் துவங்கப் போறேன். என் கைகளுக்கு ஒழுங்கற்றும் துண்டுத் துண்டாகவும் வந்தபடி சொல்லிக் குழப்பாம, நான் ஒட்ட வெச்சு முடிச்ச மாதிரியே இந்தக் கதையை விளக்கறேன்.

''இந்த முழு பிஸினஸின் துவக்கதில் அப்போ நம்ம கையில இருந்தது - இந்த அழகான, சந்தேகங்களுக்கு அப்பாற்பட்ட, அன்புடனும் அருமையாகவும் தனது வீட்டின் மீது தீரா அவா கொண்டிருந்த - மிஸ் நிக்.''

இதற்கு சார்ல்ஸ் வைஸ் ஒப்புதலாய் தலையசைத்துக் காட்டினார். ''இதை நானே உங்ககிட்டே சொல்லியிருக்கேன்.''

''நீங்க சரியே, மிஸ்டர் வைஸ். மேடம் நிக் கடைசி வீட்டை மிக விரும்பினாங்க. ஆனா அதை அடைய அவங்க கிட்டே பணம் கிடையாது - ஆனா அதுக்கான பணம் அவங்களுக்கு அவசர அவசரமாகத் தேவைப்பட்டது - இருந்தாலும் அவங்களால அத்தொகையை அடைய முடியலே. இந்த இளைய வாலிப்பான ஸெட்டானை சந்திக்கிறாங்க... அவனும் இவங்களால ஈர்க்கப்படறான். அவனுடைய மாமாவின் சொத்து அத்தனையும் ஸெட்டானுக்கே என்பதை வெகு சுலபமா புரிஞ்சுக்கிறாங்க மேடம்; அந்த மாமாவோ, கணக்கற்ற மில்லியனுக்கு அதிபதி. 'நல்லது... நமக்கு அதிர்ஷ்ட மச்சம் ஏறுமுகத்துல இருக்கு'னு கணக்குப் போட்டுக்கறாங்க மேடம் நிக். ஆனா, இதுல கவனிக்க வேண்டியது, அவன், தன்னை முழுக்க எழுதிக் கொடுக்குமளவுக்கு இவங்க பக்கமா ஈர்க்கப்படலே என்பதை! பொழுதுபோக சிறப்பான ஆசாமி என்பதுதான் ஸெட்டானோட நெனப்பு - தட்ஸ் ஆல். ஸ்கார்-பாரோ பகுதியில் சந்திக்கக்கறாங்க.

தன்னோட பறக்கும் வாகனத்துலகூட இவங்களை ஏத்திக்கிட்டு சுத்தறான் அந்தப்பய. அப்பத்தான் திருப்பம் நிகழுது. மேக்கியைப் பார்க்கிறான் அவன். முதல் பார்வை... முதல் சந்திப்பு... முதல் காதல்.''

''மேடம் நிக் அதிர்ந்து செயலற்று ஆயிடறாங்க. அவளோட சகோதர உறவுக்காரப் பொண்ணு! எவ்வித அழகுக்கும் அருகதையற்றவனு நிக் நெனச்சிருந்தப் பொண்ணைப் போய்! ஆனா யங் ஸெட்டானுக்கு மேக்கி 'வித்தியாசமானவ'! உலகத்தில் அவனுக்கென்று இருக்கும் ஒரே பெண் - மேக்கி! ரெண்டு பேரும் ரகசியமா நிச்சயம் பண்ணிக்கிறாங்க. ஒரே ஒரு நபர்க்கு மட்டும்தான் இது பற்றி தெரியும் - தெரிஞ்சுடும். அந்த நபர் தான் மேடம் நிக். பாவப்பட்ட மேக்கி - அவ மனசு விட்டுப் பேசவும் ஓர் ஆள் உலகத்துல உண்டுனு நம்பினா, நிக்கை! தன் ஆள் எழுதிய கடிதங்களின் சில பகுதிகளை நிச்சயமா அவ தன் உயிர்த் தோழிக்குப் படிச்சுக் காட்டியிருப்பா. இதுல சந்தேகமே கிடையாது. இந்த வகையில தான் மேடம் நிக்குக்கு உயில் பற்றிய தகவல்களும் தெரிய வந்திருக்கு. அது தெரிய வந்த சமயத்துல அதன் மேல எந்த விதமான கவனத்தையும் மேடம் நிக் பதிக்கலே. ஆனா, அது, அவங்க மூளையிலேயே கிடக்கு.''

''அப்போ தான் எதிர்பாராத விதமா சர் மாத்யூ ஸெட்டானின் அகால மரண செய்தி வருது. இதை விட கூடுதலா இன்னொரு செய்தியும் வெளியாகுது - மிஸ்டர் ஸெட்டான் காணவில்லை. உடனடியா, பச்சாதாபமற்ற ஒரு திட்டம் நம்ம இளைய பெண்ணின் மூளையை ஆக்கிரமிச்சுடுது. நிக்குடைய பெயரும் மக்தலா என்பது ஸெட்டானுக்குத் தெரியாது. மேடமை நிக் எனும் அளவுக்குத் தான் அவனுக்குப் பரிச்சயம். இந்நிலைமையில, அவன் எழுதிய உயில் எவ்விதமான சட்ட வடிவமும் அற்ற ஒரு துண்டுச் சீட்டு - வெறும் ஒரு பெயரை மட்டும் முக்கியமா குறிப்பிட்டு! உலகத்தின் பார்வையை வெச்சுப் பார்த்தோம்னா, ஸெட்டான், மேடம் நிக்கின் நெருங்கிய நண்பர்! மக்தலா எனும் நிக்கோடுதான் உலகத்தைப் பொறுத்தவரை ஸெட்டானின் பெயர் பின்னிப் பிணைஞ்சிருக்கு, ரைட்! இப்போ, மேடம்தான் ஸெட்டானோட நிச்சயிக்கப்பட்டவங்கனு பிரகடன மானா, ஒரு நாதியும் சந்தேகப்படப் போவது கிடையாது. ஆனா இதை

ஸெக்ஸபோட செஞ்சு முடிக்கணும்னா, மேக்கி வழியிலிருந்து தூக்கிக் கடாசப்படணும்.''

''இருக்கும் கால அவகாசம் கம்மி. ஓரிரு நாட்கள்ல மேக்கி வந்து உடன் தங்க ஏற்பாடு செய்றாங்க அவங்க. அப்போதான் உயிர் பிடுங்கும் விபத்துகளிலிருந்து அவங்க தப்பிப்பதெல்லாம் நடக்குது! தலைக்கு மேல தொங்கும் படத்தின் கயிறினை அவங்களே அறுத்து விடறாங்க. காரின் ப்ரேக்கை அவங்களே வலியப் போய் சேதப்படுத்தறாங்க. கடல் உச்சியிலிருந்து பாறை விழுந்தது இயற்கையா நடந்திருக்கலாம்... அதுலயும் ஆதாயம் தேடி அதுக்கு அடியில அப்போ தானிருந்ததா கதை உருவாக்கிடறாங்க, நம்ம மேடம்.''

''இதன் உச்சியில - என் பெயரை பேப்பர்ல பார்த்துடறாங்க அவங்க. என்னையே அவங்க திட்டத்தின் ஓர் அங்கமா அற்புதமா ஆக்கிக் கொள்ளுமளவுக்கு திமிர் இருந்திருக்கு அவங்களுக்கு. அவங்க தொப்பி வழியா புகுந்துப் போகும் குண்டு என் காலடியில விழுது - ஆஹ்! என்னை வளைச்சுப் போட்ட துல்லியமான ஏற்பாடு. அவளைச் சுற்றியியங்கும் சுழல் பற்றி அப்படியே நம்பிடறேன் - நான்! கவனிச் சீங்களா - அவங்களுடைய பயத்தை உறுதிப்படுத்த, அவங்களுக்குப் பக்கத்துலேயே ஒரு பெருமதிப்புக்குரிய சாட்சி! துணைக்கு ஒரு தோழியைக் கூப்பிட்டனுப்புமாறு நானே அவங்களுக்கு ஆலோசனை தரேன்!''

''இந்த வாய்ப்பையே அவங்களுக்கு இன்னும் சாதகமான ஒரு வாய்ப்பா ஆக்கிக்கிட்டு மேக்கியை இன்னும் ஒரு நாள் முன் கூட்டியே வந்து விடும்படி சொல்லி தகவல் அனுப்பறாங்க.''

''ஒரு கொலை என்பது, எத்தனை சுலபமான ஒண்ணா இருக்கு! டின்னர்ல நம்மைத் தனியா ஆக்கிட்டு விலகும் நிக், ஸெட்டான் தவறிட்டார்னு வரும் சேதியைக் கேட்ட மறு நொடியே, தனது திட்டத்தைச் செயலாக்க ஆரம்பிச்சுடறாங்க. ஸெட்டான் மேக்கிக்கு எழுதிய கடிதங்கள் அத்தனையையும் அள்ளி எடுத்துக்கிட்டுப் போய், எல்லாத்தையும் கவனமா தரம் பிரிச்சு, அவங்களோட தேவைக்கு உகந்த கடிதங்களை மட்டும் எடுத்துக்க, அவங்களுக்கு எதேஷ்டமா அப்போ நேரமிருந்தது. அப்படியெடுத்ததையெல்லாம் அவங்களோட

ரூமிலேயே வெச்சுடறாங்க. இது ஒரு பக்கம். அப்புறமா, வெடிகள் நடந்தப் பகுதியை விட்டு இவங்க ரெண்டு பேரும் மட்டும் அகன்று வீட்டுக்குள்ளே போறாங்க. மேக்கி போட்டிருந்த மேலங்கியைக் கழற்றி விடும்படி சொல்லி அதை செயல்படுத்தும் நிக், திருட்டுத்தனமா அந்தப் பரிதாபமான பொண்ணுக்குப் பின்னாலேயே போகும் நிக், சுட்டுடறாங்க. சுட்டுனு வீட்டுக்குள்ளே பிரவேசம். வேற ஒருத்தருக்கும் தெரியாதுனு அவங்க நினைச்சுக்கிட்டிருக்கும் சுவரிலிருந்த அந்த ரகசிய பதுங்குக் குழிக்குள்ளே துப்பாக்கியைப் பதுக்கிடறாங்க. பிறகு மாடிக்குப் பிரவேசம். அங்கேயே குரல்கள் கீழே கேட்கும் வரை காத்திருக்காங்க. உடல் கண்டுபிடிக்கப்படுது. இப்ப அவங்களோட காட்சி.''

''மளமளனு கீழே இறங்கி ஓட்டம். ஜன்னல் வழியா வெளியே பிரவேசம்.''

''ஹோஹோ... அவங்க காட்சிகளை எத்தனை அருமையா நடிச்சுக் கொடுத்துட்டாங்க! பாராட்டத்தக்க பங்களிப்பு! ஓ, நைஸ், அதியற்புத நாடகம் ஒன்றைத்தான் அவங்க நடத்திக் காட்டினாங்க. வீட்டு வேலைக்காரி, எலென், இதை ஒரு பேய் பிடிச்சாட்டும் வீடு என்பது போலத்தான் வர்ணிச்சா. இப்படிப்பட்ட ஒரு வீட்டிலிருந்து தான் அவங்களுக்கு ஐடியாக்களே குதிர்ந்திருக்கணும்.''

''ஆனா, அந்த விஷமூட்டப்பட்ட இனிப்புகள்...'' - நினைவூட்டியது ஃப்ரெட்டரிக்கா. ''அதைப் பற்றி இன்னமும் எனக்கு ஒண்ணும் விளங்கலே.''

''அதுவும், அவங்களோட வழக்கமான திட்டத்தின் இன்னொரு வடிவம்தான். மேக்கியின் மரணத்துக்குப் பிறகும் கூட மேடம் நிக்கின் உயிர் மீது குறிகள் வைக்கப்படுகின்றன என்று ஒரு நிலைமை உருவானாத்தான், மேக்கியின் மரணம், அவங்க செஞ்ச ஏதோ ஒரு தவறுக்காக நிகழ்ந்த ஒண்ணு எனும் சூழல் உருவாகும்னு உங்களுக்குத் தோணலியா?

''அதுக்கான நேரம் உருவாகிடுச்சுனு கணிச்சவுடனேயே மேடம் ரைஸுக்கு போன் போட்டு சாக்லெட்டுகளை அள்ளிக்கிட்டு வருமாறு சொல்றாங்க அவங்க.''

''அப்போ - அது - அவளோட குரலா?''

''பார்க்கப்போனா - ஆமாம்! அவங்களோட குரல் சற்று வித்தியாசமா இருக்கும்படி பார்த்துக்கிட்டாங்க - அவ்ளவே தான். அது பற்றி உங்களைத் திருப்பித்திருப்பிக் கேட்கும்போது அப்பத் தானே நீங்க சந்தேகத்துல குழம்புவீங்க - குழப்புவீங்க...?! பிறகு பெட்டி நிஜத்துல வந்து சேர்ந்த பிறகும் தான் விஷயங்கள் எத்தனை சுலபமா அவங்களுக்கு இருந்திருக்கு! புத்திசாலித்தனமா அவங்க பதுக்கி வெச்சிருந்த கொளைகளை வசதியா மூணு சாக்லெட்டுங்கள்ல ரொப்பிடறாங்க. அதுல ஒண்ணைச் சாப்பிட்டுட்டு விழுந்துடறாங்க - ஆனா படுமோசமா இல்லே! எத்தனை அளவு கொளைகள் எடுத்துக் கணும் என்பதும் என்ன விதமான அறிகுறிகளை மிகைப்படுத்திக் காட்டணும் என்பதுமா அவங்களுக்குத் தெரியாது?!''

''இதுல மகுடம், அந்த விஸிட்டிங் கார்ட் - என் கார்ட்! ஆஹ்... என்கிட்டே மோத அவங்களுக்கு எத்தனை கொழுப்பிருந்திருக்கணும்! பூக்கள் அனுப்பும்போது எழுதியனுப்பியிருந்த கார்ட் அது - என் கார்ட். எத்தனை ஸிம்பிளா முடிச்சிருக்காங்க, ஆங்? இப்படி சிந்திக்கவும் தனி மூளை வேணும்ப்பா.''

அங்கு சிறு அமைதி நிலவியது. பிறகு ஃப்ரெட்டரிக்கா கேட்டார்: ''எதுக்காக பில்டலைக் கொண்டு வந்து அவ என் கோட்டுக்குள்ளே போடணும்?''

''இதை நீங்க கேட்பீங்கன்னு நெனச்சிருந்தேன், மேடம். காலப் போக்குல இது உங்களுக்கு நடந்திருக்க வேண்டியது தவிர்க்க முடியாதது, மேடம். சொல்லுங்க... எப்பவாவது, மேடம் நிக், உங்க மீதிருந்த விருப்பத்தை உதறிட்டாங்கனு உங்களுக்குத் தோணிய துண்டா? அவங்க உங்களை வெறுக்கலாம்னு நீங்க எப்போதாவது நினைச்சதுண்டா?''

''இது பற்றி கருத்து சொல்வது கடினம்'' என்றார் ஃப்ரெட்டரிக்கா, நிதானமாய். ''என்னைப் பிடிச்சிருக்கிற மாதிரி தான் அவ காட்டிக் கிட்டிருக்கா.''

''நீங்க சொல்லுங்க மிஸ்டர் வாலரஸ் - எதையும் மூடி மறைச்சு உத்தமன்னு காட்டிக்கக் கூடிய வேளை கிடையாது இது - உங்களுக்கும் மிஸ் நிக்குக்கும் இடையே ஏதாவது இருந்ததுண்டா?''

''நோ'' - மறுத்துத் தலையசைத்தது, வாலரஸ். ''ஒரு சமயத்துல அவ

பக்கமாய் நான் ரொம்பவுமே ஈர்க்கப்பட்டேன் தான். அதுக்கப்புறம் - ஏன்னு எனக்கு சொல்லத் தெரியலே - நான் அவகிட்டேயிருந்து தூர விலகிட்டேன்.''

''ஆஹ்!'' என்ற பொய்ரெட், விவேகமாய் தலையசைத்துக் கொண்டான். ''இது தான் நிக்கின் பரிதாப நிலையே! அவங்க பார்ப்பவர்களையெல்லாம் ஈர்த்தாங்க - அப்புறம் அவங்கள்லாம் 'அவங்ககிட்டேயிருந்து தூர விலகிட்டாங்க.' ஈர்க்கப்பட்ட நீங்க மேடமை மேலும் மேலும் விரும்புவதற்கு பதிலா, அவங்க கூடயிருந்த ஃப்ரண்டை நேசிக்க ஆரம்பிச்சுட்டீங்க. இதனால மேடமை நிக் வெறுக்க ஆரம்பிச்சாங்க. போன வருஷம் அவங்க ஓர் உயில் எழுதினாங்க. அப்போ மேடம் மேல அவங்களுக்கு உயிர். ஆனா பிறகு நிலைமை மாறிச்சு.

''அவங்களுக்கு அந்த உயில் ஞாபகம் வந்திருக்கு. அதை க்ராஃப்ட் கூட்டம் அமுக்கிடுச்சு எனும் விஷயமோ அதனால அது எங்கே சேரணும்னு முகவரியிடப்பட்டதோ அந்த இடத்தைப் போய் சேரவேயில்லை எனும் விஷயமோ நிக்குக்குத் தெரியாது. நம்ம ரைஸ் மேடமுக்குத்தான் அவங்க மரணத்தை வரவேற்கும் ஓர் இலக்கு இருக்குனு அவங்களுக்கு ஓர் எண்ணம் இருந்திருக்கணும்; அதனால - சாக்லெட் வாங்கி வரும்படி அவங்களுக்கு போன் பண்ணியிருப்பது நிக்கே. இன்னிக்கு ராத்திரி உயில் படிக்கப்படும்... அதுல அத்தனையும் ரைஸுக்கே சட்டபூர்வமான உரிமையோட போகுதுனு வாசிக்கப் படும். அப்போதான் காணாமப் போன அதே பிஸ்டல் அவங்களோட கோட் பையிலிருந்து எடுக்கப்படும் - அதாவது மேக்கி சுட்டுக் கொல்லப்பட்ட அதே பிஸ்டல்.''

''அப்போ அவளுக்கு அவ்ளோ வெறுப்பு என்மேல இருந்திருக்கணும்'' - முணுமுணுத்தார் ரைஸ்.

''யெஸ் மேடம். அவங்ககிட்டே இல்லாத ஒன்னை நீங்க அபரிமிதமா வெச்சிருந்திங்க - காதலை அம்சமா வென்று அது தவறிப் போகாம தக்க வைத்துக் கொள்ளும் தந்திரம்!''

''எனக்கென்னவோ இன்னும் பனிமூட்டமா தானிருக்கு'' என்றது, சாலஞ்சர். ''இந்த உயில் பிஸினஸ் எனக்கு முழுசா அர்த்தமாகலே.''

''இல்லே? அது முழுக்கவும் வேற ஒரு கதை - முழுக்கவும்.

க்ராஃப்ட்ஸ் கூட்டம் இங்கே இருக்குமிடம் தெரியாம வசிக்குதுங்க. மேடம் நிக்குக்கு ஓர் ஆபரேஷன் நடந்தாகணும். அவங்க எந்த உயிலும் பண்ணி வெக்கலே. இதுல ஒரு வழியை அந்த க்ராஃப்ட் கூட்டம் பாக்குது. அதை செயல்படுத்த உடனடியா ஓர் உயிலை எழுதும்படி நிக்கைத் தொணதொணக்கும் க்ராஃப்ட் மக்கள் அதைத் தபால்ல சேர்க்கும் வேலையை அவங்களே கவனிச்சுப்பதா சொல்லிடறாங்க. ஒரு வேளை நிக்குக்கு ஏதாவது ஆகிட்டா - மரணமடைஞ்சுட்டானே சொல்லலாம் - அப்போ, புத்திசாலித்தனமா பண்ணப்பட்ட ஒரு போலி உயிலைக் காண்பித்து அத்தனையும் மிஸஸ் க்ராஃப்ட்டுக்கே போகிற மாதிரி மூடி மறைச்சிருப்பாங்க. ஆஸ்திரேலியாவுக்கு ஒரு முறை பிலிப் பக்லே போயிருந்த சேதி தான் அவங்களுக்கு உதவிக் கொண்டிருக்கும் ஓர் அனுகூலம்.''

''ஆனா, மிஸ், நிக்குக்கு, அபன்டிஸைடீஸ் ஆப்ரேஷன் திருப்தி கரமா முடிஞ்சு அவங்க பிழைச்சுட, அந்த உயில் அர்த்தமற்றுப் போயிடுது. இந்த நிலைமையிலேயே உயில் பிரச்சினை நிக்குது. ஆனா மறுபடியும் நிக் உயிர் மீதான முயற்சிகள் ஆரம்பமாகுது. தங்களது போலி உயில் திட்டம் ஒரு வேளை மறுபடியும் பலிச்சுடலாம்னு நம்பிக்கை வந்துடுது மிஸஸ் க்ராஃப்ட் குடும்பத் துக்கு. கடைசியா, நிக் இறந்துட்ட சேதியை நான் அறிவிக்கிறேன். அற்புதமான இந்த வாய்ப்பை நழுவ விட்டுடவே கூடாது. அந்தப் போலி விஷயங்கள் எழுதப்பட்ட உயில் உடனடியா மிஸ்டர் வைஸ்"க்கு போஸ்ட் பண்ணப்படுது. அவங்களைப் பொறுத்த வரைக்கும், பார்ப்பதற்கு தெரிவதை விடவும் நிக் பெரிய பணக்காரி என்பது அவங்களோட கணிப்பு. கடைசி வீடு அடகு வைக்கப் பட்டிருப்பதெல்லாம் அவங்க அறியாதது.''

''இதுலேயெல்லாம் நான் தெரிஞ்சுக்க வேண்டியது என்னன்னா'' என ஆரம்பித்த லாஸரஸ், ''இத்தனை விஷயங்களையும் உங்களால புத்திசாலித்தனமா எப்படி கிரகிக்க முடிஞ்சது என்பதைத் தான்'' என்றார். ''எப்போ நீங்க சந்தேகப்பட ஆரம்பிச்சீங்க?''

''ஆஹ்! இங்கே நான் வெட்கப்படறேன். இந்த சந்தேகத்தை அடைய எனக்கு அத்தனை காலம் பிடிச்சிருக்கு - அத்தனை காலம்! என்னைக் கலங்கடிச்ச சங்கதிகள் இருந்தன - யெஸ், மிகச் சரியா அமையாத

சங்கதிகள் அவை. மேடம் நிக் என்கிட்டே சொன்ன விஷயத்துக்கும் அதையே மற்றவங்க சொன்னதுக்கும் இருந்த மாறுபாடுகள். இதுல, துரதிர்ஷ்டவசமா நான் எப்பவுமே நிக்கையே நம்பினேன்.''

''பிறகு, சட்டுனு, எனக்கு வெளிச்சம் பிறந்தது. மேடம் நிக் ஒரு தவறு பண்ணியிருந்தாங்க. ஒரு ஃபிரண்டைக் கூப்பிட்டு கூடவே வெச்சுக்கும்படி நான் கெஞ்சியபோது நிச்சயம் அப்படி செய்வதா இவங்க சொன்னாங்க - ஆனா, ஏற்கெனவே மேக்கியை வரச் சொல்லியிருக்கும் சேதியை அப்படியே அப்போ என்கிட்டே யிருந்து அமுக்கிட்டாங்க. இது ஒண்ணும் பெரிய சந்தேகத்தை ஏற்படுத்தித் தரும் விஷயமா அவங்களுக்குத் தெரியலே - ஆனா, இது ஒரு தவறு.''

''இதுக்குக் காரணம், மேக்கி அவங்க வீட்டுக்கு எழுதியிருந்த மறுபதில் தான். அவங்க எழுதியிருந்த ஒரு வெகுளித்தனமான பதம் எனக்குப் புதிரா இருந்தது: ''அந்த அளவுக்கு பயமுறுத்தி எனக்கொரு தந்தியை அவள் ஏன் அனுப்பியிருக்க வேண்டும் என்று எனக்கு ஆச்சரியமாய் உள்ளது. செவ்வாய்க்கிழமையே வந்து சேர்ந்திருந்தாலும் ஒன்றும் பாதகம் இருந்திருக்காது.'' இதுல வரும் அந்த செவ்வாய்க் கிழமை எனும் வாசகம் உணர்த்துவது எதை? இது ஒண்ணே ஒண்ணைத் தான் உணர்த்தும். எப்படியிருந்தாலும் செவ்வாய்க்கிழமை மேக்கி இங்கே வந்து தங்குவதாத் தானிருந்திருக்கு. இப்படிப்பட்ட நிலையில மேடம் நிக் பொய் சொல்லியிருக்காங்க - அல்லது உண்மையை மறைச்சிருக்காங்க.''

''இப்போ தான், முதல் முறையா, அவங்க மேலே நான், ஒரு புது வித வெளிச்சத்தைப் போட்டேன். நான் அவங்க பேசின வார்த்தை களையே விமர்சிச்சேன். அவங்க சொன்ன எல்லாத்தையும் நம்பு வதற்கு பதிலா, 'ஒருவேளை அதெல்லாம் உண்மையா இல்லா விட்டால்...'னு கேட்டுக்கிட்டேன். 'அந்த அடுத்த ஆளா இல்லாம, ஒவ்வொரு முறையும் மேடம் நிக் தான் பொய் சொல்லிக்கிட்டே இருக்காங்கனு வெச்சுக்கிட்டா... எப்படி போகுது கேஸ்?'னு பார்க்க ஆரம்பிச்சேன்.''

''இந்த நிலைமை வந்ததும், எனக்கு நானே சொல்லிக்கிட்டேன்: சராசரியா இருப்போம். என்ன தான் உண்மையில நடந்திருக்கு?''

''இதுக்கு விடையா மேடம் மேக்கி கொல்லப்பட்டிருக்காங்க எனும் உண்மை தான் நடந்திருக்குனு சொல்லிக்கிட்டேன். ஜஸ்ட் இது தான் நடந்திருக்கு! ஓ கே... அப்படினா, யார், மேடம் பக்லே சாகட்டும்னு காத்திருந்திருப்பாங்க?''

''அப்போ, அஞ்சு நிமிஷத்துக்கு முன்னாடி விளையாட்டுத்தனமா ஹேஸ்டிங்ஸ் சொன்ன சில குறிப்புகளை நான் நெனச்சுப் பார்த்தேன். மார்குரெட் எனும் பெயரையே பலவிதமா சொல்ல லாம்னு என்கிட்டே அவன் பேசிக்கிட்டிருந்தான் - மேக்கி, மார்குட், இத்யாதி, இத்யாதி. அப்போதான், இந்த மேக்கி மேடத்தோட நிஜப்பெயர் என்னவாயிருக்கும்னு என்னை ஆச்சரியப்பட வைத்தது.''

''அப்போ தான் வழக்கையே முடித்துப் போடும் ஊகம் எனக்குள்ளே வந்தது! ஒருவேளை அவங்க பேரும் மக்தலானு எடுத்துக்கிட்டா...! இதுவும் பக்லே பரம்பரையின் ஒரு பெயர்தான்னு மேடம் நிக்கே என்கிட்டே சொல்லியிருக்காங்க. ஒரு வேளை... ரெண்டு மக்தலா பக்லே இருந்தால்...

''உடனடியா நான் படிச்சிருந்த மைக்கேல் ஸெட்டானின் கடிதங்களை என் மூளைக்குள்ளே ஒரு தடவை ஓட்டிப்பார்த்தேன். யெஸ் - அதுகளை வெச்சுக்கிட்டு செய்ய முடியாதது எதுவும் கிடை யாது! அதுல ஸ்கார்-பாரோ பற்றிய குறிப்பு இருக்கு - ஆனா மேக்கியும் தானே நிக்கோட கூட ஸ்கார்-பாரோவில இருந்திருக்காங்க. அவங்க அம்மா என்கிட்டே சொல்லியிருந்த தகவலிது.''

''அது, என்னை அரிச்சுக்கிட்டேயிருந்த ஒரு விஷயத்தை நல்ல படியா விளக்கிச்சு. அங்கே ஏன் அத்தனை கம்மியான கடிதங்கள் மட்டுமே இருந்தன? ஒரு பொண்ணு தன்னுடைய காதல் கடிதங் களைப் பாதுகாத்து வைப்பதாயிருந்தா அத்தனையையும் தான் வெச்சுப்பா. எதுக்காக இந்தத் தெரிந்தெடுத்த ஒருசில மட்டும்? இந்தக் கடிதங்கள்ல அப்படி விசேஷமான சங்கதிங்க ஏதாவது இருக்கா என்ன?''

''கூடவே, எந்த ஒரு கடிதத்திலும் எப்பெயரும் சொல்லப்படவே யில்லை என்பதும் என் நினைவுக்கு வந்தது.. ஒவ்வொரு கடிதமும் வித்தியாசமாக துவங்கின - இருந்தாலும் நெருக்கத்தைப் பறைசாற்றும்

குறிப்போடே தான் துவங்கின. அந்த எந்தக் கடிதத்திலும் எந்தப் பகுதியிலும் நிக் எனும் பெயரே கிடையாது.

''அதுல இன்னொரு விசேஷமான சங்கதியும் இருந்தது; உண்மையா மைக் போட்டு அலறலா தெரிவிக்கும் அதை, நான் பார்த்த மாத்திரத்தி லேயே கண்டுபிடிச்சிருக்கணும்!''

''என்னது அது?''

''இதைக் கேட்டு வேற தெரிஞ்சுக்கணுமா என்ன? கடந்த பிப்ரவரி 27 அன்று மேடம் நிக்குக்கு அபண்டிஸைடீஸ் ஆப்ரேஷன் நடந்திருக்கு. மைக்கேல் ஸெட்டானிடமிருந்து மார்ச் இரண்டாம் தேதியிட்டு வந்த ஒரு கடிதம் இருக்கு. அதுல, சுகவீனம் குறித்த ஒரு பரபரப்போ அல்லது அதுபற்றிய அசாதாரண குறிப்புகளோ அந்தக் கடிதத்துல இல்லவே யில்லை. இது, நிச்சயமா, இக்கடிதங்களெல்லாமே வேற யாரோ ஒரு நபருக்கு எழுதப்பட்டவை எனும் விஷயத்தை எனக்கு விளக்கி யிருக்கணும்.''

''அப்புறமா நான் தயார் பண்ணியிருந்த கேள்விப் பட்டியலை எடுத்துப் பார்த்தேன். அக்கேள்விகளுக்கு எனக்குள்ளே உதித்திருந்த இந்தப் புது ஐடியாவின் வழியில பதில் தந்து பார்த்தேன். ஒருசில தனிமையான கேள்விகளைத் தவிர்த்து, இதன் முடிவு, அனைத்து கேள்விகளுக்கும் திருப்திகரமாயும் சிம்பிளாயும் அமைந்தது. இந்த சின்ன பரிசோதனையினால, முன்னமேயே எனக்கு நானே கேட்டுக் கொண்டிருந்த இன்னொரு கேள்விக்கும் என்னால பதில் சொல்லிக்க முடிஞ்சது. எதுக்காக மேடம் நிக் ஒரு கறுப்பு உடையை வாங்கியிருக்காங்க? இதற்கான விடை: அவங்களும் அவங்களோட சகோதரி மேக்கியும் ஒரே மாதிரி உடை உடுத்தணும். இது தான் திருப்திகரமான பதிலா இருக்க முடியுமே தவிர, இன்னொண்ணு கிடையாது. தன் காதலன் செத்துட்டான் என்று அதிகாரபூர்வமா அறிவிக்கப்படுவதற்கு முன்னாடியே எந்தப் பொண்ணும் கறுப்பு உடுத்தி துக்கங்கொண்டாட மாட்டார் இது நிஜத்தன்மையற்ற... பொய்மையாத் தான் படும்.''

''இதனாலெல்லாம், வழக்கின் போக்குல, நான் ஒரு ட்ராமா போட்டேன். நான் எது நடக்கும்னு எதிர்பார்த்திருந்தேனோ, அது நடந்தது! ரகசிய பதுக்குமிடம் ஏதாவது இருக்கா எனும் கேள்வியின்

மீது மிஸ் பக்லே ரொம்ப அனலா ஆனாங்க. அப்படி ஒண்ணு கிடை யாதுனே சொல்லிட்டாங்க அவங்க. அப்படினா, எதுக்காக எலென் அப்படிப்பட்ட ஒரு பதுக்குமிடம் பற்றி கதை பேசியிருக்கணும்னு எனக்கு விளங்கலே. ஆக, நிக்குக்குத் தெரிஞ்சு தானிருக்கணும். எதுக்காக அப்படி அவங்க வெகுண்டெழணும்? அப்படினா ஒரு வேளை அதுக்குள்ளே அவங்க பிஸ்டலைப் பதுக்கி வெச்சிருக்கும் சாத்தியமிருக்கா? பழியை வேற யார் மீதாவது பிறகு எறிந்து விடும் ரகசிய திட்டத்தினாலா?''

''மிஸஸூக்கு எதிரா தான் எல்லாமுமே இருக்குனு நிக் பார்க்கும்படி செஞ்சேன் நான். இது அவங்க போட்ட திட்டத்தோட ஒட்டிப் போச்சு. ஆனாலும், எலென் அந்த இடத்தைப் பற்றிப் பேசியிருப்பதால, ஒரு வேளை அவ அந்த இடத்தைக் கண்டுபிடிச்சு பிஸ்டலை எடுத்துடலாமோனு நிக் பயந்திருக்கணும். அதனால தான் பதுக்கின இடத்திலிருந்து பிஸ்டலை எடுத்து மிஸஸின் கோட்டுக்குள் போட்டு விடுவது ஒண்ணு தான் பாதுகாப்புனு அவங்க உணர்ந் திருக்கணும்... ... ...''

''இதுல - கடைசியா - நிக் - தோத்துடறா.''

''இங்கே நாமெல்லாம் பாதுகாப்பா இருக்க, எந்த நொடியிலும் இழுத்துக்கிட்டுப் போயிடுவாங்க என்னும் நிலையில அவங்க வெளியில காத்துக்கிட்டிருக்காங்க.''

ஃப்ரெட்டரிக்கா இப்போது நடுநடுங்கிப் போயிருந்தார். ''எப்படி நடந்திருந்தாலும்... அவளுக்கு என்னோட வாட்சைக் கழற்றிக் கொடுத்ததுல எனக்கு திருப்தியாயிருக்கு.''

''யெஸ், மேடம்.''

இதற்கு அவர் துரிதமாய் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். ''அப்போ - அது - உங்களுக்குத் தெரியுமா?''

இதற்கு பொய்ரெட் அவருடைய கையைத் தூக்கி மிருதுவாய் ஒரு முத்தமிட்டான்.

இதற்கு லஜ்ஜையாகி நெளிந்த சார்ல்ஸ் ரைஸ், ''இனிமே நடக்கப்போவதெல்லாம் கண்ணால பார்க்க முடியாத அளவுக்கு இருக்கப் போகுது'' என்றார் அமைதியாய். ''அவளுக்கு சட்டரீதியான ஏதாவது பாதுகாப்பு பற்றி நான் யோசிக்கணும்.''

''அதுக்கெல்லாம் எவ்விதமான தேவையுமிருக்காதுனு நான் நினைக்கிறேன்'' என அமரிக்கையாய் சொன்னான் பொய்ரெட். ''என் ஊகங்கள்ல நான் சரியெனும் பட்சத்துல, தேவையிருக்காது.''

சொன்னவன் சட்டென சாலஞ்சர் பக்கம் திரும்பினான். ''அதுல தானே அந்த அத்தனையையும் நீங்க போட்டு பதுக்கறது, ஆங்?'' என்றான் கறாராய். ''அதைப் போன்ற கைக்கடியாரங்கள்ல.''

''நான்... !'' - கப்பல் சிப்பந்தி நிர்க்கதியாய் தெக்கினான்.

''உங்களோட அதியற்புதமான நல்ல புன்னெதனத்தைக் காட்டி என்னைக் கவுக்கப் பார்க்க வேணாம், ப்ளீஸ். ஹேஸ்டிங்ஸைத் தான் உங்களால கவுக்க முடிஞ்சது - என்னை முடியாது. அதன் மூலமா வயிறு முட்ட வரவு இருக்கு, இல்லையா? பார்ஸல் பண்ணப்படும் போதை - இதற்கு உடந்தையா ஹார்லி தெருவுல வசிக்கும் உன் மாமன்... ... ...''

''மிஸ்டர் பொய்ரெட்'' - சாலஞ்சர் பட்டென எழுந்து கொண்டு விட்டார்.

என் குள்ள நண்பன் அவரைப் பார்த்து சாதுத்தனமாய் கண் கொட்டினான். தொடர்ந்தான்: ''நீங்க தான் அந்த உபயோககரமான 'பாய் ஃபிரண்ட்.' முடிஞ்சா மறுக்கப் பாருங்க. ஆனா முடியாது. போலீஸ் கிடுக்கிப் போடறதுக்குள்ளே இப்ப என்னால உங்களுக்குத் தரக்கூடிய ஒரே ஓர் ஆலோசனை - கிளம்பிடுங்க.''

என்னை ஆச்சரியத்தின் உச்சியில் தூக்கிப் போடும் விதமாய் விருட்டென்று வெளியெறி விட்டான் அந்த சாலஞ்சர் பயல். ஒரு மின்னல் வெட்டி மறைந்தது போல அறையிலிருந்து கிளம்பி விட்டான். நான் அவனது முதுகுக்குப் பின்னால் திறந்த வாயை மூட மறந்துக் கிடந்தேன்.

''அப்போ... கொகைன் கைக்கடியாரத்துல இருந்திருக்கா ...'', துவங்கினேன் நான்.

''யெஸ், யெஸ். அதனாலதான் அத்தனை வசதியா கொகைனை ஆஸ்பத்திரியல கைவசம் வெச்சிருந்தாங்க, நிக். அவங்க கையிலிருந்த சரக்கு தீர்ந்துட்டதால தான் ஜஸ்ட் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி முழுசா அடைக்கப்பட்ட ஒரு புது சரக்கை அவங்க கேட்டு வாங்கிக்கிட்டாங்க.''

''அது இல்லாம அவங்களால இருக்க முடியாதுனா சொல்ல வர்றே?''

''அப்படி கிடையாது. மேடம் நிக் ஒரு போதை அடிமை கிடையாது. சில சமயங்கள்ல உல்லாசத்துக்காக கொஞ்சூண்டு... அவ்வளவே, ஆனா, இப்போ, இன்னிக்கு ராத்திரி, வேற நோக்கத்துக்காக. இந்த தடவை - முழுசா.''

''டேய், டேய்... அது கூடாதுடா ...'' என நான் மூச்சடைத்துக் கெஞ்சினேன்.

''விட்டுடுவோம் ஹேஸ்டிங்ஸ். இது தான் சிறந்த வழி, அவங் களுக்கு. தூக்குக் கயிறை விட. ஆனா, மூச். சட்டத்தை இறுக்கமா பிடிச்சுக்கிட்டு வாழும் மிஸ்டர் சார்ல்ஸ் வைஸுக்கு முன்னாடி இப்படி நாம சொல்லக் கூடாது. யெஸ். எனக்கு இந்த போதை, வாட்ச் எதுவும் தெரியாது. எல்லாம், வழக்கமான என் ஊகம் தான். அவ்ளோ தான்!''

''ஆனா உங்க ஊகங்கள் எப்பவுமே சரி தான், மிஸ்டர் பொய்ரெட்'' என்றார் ஃப்ரெட்டரிக்கா.

இதிலெல்லாம் தனக்கு உடந்தை கிடையாது என்பதைப் போல ''நான் கிளம்பறேன்'' என பட்டும் படாமல் சொல்லிக் கொண்டு வெளியேறிப் போனார் சார்ல்ஸ்.

பொய்ரெட் முதலில் ஃப்ரெட்டரிக்காவையும் அதன் பிறகு லாஸரஸையும் என பார்த்தான். ''நீங்க கலியாணம் பண்ணிக்கப் போறீங்களா, ஆங்?''

''எவ்ளோ சீக்கிரம் முடியுமோ அவ்ளோ சீக்கிரத்துல.''

''மேலும், மிஸ்டர் பொய்ரெட்'' என்று சிறு அவசரத்தோடு கூப்பிட்ட ஃப்ரெட்டரிக்கா, ''நீங்க நினைக்கிற மாதிரி நான் போதை மருந்து எடுத்துக்கிறவ கிடையாது. ரொம்ப ரொம்ப சொற்பமான ஒரு சிறு அளவு மட்டுமே எடுத்துக்கும் அளவுக்கு நான் மாறிட்டேன். எனக்கு முன்னாடி விரிந்து கிடக்கும் மகிழ்ச்சியைக் காணும் நான் - இனி எனக்குக் கைக்கடியாரமே தேவையில்லை - எனும் முடிவுக்கு வந்துட்டேன்.''

''நீங்க எதிர்பார்க்கும் மனமகிழ்ச்சி உங்களுக்கு கிடைக்கணும்னு நம்பறேன், மேடம்'' என்றான் பொய்ரெட், அன்பாய். ''நீங்க சொல்லொணா தவிப்புகளை அனுபவிச்சிருக்கீங்க. அப்படிப்பட்ட

கொடூர அனுபவங்களை மனம் பட்டுக் காய்ச்சுப் போயிருக்கும் நிலையிலும் உங்க மனசுல இன்னும் வற்றாம கருணை ஆறு ஓடிக்கிட்டேயிருக்கு.''

''நான் இவளை நல்லா கவனிச்சுக்குவேன்'' என்றான் லாஸரஸ். ''என் பிஸினஸ் நொடிச்சுக்கிட்டிருக்கு. இருந்தாலும், நீந்திக் கரை சேர்ந்துடுவேன். இப்படியில்லாம ஆகிட்டாலும், வெல், ஓர் ஏழையா என்கூட வசிப்பதுல ஃப்ரெட்டரிக்கு ஆட்சேபணையிருக்காது.''

ஒப்புதலாய் சிறு புன்னகையுடன் தலையசைத்தாள் அவள்.

கடியாரத்தைப் பார்த்த பொய்ரெட், ''நேரமாயிடுச்சு'' என்றான்.

நாங்களனைவரும் எழுந்துக் கொண்டோம்.

''அமானுஷ்யமான கணங்களை இந்த அமானுஷ்யமான வீட்டுல இன்னிக்கு ராத்திரி நாம கழிச்சிருக்கோம்'' என தொடர்ந்து கொண்டிருந்தான் பொய்ரெட். ''இது, எலென் சொன்ன மாதிரி, எனக்கும், ஒரு பேய் பிடிச்ச வீடாத்தான் தோணுது... ... ...''

இப்போது ஓல்ட் சர் நிக்கோலஸ் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன். பிறகு, ஒரு திடீர் தேவை உண்டானதைப் போல, லாஸரஸைத் தனியாய் உருவி அழைத்துக் கொண்டு போனான்.

''எக்ஸ்க்யூஸ் மீ. என் எல்லா கேள்விகளுக்கு நடுவில் இன்னும் ஒரேயொரு கேள்வி மட்டும் விடை தரப்படாமலேயிருக்கு. அந்தப் படத்துக்கு எதுக்காக நீங்க ஐம்பது பவுண்ட் தருவதா ஒத்துக்கிட்டீங்கனு சொல்லுங்க. எந்தக் கேள்வியும் பதிலில்லாமல் போகவில்லை எனும் அளவுக்கு உங்க பதில் எனக்குள்ளே ஒரு நிறைவை உண்டுபண்ணும்.''

ஓட்டுதலற்று அவனையே சற்று நேரம் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான் லாஸரஸ். பிறகு சின்னதாய் சிரித்தான்.

''உங்களுக்கே தெரியும், மிஸ்டர் பொய்ரெட்... நான் ஒரு வியாபாரி.''

''எக்ஸாக்ட்லி.''

''அந்தப் படம் இருபது பவுண்டுகளுக்கு மேல ஒரு நயா பைசா தேறாது. அதுக்கு நான் ஐம்பது தரேன்னு சொன்னா, உடனே அது அந்தத் தொகைக்கும் மேல போகும்னு நினைச்சு நிக் வேற எங்கேயாவது விசாரிப்பானு எனக்குத் தோணிச்சு. அப்போ, அதுக்குத் தர வேண்டிய தொகையை விட மிக அதிகமா நான் தர சம்மதிச்சது நிக்குக்குத் தெரிய

வரும். இதனால அடுத்தடுத்த முறை நான் அவங்க கிட்டே பேரம் பேசும்போது வெளியே போய் விசாரிச்சுக்கிட்டிருக்க மாட்டாங்க.''

''சரி. அதனாலென்ன?''

''மீதி படங்களை அஞ்சு பவுண்டுனு சொல்லி வியாபாரம் பண்ணிட மாட்டேன்...?!''

''ஆமா, ஆமா'' என மூச்சடைத்து இழுத்தான் பொய்ரெட்.

சிறு சிரிப்போடே ''என்ன ஆச்சு?'' என்றான் லாஸரஸ்.

''ம்...'' என்று சிறு கிண்டல் தொனிக்க சொன்ன பொய்ரெட்,

''ஒண்ணுமில்லே... இப்ப எனக்கு எல்லாம் தெரியும்'' என்றான்!

(முடிந்தது)

வரிசையாக நாலு விதமான
விபத்துக்கள் இடம் பெறுகின்றன -
கடைசி வீட்டில் வாழும் இளம் நங்கையின் உயிரைப் பிடுங்க.
அவள் அவற்றை ஏதோ தினசரி நிகழும் வாடிக்கையான
நடவடிக்கைகளாகவே கருதுகிறாள்; ஆனால் துப்பறியும் நிபுணர்
ஹெர்குல் பொய்ரெட்டின் குற்றம் தேடும் கண்களுக்கு,
அவ்விபத்துக்களில் உள்ள வில்லங்கம் புலப்பட்டு விடுகின்றது.
யெஸ்... அவை தினசரி நடவடிக்கைகள் கிடையாது;
இவளைக் கொன்று போட தினுசு தினுசாய்
மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்.

இளைய கன்னியின் உயிர் மீது விளையாடுவது
யார் யார் என்ற தேடுதலின் சூடு பறக்கும் பிரயாணமும்....
அதனைக் கண்டு பிடிக்க துப்பறியும் நிபுணர் ஹெர்குல்
பொய்ரெட் கையாளும் விநோதமான அணுகுமுறைகளும்...
கடைசியில் கொலையாளியின் முகத்திரை கிழியும்
உச்சகட்டமும்... நாவல் தாள்களையே
வெள்ளித்திரை போல ஆக்கி காட்சிகளைத்
தத்ரூபமாய் கண்களுக்கு முன்
விரித்து சிலிர்ப்பேற்றி விடும்.